திருக்குறளார் வழங்கும்

# திருக்குறள் தெளிவுரை பதவுரைப் பதிப்பு

வானதி பதிப்பகம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

திருக்குறளார் வழங்கும்

# திருக்குறள் தெளிவுரை

## பதவுரைப் பதிப்பு


உரையாசிரியர் :

தமிழ்மறைக்காவலர், கலைமாமணி

திருக்குறளார் வீ. முனிசாமி



வானதி பதிப்பகம்

13, தீனதயாளு தெரு

தி.நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : அக்டோபர், 1989

உரிமை : உரையாசிரியர்க்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 50-00

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்
இராயப்பேட்டை
சென்னை-600 014.

புரட்சிக்கவிஞர்

## பாவேந்தர் பாரதிதாசன்

# பாராட்டு

திராவிட நாட்டுளீர் உங்கள் செயற்கெலாம்
அறமே அடிப்படை ஆதல் வேண்டும்!
அறம் எனல் வள்ளுவர் அருளிய திருக்குறள்!
செல்லும் வழிக்குத் திருக்குறள் விளக்கு!
மனமா சறுக்கும் இனிய மருந்து!
கசடறக் கற்க! கற்றிலார் அறிஞர்பால்
கேட்க! கேட்க!! திராவிடம் மீட்க!

ஔவையார் அருளிய ஆத்திச்சூடியில்
ஒரு தொடர் தன்னை—ஒன்றுக்கான
உரையை—எப்படி ஒருவர் இலேசாய்
நினைவில் நிறுத்தி இனிதுரைப்பாரோ
அப்படித் திருக்குறள் முனிசாமி அறிஞர்
முப்பால் ஆயிரத்து முன்னூற்று முப்பது
குறளையும் அவற்றிற்குக் கொடுத்த
பொருளையும்
நினைவில் நிறுத்தி இனிது விளக்கும் ஓர்
ஆற்றல் உடையவர் அவர் திருக்குறள் மலர்
வழங்கும் நகைச்சுவை மறச்சுவை பிறசுவை
ஆர்ந்தசொல் அனைத்தும் பெரும்பயன்
அளிப்பவை!

அரிசிமா இட்டலி அளிப்பதாய்ச் சொல்லிப்
பாசிப் பயற்றுமி படைப்பார் அல்லர்;
அறிஞரின் பேச்சும் எழுத்தும் அருங்குறள்
தேன்ஆற்றி னின்று செம்பில்மொண்
டளிப்பவை!

குறட்பயன் கொள்ள நம்திருக்
குறள்முனி சாமிசொல் கொள்வது போதுமே !

# உரையாசிரியர்



தமிழ்மறைக்காவலர் கலைமாமணி

## திருக்குறளார் வீ. முனிசாமி

# பதிப்புரை

திருவள்ளுவர் அருளிய திருக்குறளுக்குப் பதவுரைப் பதிப்பு — தெளிவுரையுடனும் — கருத்துரை யுடனும் கிடைத்துள்ளது.

திருக்குறளுக்கு எத்தனையோ உரைகள் வந்திருப்பினும் இவ்வுரை நூல் தனிச் சிறப்புடன் விளங்குவதற்குக் காரணங்கள் பல உண்டு.

திருக்குறளை நாளும் ஓதி, குறள்வழி நடந்து குறட்பாவின் பெருமையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, குறளிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் விரித்துச் சொல்லி, குறளிலேயே தோய்ந்து குறளுக்காக வாழ்ந்து வருபவர் உயர்திரு. வீ. முனிசாமி அவர்கள். அவர் ஒருவரையே அறிஞர் களும் பாமர மக்களும் 'திருக்குறளார்' என்று அழைக் கிறார்கள்.

குறட்பாக்களை, பாமரரும் நன்கு புரிந்து கொள்ளு மளவுக்குப் பதவுரைப் பதிப்பாக, எளியவுரையாக, தெளிவுரையும் கருத்துரையும் வழங்கியுள்ள தமிழறிஞர் திருக்குறளார் முனிசாமி அவர்களைப் பெரிதும் போற்றி வானதி பதிப்பகம் இந்நூலினைச் சிறப்பு வெளியீடாக

வெளியிட்டுள்ளது. வாசகர்கள் இந்நூலினை ஏற்றுத் திருக்குறளின் நற்பயனைப் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

இந்நூலினை மக்களுக்கு வழங்கும் நல்வாய்ப்பினை நல்கிய மதிப்பிற்குரிய திருக்குறளாருக்கும் நூலை அழகிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த மூவேந்தர் அச்சகத்தாருக்கும் நன்றி.

**ஏ. திருநாவுக்கரசு**
**வானதி பதிப்பகம்**

# அரை நூற்றாண்டில்...

மூவேந்தர் முத்து

"குறட்பயன் கொள்ள நம்திருக்
குறள்முனி சாமிசொல் கொள்வது போதுமே"

என்னும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் புகழ் மொழிக்கேற்ப, தமிழ் மறைக் காவலர் கலைமாமணி திருக்குறளார் அவர்கள், தமிழ் மக்கள் பயன்படவேண்டும், பண்பட வேண்டும் என்று திருக்குறளைப் பட்டி தொட்டி, நாடு நகர் எங்கும் ஓயாமல் உரையாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

பண்டிதர் மட்டுமே படித்து இன்புற்று மகிழ்ந்த குறளினிமையை, பாமரரும் அறிந்து இன்புற வேண்டும் என்று, சிந்திக்கவைக்கும் சிரிப்புக் கதைகளைச் சொல்லி, அதன் மூலம் திருக்குறளை மக்கள் மத்தியில் பரப்பி ஓர் எழுச்சியை உருவாக்கிக் கொண்டு உலா வருகிறார்கள்.

காலம் காலமாக ஒவ்வொரு மகான்கள் தோன்று கிறார்கள். அந்த மகான்களின் போதனைகளை மக்களிடம் பரப்ப அவர்வழி சார்ந்தவர்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். அதே போல் தெய்வப் புலவர் திருவள்ளுவ நாயனாரின் குறட்பாக்களை, அன்பால்—

அழகிய தமிழால்—சிரிப்பால்—சிந்தனையால்—இந்நாட்டு மக்களுக்குத் 'திருக்குறளார்' அவர்கள் சீரிய சிந்தனைகளின் வாயிலாகப் பரப்பி வருகிறார்கள். அரை நூற்றாண்டுக் காலமாக அவர்கள் ஆற்றிவரும் பணி சாதாரணமானதல்ல.

திருக்குறளார் நினைத்திருந்தால் — அவர் படிப்புக் கொப்ப திருக்குறளிலேயே வாதாடி, வாதத்திறமையால் வழக்கு வல்லுனராகியிருக்கலாம். நாடாளுமன்றத்தில் பணியாற்றிய போதும், அவர் மக்களுக்காகப் பிரச்சினை களை, திருக்குறள் நெறியிலேயே எடுத்து வைத்துச் சிந்திக்க வைத்தார். அவர் மட்டும் நினைத்திருந்தால் அரசியல் வானில் ஒளி மிளிரும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால், அரசியல் சிந்தனையைவிடத் திருக்குறள் சிந்தனையே அவர் உள்ளத்தில் மேம்பட்டு நிமிர்ந்தது. அவர் நிமிர்வால் இந்தத் தமிழக மக்கள், தங்களையும், தங்கள் மூதாதையர்களையும் எண்ணிப் பார்த்தனர்.

தந்தை பெரியார் போன்ற பெரியார்களின் பேரன்பைப் பெற்றவர். குறள்வழி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர். வாழ்நாள் முழுவதும் திருக்குறள் நெறி பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டவர். 'ஏ, மனிதா! நீ சிந்திக்கத் தெரிந்தவன்! உலகிலுள்ள உயிர் வகைகளில் உனக்கு மட்டும்தான் சிரிக்கத் தெரியும்' என்று அறைகூவல் விட்டுக்கொண்டு வருபவர். அந்தப் பெருமகனைத் தமிழ் மக்கள் நன்றியோடும் பெருமிதத்தோடும் 'திருக்குறளார்' என்று பாசமுடன் அழைத்துப் பூரிக்கின்றனர்.

திருக்குறளுக்குப் பலரும் உரை எழுதியிருந்தாலும், திருக்குறளாரின் எளிய உரை இதுவரை பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறது. அதுமட்டும் போதா தென்று, இப்போது, "திருக்குறள் தெளிவுரை—பதவுரைப் பதிப்பு" என்று எழுதி, தமிழ் மக்களுக்கு வழங்குகிறார்.

இந்த நூலினை, தமிழகத்தின் தலைசிறந்த பதிப்பகமான வானதி பதிப்பகம் வெளியிடுகிறது. வானதி அதிபர் அண்ணன் வானதி திருநாவுக்கரசு அவர்கள் பொருட் செலவைப் பாராமல் தரமான தயாரிப்பாகப் புத்தகங்களைத் தயாரிப்பவர். அந்த வகையில் இந்தப் புத்தகமும் அணிசேர் வகையில் வெளிவருகிறது.

தமிழகம் இதுவரை படைத்திராத திருக்குறள் விளக்க நூலினை "உலகப் பொதுமறை" என்ற பெயரில் வெளியிட்டு, அரசுப் பரிசாக இரண்டாயிரம் ரூபாய் பெற்றார்.

தமிழக வரலாற்றில் "உலகப் பொதுமறை" அரியவற்றுளெல்லாம் அரிய நூலாகும்.

மேலும் அவருடைய தொண்டினைப் பாராட்டி, தமிழக அரசு திரு. வி. க. விருதினை அளித்து, பத்தாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், கலைமாமணி பட்டமும் பதக்கமும் தந்து பாராட்டிப் பெருமைப்படுத்தியுள்ளது.

வாழ்க்கையினையே திருக்குறளுக்குத் தொண்டு செய்யுமளவுக்கு வாழ்ந்து வரும் அப்பா திருக்குறளாரின் தொண்டு பார் சிறக்கப் போற்றப்படும். இன்னும் பல பரிசுகள் அளித்துப் பாராட்டப்படும்.

**வாழ்க திருக்குறளார்!**

# சிறப்பு முன்னுரை

## திருக்குறளார்

வாழ்க்கைக்குச் சிறந்த துணையாகவும் வழிகாட்டியாகவும் அமைந்திருப்பது திருக்குறள் எனப்படும் உலகப் பொதுமறையாகும். "எல்லாப் பொருளும் இதன்பால் உள" என்று பெரும்புலவர்கள் போற்றியிருப்பதும் உலக மேதைகள் பலரும் பாராட்டியிருப்பதும் வெளிப்படையான உண்மைகளாகும். மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத கருத்துக்கள் அனைத்தும் பொதுமறைப் புலவர் திருவள்ளுவரால் தெளிவு படுத்தப்பட்டுள்ளனவாகும்.

அனைத்துக் கருத்துக்களையும் கற்றுணர்ந்து பயன் பெற்று அனைவரும் இன்புறுமாறு செய்யவேண்டியது அறிஞர்களின் கடமையாகும். இந்தச் சிறு கட்டுரையில் அனைத்தையும் எழுதுவதற்கு இயலாவிட்டாலும் அன்றாட வாழ்க்கையில் சிந்தித்துச் செயல்பட வேண்டிய சில குறட்பாக்களையேனும் தொட்டுக் காண்பிக்க வேண்டியது நம்முடைய கடமையாக இருக்கின்றது.

ஆறறிவு படைத்த மானிடப் பிறவியின் பெருஞ் சிறப்பினை நன்கு சிந்தித்து வாழவேண்டிய முறையில் வாழ்ந்து பயனுள்ள மக்களாகப் புகழேந்தி வாழவேண்டும். மனிதப் பிறவிக்கு மிகச் சிறந்த புகழினைத் தருவது ஈகைக் குணமாகும். இயன்ற அளவு அக்குணம் இல்லையென்றால் மனிதப்பிறவி என்று சொல்லுகின்ற பெயருக்குப் பொருளில்லாமல் போய்விடும். உடம்பைச் சுமந்து கொண்டிருக்கும்

உயிருக்கு ஊதியம் புகழ் என்று சொல்லப்படுகிறது. நன்கு சிந்திக்க வேண்டும்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு (231)

இவ்வுலக வாழ்க்கைக்குச் செல்வம் எனப்படும் பொருள் எவ்வளவு இன்றியமையாதது என்ற உண்மையினை நாம் எடுத்துக் கூறத் தேவையில்லை. அத்தகைய பொருளினை நன்கு முயற்சித்து ஈட்டுதல் வேண்டும். ஈட்டிய பொருளினைப் பாதுகாத்து நற்செயல்கள் செய்து இசை எனப்படும் புகழினை அடையவேண்டும். அப்படிச் செய்யாதவர்கள் இந்தப் பூமிக்குப் பாரம் என்று ஆசிரியர் குறித்துக் காட்டுகின்றார்.

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. (1003)

செல்வம் எனப்படும் பொருளின் அருமையினையும் சேர்க்கவேண்டிய முறையினையும் இன்னபிற செய்திகளையும் "பொருள் செயல் வகை" என்ற அதிகாரம் விளக்கம் செய்கிறது. ஈட்டிய பொருளை—செல்வத்தினை நல்ல முறையில் செலவு செய்யாத புன்மையான மனம் படைத்த கொடியவர்களை 'நன்றியில் செல்வம்' என்ற அதிகாரம் விளக்குகின்றது. இந்த இரண்டு அதிகாரங்களையும் ஒன்று சேர்த்துப் படித்தறிதல் நலம் பயக்கும்.

மனிதப் பிறவியில் சிறப்பாகக் கருதப்படவேண்டியது மனத்தின் உணர்ச்சியும் எழுச்சியுமாகும். இதனையே 'ஊக்கம்' என்ற சொல்லினால் சிறப்பித்துக் கூறுகிறார். ஊக்கம் நிறைந்திருப்பவர்களிடம் செல்வம் வழி தேடிக் கொண்டு போகும் என்று குறட்பாவொன்று கூறுகின்றது. பன்முறையும் சிந்தனை செய்து கொண்டே இருக்க வேண்டிய குறட்பாவாகும்.

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா**
**ஊக்கம் உடையான் உழை.** (594)

நல்ல சிறந்த பேரறிஞர்களையும் கெடுத்து விடுகின்ற கொடிய குணம் மடி எனப்படும் சோம்பலாகும். மடி எனப்படும் சோம்பலினைக் குடியாகக் கொண்டிருக்கும் ஒருவனுடைய குடும்பம் அதிவிரைவில் கெட்டு விடுவதோடு அவனும் கெடுவான் என்பது உறுதி. மடிமைக் குணத்தை மடியச் செய்பவன் நல்ல மனிதனாகத் திகழ்வான். மடிமைக் குணத்தின் தீமையினைக் குறட்பா குறித்துக் காட்டுகிறது.

**மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னினும் முந்து** (603)

வாழ்க்கையில் மேலும் மேலும் உயர்ச்சியினைக் கொடுப்பது முயற்சி என்கின்ற அருமையான குணமாகும். எந்தக் காலத்திலும் முயற்சி செய்துகொண்டே இருக்க வேண்டும். முயற்சி செல்வப் பெருக்கத்தினைக் கொடுப்ப தாகும். முயற்சி இல்லாதவர்கள் வறுமையில் தள்ளப் பட்டு விடுவார்கள். மனிதனே, முயன்று முயன்று உயர்ந்து செல்வாயாக!

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.** (616)

மனிதன் பெற்றிருக்கும் அறிவுச் செல்வத்தின் பெருமை யினை எடுத்துக் கூறவும் வேண்டுமோ! வாழ்க்கையில் துன்பங்கள் வந்து வந்து போவது இயற்கையாகும். துன்பத் திற்கு அச்சப்படுதல் என்பது எள்ளளவும் இருத்தலே கூடாது. துன்பம் என்கிற இடும்பையும் விரைவில் மறைந்து போகும். துன்பம் வந்துவிட்டதே என்று தளர்ந்து விடக் கூடாது.

வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். (622)

திருக்குறளில் காணப்படும் நான்கு அதிகாரங்களையாவது நாள்தோறும் ஒருமுறையேனும் படித்து உள்ளத்தினை வலிமை பெறச் செய்து கொள்ளல் வேண்டும். ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை என்ற அதிகாரங்களின் கருத்துரைகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எந்த நேரத்திலும் ஒலித்துக் கொண்டே இருப்பதாகுக.

உள்ளத்தில் தோன்றுகிற எண்ணங்களுக்கு மிகுந்த வலிமையுண்டு என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். எண்ணிய எண்ணங்களைத் திண்மையுடன் செயல்படுத்துதல் வேண்டும். எண்ணிய எண்ணங்கள் நடைபெறுமா என்ற ஐயமே எழுதல் கூடாது. எண்ணியர் திண்ணியராக இருத்தல் வேண்டும். எண்ணியபடியே அடைவோம் என்ற உறுதிப்பாட்டுடன் வெற்றி பெற வேண்டும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (666)

நிறைந்த கல்வியும் அறிவும் புத்திசாலித்தனமும் பெற்றிருந்தாலும் மனித குணம் என்கிற பண்பாடு இல்லையென்றால் அப்படிப்பட்டவர்கள் ஓரறிவுள்ள மரத்திற்குச் சமம் என்று கூற ஆசிரியர் தயங்கவில்லை. மரத்திற்குச் சமமானவர்கள் என்று கூறுவதெல்லாம் மக்கள் பண்பாடு இல்லாதவர்களேயாவார்கள். மனிதத் தன்மை இல்லையென்றால் அவர்கள் பெற்றிருக்கும் பிற ஆற்றல்கள் தீமையினையே செய்வனவாகும்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர் (997)
மக்கட்பண்பு இல்லா தவர்.

மனிதப் பிறவியென்று பெருமையுடனும் உரிமையுடனும் சொல்லிக் கொள்வதற்கு முதன்மையான காரணம் மனிதத் தன்மை என்கிற பண்பாடேயாகும். நல்ல பல நூல்களைக் கற்றிருந்தாலும் அவைகளால் மனம் திருந்தி நல்லவர்களாக ஆகிவிடுவார்கள் என்று சொல்ல முடியாது. தீய எண்ணங்களினால் பகைமைக் குணத்தையே பலர் வளர்த்திருப்பார்கள். கற்ற நூல்கள் அவர்களை நல்லவர்களாகச் செய்து விடாது.

பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது. (823)

நல்ல மனம் படைத்தவர்களைத்தான் பண்பாளர்கள் என்று சொல்ல வேண்டும். மக்கள் என்ற பெருமைக்குச் சொல்ல வேண்டுமென்றால் உறுப்புக்களை வைத்துச் சொல்லிவிடக் கூடாது. எல்லோருக்கும் இருப்பது போலவே இவர்களுக்கும் கைகள், கால்கள், கண்கள், முதலிய உறுப்புக்கள் இருக்கின்றனவே—ஆதலால் இவர்களும் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் தானே என்று சொல்லி விடக்கூடாது. மக்களுக்கென்று இருக்கவேண்டிய குணங்கள் இருந்தால்தான் அவர்களை மக்கள் கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு. (993)

கயவர்கள் என்ற பெயரில் சொல்லப்பட வேண்டியவர்கள் நல்ல மக்கள் கூட்டத்திலேயே இருந்து வருவார்கள், அவர்களுக்கு எள்ளளவும் மனிதத்தன்மையே மனிதக்குணமே இருக்காது. ஆனால் பார்ப்பதற்கு மக்கள் போலவே இருப்பார்கள். இப்படிப்பட்ட கயவர்கள் நிறைந்திருக்கும் சமுதாயம் முன்னேற்றமடைவது அரிதாகும்.

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல். (1071)

மக்களிடையே பிறப்பினால் உயர்வு தாழ்வு வகுத்துக் கொண்டு வாழ்கின்ற பழக்கத்தினை ஆசிரியர் வள்ளுவனார் பெரிய குற்றமாகக் கருதிப் பேசுகின்றார். எல்லா மக்கள் உயிர்க்கும் பிறப்பின் இயல்பு சமத்துவமாகவே கருதப்பட வேண்டியதாகும். அவரவர்கள் செய்கின்ற நற்செயல்கள் அல்லது தீச்செயல்கள் என்பவைகளைக் காரணமாக வைத்துத்தான் சிறப்பினைக் கூறுதல் வேண்டும்.

பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (972)

மக்களிடையே பெருமை சிறுமை என்பதாகப் பேச வேண்டுமென்றால் அவரவர்கள் செய்கின்ற தொழில் களை மனதிற் கொண்டுதான், பேசுதல் வேண்டும். வேறு எக்காரணத்தை வைத்துக்கொண்டும் பெருமை சிறுமை களைப் பேசுதல் குற்றமாகும்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (505)

உயர்ந்த எண்ணங்களை மக்களிடையே பரப்பிச் சமுதாயத்தை வளர்க்க வேண்டும். மனத் தூய்மையும் நல்ல எண்ணங்களும் நிறைந்தவர்கள் இல்லாத சமுதாயம் உலக வழக்கில் சொல்வது போல் எவ்வளவுதான் அறிவு பெற்றவர்களைப் பெற்றிருந்தாலும் முன்னேற்றமடைவது என்று கருதுவது இயலாத காரியமாகும். மற்றவர்களுக்கு இயன்ற அளவு தக்க நேரத்தில் ஒருவன் உதவி செய்ய வில்லையென்றால் அவனுக்கு அறிவு இருந்துதான் பயன் என்ன என்று ஆசிரியர் வினவுகின்றார்.

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை. (315)

அறிவுக்குத் தனிச்சிறப்பளித்து விளக்கம் தருகின்ற ஆசிரியர் வள்ளுவனார் நல்ல செயல்களைச் செய்து

கொண்டிருப்பவனைத்தான் அறிவு பெற்றவன் என்று கூறுகின்றார். பன்முறையும் சிந்தித்து அறிதல் வேண்டும்.

சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. (422)

பலர் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்திருப்பார்கள். ஆழ்ந்த சிந்தனை படைத்தவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் பிறரை வஞ்சித்துப் பொருள் பறிக்கும் தீய செயல்களையே செய்து கொண்டிருப்பார்கள். அப்படிப் பட்டவர்கள் பெற்றிருக்கும் அறிவினால் யாது பயன்?

அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். (175)

மக்களிடையே சிறந்த அறிஞர்கள் என்று சொல்லப் படுபவர்கள் நற்செயல்களைச் செய்யவில்லையென்றால் அவர்களின் அறிவு பயனற்றதேயாகும். ஆதலால் அனைத் திற்கும் அடிப்படையாக இருக்கவேண்டிய ஒன்று என்ன வென்றால் மனம் தூய்மையாக இருப்பதேயாகும்.

உலகப் பொதுமறையாகிய திருக்குறள் அறநூல் என்று வழங்கப்படுவதாகும். அறம் சொல்லுகின்ற ஆசிரியர் மனத்தினைத் தூய்மையாக வைத்துக் கொண்டிருப்பது தான் அறம் என்று சொல்கிறார். மனத்தில் எவ்விதத் தீய குணங்கள் சிறிதளவேனும் இருத்தலே கூடாது. மனத்தில் குற்றங்களை வைத்துக் கொண்டு வெளிப்படையாகச் செய்யப்படும் செயல்களெல்லாம் வெளிப்பகட்டு ஆரவாரங் களேயாகும்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (34)

இறைவன் வழிபாடு என்பது மனம் தூய்மையினையே குறிப்பதாகும். மனத்தில் மாசு என்கிற அழுக்கினை

வைத்துக் கொண்டு வெளிப்பகட்டாகச் செய்யப்படும் செயல்களெல்லாம் பயனற்றவைகளாகும். அவைகளை ஆரவாரத்தன்மை உள்ளவை என்று ஆசிரியர் கூறுகின்றார்.

மனத்திலே உண்டாகக் கூடிய தீய குணங்கள் எண்ணில் மிகுந்தவைகளாகும். அவைகளை எல்லாம் முதற் காரணமான நான்கு தீயகுணங்களில் அடக்கி ஆசிரியர் குறள் செய்து அமைக்கின்றார்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (35)

மேலே சொன்ன இரண்டு குறட்பாக்களும் அறம் இன்னதென்பதனை மிகத் தெளிவாக விளக்கம் செய்து விட்டன. அத்தகைய அறத்தன்மை கொண்டவர்களை அந்தணர்கள் என்று ஆசிரியர் வள்ளுவனார் அழைக்கின்றார். அவர்களையே அறவோர் என்றும் வழங்குகின்றோம்.

அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். (36)

முதல் அதிகாரமாக, கடவுள் வாழ்த்து திருக்குறளில் அமைந்துள்ளது. இறைவன் என்ற பெயருக்கு விளக்கம் ஒழுக்கத்தின் சிறப்பு, வழிபாட்டு முறை இன்ன பிற அனைத்தும் முதல் அதிகாரத்தில் காண முடிகின்றது. மேலே குறிப்பிட்ட அறம் என்ற சொல்லினையும் அந்தணன் என்ற சொல்லினையும் அமைத்துக் குறட்பா ஒன்றில் ஆசிரியர் சிறப்பாக விளக்கம் தருகின்றார்.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. (8)

'குடிசெயல்வகை' என்ற பெயரில் அருமையான அதிகாரம் ஒன்று திருக்குறளில் காணப்படுகின்றது. தான்

பிறந்து வாழ்ந்து வருகின்ற குடிமக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்பதனை இந்த அதிகாரம் விளக்கிக் கூறுகின்றது. நடைமுறையில் பொதுத் தொண்டு என்ற சொல்லினால் மக்களுக்குத் தொண்டாற்றுகின்ற செயலினைக் குறிப்பிடுகின்றோம். மக்களுக்குத் தொண்டு செய்பவனை உலக மக்கள் அனைவரும் பாராட்டுவார்கள் என்பது குறிப்பானதொரு செய்தியாகும்.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. (1025)

குடிமக்களுக்குத் தொண்டு செய்பவர்கள் உலக வழக்கில் பேசுவதுபோல் மானம் மரியாதையைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்று குறிப்புக் காட்டுகிறார். நேரம் காலத்தையும் பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது என்று உணர்த்துகின்றார். நன்கு சிந்திக்க வேண்டும்.

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். (1028)

உயர்ந்த பிறவியாகிய மானிடப் பிறவியைப் பெற்று நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுடையவர்களாக வாழ வேண்டும். அவ்வாறு பயனுள்ளவர்களாக வாழ்கின்ற மக்களுக்கு உலக மக்களே பாராட்டு விழா நடத்துவார்கள் என்பது குறிப்பாக உணர்த்தப் பெற்றது.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. (994)

மக்கள் பிறவி எடுத்தவர்களுக்கு இருக்க வேண்டிய உயர்ந்த பண்புகளிலே கேட்கின்ற பழக்கத்தினை வளர்த்துக் கொள்ள வேண்டும். நல்ல கருத்துக்களை ஐம்பொறிகளிலே ஒன்றாகிய செவிகளினால் கேட்கின்ற உயர்ந்த பழக்கம் வளர்க்கப் படவேண்டும். வாயினால்

மட்டும் சுவைத்து உண்ணத் தெரியும். செவியினால் நற்கருத்துக்களைக் கேட்கிற பழக்கம் இல்லாத மக்களை ஆசிரியர் வன்மையாகவும் கடுமையாகவும் கண்டித்துக் குறட்பா தருகின்றார்.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். (420)

திருவள்ளுவர் நமக்கு வழங்கியுள்ள உலகப் பொது மறையில் ஒவ்வொரு குறட்பாவினையும் பன்முறையும் சிந்தித்துத் தெளிதல் வேண்டும். எவ்வளவுதான் கல்வி கற்று அறிவு பெற்றிருந்தாலும் உலகத்தோடு பொருந்த வாழ்கின்ற முறையினை இன்றியமையாத கடமையாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (140)

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு. (426)

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல். (637)

உலகப் பொதுமறையாகிய திருக்குறளுக்கு உரையாசிரியர்கள் பலர் உண்டு. அவர்களில் மிகச் சிறந்த உரையாசிரியராகப் பரிமேலழகர் போற்றப்படுகின்றார். பரிமேலழகர் மிகச் சிறந்த இலக்கணப் புலமை நிறைந்த விற்பன்னர் ஆவார். அவருடைய உரைவிளக்கத்தில் இலக்கணச் செறிவும் ஆழ்ந்த பொருள் நுட்பமும் நிறைந்து இருக்கின்றனவென்று பேரறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

திருவள்ளுவர் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தார் என்று வரலாறுகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. திருக்குறள் எழுதப்பட்டு ஆயிரம்

ஆண்டுகள் கழித்து பரிமேலழகர் உரை எழுதி இருக்கின்றார். ஆகையினால் பரிமேலழகர் காலத்தின் சூழ்நிலைகளினால் பொதுமறையாகிய திருக்குறளுக்குப் பல இடங்களில் தவறான முறையில் விளக்கம் தருகின்றார்.

எல்லாக் காலத்திற்கும், எல்லா மக்களுக்கும், பொதுத் தன்மையில் திருவள்ளுவர் அமைத்து இருக்கின்ற குறட்பாக்களுக்கு, சாதி, மதம், சமயம், வருணம் என்பன போன்ற சொற்களைப் பரிமேலழகர் பற்பல இடங்களில் சொல்லுகின்றார். அவற்றுள் ஒன்றிரண்டு குறிப்பிடலாம்.

''அதுதான் நால்வகை நிலைத்தாய், வருணந்தோறும் வேறுபாடு உடைமையின்.''

''அஃதாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையவர் ஆதல.''

இவ்வாறு பல இடங்களில் உரையாசிரியர் பரிமேலழகர் குறிப்பிட்டுச் சொல்லுவது பொருந்தாக் கூற்று ஆனபடியால் அவைகள் நீக்கப்படுதல் வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

திருக்குறளில் ''இல்வாழ்க்கை'' என்ற அதிகாரம், இல்லறத் தலைவனாகிய கணவனுடைய சிறப்பினையும், கடமைகளையும் கூறுவதாகும். இந்த அதிகாரத்தில் முதலாவதாகச் சொல்லப்பட்டிருக்கும் குறட்பாவினைச் சிந்திக்க வேண்டும்.

**''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்ஆற்றின் நின்ற துணை.''**

இல்லறத் தலைவன் தன்னுடன் இயல்பாகவே இருந்து வருபவர்களாகிய பெற்றோர், மனைவி, மக்கள் என்ற மூன்று வகையினருக்கும் நல்ல நெறியில் நின்று கடமையாற்ற வேண்டும் என்பதே இக்குறட்பாவின் பொருளாகும். இக் குறட்பாவுக்கு விளக்கம் சொல்லுகின்ற பரிமேலழகர், பிரம்மச்சரியம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் ஆகிய மூன்று ஆசிரமத்தில் இருப்பவர்களுக்குத் துணையாக

இருக்க வேண்டும் என்று கூறுவது திருவள்ளுவரின் கருத்துக்கு மாறுபட்டதாகும். இல்லறம் துறவறம் ஆகிய இரண்டினைத்தான் ஆசிரியர் வள்ளுவனார் தம் நூலில் கூறியுள்ளார்.

இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் இரண்டாவதாக அமைந்துள்ள குறட்பா :

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை."

அனைத்தையும் துறந்துவிட்டு, நோன்பு நோற்று, தவத்தினைச் செய்பவர்கள் துறவிகள் எனப்படுவர். அவர்களுக்குக் காலம் நேர்ந்தபொழுது, இல்லறத்தான் பணிவிடைகள் செய்தல் வேண்டும். வறுமையுற்றவர்களைத் துவ்வாதவர்கள் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். எந்த ஆதரவும் இல்லாமல் தன்னிடத்தில் வந்து இறந்து போனவர்களுக்கு இல்லறத்தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும். இந்தக் குறட்பாவில், "துறந்தார்கள்" என்பதற்குப் பெற்றோர்களாலும், உற்றார் உறவினர்களாலும் துறக்கப்பட்டவர் என்று விளக்கம் சொல்லுவது ஏற்க முடியாததாக இருக்கின்றது.

திருக்குறளில் செய்ந்நன்றியறிதல் என்ற அதிகாரம் சிறப்பாக அமைந்துள்ளது. அதாவது மற்றவர்கள் செய்த நன்மையினை மறக்காமல் இருக்கவேண்டும் என்பதாகும். நல்ல வாய்ப்பு வந்தபோது நன்மை செய்தவர்க்கு நாம் திருப்பி நன்மை செய்யவேண்டும் என்பதாகும்.

"நன்றி" என்ற சொல்லுக்கு நன்மை என்பது பொருளாகும். "செய்ந்நன்றி" என்ற சொல்லுக்கு, செய்த நன்மை என்று பொருளாகும்.

மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் நன்மை செய்வதைக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். பெற்றோர்களைப் பேணுதல், மனைவி மக்களுக்கு நன்மை செய்தல், அறம் புரிதல் இன்னபிற செயல்கள் எல்லாம் ஒருவருடைய

நன்றிக் கடன்களாகும். இத்தகைய நன்மைகளைச் செய்வதற்கு ஒருகால் தவறினாலும், மற்றவர்கள் தனக்குச் செய்த நன்றியை மறக்கவே கூடாது. குறட்பாவினைச் சிந்திக்க வேண்டும்.

> ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

இக்குறட்பாவில் ''செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' உய்வில்லை என்று பரிமேலழகர் கூறுகின்றார். எந்நன்றி கொன்றார்க்கும் என்பதற்கு உரை சொல்லும் பொழுது பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும், உய்வுண்டு என்கிறார். பெரிய பாவங்களைக் கூறுகின்றார்.

''பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்திலிருந்து நீங்கும் வாயில் உண்டாம். பெரிய அறங்களைச் சிதைத்தலாவது, ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்''

மிகவும் கொடுமையான செயல்களான பாபங்களைச் செய்தவர்களும் தப்பித்துக் கொள்ளலாம் என்று உரை ஆசிரியர் குறிப்பிடுவது பொருந்தாக் கூற்றாகும்.

''கொடுங்கோன்மை'' என்ற அதிகாரத்தில் அமைந்துள்ள பத்தாவது குறட்பா :

> ''ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
> காவலன் காவான் எனின்''

ஆட்சி செய்கின்ற காவலன் நாட்டினைச் செழிப்பாக வைத்திருக்கவேண்டும் என்பதே இந்தக் குறட்பாவின் திரண்ட கருத்தாகும்.

நல்லபடியாக ஆட்சி செய்யவில்லை என்றால் நாட்டின் வளமை குன்றிவிடும், என்பதனைச் சுட்டிக் காட்டுவதற்காக, பசுக்கள் பால் தருவது குறைந்துவிடும் என்று கூறினார். அதாவது செழிப்பான நிலைமை கெட்டுவிடும்

என்பதைச் சுட்டிக் காட்ட பொதுத் தன்மையில் எடுத்துக் காட்டு ஒன்றினைக் கூறினார்.

ஒரு நாட்டிற்கு இன்றியமையாதது தொழில் வளம் என்பதாகும். நல்லபடியாக ஆட்சி நடைபெறவில்லை என்றால் அந்த நாட்டின் தொழில் நசிந்துவிடும் என்றும், தொழிலாளர்கள் துன்புறுவர் என்றும் கூறினார்.

"அறு தொழிலோர் நூல் மறப்பர்"

என்பது குறட்பாவாகும்.

தொழில்கள் ஆறுவகைப்படும் என்பதற்குப், பரிமேலழகர், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பவைகளைக் குறிப்பிட்டு இவைகள்தான் ஆறு தொழில்கள் என்று விளக்கம் செய்வது முற்றிலும் தவறானதாகும்.

உலகில் எல்லாக் காலத்திலேயும், எல்லா இடத்திலேயும் நடைபெறுகின்ற தொழில்கள் அனைத்தையும் ஆறுவகைகளில் பேரறிஞர்கள் அடக்கிக் கூறியிருக்கின்றார்கள். அவைகளாவன. உழவர், வாணிகர், ஆசிரியர், கம்மியர், கலைஞர், மருத்துவர்.

தொடர்ந்து வருகின்ற அறிவு வளர்ச்சியின் காரணமாக, பல்வேறு வகைகளில் தொழில் முறைகள் வேறுபட்டுத் தோன்றினாலும் அனைத்தும் பெரும்பான்மையான பொதுத்தன்மையில் இந்த ஆறுவகைக்குள் அடங்கும் என்று அறிதல் வேண்டும்.

எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்டினருக்கும் எல்லா மக்களுக்கும் என்றென்றும் நிலைத்து நிற்கின்ற உண்மையினை எடுத்துரைத்துச் சிறப்பித்த ஆசிரியரின் பெருஞ் சிறப்பினை உலகறியச் செய்ய வேண்டியது ஒவ்வொரு தமிழனின் இன்றியமையாக் கடமையாகும். பெருங் கடலில் சிறுதுளி போல் இந்த முன்னுரை அமைந்துள்ளது.

தமிழகத்தில் தலைசிறந்த பதிப்பகமாகத் திகழ்ந்து வருவது, தனிச்சிறப்பு வாய்ந்தது, வானதி பதிப்பகமாகும்.

அருமையான நூல்களை அருமையாக வெளியிடுகின்ற பெருமை நிறைந்த உரிமையாளர் உயர்திரு. ஏ. திருநாவுக்கரசு சான்றோர் அவர்களை வணக்கத்துடன் பாராட்டுகிறேன்.

திருவாளர் மூவேந்தர் முத்து அவர்களின் கடுமையான உழைப்பினை எவ்வளவு பாராட்டினாலும் பொருந்துவது ஆகும். இந்நூல் அவருடைய அச்சகத்தில்தான் சிறப்பாக அச்சாகியிருக்கிறது.

''உழைப்பினை உறுதியாகக் கொண்டு முன்னேற வேண்டும்'', என்ற பொன்மொழிக்கு இலக்கணமாக திருவாளர் முத்து திகழ்ந்து வருகின்றார்.

திருவாளர் முத்து அவர்கள் சிறந்த அச்சக உரிமையாளர். முதல் தரமான பதிப்பாளர்களில் முதல் வரிசையில் நிற்பவர். அவர் சிறந்த எழுத்தாளர். நல்ல நூலாசிரியர். மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்கெல்லாம் சென்று தமிழர்களின் பாராட்டுகளைப் பெற்றவர். 'நெஞ்சம் நிறைந்த மலேசியா' என்னும் பயன்படும் பயண நூலையும் எழுதியவர்.

தமிழ்நாடு பதிப்பாளர் சங்கத்தின் செயலாளராக இருந்து அரிய பல சாதனைகள் செய்தவர். தற்போது, அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைத் தலைவராகப் பணியாற்றி வருபவர். ''உழைப்பால் உயர்ந்த உத்தமர்'' என்னும் கரும வீரரின் அடிச்சுவடுகளைப் பின் பற்றி வாழ்க்கையினை அமைத்துக் கொண்டவர். மூவேந்தர் அச்சகமும், பூவழகி பதிப்பகமும் இரண்டு கண்கள் போல் அவரால் வளர்க்கப்பட்டு வருகின்றன.

முதுமைப் பருவம் வாராத திருவாளர் முத்து அவர்களின் உழைப்பினைப் பாராட்டிச் சிறப்பிக்க வேண்டியது என் போன்ற மூத்தவர்களின் கடமையாகும் என்பதற்காகவே இவ்வளவும் எழுதுகின்றேன்.

''ஊக்கம் உயர்வு தரும்'', ''முயற்சி உயற்சி தரும்''

# திருக்குறள் அமைப்பு முறை

திருவள்ளுவர் அருளிய உலகப் பொதுமறை என்னும் திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அறத்துப்பாலில் 'பாயிர இயல்', 'இல்லற இயல்', 'துறவற இயல்' என்ற மூன்று சிறு பிரிவுகள் அடங்கி உள்ளன.

பொருட்பாலில் 'அரசியல்', 'அங்க இயல்', 'ஒழிபு இயல்' என்ற மூன்று பிரிவுகள் அடங்கியுள்ளன.

காமத்துப்பாலில், 'களவு இயல்', 'கற்பு இயல்' என்ற இரண்டு இயல்கள் உள்ளன.

அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் ஆக மொத்தம் 133 அதிகாரங்கள் திருக்குறளில் அடங்கி உள்ளன. அதிகாரம் ஒன்றுக்குப் பத்துக் குறட்பாக்கள் உள்ளன. ஆக மொத்தம் குறட்பாக்கள் 1330 ஆகும்.

# அதிகாரங்களின் பெயர்கள்

## அறத்துப்பால்—பாயிர இயல்


1. கடவுள் வாழ்த்து
2. வான் சிறப்பு
3. நீத்தார் பெருமை
4. அறன் வலியுறுத்தல்


## அறத்துப்பால்—இல்லற இயல்


5. இல் வாழ்க்கை
6. வாழ்க்கைத் துணைநலம்
7. புதல்வரைப் பெறுதல்
8. அன்புடைமை
9. விருந்து ஓம்பல்
10. இனியவை கூறல்
11. செய்ந்நன்றி அறிதல்
12. நடுவு நிலைமை
13. அடக்கம் உடைமை
14. ஒழுக்கம் உடைமை
15. பிறன்இல் விழையாமை
16. பொறை உடைமை
17. அழுக்காறாமை
18. வெஃகாமை
19. புறங்கூறாமை
20. பயன் இல சொல்லாமை
21. தீவினை அச்சம்
22. ஒப்புரவு அறிதல்
23. ஈகை
24. புகழ்


## அறத்துப்பால்—துறவற இயல்


25. அருள் உடைமை
26. புலால் மறுத்தல்
27. தவம்
28. கூடா ஒழுக்கம்
29. கள்ளாமை
30. வாய்மை
31. வெகுளாமை
32. இன்னா செய்யாமை
33. கொல்லாமை
34. நிலையாமை
35. துறவு
36. மெய்யுணர்தல்
37. அவா அறுத்தல்
38. ஊழ்

## பொருட்பால்—அரசியல்

39. இறை மாட்சி
40. கல்வி
41. கல்லாமை
42. கேள்வி
43. அறிவு உடைமை
44. குற்றம் கடிதல்
45. பெரியாரைத் துணைக் கோடல்
46. சிற்றினம் சேராமை
47. தெரிந்து செயல்வகை
48. வலி அறிதல்
49. காலம் அறிதல்
50. இடம் அறிதல்
51. தெரிந்து தெளிதல்
52. தெரிந்து வினையாடல்
53. சுற்றம் தழால்
54. பொச்சாவாமை
55. செங்கோன்மை
56. கொடுங்கோன்மை
57. வெருவந்த செய்யாமை
58. கண்ணோட்டம்
59. ஒற்றாடல்
50. ஊக்கம் உடைமை
61. மடியின்மை
62. ஆள்வினையுடைமை
63. இடுக்கண் அழியாமை

## பொருட்பால்—அங்க இயல்

64. அமைச்சு
65. சொல் வன்மை
66. வினைத் தூய்மை
67. வினைத் திட்பம்
68. வினை செயல் வகை
69. தூது
70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்
71. குறிப்பு அறிதல்
72. அவை அறிதல்
73. அவை அஞ்சாமை
74. நாடு
75. அரண்
76. பொருள் செயல் வகை
77. படை மாட்சி
78. படைச் செருக்கு
79. நட்பு
80. நட்பு ஆராய்தல்
81. பழைமை
82. தீ நட்பு
83. கூடா நட்பு
84. பேதை மை
85. புல்லறிவாண்மை
86. இகல்
87. பகை மாட்சி
88. பகைத்திறம் தெரிதல்
89. உட்பகை
90. பெரியாரைப் பிழையாமை
91. பெண் வழிச் சேறல்
92. வரைவின் மகளிர்
93. கள் உண்ணாமை
94. சூது
95. மருந்து

## பொருட்பால்—ஒழிபு இயல்


96. குடிமை
97. மானம்
98. பெருமை
99. சான்றாண்மை
100. பண்பு உடைமை
101. நன்றியில் செல்வம்
102. நாண் உடைமை
103. குடி செயல் வகை
104. உழவு
105. நல்குரவு
106. இரவு
107. இரவு அச்சம்
108. கயமை


## காமத்துப்பால்—களவு இயல்


109. தகை அணங்கு உறுத்தல்
110. குறிப்பு அறிதல்
111. புணர்ச்சி மகிழ்தல்
112. நலம்புனைந்து உரைத்தல்
113. காதற் சிறப்பு உரைத்தல்
114. நாணுத்துறவு உரைத்தல்
115. அலர் அறிவுறுத்தல்


## காமத்துப்பால்—கற்பு இயல்


116. பிரிவு ஆற்றாமை
117. படர் மெலிந்து இரங்கல்
118. கண் விதுப்பு அழிதல்
119. பசப்புறு பருவரல்
120. தனிப் படர் மிகுதி
121. நினைந்தவர் புலம்பல்
122. கனவுநிலை உரைத்தல்
123. பொழுது கண்டு இரங்கல்
124. உறுப்பு நலன் அழிதல்
125. நெஞ்சொடு கிளத்தல்
126. நிறை அழிதல்
127. அவர் வயின் விதும்பல்
128. குறிப்பு அறிவுறுத்தல்
129. புணர்ச்சி விதும்பல்
130. நெஞ்சொடு புலத்தல்
131. புலவி
132. புலவி நுணுக்கம்
133. ஊடல் உவகை

# திருக்குறள் தெளிவுரை

## அறத்துப்பால்

### பாயிரம்

### 1. கடவுள் வாழ்த்து

[இறைவனது பண்புகள், வழிபாடு பயன்
முதலியவற்றைக் கூறுதல்]

**1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.**

**பதவுரை :—** எழுத்தெல்லாம் - உலகில் வழங்கி வரும் எழுத்துக்களெல்லாம், அகரம் - ஒலி வடிவமான அகரமாகிய, முதல - முதலை உடையனவாகும், [அதுபோல] உலகு - உலகம், ஆதிபகவன் - ஆதிபகவனாகிய, முதற்று - முதலை உடையதாகும்.

**கருத்துரை :—** உலகில் வழங்கிவரும் எழுத்துக்கள் எல்லாம் ஒலி வடிவான 'அகர'மாகிய முதலை உடையன; அதுபோல உலகம் ஆதிபகவன் ஆகிய முதலை உடையது.

2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

[ப-ரை] வால் அறிவன் - மெய்யுணர்வினை உடையவனது, நல்தாள் - நல்ல அடிகளை, தொழாஅர் - தொழவில்லை, எனின்-என்றால்; கற்றதனால்-நூல்கள் பல கற்றதனால், ஆய - உண்டான பயன் - பயனாவது, என் - யாது?

[க-ரை] எல்லா நூல்களையும் கற்றவனுக்கு அக்கல்வி அறிவால் உண்டான பயன் என்னவென்றால், தூய அறிவினன்—மெய்யுணர்வினன்—ஆகிய இறைவனுடைய நல்ல அடிகளைத் தொழுதல் ஆகும்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

[ப-ரை] மலர் மிசை-நெஞ்சமாகிய மலரில், ஏகினான்-சென்றவனது, மாண் - சிறப்பான, அடி - அடிகளை, சேர்ந்தார் - இடைவிடாது நினைப்பவர்கள், நிலமிசை - உலகத்தில், நீடு - நிலைத்த பெருமையுடன், வாழ்வார் - வாழ்வார்கள்.

[க-ரை] உள்ளக் கமலத்தில்—மனத்தில்—சென்றிருப்பவனான, இறைவனுடைய மாட்சிமைப்பட்ட அடிகளை எப்போதும் நினைப்பவர்கள், உலகில் அழிவின்றி வாழ்வார்கள்.

4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

[ப-ரை] வேண்டுதல் - விரும்புதலும், வேண்டாமை - வெறுத்தலும், இலான்அடி - இல்லாதவனுடைய அடிகளை, சேர்ந்தார்க்கு - எப்போதும் நினைப்பவர்களுக்கு, யாண்டும் - எக்காலத்திலும், இடும்பை - துன்பங்கள், இல - இல்லாமற்போகும்.

[க-ரை] விருப்பும் வெறுப்பும் இல்லாதவனான இறைவனின் அடிகளை நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு எக்காலத்திலும் துன்பமே உண்டாகாது.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

[ப-ரை] இறைவன் - இறைவனது, பொருள்சேர் - மெய்ம்மை சேர்ந்த, புகழ் - புகழினை, புரிந்தார் மாட்டு - விரும்பினவரிடத்து, இருள் - அஞ்ஞானம் பற்றி, சேர் - வருகின்ற, இருவினையும் - நல்வினை தீவினையாகிய இரண்டும், சேரா - சேர்வதில்லை.

[க-ரை] அஞ்ஞானத்தினால் வருகின்ற நல்வினை தீவினையாகிய இரண்டும், இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழினை விரும்பினவர் இடத்தில் ஏற்படுவதில்லை.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

[ப-ரை] பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய பொறிகள் ஐந்தின், வாயில் - வழியாக உடைய, ஐந்து - ஐந்து ஆசைகளையும், அவித்தான் - அறுத்தவனுடைய, பொய்தீர்-பொய்யில்லாத [மெய்யான], ஒழுக்க - ஒழுக்கமான, நெறி - வழியில், நின்றார் - வழுவாது நின்றவர்கள், நீடு - எக்காலத்திலும் ஒரு தன்மையராய், வாழ்வார் - வாழ்வார்கள்.

[க-ரை] மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்து பொறிகளின் வழியாக வரும் ஆசைகளை அறுத்தவனுடைய மெய்யான ஒழுக்க வழியில் நின்றவர்கள், எக்காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வார்கள்.

7. தனக்கு உவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு
மனக்கவலை மாற்றல் அரிது. [அல்லால்

[ப-ரை] தனக்கு - தனக்கு, உவமை - ஒப்பு, இல்லாதான் - இல்லாதவனுடைய, தாள் - அடிகளை, சேர்ந்தார்க்கு-நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, அல்லால்- அல்லாமல், [பிறருக்கு] மனக்கவலை - மனக்கவலைகளை, மாற்றல் - நீக்குதல் முடியாது.

[க-ரை] தனக்கு ஈடாக எதனையும் ஒப்பிட்டுக் கூற முடியாதவனுடைய தாள்களை நினைப்பவர்களுக்கு அல்லாமல், மற்றவர்களால் மனத்தில் உண்டாகும் துன்பங்களை நீக்க முடியாது.

8. அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறஆழி நீந்தல் அரிது.

[ப-ரை] அறஆழி - அறக்கடல் ஆகிய, அந்தணன் - இறைவனது, தாள் சேர்ந்தார்க்கு - அடிகளை நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, அல்லால் - அல்லாமல் [மற்றவர்களுக்கு] பிறஆழி - ஏனைய பொருள், இன்பம் என்னும் கடல்களை, நீந்தல் அரிது-நீந்திக் கடத்தல் முடியாது.

[க-ரை] அறக்கடலாகிய இறைவனுடைய அடிகளாகிய தெப்பத்தினைச் சார்ந்தவர்க்கு அல்லாமல், மற்றவர்களுக்குப் பொருள், இன்பம் ஆகிய கடல்களை நீந்திக் கடத்தல் முடியாததாகும்.

9. கோள்இல் பொறியின் குணம்இலவே எண்குணத்
தாளை வணங்காத் தலை. [தான்

[ப-ரை] கோள் - கொள்ளுதல், இல் - இல்லாத, பொறியின் - ஐம்பொறிகள் போல, குணம் இலவே - பயன்படுவன அல்ல, [எவையென்றால்] எண்குணத்தான் - சிந்தித்து உணர்தற்கு எளிமையான குணங்களையுடையவனது, தாள் - அடிகளை, வணங்காத் தலை - வணங்காத் தலைகள்.

[க-ரை] தத்தமக்குரிய புலன்களைக் கொள்ளுதல் இல்லாத மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளைப் போல அறிந்துணர்வதற்குரிய எளிமையான குணங்களையுடைய இறைவனுடைய தாள்களை வணங்காத் தலைகளும் பயன்படுதலுடையன அல்லவாம்.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

[ப-ரை] இறைவன் - இறைவனுடைய, அடி-அடிகளை [நினைத்துக் கொண்டிருப்பவர்கள்] பிறவி - இப்பிறவி யாகிய, பெரும் - பெரிய, கடல் - கடலினை, நீந்துவர் - நீந்திக் கடப்பார்கள், சேராதார் - நினைக்காதவர்கள், நீந்தார் - கடக்க மாட்டார்கள்.

[க-ரை] இறைவன் அடிகள் என்னும் தெப்பத்தைச் சேர்ந்தவர்கள், பிறவியாகிய கடலை நீந்திக் கடப்பர். அவ்வாறு சேராதவர்கள் (நினைத்திருக்காதவர்கள்) நீந்த மாட்டார்கள்; அதனுள் அழுந்துவார்கள்.

## 2. வான் சிறப்பு

[மழையினது அருமை, பெருமை,
பயன் முதலியன]

1. வான்நின்று உலகம் வழங்கி வருதலான்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

[ப-ரை] வான்நின்று-மழையானது நீங்காமல் பெய்து வருவதால், உலகம் - உலகிலுள்ள உயிர்கள், வழங்கி வருதலான்-நிலைபெற்று இருந்து வருகின்றன, [ஆதலால்] தான் அமிழ்தம் - அம்மழைதான் அமிழ்தமாகும், என்று- என்பதாக, உணரல் - தெரிந்து கொள்ள வேண்டிய, பாற்று-தன்மையினை உடையதாகும்.

[க-ரை] மழை இடைவிடாமல் பெய்வதால் உலகி லுள்ள உயிர்கள் நிலைபெற்று வருகின்றன. ஆதலால், அம்மழையே அமிழ்தம் என்று அறியப்படும் தன்மை உடையதாகும்.

**2.** துப்பார்க்கு துப்புஆய துப்புஆக்கித் துப்பார்க்குத் துப்புஆய தூஉம் மழை.

[ப-ரை] துப்பார்க்கு - உணவு உண்பவர்களுக்கு, துப்புஆய - நல்லதான, துப்பு - உணவுகளை, ஆக்கி - உண்டாக்கி, துப்பார்க்கு- [உணவுகளை] உண்பவர்களுக்கு, துப்பு-தானும் உணவு, ஆயதூஉம் - ஆவதும், மழை - மழையே யாகும்.

[க-ரை] உண்பவர்களுக்கு நல்ல உணவுகளை உண்டாக்கிக் கொடுப்பதும், தானும் உண்பவர்களுக்கு உணவாக இருப்பதும் மழையே யாகும்.

**3.** விண் இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்(து) உள்நின்று உடற்றும் பசி.

[ப-ரை] விண் - மழை, இன்று - பெய்யாதபடி, பொய்ப்பின்-பொய்த்து விடுமானால், விரிநீர் - கடலால் சூழப்பட்ட, வியன் - அகன்ற, உலகத்தினுள், பசிநின்று - பசி நிலையாக நின்று, உடற்றும் - எல்லா உயிர்களையும் துன்புறுத்தும்.

[க-ரை] மழையானது வேண்டுங் காலத்தில் பெய்யாமல் இருந்துவிட்டால் கடலால் சூழப்பட்ட இவ் வுலகில் பசியானது நிலைத்து நின்று எல்லா உயிர்களையும் துன்புறுத்தும்.

**4.** ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும் வாரி வளம்குன்றிக் கால்.

[ப-ரை] உழவர் - உழவர்கள், ஏரின் - ஏரினால், உழாஅர் - உழவுத் தொழிலினைச் செய்யமாட்டார்கள், [எப்போதென்றால்] புயல் - மழை, என்னும் - எனப்படும், வாரி-வருவாய், வளம் - தனது வளமாகிய பயன், குன்றிக் கால்-குறைந்து விட்டால்.

[க-ரை] மழை பெய்கின்ற வருவாய் தன்னுடைய பயனைத் தராவிட்டால் உழவர்கள் ஏரினால் உழ மாட்டார்கள்.

**5. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

[ப-ரை] கெடுப்பதூஉம் – பெய்யாமல் மக்களைக் கெடுப்பதும், கெட்டார்க்கு– [அதனால்] கெட்ட மக்களுக்கு, சார்வாய் – துணையாக நின்று பெய்து, எடுப்பதூஉம் – காப்பாற்றிஉயர்த்துவதும், எல்லாம் – ஆகிய எல்லாம் [செய்ய,வல்லது], மழை– மழையேயாகும்.

[க-ரை] பெய்யாமல் மக்களைக் கெடுப்பதும் கெட்டார்க்குத் துணையாய் நின்று, பெய்து காப்பாற்றுவதும் ஆகிய எல்லாம் மழையே யாகும்.

**6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது.**

[ப-ரை] விசும்பின் – மேகத்திலிருந்து, துளி – மழைத் துளிகள், வீழின் அல்லால் – வீழாமற் போனால், மற்று ஆங்கே – அப்பொழுதே, பசும் – பசுமையான, புல் – புல்லினது, தலை – தலையையும், காண்புஅரிது – பார்த்தல் முடியாததாகிவிடும்.

[க-ரை] மேகத்திலிருந்து மழைத்துளிகள் வீழாவிட்டால் பசும் புல்லினது தலையையும் காணுதல் அரிதாகிவிடும்.

**7. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி
தான்நல்காது ஆகி விடின்.**

[ப-ரை] நெடும் – நீண்ட பெரிய, கடலும் – கடலும், தன் – தன்னுடைய, நீர்மை – தன்மையில், குன்றும் – குறைந்துவிடும், எழிலிதான் – மேகம்தான், தடிந்து – அக்கடல் நீரைக் குறைத்து, நல்காதாகி விடின் – அதனிடத்தில் மழை பெய்யாமல் இருந்து விட்டால்.

[க-ரை] மேகம் கடல்நீரைக் குறைத்து மீண்டும் அக்கடலில் மழை பெய்யாவிட்டால் பெரிய கடலும் தன்னுடைய தன்மையில் குறைந்து விடும்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

*[ப-ரை]* வானோர்க்கும் - வானவர்களுக்கும், ஈண்டு- இவ்வுலகத்தில், சிறப்பொடு சிறப்பான திருவிழாக்களுடனே கூடிய, பூசனை - பூசை, செல்லாது - நடக்காது, [எப்போதென்றால்] வானம் - மழையானது, வறக்கு மேல் - பெய்யா விட்டால்.

[க-ரை] மழை பெய்யாவிட்டால் வானவர்களுக்கும் இவ்வுலகில் நடைபெறுகின்ற சிறப்பான திருவிழாவோடு கூடிய பூசையும் நடக்காது.

9. தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்.

*[ப-ரை]* வியன் - அகன்ற, உலகம் - இவ்வுலகத்தில், தானம் - தானம் செய்வதும், தவம் - தவம் செய்வதும், இரண்டும் - ஆகிய இரண்டும், தங்கா - நடைபெறாது [எப்போதென்றால்] வானம் - மழையானது, வழங்காது - பெய்யாது, எனின் - என்றால்.

*[க-ரை]* மழை பெய்யாவிட்டால் அகன்றஇவ்வுலகில் தானம் செய்வதும் தவம் செய்வதும் ஆகிய இரண்டு அறங்களும் நடைபெறாது.

10. நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

[ப-ரை] யார் யார்க்கும்-எவ்வகைப்பட்ட மக்களுக்கும், நீர் இன்று - நீரில்லாமல், உலகு - உலக வாழ்க்கையானது, அமையாது எனின் - நடை பெறாது ஆயின் [அதுபோல]' ஒழுக்கு - மழை நீர் இடைவிடாமல் ஒழுகும் ஒழுக்கும்,

வான் இன்று - மழையானது இல்லாவிட்டால், அமையாது நடைபெறாது.

[க-ரை] எப்படிப்பட்ட மேலானவர்களுக்கும் நீரில்லாமல் உலகியல் நடைபெறாது. மழையில்லாமல், அந்நீர் இடைவிடாமல் ஒழுகும் ஒழுக்கும் அமையாது.

## 3. நீத்தார் பெருமை

[முற்றுந் துறந்த முனிவரது பண்பு,
ஆற்றல், சிறப்பு முதலியன]

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
 வேண்டும் பனுவல் துணிபு.

[ப-ரை] *ஒழுக்கத்து* - சீரிய ஒழுக்கத்திலே நிலைத்து, *நீத்தார்* - துறந்தவரது, *பெருமை* - பெருமையினை, *விழுப்பத்து* - உயர்வான பொருள்கள் எல்லாவற்றுள்ளும் [உயர்ந்ததென்று], *வேண்டும்* - விரும்புவதாகும், *பனுவல்* - நூல்களது, *துணிபு* - துணிவான உறுதிப்பாடு என்பதாகும்.

[க-ரை] சீரிய ஒழுக்கத்தில் நின்று துறந்தவர்களது பெருமையினை மேலான பொருள்கள் எல்லாவற்றுள்ளும் மேலானதென்று விரும்புவது நூல்களினுடைய துணிபாகும்.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
 இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

[ப-ரை] *துறந்தார்* - ஆசைகளையெல்லாம் விட்ட முனிவரது, *பெருமை* - பெருமையினை, *துணைக்கூறின்* - எண்ணிக் கணக்கிட்டு இவ்வளவென்று சொல்லப்

போனால், வையத்து - இந்த உலகில், இறந்தாரை - இது வரை இறந்தவர்களை, எண்ணிக் கொண்டு - எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டது, அற்று - போன்றதாகும்.

[க-ரை] முனிவர்களது பெருமையினை எண்ணிப் பார்த்து இவ்வளவென்று கூறப்புகுந்தால், அச்செயல் இவ்வுலகில் இதுவரை இறந்தவர்களை எண்ணியறிய முயன்றது போன்றதாகும்.

3. இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

[ப-ரை] இருமை - பிறப்பு, வீடு என்னும் இரண்டு, வகை - இன்ப துன்ப வகைகளை, தெரிந்து - அறிந்து தெரிந்து, ஈண்டு - இப்பிறப்பில், அறம் பூண்டார் - துறவறத்தினை மேற்கொண்டவரது, பெருமை - பெருமையே, உலகு-உலகத்தில், பிறங்கிற்று-சிறந்ததாகும்.

[க-ரை] பிறப்பு, வீடு என்னும் இரண்டின் வகைகளை அறிந்து துறவறத்தினை மேற்கொண்ட முனிவர்களின் பெருமையே உலகத்தில் சிறந்ததாகும்.

4. உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கு ஓர்வித்து.

[ப-ரை] உரன் - திண்மையான அறிவு, என்னும் - என்கின்ற தோட்டியான் - அங்குசத்தினால், ஓர்ஐந்தும் - பொறிகளாகிய ஐந்து யானைகளையும், காப்பான் - அடக்கிக் காப்பவன், வரன் என்னும் - எல்லாவற்றினும் மேலானதென்று கூறப்படும், வைப்புக்கு - பேரின்ப நிலத்திற்கு, ஓர்வித்து - ஒரு விதையாவன்.

[க-ரை] அறிவு என்னும் அங்குசத்தினால் பொறிகளாகிய ஐந்து யானைகளையும் ஆசைகளில் செல்லாமல் காப்பவன் எல்லாவற்றிலும் மேலான வீடு என்னும் பேரின்ப நிலத்திற்கு ஒரு வித்து ஆவான்.

5. ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு
இந்திரனே சாலும் கரி. [ளார்கோமான்

[ப-ரை] ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தின் வழியில் ஐந்து ஆசைகளையும், அவித்தான் - அடக்கியவனது, ஆற்றல் - வலிமைக்கு, அகல் - அகன்ற, விசும்புளார் - வானத்திலுள்ளவர்களுடைய, கோமான் - தலைவனான, இந்திரனே - இந்திரனே, சாலும் - அமைந்து உணர்த்தும், கரி – சாட்சி (சான்று) ஆகும்.

[க-ரை] புலன்களில் செல்லுகின்ற ஐந்து ஆசைகளையும் அடக்கியவனுடைய ஆற்றலுக்கு அகன்ற வானத்தில் உள்ளவர்களின் தலைவனான இத்திரனே சான்றாவான் (சாட்சியாவான்).

6. செயற்குஅரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்.

[ப-ரை] செயற்கு அரிய - செய்வதற்கு அருமையானவற்றை, செய்வார்–செய்பவர்கள், பெரியர்-பெரியோர்கள் ஆவார்கள், செயற்கு - செய்வதற்கு, அரிய - அருமையான செயல்களை, செய்கலாதார் - செய்ய முடியாதவர்கள், சிறியர் – சிறியோர்களாவார்கள்.

[க-ரை] செய்தற்கு அருமையான செயல்களைச் செய்பவர்கள் பெரியோர்கள் ஆவார்கள். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்ய மாட்டாமல் எளியவற்றைச் செய்பவர்கள் சிறியோர்களாவார்கள்.

7. சுவைஒளிஊறு ஓசை நாற்றம் என்றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

[ப-ரை] சுவை - சுவைத்தலும், ஒளி - ஒளியும், ஊறு - தீண்டுதலும், ஓசை - ஓசையும், நாற்றம் - மணமும், என்று - என்று வரையறுக்கப்பட்ட, ஐந்தின் வகை –

ஐந்தினது வகைகளை, தெரிவான் கட்டே - தெரிந்துணர்பவன் அறிவின் கண்ணதே, உலகு - உலகம் உள்ளதாகும்.

[க-ரை] சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் கூறுபாட்டினை ஆராய்பவனின் (முனிவரின்) அறிவினிடத்தே உள்ளதாம் உலகம்.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

[ப-ரை] நிறை - பொருளும் பயனும் நிறைந்த மொழி - மொழிகளையுடைய, மாந்தர் பெருமை - முனிவர்களுடைய பெருமையினை, நிலத்து-உலகில், மறைமொழி - அவர்கள் ஆணையாகச் சொல்லும் சொற்களே, காட்டிவிடும் - கண் கூடாகக் காட்டும்.

[க-ரை] பயன் நிறைந்த மறைமொழி எனப்படும் சொற்களைச் சொல்லும் முனிவர்களுடைய பெருமையினை அவர்கள் ஆணையாகச் சொல்லும் அச்சொற்களே (மறைமொழி) காட்டிவிடும்.

9. குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

[ப-ரை] குணம் - மெய்யுணர்வான சீரிய குணம், என்னும் - என்று சொல்லப்பட்ட, குன்று-குன்றின் மீது, ஏறி-ஏறி, நின்றார் - நின்ற முனிவர்களுடைய, வெகுளி - சினம், [கோபம்] கணமேயும் - தான் உள்ள அளவு கண நேரமே யானாலும், காத்தல் - வெகுளப்பட்டவரால் அதனைத் தடுத்தல், அரிது - முடியாததாகும்.

[க-ரை] உயர்ந்த குணமென்னும் குன்றின்மேல் நின்ற முனிவர்களுடைய கோபம், இருப்பது கணநேரமேயானாலும் கோபிக்கப்பட்டவர்களால் அக்கோபம் தடுப்பதற்கு முடியாததாகும்.

**10. அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழு கலான்.**

[ப-ரை] எவ்வுயிர்க்கும்-எல்லா உயிர்களிடத்தும், செந்தண்மை அருளுடைமையினை, பூண்டு - கடமையாக மேற்கொண்டு, ஒழுகலான் – நடந்து கொள்ளுவதனாலே, அந்தணர் - அந்தணர், என்போர் - என்று கூறப்படுவோர், அறவோர் - ஆசைகளை அறுத்து அறநெறியிலே நின்ற முனிவர்களேயாவார்கள்.

[க-ரை] எல்லா உயிர்களிடத்திலும் அருளுடன் நடந்து கொள்ளுவதால் அந்தணர் என்று சொல்லப்படுபவர்கள் அறவோர்களாகிய முனிவர்களே யாவார்கள்.

## 4. அறன் வலியுறுத்தல்

[அறம் இன்னதென்பது; அதனால்
வரும் பயன்களைப் பற்றி வற்புறுத்தல்]

**1. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.**

[ப-ரை] சிறப்பு ஈனும் - பெருஞ்சிறப்பினையும் தரும், செல்வமும் – மேலான செல்வத்தினையும், ஈனும் - தருவதாகும், [ஆகையினால்] உயிர்க்கு - மக்களுயிர்க்கு, அறத்தின் - அறத்தினைவிட, ஊங்கு -மேம்பட்ட, ஆக்கம் - செல்வம், எவன் – வேறு என்ன இருக்கின்றது.

[க-ரை] பெருஞ் சிறப்பினையும் செல்வத்தினையும் அளிக்கின்ற அறத்தினைவிட மக்களுயிர்க்கு மேம்பட்ட செல்வம் வேறு என்ன இருக்கின்றது?

**2. அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.**

[ப-ரை] அறத்தின் – அறத்தினைவிட, ஊங்கு – மேலான, ஆக்கமும் - செல்வமும், இல்லை - இல்லையாகும், அதனை - அந்த அறத்தினை, மறத்தலின் - மறப்பதைவிட, ஊங்கு - பெரிய, கேடு இல்லை - தீங்கு இல்லையாகும்.

[க-ரை] அறம் செய்வதைவிட மேம்பட்ட செல்வமும் இல்லை; அந்த அறத்தினை அஞ்ஞானத்தால் மறப்பதை விடப்பெரிய தீமையும் இல்லை.

**3. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாம் செயல்.**

[ப-ரை] ஒல்லும்-தம்மால் முடியக் கூடிய, வகையான் - வழிகளில் எல்லாம், அறவினை - அறமான செயல்களை, ஓவாதே - எப்போதும், [நிறுத்தாமல்] செல்லும் - செல்லக் கூடிய, வாய் – இடங்களில், எல்லாம் - எல்லாம், செயல் - செய்தல் வேண்டும்.

[க-ரை] தம்மால் முடியக்கூடிய வழிகளால் இடை விடாமல் செல்லக்கூடிய இடங்களில் எல்லாம் அறத்தினைச் செய்தல் வேண்டும்.

**4. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.**

[ப-ரை] மனத்துக்கண் - மனத்தில், மாசு - குற்றம், [அழுக்கு] இலனாதல் - இல்லாதவனாக இருக்க வேண்டும் அறம்-அறம் என்பது, அனைத்து-அவ்வளவேயாகும், பிற- அதுவல்லாமல் செய்யப்படுவன யாவும், ஆகுல - ஆரவாரம் என்னும், நீர - தன்மையுடையனவாகும்.

[க-ரை] மனத்தில் குற்றமில்லாமல் இருத்தல் வேண்டும். அறம் என்பது அதுவேயாகும். அறம் அவ்வளவேதான்; அது வல்லாமல் செய்யப்படுவன யாவும் ஆரவாரம் என்னும் தன்மையுடையனவாகும்.

5. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

[ப-ரை] அழுக்காறு-பொறாமைக் குணம், அவா-ஆசையும், வெகுளி - சினமும், இன்னா - கடுமையான, சொல் - சொல்லும், [ஆகிய] நான்கும் -நான்கும், இழுக்கா-விலக்கப்பட்டு, இயன்றது அறம் - நடைபெறுவதே அறம் என்பதாகும்.

[க-ரை] பொறாமையும், பேராசையும், கோபமும், கடுஞ்சொல்லும் ஆகிய நான்கும் விலக்கப்பட்டு நடைபெறுவதே அறமாகும்.

6. அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

[ப-ரை] அன்று-இறந்துபோகின்ற காலத்தில், அறிவாம் என்னாது - அறிந்து செய்பவராவோம் என்று இருக்காமல், அறம் செய்க - இப்போதே அறத்தினைச் செய்வாயாக, அது - அப்படிச் செய்வதானது, பொன்றுங்கால் - இறக்குங் காலத்தில், பொன்றா - அழியாத, துணை - துணையாக இருக்கும்.

[க-ரை] கடைசிக் காலத்தில் அறம் செய்வோம் என்று இருக்காமல் நாள்தோறும் அறம் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தல் இறக்குங் காலத்தில், உயிருக்கு அழியாத துணையாக இருக்கும்.

7. அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை.

[ப-ரை] அறத்து-அறத்தினது, ஆறு-பயனும் வழியும்; இது - இதுதான், என - என்று, வேண்டா - எடுத்துக் கூறல் வேண்டுவதில்லையாகும், [ஏனெனில்] சிவிகை - பல்லக்கினை, பொறுத்தானோடு-சுமந்து தூக்கிச் செல்பவனோடு,

ஊர்ந்தான் இடை - அமர்ந்திருப்பவன், [ஆகிய இரு வரிடையே] காட்சியளவினாலேயே உணரப்பட்டு விடும்.

[க-ரை] அறத்தின் வழி (பயன்) இதுதான் என்று கேட்டறிய வேண்டுவதில்லை; பல்லக்கினைத் தூக்கிக் கொண்டு போகின்றவனையும் உள்ளே உட்கார்ந்து கொண்டு போகின்றவனையும் பார்க்கும் காட்சியளவி னாலேயே உணர்ந்து கொள்ளப்படும்.

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அ∴துஒருவன்
வாழ்நாள் வழிஅடைக்குங் கல்.

[ப-ரை] வீழ்நாள்-அறம் செய்யாமல் வீணாகும் நாள், படாஅமை - உண்டாகிவிடாமல், நன்று ஆற்றின் - அறத்தினைச் செய்வானானால், அஃது, அவ்வாறு செய்வ தானது, ஒருவன் - ஒருவன், வாழ்நாள் - மீண்டும் உயிரோடு கூடி வாழும் நாளின், வழி-அடைக்கும்-வழியினை அடைக் கின்ற, கல் - கல்லாகும்.

[க-ரை] அறம் செய்யாத நாளே இல்லாமல் ஒருவன் நடந்து கொள்ளுவானானால், அஃது மீண்டும் உடம் போடு பிறத்தல் என்னும் வழியை வாராமல் அடைக்கும் கல்லாகும்.

9. அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

[ப-ரை] அறத்தான் - அறவழிகளினாலே, வருவதே இன்பம் - வருவதான இன்பமே மெய்யான இன்பமாகும், மற்றெல்லாம் - வேறு முறைகளில் வருவன வெல்லாம், புறத்த - இன்பமல்லாமல் துன்பம் தருவனவேயாகும், புகழும் இல - புகழினையும் உடையவை அல்ல.

[க-ரை] அறச் செயல்களினால் வருவதுதான் உண்மை யான இன்பமாகும். மற்ற முறைகளில் வருவனவெல்லாம் இன்பமும் அல்ல; புகழுடையனவும் ஆகா.

**10.** **செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு**
**உயற்பாலது ஓரும் பழி.**

[ப-ரை] ஒருவற்கு-ஒருவனுக்கு, செயற்பாலது-செய்ய வேண்டிய தன்மையுடையது, அறனே - அறச் செயல்களே யாகும், உயல் - நீக்க வேண்டிய,பாலது -தன்மையுடையது, பழி - தீய [பழியான] செயல்களேயாகும்.

*[க-ரை]* ஒருவர்க்குச் செய்யும் தன்மையுடையது அறச் செயல்களேயாகும். நீக்க வேண்டிய தன்மையுடையது தீயவைகளான செயல்களே யாகும்.

# இல்லற இயல்

## 5. இல்வாழ்க்கை

[இல்லறத்தின் சிறப்பும், இல்வாழ்வானுடைய பண்புகளும் கடமைகளும்]

1. **இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்ஆற்றின் நின்ற துணை.**

[ப-ரை] இல்வாழ்வான்-இல்லறத்தினை மேற்கொண்டு வாழ்வான், என்பான் — என்று சொல்லப்படுபவன், இயல்புடைய - இயல்பாகவே தன்னைச் சார்ந்திருக்கும், மூவர்க்கும் - பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூன்று வகையினர்க்கும், நல் - நல்ல, ஆற்றின் - ஒழுக்க வழிகளில், நின்றதுணை - நிலையாக இருக்கும் துணையாவான்.

[க - ரை] இல்லறத்தோடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுபவன் இயல்பாகவே தன்னைச் சார்ந்திருக்கும் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூன்று திறத்தார்க்கும் நல்லொழுக்க நெறியில் நின்ற சிறந்த துணையாக இருப்பவனாவான்.

2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

[ப-ரை] துறந்தார்க்கும் - துறவறத்தினை மேற்கொண்ட முனிவர்களுக்கும், துவ்வாதவர்க்கும் – வறியவர்களுக்கும், இறந்தவர்க்கும் - யாருமின்றித் தம்மிடம் வந்து இறந்தவர்களுக்கும், இல்வாழ்வான் – இல்லறத்தில் வாழ்பவன், என்பான் – என்பவன், துணை - துணையாகும்.

[க-ரை] துறந்தவர்களுக்கும், வறுமையாளர்களுக்கும், யாருமின்றித் தன்னிடம் வந்து இறந்தவர்களுக்கும் இல்வாழ்வான் என்பவன் துணையாக இருக்கக் கடவன்.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

[ப-ரை] தென்புலத்தார் - முன்னோர்கள், தெய்வம் - தெய்வம், விருந்து - விருந்தினர், ஒக்கல் - சுற்றத்தார் (உறவினர்), தான் - தான், என்று-என்பதான, ஐம்புலத்து-ஐந்து இடத்திலும் செய்ய வேண்டிய, ஆறு - வழியினை, ஓம்பல் தலை - போற்றிக் காத்துச் செய்தல் தலையாய அறமாகும்.

[க-ரை] முன்னோர்கள், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்ற ஐந்திடத்தும் செய்ய வேண்டிய நல்வழியினைப் போற்றிக் காத்து வழுவாமல் நடந்து கொள்ளுதல் சிறப்புடைய அறமாகும்.

4. பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

[ப-ரை] பழி அஞ்சி - பழிக்கு அச்சப்பட்டு, பாத்து – பலருக்கும் பகுத்துக் கொடுத்து, உண் – உண்ணும் முறையினை, வாழ்க்கை-இல்வாழ்க்கையானது, உடைத்தாயின்-பெற்றிருக்குமானால், வழி எஞ்சல் - அவனுடைய பரம்பரை மறைதல், எஞ்ஞான்றும் இல் - எக்காலத்திலும் இல்லையாகும்.

[க-ரை] மற்றவர்கள் கூறும் பழிக்கு அஞ்சிப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்து வாழ்கின்ற இல்லறத் தானுடைய பரம்பரை என்றும் குறைவின்றி இருப்பதாகும்.

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

[ப-ரை] இல்வாழ்க்கை - இல்லற வாழ்க்கையானது, அன்பும் அறனும் - அன்புடைமையினையும் அறத்தினையும், உடைத்தாயின் - பெற்றிருக்குமானால், அது-அதுவே (இல் வாழ்க்கைக்கு) பண்பும் பயனும் - சிறந்த குணமும் பயனும் ஆகும்.

[க-ரை] இல்லற வாழ்க்கையானது அன்பினையும் அறத்தினையும் உடையதாக இருக்குமேயானால் அதுவே இல்லறத்தின் பண்பும் பயனுமாகும்.

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்.

[ப-ரை] இல்வாழ்க்கை - இல்லற வாழ்க்கையினை, அறத்தாற்றின்-அறமான வழியில், ஆற்றின்-நடத்துவானே யானால், புறத்தாற்றின்-புறமான வேறு வழியில், போஒய்ப் பெறுவது-போய் அடைகின்ற பயன், எவன்-யாது இருக்கிறது.

[க-ரை] அறநெறியில் இல்வாழ்க்கையினை ஒருவன் நடத்துவானேயானால், அப்படிப்பட்டவன் அதற்குப் புறம்பான வேறு வழிகளில் சென்று பெறுவது யாது?

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

[ப-ரை] இல்வாழ்க்கை-இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டு, இயல்பினான்-இயல்பாகவே பொருத்தமான தன்மைகளுடன், வாழ்பவன்-வாழுகின்றவன், என்பான்.

என்பவன், முயல்வாருள்-ஆசைகளை அறுத்து வாழ முயலு கின்ற முனிவர்கள், எல்லாம்—எல்லோரையும்விட, தலை-மிக்கவன் ஆவான்.

[க-ரை] இல்லறத்திற்குரிய இயல்புகளுடனே இல்வாழ்க்கை நடத்துபவன் ஆசைகளை அடக்கி வாழும் துறவிகள் எல்லோரிலும் மேலானவன்.

8. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

*[ப-ரை]* ஆற்றின்-துறவறத்தில் நின்றவர்களையும் நல்வழியில், ஒழுக்கி-ஒழுகச் செய்து, அறன் இழுக்கா-தானும் அறத்தினை விட்டு நீங்காமல் நடத்தும், இல் வாழ்க்கை - இல்லற வாழ்க்கையானது, நோற்பாரின் - நோன்பு நோற்றுத் தவம் செய்பவர்களைவிட, நோன்மை யுடைத்து-பொறுமையுடையதாகும்.

[க-ரை] தவம் செய்வோரையும் நன்னெறியிலே நடத்திச் சென்று அறத்தினின்றும் நீங்காத இல்லறம், நோன்பு நோற்றுத் தவம் செய்வோரது நிலைமையையும் விடப் பெருமையினை உடையதாகும்.

9. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

[ப-ரை] அறன் - அறம், எனப்பட்டதே - என்று சொல்லப்படுவது, இல்வாழ்க்கை - இல்லறமேயாகும், அஃதும்-ஏனைய துறவறமும், பிறன்-பிறரால், பழிப்பது-பழிக்கப்படுவது என்பது, இல்லாயின்-இல்லையானால், நன்று-நல்லதாகும்.

[க-ரை] அறம் என்று சிறப்பித்துக் கூறப்படுவது இல்லறமேயாகும். மற்றைய துறவறமோ என்றால், அதுவும் பிறனால் பழிப்புக்கு இடமின்றி இருக்குமேயானால், நல்லதாகும்.

**10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.**

[ப-ரை] *வாழ்வாங்கு-வாழ வேண்டிய முறையில், வையத்துள்-இவ்வுலகில், வாழ்பவன்-வாழ்கின்ற இல்லறத்தான், வான்-வானுலகில், உறையும்-வசிக்கின்ற, தெய்வத்துள்-தெய்வங்களுடனே, [ஒன்றாக] வைக்கப்படும்-வைக்கப்படுவான்.*

[க-ரை] *இவ்வுலகில் இல்லறத்தினை நடத்தி வாழ வேண்டிய முறையில் வாழ்பவன் வானத்தில், வாழ்கின்ற தெய்வங்களுள் ஒன்றாக வைத்து மதிக்கப்படுவான்.*

## 6. வாழ்க்கைத் துணை நலம்

[இல்லறத்திற் குரிய துணையான மனைவியின் பெருமை, நற்பண்பு, கடமை முதலியன]

**1. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

[ப-ரை] *மனை - மனையறத்திற்கு, தக்க - தகுந்த, மாண்பு-சிறப்பினை, உடையளாகி-உடையவளாக இருந்து, தற்கொண்டான் - தன்னைக் கொண்டவனது, வளம்-வருவாய்க்கு, தக்காள்-தகுந்தபடி வாழ்பவளே, வாழ்க்கைத் துணை - வாழ்க்கைத் துணைவியான மனைவியாவாள்.*

[க-ரை] *மனையறத்திற்குத் தகுந்த நற்குண நல்செய்கையான சிறப்பினையுடையவளாகித் தன்னைக் கொண்டவனது வரவுக்குத் தகுந்தபடி வாழ்பவளே வாழ்க்கைத் துணையாவாள்.*

**2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்.**

[ப-ரை] மனை-இல்வாழ்க்கைக்குரிய, மாட்சி-சிறப்பான நற்பண்புகள், இல்லாள்கண்-இல்லாளிடம், இல்லாயின்-இல்லாவிட்டால், வாழ்க்கை - இல்லற வாழ்க்கையானது, எனை-மற்ற வகைகளில் எவ்வளவு, மாட்சித்து-பெருமையுடையது, ஆயினும்-ஆனாலும், இல்-பயனுடையதில்லையாகும்.

[க-ரை] இல்லறத்திற்கேற்ற சிறப்பு மனைவியிடம் இல்லாமற் போனால் அவ்வில்வாழ்க்கை செல்வம் முதலிய வேறு வகைகளில் எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் பயனுடையதில்லையாகும்.

**3. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை.**

[ப-ரை] இல்லவள்-இல்லாள், மாண்பு-பெருஞ்சிறப்பு நிறைந்தவளாக, ஆனால்-இருந்து விட்டால், இல்லது-மனையில் இல்லாதது, என்-யாது, இல்லவள்-இல்லத்து மனைவி, மாணாக்கடை—நற்பண்பு உடையவளாக இல்லாவிட்டால், உள்ளதுஎன்-மனையில் இருப்பது என்ன? [ஒன்றுமே இல்லையாகும்]

[க-ரை] மனைவி சிறப்புடையவளாக இருந்துவிட்டால் அவ் இல்வாழ்க்கையில் இல்லாதவொன்றுமில்லை. அவள் மனைக்குரிய சிறப்பு இல்லாதவளாகிவிட்டால் இல்லறத்தில் உள்ளது ஒன்றுமில்லை.

**4. பெண்ணின் பெருந்தக்க யாஉள கற்பென்னும் திண்மைஉண் டாகப் பெறின்.**

[ப-ரை] பெண்ணின்-இல்லாளைவிட, பெருந்தக்க-மேம்பட்டவை, யாஉள-யாவை உள்ளன, [எப்போதென்றால்] கற்பு—அவளிடம் கற்பு, என்னும்-எனப்படும்,

திண்மை - மன வலிமை, உண்டாக - உண்டாகியிருக்க, பெறின்-பெற்றால்.

[க-ரை] கற்பு என்னும் கலங்காமையாகிய மனத் திண்மை இருந்து விட்டால் பெண்ணைவிட உயர்வான (மேம்பட்ட) பொருள்கள் யாவை உள?

5. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.

[ப-ரை] தெய்வம்-தெய்வத்தை, தொழாஅள்-தொழ மாட்டாள், கொழுநன்-நாயகனை, தொழுது-தொழுது [வணங்கி], எழுவாள்-துயில்விட்டு எழுகின்ற கற்புடைய பெண், பெய்-பெய், என-என்று சொன்னால், மழை பெய்யும்-மழையானது பெய்யும்.

[க-ரை] தெய்வத்தினைத் தொழாதவளாகிக் கணவனைத் தொழுது துயில்விட்டு எழுபவள் 'பெய்' என்று சொல்ல மழை பெய்யும்.

6. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

[ப-ரை] தற்காத்து-தன்னையும் கற்பினால் காத்து, தற்கொண்டான்-தன்னை மணந்து கொண்ட நாயகனை யும், பேணி-ஒழுக்கத்தில் வழுவாமலும் பிற முறைகளிலும் போற்றிக் காத்து, தகை-நன்மை, சான்ற-நிறைந்த, சொற் காத்து-புகழினையும் காத்து, சோர்வு - கடமைகளில் மறதி, இலாள்-இல்லாமல் இருப்பவளே, பெண்-மனைவி யாவாள்.

[க-ரை] தன்னையும் காத்துக் கொண்டு கொண்ட கணவனையும் பேணிப் பிறர் கூறும் நற்புகழுரைகளையும் போற்றிக் காத்துச் சோர்வு (இவைகளில் மறதி) இல்லாதவளே மனைவியாவாள்.

**7. சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.**

[ப-ரை] *சிறை காக்கும்-சிறை வைத்துப் பாதுகாக்கின்ற, காப்பு-காவல் என்பது, எவன் செய்யும்-என்ன பயனைச் செய்ய முடியும், மகளிர்-பெண்கள், நிறை-நிறை குணத்தினால், காக்கும்-தங்களைக் காத்துக் கொள்ளுகின்ற, காப்பே தலை-காவல்தான் தலைமையான காவலாகும்.*

[க-ரை] *மகளிரைச் சிறை வைத்துக் காத்தல் என்பது என்ன பயனைச் செய்ய முடியும்? நிறையென்னும் கற்பினால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதே தலையான காப்பாகும்.*

**8. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.**

[ப-ரை] *பெண்டிர் - மனைவியர், பெற்றான் - தாம் பெற்ற கணவனை, பெறின்-போற்றி வணங்கப் பெற்றால், புத்தேளிர் வாழும் - தேவர்கள் வாழுகின்ற, உலகு-உலகத்தில், பெரும்-பெரிய, சிறப்பு-சிறப்பினை, பெறுவர்-பெறுவார்கள்.*

[க-ரை] *பெண்டிர் தம்மைக் கொண்ட கணவனை வழிபட்டு வணங்கி வாழ்வாரானால், புத்தேளிர் வாழ்கின்ற உலகத்தில் பெருஞ் சிறப்பினைப் பெறுவார்கள்.*

**9. புகழ்புரிந் தில்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.**

[ப-ரை] *புகழ் புரிந்த-புகழினை விரும்பிய, இல்-இல்லானை, இல்லோர்க்கு - இல்லாதவர்களுக்கு, இகழ்வார்-தன்னை இகழ்ந்து பேசுபவர்கள், முன் - முன்னே, ஏறுபோல்-ஆண் சிங்கம் போன்ற, பீடு-பெருமையாக, நடை-நடந்து செல்லல், இல்லை-இல்லையாகும்.*

[க-ரை] புகழ்வதற்குரிய மனையாளைப் பெறாத இல்வாழ்வார்களுக்குத் தம்மை இகழ்ந்து பேசும் பகைவர் முன்னே ஆண்சிங்கம் போன்ற பெருமிதமான நடை இல்லை.

10. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

[ப-ரை] மங்கலம்-மங்கலமான நன்மை, என்ப-என்பதாகக் கூறுவர், [எதை யென்றால்] மனைமாட்சி-மனைவியினுடைய நற்பண்புகளை [சிறப்பினை], மற்று அதன்-அவைகளுக்கு, நன்-நல்ல, கலன்-அணிகலம் என்பர், எவை என்றால்] நன்-நல்ல, மக்கட் பேறு-மக்கள் செல்வம் பெற்றிருப்பதனை.

[க-ரை] மனைவியினுடைய நற்குண நற்செயல்களை இல்லறத்திற்கு மங்கலம் என்று கூறுவர். அந்த மங்கலத்திற்கு நன்மக்கள் பெறுதலை அணிகலம் என்று கூறுவர்.

## 7. மக்கட் பேறு

### [நன்மக்களால் அடையும் இன்பமும் பயனும் சிறப்பும் பிறவும்]

1. பெறுமவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

[ப-ரை] பெறுமவற்றுள்-ஒருவன் பெறுகின்ற செல்வங்களுள், அறிவு-அறிய வேண்டுவனவற்றை, அறிந்த-அறியக் கூடிய, மக்கட்பேறு-சிறந்த மக்களைப் பெறுதல், அல்ல-அல்லாமல், பிற-மற்ற செல்வங்களை, யாம் அறிவு தில்லை-யாம் அறிந்திருக்கவில்லை,

[க-ரை] ஒருவன் பெறுகின்ற செல்வங்களுள் அறிய வேண்டுவனவற்றை அறிதற்குரிய சிறந்த மக்களைப் பெறுவது போன்ற மற்றச் செல்வங்களையாம் மதிப்பது இல்லை.

2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

[ப-ரை] எழுபிறப்பும் - எழுகின்ற பிறப்புகளில் எல்லாம், தீயவை-துன்பம் தரும் தீமைகள், தீண்டா-தீண்டாவாம் [யாருக்கென்றால்] பழி-பழிகளை, பிறங்கா-உண்டாக்காத, பண்புடை - நற்பண்புகள் [குணங்கள்] கொண்ட, மக்கள்-மக்களை, பெறின்-ஒருவன் பெற்றிருந்தால்.

[க-ரை] பழிக்கப்படாத சிறந்தபண்புடைய மக்களைப் பெறுவானானால் அவனுக்கு எழுகின்ற - வருகின்ற - பிறவிகளிலெல்லாம் தீயவை அணுகா.

3. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

[ப-ரை] தம்-தமது, மக்கள்-மக்களை, தம்பொருள்-தமது பொருள்கள், என்ப-என்று அறிந்தோர் கூறுவர், அவர் பொருள்-அவர்களது மக்களாகிய அப்பொருள், தம்தம்-தாம் செய்த, வினையால்-நல்வினை தீவினைகளால், வரும்-உண்டாகும்.

[க-ரை] தம் மக்களைத் தம்முடைய பொருள் என்று அறிந்தோர் கூறுவர். மக்களாகிய அப்பொருள் அவரவர்கள் செய்த வினைப்பயனால் உண்டாவதாகும்.

4. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

[ப-ரை] அமிழ்தினும் - அமிழ்தத்தினைவிட, ஆற்ற-மிகவும், இனிதே-இனிமையானதாக இருக்கும், [எது

வென்றால்] தம்-தமது, மக்கள்-குழந்தைகள், சிறு-சிறிய, கை-கைகளால்-அளாவிய-அளாவப்பட்ட [கலைக்கப்பட்ட] கூழ்-சோறு, என்பதாகும்.

[க-ரை] தமது மக்கள் சிறு கைகளால் பிசைந்த சோறானது சுவையான அமிழ்தத்தினையும் விட மிகவும் இனிமையானதாக இருக்கும்.

5. மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

[ப-ரை] உடற்கு இன்பம்-ஒருவனுடைய உடம்புக்கு இன்பமாக இருப்பது, மக்கள்-தமது குழந்தைகளுடைய, மெய் தீண்டல்-உடம்பினைத் தொடுதலாகும், செவிக்கு இன்பம்-காதுகளுக்கு இன்பம் என்பது, அவர் சொல் கேட்டல்-அவர்களுடைய இனிய சொற்களைக் கேட்ட லாகும்.

[க-ரை] ஒருவனுடைய உடம்புக்கு இன்பமாவது தனது மக்களுடைய உடம்பினைத் தொடுதலாகும். அவர்களுடைய சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பமாகும்.

6. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

[ப-ரை] குழல் இனிது-குழலிசை இனிதாக இருக்கின்றது, யாழ் இனிது-யாழிசை இனிதாக இருக்கின்றது, என்ப-என்று கூறுவார்கள், [யாரென்றால்] தம்-தமது, மக்கள்-குழந்தைகளுடைய, மழலைச் சொல்-மழலைச் சொற்களை, கேளாதவர்-கேட்டறியாதவர்கள்.

[க-ரை] தமது குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டறியாதவர்கள் குழலோசையும் யாழோசையும் இனிமையாக இருக்கின்றன என்று கூறுவர்.

**7. தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.**

[ப-ரை] தந்தை-தகப்பனார், மகற்கு-தனது மகனுக்கு, ஆற்றும்-செய்ய வேண்டிய, நன்றி-நன்மையான கடமை, [யாதென்றால்] அவையத்து-கற்றோர் இருக்கும் சபையில், முந்தி-சிறப்பாக முற்பட்டு, இருப்ப-இருக்குமாறு, செயல்-செய்வதாகும்.

[க-ரை] தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மை யாதென்றால் கற்றவர் நிறைந்த அவையில் அவரினும் சிறப்புற்று முற்பட்டிருக்குமாறு கல்வியுடையவனாகச் செய்தலாகும்.

**8. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.**

[ப-ரை] தம் - தம்முடைய, மக்கள்-பிள்ளைகளின், அறிவுடைமை - அறிவுடைமையானது, மா - பெரிய, நிலத்து-பூமியில், மன்-நிலைத்திருக்கும், உயிர்க்கெல்லாம்-உயிர்களுக்கெல்லாம், தம்மின் இனிது-தமக்கு இனிமையாக இருப்பதைவிட இன்பமானதாக இருக்கும்.

[க-ரை] தமது மக்களுடைய அறிவுடைமையானது தமக்கு உண்டாக்கும் இன்பத்தினைவிட உலகத்து உயிர்களுக்கெல்லாம் இனிமையானதாக இருக்கும்.

**9. ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.**

[ப-ரை] ஈன்ற-பெற்றெடுத்த, பொழுதின்-காலத்தில் மகிழ்ந்ததைவிட, பெரிது-மிகப் பெரிதாக, உவக்கும்-மகிழ்ச்சியடைவாள், [யாரென்றால்] தன் மகனை-தனது மகனை, சான்றோன்-எல்லா வகையிலும் மேலான தன்மைகள் நிறைந்தவன், எனக் கேட்ட-என்று பெரியோர்கள் சொல்லக் கேட்ட, தாய்-தாய்.

[க-ரை] தன் மகனைக் கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோன் என அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாயானவள் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியினை விட பெரு மகிழ்ச்சி அடைவாள்.

**10. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்.**

[ப-ரை] தந்தைக்கு-தகப்பனுக்கு, மகன்-மகனானவன், ஆற்றும் உதவி-செய்ய வேண்டிய உதவியானது, [என்னவென்றால்] இவன் தந்தை-இவனுடைய தகப்பன், [இப்பிள்ளையைப் பெறுவதற்கு] என் நோற்றான் கொல்-என்ன நோன்பினை நோற்றிருப்பானோ, எனும் சொல்-என்ற சொல்லினைப் பிறர் கூறுமாறு செய்தலாகும்.

[க-ரை] மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவி என்னவென்றால், ''இப்பிள்ளையைப் பெற இத்தந்தை என்ன நோன்பு நோற்றானோ?'' என்று பிறர் சொல்லும் சொல்லினை உண்டாக்குவதாகும்.

## 8. அன்புடைமை

[மக்கட் பிறவிக்கு இருக்க வேண்டிய அன்பு சிறப்பாக விளக்கப்படுகின்றது]

**1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்.**

[ப-ரை] அன்பிற்கும் - அன்பினுக்கும், அடைக்கும்-அடைத்து வைக்கின்ற, தாழ்-தாழ்ப்பாளும், உண்டோ-இருக்கின்றதோ, [நண்பர்களின் துன்பம் கண்ட போது] ஆர்வலர் - அன்புடையாரது; புன்கண்நீர் - பொழியும்

புன்மையான கண்ணீரே, பூசல் தரும்-அவர் அன்பினை எல்லோரும் அறியுமாறு செய்யும்.

[க-ரை] அன்பிற்கு அடைத்து வைக்கப்படுகின்ற தாழ்ப்பாள் இல்லை. அன்பினைப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்பினைப் பெற்ற வரது துன்பத்தினைக் கண்டபோதே வெளிப்படுகின்ற கண்ணீரே அன்புடையவரது உள்நின்ற அன்பினை எல்லோரும் அறியுமாறு காட்டிவிடும்.

2. அன்பிலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்
என் பும் உரியர் பிறர்க்கு.

[ப-ரை] அன்பு இலார் - அன்பு இல்லாதவர்கள், எல்லாம் - எல்லாப் பொருள்களினாலும், தமக்கே உரியர் - தங்களுக்கே உரியவர்கள் ஆவார்கள், அன்புடையார்-அன்பினைக் கொண்டிருப்பவர்கள், என்பும்-தம்முடைய எலும்பினாலும், [உடம்பாலும்] பிறர்க்கு உரியர்-மற்றவர்களுக்கும் பயன்படுபவர்கள் ஆவார்கள்.

[க-ரை] அன்பில்லாதவர்கள் பிறர்க்குப் பயன் படாமையால் எல்லாப் பொருள்களாலும் தமக்கே உரியவர்கள் ஆவார்கள். அன்புடையவர்கள் தம்முடைய எலும்பினாலும் பிறர்க்கு உரியவர்கள் ஆவார்கள்.

3. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

[ப-ரை] ஆர் - பெறுதற்கரிய, உயிர்க்கு - மக்களுயிர்க்கு, என்போடு - எலும்புடைய உடம்போடு, இயைந்த- பொருந்திய, தொடர்பு - தொடர்பினை, அன்போடு இயைந்த - அன்புடனே ஒன்றுபட்டு வந்த, வழக்கு - வழியினாலாகிய பயனேயாகும், என்ப - என்று கூறுவார்கள்.

[க-ரை] பெறுதற்கரிய மக்களுயிர்க்கு எலும்புடைய உடம்போடு பொருந்திய தொடர்பினை, அன்புடனே பொருந்துவதற்கு வந்த வழியினாலாகிய பயனாகும் என்று அறிந்தோர் கூறுவர்.

4. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.

[ப-ரை] அன்பு - அன்பு என்பது, ஆர்வமுடைமை - மற்றவர்களிடத்தில் விருப்பம்உள்ளதை, ஈனும் - உண்டாக்கும், அது - அந்த விருப்பம், நண்பு - நட்பு, என்னும் - எனப் படும், நாடா - அளவில்லாத, சிறப்பு - சிறப்பினை, ஈனும் - கொடுப்பதாகும்.

[க-ரை] அன்புஎன்பது பிறரிடத்தில் செல்லும் ஆர்வம் என்னும் விருப்பத்தினை உண்டாக்கும். ஆர்வம் என்னும் அந்த விருப்பம் நட்பு என்று சொல்லப்படுகின்ற அளவு கடந்த சிறப்பினைக் கொடுக்கும்.

5. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

[ப-ரை] அன்பு - அன்பினை, உற்று - பெற்றவராகி, அமர்ந்த வழக்கு - பொருந்திய நெறியினாலான பயனே யாகும், என்ப - என்று கூறுவார்கள், [எதனையென்றால்] வையகத்து - இந்த உலகில், இன்பு - இல்லறத்தில் இன்பத்தினை, உற்றார் - நுகர்ந்தவர், எய்தும் சிறப்பு - பெறுகின்ற சிறப்பினை.

[க-ரை] இவ்வுலகில் இல்லறத்தில் இன்பமடைந்து பெறுகின்ற பெருமையினை, அன்பினைப் பெற்றவராகிப் பொருந்திய வழியினாலான பயனேயாகும் என்று அறிந்தோர் கூறுவார்கள்.

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

[ப-ரை] அன்பு – அன்பு, சார்பு - துணையாக இருப்பது, அறத்திற்கே - அறத்திற்குத்தான், என்ப - என்று கூறுவர், [யாரெனில்] அறியார் - அறியாமையுள்ளவர்கள், மறத்திற்கும் - அறத்திற்கு மாறான மறத்தினைப் போக்கு

வதற்கும், அஃதே – அந்த அன்புதான், துணை - துணை, யாக நிற்கும்.

[க–ரை] அறியாமையில் உள்ளவர்கள் அறத்திற்கு தான் அன்பு துணையென்று கூறுவர். மறத்தினை (தீ நெறியினை) நீக்குதற்கும் அந்த அன்பே துணையாகும்.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

[ப-ரை] என்பு - எலும்பு, இலதனை - இல்லாத உயிரினங்களை, வெயில் – வெயில், போல – சுடுவதைப் போல, அன்பு - அன்பு, இலதனை - இல்லாத உயிர்களை, அறம் – அறமானது, காயும் - சுடுவதாகும்.

[க-ரை] எலும்பு இல்லாத உயிரினங்களை வெயிலானது சுடுவது போல, அன்பில்லாத உயிர்களை அறம் கொடுமைப்படுத்தித் தண்டிக்கும்.

8. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்தற்று.

[ப-ரை] அகத்து - மனதில், அன்பு – அன்பானது, இல்லா - இல்லாத, உயிர்வாழ்க்கை - வாழ்க்கையானது, [வாழ்க்கை நடத்துவது] வன்பாற்கண் - வறண்ட நிலத்தில், வற்றல் – பட்டுப்போன, மரம் - மரமானது, தளிர்த்தற்று - தளிர்த்தது போன்றதாகும். [தளிர்க்காது]

[க-ரை] மனத்தில் அன்பில்லாதவரது உயிர் வாழ்க்கை வலிய பாலைநிலத்தில் பட்டுப்போன மரமானது தளிர்த்தது போன்றதாகும்.

9. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும்? யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

[ப-ரை] யாக்கை – உடம்பின், அகத்து - உள்ளிருக்கும், உறுப்பு – உறுப்பாகிய, அன்பு - அன்பு, இலவர்க்கு –

இல்லாதவர்களுக்கு, புறத்து உறுப்பு - வெளி உறுப்புக்கள், எல்லாம் - எல்லாம், எவன் செய்யும் - என்ன உதவியினைச் செய்ய முடியும்.

[க-ரை] மனத்தின் உறுப்பாகிய அன்பில்லாதவர்களுக்கு மற்றைப் புறத்திலே இருக்கும் உறுப்புக்கள் எல்லாம் அறம் செய்தற்கு என்ன உதவியினைச் செய்யும்?

**10.** அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

[ப-ரை] அன்பின் - அன்பினைக் கொண்டு, வழியது - அதன் வழியில் நிற்பதே, உயிர்நிலை - உயிர் இருக்கும் உடம்பாகும், அஃது - அந்த அன்பு, இலார்க்கு - இல்லாதவர்க்கு உள்ள, உடம்பு - உடம்புகள், என்பு - எலும்பினை, தோல் போர்த்த - தோலினால் போர்த்திக் கொண்டிருப்பனவாகும்.

[க-ரை] அன்பினைக் கொண்டு அதன் வழியில் நிற்பதே உயிர் இருக்கும் உடம்பாகும். மற்ற அன்பில்லாத உடம்புகள் எலும்பினைத் தோலினாலே போர்த்திக் கொண்டிருப்பனவாகும். உயிர் நின்றன ஆகா.

## 9. விருந்தோம்பல்

[விருந்தினர் பெருமையும், விருந்தோம்பலின் சிறப்பும், பயனும்]

**1.** இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

[ப-ரை] இல் இருந்து - இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டு, ஓம்பி - பொருள்களைக் காத்து, வாழ்வது -

வாழ்கின்றது, எல்லாம் - எல்லாம், விருந்து - விருந்தினரை, ஓம்பி - போற்றிப் பேணி, வேளாண்மை - உதவியை, செய்தல் - செய்யும், பொருட்டு - காரணத்திற்கேயாகும்.

[க-ரை] இல்வாழ்க்கையில் வாழ்ந்து பொருளினைக் காத்து வாழ்வதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்தற் பொருட்டேயாகும்.

2. விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று.

[ப-ரை] சாவா - சாவினைத் தராத, மருந்து - மருந்து, எனினும் - என்றாலும், விருந்து - விருந்தினர், புறத்ததா- தனது இல்லத்தின் புறத்தில் இருக்க, தான் - தான் மட்டும், உண்டல் - சாப்பிடுதல், வேண்டற்பாற்றன்று - விரும்பும் தன்மையான முறையாகாது.

[க-ரை] வந்த விருந்தினரை இல்லத்தின் புறத்தே இருக்கவைத்து, சாவினைத் தராத மருந்தாக இருந்தாலும், தான் மட்டும் சாப்பிடுதல் முறைமையுடையதாகாது.

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

[ப-ரை] வருவிருந்து - வந்த விருந்தினரை, வைகலும் - நாள்தோறும், ஓம்புவான் வாழ்க்கை - போற்றுபவனுடைய இல்லற வாழ்க்கை, பருவந்து - துன்புறுத்தும் வறுமையால், பாழ்படுதல் - பாழாகி விடுதல், இன்று - இல்லை.

[க-ரை] வந்த விருந்தினரை நாள்தோறும் போற்றுபவனுடைய இல்வாழ்க்கையானது வறுமையால் துன்புற்று கெடுவது இல்லையாகும்.

4. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

[ப-ரை] முகம் - முகம், அமர்ந்து - மகிழ்ந்து, நல் விருந்து - தகுதியுடைய விருந்தினரை, ஓம்புவான் - பேணிப்

போற்றுபவனுடைய, இல் – இல்லத்தில், செய்யாள் – செல்வமாகிய திருமகள், அகன் – மனம், அமர்ந்து – மகிழ்ச்சியுடன், உறையும் – வசிப்பாள்.

[க-ரை] முகமலர்ச்சியுடன் தக்க விருந்தினரைப் போற்றுபவனுடைய இல்லத்தில் திருமகள் மனமகிழ்ச்சியுடன் வாழ்ந்திருப்பாள்.

5. வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

[ப-ரை] விருந்து – விருந்தினர்களை, ஓம்பி – போற்றி உபசரித்து, [பிறகு] மிச்சில் – மீதியாக இருப்பதை, மிசைவான் – உண்ணுபவனுடைய, புலம் – நிலத்திற்கு, வித்தும் இடல் – விதை இடுதலும், வேண்டுமோ – வேண்டுமோ? [வேண்டியதில்லை] கொல் – அசை நிலை.

[க-ரை] விருந்தினரைப் போற்றி உபசரித்து மீதியாக இருப்பதை உண்பவன் நிலத்திற்கு விதை இடுதலும் வேண்டுமோ? விதைக்க–(விதையாக)-வைத்திருப்பதையும் சமைத்து உணவளிப்பான் என்பதாம்.

6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

[ப-ரை] செல்விருந்து – வந்து செல்கின்ற விருந்தினரை, ஓம்பி – பேணிக்காத்து, வருவிருந்து பார்த்திருப்பான் – வருகின்ற விருந்தினரின் வரவு பார்த்திருப்பான், வானத்தவர்க்கு – வானத்தில் வாழ்பவர்களுக்கு, நல் – நல்ல சிறப்பான, விருந்து – விருந்தினன் ஆவான்.

[க-ரை] வந்த விருந்தினரைப் போற்றி உபசரித்து அனுப்பி வைத்து, வருகின்ற விருந்தினரை எதிர் நோக்கி அவருடன் உண்ண இருப்பவன் வானத்தவர்க்கு நல்ல விருந்தினனாவான்.

7. இனைத்துணைத்து என்பதொன்றுஇல்லைவிருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

[ப-ரை] வேள்வி - விருந்தோம்பல் என்னும் வேள்வியின், பயன் - பயனாவது, இனைத்துணைத்து - இந்த அளவுதான், என்பது - என்பதாக, ஒன்று - ஓர் அளவினை, இல்லை - கொண்டதாக இல்லை, விருந்தின் - விருந்தினர்களுடைய, துணை - தகுதியென்னும் அளவே, துணை - அளவு என்பதாகும்.

[க-ரை] விருந்தோம்பல் என்ற வேள்வியின் பயன் இவ்வளவுதான் என்ற அளவினை உடையதில்லை. அது, விருந்தினரின் தகுதி அளவினையே அளவாகக் கொண்டதாகும்.

8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

[ப-ரை] விருந்து ஓம்பி - நல்ல விருந்தினரைப் பேணிக் காத்து, வேள்வி - அத்தகைய வேள்வியின் பயனை, தலைப்படாதார் - பெற்றிராதவர்கள், பரிந்து - செல்வத்தினைப் பரிவுடன் போற்றி, ஓம்பி - காப்பாற்றி, [பின்னர் இழந்து] பற்றற்றேம் - தற்போது யாதொன்றும் இல்லாமற் போனோம், என்பர் - என்று சொல்லித் துன்பமடைவர்.

[க-ரை] நல்ல விருந்தினரைப் பேணி அவ்வேள்விப் பயனை அடையாதவர்கள், பொருளைக் காப்பாற்றி இழந்து இதுபோது பற்றுக்கோடு இல்லை யானோம், என்று இரக்கப்பட்டு வருந்துவர்.

9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

[ப-ரை] உடைமையுள் - செல்வம் பெற்றிருந்தாலும், இன்மை - வறுமை இருப்பதென்பது, [யாதென்றால்,]

விருந்தோம்பல் - விருந்தினர்களைப் பேணுவதை, ஓம்பா - போற்றாமல் இகழ்வதாகும், மடமை - அறியாமையான இக்குணம், மடவார்கண் உண்டு - அறிவில்லாத பேதைகளிடத்தில் காணப்படுவதாகும்.

[க-ரை] பொருள் பெற்றிருந்தும் வறுமை இருப்பது என்பது என்னவென்றால், விருந்தினரைப் போற்றாதிருக்கும் மடமையாகும். அத்தன்மை, அறிவில்லாதவர்களிடத்தில் காணப்படுவதாகும்.

**10. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.**

[ப-ரை] அனிச்சம் - அனிச்சமலர், மோப்ப - மூக்கில் வைத்து மோந்தால்தான், குழையும் - வாடும் தன்மையுடையதாகும், விருந்து - விருந்தினர்களோ, முகம் - முகமானது, திரிந்து - மகிழ்ச்சியின்றி வேறுபட்டு, நோக்கக் குழையும் – நோக்கும்போதே வாடிவிடுவர்.

[க-ரை] அனிச்ச மலரானது மூக்கில் வைத்து மோந்தால்தான் வாடுவதாகும். விருந்தினர்கள், முகமானது வேறுபட்டுப் பார்க்கும்போதே வாடிவிடுவர்.

## 10. இனியவை கூறல்

[இனிமையான சொற்களைச் சொல்லுதலும் பயனும்.]

**1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

[ப-ரை] இன் – இனிய, சொல் - சொற்கள், [யாதென்றால்] ஈரம் - அன்புடன், அளைஇ - பொருந்தி, படிறு – வஞ்சனை, இலவாம் - இல்லாதிருக்கின்ற, செம்பொருள் - செவ்விய பொருளினை, [அறத்தினை] கண்டார் -

கண்டறிந்த மேலானவர்களுடைய, வாய்ச்சொல் - வாயில் வரும் இனிய சொற்களேயாகும்.

[க-ரை] அறத்தினை அறிந்தவர்கள், வஞ்சனையிலா தவைகளாகி அன்போடு கலந்து சொல்லுகின்ற சொற்களே இன்சொற்கள் எனப்படுவதாகும்.

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

[ப-ரை] முகன் - முகம், அமர்ந்து - மலர்ச்சியுடன், இன் - இனிய, சொலன் - சொல்லினைப் பேசுபவன், ஆகப் பெறின் - ஆக இருந்து விட்டால் [அது], அகன் - நெஞ்சம், அமர்ந்து - உவந்து, ஈதலின் - வறியவர்களுக்குக் கொடுக்கும் ஈகைத் தன்மையினைவிட, நன்றே - நல்லதாகும்.

[க-ரை] முகமலர்ச்சியுடன் இனிய சொல்லினனாக இருந்து விட்டால், அத்தன்மை நெஞ்சம் உவந்து ஈகையினைச் செய்வதை விடவும் நல்லதாகும்.

3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

[ப-ரை] முகத்தான் - முகத்தினால், அமர்ந்து-மலர்ந்து விருப்பப்பட்டு, இனிது - இனிமையாக, நோக்கி - நோக்கி, அகத்தான் ஆம் - மனத்துடனே பொருந்திய, இன் - இனிய, சொலினதே - சொற்களைச் சொல்லுவதே, அறம் - அறம் என்பதாகும்.

[க-ரை] முகத்தினால் விரும்பி இனிமையாகப் பார்த்து மனத்துடன் பொருந்திய இனிய சொற்களைச் சொல்லுவதில் அமையப் பெற்றதே அறமாகும்.

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

[ப-ரை] யார் மட்டும் - எல்லோரிடத்திலும், இன்புறூஉம் - இன்பத்தினையுண்டாக்கும், இன் - இனிய,

வர்க்கு -சொற்களைச் சொல்லுபவர்களுக்கு, துன்புறூஉம் - துன்பத்தினைக் கொடுக்கும், துவ்வாமை-வறுமையென்பது, இல்லாகும் - இல்லையென்பதாகும்.

[க-ரை] எல்லோரிடத்திலும் இன்பத்தினை உண்டாக்கும் இனிய சொற்களைச் சொல்லுபவர்களுக்குத் துன்பத்தினை மிகுவிக்கும் வறுமை என்பது இல்லை.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற.

[ப-ரை] ஒருவற்கு - ஒருவனுக்கு, அணி - அணிகலன் என்பது, பணிவுடையன் - தக்கவர்களிடத்தில் பணிதல் காட்டி, இன்சொலனாதல் - யாவரிடமும் இனிய சொற்களைப் பேசுபவனாக இருத்தல், பிறஅல்ல - இவையன்றி பிற அணிகலன்கள், அணிகலன்கள் அல்லவாம்.

[க-ரை] பணிந்து நடத்தலும், இன்சொல்லும் ஆகிய இரண்டும் ஒருவருக்கு அணிகலன்களாகும். மற்றவை அணிகலன்கள் ஆகா.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

[ப-ரை] நல்லவை - நன்மை உண்டாக்கும் இனிய சொற்களை, நாடி - ஆராய்ந்தறிந்து, இனிய சொலின் - இனிமையானவைகளையே பேசுவானானால், [அவனுக்கு] அல்லவை - தீமைகள், தேய - குறைந்து தேய்ந்து, அறம் பெருகும் - அறமானது மிகுந்து வளரும்.

[க-ரை] பிறர்க்கு நன்மை தரும் இனிய சொற்களை ஆராய்ந்தறிந்து இனிமையானவற்றைச் சொல்லுவானானால், அவனுக்குத் தீமைகள் தேய்ந்து அறம் மிகுந்து வளரும்.

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

[ப-ரை] பயன் ஈன்று - நற்பயனைக் கொடுத்து, பண்பின் - இனிமையான நற்பண்பிலிருந்து, தலைப் பிரியா - விலகாத, சொல் - இனிய சொற்கள், நயன் - நீதியினையும், ஈன்று - கொடுத்து, நன்றி - அறமானதை யும், பயக்கும் - கொடுக்கும்.

[க-ரை] நற்பயனைக் கொடுத்து இனிமையான நற் பண்பிலிருந்து நீங்காத இன்சொற்கள் நீதியினையும் அறத் தினையும் கொடுக்கும்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

[ப-ரை] சிறுமையுள் - துன்பம், நீங்கிய - செய்யாத, இன் - இனிய, சொல் - சொற்கள், மறுமை - மறுமையிலும், இம்மை - இம்மையிலும், இன்பம் தரும் - இன்பத்தினைத் தருவதாகும்.

[க-ரை] பிறர்க்குத் துன்பம் செய்யாத இனிய சொற்கள் மறுமையிலும் இம்மையிலும் இன்பத்தினைக் கொடுப்ப தாகும்.

9. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

[ப-ரை] இன்சொல் - இனிமையான சொற்கள், இனிது- இன்பத்தினை, ஈன்றல் - பயப்பதனை, காண்பான் - கண்டறிந்தவன், வன் - கடுமையான, சொல் - சொற்களை, வழங்குவது - பேசுவது, எவன் - ஏனோ? என்ன நினைத்தோ?

[க-ரை] பிறர் கூறும் இனிய சொற்கள் தனக்கு இன்பத் தினைத் தரும் என்பதைக் கண்ட ஒருவன், பிறரிடம் கடுஞ் சொற்களைச் சொல்லுவது என்ன பயன் கருதி?

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

[ப-ரை] இனிய - இனிமையான சொற்கள், உளவாக - தன்னிடம் இருக்கும் போது, இன்னாத - துன்பமானவை களை, கூறல் - கூறுதல், கனி இருப்ப - பழங்கள் தன்னிடம் இருக்கும் போது, காய் - காய்களை, கவர்ந்தற்று - உண்பது போன்றதாகும்.

[க-ரை] அறம் பயக்கும் இனிமையான சொற்களும் தன்னிடத்தே இருக்க, அவற்றைக் கூறாமல் கடுஞ்சொற் களைச் சொல்லுதல், கனிகள் தன்னிடம் இருக்கும்போது காய்களைத் தின்பது போன்றதனை ஒக்கும்.

## 11. செய்ந்நன்றியறிதல்

[தனக்குப் பிறர் செய்த நன்மையினை மறவாதிருத்தல்]

1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

[ப-ரை] செய்யாமல் - தனக்கு முன்பு ஓர் உதவியும் செய்யாதிருந்த நிலையில், செய்த உதவிக்கு - மற்றவனுக் குச் செய்த உதவிக்கு, வையகமும் - இவ்வுலகத்தினையும், வானகமும் - வானுலகத்தினையும், ஆற்றல் - கைம் மாறாகக் கொடுத்தாலும், அரிது - அந்த உதவிக்கு இணை யாவது முடியாததாகும்.

[க-ரை] தனக்கு, முன்பு ஓர் உதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறருக்குச் செய்த உதவிக்கு இவ்வுலகத்தினையும் வானுலகத்தினையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

2. காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

[ப-ரை] காலத்தினால் செய்த - அரியதும் தக்க காலத்திலும் மற்றவன் செய்த, நன்றி – நன்மையானது, சிறிது - சிறியதுதான், எனினும் - என்றாலும், [செய்த காலத்தினைக் கருத] ஞாலத்தின் - இவ்வுலகத்தினைவிட, மாண- மிகவும், பெரிது - பெரியதாகக் கருதப்படும்.

[க-ரை] ஒருவன் காலமறிந்து அரிய காலத்தில் செய்த உதவி சிறிதாக இருந்தாலும் அக்காலத்தினை நோக்க அது இவ்வுலகத்தினையும் விட மிகவும் பெரியதாகக் கருதப்படும்.

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

[ப-ரை] பயன் - தமக்குப் பிறகு இன்ன பயன் வரும் என்பதை, தூக்கார் - ஆராய்ந்து பாராமல், செய்த உதவி- செய்யப்பட்ட உதவியாகிய, நயன் - நயமான பண்பாட்டினை, தூக்கின் - ஆராய்ந்து பார்த்தால், நன்மை - அந்த நன்மையானது, கடலின் பெரிது - கடலினையும் விட மிகப் பெரியதாகும்.

[க-ரை] தனக்குத் திரும்பி வருகின்ற பயனைக் கருதாமல் ஒருவன் செய்த உதவியினை ஆராய்ந்து பார்த்தால் அதன் நன்மை கடலையும் விடப் பெரிதானதாகும்.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

[ப-ரை] தினைத்துணை - தினையின் அளவுடையதாகிய, நன்றி செயினும் – நன்மையினைச் செய்தாலும், [அதனை] பனைத்துணையா - பெரிய பனை அளவினதாக, கொள்வர் - கொள்ளுவார்கள், [யாரென்றால்] பயன்

தெரிவார் - அக்கருத்தின் பயனை அறிந்து தெரிந்தவர்கள், [திணை, பனை என்பவை அளவைகள்]

[க-ரை] திணையளவினதாகிய நன்மையினைச் செய்தாலும் அதனைப் பனையளவினதாகக் கொள்ளுவார்கள். யாரென்றால், அக்கருத்தின் பயனையறிந்தவர்கள் என்பதாம்.

5. உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

[ப-ரை] உதவி - செய்யப்படும் உதவி என்பது, உதவி வரைத்து - அவ்வுதவியின் அளவினைப் பொருத்ததும் அன்று – அல்ல, உதவி - அவ்வுதவியானது, செயப்பட்டார்– செய்யப் பெற்றுக் கொண்ட ஒருவரது, சால்பின் - சால்பு என்னும் நற்குணத்தின் தகுதியான, வரைத்து – அளவினையே பொருத்ததாகும்.

[க-ரை] உதவிக்கு அளவு என்பது இல்லை. அவ்வுதவியினைப் பெற்றுக் கொண்டவரது நற்குணத் தகுதியின் அளவினைப் பொறுத்ததே அவ்வுதவியின் அளவுமாகும்.

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்புஆயார் நட்பு.

[ப-ரை] துன்பத்துள் - துன்பம் வந்த காலத்தில், துப்பாயார் - உதவியாய் இருந்தவரது, நட்பு - நட்பினை, துறவற்க - எப்போதும் விடாமல் போற்ற வேண்டும், மாசு - மனத்தில் குற்றம், அற்றார் - இல்லாதவரது, கேண்மை - நட்பினை, மறவற்க - எப்போதும் மறக்கக் கூடாது.

[க-ரை] துன்பம் வந்த காலத்தில் துணையாக இருந்தவர் நட்பினை விடாதிருத்தல் வேண்டும். மனத்தில் குற்றமில்லாதவர்களின் உறவுபோன்ற நட்பினை மறவாதிருத்தல் வேண்டும்.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

[ப-ரை] தம்கண் - தமக்கு ஏற்பட்ட, விழுமம் - துன்பத்தினை, துடைத்தவர் - போக்கித் துடைத்தவருடைய, நட்பு - சிறப்பான நட்பினை, எழுமை - எழுகின்ற தன்மையான, எழுபிறப்பும் - பல பிறவிகளிலும், உள்ளுவர் - பெரியோர்கள் மனத்தில் எண்ணிக் கொண்டிருப்பார்கள்.

[க-ரை] தமக்கு உண்டாகிய துன்பத்தினைப் போக்கியவருடைய நட்பினை எழுமையினையுடைய எழுபிறப்பிலும் பெரியோர்கள் நினைத்துக் கொண்டிருப்பார்கள்

8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

[ப-ரை] நன்றி - ஒருவன் தனக்குச் செய்த நன்மையானவற்றை, மறப்பது - மறப்பது, நன்று - நல்லது, அன்று - அல்ல, நன்றல்லது - நன்மையல்லாத தீங்கினை, அன்றே - அப்போதே, மறப்பது நன்று - மறந்து விடுதல் நல்லதாகும்.

[க-ரை] பிறர் செய்த நன்மையினை மறப்பது ஒருவற்கு நல்லதல்ல; அவர் செய்த தீமையினை அப்பொழுதே மறந்து விடுதல் நல்லதாகும்.

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

[ப-ரை] கொன்று - கொல்லுதல், அன்ன - போன்ற, இன்னா - துன்பத்தினை, செயினும் - ஒருவர் நமக்குச் செய்தார் என்றாலும், அவர் - அவர், செய்த - முன்பு நமக்குச் செய்த, நன்று - நன்மை, ஒன்று - ஒன்றினை, உள்ள - மனத்தில் நினைத்துப் பார்த்தால், கெடும் - இப்போது அவர் செய்த தீமை கெட்டு மறையும்.

[க-ரை] கொல்லுதலைப் போன்றதொரு தீமையினை ஒருவர் செய்தாலும், முன்பு அவர் செய்த நன்மையொன்றினை நினைத்துப் பார்க்க அத்தீமையெல்லாம் கெடும்.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

[ப-ரை] *எந்நன்றி - எந்த விதமான கடமை என்னும், நன்மையினை, கொன்றார்க்கும் - செய்யாமல் கெடுத்தவர், களுக்கும், உய்வு - பழியிலிருந்து தப்பிக்கும் வழி. உண்டாம் - உண்டு என்பதாகும், செய்ந்நன்றி - ஒருவன் தனக்குச் செய்த நன்மையினை, கொன்ற மகற்கு - மறந்து கெடுத்தவனுக்கு, உய்வு இல்லை - தப்பிக்கும் வழி இல்லையாகும்.*

[க-ரை] *கடமையாகச் செய்ய வேண்டுவன ஆகிய எவ்வித நன்மையினைக் கெடுத்தவர்க்கும் தப்பிக்கும் வழியுண்டு. ஆனால், பிறர் செய்த நன்மையினைக் கெடுத்தவர்க்கு அத்தீமையினின்றும் தப்பிக்கும் வழியே இல்லையாகும்.*

## 12. நடுவு நிலைமை

[யாரிடத்திலும் நடுவு நிலைமையில், சமமாக நடந்து கொள்ளுதல்]

1. தகுதி எனஒன்று நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

[ப-ரை] *பகுதியில்-பலதிறப்பட்டவர்களிடத்தும், பாற்பட்டு - நடுவு நிலைமை என்ற முறையில் தவறாமல், ஒழுகப்பெறின் - நடந்து கொள்ளும் தன்மை பெற்றிருந்தால், தகுதி - நடுவு நிலைமை, என - எனப்படுகின்ற, ஒன்று-ஒன்று மட்டுமே, நன்றே - நல்லதாகும்.*

[க-ரை] *அயலார், பகைவர், நண்பர் என்ற யாவரிடத்திலும் நடுவுநிலைமை என்ற முறைமை விடாமல் நடந்து கொண்டால், நடுவு நிலைமை எனப்பட்ட ஓர் அறமே போதுமான நன்மையாகும்.*

**2. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**
**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.**

*செப்பம் - நடுவு நிலைமை, உடையவன் - உடையவனுடைய, ஆக்கம் - செல்வம், சிதைவு - அழிவு, இன்றி - இல்லாமல், எச்சத்திற்கு - அவன் வழியில் வருவோர்க்கு, ஏமாப்பு - பாதுகாப்பாக இருப்பதை, உடைத்து - உடையதாகும்.*

[க-ரை] *நடுவு நிலைமையுடையவனது செல்வமானது அழிவில்லாமல் அவன் வழியில் வருவோர்க்குப் பாதுகாப்பான உறுதியாதலை உடையதாகும்.*

**3. நன்றே தரினும் நடுவுஇகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்.**

[ப-ரை] *நன்றே - நன்மையினையே, தரினும் - கொடுத்தாலும், நடுவு - நடுவு நிலைமை, இகந்து - நீக்கப்பட்டு, ஆம் - உண்டாகி வருகின்ற, ஆக்கத்தை - செல்வத்தினை, அன்றே - வந்த நேரத்திலேயே, ஒழிய விடல் - ஒழித்து விட்டு விடுதல் வேண்டும்.*

*[க-ரை] தீமையின்றி நன்மையினையே தருவதாக இருந்தாலும் நடுவு நிலைமை நீக்கப்பட்டு வருகின்ற செல்வத்தினை அப்போதே ஒழித்துவிடுதல் வேண்டும்.*

**4. தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப் படும்.**

*[ப-ரை] தக்கார் - நடுவு நிலைமையுடன் இருப்பவர், தகவிலர் - நடுவு நிலைமை அற்றவர், என்பது - என்னும் உண்மையினை, அவரவர் - அவரவர்களுக்கு உண்டாகும்,*

எச்சத்தால் காணப்படும் - அவருக்குப் பின் எஞ்சி நிற்கும் நன்மை தீமைகளால் தெரிந்து கொள்ளப்படும்.

[க-ரை] நடுவுநிலைமை உள்ளவர்கள் அல்லது இல்லாதவர்கள் என்பதனை அவரவர்களுக்குப் பின், எஞ்சி நிற்கும் நன்மை தீமைகளால் அறிந்து கொள்ளப்படும்.

5. கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

[ப-ரை] கேடும் - கெட்ட நிலைமையும், பெருக்கமும் - செல்வப் பெருக்கமும், [யாவருக்கும்] இல் - இல்லாதது, அல்ல - அல்லவாம், [எல்லோருக்கும் உண்டு ஆதலால்] நெஞ்சத்து - நெஞ்சத்தில், கோடாமை - ஒரு பக்கமாகச் சாய்ந்து விடாதிருத்தலே, சான்றோர்க்கு அணி - உயர்ந்த பண்பாளர்களுக்கு அழகாகும்.

[க-ரை] கெடுதியும் பெருக்கமும் யாவர்க்கும் இல்லாத தல்ல; அவை பிறவியிலேயே அமைந்து கிடப்பனவாகும். ஆதலால், மனத்தில் ஓரவஞ்சனையின்றி - ஒரு பக்கமாகச் சாய்ந்துவிடாமல் நடுவு நிலைமையுடன் இருப்பதே பெரியவர்களுக்கு அழகாகும்.

6. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவுஒரீஇ அல்ல செயின்.

[ப-ரை] தன் - தன்னுடைய, நெஞ்சமானது, நடுவு - நடுவு நிலைமையிலிருந்து, ஒரீஇ - விலகி, அல்ல - அல்லாதவைகளை, செயின் - செய்ய எண்ணினால், யான் கெடுவல் - யான் கெட்டு விடுவேன், என்பது அறிக - என்பதைத் தெரிந்து கொள்ளுவானாக.

[க-ரை] ஒருவனுடைய நெஞ்சம் நடுவு நிலைமையில் நீங்கி ஒன்றினைச் செய்ய நினைக்குமானால் அந்த நினைப்பு 'யான் கெட்டு விடுவேன்' என்பதை உணர்த்தும் முன்னறிவிப்பாக அறிதல் வேண்டும்.

7. கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

[ப-ரை] *உலகம் - உலகத்தின்மேலோர்கள், நடுவாக - நடுவு நிலைமையில் வாழ்ந்து, நன்றிக்கண் - அறத்திலிருந்து வழுவாமல், தங்கியான் தாழ்வு - இருப்பவனது தாழ்வுண்டாக்கும் வறுமையினை, கெடுவாக - தீமையான வறுமையென்பதாக, வையாது - வைத்துக் கருத மாட்டார்கள்.*

[க-ரை] *நடுவு நிலைமையில் நின்று அறத்திலிருந்து வழுவாமல்நின்றவனுடைய வறுமையினைப் பெரியோர்கள் வறுமையாக வைத்து நினைக்க மாட்டார்கள்.*

8. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

[ப-ரை] *சமன் - சமமாக, செய்து - இருந்து, சீர்தூக்கும் - அளவினைக் காட்டுவதாகிய, கோல்போல் - துலாக்கோல்போல, அமைந்து - நன்கு அமைந்திருந்து, ஒருபால் - ஒருபக்கமாக, கோடாமை - கோணுதல்செய்யாதிருப்பது, சான்றோர்க்குஅணி - பெருந்தகையாளர்களுக்கு அழகாகும்.*

[க-ரை] *முன்பு சமமாக இருந்து வைத்த பாரத்தினை அளவு காட்டுவதாகிய துலாக்கோல்போல், நன்கு அமைந்திருந்து ஒரு பக்கமாகச் சாயாமலிருப்பது பெரியோர்களுக்கு அழகாகும்.*

9. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

[ப-ரை] *செப்பம் - நடுவு நிலைமை என்பது, சொல் - சொல்லுகிறசொல்லில், கோட்டம் - கோணுதல், இல்லது - இல்லாதிருப்பதாகும், (அதுவும் எப்போது நன்மையென்றால்) உள் - மனத்தில், கோட்டம் - கோணுதல், இன்மை-*

இல்லாதிருத்தலை, ஒருதலையா - மிகவும் உறுதிப்பாடாக, பெறின் - பெற்றிருந்தால்.

[க-ரை] நடுவு நிலைமை என்பது சொல்லுகிற சொல்லில் கோணுதல் இல்லாமல் இருத்தலாகும். மனத்தினிடத்தில் கோணுதல் இல்லாமலிருப்பதைத் திண்ணியதாகப் பெற்றிருந்தால் நன்மை பயப்பதாகும்.

10. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

[ப-ரை] பிறவும் - மற்றவர்களது பொருள்களையும், தமபோல் - தம்முடைய பொருள்களைப் போற்றிக் கருதுவதுபோல, பேணிச்செயின் - காப்பாற்றிச் செய்தால், (அதுவே) வாணிகம் - வாணிகம், செய்வார்க்கு - செய்யும் வாணிகர்களுக்கு, வாணிகம் - நல்ல வாணிகம் என்பதாகும்.

[க-ரை] பிறர் பொருளையும், தம்முடைய பொருளைக் காப்பதுபோலக் காத்து வாணிபம்செய்தால், அதுவே வாணிபம் செய்பவர்களுக்கு நல்ல வாணிபம் ஆகும்.

## 13. அடக்கம் உடைமை

[குணம், மொழி, மெய் ஆகியவற்றைத் தீநெறியில் செல்லவொட்டாமல் தடுத்து அடக்கத்துடன் இருத்தல்]

1. அடக்கம் அமரருள்-உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.

[ப-ரை] அடக்கம் - அடக்கமுடைமை என்னும் நற்குணம், அமரருள் உய்க்கும் - அமரர்கள் உலகில் செலுத்துவ

தாகும், அடங்காமை - அடக்கமில்லாத தீயகுணம், ஆர் - பொறுத்தற்கரிய, இருள் - இருளான துன்ப உலகில், உய்த்துவிடும் - கொண்டு தள்ளிவிடும்.

[க-ரை] அடக்கமாகிய அறம் ஒருவனை அமரர்கள் உலகில் கொண்டு செலுத்தும். அடக்கமில்லாத தீயகுணம் பொறுத்தற்கரிய (இருண்ட) துன்ப உலகில் செலுத்தும்.

2. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு

[ப-ரை] அடக்கத்தை - அடக்கம் என்பதனை, பொருளாக் காக்க - சிறந்த பொருளாகக் கொண்டு காத்தல் வேண்டும், உயிர்க்கு - மக்களுடைய உயிர்க்கு, அதனின் - அவ்வடக்கத்தைவிட, ஊங்கு - சிறந்த, ஆக்கம் - செல்வப் பெருக்கமானது, இல்லை - பிறிது யாதும் இல்லையாகும்.

[க-ரை] அடக்கத்தினை உறுதிப் பொருளாகக் கொண்டு அழியாமல் காத்தல் வேண்டும். ஏனெனில், மக்களுயிர்க்குச் செல்வப் பெருக்கமானது அதனைவிடப் பிறிது யாதும் இல்லை.

3. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

[ப-ரை] அறிவு - அடங்குதல் அறிவுடைமை யென்று, அறிந்து - தெரிந்துகொண்டு, ஆற்றின் - நன்மையான வழியில், அடங்கப் பெறின் - அடங்கி இருப்பானேயானால், செறிவு - அந்த அடக்கமானது, அறிந்து - நல்லோரால் தெரிந்துணரப்பட்டு, சீர்மை பயக்கும் - பெருஞ் சிறப்பினைக் கொடுக்கும்.

[க-ரை] அடங்குதல் தமக்கு அறிவான செயல் என்று அறிந்து கொண்டு நன்மையான வழியில் அடங்கி இருப்பானேயானால் அந்த அடக்கமானது நல்லோரால் அறிந்

துணரப்பட்டு அவனுக்குப் பெருஞ் சிறப்பினைக் கொடுக்கும்.

4. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

[ப-ரை] நிலையில் - இல்லற நெறிகளில், திரியாமல் - உறுதியாக மாறுபடாமல் இருந்து, அடங்கியான் – அடக்கத்துடன் வாழ்பவனுடைய, தோற்றம் - சிறந்த தோற்றமானது, மலையினும் - மலை உயர்ச்சியினைவிட, மாண - மிகவும், பெரிது - பெரியதாகக் கருதப்படும்.

[க-ரை] தனது வாழ்க்கை நெறியில் மாறுபடாமல் அடங்கியவனுடைய உயர்ச்சியானது மலையின் உயர்ச்சியினைவிட மிகவும் பெரியதாகும்.

5. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

[ப-ரை] பணிதல்- அடக்கத்துடன் பணிந்து வாழ்தல், எல்லார்க்கும் - எல்லோருக்கும், நன்றாம் - நல்லதாகும், (இருந்தாலும்) அவருள்ளும் - அவர்களுக்குள்ளும், செல்வர்க்கே - செல்வம் படைத்தவர்களுக்கு, (பணிதல் இருந்து விட்டால்) செல்வம் - வேறொரு செல்வமும், தகைத்து - உண்டான தன்மையாகும்.

[க-ரை] பணிந்து அடங்கி வாழ்தல் எல்லோருக்கும் நல்லதாகும். அவர்களுக்குள்ளும் செல்வர்களுக்குப் பணிவு இருந்து விட்டால், வேறொரு செல்வம் சேர்ந்தது போன்ற சிறப்பினையுடையதாகும்.

6. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

[ப-ரை] ஆமைபோல் - ஆமையினைப் போல, ஒருமையுள் - ஒரு பிறப்பில், ஐந்து - மெய், வாய், கண்,

மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளையும், அடக்கல் - அடக்கி வாழும், ஆற்றின் - வல்லமை பெற்றிருந்தால், எழுமையும் - எழுகின்ற பிறப்புக்களிலும், ஏமாப்பு - பாது காப்பாக இருத்தலை, உடைத்து - பெற்றிருப்பதாகும்.

[க-ரை] ஒரு பிறப்பில் ஆமையினைப் போல மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளையும் அடக்கி வாழும் வல்லமை பெற்றிருந்தால் அவ்வல்லமை எழுகின்ற பிறவிகளில் பாதுகாப்பு உடையதாகும்.

7. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

[ப-ரை] யா - எதனையும், காவாரர் - காக்கமாட்டார், ஆயினும் - ஆனாலும், நா - நாவொன்றினை மட்டும், காக்க - காப்பாற்றிக் கொள்ளுதல் வேண்டும், காவாக் கால் - அவ்வாறு காப்பாற்றாவிட்டால், சொல் - சொல் லும் சொல்லில், இழுக்குப்பட்டு - குற்றம் ஏற்பட்டு, சோகாப்பர் - வருந்துவர்.

[க-ரை] காக்கப்பட வேண்டிய எல்லாவற்றையும் காப்பாற்றாவிட்டாலும் நாவொன்றினை மட்டுமாவது காப்பாற்றுதல் வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொற்குற்றத்திலே அகப்பட்டுத் தாமே துன்புறுவர்.

8. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகாது ஆகி விடும்.

[ப-ரை] தீ - கொடிய, சொல் - சொற்களினுடைய, பொருட்பயன் - தன்மைகளால் வருகின்ற துன்பம், ஒன்றானும் - ஒன்றுதான், என்றாலும் (அது) உண்டாயின்- ஒருவனிடத்தில் உண்டாகி விட்டால், நன்று - அவனுக்கு மற்ற நன்மைகளினால் ஏற்பட்ட பயனும், ஆகாது ஆகி விடும் - தீமையானது ஆகிவிடும்.

[க-ரை] தீய சொற்களினுடைய தன்மைகளால் பிறருக்கு வருகின்ற துன்பம் ஒன்றேனும் ஒருவனிடத்தில் உண்டாகிவிட்டால் அவனுக்குப் பிற நன்மைகளினால் உண்டான பயனும் தீயதாய் ஆகிவிடும்.

9. தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

[ப-ரை] தீயினால் - தீயினால், சுட்ட - சுடப்பட்டு உண்டான, புண் - புண்ணானது, உள் - (உடம்பில் இருப்பதனாலும்) மனதில், ஆறும் - ஆறிவிடும், நாவினால் சுட்ட - நாவினாலே (சொல்வால்) சுடப்பட்ட, வடு ஆறாது - வடுவானது ஆறாமல் எப்போதும் இருக்கும்.

[க-ரை] ஒருவன் ஒருவனை நெருப்பினால் சுட்டு அதனால் உண்டான புண் உடம்பில் காணப்பட்டாலும் மனத்தில் ஆறிவிடும். நாவினால் சுட்ட வடுவானது ஆறாது; எப்போதும் இருக்கும்.

10. கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

[ப-ரை] கதம் - வெகுளியினை [கோபத்தினை], காத்து - அடக்கிக் காத்து, கற்று அடங்கல் - கல்வி பெற்று அடக்கம் கொண்டு, ஆற்றுவான் - ஆற்றல் உள்ளவனாக இருப்பவனுடைய, செவ்வி - காலத்தினை, அறம் - அறமானது, நுழைந்து ஆற்றும் - அவனிடம் சென்றடையும் வழியை, பார்க்கும் - ஆராய்ந்து பார்த்திருக்கும்.

[க-ரை] கோபத்தினை அடக்கிக் காத்துக் கல்வி பெற்றவனாகி அடங்கி இருப்பதில் ஆற்றல் உள்ளவனாக இருப்பவனது காலத்தினை, அறமானது அவனை அடையும் வழியிலே புகுந்து, பார்த்து இருக்கும்.

# 14. ஒழுக்கம் உடைமை

[மக்களுக்குரிய ஒழுக்கத்தில் நின்று வாழ வேண்டிய முறைகளைக் கூறுதல்]

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

[ப-ரை] ஒழுக்கம்- ஒழுக்கமானது, விழுப்பம் தரலான்- பெருஞ்சிறப்பினைத் தருதலால், ஒழுக்கம் - அவ்வொழுக்கமானது, உயிரினும் - உயிரினையும்விட, ஓம்பப்படும் - சிறந்ததாகப் போற்றிக் காக்கப்படும்.

[க-ரை] ஒழுக்கம் எல்லோருக்கும் பெருஞ் சிறப்பினைத் தருதலால் அவ்வொழுக்கம் உயிரினையும்விட மேம்பட்டதாகப் பாதுகாக்கப்படும்.

2. பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்து ஓம்பித்
தேரினும் அஃதே துணை.

[ப-ரை] ஒழுக்கம் - ஒழுக்கத்தினை, ஓம்பி - போற்றிக் காத்து, புரிந்து - துன்புற்றும்கூட, காக்க - காப்பாற்ற வேண்டும், தெரிந்து - பலவற்றையும் தெரிந்து ஆராய்ந்து, ஓம்பி - மனத்தினை ஒரு வழியில் நிறுத்தி, தேரினும் - தேர்ந்து தெரிந்து கொண்டாலும், துணை அஃதே - துணையாக நிற்பது அந்த ஒழுக்கமேயாகும்.

[க-ரை] ஒழுக்கத்தினை அழிவு வராமல் போற்றி வருந்தியும் கூடக் காத்தல் வேண்டும். பலவற்றையும் ஆராய்ந்து தேர்ந்து தெரிந்து கொண்டாலும், துணையாக இருப்பது அந்த ஒழுக்கம் ஒன்றேயாகும்.

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

[ப-ரை] ஒழுக்கம் - ஒழுக்கத்தினை, உடைமை - உடையவனாக இருத்தல், குடிமை - நற்குலத்தினையுடையவன் என்பதாகும், இழுக்கம் - அவ்வொழுக்கத்தினின்று தவறி விடுதல், இழிந்த - இழிவான, பிறப்பாய் விடும் - பிறவியானவன் என்பதாக்கி விடும்.

[க-ரை] ஒழுக்கமுள்ளவனாக இருத்தல் என்பது நற்குடியில் பிறந்துள்ளவன் என்பதற்கு அடையாளமாகும். அவ்வொழுக்கத்திலிருந்து தவறுதல் தாழ்ந்த இழிதொழில் பிறவியானவன் என்பதாக்கிவிடும்.

4. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்.

[ப-ரை] ஓத்து - மறை நூலினை [வேதத்தினை] மறப்பினும் - மறந்து விட்டான் என்றாலும், கொளல் - திரும்பவும் ஓதிக்கொள்ளுதல், ஆகும்-முடியும், பார்ப்பான்-அதனைப் படிப்பவன், பிறப்பு ஒழுக்கம் - மக்கட் பிறப்புக் குரிய ஒழுக்கத்தில், குன்றக்கெடும் - குறைபட்டு விடுவானேயானால் கெட்டுவிடுவான்.

[க-ரை] கற்ற வேதத்தினை மறந்துவிட்டான் என்றாலும் திரும்பவும் ஓதிக் கொள்ளலாகும். பார்ப்பான் மக்கட் பிறப்புக்குரிய ஒழுக்கத்திலிருந்து குறைந்து விடுவானேயானால் கெட்டுவிடுவான்.

5. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

[ப-ரை] அழுக்காறு - பொறாமை, உடையான்கண் - உள்ளவனிடத்தில், ஆக்கம் போன்று-செல்வம் [இல்லாதது] போல, ஒழுக்கம் - ஒழுக்கமானது, இலான்கண் - இல்லாதவனிடத்தில், உயர்வு இல்லை - சிறப்பு என்பது இல்லாததாகிவிடும்.

[க-ரை] பொறாமை உள்ளவனிடத்தில் செல்வப் பெருக்கம் இல்லாததுபோல், ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்ச்சி என்பது இல்லாததாகிவிடும்.

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

[ப-ரை] உரவோர் - மனபலம் உடையவர்கள், இழுக்கத்தின் - ஒழுக்கம் கெட்டு விடுவதால், ஏதம் - குற்றம், படுபாக்கு அறிந்து - உண்டாகி விடுவதாகும் என்பதனை அறிந்து, ஒழுக்கத்தின் - ஒழுக்கத்திலிருந்து, ஒல்கார் - நீங்கி விடமாட்டார்கள்.

[க-ரை] ஒழுக்கம் கெட்டுவிடுவதால் இழிகுலமாகும் என்பதாக வருகின்ற குற்றத்தினைத் தெரிந்த மன வலிமை கொண்ட பெரியோர்கள் ஒழுக்கத்திலிருந்து குறைந்துவிட மாட்டார்கள்.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

[ப-ரை] ஒழுக்கத்தின் - ஒழுக்கத்தினாலே, மேன்மை - சிறப்பினை, எய்துவர் - அடைபவராவார்கள், இழுக்கத்தின் - ஒழுக்கத்திலிருந்து தவறுவதால், எய்தா - அடைந்துவிடக் கூடாத, பழி - பழியினை, எய்துவர் - அடைந்து விடுவார்கள்.

[க-ரை] எல்லோரும் ஒழுக்கத்தினால் மேம்பாட்டினை அடைவார்கள். ஒழுக்கத்திலிருந்து தவறுவதனால் அடைந்து விடக் கூடாத பழியினை அடையப் பெறுவர்.

8. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

[ப-ரை] நல் - நல்ல, ஒழுக்கம் - ஒழுக்கமானது, நன்றிக்கு - அறமான நன்மைக்கு, வித்தாகும் - விதை

போன்று முதற்காரணமாகும், தீ - தீய, ஒழுக்கம் - ஒழுக்க மானது, என்றும் இடும்பைதரும் – எப்போதும் துன்பத் தினைக் கொடுக்கும்.

[க-ரை] நல்லொழுக்கம் என்பது நன்மையான அறத்திற்கு விதைபோன்ற காரணமாகும். தீய ஒழுக்க மானது எப்போதும் துன்பத்தினைத் தருவதாகும்.

9. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

[ப-ரை] வழுக்கியும் - மறந்தேனுங்கூட, தீய - தீமை தரும் சொற்களை, வாயால் – தமது வாயினால், சொல்ல- சொல்லுதல் என்பது, ஒழுக்கம் - நல்லொழுக்கம், உடைய வர்க்கு - உள்ள பெரியவர்களுக்கு, ஒல்லாவே – முடியாத ஒன்றாகும்.

[க-ரை] நல்லொழுக்கமுள்ள பெரியவர்களுக்கு மறந்துங்கூட தீமை தரும் சொற்களைச் சொல்லுவ தென்பது முடியாததாகும்.

10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

[ப-ரை] உலகத்தோடு - உலகமக்களோடு, ஒட்ட – ஒன்றுபட்டு, ஒழுகல் – நடந்து கொள்ள வேண்டியதை, கல்லார் - கற்றுக் கொள்ளாதவர்கள், பலகற்றும் - பல நூல்களைக் கற்றிருந்தாலும், அறிவு - அறிவு, இலாதார் - இல்லாதவர்களே யாவார்கள்.

[க-ரை] உலக மக்களோடு பொருந்துமாறு நடந்து கொள்ள வேண்டியதைக் கல்லாதவர்கள் பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவர்களே யாவார்கள்.

# 15. பிறன் இல் விழையாமை

## [ஒழுக்கங்கெட்டு பிறனுடைய இல்லாளை விரும்பாதிருத்தலாகும்].

1. பிறன்பொருளாள் பெட்டு ஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்.

*[ப-ரை] பிறன் - மற்றவனுக்கு, பொருளாள் - உரிமையானவளை, பெட்டு ஒழுகும் - விரும்பி நடந்து கொள்ளுகின்ற பேதைமை - அறிவிலித்தனம் என்பது, ஞாலத்து - உலகில், அறம்பொருள் - அறநெறியினையும் பொருள் நெறியினையும், கண்டார்கண் இல் - ஆராய்ந்து கண்ட, நல்லோரிடத்தில் இல்லையாகும்.*

*[க-ரை] பிறனுக்குப் பொருளாம் தன்மையுடைய இல்லாளைக் காதலித்து ஒழுகும் அறியாமைக் குணம் உலகில் அறம் பொருள் நூல்களை ஆராய்ந்து கண்டவரிடத்தில் இல்லையாகும்.*

2. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.

*[ப-ரை] அறன்கடை - அறத்திலிருந்து நீங்கி, நின்றாருள் - நின்றவர்கள், எல்லாம் - எல்லோரையும்விட, பிறன்கடை - பிறன்மனையாளை இச்சித்து அவன் வாயிலிலே, நின்றாரின் - நின்றவர்களைப் போல, பேதையார் இல் - அறிவற்றவர்கள் இலர்.*

*[க-ரை] அறத்திற்குப் புறம்பான வழியில் நின்ற எல்லாருள்ளும் பிறனுக்குரிய இல்லாளை இச்சித்து அவனுடைய வாயிலில் சென்று நின்றவர்களைப் போலப் பேதையார் இல்லை.*

3. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்தொழுகு வார்.

[ப-ரை] தெளிந்தார் - நல்லவரென்று நம்பித் தெரிந்து இருப்பவருடைய, இல் - இல்லாளிடத்தில், தீமை- தீமையான செயலை, புரிந்து - விரும்பிச் செய்து, ஒழுகுவார் - நடந்து கொள்ளுபவர்கள், விளிந்தாரின் - இறந்தவரின், வேறு - வேறானவர்கள், அல்லர் - அல்லர், மன்ற - இறந்தவரே யாவர்.

[க-ரை] தம்மைச் சிறிதும் சந்தேகிக்காதவருடைய இல்லாளிடத்திலும் தீமை செய்து நடப்பவர்கள் உயிருடையவர்களானாலும் இறந்தவர்களே ஆவார்கள்.

4. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.

[ப-ரை] தினைத்துணையும் - மிகச் சிறிய தினையளவு கூட, தேரான் - தனது குற்றத்தினை எண்ணாமல், பிறன் - மற்றவனுடைய, இல் - இல்லாளிடத்தில், புகல் - விரும்பிப் போதல், எனைத்துணையர் - எவ்வளவு பெரியவர்களாக, ஆயினும் - இருந்தாலும், என்னாம் - என்ன பயனுடையதாகும்.

[க-ரை] தினையளவும் தமது குற்றத்தினைக் காம மயக்கத்தினால் நினையாமல் பிறன் இல்லத்தில் புகுவோர் எவ்வளவு பெருமையுடையவராக இருந்தாலும் என்ன? யாதொருபயனுமில்லை.

5. எளிதென இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

[ப-ரை] எளிது - எளிமையானது, என - என்று எண்ணி, இல் - மற்றவன் இல்லாளிடம், - இறப்பான் - செல்லுகிறவன், விளியாது - மறையாமல், எஞ்ஞான்றும் ,

*எக்காலத்திலும், நிற்கும் - நிலைபெற்று நிற்கின்ற, பழி எய்தும் - பழியினை அடைந்தே திருவான்.*

**[க-ரை]** *பிறகு நடப்பதை அறியாமல் எளிமையான தென்று நினைத்துப் பிறனுக்குரிய இல்லாளிடத்தில் நெறி கடந்து செல்லுகிறவன் எக்காலத்திலும் மறையாமல் நிலைத்து நற்கும் பழியினை அடைவான்.*

**6. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்**
**இகவாவாம் இல்இறப்பான் கண்.**

**[ப-ரை]** *இல் - மற்றவன் இல்லாளிடத்தில், இறப்பான் கண் - நெறிகடந்து செல்லுபவனிடத்தில், பகை - பகை, பாவம் - பாவம், அச்சம் - பயம், பழி - பழி, என - என்ப தான, நான்கும் - இந்த நான்கும், இகவாவாம் - எப்போதும் நீங்காமல் இருப்பனவாகும்.*

[க-ரை] *பகை, பாவம், அச்சம், பழி ஆகிய இந்த நான்கு குற்றங்களும் பிறன் மனைவியினிடத்தே நெறி கடந்து செல்லுபவனைவிட்டு ஒரு காலும் நீங்காவாம்.*

**7. அறன்இயலான் இல்வாழ்வான் என்பான்பிறன் இயலாள்**
**பெண்மை நயவா தவன்.**

**[ப-ரை]** *அறன் இயலான் - அறமாகிய தன்மையில் நின்று, இல்வாழ்வான் - இல்லறத்தில் வாழ்கின்றவன் என்பான் - என்பவன், [யாரென்றால்] பிறன் இயலாள் - பிறனுக்கு உரிமையான மனைவியின், பெண்மை - பெண் இன்பத்தினை, நயவாதவன் - ஆசைப்படாது இருப்பவன் ஆவான்.*

**[க-ரை]** *அறமாகிய தன்மையுடன் இல்லறத்தில் வாழ்பவன் என்று சொல்லப்படுபவன் பிறனுக்கு உரிமை பூண்டு அவனுடைய இயல்பில் இருப்பவளது பெண் தன்மையினை விரும்பாதவனே ஆவான்.*

8. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.

[ப-ரை] பிறன் - மற்றவனுடைய, மனை - மனையாளை, நோக்காத - மனதில் நினைக்காத, பேர் - பெரிய, ஆண்மை - ஆண்மைக் குணமானது, சான்றோர்க்கு – நிறை குணமும் அறிவும் பெற்ற பெரியோர்களுக்கு, அறன் ஒன்றோ - அறமும் ஆகும் [அது மட்டுமன்றி], ஆன்ற - மேலான, ஒழுக்கு - ஒழுக்கம் என்பதுமாகும்.

[க-ரை] பிறன் மனைவியை உள்ளத்தில் நினைக்காத பெரிய ஆண் தன்மை சான்றோர்களுக்கு அறமும் ஆகும்; நிரம்பிய ஒழுக்கமும் ஆகும்.

9. நலக்குரியார் யார்எனில் நாமநீர் வைப்பின்
பிறற்குஉரியாள் தோள்தோயா தார்.

[ப-ரை] நாமநீர் - அச்சப்படுவதாயுள்ள கடலால் சூழப்பட்ட, வைப்பில் - இவ்வுலகில், நலக்கு உரியார் – நன்மை அடைவதற்கு உரியவர்கள், யார் - எவர், எனின் - என்று கேட்டால், பிறற்கு - மற்ற ஒருவனுக்கு, உரியாள் - உரிய மனைவியினது, தோள் தோயாதார் - தோள்களை அணையாதவர்களே யாவர்.

[க-ரை] அச்சம் தருவதாகிய கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் எல்லா நன்மைகளையும் அடைவதற்கு உரியவர்கள் யாரென்றால், பிறனுக்கு உரியவளது தோள்களை அணையாதவர்கள் என்பதாம்.

10. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

[ப-ரை] அறன் - அறநெறியினை, வரையான் - தான் விரும்பி மேற் கொள்ளாமல், அல்ல செயினும் - தீமைகளைச் செய்தாலும்கூட, பிறன் - பிறனுடைய, வரை

யாள் - உரிமைக்குள் இருப்பவளது, பெண்மை — பெண் இன்பத்தினை, நயவாமை - ஆசைப்படாதிருத்தல், நன்று - மிகவும் நல்லதாகும்.

[க-ரை] ஒருவன் அறத்தினைத் தனக்கு உரித்தாகச் செய்யாமல் புறம்பான தீமைகளையே செய்பவனானாலும், பிறனுடைய உரிமை எல்லைக்குள் இருப்பவளது பெண்மையை விரும்பாமல் இருப்பது நல்லதாகும்.

## 16. பொறை உடைமை

### [பொறுமை என்னும் நற்பண்பைப் பெற்றிருத்தல்]

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
 இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

[ப-ரை] அகழ்வாரை - தன்னைத் தோண்டுவோரையும், தாங்கும் - தாங்கிக் கொண்டிருக்கும், நிலம் போல — நிலத்தைப் போல, தம்மை இகழ்வார் - தம்மை இகழ்பவர்களையும், பொறுத்தல் — பொறுத்துக் கொள்ளுதல், தலை- தலையான அறம் எனப்படும்.

[க-ரை] தன்னைத் தோண்டுபவர்களையும் கீழே வீழாமல் தாங்கிக் கொண்டிருக்கும் நிலத்தினைப் போலத் தம்மை இகழ்பவர்களையும் பொறுத்துக் கொள்ளுதல் தலையான அறமாகும்.

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
 மறத்தல் அதனினும் நன்று.

[ப-ரை] என்றும் - எப்போதும், இறப்பினை — மற்றவன் செய்த குற்றத்தினை, பொறுத்தல் - பொறுத்துக் கொள்ள வேண்டும், அதனை - அக் குற்றத்தினை,

மறத்தல் - மறந்து விடுதல், அதனினும் நன்று - அந்தப் பொறுமையினையும்விட மிகவும் நன்மையானதாகும்.

[க-ரை] பிறர் செய்த குற்றத்தினை எப்போதும் பொறுத்துக் கொள்ளுதல் நல்லதாகும். அக்குற்றத்தினை மறந்துவிடுதல் அப்பொறுமையினையும்விடச் சிறந் , தாகும்.

**3. இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை.**

[ப-ரை] இன்மையுள் - ஒருவனுக்கு வறுமை என்பவற்றுள்ளும், இன்மை - வறுமை, [யாதென்றால்] விருந்து - வந்த விருந்தினரை,ஒரால் - விலக்குவதாகும், வன்மையுள் - [அதுபோல] வல்லமைகளில் எல்லாம், வன்மை - வல்லமை என்பது என்னவென்றால், மடவார் - அறிவின்மையால் கெடுதி செய்தவர்களை,பொறை - பொறுத்துக் கொள்ளுவதாகும்.

[க-ரை] ஒருவனுக்கு வறுமையுள் மிகவும் வறுமையாவது விருந்தினரைப் போற்றாமல் நீக்குதலாகும். அது போல வல்லமையுள் மிகவும் வல்லமையாவது அறியாமையால் தீங்கு செய்தவர்களைப் பொறுத்துக் கொள்ளுவதாகும்.

**4. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை போற்றி ஒழுகப் படும்.**

[ப-ரை] நிறையுடைமை - சான்றாண்மை என்னும் உயர்ச்சி, நீங்காமை வேண்டின் - நீங்காதிருக்க விரும்புவானாகில், பொறை உடைமை - பொறுமை என்னும் அரிய பண்பாட்டினை, போற்றி - காப்பாற்றி, ஒழுகப் படும் - நடந்து கொள்ள வேண்டும்.

[க-ரை] ஒருவனுக்கு நிறையுடைமை என்கின்ற சான்றாண்மைக் குணம் தன்னிடமிருந்து நீங்காதிருக்க வேண்டுமானால், அதனால் பொறுமை என்கின்ற குணம் அழியாமல் காப்பாற்றப்பட வேண்டும்.

5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

[ப-ரை] ஒறுத்தாரை - [கெடுதி செய்தாரை] தண்டித்தவர்களை, ஒன்றாக வையார் - மதிக்கப்படும் ஒரு பொருளாக உலகப் பெரியோர்கள் மனதில் வைக்கமாட்டார்கள், [ஆனால்] பொறுத்தாரை - பிறர் செய்த தீங்கினைப் பொறுத்தவர்களை, பொன்போல் - பொன்னினைப் போல, பொதிந்து - எப்போதும் நினைத்து, வைப்பர் - மனதில் கொள்ளுவார்கள்.

[க-ரை] பிறன் தமக்குத் தீமை செய்தால் பொறுமை இழந்து, தண்டித்தவர்களைப் பெரியோர்கள் ஒரு பொருளாக மனத்தில் கொள்ள மாட்டார்கள். பொறுத்துக் கொண்டவர்களை எப்போதும் நினைத்து மனத்தில் பொன்போல் கொள்ளுவார்கள்.

6. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

[ப-ரை] ஒறுத்தார்க்கு [கெடுதி செய்தாரை] தண்டித்தவர்க்கு ஏற்படுவது ஒரு நாளை - அந்த ஒரு நாள், இன்பம் - இன்பமேயாகும், பொறுத்தார்க்கு - பொறுத்துக் கொண்ட பெரியார்களுக்கு, பொன்றுந் துணையும் - உலகம் அழியும் காலம் வரை, புகழ் - புகழ் இருந்து கொண்டே இருக்கும்.

[க-ரை] குற்றம் செய்தவர்களைத் தண்டித்தவர்களுக்கு ஏற்படுவது அந்த ஒரு நாளைய இன்பமேயாகும். பொறுத்துக் கொண்டவர்களுக்கு உலகம் அழியும் வரையிலும் பெருமையும் புகழும் உண்டு.

7. திறன்அல்ல தன்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று.

[ப-ரை] திறன் அல்ல - செய்யக் கூடாத கெடுதியை, தன் - தன்னிடத்தில், பிறர் செய்யினும் - மற்றவர்கள்

செய்தாலும்கூட, நோ - ஏற்பட்ட துன்பத்திற்காக, நொந்து - வருத்தப்பட்டு, அறன் - அறத்திற்கு, அல்ல - புறம்பானவற்றை, செய்யாமை நன்று - திரும்பச் செய்யா திருத்தல் நல்ல பண்பாகும்.

[க-ரை] செய்யத் தகாத செயலினைத் தன்னிடத்தில் மற்றவன் செய்தாலும் அத்துன்பத்திற்காக வருத்தப்பட்டு அறமல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நல்லது.

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

[ப-ரை] மிகுதியான் - மதமான செருக்குக் கொண்டு, மிக்கவை - கொடியவைகளை, செய்தாரை - செய்தவர் களை, தாம்தம் - தாம் தம்முடைய, தகுதியான் - பொறுமைப் பண்பினால், வென்று விடல் - வென்று விடுதல் வேண்டும்.

[க-ரை] மனத்தில் செருக்குக் கொண்டு தீமையான வற்றைச் செய்தவர்களைத் தாம் தம்முடைய பொறுமை யினால் வென்றுவிட வேண்டும்.

9. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

[ப-ரை] இறந்தார் - நன்னெறியில் நீங்கியவரது, வாய் - வாயில் தோன்றும், இன்னா - துன்பமான, சொல் - சொற்களை, நோற்கிற்பவர் - பொறுத்துக் கொண்டு இல்லறத்தில் இருப்பவர்கள், துறந்தாரின் - துறவறம் பூண்ட முனிவர்கள் போல, தூய்மை - தூய்மையான பண்பினை, உடையர் - உடையவர்கள் ஆவார்கள்.

[க-ரை] நல்வழியிலிருந்து நீங்கியவர்களுடைய தீய சொற்களைப் பொறுத்துக் கொள்ளுபவர்கள், துறவறம் பூண்ட முனிவர்களைப் போலத் தூய்மையுடையவர்கள் ஆவார்கள்.

10. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

[ப-ரை] உண்ணாது - உணவு கொள்ளாது [தவம் செய்து], நோற்பார் - துன்பங்களைப் பொறுத்து நோன்பு நோற்பவர், பெரியர் - பெரியவர்களாகிய முனிவர்கள் ஆவார்கள், [அவர்கள் பெரியர் ஆவதும்] பிறர் சொல்லும்- மற்றவர் சொல்லுகின்ற, இன்னா - துன்பம் தருகின்ற, சொல் - சொற்களை, நோற்பாரின் - பொறுத்துக் கொள்ளு வோரின், பின் - பின்னேயாகும் என்பதாம்.

[க-ரை] உண்ணாமல் நோன்பு நோற்றுத் தவம் செய் பவர்கள், எல்லோரினும் பெரியவர்களாவார்கள். அவர்கள் பிறர் சொல்லும் துன்பமான சொற்களையும் பொறுத்துக் கொள்ளுபவர்களுக்கு அடுத்தே பெரியவர்களாக மதிக்கப் படுவார்கள்.

## 17. அழுக்காறாமை

### [பொறாமை என்னும் தீயகுணம் இல்லாதிருத்தல்]

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

[ப-ரை] ஒருவன் - ஒருவன், தன் - தன்னுடைய, நெஞ்சத்து - நெஞ்சத்தில், அழுக்காறு இலாத - பொறாமை இல்லாததான, இயல்பு - இயல்பினை [தன்மையினை] ஒழுக்கு - ஒழுக்கமுடைய, ஆறா - நெறியாக, கொள்க - கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] ஒருவன் தன்னுடைய மனத்தில் பொறாமை என்னும் குற்றம் இல்லாத தன்மையினைத் தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொள்ளுதல் வேண்டும்.

**2. விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.**

[ப-ரை] *யார் மட்டும் - யாவராக - இருந்தாலும், [அவரிடம்] அழுக்காற்றின் - பொறாமைக் குணத்திலிருந்து, அன்மை-நீங்குதலை, பெறின் - பெற்றிருப்பானேயாகில், விழுப்பேற்றின் - அவன் அடைகின்ற சீரிய செல்வங்களுள்; அஃது ஒப்பது - அச்செல்வத்திற்குச் சமமானது, இல்லை - வேறு எதுவும் இல்லையாகும்.*

[க-ரை] *ஒருவன் யாவரிடத்திலும் பொறாமை இல்லாமல் இருப்பதே சிறந்த செல்வமாகும். அவன் பெறுகின்ற சீரிய செல்வங்களுள், அச்செல்வத்திற்குச் சமமானது வேறு எதுவும் இல்லை.*

**3. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான்.**

[ப-ரை] *அறன் - அறன் என்பதையும், ஆக்கம் - செல்வத்தினையும், வேண்டாதவன்; என்பான் - என்பவன், பிறன் - மற்றவனுடைய, ஆக்கம் - செல்வத்தினைக் கண்டு, பேணாது-விரும்பி மகிழ்ச்சியடையாமல், அழுக்கறுப்பான்- பொறாமைப்பட்டுக் கொண்டிருப்பவனாவான்.*

[க-ரை] *அறத்தினையும் செல்வத்தினையும் வேண்டாம் என்று சொல்லுகின்றவன், மற்றவன் செல்வத்தைக் கண்டபோது தாளாமல் பொறாமைப்படுவான்.*

**4. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.**

[ப-ரை] *இழுக்காற்றின் - அழுக்காறு எனப்படும் அத்தீய நெறிகளால், ஏதம் - குற்றம், படுபாக்கு - வருவதை, அறிந்து - தெரிந்து கொண்டு, அழுக்காற்றின் - பொறாமை கொண்ட தன்மையினாலே, அல்லவை*

செய்யார் - அறமல்லாத தீய செயல்களைப் பெரியோர்கள் செய்ய மாட்டார்கள்.

[க-ரை] பொறாமையினால் தமக்குத் துன்பம் வருவதை அறிந்தவர்கள், பொறாமை காரணமாக அறனல்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

5. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடுஈன் பது.

[ப-ரை] ஒன்னார் - பகைவர்கள், வழுக்கியும் - தீமை செய்யாமல் நீங்கி இருந்தாலும், கேடு ஈன்பது - [பொறாமை] தீமையினைந் தருவதாகும், [ஆனபடியால்] அழுக்காறு - பொறாமையினை, உடையார்க்கு - உடையவர்களுக்கு, அது - அப்பொறாமைக் குணமே, சாலும் - [துன்பம் தருதற்குப்] போதுமானதாகும்.

[க-ரை] அழுக்காறு (பொறாமை) உடையவர்களுக்குப் பகைவர்கள் தீமை செய்ய வேண்டியதில்லை. ஏனெனில், அப்பொறாமைக் குணமே அவர்களை அழிப்பதற்குப் போதுமானதாகும்.

6. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

[ப-ரை] கொடுப்பது - பிறருக்குக் கொடுப்பதைப் பார்த்து, அழுக்கறுப்பான் -பொறாமைப்படுகிறவனுடைய, சுற்றம் – உறவினர் என்னும் சுற்றமானது, உடுப்பதூஉம் - உடுப்பதற்கு ஆடைகளும், உண்பதூஉம் – உண்பதற்கு உணவும், இன்றிக்கெடும் - இல்லாமல் கெட்டுவிடும்.

[க-ரை] பிறருக்குக் கொடுப்பதைப் பார்த்துப் பொறாமைப் படுகிறவனுடைய சுற்றம் உடுப்பதும் உண்பதும் இல்லாமல் கெட்டுவிடும்.

7. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

[ப-ரை] அழுக்காறு - பொறாமையென்பதனை, உடையானை - கொண்டிருப்பவனை, செய்யவள் - திருமகள், அவ்வித்து - பொறாமைப்பட்டு, தவ்வையை - மூத்தவளை [தமக்கையை] காட்டிவிடும் - அவனிடம் போகச் செய்து விட்டுத் தான் விலகிவிடுவாள்.

[க-ரை] பிறருடைய செல்வம் கண்டபோது பொறாமைப்படுகின்றவனைப் பார்த்துத் திருமகள் தானும் பொறாமல் தனக்கு மூத்தவளைக் காட்டி அவனிடம் சென்று இருக்குமாறு செய்வாள்.

8. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

[ப-ரை] அழுக்காறு - பொறாமை, என - என்னும், ஒரு பாவி - ஒரு பாவியானவன், திருச்செற்று - ஒருவனுடைய செல்வத்தையழித்து; தீ - தீய, உழி - இடத்திற்கு [உலகிற்கு] உய்த்து விடும் - கொண்டு தள்ளி விடுவான்.

[க-ரை] பொறாமை என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி தன்னையுடையானுடைய செல்வத்தைக் கெடுத்துத் தீய நிலைக்குள் தள்ளிவிடுவான்.

9. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

[ப-ரை] அவ்விய - பொறாமையினைக் கொண்ட, நெஞ்சத்தான் - நெஞ்சினையுடையவனது, ஆக்கமும் - செல்வப்பெருக்கமும், செவ்வியான் – நல்ல உள்ளம் படைத்தவனது, கேடும் - கெடுதியென்னும் வறுமையும் [இருக்குமானால்] நினைக்கப்படும் – அதனை ஆராய்ந்து அறிந்து கொள்ளப்படும்.

[க-ரை] பொறாமையினைக் கொண்ட மனத்தானுடைய செல்வப் பெருக்கமும், நல்ல மனமுடையவனின் வறுமையும், இருக்குமேயானால், ஆராய்ந்து அறிந்து கொள்ளப்படும்.

10. அழுக்கற்று அகன்றாரும் இல்லை; அஃது இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

[ப-ரை] அழுக்கற்று - பொறாமையினைக் கொண்டு, அகன்றாரும் - பெருக்கம் அடைந்தவர்களும், இல்லை - இல்லையாகும், அஃது - அத்தீக்குணம், இல்லார், இல்லாதவர்கள், பெருக்கம் - பெருக்கம் பெறாமல், தீர்ந்தாரும் இல் - நீக்கப்பட்டவராகவும் இல்லையாகும். இல்லை

[க-ரை] பொறாமையினைக் கொண்டு பெரியார்களாயினாரும் இல்லை. அத்தீச் செயல் இல்லாதார் பெருக்கத்திலிருந்து நீக்கப்பட்டவராகவும் இல்லை.

## 18. வெஃகாமை

### [பிறருடைய பொருளை வஞ்சித்துக் கவர்ந்து கொள்ள நினையாதிருத்தல்]

1. நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

[ப-ரை] நடுவு - நடுவு நிலைமை, இன்றி - இல்லாமல், நன் - பிறருடைய நல்ல, பொருள் - பொருளை, வெஃகின் - வஞ்சித்து அடைய நினைத்தால் [அந்த எண்ணம்] குடி - அவனுடைய குடியை, பொன்றி - அந்த நேரத்திலேயே அழித்து, குற்றமும் - குற்றத்தினையும், ஆங்கே தரும் அப்போதே கொடுக்கும்.

[க-ரை] நடுவு நிலைமையில் இல்லாமல் பிறர்க்குரிய பொருளை வஞ்சித்துக் கொள்ள எண்ணினால் அந்த-

இச்சை அவனுடைய குடியைக் கெடுத்துக் குற்றத்தினையும் அப்போதே கொடுக்கும்.

**2. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவுஅன்மை நாணு பவர்.**

[ப-ரை] நடுவு - நடுவு நிலைமை, அன்மை - இல்லாமைக்கு, நாணுபவர் - வெட்கி அஞ்சுபவர்கள், படு - பிறர் பொருளைக் கவர்வதனால் வருகின்ற, பயன் - பயனை, வெஃகி - விரும்பி, பழிப்படுவ - பழிக்கப்படும் செயல்களை, செய்யார் - செய்ய மாட்டார்கள்.

[க-ரை] நடுவு நிலைமை இல்லாதிருப்பதற்கு அஞ்சு பவர்கள் பின்னர் வரும் பயனை விரும்பிப் பழிக்கு ஆளாகக் கூடிய செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

**3. சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.**

[ப-ரை] மற்று இன்பம் - அறத்தான் வரும் நிலையுடைமை இன்பத்தினை, வேண்டுபவர் - காதலிப்பவர், சிற்றின்பம் - பிறர் உடைமையினை வஞ்சித்தடையும் சிறிய இன்பத்தினை, வெஃகி - ஆசைப்பட்டு, அறன் - அறத்திற்கு, அல்ல - புறம்பான செயல்களை, செய்யார் - செய்ய மாட்டார்கள்.

[க-ரை] அறத்தான் வரக்கூடிய நிலையான இன்பத்தினை விரும்புகிறவர்கள் பிறருடைய பொருளை வஞ்சித்து அடையும் சிறிய இன்பத்திற்கு ஆசைப்பட்டுத் தீய செயல்களைச் செய்யமாட்டார்கள்.

**4. இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மைஇல் காட்சி யவர்.**

[ப-ரை] புலம் வென்ற - புலன்கள் ஐந்தினையும் அடக்கி வெற்றிபெற்ற புன்மை - குற்றம், இல் - இல்லாத, காட்சியவர் - உணரும் அறிவு பெற்றவர்கள், இலம் -

பொருளின்றி வறுமையுற்றோம், என்று - என்று எண்ணி, வெஃகுதல் - மற்றவர் பொருளை வஞ்சித்துக் கொள்ளுவதை, செய்யார் - செய்யமாட்டார்கள்.

[க-ரை] ஐம்புலன்களையும் வென்று குற்றம் இல்லாத அறிவினையுடைய பெரியோர்கள் "யாம்வறுமை யுற்றோம்" என்று கருதிப் பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ள நினைக்கமாட்டார்கள்.

5. அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

[ப-ரை] வெஃகி - பிறர் பொருளை வஞ்சிக்கக் கருதி, யார் மாட்டும் - எல்லோரிடத்திலும், வெறிய - அறிவுக்குப் புறம்பான தீயவற்றை, செயின் - செய்வார்களேயானால், அஃகி - நுண்ணியதான, அகன்ற - பற்பல நூல்களையும் ஆராய்ந்த, அறிவு என்னாம் - அறிவுடைமையானது என்ன பயனைத் தருவதாகும்.

[க-ரை] பொருளை விரும்பி யாவரிடத்திலும் அறத்துடன் பொருந்தாத செயல்களை அறிவுடையோர் செய்வாராயின், நுணுக்கமான பல நூல்களிலும் சென்ற அவர்களுடைய அறிவு என்ன பயன் உடையதாகும்?

6. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகி
பொல்லாத சூழக் கெடும்.

[ப-ரை] அருள் - அருள் என்பதனை, வெஃகி - அடைய வேண்டி, ஆற்றின்கண் நின்றான் - நன்னெறியிலே நின்றவன், பொருள் - மற்றவனுடைய உடைமையினை, வெஃகி - விரும்பி, பொல்லாத - தீமையான வழிகளை, சூழக்கெடும் - நினைக்கக் கெட்டுவிடுவான்.

[க-ரை] அருளாகிய அறம் என்பதனை விரும்பி நன்னெறியில் நின்றவன் பிறன் பொருளினை விரும்பித் தீமையான வழிகளை நினைப்பானாகில் கெட்டுவிடுவான்.

7. வேண்டற்க வெஃகிஆம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்கு அரிதாம் பயன்.

[ப-ரை] வெஃகி - அயலார் பொருளின் மேல் ஆசை கொண்டு, ஆம் ஆக்கம் - அதனால் வரும் செல்வத்தினை, வேண்டற்க - விரும்பாதிருப்பாயாக, விளைவயின் - அப்படி அதனை நுகரும்போது, பயன் - உண்டாகின்ற பயன் என்பது, மாண்டற்கரிதாம் - நன்மையான தன்மையுடையதாகவே இருக்காது.

[க-ரை] பிறர் பொருளைக் கவர்வதால் வரும் ஆக்கத்தினை விரும்பாதிருப்பார்களாக; அப்படிக் கவர்ந்தால் அனுபவிக்கும்போது அதன் பயன் நன்மையுடையதாக இருக்காது.

8. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

[ப-ரை] செல்வத்திற்கு - செல்வமானது, அஃகாமை - குறைந்து போகாதிருப்பதற்கு வழி, யாது - எது, எனின் - என்று ஆராய்ந்தால், பிறன் - மற்றவன், வேண்டும் - விரும்பிக் கொள்ளும், கைப்பொருள் - உரிமையான பொருளை, வெஃகாமை - தான் வஞ்சித் தடைய விரும்பா திருத்தல் என்பதாகும்.

[க-ரை] செல்வமானது குறைந்து போகாமல் இருப்பதற்குக் காரணம் யாதென்று ஆராய்ந்தால், அது மற்றவனுக்கு உரிமையான பொருளினைத் தான் விரும்பா திருத்தல் வேண்டும் என்பதாகும்.

9. அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்து ஆங்கே திரு.

[ப-ரை] அறன் - அறத்தினை, அறிந்து - நன்கு அறிந்து, வெஃகா - பிறனுக்குரிய பொருளினை அடைய விரும்பாத, அறிவுடையார் - அறிவுடையவர்களை, திரு-

செல்வமானது, திறனறிந்து - தான் சேர வேண்டிய இடமென்று அறிந்து, ஆங்கே சேரும் - அத்தன்மையால் அவ்விடத்திற்கே போய்ச் சேரும்.

[க-ரை] அறத்தினை அறிந்து பிறர் பொருளினை விரும்பாத அறிவுடையார்களிடம் தான் சேர வேண்டிய இடமென்று அறிந்து செல்வமானது [திருமகள்] அவர்களிடத்திற்குப் போய்ச் சேரும்.

10. இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு.

[ப-ரை] எண்ணாது - பிறகு வரும் தீமையினை நினைத்துப் பார்க்காமல், வெஃகின் - அயலான் பொருளை வஞ்சித்துக் கொள்ளக் கருதுவானாகில், இறல் - அழிவு என்பதனை, ஈனும் - அந்த எண்ணம் கொடுத்து விடும், வேண்டாமை - அவ்வாறு விரும்பாமை, என்னும் - என்கின்ற, செருக்கு - செல்வத் தன்மையானது, விறல் -வெற்றியினை, ஈனும் - கொடுக்கும்.

[க-ரை] பின்னர் விளைவது அறியாமல் வெஃகுதல் செய்தால் அவனுக்கு முடிவினை உண்டாக்கும்; வேண்டாமை என்கின்ற செல்வத் தன்மையானது வெற்றியினைக் கொடுக்கும்.

## 19. புறங்கூறாமை

### [காணாதபோது பிறரை இகழ்ந்து பேசாமை]

1. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.

[ப-ரை] ஒருவன் - ஒருவன், அறம் - அறம் எனப்படுவதையும், கூறான் - செய்யாமல், அல்ல செயினும் - அறமல்லாத தீயவைகளைச் செய்வானானாலும், புறங்

கூறான் - புறம் பேசாதவன், என்றல் - என்று உலக மக்களால் பேசப்படுதல், நன்று - மிகவும் நல்லதாகும்.

[க-ரை] ஒருவன் அறத்தினைச் செய்யாமல் தீயவற்றைச் செய்தாலும்கூடப் 'புறங்கூறாதவன்' என்று மக்களால் சொல்லப்படுதல் நல்லதாகும்.

2. அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை.

[ப-ரை] அறம் - அறத்தினை, அழீஇ - அழித்துப் பேசி அல்லவை - அறம் அல்லாத தீமைகளை, செய்தலின் - செய்வதைக் காட்டிலும், புறனழீஇ - ஒருவனைக் காணாத போது அவனை இழிவாகப் பேசி, பொய்த்து - கண்டபோது அவனுடன் பொய்யாக, நகைத்துப் பேசும் செயல், தீதே தீமையாகும்.

[க-ரை] ஒருவனைக் காணாதபோது இகழ்ந்து பேசி, கண்டபோது பொய்யாகச் சிரித்துப் பேசுதல் என்பது, அறம் இல்லையென அழித்துப் பேசி தீமைகளைச் செய்வதைவிடத் தீமையானதாகும்.

3. புறங்கூறிப் பொய்த்து உயிர்வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.

[ப-ரை] புறங்கூறி - புறம் பேசி, பொய்த்து - கண்ட போது பொய்யாகப் புகழ்ந்து பேசி, உயிர் - உயிருடன், வாழ்தலின் - வாழ்வதைவிட, சாதல் - இறந்துவிடுதல், அறம் கூறும் - அறநூல்கள் விதிக்கின்ற, ஆக்கம் தரும் நற்பயனை அவனுக்குத் தருவதாகும்.

[க-ரை] புறம் பேசிப் பொய்ம்மையான வாழ்க்கையில் வாழ்வதைவிட அது செய்யாமல் இறந்துவிடுதல், அறநூல்களில் சொல்லப்படுகின்ற நற்பயனை அவனுக்குத் தருவதாகும்.

4. கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்.

[ப-ரை] கண் - கண் முன்னே, நின்று - இருந்து கொண்டு, கண் - இரக்கம், அற - இல்லாத [தாட்சண்யமில்லாத] சொல்லினும் - சொற்களைச் சொன்னாலும், முன் இன்று - ஒருவன் முன்னே இல்லாத போது, பின் நோக்கா - பின்னர் வருவதான தீமையினைக் கருதாத, சொல் - சொற்களை, சொல்லற்க - சொல்லா திருப்பாயாக.

[க-ரை] ஒருவனுக்கு முன்பாக நின்று தாட்சண்யமில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லுக; முன்னே இல்லாதபோது பின்னால் தனக்கு வரும் தீமையினைக் கருதாத சொற்களைச் சொல்லாது இருப்பாயாக.

5. அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும்.

[ப-ரை] அறம் - அறம் என்பது, சொல்லும் - நல்லதென்று சொல்லுகின்ற, நெஞ்சைத்தான் - நெஞ்சுடையவன், அன்மை - அந்த அறத்தன்மை அவனுக்கு இல்லையென்பதை, புறம் சொல்லும் - புறம் பேசுகின்ற, புன்மையால் - அவனுடைய குற்றமான தன்மையால், காணப் படும் - மற்றவர்களால் காணப்படும்.

[க-ரை] அறம் நல்லதென்று வாயினால் பேசுகின்றவனுடைய மனத்தில் அறத்தன்மை இல்லாதிருப்பதை அவன் புறங்கூறுவதற்குக் காரணமான புன்மைத் தன்மையினால் கண்டு கொள்ளப்படும்.

6. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

[ப-ரை] பிறன் - மற்றவனுடைய, பழி - பழியென்னும் குற்றத்தினை; கூறுவான் - கூறுகின்றவன், தன் பழியுள்ளும்-

அவனது பழிகளிலும், திறன் - துன்பப்படும் தன்மையுடையவைகளை, தெரிந்து - தெரிந்துணர்ந்து- கூறப்படும் - மற்றவர்களால் எடுத்துக் கூறப்படுவான்.

[க-ரை] மற்றவனுடைய குற்றங்களைக் கூறுபவன் தன்னுடைய பழிகளுள்ளும் வருத்தும் தன்மையுடையவற்றை ஆராய்ந்து பிறரால் சொல்லப்படுவதனையும் கேட்டறிய வேண்டும்.

7. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

[ப-ரை] நக - கூடி மகிழுமாறு, சொல்லி - இனியவை பேசி, நட்பாடல் - நட்புச் செய்வதை, தேற்றாதார் - நல்லதென்று உணராதவர்கள், பகச் சொல்லி - கூடியிருப்பதை விட்டுப் பிரியுமாறு புறம்பேசி, கேளிர் - சுற்றமானவர்களையும், பிரிப்பர் - பிரிந்து போகும்படிச் செய்வர்.

[க-ரை] இனிய சொற்களைச் சொல்லி அயலாருடன் நட்புச் செய்தலினை அறியாதவர்கள், தம்மைவிட்டு நீங்குமாறு புறம் பேசிச் சுற்றத்தார்களையும் பிரியுமாறு செய்வர்.

8. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

[ப-ரை] துன்னியார் தம்முடன் நெருங்கிப் பழகுவர்களுடைய, குற்றமும் - குற்றங்குறைகளையும், தூற்றும் மரபினார் - பலரும் அறியத் தூற்றிப் பேசுகின்ற தன்மையுடையவர்கள், ஏதிலார் மாட்டு - தொடர்பில்லாதவர்களைப் பற்றிப் பேசுவது; என்னை கொல் - எப்படிப்பட்டதாக இருக்குமோ?

[க-ரை] தம்முடன் நெருங்கிப் பழகுபவர்களுடைய குற்றத்தினையும் அவரில்லாத போது தூற்றிப் பேசுபவர்கள் அயலார் மாட்டுச் செய்வது யாதோ?

9. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

[ப-ரை] புறன் நோக்கி - மற்றவன் இல்லாத நேரம் பார்த்து, புன்சொல் - குற்றமும் பழியுமான சொற்களை, உரைப்பான் - உரைப்பவனுடைய, பொறை - உடம்பு பாரத்தினை, வையம் - பூமியானது, அறம் - இதுவே தனக்கு அறம் என்று, நோக்கி - கருதி, ஆற்றுங்கொல்- தாங்கிக் கொண்டிருக்கின்றது போலும்.

[க-ரை] புறம் பேசுதலான குற்றத்தினைச் செய்து பழிச் சொற்களை உரைப்பவனுடைய உடல் பாரத்தினைத் தாங்குவதுதான் அறம் என நினைத்து இப்பூமி தாங்கிக் கொண்டிருக்கின்றது போலும்!

10. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு.

[ப-ரை] ஏதிலார் - மற்றவர்களுடைய, குற்றம் போல் - குற்றத்தினைக் கண்டு பேசுவது போல, தன் - தன்னுடைய, குற்றம் - குற்றத்தினையும், காண்கிற்பின்- காணும் தன்மையுடையவரானால், மன்னும் - நிலை பெற்ற, உயிர்க்கு - அவரது உயிர்க்கு, தீது உண்டோ- உண்டாவதொரு தீமை உண்டோ?

[க-ரை] மற்றவர்களுடைய குற்றத்தினைக் கண்டு பேசுவது போலத் தன்னுடைய குற்றத்தினையும் காணும் தன்மை உடையவனானால், அவனுடைய நிலை பேறுடைய உயிர்க்கு உண்டாவதொரு தீமை உண்டோ?

# 20. பயன் இல சொல்லாமை

[யாருக்கும் பயனில்லாத
சொற்களைச் சொல்லாதிருத்தலாகும்]

1. பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

[ப-ரை] பல்லார் - நன்மக்களாகிய பலரும், முனிய- வெறுத்துக் கோபம் கொள்ளுமாறு, பயன் - யாதொரு பயனும், இல - இல்லாத சொற்களை, சொல்லு வான் - பேசுகிறவன், எல்லாரும் - எல்லா மக்களாலும், எள்ளப்படும் - ஏளனஞ் செய்யப் படுவான்.

[க-ரை] அறிவுடையார் பலரும் வெறுக்கும்படியாகப் பயனில்லாத சொற்களைப் பேசுகின்ற ஒருவன் எல்லா மக்களாலும் இகழப் படுவான்.

2. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.

[ப-ரை] பயன் - பயனொன்றும், இல - இல்லாத சொற்களை, பல்லார்முன் - பலருக்கு முன்பாக, சொல் லல் - சொல்லுவதென்பது, நட்டார்கண் - நண்பர் களிடத்தில், நயன் இல - நன்மையற்ற வெறுக்கத்தக்க செயல்களை, செய்தலின்தீது - செய்வதைக் காட்டிலும் தீமையானதாகும்.

[க-ரை] விரும்பத் தகாத செயல்களை நண்பர்களிடம் செய்வதைவிடப் பயனொன்றும் இல்லாத சொற்களை அறிவுடையார் பலர் முன்னே ஒருவன் சொல்லுதல் தீதானதாகும்.

3. நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

[ப-ரை] பயன் – பயனொன்றும், இல – இல்லாதவற்றை, பாரித்து – விரிவுபடுத்தி, உரைக்கும் – சொல்லுகின்ற, உரை – சொல்லானது, நயன் – [இவன்] நீதி, இலன் – இல்லாதவன், என்பது சொல்லும் – என்பதனைச் சொல்லிக் காட்டும்.

[க-ரை] பயனொன்றும் இல்லாதவற்றை ஒருவன் விரிவுபடுத்தி உரைக்கின்ற உரையானது அவன் நீதி இல்லாதவன் என்பதனைச் சொல்லிக் காட்டும்.

4. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லார் அகத்து.

பயன்சாரா – நற்பயன் சேராத, பண்பு – குணம், இல் – இல்லாத; சொல் – சொற்களை, பல்லாரகத்து – பலரிடத்திலும், [சொன்னால்] நயன்சாரா – அவை நீதியோடு சேராதவையாகி, நன்மையின் நீக்கும் – நன்மையினின்றும் அப்படிப் பட்டவனை விலக்கிவிடும்.

[க-ரை] நற்பயன் சேராத குணமில்லாத சொற்களைப் பலரிடத்திலும் ஒருவன் சொல்லுவானானால், அப்படிப்பட்டவனை, நற்குணங்களிலிருந்து நீக்கி விடும்.

5. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை யுடையார் சொலின்.

[ப-ரை] பயன் – நற்பயன், இல – இல்லாதவைகளை, நீர்மை – இனிய பண்பு; உடையார் – உடையவர்கள், சொலின் – சொல்லுவார்களேயானால், சீர்மை – அவர்களுடைய உயர்ச்சியானது, சிறப்புடனே – அவர்கள் பெற்றிருக்கும் நன்மதிப்புடனே, நீங்கும் – அவரிடமிருந்து விலகிப் போகும்.

[க-ரை] நற்குணமுடைய இனிய தன்மை வாய்ந்த பெரியோர்கள், பயனில்லாத சொற்களைச் சொன்னால் அவர்களுடைய மேன்மையும் நன்மதிப்பும் நீங்கிவிடும்.

6. பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.

[ப-ரை] பயன் - நற்பயன், இல் - இல்லாத, சொல் - சொற்களை, பாராட்டுவானை - பாராட்டிப் பன்முறை பேசுபவனை, மகன் எனல் — மனிதன் என்று கூறாதே, மக்கள் - மக்களுக்குள்ளே, பதடி - பதர், எனல் - என்று கூறுவாயாக.

[க-ரை] பயனில்லாத சொற்களைப் பலகாலும் பாராட்டிப் பேசுபவனை மனிதன் என்று கூறாதே; மக்களுக்குள்ளே பதர் என்று சொல்லுக.

7. நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று.

[ப-ரை] நயன் - நீதியோடு, இல - சேராத சொற்களை, சான்றோர் — அறிவு நிறைந்த பெரியோர்கள், சொல்லினும் - சொன்னாலுங்கூட, சொல்லுக - சொல்வார்களாக, பயன் - யாதொரு பயனும், இல - இல்லாத சொற்களை, சொல்லாமை நன்று - சொல்லாதிருத்தல் மிகவும் நல்லதாகும்.

[க-ரை] சான்றோர்கள், நயமில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லுவார்களாக; பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லதாகும்.

8. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

[ப-ரை] அரும் - அறிதற்கு அருமையான, பயன் - பயனாக உள்ளவைகளை, ஆயும் — ஆராய்கின்ற, அறிவினார் - அறிவினையுடைய பெரியார்கள், பெரும்-

நிறைவான, பயன் - பயன், இல்லாத சொல் - இல்லாத சொற்களை, சொல்லார் - சொல்லவே மாட்டார்கள்.

[க-ரை] அறிதற்கரிய நற்பயன்களை ஆய்ந்தறியும் அறிவுடையவர்கள், மிக்க பயனில்லாத சொற்களைச் சொல்ல மாட்டார்கள்.

9. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

[ப-ரை] மருள் தீர்ந்த - அஞ்ஞானம் நீங்கிய, மாசு - குற்றம் அறு - இல்லாத, காட்சியவர் - அறிவினையுடைய சான்றோர்கள்; பொருள் தீர்ந்த - பயன் தரும் பொருளில்லாத சொற்களை, பொச்சாந்தும் - மறந்தும் கூட, சொல்லார் - சொல்லமாட்டார்கள்.

[க-ரை] அஞ்ஞானத்திலிருந்து நீங்கிய தூயஅறிவினை யுடைய பெரியோர்கள், பயனில்லாத சொற்களை மறந்தும் சொல்லமாட்டார்கள்.

10. சொல்லுக சொல்லில் பயன்உடைய சொல் லற்க
சொல்லில் பயன் இலாச்சொல்.

[ப-ரை] சொல்லில் - சொற்கள் பலவற்றுள்ளும், பயனுடைய - பயன் தரக்கூடிய சொற்களையே, சொல்லுக - சொல்லுவாயாக, சொல்லில் - சொற்களில், பயன் - நற்பயன், இல - ஏதும் இல்லாத, சொல் - சொற்களை, சொல்லற்க - சொல்லாதிருப்பாயாக.

[க-ரை] சொற்கள் பலவற்றுள்ளும் பயன்தரக்கூடிய சொற்களைச் சொல்லுவாயாக; சொற்களில் பயனேதும் இல்லாத சொற்களைச் சொல்லாதிருப்பாயாக.

# 21. தீவினை அச்சம

[தீமையான செயல்களைச் செய்வதற்கு அஞ்சுதலாகும்]

1. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.

[ப-ரை] *தீவினை - தீயசெயல், என்னும் - எனப்படும், செருக்கு - செருக்குடைய தன்மைக்கு, தீவினையார் - தீச்செயல் நெஞ்சங் கொண்டவர்கள் [தீவினையாளர்கள்] அஞ்சார் - அஞ்சமாட்டார்கள், விழுமியார் - சீரிய சிறப்புடையவர்கள், அஞ்சுவர் - அச்சப்படுவார்கள்.*

[க-ரை] *தீய செயல் என்னும் செருக்குடைய அறியாமைக்குத் தீவினையாளராகிய தீச்செயல் நெஞ்சங் கொண்டவர்கள் அஞ்சமாட்டார்கள். சீரிய சிறப்புடையவர்கள் அச்சப்படுவார்கள்.*

2. தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

[ப-ரை] *தீயவை - தீச் செயல்கள், தீய - பின்னே தீமையினை, பயத்தலான் - கொடுப்பதால், தீயவை - தீச் செயல்கள், தீயினும் அஞ்சப்படும் - நெருப்பினைவிடக் கொடுமையானதென்று அஞ்சப்படும்.*

[க-ரை] *தீச் செயல்கள் தீமையினையே கொடுப்பதால் தீச் செயல்கள் தீயினைவிடக் கொடுமையென்று அஞ்சப்படும்.*

3. அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

[ப-ரை] *செறுவார்க்கும் - தமக்குத் துன்பம் செய்வார்க்கும், தீய - தீமையான செயல்களை, செய்யாவிடல் - செய்யாதிருப்பதை, அறிவினுள் - அறிவுச் செயல்கள், எல்லாம் - எல்லாவற்றிலும், தலை - தலையான*

அறிவாகும், என்ப - என்று பெரியோர்கள் சொல்லு வார்கள்.

[க-ரை] தமக்குத் துன்பம் உண்டாக்குபவர்களுக்கும் தீவினைகளைச் செய்யாமல் விடுதல் என்பதை அறிவுகள் எல்லாவற்றிற்கும் தலையாய அறிவு என்று நல்லோர் சொல்லுவர்.

4. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

[ப-ரை] பிறன் - மற்றவனுக்கு, கேடு - தீங்கினை, மறந்தும் - மறந்துங்கூட, சூழற்க - நினையாதிருப்பானாக; சூழின்-நினைப்பானாகில், சூழ்ந்தவன் - நினைத்தவனுக்கு, கேடு - தீங்கினை அறம் சூழும் - அறமானது நிலைத்து விடும்.

[க-ரை] ஒருவன் மறந்தேனும் பிறனுக்குத் தீமை தரும் செயல்களைச் செய்யாதிருப்பானாக; அப்படி நினைப்பானாகில் அவனுக்குத் தீங்கினை அறம் நினைக்கும்.

5. இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.

[ப-ரை] இலன் - யான் வறியவன், என்று - என்பதாக எண்ணி, [அதனைப் போக்க] தீயவை - தீய செயல்களை, செய்யற்க செய்யாதிருப்பானாக, செய்யின் - அவ்வாறு செய்வானேயாகில், பெயர்த்து - மீண்டும், இலன் - இல்லாதவன், ஆகும் - ஆவான்.

[க-ரை] நான் வறியவன் என்று நினைத்து அதனைப் போக்க ஒருவன் தீய செயல்களைச் செய்யாதிருப்பானாக. அப்படிச் செய்வானானால் மீண்டும் வறியவனாவான்.

6. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

[ப-ரை] நோய்ப்பால - துன்பம் தரும் தன்மையுடையவைகள், தன்னை - தன்னிடம் வந்து, அடல் - துன்புறுத்துவதை, வேண்டாதான் - விரும்பாதவன், தீப்பால - தீய தன்மையுடைய செயல்களை, தான் - தான், பிறர்கண் செய்யற்க - மற்றவர்களுக்குச் செய்யாதிருப்பானாக.

[க-ரை] தமக்குப் பின்பு துன்பங்கள் வந்து வருத்த வேண்டாமென்று நினைப்பவர்கள், பிறர்க்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்யாதிருப்பார்களாக.

7. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

[ப-ரை] எனைப்பகை - எப்படிப்பட்ட பெரிய பகையினை, உற்றாரும் - உடையவர்களும், உய்வர் - ஒருகால் தப்பித்துக் கொள்வர், வினைப்பகை - தீவினையென்னும் பகையானது, வீயாது - அவனைவிட்டு நீங்காமல், பின் - அவன் பின்னே, சென்று - போய், அடும் - அவனைக் கொன்றுவிடும்.

[க-ரை] எவ்வளவு பெரிய பகையுடையவர்களும் ஒருவாற்றால் ஒருகால் தப்பிவிடுவர். ஆனால், தீச்செயலாகிய பகை நீங்காமல் பின்னேயே போய்க் கொல்லும்.

8. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.

[ப-ரை] தீயவை செய்தார் - தீமையான செயல்களைச் செய்தவர்கள், கெடுதல் - தாம் கெட்டு விடுதல் [எப்படிப்பட்டதென்றால்] நிழல் - ஒருவனுடைய நிழலானது, தன்னை - அவனை, வீயாது - விடாமல் வந்து, அடி உறைந்தற்று - கால்களின் அடியிலேயே வந்து தங்கியது போன்றதாகும்.

[க-ரை] பிறர்க்குத் தீங்கு செய்பவர்கள் தப்பாமல் கெடுவது எப்படியென்றால், ஒருவனுடைய நிழல் அவனை விடாமல் அடியிலேயே தங்குவது போன்ற தன்மையாகும்.

9. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

[ப-ரை] தன்னைத்தான் - தன்னையேதான், காதலனாயின் - விரும்பி நேசிப்பானாகில், தீவினைப்பால் - தீவினையென்னும் தன்மையுடையவைகளுள், எனைத் தொன்றும் - எவ்வளவு சிறியதாக இருப்பது ஒன்றினைக் கூட, துன்னற்க—மற்றவர்களுக்குச் செய்யாதிருப்பானாக.

[க-ரை] ஒருவன் தன்னைத்தானே விரும்புவானா னால் சிறிதளவும் பிறனுக்குத் தீச்செயல் ஒன்றேயாயினும் செய்யாதிருப்பானாக.

10. அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்
தீவினை செய்யான் எனின்.

[ப-ரை] மருங்கு ஓடி - கொடுமையான வழியிலே போய், தீவினை - தீச்செயல்களை, செய்யான் - செய்யா திருப்பவன், எனின் - என்றால், [அப்படிப்பட்டவன்] அருங்கேடன் - கெடுதி என்பது அணுகாதவன், என்பது அறிக - என்பதனை அறிந்து கொள்ளுதல் வேண்டும்

[க-ரை] ஒருவன் கொடுமையான வழியிலே சென்று தீச்செயல்களைப் பிறருக்குச் செய்யாதிருப்பானானால் அவன் கெடுதி இல்லாதவன் என்பதனை அறிந்து கொள்ளு தல் வேண்டும்.

# 22. ஒப்புரவு அறிதல்

[உலக நடையினை அறிந்து பிறர்க்குப் பயன்பட்டு வாழ்தலாகும்]

1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றும் கொல்லோ உலகு.

[ப-ரை] மாரிமாட்டு - நீர் தருகின்ற மேகங்களுக்கு; உலகு - உலகில் உள்ள உயிர் வாழ்வன; என்—என்ன, கைம்மாறு - பதில் உதவி, ஆற்றும் - செய்கின்றன, [அதுபோல] கடப்பாடு - மேகங்கள் போன்ற பெரியவர்கள் செய்யும் நன்மைகளும், கைம்மாறு வேண்டா - திரும்பப் பெறும் உதவிகளை வேண்டிச் செய்யப்படுவன அல்ல [கொல்லோ - அசைநிலை]

[க-ரை] தமக்கு நீரைத் தருகின்ற மேகங்களுக்கு உயிர்கள் என்ன கைம்மாறு (பதில் உதவி) செய்கின்றன? அதுபோல் மேகங்கள் போன்ற பெரியவர்கள் செய்கின்ற ஒப்புரவுகளும் கைம்மாறு எதிர்பார்ப்பன அல்ல.

2. தாள்ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

[ப-ரை] தக்கார்க்கு - தகுதியுடைய பெரியவர்களுக்கு, தாள் - முயற்சியினை, ஆற்றி - செய்து, தந்த பொருளெல்லாம் - ஈட்டிய பொருள் எல்லாம், வேளாண்மை- ஒப்புரவு, [உதவி] செய்தற் பொருட்டு - செய்வதற்கேயாகும்.

[க-ரை] தகுதியுடைய பெரியவர்களுக்கு, முயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் ஒப்புரவு (உதவி) செய்வதற்கேயாகும்.

3. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

[ப-ரை] புத்தேள் - தேவர்கள் இருக்கும், உலகத்தும் - உலகத்திலும், ஈண்டும் - இந்த உலகத்திலும், ஒப்புரவின் -

ஒப்புரவினைப்போல, நல்ல - நல்லதான, பிற - பிறவற்றை பெறல் அரிது - பெறுதல் என்பது அரிதானதாகும்.

[க-ரை] புத்தேள் உலகத்திலும் இவ்வுலகத்திலும் ஒப்புரவு போல (பிறர்க்கு உதவி செய்தல் போல) நல்ல பிற செயல்களைப் பெறுதல் அரிதாகும்.

4. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

[ப-ரை] உயிர் வாழ்வான் - உயிருடன் வாழ்பவன் என்பவன், ஒத்தது - உலக நடைக்கு ஏற்ப, அறிவான் - அறிந்து ஒத்து வாழ்பவன் ஆவான், மற்றையான் - அவ்வாறு அறிந்து வாழாதவன், செத்தாருள் வைக்கப் படும் - செத்தவர்களுள் ஒருவனாக வைத்துக் கருதப் படுவான்.

[க-ரை] உயிரோடு கூடி வாழ்பவன் என்பவன் உலக நடையினை அறிந்து வாழ்பவன் ஆவான். அவ்வாறு அறிந்து வாழாதவன் செத்தவர்களுள் ஒருவனாக வைத்துக் கருதப்படுவான்.

5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு.

[ப-ரை] உலகு - உலக நடையான ஒப்புரவினை; அவாம் - விரும்பி நடந்து கொள்ளும், பேர் - பெரிய, அறிவாளன் - அறிஞனிடம், திரு - செல்வம் நிறைந்திருப்பதானது, ஊருணி - ஊரில் வாழ்பவர்கள் உண்ணுகின்ற குளம், நீர் - தண்ணீரினால், நிறைந்தற்று - நிறைந்திருப்பது போன்றதாகும்.

[க-ரை] உலக நடையினை அறிந்து நடக்கின்ற பேரறிஞனுடைய செல்வமானது ஊரில் வாழ்பவர்கள் தண்ணீர் உண்ணும் குளம் நீர் நிறைந்திருப்பது போன்றதாகும்.

6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

[ப-ரை] செல்வம் - செல்வம், நயன் - உதவி, உடையான்கண் - செய்கின்றவனிடத்தில், படின் - உண்டாகி இருக்குமானால், [அப்படி இருப்பது] உள்ளூர் - ஊர் நடுவில், பயன் - பயனைத் தருகின்ற, மரம் பழுத்தற்று - மரமானது பழம் நிறைந்திருப்பது போன்றதாகும்.

[க-ரை] செல்வமானது ஒப்புரவு செய்பவனிடத்தில் உண்டாகி இருக்குமானால், அது பயன்படுகின்ற மரம், ஊர் நடுவே பழுத்திருப்பது போன்றதாகும்.

7. மருந்துஆகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

[ப-ரை] செல்வம் - செல்வம், பெருந்தகையான்கண் - ஒப்புரவு செய்யும் சிறந்த பெருந்தகையாளனிடம், படின் - உண்டாகி இருக்குமேயானால், [அச்செல்வம்] மருந்தாகி - எல்லா உறுப்புக்களினாலும் நோய்க்கு மருந்தானதாகி, தப்பா மரத்தற்று - மற்றவர்க்குப் பயன்படுவதிலிருந்து தப்பாத மரத்தினை ஒத்ததாகும்.

[க-ரை] செல்வம் ஒப்புரவு செய்யும் பெருந்தகையாளனிடத்தில் உண்டாகி இருக்குமேயானால், அது பிணிகட்கு எல்லா உறுப்புக்களினாலும் மருந்தாகித் தப்பாத மரத்தினை ஒப்பதாகும்.

8. இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர்.

[ப-ரை] கடன் - தாம் செய்யத் தகுந்த கடமைகளை, அறி - அறிந்த, காட்சியவர் - இயற்கையறிவினையுடைய பெரியவர்கள், கடன் - ஒப்புரவு செய்தற்கேற்ற செல்வம், இல் - இல்லாமல் குறைந்த, பருவத்தும் - காலத்திலும்,

ஒப்புரவிற்கு-மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு, ஒல்கார்-மனம் தளர மாட்டார்கள்.

[க-ரை] தாம் செய்யத் தகுவனவற்றை அறிந்த இயற்கை அறிவுடையவர்கள், செல்வம் சுருங்கிய காலத்திலும் ஒப்புரவு செய்வதற்குத் தளர மாட்டார்கள்.

9. நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா ஆறு.

[ப-ரை] நயனுடையான் - ஒப்புரவு செய்யும் தன்மையாளன், நல்கூர்ந்தான் - வறுமையுடையவன், ஆதல் - ஆனான் என்பது [என்னவென்றால்] செய்யும் - தவறாமல் செய்கின்ற, நீர்மை - தன்மையுடைய ஒப்புரவுகளை, செய்யாது - செய்ய முடியாமல், அமைகலா ஆறு - வருந்துகின்ற நிலைமையேயாகும்.

[க-ரை] ஒப்புரவு செய்பவனுக்கு வறுமை என்பது யாதென்றால், தவறாமல் செய்கின்ற ஒப்புரவினைச் செய்ய முடியாமல் வருந்தி இருக்கும் நிலைமையே ஆகும்.

10. ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அஃதுஒருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து.

[ப-ரை] ஒப்புரவினால் - உதவி செய்வதால், கேடு - கெடுதி, வரும் - வருவதாகும், எனின் - என்று சொல்லுபவர் உண்டானால், அஃது - அக் கெடுதியானது, ஒருவன் - ஒருவன், விற்று - தன்னை விற்றாகிலும், கோள்தக்கது - அதனைக் கொள்ளும் தகுதியினை, உடைத்து - உடையதாகும்.

[க-ரை] ஒப்புரவு செய்வதால் கேடு வரும் என்று சொல்லுபவர்கள் இருப்பார்களேயானால், அப்படிப்பட்ட கெடுதி ஒருவன் தன்னை விற்றாயினும் கொள்ளும் தகுதியினை உடையதாகும்.

## 23. ஈகை

[வறியவர்களுக்குக் கொடுத்தல் என்பதாகும்]

1. வறியார்க்கு ஒன்றுஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

[ப-ரை] வறியார்க்கு - ஒரு பொருளும் இல்லாத வறியவர்களுக்கு, ஒன்று ஈவதே - ஒரு பொருளைக் கொடுப்பதுதான், ஈகை - உதவி செய்வதாகும், மற்றெல்லாம் - மற்ற வகையில் கொடுப்பதெல்லாம், குறியெதிர்ப்பை - குறிப்பாகப் பின்னர் வரக்கூடிய பயனைக் கருதிய, நீரது உடைத்து - தன்மையினை உடையதாகும்.

[க-ரை] யாதொரு பொருளும் இல்லாதவர்களுக்கு ஒன்றினைக் கொடுப்பதே ஈகையாகும். அப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்க்குக் கொடுப்பது பின்வரும் பயனைக் கருதிக் கொடுக்கும் தன்மையுடையதாகும்.

2. நல்ஆறு எனினும் கொளல்தீது மேல் உலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

[ப-ரை] கொளல் - யாசித்துக் கொள்ளுதல், நல் - நல்ல, ஆறு - நெறி, எனினும் - என்பவர் இருந்தாலும், தீது - அச்செயல் தீமையானதேயாகும், [வறியவர்களுக்குக் கொடுத்தால்] மேல் உலகம் - மேல் உலகம் என்பது, இல் - இல்லை, [கிடையாது], எனினும் - என்றாலும், ஈதலே நன்று - கொடுப்பதுதான் [ஈகைதான்] நல்லதாகும்.

[க-ரை] இரப்பது (யாசிப்பது) நன்னெறியாகும் என்று சொல்லுபவர்கள் இருந்தாலும் அது தீதான செயலாகும். ஈகையினைச் செய்வதால் மேலுலகம் அடைய முடியாதென்று சொன்னாலும் ஈதலே நன்று.

**3. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலன்உடையான் கண்ணே உள.**

[ப-ரை] இலன் - யாம் ஏதுமில்லாமல் வறுமையிலுள்ளோம், என்னும் - என்று கூறும், எவ்வம் - இழிவினை, உரையாமை - யாசிப்பவன் பிறரிடத்தில் போய்ச் சொல்லாதிருக்குமாறு, ஈதல் - நிறைய கொடுக்கும் தன்மை, குலன் - நற்குடியில், உடையான் கண்ணே - பிறப்பினை உடையவனிடத்தில், உள - உண்டாகி இருப்பதாகும்.

[க-ரை] தான் வறியவன் என்று சொல்லி வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் கொடுப்பதே நல்ல குடியில் பிறந்தவர்களிடத்தில் காணப்படும் நற்குணமாகும்.

**4. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகம் காணும் அளவு.**

[ப-ரை] இரந்தவர் - யாசித்தவரது, இன்முகம் - [யாசித்துப் பொருள் பெற்றதால் உண்டாகும்] இனிய முகத்தினை, காணுமளவு - பார்க்கின்றவரை, இரக்கப் படுதல் - யாசிப்பதேயல்லாமல் யாசிக்கப்படுதலும், இன்னாது - இன்பம் தருவது ஆகாது [துன்பமேயாகும்].

[க-ரை] யாசிப்பது மட்டும் அல்லாமல் யாசிக்கப் படுவதும் இன்பம் தருவது அல்ல; எதுவரைக்கும் என்றால், ஒரு பொருளை யாசிப்பவரது இனிய முகத்தினைக் காணுகின்றவரைக்கும் என்பதாகும்.

**5. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்.**

[ப-ரை] ஆற்றுவார்- ஆற்றல் பெற்ற தவத்தோருக்கு, ஆற்றல் - வல்லமை என்னவென்றால், பசி - தமக்குண்டான பசியை, ஆற்றல் - பொறுத்துக் கொள்ளுதலாகும் [பொறுத்துக் கொள்ளும் வல்லமையாகும்] அதுவும், அப்பசியை - அப்படிப்பட்ட பசியை, மாற்றுவார் - உணவு

ளித்து நீக்குகின்றவர், ஆற்றலின் - பெற்றிருக்கும் வல்லமைக்கு, பின் - பின்னேயாகும்.

[க-ரை] தவம் செய்பவர்களுக்கு வல்லமை எதுவென்றால் தமக்கு உண்டாகும் பசியைப் பொறுத்துக் கொள்ளுதலாகும். அந்த வல்லமையும் பொறுத்தற்கரிய அப்பசியைப் போக்குபவரது வல்லமைக்குப்பின் என்று சொல்லப்படும்.

6. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

[ப-ரை] அற்றார் - ஒன்றுமில்லாதவரது, அழி - மிகுந்த, பசி - பசிப்பிணை, தீர்த்தல் - நீக்குதல் வேண்டும், அஃது - அப்படிச் செய்வதானது, பொருள் - பொருளினை, பெற்றான் - பெற்று வைத்திருக்கும், ஒருவன் - ஒருவன், வைப்புழி - அப்பொருளைத் தனக்குப் பயன்படுமாறு வைக்க வேண்டிய இடம் அதுவேயாகும்.

[க-ரை] வறியவர்களது கொடிய பசியை அறம் நோக்கிப் போக்குதல் வேண்டும். அப்படிச் செய்வதாவது, ஒருவன் தான் பெற்றிருக்கும் பொருளினைத் தனக்குப் பயன்படும்படியாக வைக்கும் இடம் என்று கருதப்படும். அந்த அறமே இடமாகும்.

7. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

[ப-ரை] பாத்து - பகுத்துக் கொடுத்து, ஊண் - பிறரும் தானும் உண்ணுதலை, மரீஇயவனை - மேற்கொண்டு பழகிய ஒருவனை, பசி - பசி, என்னும் - என்று சொல்லப்படும், தீப்பிணி - கொடிய நோய், தீண்டல் - தீண்டுதல், அரிது - இல்லையாகும்.

[க-ரை] எப்போதும் பகுத்துப் பிறர்க்குக் கொடுத்து உண்ணப் பழகிய ஒருவனை, பசி என்று சொல்லப்படும் கொடிய நோய் தீண்டுதல் இல்லை.

8. ஈத்துஉவக்கும் இன்பம் அறிபார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்க ணவர்.

[ப-ரை] தாம் - தங்கள், உடைமை - உடைமையாகிய பொருளினை, வைத்திழக்கும் - பத்திரமாக வைத்துப் பிறகு இழந்து விடுகின்ற, வன்கணவர் - இரக்கமில்லாதவர்கள், ஈத்து - வறுமையாளர்களுக்குக் கொடுத்து, உவக்கும் அவர் மகிழ்கின்ற மகிழ்ச்சியினால், இன்பம் - தமக்கு வரும் இன்பத்தினை, அறியார் கொல் - அறிய மாட்டார் களோ?

[க-ரை] ஈதலினைச் செய்யாமல் தம்முடைய பொருளினைப் பத்திரமாக வைத்து இழந்துவிடுகின்ற இரக்கமற்றவர்கள், வறியவர்களுக்குக் கொடுத்து அவர்கள் மகிழ்வதனால் தமக்கு வரும் இன்பத்தினை அறிய மாட்டார்களோ?

9. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

[ப-ரை] நிரம்பிய - நிறைய சேர்த்து வைத்து, தாமே - மட்டும், தமியர் - தனித்திருந்து, உணல் - உண்ணுகின்ற தன்மையானது, மன்ற - உறுதியாக, இரத்தலின் இன்னாது - பிறரிடம் சென்று யாசிப்பதனைவிடக் கொடுமை பயப்ப தொன்றாகும்.

[க-ரை] நிறைய சேர்த்து வைத்துத் தாமே உண்டு மகிழ்கின்ற செயல், பிறரிடத்தில் சென்று யாசிப்பதனை விடத் துன்பம் தருவதாகும்.

10. சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

[ப-ரை] சாதலின் - இறத்தலைப்போல, இன்னாதது இல்லை - துன்பம் தருவது வேறு எதுவும் இல்லையாகும், அதூஉம் - அப்படிப்பட்ட சாவும், ஈதல் - வறிய வர்களுக்குக் கொடுத்தல் என்பது, இயையாக்கடை -

முடியாமல் இருக்கின்றபோது, இனிது - இன்பம் தருவதாகும்.

[க-ரை] சாதல்போலத் துன்பம் தருவது வேறு எதுவும் இல்லை. அப்படிப்பட்ட சாதலும், வறியவர்களுக்குக் கொடுக்க முடியாதபோது இன்பம் தருவதாகும்.

## 24. புகழ்

[வாழ வேண்டிய முறையில் வாழ்ந்து
நிலைத்து நிற்கும் புகழினைப் பெறுதல்]

**1. ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.**

[ப-ரை] ஈதல் - ஈகையினைச் செய்து, இசைபட - அதனால் புகழ் உண்டாக, வாழ்தல் - வாழ்தல் வேண்டும், அது - அத்தகைய புகழ், அல்லது - அல்லாமல், உயிர்க்கு - மக்களுயிர்க்கு, ஊதியம் இல்லை - பயனாக இருப்பது வேறு எதுவும் இல்லை.

[க-ரை] வறியவர்களுக்கு ஈதலைச் செய்வாயாக; அதனால் புகழெய்தி வாழ்வாயாக; அப்புகழல்லாமல் மக்களுயிர்க்குப் பயன் வேறு எதுவும் இல்லை.

**2. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.**

[ப-ரை] உரைப்பார் - உலகில் சிறப்பாகச் சொல்லுவார்கள், உரைப்பவை - சொல்லுபவை, எல்லாம் - எல்லாம், இரப்பார்க்கு - யாசிப்பவர்களுக்கு, ஒன்று - ஒரு பொருளினை, ஈவார்மேல் - ஈதல் செய்பவர்கள் மேல், நிற்கும் புகழ் - நிற்கின்ற புகழேயாகும்.

[க-ரை] உலகத்தில் பெருமையாகச் சொல்லுபவர்கள் சொல்லுபவையெல்லாம் வறுமையால் இரப்பவர்களுக்கு

(யாசிப்பவர்களுக்கு) ஈதலினைச் செய்வதனால் ஒருவற்கு உண்டாகும் புகழேயாகும்.

3. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

[ப-ரை] ஒன்றா - தனக்கு ஒப்பில்லாத, உயர்ந்த, உயர்வான, புகழ் - புகழ், அல்லால் - அல்லாமல், உலகத்து - இவ்வுலகிலே, பொன்றாது - அழிவில்லாமல், நிற்பது - நிலைத்து நிற்பது, ஒன்று இல் - பிறிதொன்று இல்லை.

[க-ரை] நிகரில்லாத ஓங்கிய புகழல்லாமல் இந்த உலகத்தில் அழியாமல் நிற்பது வேறு எதுவும் இல்லை.

4. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

[ப-ரை] நிலவரை - பரந்த இப்பூமியின் எல்லைக்குள், நீள் - அழியாது நிற்கும், புகழ் புகழினை, ஆற்றின்- ஒருவன் உண்டாக்கிக் கொள்ளுவானாகில், புத்தேள் உலகம் - தேவர்கள் உலகமானது, புலவரை - தன்னிடம் வந்த புலவர்களை, போற்றாது - போற்றிப் பாராட்டாது.

[க-ரை] ஒருவன் இப்பூமியின் எல்லைக்குள் அழியாத புகழினை உண்டாக்கிக் கொள்ளுவானேயானால், புத்தேள் உலகம் அவனையல்லாமல் வருகின்ற புலவர்களைப் பாராட்டாது.

5. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது.

[ப-ரை] நத்தம் [ஆகும்] - புகழுடம்பிற்குப் பெருக்கமாகும், கேடும் - கெடுதியும், உளது - அப்புகழ் உடம்பு நிலைத்து நிற்பதற்கு, ஆகும் - ஆகின்ற, சாக்காடும் இறத்தலும், வித்தகர்க்கு - சிறந்த ஆற்றல்படைத்தவர்க்கு, அல்லால் - அல்லாமல், அரிது - மற்றையோருக்கு முடியாததாகும். [போல் அசை நிலை.]

[க-ரை] புகழுடம்பிற்குப் பெருக்கமாகும் கெடுதியும், அப்புகழுடம்பு நிலைத்து நிற்பதற்கு இறத்தலும், சிறந்த பல்கலைத் திறமையுடையவர்களுக்கு அல்லாமல் மற்றை யோருக்கு முடியாததாகும்.

6. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

[ப-ரை] தோன்றின் - மக்களாகப் பிறந்தால் புகழொடு - புகழடைவதற்கேற்ற குணங்களுடன், தோன்றுக - பிறத்தல் வேண்டும், அஃது - அவ்வாறு, இலார் - அத்தன்மை இல்லாதவர்கள், தோன்றலின்-மனித ராய்ப் பிறத்தலைவிட, தோன்றாமை நன்று - பிறவா திருத்தலே நல்லதாகும். [விலங்காய்ப் பிறத்தல் நன்று.]

[க-ரை] மக்களாகப் பிறத்தல் புகழுண்டாவதற்கான குணங்களோடு பிறத்தல் வேண்டும். அக்குணம் இல்லா தவர்கள் மக்களாகப் பிறப்பதைவிடப் பிறவாதிருத்தலே நல்லதாகும்.

7. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

[ப-ரை] புகழ் - தமக்குப் புகழ், பட - உண்டாகும் படியாக, வாழாதார் - வாழ முயற்சிக்காதவர்கள், தம் நோவார் - தம்மையே நொந்து கொள்ளாமல், தம்மை - தங்களை, இகழ்வாரை - இகழ்பவர்களை, நோவது எவன் - நொந்து கொள்வது எதனைக் கருதி?

[க-ரை] தமக்குப் புகழ் உண்டாகும்படி வாழாத வர்கள் அதுபற்றிப் பிறர் இகழும்போது, அவ்வாறு இகழ்பவர்கள் மீது வருத்தப்படுதல் ஏனோ?

8. வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின்.

[ப-ரை] இசை - புகழ், என்னும் - என்று கூறப்படு கின்ற, எச்சம் - எஞ்சி நிற்பதாகிய எச்சத்தினை, பெறா

விடின்-அடையாமல் போவாராயின், வையத்தார்க்கு-உலகில் உள்ளோருக்கு, எல்லாம் - எல்லாம், வசை எனப்-அதுவேதான் இகழ்ச்சியாகுமென்று உயர்ந்தோர் உரைப்பர்.

[க-ரை] இசை (புகழ்) என்று இருக்கக்கூடிய எச்சத்தினைப் பெறாவிட்டால், உலகில் உள்ளவர்களுக்கெல்லாம் அதுவே வசையாகும் என்று உயர்ந்தோர் சொல்லுவார்கள்.

9. வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம்.

[ப-ரை] இசை - புகழினை, இலா - அடையாத, யாக்கை - உடம்பினை, பொறுத்த - தாங்கிய, நிலம்-நிலத்தினில், வசை இலா - பழித்தல் இல்லாத, வண் - வளப்பமான, பயன் - விளைச்சல், குன்றும்-குறைந்து விடும்.

[க-ரை] புகழினை அடையாத உடம்பினைத் தாங்கிய நிலத்தில் பழிப்பில்லாத வளப்பமான விளைச்சல் குன்றிவிடும்.

10. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

[ப-ரை] வசை - இகழ்ச்சி, ஒழிய - தம்மிடம் இல்லாதபடி, வாழ்வாரே - வாழ்பவர்களே, வாழ்வார் - உயிருடன் வாழ்பவராவார்கள், இசை - புகழ், ஒழிய - இல்லாமல், வாழ்வாரே - வாழ்பவர்களே, வாழாதவர் - வாழாதவர்கள் ஆவார்கள்.

[க-ரை] தம்மிடம் இகழ்ச்சியில்லாமல் வாழ்பவர்களே உயிரோடு வாழ்பவராவார்கள். புகழ் உண்டாகாமல் வாழ்பவர்களே வாழாதவர்கள் ஆவார்கள்.

# துறவற இயல்

## 25. அருள் உடைமை

[உலகில் உள்ள எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் கொண்டிருத்தல்]

1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

[ப-ரை] செல்வத்துள் - செல்வங்களின் பலவற்றிலும், செல்வம் - மேலான செல்வம் என்பது, அருட்செல்வம் - அருளால் வருகின்ற செல்வமேயாகும், பொருட்செல்வம் - பொருளால் வரும் செல்வங்கள் என்பவை, பூரியார் கண்ணும் - உள இழிந்தவர்களிடத்திலும் உண்டு.

[க-ரை] செல்வங்களுக்குள் சிறந்த செல்வமானது அருளால் வரும் செல்வமேயாகும். அதுவல்லாமல், பிற செல்வங்கள் பொருளால் வருபவை, இழிந்தவர்களிடத்திலும் இருப்பதாகும்.

2. நல்ஆற்றான் நாடி அருள்ஆள்க; பல்ஆற்றான்
தேரினும் அஃதே துணை.

[ப-ரை] நல்லாற்றான் - நல்ல நெறிகளிலே கண்டு, நாடி - ஆராய்ந்து, அருள் - அருளினை, ஆள்க - உடையவர்களாக - ஆகுக, பல் - பலவகைப்பட்ட, ஆற்றான் - நெறிகளில், தேரினும் - ஆராய்ந்து பார்த்தாலும், துணை - துணையாக இருப்பது, அஃதே - அந்த அருளேயாகும்.

[க-ரை] பல நெறிகளிலும் நின்று ஆராய்ந்து, அருளினைத் துணையாகக் கொள்ளுவார்களாக; துணையான

அறம் அருளேயாகும். பல வகைப்பட்ட நெறிகளில் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே அன்றிப் பிறிது இல்லை.

**3. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்.**

[ப-ரை] இருள் சேர்ந்த - இருள் மயமான, இன்னா - துன்பமான, உலகம் - உலகத்தில், புகல் - போய்ச்சேர்தல், அருள் சேர்ந்த - அருளினைக் கொண்ட, நெஞ்சினார்க்கு - நெஞ்சினையுடைய பெரியோர்களுக்கு - இல்லை, இல்லையாகும்.

[க-ரை] இருள் நிறைந்த துன்ப உலகத்தில் சென்று புகுதல் என்பது அருள் நிறைந்த நெஞ்சினையுடையவர்களுக்கு இல்லை.

**4. மன்உயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்என்ப தன்உயிர் அஞ்சும் வினை.**

[ப-ரை] மன் - நிலைத்து நிற்பதாகிய, உயிர் - உயிர்களை, ஓம்பி - பாதுகாத்து, அருள் ஆள்வார்க்கு - அருளினை மேற்கொண்டவர்களுக்கு, தன் - தன்னுடைய, உயிர் - உயிர், அஞ்சும் - அஞ்சுவதற்குக் காரணமான, வினை - தீமையான வினைகள், இல் என்ப - உண்டாகாது [சேராது] என்று அறிந்தோர் கூறுவர்.

[க-ரை] நிலையான உயிர்களைப் போற்றி அவற்றினிடம் அருளுடையவனுக்குத் தன் உயிர் அஞ்சக் கூடிய தீவினைகள் உண்டாகா என்று அறிந்தோர் சொல்லுவர்.

**5. அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும் மல்லல்மா ஞாலம் கரி.**

[ப-ரை] அருள் ஆள்வார்க்கு - அருளினைக் கொண்ட மேலானவர்களுக்கு, அல்லல் - துன்பமானது, இல்லை - உண்டாவதில்லை, (அந்த உண்மைக்கு) வளி - காற்று, வழங்கும் - உலவுகின்ற, மல்லல் - வளப்பம் நிறைந்த,

மாஞாலம் - பெரிய இப்பூமியில் வாழ்பவர்கள், கரி - சான்று ஆவார்கள்.

[க-ரை] அருளுடையவர்களுக்குத் துன்பம் உண்டாகாது. காற்று இயங்குகின்ற வளப்பத்தினையுடைய பெரிய ஞாலத்தில் வாழ்கின்ற மக்களே அதற்குச் சான்றாவார்கள்.

6. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்ப அருள்நீங்கி
அல்லவை செய்துஒழுகு வார்.

[ப-ரை] அருள் - அருளினை, நீங்கி - தவிர்த்து, அல்லவை - தீமையென்னும் கொடுமைகளை, செய்து ஒழுகுவார் - செய்து நடப்பவர்கள், பொருள் நீங்கி - உறுதிப் பொருள்களை விட்டு நீங்கி, பொச்சாந்தார் - தாம் துன்புறுவதை மறந்தவர், என்ப - என்று உயர்ந்தோர் கூறுவார்.

[க-ரை] உயிர்களிடம் காட்டப்படும் அருளிலிருந்து நீங்கிக் கொடுமைகளைச் செய்து நடப்பவர்கள் உறுதிப் பொருளைச் செய்யாமல் தாம் துன்புறுகின்றமையை மறந்தவர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

7. அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. [இல்லார்க்கு

[ப-ரை] பொருள் - செல்வம் என்னும் பொருள், இல்லார்க்கு — இல்லாதவர்களுக்கு, இவ் உலகம் - இந்த உலகத்து இன்பம், இல்லாகியாங்கு - இல்லை ஆனாற்போல, அருளில்லார்க்கு - அருள் இல்லாதவர்களுக்கு, அவ்வுலகம் - அந்த உலகப் பேரின்பம், இல்லை - இல்லையாகும்.

[க-ரை] பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகத்து இன்பம் இல்லையாதலைப் போல, உயிர்கள்மீது அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலகப் பேரின்பம் இல்லையாகும்.

8. பொருள்அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது.

[ப-ரை] பொருள் - செல்வம், அற்றார் - இல்லாமல் வறியரானவர், ஒருகால் - மற்றொரு காலத்தில், பூப்பர் -

செல்வம் பெற்றுத் திகழ்வர், அருள் - அருள், அற்றார் - (இல்லாமல்) அற்றவர்கள், அற்றார் - அழிந்தவரே யாவர், மற்று - மீண்டும், ஆதல் அரிது - (பிறகு எக்காலத் திலும்) ஆவது இல்லை.

[க-ரை] வறுமையிலிருந்தோர் ஒரு காலத்தில் செல்வத்தில் மிகுந்தோர் ஆவர். அவ்வாறு இல்லாமல் அருள் அற்றவர் அழிந்தோரேயாவர். பின்பு ஒரு காலத்திலும் அருளுடையவர் ஆவது இல்லை.

9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

[ப-ரை] அருளாதான் - அருளில்லாதவன், செய்யும் அறம் - செய்கின்ற அறத்தினை, தேரின் - ஆராய்ந்து பார்த்தால், தெருளாதான் - முனிவர்களுக்குரிய ஞான மில்லாதவன், மெய்ப் பொருள் - மெய்ப் பொருளினை, கண்டற்று - உணர்ந்து கண்டது போன்றதாகும்.

[க-ரை] உயிர்களிடத்தில் அருளில்லாதவன் செய் கின்ற அறத்தினை ஆராய்ந்து பார்த்தால், ஞானம் இல்லாதவன் ஒரு கால் மெய்ப்பொருளை உணர்ந்தது போன்றதாகும்.

10. வலியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

[ப-ரை] தான் - அருளில்லாதவன், தன்னின் - தன்னை விட, மெலியார்மேல் - எளியவர்கள்மேல், செல்லுமிடத்து - அவர்களை நலியச் செல்லும் போது, வலியார் - தன்னை விட வலிமையுடையவர், முன் - முன்னே, தன்னை - தான் பயந்து நிற்கும் தன்மையினை, நினைக்க - நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

[க-ரை] அருளில்லாதவன் தன்னைவிட எளியவர்கள் மீது அவர்களை நலியச் செய்யத்தான் செல்லும்போது,

தன்னைவிட, வலிமையுடையவர்கள் தன்னை நலியச் செய்ய வரும்போது, 'தான் அஞ்சி நிற்பதை நினைத்தல் வேண்டும்.

## 26. புலால் மறுத்தல்

[அருள் உடையவர்களுக்குப் பொருந்தாத செயலாகும்—கொலைப் பாவத்திற்குக் காரணமானது]

1. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

[ப-ரை] தன் - தன்னுடைய, ஊன் - உடம்பினை, பெருக்கற்கு - பெரிதாக வளர்ப்பதற்காக, தான் - தான், பிறிது - மற்றொன்றின், ஊன் - உடம்பினை, உண்பான் - உண்பவன், எங்ஙனம் - எவ்வாறு, அருள் ஆளும் - அருளினை நடத்துவான்? (நடத்த மாட்டான்.)

[க-ரை] தன்னுடைய உடம்பினை வளர்ப்பதற்காக, தான் மற்றொரு உயிரின் உடம்பினைத் தின்பவன் எவ்வாறு அருளினை நடத்துவான்?

2. பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி
ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு.

[ப-ரை] பொருள் - வைத்துள்ள பொருளினால், ஆட்சி - பயனடைதல், போற்றாதார்க்கு - அதனைப் போற்றிக் காப்பாற்றாதவர்களுக்கு, இல்லை - இல்லையாகும், ஆங்கு - அதுபோல, அருளாட்சி - அருளினால் பயனடைதல், ஊன் - புலால், தின்பவர்க்கு - உண்பவர்களுக்கு, இல்லை - இல்லையாகும்.

[க-ரை] பொருளால் பயனடைதல் அதனைக் காப்பாற்றாதவர்களுக்கு இல்லை. அதுபோல அருளால் பயனடைதல் என்பது ஊன் தின்பவர்களுக்கு இல்லை.

3. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது
உடல்சுவை உண்டார் மனம். [ஒன்றன்

[ப-ரை] ஒன்றன் - பிறிதோர் உயிரின், உடல் - உடலினை, சுவையுண்டார் - சுவைபட உண்டவர், மனம் - மனம், படை - கொலைக்கருவியினை, கொண்டார் - கையில் கொண்டவருடைய, நெஞ்சம் போல் - நெஞ்சத்தினைப் போல, நன்று - அருளினை, ஊக்காது - நினைக்காது.

[க-ரை] கொலைக் கருவியினைக் கையில் வைத்திருப்பவர்கள் மனம் கொலை செய்வதையே நோக்கும்-அருளினை நோக்காது; அதுபோல, புலாலைச் சுவைபட உண்பவர் மனம் ஊனையே நோக்கும்; அருளினை நோக்காது.

4. அருள்அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்
பொருள்அல்லது அவ்வூன் தினல்.

[ப-ரை] அருள் - அருள் என்பது, யாது - எது, எனின் - என்று கேட்டால், கொல்லாமை - கொலை செய்யாமையேயாகும், அல்லது - அந்த அருள் அல்லாதது யாதென்றால், கோறல் - கொல்லுதலாகும், அவ்வூன்தினல் - அந்த ஊனினைத் தின்னுதல், பொருள் - அறம், அல்லது - அல்லாததாகும்.

[க-ரை] அருள்யாது என்று கேட்டால் கொல்லாமையேயாகும். அருள் அல்லாதது யாது என்றால் கொலை செய்வதேயாகும். கொன்ற ஊனைத் தின்னுதல் தீமையாகும்.

5. உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

[ப-ரை] உயிர் - உயிர்கள், நிலை - உடம்புகளிலே நிற்பதானது, ஊன் - ஊனினை, உண்ணாமை - உண்ணாமையினால், உள்ளது - உள்ளதாகும், (ஆதலால்) உண்ண - அந்த உயிர்களைக் கொன்று ஊனை ஒருவன் உண்ணுவானானால், அளறு - அவனை விழுங்கிய துன்ப உலகம்,

அண்ணாத்தல் - பிறகு உமிழ்தற்கு வாயினைத் திறத்தல், செய்யாது - செய்யாது என்பதாகும்.

[க-ரை] ஊன் உண்ணாமை என்கின்ற அறத்தினால் தான் உயிர் உடம்பில் இருக்கின்றது. அவ்வுயிர் நிலை குலைய, ஒருவன் ஊன் உண்ணுவானேயானால் அவனை விழுங்கிய துன்ப உலகம் மீண்டும் அவனை உமிழாது.

6. தினற்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

[ப-ரை] தினல் பொருட்டால் - தின்பதற்காக வேண்டி, உலகு - உலகத்தார், கொள்ளார் - ஊனைக் கொள்ளவில்லை, எனின்-என்றால், விலைப் பொருட்டால் - விலைப் பொருளுக்காக வேண்டி, ஊன் - ஊனினை, தருவார் - விற்பவர், யாரும் இல்-யாரும் இல்லையாகும்.

[க-ரை] ஊன் தின்னுவதன் காரணமாக உலகம் கொல்லாதாயின் விலைப் பொருட்டால் (பொருள் காரணமாக) ஊன் தருபவர்கள் யாரும் இல்லை. விற்பவர் கள் யாரும் இல்லை.

7. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன் புண்அது உணர்வார்ப் பெறின்.

[ப-ரை] புலால் - புலாலானது [ஊன்], பிறிது - வேறு ஒன்றன் - ஒன்றனுடைய, புண் - புண்ணாகும், அது - அந்த உண்மையை, உணர்வார் - உணர்ந்தறிபவரை, பெறின் - உலகம் பெற்றால், உண்ணாமை ஊனினை உண்ணா திருத்தல், வேண்டும் - வேண்டப்படுவதாகும்.

[க-ரை] புலால் என்பது பிறிதோர் உடம்பின் புண்ணாகும். அது தூய்மையானது அன்று. இதனை அறிவாரைப் பெற்றால் அதனை உலகம் உண்ணாமை வேண்டும்.

8. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

[ப-ரை] செயிரின் - அஞ்ஞானமான குற்றத்தினின்றும், தலைப்பிரிந்த - விட்டு நீங்கிய, காட்சியார் - மெய்யறிவுடையார், உயிரின் - பிற உயிரிலிருந்து, தலைப்பிரிந்த - நீக்கப்பட்டு வந்த, ஊன் உண்ணார் - ஊனினை உண்ண மாட்டார்கள்.

[க-ரை] அஞ்ஞானமாகிய குற்றத்திலிருந்து நீங்கிய அறிவினையுடையவர்கள், ஓர் உயிரிலிருந்து நீங்கி வந்த ஊனினை உண்ணமாட்டார்கள்.

9. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

[ப-ரை] அவி - நெய் முதலானவைகளை, சொரிந்து - நெருப்பினில் ஊற்றி, ஆயிரம் - ஆயிரம், வேட்டலின் - வேள்வியினை [யாகம்] செய்வதைவிட, ஒன்றன் - ஒரு விலங்கினது, உயிர் - உயிரினை, செகுத்து - போக்கி, உண்ணாமை நன்று - அந்தப் புலாலை உண்ணாதிருத்தல் நல்லதாகும்.

[க-ரை] நெய் முதலியவற்றைச் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட ஒரு விலங்கின் உயிரினைப் போக்கி அதன் ஊனை உண்ணாமை நல்லதாகும்.

10. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

[ப-ரை] கொல்லான் - எந்த உயிரையும் கொல்லாதவனாகி, புலாலை - புலால் உண்ணுதலை, மறுத்தானை - மறுத்தவனுமான அருளாளனை, எல்லா-எல்லா, உயிரும் - உயிர்களும், கைகூப்பித் தொழும் - கைகுவித்துத் தொழும்.

[க-ரை] ஓர் உயிரினையும் கொல்லாதவனுமாகி புலாலையும் உண்ணாதவனை எல்லா உயிரும் கை கூப்பித் தொழும்.

# 27. தவம்

## [தவம் இன்னதென்பதும் தவசிகளின் சிறப்பும், ஆற்றலும்]

1. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

[ப-ரை] தவத்திற்கு - தவத்தினுக்கு, உரு - உருவமானது [என்னவென்றால்] உற்ற - தம் உயிர்க்கு வருகின்ற, நோய் - துன்பங்களை, நோன்றல் - பொறுத்துக் கொள்ளுதலும், உயிருக்கு - மற்ற உயிர்களுக்கு, உறுகண் - துன்பத்தினை, செய்யாமை - செய்யாதிருத்தலுமாகும், அற்றே - தவம் என்பது அவ்வளவுதான்.

[க-ரை] தவத்திற்கு வடிவம் என்னவென்றால், தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுவதும் தாம் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருப்பதுவுமே யாகும்.

2. தவமும் தவம்உடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதுஇலார் மேற்கொள் வது.

[ப-ரை] தவமும் - தவத்தினைச் செய்வதும், தவமுடையவர்க்கு - தவத்தன்மை [முன்தவம்] உடையவர்களுக்கே, ஆகும் - உண்டாவதாகும், அதனை - அத்தவத்தினை, அஃது - அத்தவப்பிறப்பு, இலார் - இல்லாதவர்கள், மேற்கொள்வது - செய்ய முயற்சிப்பது, அவம் - வீணான செயலாகும்.

[க-ரை] தவத்தினை மேற்கொள்ளுவதென்பதும் முற்பிறவித் தவத் தன்மையுடையவர்களுக்கேயாகும். அத் தவப் பிறவி இல்லாதவர்கள் தவம் செய்ய முயல்வது பயனற்ற முயற்சியேயாகும்.

**3. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.**

[ப-ரை] மற்றையவர்கள் - இல்லறத்தினை மேற்கொண்டவர்கள், துறந்தார்க்கு - துறவிகளுக்கு, துப்புரவு வேண்டி - உணவு முதலியன கொடுத்துதவ விரும்பி, தவம்- தவம் செய்வதை, மறந்தார் கொல் - மறந்து விட்டார்கள் போலும்.

[க-ரை] இல்லறத்தினை மேற்கொண்டவர்கள் துறவிகளுக்கு உணவு முதலியன கொடுத்து உதவ வேண்டித் தவம் செய்வதை மறந்துவிட்டார்கள் போலும்!

**4. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.**

[ப-ரை] ஒன்னார் - பகைவரை, தெறலும் - அழியச் செய்தலையும், உவந்தார் - தாம் விரும்பினவரை, ஆக்கலும் - மேலாகச்செய்தலையும், எண்ணின் - தவம் செய்வார் மனத்தில் எண்ணுவாரானால், தவத்தான்வரும் - தமது தவ வலிமையால் அவருக்கு அந்த ஆற்றல் வருவதாகும்.

[க-ரை] பகைவரை அழித்தலும் விரும்பினவரை உயரச் செய்தலும் ஆகிய இவ்விரண்டினையும் தவசிகள் நினைத்தால் தவ வலிமையால் அவருக்கு நடைபெறுவனவாகும்.

**5. வேண்டிய வேண்டியாங்கு எய்தலான் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.**

[ப-ரை] வேண்டிய - தாம் அடைவதற்கு விரும்பிய பயன்களை, வேண்டியாங்கு-விரும்பியபடியே, எய்தலான்- பெறுதலால், செய் - செய்யப்படும், தவம் - தவமானது, ஈண்டு - இப் பிறப்பில், முயலப்படும் - முயன்று செய்யப் படுவதாகும்.

[க-ரை] வேண்டிய பயன்களை வேண்டியபடியே பெறலாம் ஆனபடியால் செய்யப்படுவதாகிய தவம் இப் பிறப்பில் முயன்று செய்யப்படும்.

6. தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.

[ப-ரை] தவம் - தவத்தினை மேற்கொண்டு, செய்வார் - செய்பவர்கள், தம் கருமம் - தமக்கு உரித்தான செயலினை, செய்வார் - செய்பவராவார்கள், மற்றலார் - மற்றபடி தவம் செய்யாதவர்கள், ஆசையுட்பட்டு - ஆசைகளில் அகப்பட்டுக் கொண்டு, அவம் - தமக்குத் துன்பத்தினை, செய்வார் - செய்து கொள்வார்கள்.

[க-ரை] தம் கருமம் செய்பவர்கள் யாரென்றால், துறந்து தவத்தினைச் செய்பவர்களே ஆவர். மற்றவர்கள் எல்லாம் ஆசையென்பதில் அகப்பட்டுத் தமக்குத் துன்பம் செய்பவராவர்.

7. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும்துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

[ப-ரை] சுட - தீயினில் வைத்துச்சுட [புடத்தில்] சுடரும் - ஒளிவிடுகின்ற, பொன்போல் - மாசு நீங்கிய பொன்னினைப் போல, நோற்கிற்பவர்க்கு - தவம்செய்யும் தவசிகளுக்கு, துன்பம் - துன்பமானது, சுடச்சுட - தம்மைச் சுடச்சுட [மிக மிகத் துன்புறுத்திக் கொள்ள] ஒளிவிடும் - ஒளியாகிய மெய்யுணர்வு பிறக்கும்.

[க-ரை] தீயினில் சுடச்சுட பொன்னானது மாசு நீங்கி ஒளி மிகுந்து தோன்றுவது போல, தவம் செய்ய வல்லவர்களுக்குத் துன்பம் நீங்கி ஞானம் பிறக்கும்.

8. தன்உயிர் தான் அறப் பெற்றானை ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும்.

[ப-ரை] தன் - தன்னுடைய, உயிர் - உயிரினை, தான் - தனக்கு, அறப் பெற்றானை - உரித்தாகப் பெற்ற தவசியை, ஏனைய - அவ்வாறு பெறாமல் இருக்கின்ற மற்ற, மன்உயிர் - நிலைத்திருக்கும்உயிர்கள், எல்லாம் - எல்லாம், தொழும் - தொழுது வணங்கும்.

[க-ரை] தன் உயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்ற தவசியை அவ்வாறு பெறாதவைகளாகிய மற்ற உயிர்கள் எல்லாம் தொழும்.

9. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

[ப-ரை] நோற்றலின் - தவம் என்னும் நோன்பினால் வருவதாகிய, ஆற்றல் தலைப் பட்டவர்க்கு - வலிமையினைப் பெற்ற தவசிகளுக்கு, கூற்றம் - உயிர்கொள்ளும் கூற்றுவனை, குதித்தலும் - கடத்தலும், கைகூடும் - உண்டாவதாகும்.

[க-ரை] தவம் என்னும் நோன்பினால் வருவதாகிய ஆற்றலினைப் பெற்றவர்களுக்குக் கூற்றுவனைக் கடத்தலும் இயலும்.

10. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

[ப-ரை] இலர் - பொருளில்லாத வறுமையாளர், பலர் - பலர், ஆகிய - ஆகி இருப்பதற்கு, காரணம் - காரணம் [என்னவென்றால்] நோற்பார் - நோன்பு நோற்றுத் தவம் செய்வார், சிலர் - சிலராகவும், நோலாதவர் - அதனைச் செய்யாதவர், பலர் - பலராகவும் இருப்பதேயாகும்.

[க-ரை] உலகத்தில் செல்வந்தர்கள் சிலராகவும் வறுமையாளர்கள் பலராகவும் இருப்பதற்குக் காரணம் யாதென்றால், தவம் செய்வார் சிலராகவும் செய்யாதவர்கள் பலராகவும் இருப்பதேயாகும்.

# 28. கூடாவொழுக்கம்

[தவத்தோடு பொருந்தாத சிற்றின்ப இச்சையால் தீமை புரிதலாம்]

1. வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

[ப-ரை] வஞ்ச - வஞ்சனையான, மனத்தான் - மனத்தினையுடையவன்செய்யும், படிற்று - மறைந்த, ஒழுக்கம் - தீய ஒழுக்கத்தினை, பூதங்கள் - உடம்பாகவே அவனுடன் இருக்கும் பூதங்கள், ஐந்தும் - ஐந்தும், அகத்தேநகும் - தமக்குள்ளே நகைத்துக் கொள்ளும்.

[க-ரை] வஞ்சனை பொருந்திய மனத்தினை உடையவனது மறைவான தீய ஒழுக்கத்தினைக் கண்டு அவனோடு கலந்து நிற்கின்ற ஐந்து பூதங்களும் தம்முள்ளே நகைக்கும்.

2. வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

[ப-ரை] தான் - தான் நன்கு அறிந்த, குற்றம் - குற்றத்தினிடத்தே, தன் - தனது, நெஞ்சம் - நெஞ்சமானது, படின் - தாழ்ந்து விடுமானால், வான் - வானம் அளவு, உயர் - உயர்ந்த, தோற்றம் - சிறப்பான வேடத் தோற்றமானது, எவன் - என்ன பயனை, செய்யும் - செய்ய முடியும்?

[க-ரை] தான் குற்றம் என்று அறிந்த அதனைச் செய்ய தனது நெஞ்சம் போய்த் தாழ்ந்து விடுமானால் வானம் அளவு உயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும்?

3. வலிஇல் நிலைமையான் வல்உருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

[ப-ரை] வலி - மனத்தினை அடக்கும் வலிமை, இல் - பெற்றிராத, நிலைமையான் - தன்மையினையுடையவன்,

வல் - வலிமையுடையார், உருவம் - தவ வேடத்தினைத் தாங்கி, [தவறு செய்தல்] பெற்றம் - பசுவானது, புலியின் - புலியினுடைய, தோல்போர்த்து - தோலினைப் போர்த்திக் கொண்டு, மேய்ந்தற்று - அயலான் பயிரினை மேய்ந்த செயல் போன்றதாகும்.

[க-ரை] மனவலிமை இல்லாதவர்கள் வலிமையுடையார் போலத் தவ வேடங் கொண்டு ஒழுக்கக் கேட்டினைச் செய்தல் எப்படிப்பட்டதென்றால், பசுவானது புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு அயலானது பயிரை மேய்ந்தது போன்றதாகும்.

4. தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

[ப-ரை] தவம் - தவசிகள் வேடத்திலேயே, மறைந்து - தன்னை மறைத்துக் கொண்டு, அல்லவை - தவமல்லாத தீயசெயல்களை, செய்தல் - செய்தல் என்பது, வேட்டுவன் - வேட்டையாடும் வேடன், புதல்மறைந்து - புதரிலே தன்னை மறைத்துக் கொண்டு, புள் - பறவைகளை, சிமிழ்த்தற்று - அகப்படுத்தியது போன்றதாகும்.

[க-ரை] மனவலிமை இல்லாதவன் தவவேடத்திலே மறைந்து கொண்டு தவத்திற்குப் புறம்பானவற்றைச் செய்தல், வேட்டுவன் புதரிலே மறைந்துகொண்டு, பறவைகளைப் பிணித்தது போன்றதாகும்.

5. பற்றுஅற்றேம் என்பார் படிற்றுஒழுக்கம்
ஏதம் பலவும் தரும். [எற்றுஎற்றுஎன்று

[ப-ரை] பற்று - ஆசைகள், அற்றேம் - விட்டு விட்டோம், என்பார் - என்று சொல்லுபவர்களது, படிற்று - மறைந்த, ஒழுக்கம் - தீய ஒழுக்கமானது, எற்று எற்று என்று - ஏன் செய்தோம், ஏன் செய்தோம் என்று தாமே வருந்தும்படியாக, ஏதம் - துன்பங்கள், பலவும் - பலவற்றையும், தரும் - தந்துவிடும்.

[க-ரை] 'யாம் ஆசைகளை விட்டோம்' என்று சொல்லுபவர்களது மறைவான தீய ஒழுக்கம் பின்பு 'ஏன் செய்தோம்' 'ஏன் செய்தோம்' என்று தாமே வருந்துமாறு அவர்கட்குப் பல துன்பங்களையும் தந்துவிடும்.

**6.** **நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்.**

[ப-ரை] நெஞ்சின் - நெஞ்சிலே, துறவார் - ஆசைகளை விடாதவராகி, துறந்தார் போல் - ஆசைவிட்ட துறவிகள் போல, வஞ்சித்து வாழ்வாரின் - மக்களை வஞ்சனையால் ஏமாற்றி வாழ்பவர்களைப் போல, வன்கணார் - இரக்கமில்லாத கொடியவர், இல் - வேறு யாரும் இல்லை.

[க-ரை] மனத்தில் ஆசைகள் நீங்காமல் வைத்துக் கொண்டு ஆசை இல்லாதவர்கள் போல வஞ்சித்து வாழ்கின்ற கொடிய தன்மையுடையவர்களைப் போலக் கொடியவர்கள் உலகில் இல்லை.

**7.** **புறம்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூக்கிற் கரியார் உடைத்து.**

[ப-ரை] குன்றி குன்றிமணியின், புறம் - மேற்புறத்திலே, கண்டனையரேனும் - காணப்படுவதைப்போல வெளித்தோற்றத்தில் காணப்பட்டாலும், அகம் - மனத்திற்குள்ளே, குன்றி - அக் குன்றிமணியின், மூக்கின் - மூக்கினைப் போல, கரியார் - கருத்திருப்பவரை, உடைத்து - இவ் உலகம் பெற்றிருப்பதாகும்.

[க-ரை] குன்றிமணியின் புறத்தில் காணப்படும் நிறம் போல வேடத்தில் செம்மையுடையவர்களாகக் காணப்பட்டாலும், அக்குன்றிமணியின் மூக்கினைப் போல மனம் இருண்டு இருப்பவரை உடையது இவ்வுலகம்.

8. மனத்தது மாசுஆக மாண்டார்நீர் ஆடி
மறைத்துஒழுகும் மாந்தர் பலர்.

[ப-ரை] மாசு - குற்றமானது [அழுக்கு], மனத்தது - மனத்தின்கண், ஆக - இருக்க, மாண்டார் - சிறந்த தூய்மையுடையவர்கள் போல், நீர் - நீரில், ஆடி - மூழ்கிக்காட்டி, மறைந்து - அச்செயலில் மறைந்து, ஒழுகும் - தீயநெறியில் நடந்து கொள்ளுகின்ற, மாந்தர் பலர் - மக்கள் உலகத்தில் பலருண்டு.

[க-ரை] அழுக்காகிய குற்றம் தங்கள் மனத்தில் இருக்க மாட்சிமையுடையவராக நீரில் மூழ்கிக் காட்டித் தாம் அந்தத் தோற்றத்தில் மறைந்து வாழும் மாந்தர் உலகில் பலராவர்.

9. கணைகொடிது யாழ்கோடு செவ்விது
வினைபடு பாலால் கொளல். [ஆங்குஅன்ன

[ப-ரை] கணை - அம்பானது [நேராக இருந்தாலும்] கொடிது - செய்கையில் கொடுமை செய்வதாகும், யாழ்-யாழானது, கோடு - கோணலாக வளைந்து இருந்தாலும்- செவ்விது - செயலினால் நன்மை செய்வதாகும், ஆங்கு அன்ன - அவ்வகையினைப் போல், வினைபடுபாலால் - அவரவரது செயல்களின் வேறுபாடுகளினால், கொளல் - அவரை அறிந்து புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] அம்பு, வடிவத்தில் நேராக இருந்தாலும் செயலால் கொடியதாகும். யாழ், வளைவுள்ளதாக இருந்தாலும், செயலால் நல்லதாகும். அதுபோல், மக்களைத் தோற்றத்தால் அறிந்து கொள்ளாமல் செயலினால் அறிந்து கொள்ளல் வேண்டும்.

10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

[ப-ரை] உலகம் - உலகத்து உயர்ந்தோரால், பழித்தது- குற்றமாகக் கூறப்பட்ட தீய ஒழுக்கத்தினை, ஒழித்துவிடின்-

ஒழித்து விடுவார்களேயானால், [அதுவே போதும்] மழித்தலும் அவர்கள் [தவத்திற் கென்று] தலைமயிரை மழித்துக் கொள்ளுதல், நீட்டலும் - சடையாக்கி வளர்த்துக் கொள்ளுதலும் [ஆகிய வேடம்] வேண்டா - வேண்டுவன அல்லவாம்.

[க-ரை] தவம் செய்பவர்களுக்குத் தலைமயிரை மழித்தலும் அல்லது சடையாக்கலும் ஆகிய வேடம் 'தவம் செய்வதற்கு என்று' தேவையில்லை. தவத்திற்கு ஆகாதது என்ற தீமையான ஒழுக்கத்தினை நீக்கி விட்டாலே போதுமானதாகும்.

## 29. கள்ளாமை

### [பிறருடைய பொருளைக் களவு செய்தற்கு நினையாமை]

1. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

[ப-ரை] எள்ளாமை - பிறரால் இகழாதிருப்பதனை, வேண்டுவான் - விரும்புகின்றவன், என்பான் - என்பவன், எனைத்தொன்றும் - எந்தவொரு பொருளினையும், கள்ளாமை - கவர்ந்து கொள்ள எண்ணாதிருக்கும்படியாக, தன் - தனது, நெஞ்சு - நெஞ்சத்தினை, காக்க - காத்துக் கொள்ளுவானாக.

[க-ரை] பிறரால் இகழப்படாமல் இருக்கவேண்டும் என்று எண்ணுபவன் யாதொரு பொருளினையும் கள்ளத்தனத்தினால் அடையக் கூடிய எண்ணம் புகாதபடி தனது நெஞ்சினைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்.

2. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

[ப-ரை] பிறன் - பிறனுக்குரிய, பொருளை - பொருளினை, கள்ளத்தால் - கள்ளத்தனத்தால், கள்வேம் எனல் - திருடிக்கொள்ளுவோம் என்று கருதுதல், உள்ளத்தால்-தமது உள்ளத்தினால்கூட, உள்ளலும்-எண்ணுவதும், தீதே - தீமையானதேயாகும்.

[க-ரை] குற்றங்களைத் தனது நெஞ்சம் நினைப்பதுவும் துறந்தார்க்குத் தீமையாகும். ஆதலால், பிறன்பொருளை அவன் அறியாதபடி கள்ளத்தனத்தால் கவர்ந்து கொண்டு விடுவோம் என்று நினையாதிருப்பாயாக!

3. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

[ப-ரை] களவினால் - கள்ளச் செய்கையால், ஆகிய ஆக்கம் - உண்டாவதான செல்வமானது, ஆவதுபோல - அதிகமாவது போலக் காட்டி, அளவு - அந்த அளவினையும் இறந்து - கடந்து, கெடும் - கெட்டு மறையும்.

[க-ரை] களவினால் உண்டாகின்ற பொருள் வளர்வது போலத் தோன்றி அளவினைக் கடந்து அழியும். மேலும் அது பற்பல துன்பங்களையும் கொடுத்து அறத்தினையும் கொண்டு போகும்.

4. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

[ப-ரை] களவின் கண் - களவு செய்வதில், கன்றிய - மிகுந்திருக்கும், காதல் - விருப்பமானது, விளைவின்கண் - பயனைத் தரும்போது, வீயா - தொலைக்க முடியாத, விழுமம் தரும் - துன்பத்தினைத் தந்து விடுவதாகும்.

[க-ரை] களவு என்பதில் இருக்கும் வேட்கை அப்போது இனிது போலத் தோன்றிப் பயன் தரும்போது என்றும் நீங்காத துன்பத்தினைத் தந்துவிடும்.

5. அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

[ப-ரை] அருள் - அருள் என்பதன் பெருமையினை, கருதி - அறிந்துணர்ந்து, அன்பு - அதன் மேல் அன்பு, உடையராதல் - கொண்டு நடப்பதென்பது, பொருள் - மற்றவருடைய பொருளினை, கருதி - திருடுவதற்குக் கருதி, பொச்சாப்பு - அவருடைய சோர்வினை, பார்ப்பார்கண் - பார்த்துக் கொண்டிருப்பவர்களிடத்தில், இல் - இல்லையாகும்.

[க-ரை] அருளினைப் பெறக் கருதி அதன்மீது அன்பு கொண்டிருப்பவராக நடந்துகொள்ளுதல் என்பது, பிறன் பொருளினைக் களவினால் எடுத்துக் கொள்ளுவோம் என்பவரிடம் உண்டாகாது.

6. அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

[ப-ரை] களவின்கண் - களவு செய்வதிலே, கன்றிய - அதிகமான, காதலவர் - ஆசையினையுடையவர்கள், அளவின்கண் - உயிர் முதலியவற்றை அளந்தறியும் மெய்ந் நெறியில், நின்று - நிலையாக நின்று, ஒழுகல் - நடந்து கொள்ள, ஆற்றார் - வலிமையில்லாதவர்கள்.

[க-ரை] உயிர் முதலியவற்றை அளக்கும் சீரிய செந் நெறிக்கண் நின்று அதற்குத் தகுந்தபடி ஒழுக முடியாதவர்கள் யாரென்றால், களவு செய்வதிலேயே மிகுந்த விருப்பம் உடையவர்கள் என்பதாகும்.

7. களவென்னும் கார்அறிவு ஆண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

[ப-ரை] களவு - களவு, என்னும் - என்று சொல்லப்படுகின்ற, கார் - அஞ்ஞானத்தால் இருண்ட, அறிவாண்மை - அறிவினையுடையவர்களாக இருத்தல் என்பது, அளவு - உயிர் முதலியவற்றை அளத்தல், என்னும் - என்கின்ற,

ஆற்றல் - ஆற்றலாகிய தவச் சிறப்பினை, புரிந்தார் கண் - விரும்பிச் செய்கின்ற துறவிகளிடத்தில், இல்-இல்லையாகும்.

[க-ரை] களவு என்று சொல்லப்படுகின்ற மயக்கமான அறிவானது, உயிர் முதலியவற்றை அளத்தல் ஆகிய தவம் என்னும் பெருமையினை விரும்பினவர்களிடத்தில் இல்லை.

8. அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு.

[ப-ரை] களவு - களவு செய்தவனை, அறிந்தார் - அறிந்தவரது, நெஞ்சில் - நெஞ்சத்தில், கரவு - வஞ்சனை யுடைய எண்ணம், அளவறிந்தார் - அளவினையறிந்த துறவிகளையுடைய, நெஞ்சத்து - நெஞ்சினில், அறம்போல் - அறம் நிலைத்து நிற்பது போல, நிற்கும் - நிலை பெற்று நிற்பதாகும்.

[க-ரை] உயிர் முதலானவற்றை அளக்கும் தவத்தினைப் பயின்றவர்கள் நெஞ்சத்தில் அறம் நிலை பெற்று நிற்கும். களவினையே பயின்றவர் நெஞ்சத்தில் வஞ்சனை நிலை பெற்று நிற்கும்.

9. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

[ப-ரை] களவு - களவு, அல்ல - அல்லாத, மற்றைய - பிறவற்றை, தேற்றாதவர் - அறிந்திராத கள்வர்கள், அளவல்ல - அளவு கடந்த தீய எண்ணங்களை, செய்து, எண்ணி, ஆங்கே - அந்தப் பொழுதே, வீவர் - கெட்டுவிடுவார்கள்.

[க-ரை] கள்ளத்தனம் அல்லாத பிறவற்றை அறியாதவர்கள் அறவற்ற தீய நினைவுகளைச் செயலாற்ற நினைத்து அந்தப் பொழுதே கெட்டு விடுவார்கள்.

10. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை; கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

[ப-ரை] கள்வார்க்கு - களவினையே செய்து கொண்டிருப்போர்க்கு, உயிர்நிலை - உயிர் நிற்கின்ற உடம்பும், தள்ளும் - தவறி விடுவதாகும், கள்ளார்க்கு - களவினை எண்ணாதவர்க்கு, புத்தேள் - தேவர், உலகு - உலகமும், தள்ளாது - தள்ளாமல் ஏற்கும்.

[க-ரை] களவினைச் செய்வார்க்கு உயிர் நிற்பதான உடம்பும் தவறும். களவினை எண்ணாதவர்க்குத் தேவர்கள் உலகமும் தள்ளாமல் ஏற்கும்.

## 30. வாய்மை

[வாய்மையினது தன்மையும் விளக்கமும்]

1. வாய்மைஎனப் படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

[ப-ரை] வாய்மை - வாய்மை, எனப்படுவது - என்று பெருமையாகப் பேசப்படுவது, யாது - எது, எனின் - என்று கேட்டால், யாதொன்றும் - சிறிதளவேனும், தீமை - தீமையினை, இல்லாத - உண்டாக்காத சொற்களை, சொலல் - சொல்லுதல் என்பதாகும்.

[க-ரை] வாய்மை என்று சொல்லப்படுவது யாது என்றால், அது மற்ற உயிர்களுக்குத் தீங்கினைச் சிறிதும் உண்டாக்காத சொற்களைச் சொல்லுதலாகும்.

2. பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

[ப-ரை] புரை - குற்றம், தீர்ந்த - அற்ற, நன்மை - நன்மையினை, பயக்கும் - கொடுக்கும், எனின் - என்றால், பொய்ம்மையும் - பொய்யான சொற்களும், வாய்மை

இடத்த-மெய்ம்மையான சொற்களின் இடத்தில் வைத்துக் கருதப்படுவனவாகும்.

[க-ரை] பிறர்க்குக் குற்றம் நீங்கிய நன்மையினைத் தருமானால் பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் இடத்தில் வைத்துக் கருதப்படும்.

3. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

[ப-ரை] தன் - தன்னுடைய, நெஞ்சு - நெஞ்சத்தினால், அறிவது - அறிந்து கொண்டிருப்பதனை, பொய்யற்க - மற்றவர் அறியாரென்று எண்ணினாலும் பொய் பேசாதிருத்தல் வேண்டும், பொய்த்த பின் - அப்படி பொய்யாகச் சொல்லுவானேயானால், தன் - தன்னுடைய, நெஞ்சு - நெஞ்சமே, தன்னைச்சுடும் - தனக்குத் துன்பத்தினைக் கொடுத்து விடும்.

[க-ரை] ஒருவன் தனது நெஞ்சு அறிந்த பொய்யினைச் சொல்லாதிருப்பானாக; அவ்வாறு பொய்த்துப் பேசினால் அவனுடைய நெஞ்சமே அவனைத் துன்பத்தில் அடைவிக்கும்.

4. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

[ப-ரை] உள்ளத்தால் - ஒருவன் தனது மனதறிய, பொய்யாது - பொய் கூறாமல், ஒழுகின் - நடந்து வருவானாகில், உலகத்து சீரிய மக்கள், உள்ளத்துள் - உள்ளங்களில், எல்லாம் - எல்லாம், உளன் - உள்ளவனாவான், இருப்பவனாவான்.

[க-ரை] ஒருவன் தனது மனதறிய பொய் கூறாமல் நடந்து கொள்வானானால், அவன் உயர்ந்தோர் உள்ளங்களில் எல்லாம் உள்ளவனாவான்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

[ப-ரை] மனத்தொடு - மனத்தொடு சேர்ந்து, வாய்மை - உண்மையினை, மொழியின் - சொல்லுவானானால், [அப்படிப்பட்டவன்] தவத்தொடு - தவம் செய்வதோடு, தானம் - தானத்தையும், செய்வாரின் தலை - சேர்ந்து செய்வாரைவிட மேன்மையானவனாவான்.

[க-ரை] ஒருவன் தனது மனத்தோடு பொருந்த வாய்மையினைச் சொல்லுவானானால், அவன் தானமும் தவமும் ஒருங்கே செய்பவரைவிட மேலானவனாவான்.

6. பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

[ப-ரை] பொய்யாமை - பொய் சொல்லாமை, அன்ன - போன்ற, புகழ் - புகழுக்கு அடிப்படையானது, இல்லை - வேறு எதுவும் இல்லை, [ஏனெனில்] எய்யாமை - மெய் வருந்தாமலேயே, எல்லா - எல்லா, அறமும் - அறத்தினையும், தரும் - அதுவே கொடுத்து விடும்.

[க-ரை] பொய்யாமையினைப் போன்று புகழுக்கு காரணமான வேறு எதுவும் இல்லை. வருத்தமின்றி எல்லா அறங்களையும் அதுவே கொடுப்பதாகும்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

[ப-ரை] பொய்யாமை - பொய் பேசாதிருத்தலையே, பொய்யாமை - பொய் பேசாதிருத்தலையே, ஆற்றின் - செய்யும் ஆற்றல் பெற்றுவிட்டால், பிற - மற்றைய, அறம் - அறச்செயல்களை, செய்யாமை - செய்யாமையே, செய்யாமை - செய்யாமையே, நன்று - நல்லதென்பதாகும்.

[க-ரை] ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்யும் ஆற்றல் பெற்றுவிட்டால், அவன் பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நல்லதாகும்.

8. புறம்தூய்மை நீரான் அமையும்: அகம்தூய்மை
வாய்மையான் காணப் படும்.

[ப-ரை] புறம் - உடம்பின் புறத்தில், தூய்மை - தூய்மையாவது, நீரான் அமையும் - நீரினால் அமைவதாகும், [அதுபோல] அகம் தூய்மை - மனமானது தூய்மையாவது, வாய்மையான் - வாய்மையால், காணப்படும் - உண்டாக்கப்படுவதாகும்.

[க-ரை] ஒருவனுக்கு உடம்பு தூய்மையாவது நீராலேயே அமையும். மனம் தூய்மையாக இருப்பதென்பது வாய்மையால் உண்டாகிக் காணப்படும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

[ப-ரை] எல்லாவிளக்கும் - புறத்திருளைப் போக்குன்ற விளக்குகள் எல்லாம், விளக்கு - விளக்குகள், அல்ல - ஆகாவாம், சான்றோர்க்கு - துறவு நிலை பெற்ற பெரியோர்களுக்கு, விளக்கு - விளக்கென்பது, பொய்யாவிளக்கே - பொய் பேசாமை என்கின்ற விளக்கேயாகும்.

[க-ரை] புறத்தில் இருளினைப் போக்கும் விளக்குகள் எல்லாம் விளக்குகள் ஆகாவாம். துறவறத் தன்மையால் நிறைந்த சான்றோர்க்கு விளக்காவது பொய்ம்மையாகிற விளக்கேயாகும்.

10. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை
வாய்மையின் நல்ல பிற. [எனைத்துஒன்றும்

[ப-ரை] யாம் - யாம், மெய்யா - மெய்ம்மையினைக் கூறும் நூல்களாக, கண்டவற்றுள் -கண்டறிந்த நூல்களுள், எனைத்து - யாதொரு, ஒன்றும் - தன்மையாலும், வாய்மையின் - வாய்மையினைவிட, நல்லபிற - சிறந்த

தான நல்ல பிற அறங்கள் என்பவை, இல்லை - கூறப்படவில்லை.

[க-ரை] யாம் மெய்ந்நூல்களாகக் கண்டவற்றுள் எத்தன்மையாலும் வாய்மையினைவிட மேலானதாகக் கூறப்படும் அறமே இல்லை என்பதாகும்.

## 31. வெகுளாமை

[கோபத்தினால் வரும் தீமைகளும் அதனை நீக்குதலும்]

1. செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான்
காக்கின்என் காவாக்கால் என். [அல்லிடத்து

[ப-ரை] சினம் - சினம் [கோபம்] என்பதனை, செல் சென்று பலிக்கும், இடத்து - இடத்தில், காப்பான் - வாராமல் காப்பவனே, காப்பான் - தன்னைக் காப்பவனாவான், அல்லிடத்து - மற்றபடி கோபம் பலியாதவிடத்தில், காக்கில் என் - வராமல் தடுத்தால்தான் என்ன பயன்? காவாக்கால் என் தடுக்காவிட்டால்தான் என்ன பயன்?

[க-ரை] சினம் பலிக்குமிடத்தில் அதனை வராமல் காப்பவனே அருளால் காப்பவனாவான்: அது பலிக்காத இடத்தில் அதனைத் தடுத்தால் என்ன? தடுக்காமல் இருந்தால் என்ன?

2. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
இல் அதனின் தீய பிற.

[ப-ரை] சினம் - சினமானது, செல்லா - பலிக்காத, இடத்து தன்னைவிட - வலியவர் மீது சென்றால், தீது - தனக்கே தீமையாக முடியும், செல்லிடத்து - தன்னின் மெலியவர்மீது செல்லும்போது, அதனின் - அந்தக் கோபத்தினைவிட, தீய - தீமையினைத் தருவது, பிறஇல் - வேறு எதுவும் இல்லை.

[க-ரை] கோபம் தன்னைவிட வலியவர்கள் மேல் உண்டாகுமானால் தனக்கே தீமையாகும். மற்ற எளிய வர்கள் மீது சென்றால் அதனைவிடத் தீமையானது பிற இல்லையாகும்.

3. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

[ப-ரை] யார் மாட்டும் - எத்தகையவரானவரிடத்தும், வெகுளியை - சினத்தினை, மறத்தல் - மறத்தல் வேண்டும், தீய பிறத்தல் - தீமையான்வைகள் எல்லாம் பிறப்பது, அதனான் வரும் - அந்தக் கோபத்தினாலேயே வந்து விடுவதாகும்

[க-ரை] யாவரிடத்தும் கோபத்தினை மறந்து விடுதல் வேண்டும். ஒருவற்குத் தீமைகள் எல்லாம் அதனாலேயே வரும்.

4. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

[ப-ரை] நகையும் - முகமலர்ச்சியினையும், உவகையும் - அகக் களிப்பினையும், கொல்லும் சினத்தின் - கொல்லுகின்ற கோபத்தினைவிட, பிறபகையும் - வேறு பகைகளும், உளவோ - இருக்கின்றனவோ?

[க-ரை] முகத்தின்கண் தோன்றும் மலர்ச்சியான நகைப்பினையும் மனத்தில் தோன்றும் மகிழ்ச்சியினையும் கொன்றுவிடுகின்ற கோபத்தினைவிட வேறு பகையும் உண்டோ?

5. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

[ப-ரை] தன்னைத்தான் - தன்னைத்தானே, காக்கின் - துன்பத்திலிருந்துகாப்பாற்ற விரும்புவானாகில்,

சினம்காக்க — சினம் வராதபடிகாத்துக்கொள்ள வேண்டும் காவாக்கால் — அவ்வாறு காப்பாற்றானாகில், சினம் — அச்சினமானது, தன்னையே கொல்லும் — தன்னையே கெடுத்துவிடும்.

[க-ரை] தனக்குத் துன்பம் வராமல் காத்துக்கொள்ள நினைப்பானானால், தன் மனத்தில் கோபம் வராமல் காத்தல் வேண்டும். அப்படிக் காப்பாற்றாவிடில் தன்னையே அக்கோபம் கெடுத்துவிடும்.

6. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

[ப-ரை] சினம் [கோபம்], என்னும் — என்று கூறப்படும், சேர்ந்தாரைக் கொல்லி — நெருப்பு, இனம் — இனம், என்னும் — எனப்படும், ஏமப் புணையை — தனக்கு நல்லனவற்றைச் செய்கின்ற பாதுகாப்பான மரக்கலத்தினையும், சுடும் — சுட்டுவிடும்.

[க-ரை] சினம் என்னும் நெருப்பு தன்னை உண்டாக்கியவரையே அல்லாமல் அவருக்கு இனம் என்னும் பாதுகாப்பாகிய மரக்கலத்தினையும் சுடும்.

7. சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று.

[ப-ரை] சினத்தை — சினத்தினை, பொருள் — தனக்கு ஏற்ற குணம், என்று — என்பதாக, கொண்டவன் — கொண்டிருப்பவனுடைய, கேடு — அழிவானது, நிலத்து — அறைந்தான் — நிலத்தில் அறைந்தவனுடைய, கை — கையானது, பிழையாதற்று — தப்பிவிடாதது போன்றதாகும்.

[க-ரை] நிலத்தினை அறைந்தவனுடைய கையானது அந்த நிலத்தினையடைதல் தப்பாதவாறு போல, சினத்தையே தனக்குக் குணமாகக் கொண்டிருப்பவன் கெடுவது உறுதி.

**8. இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.**

[ப-ரை] இணர் - பலவாகச் சேர்ந்த சுடர்களைக் கொண்ட, எரி பெரிய நெருப்பானது, தோய்வன்ன - தழுவிக் கொண்டதைப் போன்ற, இன்னா செயினும் - துன்பத்தினை ஒருவன் செய்தானேயானாலும், வெகுளாமை - அவன் மீது கோபம் கொள்ளாதிருத்தல், புணரின் நன்று - கூடுமானால் நல்லதாகும்.

[க-ரை] பல சுடர்களையுடைய பெரிய எரி (நெருப்பு) எல்லாம் வந்து ஒன்றாகச் சேர்ந்தது போன்ற துன்பத்தினை ஒருவன் செய்தாலும், கூடுமானால் அவன்மீது கோபிக்கா திருத்தல் நல்லது.

**9. உள்ளியது எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.**

[ப-ரை] உள்ளத்தால் - தவத்தோன் மனத்தினால், வெகுளி - சினத்தினை, உள்ளான் - நினைக்கமாட்டான், எனின் - என்றால், உள்ளியது - அவனால் மனத்தில் நினைக்கப்பட்டவை, எல்லாம் - எல்லாம், உடன் எய்தும் - ஒன்று சேர அடைவான்.

[க-ரை] துறவியானவன் தன் மனத்தால் கோபத்தினை ஒருபோதும் நினைக்காமல் இருப்பானானால், அவன் கருதிய செல்வங்கள் எல்லாவற்றினையும் ஒருங்கே பெறுவான்.

**10. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.**

[ப-ரை] இறந்தார் - மிகுந்த சினத்திலே இருப்பவர், இறந்தார் - இறந்தவரோடு, அனையர் - ஒப்பாவார், சினத்தை - அந்தச் சினத்தினை, துறந்தார் - விட்டு நீக்கினவர், துறந்தார் துணை - [சாதல் தன்மையரேனும்] இறவாதவர்களுக்கு ஒப்பாவார்.

[க-ரை] சினத்தில் மிகுந்து இருப்பவர்கள் உயிரோடிருப்பவர்களேயானாலும் செத்தவருக்கு ஒப்பாவார். அந்தச் சினத்தினை விட்டவர்கள், உடம்பால் சாதல் தன்மையரேயானாலும் இல்லாதவர்களுக்குச் சமமாவார்கள்.

## 32. இன்னா செய்யாமை

[பிற உயிர்களுக்குத் துன்பம் தருவனவற்றைச் செய்யாமை]

1. சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
   செய்யாமை மாசற்றார் கோள்.

[ப-ரை] சிறப்பு - தவமாகிய சிறப்பினாலே, ஈனும் - அடையப் படுவனவாகிய, செல்வம் பெறினும் - செல்வங்களைப் பெறலாம் என்றாலும், பிறர்க்கு - மற்றவர்களுக்கு, இன்னா - துன்பம் உண்டாக்குபவைகளை, செய்யாமை - செய்யாதிருத்தல், மாசு - குற்றம், அற்றார் - இல்லாதவரது, கோள் - துணிவு என்பதாகும்.

[க-ரை] பிறர்க்குத் துன்பம் செய்து தவமாகிய சிறப்புத் தரும் செல்வங்களைப் பெறலாம் என்றாலும், அதனைச் செய்யாதிருப்பதே மனம் மாசற்றவரது துணிபாகும்.

2. கறுத்துஇன்னா செய்த அக்கண்ணும் மறுத்துஇன்னா
   செய்யாமை மாசற்றார் கோள்.

[ப-ரை] கறுத்து - தம்மீது கோபங் கொண்டு, இன்னா - துன்பத்தினை, செய்த அக்கண்ணும் - செய்த போதும், மறந்து - மீண்டும், இன்னா செய்யாமை - துன்பம் தருவனவற்றைத் தாம் திரும்பச் செய்யாதிருத்தல், மாசற்றார் - மனத்தில் குற்றமற்றவரது, கோள் - குறிக்கோளும் துணிவுமாகும்.

[க-ரை] தம்மேல் கோபம் கொண்டு ஒருவன் துன்பம் தருபவற்றைச் செய்தான் என்றாலும் மீண்டும் தாம் அவனுக்குத் துன்பம் செய்யாமை மாசற்ற தவசிகளின் துணிபாகும்.

3. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

[ப-ரை] செய்யாமல் - தான் முன்பு துன்பத்தினைச் செய்யாதிருந்தும், செற்றார்க்கும் - தன்மீது [கோபம்] கொண்டவர்க்கும், இன்னாத - துன்பத்தினை, செய்தபின் - தவசி செய்வானாகில், உய்யாவிழுமம் - தப்பிக்க முடியாத துன்பத்தினை, தரும் - அவனுக்குத் தந்துவிடும்.

[க-ரை] தான் முன்பு ஒரு தீமையும் செய்யாதிருக்கத் தன்மேல் கோபம் கொண்டவர்க்குத் துன்பத்தினை முனிவன் செய்வானானால் அச் செயல் அவனுக்குக் கடக்க முடியாத துன்பத்தினைத் தரும்.

4. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

[ப-ரை] இன்னா - துன்பத்தினை, செய்தாரை - தமக்குச் செய்பவரை, ஒறுத்தல் - துறந்தார் தண்டித்தல் என்பது, அவர் - அத்துன்பம் செய்தவர், நாண - தாமே நாணம் அடையும் படியாக, நன்னயம் - இனிமையான நன்மைகளை, செய்துவிடல் - செய்து, அவ்விரண்டையும் அப்போதே மறந்துவிடுதலாகும்.

[க-ரை] தமக்குத் துன்பம் செய்தவர்களைத் துறந்தவர்கள் தண்டித்தல் என்பதானது, அத்துன்பம் செய்தவர்கள் தாமே நாணம் அடையும்படி அவர்கட்கு இனிமையானவற்றைச் செய்து அவ்விரண்டையும் மறந்துவிடுதலாகும்.

5. அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை.

[ப-ரை] பிறிதின் - மற்றவோர் உயிர்க்கு வந்த, நோய் - துன்பத்தினை, தன் - தனக்கு வந்த, நோய்போல் - துன்பத்தினைப்போல, போற்றாக் கடை - காப்பாற்றாத போது, அறிவினான் - துறவிகள் தாம் பெற்ற அறிவினால், ஆகுவது - ஆவதொரு பயன் - உண்டாகுமோ? [உண்டாகாது என்பதாகும்.]

[க-ரை] மற்ற உயிர்க்கு வரும் துன்பத்தினைத் தனக்கு வந்ததுபோல நினைத்துக் காப்பாற்றாவிடில் உயிர் முதலானவற்றை உள்ளவாறு அறிந்த துறவிகளுக்கு, அறிவினால் ஆவதொரு பயன் உண்டோ? இல்லை என்பதாம்.

6. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

[ப-ரை] இன்னா - மக்களுக்குத் துன்பம் கொடுப்பவை, என - என்று, தான் - தான், உணர்ந்தவை - அறிந்தவைகளை, பிறன்கண் - மற்றவர்களிடத்திலே, செயல் - செய்தலை, துன்னாமை - கைக் கொள்ளாதிருத்தல், வேண்டும் - வேண்டப்படுவதாகும்.

[க-ரை] "இவை மக்களுக்குத் துன்பம் தருபவை" என அறிந்தவற்றைத் துறவியானவன் பிறரிடத்தில் செய்வதைக் கருத்தில் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

7. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்
மாணாசெய் யாமை தலை.

[ப-ரை] மனத்தானாம் - மனத்தோடு பொருந்த, மாணா - துன்பச் செயல்களை, எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், யார்க்கும் - யார்க்கும், எனைத்தானும் - எவ்வளவு சிறிதளவேயானாலும், செய்யாமை தலை - செய்யாதிருத்தல் முதன்மையான அறமாகும்.

*[க-ரை] மனத்தோடு பொருந்திய துன்பம் தரும் செயல்களை எக்காலத்திலும், யார்க்கும் சிறிதேயாயினும் செய்யாதிருத்தல் தலையான அறமாகும்.*

**8. தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ**
**மன்உயிர்க்கு இன்னா செயல்.**

*[ப-ரை] தன் - தன்னுடைய, உயிர்க்கு - உயிருக்கு, இன்னாமை - துன்பம் தரும் என்பதனை, அறிவான் - அறிந்தவன், மன்னுயிர்க்கு - நிலையான பிற உயிர்களுக்கு, இன்னா - துன்பத்தினை, தான் செயல் - தான் செய்வது, என்கொல் - என்ன நினைப்பினால்.*

*[க-ரை] பிறர் செய்யும் துன்பம் தன் உயிர்க்குத் துன்பம் தருவதை அனுபவித்து அறிந்தவன், நிலைபேறுடைய பிற உயிர்க்குத் துன்பம் செய்வது என்ன காரணத்தால்?*

**9. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்.**

*[ப-ரை] பிறர்க்கு - மற்றவர்களுக்கு, இன்னா - துன்பத்தினை, முற்பகல் செய்யின் - முற்பகலிலே செய்வானாகில், தமக்கு - அப்படி செய்த தமக்கு, இன்னா துன்பங்கள், பிற்பகல் - பிற்பகலிலே, தாமே - அவர் செய்யாமலேயே, வரும் - வந்துவிடும்.*

*[க-ரை] பிறர்க்குத் துன்பத்தினை முற்பகல் செய்வானேயானால், தமக்குத் துன்பங்கள் பிற்பகலில் அவர் செய்யாமல் தாமே வரும்.*

**10. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
**நோய்இன்மை வேண்டு பவர்.**

*[ப-ரை[ நோய் - துன்பம், எல்லாம் - எல்லாம், நோய் செய்தார் - பிற உயிர்களுக்குத் துன்பம் செய்தவர், மேலவாம் - மேலதேயாகும், [ஆதலால்] நோய் - துன்பம், இன்மை - இல்லாமையை, - வேண்டுபவர் - விரும்புபவர்,*

நோய் - துன்பங்களை, செய்யார் - மற்ற உயிர்களுக்குச் செய்யமாட்டார்கள்.

[க-ரை] துன்பமெல்லாம், பிறிதோர் உயிர்க்குத் துன்பம் செய்தவர் மேலவேதயாகும். ஆதலால், தம் உயிர்க்குத் துன்பம் வேண்டாதவர்கள் பிறிதோர் உயிர்க்குத் துன்பம் செய்யமாட்டார்கள்.

## 33. கொல்லாமை

[எவ்வுயிரினையும் கொல்லாதிருத்தலாகும்]

1. அறவினை யாதுஎனின் கொல்லாமை கோறல்
   பிறவினை எல்லாம் தரும்.

[ப-ரை] *அறவினை* - அறமான செயல், *யாது* - எது, *எனின்* - என்று கேட்டால், *கொல்லாமை* - கொல்லாமை யேயாகும், *கோறல்* - அப்படிக் கொல்லுதல் என்பது, *பிறவினை எல்லாம்* - தீமையான எல்லாவற்றையும், *தரும்* - அஃதொன்றே தந்துவிடும்.

[க-ரை] அறம் ஆகிய செய்கை யாது என்று கேட்டால் அஃது ஓர் உயிரையும் கொல்லாமையேயாகும். அவ்வாறு கொல்லுதல் தீமையான செயல்கள் பலவற்றையும் கொடுக்கும்.

2. பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
   தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

[ப-ரை] *பகுத்து* - பலருக்கும் கொடுத்து, *உண்டு* - தானும் உண்டு, *பல்* - பல, *உயிர்* - உயிர்களையும், *ஓம்புதல்* - காப்பாற்றுதல், *நூலோர்* - அறநூலுடையோர், *தொகுத்தவற்றுள்* - தொகுத்துக் கூறிய, *எல்லாம்* - எல்லா அறங்களிலும், *தலை* - மேலான அறமாகும்.

[க-ரை] உண்பதனை பலருக்கும் பகுத்துக் கொடுத்து தானும் உண்டு எல்லா உயிர்களையும் காப்பாற்றுதல்,

அறநூலுடையோர்கள் துறந்தார்க்குத் தொகுத்துக் கூறிய எல்லா அறங்களிலும் முதன்மையான அறமென்று சொல்லப்படும்.

3. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

[ப-ரை] ஒன்றாக - ஒன்றே ஒன்று என்பதாக இருக்க, கொல்லாமை - கொலை செய்யாமை என்ற ஓர் அறமே, நல்லது - நல்லதாகும், பொய்யாமை - பொய் சொல்லாமை என்னும் அறம், அதன்-அந்தக் கொல்லாமை யென்பதற்கு, பின் - பின்னே, சார - இருக்க, நன்று - நல்லதாகும்.

[க-ரை] தன்னோடு இணைப்பின்றித் தானேயாக ஒரே ஓர் அறமாக இருக்க நல்லது கொல்லாமையேயாகும். அதன் பின்னே நிற்க, பொய்யாமை என்கிற அறம் நல்லதாகும்.

4. நல்ஆறு எனப்படுவது யாதெனின் யாதுஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

[ப-ரை] நல் - நல்ல, ஆறு - நெறி, எனப்படுவது - என்று சொல்லப்படுவது, யாது - எது, எனின் - என்று கேட்டால், யாதொன்றும் - எந்த உயிரினையும், கொல்லாமை-கொலை செய்யாமை என்னும் அறத்தினை, சூழும் - பாதுகாக்க நினைக்கும், நெறி - நெறியேயாகும்.

[க-ரை] நல்ல நெறி என்று சொல்லப்படுவது யாது என்றால் அது யாதோர் உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கும் நெறியேயாகும்.

5. நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

[ப-ரை] நிலை - இப்பிறவியின் நிலையினை, அஞ்சி - அச்சப்பட்டு, [மீண்டும் பிறவாமை கருதி] நீத்தாருள் -

துறவறத்தினை மேற்கொண்டவர்கள், எல்லாம் - எல்லா ருள்ளும், கொலை அஞ்சி - கொலைத் தீமையினை அஞ்சி, கொல்லாமை-கொல்லாமை அறத்தினை, சூழ்வான் தலை- மேற்கொண்டவன் சிறந்தவன்.

[க-ரை] பிறப்பு என்ற நிலையினை அஞ்சி ஆசை யெல்லாம் விட்ட நீத்தாரிகளுள் எல்லாம் கொலைத் தீமையினை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தினை மறவாதவன் உயர்ந்தவனாவான்.

6. கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று.

[ப-ரை] கொல்லாமை - கொலை செய்யாமை என்பதனை, மேற்கொண்டு - நோன்பாக மேற்கொண்டு, ஒழுகுவான் - நடந்து கொள்ளுபவனது, வாழ்நாள் மேல் - வாழுகின்ற நாளில் அவனுடைய ஆயுளின் மீது, உயிர் உண்ணும் - உயிரினைக் கொண்டு செல்லும், கூற்று - கூற்றுவன், செல்லாது - செல்லமாட்டான்.

[க-ரை] கொல்லாமையினை நோன்பாகக் கொண்டு ஒழுகுவானது வாழ்நாள் மேல் உயிரினை உண்ணுகின்ற கூற்றுவன் சொல்லமாட்டான்.

7. தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை.

[ப-ரை] தன் - தன்னுடைய, உயிர் - உயிரானது, நீப்பினும் - நீங்கிப் போவதேயானாலும், செய்யற்க - செய்யாதிருப்பானாக [எதனை] தான் - தான், பிறிது - பிற ஒன்றினது, இன் - இனிமையான, உயிர் - உயிரினை, நீக்கும் வினை - நீக்குதலாகிய தொழிலினை என்பதாகும்.

[க-ரை] ஒருவன் தன்னுடைய உயிர் நீங்கிப் போகுமே யானாலும், தான் பிறிதோர் இன்னுயிரை அதன் உடம்பினின்றும் நீக்கும் தொழிலினைச் செய்யா திருப்பானாக.

8. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

[ப-ரை] நன்று - நல்லபடியாக, ஆகும் - ஆகின்ற' ஆக்கம் - செல்வமானது, பெரிது எனினும் - பெரிதாக இருக்கும் என்று சொல்லப்பட்டாலும், சான்றோர்க்கு- துறவறத்தால் சிறந்த பெரியோர்களுக்கு, கொன்று - கொலை செய்து, ஆகும் ஆக்கம் - ஆவதாகிய செல்வ மானது, கடை - இழிவானதேயாகும்.

[க-ரை] கொலை செய்வதால் நன்மையாக ஆகின்ற செல்வம் பெரிதுதான் என்று கூறப்பட்டாலும், துறவால் அமைந்த சான்றோர்களுக்கு உயிரைக் கொல்லுவதனால் வரும் செல்வம் இழிவானதாகும்.

9. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

[ப-ரை] கொலை - கொலை செய்வதனை, வினையர் ஆகிய - தொழிலாகக் கொண்ட, மாக்கள் - மாந்தர், புன்மை - அத்தொழிலின் இழிவினை, தெரிவார் - அறிந்த பெரியோர்களின், அகத்து - நெஞ்சத்தில், புலைவினையர்- புலைத் தொழிலினைச் செய்பவராகக் கருதப்படுவர்.

[க-ரை] கொலைத் தொழிலினையுடையவராகிய மக்கள் அத்தொழிலின் கீழ்மையை அறிந்தவர் நெஞ்சத்தில் அவர் புலைத் தொழிலினராகக் கருதப்படுவர்.

10. உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

[ப-ரை] செயிர் உடம்பின் - காணக்கூடாத நோய் உடம்புடனே, செல்லாத்தீ - வறுமையுள்ள இழிதொழில், வாழ்க்கையவர் - வாழ்க்கையுடையவர்களை, [அவர்கள்] உயிர் - உயிர்களை, உடம்பின் - [முன்னர்] உடம்புகளி லிருந்து, நீக்கியார் என்ப - நீக்கியவர்கள் என்று அறிந்தோர் கூறுவார்கள்.

[க-ரை] பார்க்கக் கூடாத நோயுடம்புடனே வறுமையுள்ள வாழ்க்கையினை யுடையவர்களை, முற்பிறப்பில் உயிர்களின் உடம்பினின்றும் நீக்கியவர்கள் என்று அறிந்தோர் கூறுவார்கள்.

## 34. நிலையாமை

[தோற்றமுடையன யாவும் நிலை பெறாதவைகளாகும்]

1. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
   புல்லறிவு ஆண்மை கடை.

[ப-ரை] நில்லாதவற்றை - நிலையில்லாதவைகளை எல்லாம், நிலையின - நிலைத்து நிற்பன, என்று - என்பதாக, உணரும் - உணருகின்ற, புல்லறிவாண்மை - புன்மையான அறிவினை உடையவராக இருத்தல், கடை - இழிவானதாகும்.

[க-ரை] நிலையில்லாத பொருள்களை நிலையானவை என்று கருதுகின்ற புன்மையான அறிவு துறந்தார்க்கு இழிவாகும்.

2. கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
   போக்கும் அதுவிளிந் தற்று.

[ப-ரை] பெரும் - பெரிய, செல்வம் - [ஒருவனுக்கு வருதல்] கூத்தாட்டு - கூத்தாடுகின்ற, அவை - களத்திற்கு, குழாத்தற்று - பார்ப்போர் கூட்டம் வருவது போன்றதாகும், போக்கும் - செல்வம் அவனைவிட்டுப் போவதும், அது - அந்த மக்கள் கூட்டமானது, விளிந்தற்று - கூத்து முடிந்தவுடன் போவதை போன்றதாகும்.

[க-ரை] ஒருவனுக்குப் பெரிய செல்வம் வருதல் கூத்தாட்டத்தினைப் பார்க்க வந்த கூட்டம் போன்றதாகும். அச்செல்வம் அவனை விட்டுப் போவது, கூத்து முடிந்தவுடன் அக்கூட்டம் போவது போன்றதாகும்.

**3. அற்கா இயல்பிற்று செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.**

[ப-ரை] *அற்கா - நிலைத்துநிற்காத, இயல்பிற்று- தன்மையுடையதாகும், செல்வம் - செல்வம், [ஆதலால்] அது - அத்தன்மையான செல்வத்தை, பெற்றால் - பெற்றால், அற்குப - செயல்படவேண்டிய செயல்களை, ஆங்கேசெயல்- பெற்ற அப்போதே செய்வாயாக.*

[க-ரை] *நிலைத்து நில்லாத தன்மையினையுடையது செல்வமாகும். அதனைப் பெற்றால் செய்யப்படவேண்டிய அறங்களை அப்பொழுதே செய்தல் வேண்டும்.*

**4. நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்.**

[ப-ரை] *நாள் - நாள், என - என்று சொல்லப்படுவதும் ஒன்றுபோல் - ஒரு காலத்தின் அளவு போல், காட்டி - தன்னைக் காட்டிக் கொண்டு, ஈரும் - அறுத்துச் செல்லும், வாளது - வாளினது வாயது, உயிர் - உயிராகும், உணர்வார்- இந்த உண்மையினை அறிந்துணர்பவர்கள், பெறின்- பெற்றிருந்தால் என்பதாம்.*

[க-ரை] *நாள்; அறுக்கப்படுவதொரு காலத்தின் அளவுபோல் தன்னைக் காட்டிக்கொண்டு, அதனை உணர்வாரைப் பெற்றால் அறுத்துச் செல்லுகின்ற வாளினது வாய் இருக்கும் உயிர் ஆகும் என்பதாகும்.*

**5. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.**

[ப-ரை] *நாச்செற்று - பேசமுடியாதபடி நாவைத் தடுத்து, விக்குள் - விக்குளானது, மேல்வாராமுன் - எழுவதற்கு முன்பதாகவே, நல் - அறமான, வினை - செயலினை, மேற்சென்று - விரைவாக, செய்யப்படும் - செய்யப்படுதல் வேண்டும்.*

[க-ரை] பேச முடியாதபடி நாவினை அடக்கி விக்குள் எழுவதற்கு முன்னமேயே அறச் செயலானது விரைவாகச் செய்யப்படுதல் வேண்டும்.

6. நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு.

[ப-ரை] ஒருவன் - ஒருவன், நெருநல் - நேற்றைய தினம், உளன் - இருந்தான், இன்று இல்லை - இன்றைய தினம் இல்லாமற் போனான், என்னும் - என்று கூறப்படும், பெருமை - நிலையாமை மிகுதியினை, உடைத்து - உடையதாகும், இவ்வுலகு - இந்த உலகம்.

[க-ரை] ஒருவன் நேற்றைய தினம் இருந்தான்; இன்றைய தினம் இல்லாமற் போனான் என்று கூறப்படும் நிலையாமை மிகுதியினை உடையதாகும் இவ்வுலகு.

7. ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

[ப-ரை] ஒருபொழுதும் - ஒரு பொழுதளவு கூட, வாழ்வது - உயிரும் உடம்பும் சேர்ந்து வாழ்வதனை, அறியார் - அறிந்துகொள்ள முடியாதவர்கள், கோடியும் - கோடி அளவும், அல்ல - அல்லாமல், பலகருதுப - அதனை விட எண்ணிறந்த எண்ணங்களை எண்ணுவார்கள்.

[க-ரை] ஒரு பொழுதளவும் தமது உயிரும் உடம்பும் சேர்ந்து வாழ்வதனை அறிய மாட்டாதவர்கள் கோடியளவும் அல்லாமல் அதனினும் பலவாய நினைவுகளை நினைக்கின்றனர்.

8. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

[ப-ரை] உடம்போடு - உடம்பினோடு, உயிரிடை - உயிருக்குஉண்டாகிய, நட்பு - நட்பானது, [எது போன்றது என்றால்] குடம்பை - முட்டையானது, தனித்து-தனியாக,

ஒழிய - நீங்க, புள் உள்ளே - இருந்த பறவையானது, பறந் தற்று - பறந்து போனது போன்றதாகும்.

[க-ரை] முட்டையானது தனித்துக் கிடப்ப, அதனுள்ளே இருந்த பறவை பருவம் வந்தவுடன் பறந்துபோன தன்மையதாகும். எதுவென்றால், உடம்புக்கும், உயிருக்கும் உள்ள நட்பு என்பதாகும்.

9. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
 விழிப்பது போலும் பிறப்பு.

[ப-ரை] சாக்காடு - இறப்பு வருதல், உறங்குவது போலும் - உறக்கம் வருவதனை ஒக்கும், பிறப்பு - பிறப்பு வருதல், உறங்கி விழிப்பதுபோலும் - உறங்கியபின் விழிப்பு வருவதனை ஒக்கும்.

[க-ரை] ஒருவனுக்குச் சாக்காடு வருவது, உறக்கம் வருவதற்கு ஒப்பாகும். அதன்பின் பிறப்பு வருதல், உறங்கியபின் விழித்தல் வருதலோடு ஒப்பாகும்.

10. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
 துச்சில் இருந்த உயிர்க்கு.

[ப-ரை] உடம்பினுள் - உடம்புகளுக்குள், துச்சில் - ஒதுக்கமாகவே, இருந்த - இருந்துவந்த, உயிர்க்கு - உயிருக்கு, புக்கில் - எப்போதும் நிலையாக இருக்கும் இல்லம், அமைந்தின்று கொல் - இதுவரை அமைந்திருக்கவில்லை போதும்.

[க-ரை] உடம்பினுள் ஒதுக்கமாகவே இருந்து வந்த உயிர்க்கு, எப்போதும் நிலையாக இருப்பதோர் இல்லம் இதுவரை அமைந்ததில்லை போலும்.

# 35. துறவு

[செல்வத்தினிடத்தும் உடம்பினிடத்தும் பற்றினை விடுதலாகும்]

1. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

[ப-ரை] யாதனின் யாதனின் - யாதொரு பொருளின் யாதொரு பொருளின், நீங்கியான் - ஆசைவிட்டு நீங்கியவன், அதனின் அதனின் - அந்தந்தப் பொருளினாலே வருகின்ற, நோதல் இலன் - துன்பம் அடைதல் இல்லாதவனாவான்.

[க-ரை] ஒருவன் யாதொரு பொருளின் யாதொரு பொருளின் பற்றற்று நீங்கினானோ அவன் அந்தந்தப் பொருளால் வரும் துன்பத்தினையடைதல் இல்லையாவான்.

2. வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

[ப-ரை] துறந்த - பொருள்களின்மீது ஆசைகளை விட்ட, பின்—பிறகு, ஈண்டு – இப்பிறப்பினில், இயற்பால உண்டாகக் கூடிய, பல - இன்பங்கள் பலவாகும், வேண்டின் - அந்த இன்பங்களை விரும்பினால், உண்டாக தக்க காலத்தில், துறக்க - அந்தப் பொருள்களைத் துறந்து விடுதல் வேண்டும்.

[க-ரை] எல்லாப் பொருள்களையும் துறந்து விட்டால் ஒருவனுக்கு உண்டாகும் இன்பங்கள் பலவாகும். அவ்வின்பங்களை விரும்பினால் அவற்றைக் காலமறிந்து துறத்தல் வேண்டும்.

3. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

[ப-ரை] ஐந்தன் - ஐந்து பொறிகளுக்குரியவையான, புலத்தை - ஐந்து புலன்களையும், அடல் வேண்டும் - அடக்குதல் வேண்டும், [அவ்வாறு செய்யும்போது] வேண்டிய - நுகர்வதற்கு உண்டாக்கப்பட்டுள்ளதை, எல்லாம் - எல்லாம், ஒருங்கு - ஒன்றுசேர, விடல் வேண்டும் - விட்டு விடுதல் வேண்டும்.

[க-ரை] மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய ஐந்து பொறிகளுக்கு உரியனவாகிய ஐந்து புலன்களையும் அடக்கிக் கெடுத்தல் வேண்டும். அப்படிக் கெடுக்கும்போது நாம் நுகர்வதற்குப் படைத்த பொருள் முழுவதையும் ஒருங்கே விடுதல் வேண்டும்.

4. இயல்பாகும் நோன்பிற்கு ஒன்றுஇன்மை உடைமை
மயல்ஆகும் மற்றும் பெயர்த்து.

[ப-ரை] ஒன்று - பற்று வைத்திருப்பதான ஒரு பொருளும், இன்மை - இல்லாதிருப்பது, நோன்பிற்கு இயல் பாகும் - தவத்தினை நோற்பவர்களுக்கு இயல்பான தன்மையாகும், உடைமை - ஒன்றிலேனும் பற்று இருந்துவிட்டால், பெயர்த்து - அப்பற்று அத்தவத்தினைப் போக்குதலால், மற்றும் - மறுபடியும், மயலாகும் - அஞ்ஞானமாகிய மயக்கத்திற்குக் காரணமாக முடியும்.

[க-ரை] தவத்தினை நோற்பவர்களுக்குப் பற்று வைத்திருப்பதான பொருள் எதுவுமே இல்லாதிருத்தல் இயல்பாகும். அப்படிக்கின்றி ஒன்றின் மேலாவது பற்று இருந்து விட்டால் அத்தவத்தினைப் போக்கி மீண்டும் மயங்குவதற்குக் காரணமாகிவிடும்.

5. மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

[ப-ரை] பிறப்பு - மீண்டும் பிறத்தலை, அறுக்கல் - நீக்கும் முயற்சியினை, உற்றார்க்கு - மேற்கொண்ட தவசி

களுக்கு, உடம்பு - இந்த உடம்பும், மிகை - அதிகமாகும், [அப்படியிருக்க] மற்றும் - அதற்குப் பின்னும், தொடர்ப்பாடு - பொருள்களின்மீது பற்று வைத்தல், எவன்- எதற்கு?

[க-ரை] பிறப்பு அறுத்தலை மேற்கொண்டவர் களுக்கு உடம்பும் மிகையானதாகும். அப்படியிருக்க, அதற்கு மேலேயும் சில பொருள்களின்மீது தொடர்ப்பாடு உண்டாதல் என்னாகும்?

6. யான்எனது என்னும் செருக்குஅறுப்பான்
உயர்ந்த உலகம் புகும். [வானோர்க்கு

[ப-ரை] யான் - நான் [என்றும்], எனது என்னும்- என்னுடையது என்றும் [கூறுகின்ற], செருக்கு- அஞ்ஞானத்தினை, அறுப்பான் - கெடுப்பான், வானோர்க்கும்-வானுலகத்தினர்க்கும், உயர்ந்த - அடைய முடியாத, உலகம்புகும்- பேரின்ப வீட்டுலகத்தில் புகுவான்.

[க-ரை] யான் என்றும் எனது என்றும் பற்றுச் செய்வதற்குக் காரணமான அஞ்ஞானத்தினைக் கெடுப்பவன், வானோர்க்கும் அடைய முடியாத அரிய பேரின்பம் என்னும் வீட்டுலகத்தினை அடைவான்.

7. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

[ப-ரை] பற்றினை - பற்றுகளை, பற்றி - இறுகப் பற்றிக் கொண்டு, விடாதவர்க்கு - விடாதவர்களை, இடும்பைகள் - துன்பங்கள், பற்றிவிடா - இறுகப் பற்றிக் கொண்டு விடாமல் இருக்கும்.

[க-ரை] பற்றுகளை இறுகப் பிடித்துக் கொண்டு விடாதவர்களைப் பிறவித் துன்பங்கள் இறுகப் பற்றிக் கொண்டு விடாமல் இருக்கும்.

8. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

[ப-ரை] *தீரத்துறந்தார் - முழுதுந்துறந்த முனிவர்கள், தலைப்பட்டார் - பேரின்ப வீட்டினையடைந்தவர்கள் ஆவர், மற்றையவர் - அப்படித் துறவாதவர்கள், மயங்கி வலைப்பட்டார் - அஞ்ஞானத்தில் மயங்கிப் பிறப்பென்னும் வலையில் அகப்பட்டவராவர்.*

[க-ரை] *முற்றத் துறந்தவர்கள் பேரின்பம் என்னும் வீட்டினை அடைந்தவராவர். அப்படித் துறவாதவர்கள் அஞ்ஞானத்தால் பிறப்பாகிய வலையிலே அகப்பட்டவராவர்.*

9. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

[ப-ரை] *பற்று - ஆசைகள், அற்றகண்ணே - நீங்கிய பொழுதே [அத்தன்மை], பிறப்பு - பிறவியை அறுக்கும் மீண்டும் பிறவாதபடி ஒழிக்கும், மற்று ஆசைகள் அறாத போது, நிலையாமை - பிறப்பு இறப்பு என்னும் நிலையாமையானது, காணப்படும் - கண்டு கொள்ளப் படும்.*

[க-ரை] *பற்றுகளையெல்லாம் விட்ட அப்பொழுதே அப்பற்றற்ற நிலை பிறப்பினை அறுக்கும். அவை அறாத போது (அறுக்கப்படாத போது) அவற்றால் பிறந்து இறந்து வருகின்ற நிலையாமை காணப்படும்.*

10. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

[ப-ரை] *பற்று அற்றான் - பற்றில்லாத இறைவனின், பற்றினை - பற்றினை, பற்றுக - மனத்தில் பற்றிக் கொள்க, அப்பற்றை - அப்பற்றினை, பற்றுக-மனத்திலே கொள்ளுதல் வேண்டும். [ஏனெனில்] பற்றுவிடற்கு-தொடர்ந்து வந்த பற்று விட்டுப் போவதற்காம்.*

[க-ரை] எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன் உணர்த்திய வீட்டு நெறியை மனத்துள் கொள்க. அதனை மனத்துட் கொண்டு ஞான முறைகளைச் செய்க; விடாது வந்த பற்று விட்டுப் போவதற்காக என்பதாம்.

## 36. மெய்யுணர்தல்

[பிறப்பு வீடு என்பவைகளின் காரணங்களை ஐயமின்றி உண்மையாக உணர்தல்]

1. பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு.

[ப-ரை] மாணாப்பிறப்பு - [இன்பம் இல்லாத] துன்பம் நிறைந்த பிறப்பு, பொருள் - மெய்ப் பொருள், அல்லவற்றை - அல்லாதவற்றை, பொருள் - மெய்ப் பொருள், என்று - என்பதாக, உணரும் - உணருகின்ற, மருளான் - அஞ்ஞானத்தினாலே, ஆம் - உளதாகும்.

[க-ரை] மெய்ப் பொருள் அல்லாதவற்றை மெய்ப் பொருள் என்று உணரும் விபரீத உணர்வினால் துன்பம் நிறைந்த பிறப்பு உண்டாவதாகும்.

2. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

[ப-ரை] மருள் - அஞ்ஞானமான விபரீத அறிவிலிருந்து, நீங்கி - நீங்கியவராகி, மாசு - குற்றம், அறு - இல்லாத, காட்சியவர்க்கு - மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கு, இருள் - மயக்கமான பிறப்பு, நீங்கி - நீங்கப் பெற்று, இன்பம் பயக்கும் - பேரின்பத்தினை அளிக்கும்.

[க-ரை] அஞ்ஞானமான மயக்கத்திலிருந்து நீங்கிய மெய்யுணர்வுடையார்களுக்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கிப் பேரின்ப வீட்டினைக் கொடுக்கும்.

**3. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணியது உடைத்து.**

[ப-ரை] ஐயத்தின் - ஐயத்திலிருந்து [சந்தேகங் களிலிருந்து] நீங்கி - நீங்கி, தெளிந்தார்க்கு - மெய்யுணர்வு பெற்ற ஞானிகளுக்கு, வையத்தின் - இவ்வுலகத்தினை விட, வானம் - பேரின்ப உலகம், நணியது உடைத்து - அருகில் இருப்பதாகும்.

[க-ரை] ஐயங்களினின்று நீங்கி மெய்யுணர்ந்தவர் களுக்கு அடைய வேண்டிய வீட்டுலகம் இவ்வுலகத்தினை விட அருகில் இருப்பதாகும்.

**4. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே**
**மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.**

[ப-ரை] மெய்யுணர்வு - மெய்ப்பொருள் அறிதலினை, இல்லாதவர்க்கு - இல்லாதவர்களுக்கு, ஐ உணர்வு-ஐம்புலன் களில் செல்லுகின்ற உணர்வு, எய்தியக் கண்ணும் - தமக்கு வசமாக ஆகிவிட்ட போதும், பயம் இன்று - பயனில்லை யாகும்.

[க-ரை] மெய்யுணர்வினைப் பெறாதவர்களுக்கு ஐம் புலன்களின் உணர்வுகள் அடக்கப்பட்டுத் தம்வசம் ஆகி விட்டாலும், அதனால் பயனில்லாததாகும்.

**5. எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

[ப-ரை] எப்பொருள் - யாதானுமொரு பொருள், எத் தன்மைத் தாயினும் - எப்படிப்பட்ட வகையில் தோன்றி னாலும், அப்பொருள்-அப்பொருளிலுள்ள, மெய்ப்பொருள்- மெய்யாகிய பொருளினை, காண்பது அறிவு - கண்டறிவது தான் மெய்யுணர்வாகும்.

[க-ரை] யாதொரு பொருள் யாதொரு தன்மை உடையதாகத் தோன்றினாலும் அத்தோற்றத்தின்படியே கண்டறியாமல் அப்பொருளினுள் நின்று மெய்ம்மையாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாகும்.

6. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

[ப-ரை] ஈண்டு - இப்பிறப்பிலே, கற்று - குருமார்களிடத்தில் கற்று, மெய்ப்பொருள் - மெய்யான பொருளினை, கண்டார் - கண்டுணர்ந்தவர்கள், மற்று - மீண்டும், ஈண்டு - இப்பிறப்பில், வாரா நெறி - வாராத வழியினை, தலைப்படுவர் - அடைந்து விடுவர்.

[க-ரை] மக்கட்பிறவியில் குருமார்களாகிய ஞானிகளிடம் கேட்டறிந்து மெய்ப் பொருளினை உணர்ந்தவர் மீண்டும் இப்பிறப்பில் வாராத நெறியினை அடைவர்.

7. ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

[ப-ரை] உள்ளம் - மனமானது, ஒருதலையா - உறுதியாக, ஓர்த்து - கேட்டுணர்ந்த உபதேசங்களை ஆராய்ந்தறிந்து, உள்ளம் - உளதான முதற்பொருளை, உணரின் - உணருமானால், பிறப்பு - மீண்டும் பிறப்பு[பிறவி] உள்ளதாக, பேர்த்து - மாறி, உள்ள - உள்ளத்தில் எண்ண, வேண்டா - வேண்டாவாம்.

[க-ரை] கேட்டுணர்ந்த உபதேச மொழியால் ஒருவன் உள்ளம் நல்வழியில் தெளிய ஆராய்ந்து மெய்ப்பொருளினை உணர்ந்தால் அவனுக்கு மாறிப் பிறப்புள்ளதாக நினைக்க வேண்டாம்.

8. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

[ப-ரை] பிறப்பு - பிறவி, என்னும் - எனப்படுகின்ற, பேதைமை - அஞ்ஞானமானது, நீங்க - நீங்க, சிறப்பு -

பேரின்பம், என்னும்-எனப்படும், செம்பொருள்-செம்மைப் பொருளினை, காண்பது அறிவு - காண்பதே மெய்யுணர் வாகும்.

[க-ரை] பிறப்பிற்கு முதற்காரணமாக அஞ்ஞானம் நீங்க, பேரின்ப வீட்டுலகத்திற்குக் காரணமான பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வு என்பதாகும்.

9. சார்பு உணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றுஅழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

[ப-ரை] சார்பு - பொருள்களுக்கெல்லாம் சார்பாகிய செம் பொருளினை, உணர்ந்து - உணர்ந்து, சார்பு - பற்றுக் கள் எல்லாம், கெட ஒழுகின் - கெட்டுப் போகுமாறு நடந்து கொண்டால், சார்தரும் - அவனைச் சார்ந்து நின்ற, நோய்_ துன்பங்கள், அழித்து - உணர்வு ஒழுக்கம் இவைகளை அழித்து, மற்று - பின்பு வந்து, சார்தரா - அவனைச் சேராதவைகளாகும்.

[க-ரை] ஒருவன் எல்லாப் பொருள்களுக்கும் சார்பான அச்செம்பொருளினை உணர்ந்து பற்று நீங்க ஒழுகினால் அவனை முன்பு சாரக் கடவனவாக இருந்த துன்பங்கள் அவ்வுணர்வினை அழித்துப் பின் சாரமாட்டாவாம்.

10. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

[ப-ரை] காமம் - விருப்பம், வெகுளி - வெறுப்பு, மயக்கம் - அஞ்ஞானம் [என்று கூறப்படுகின்ற] இவை மூன்றன் — இந்த மூன்று குற்றங்களின், நாமம் - பெயர் களும், [ஞானநிலை அடைந்தோர்க்கு] கெட - கெட்டு விடுவதால், நோய்கெடும்-அவற்றினாலான வினைப் பயன் கள் கெட்டுவிடும்.

[க-ரை] ஞானவுணர்வில் முதிர்ச்சி பெற்றவர்களுக்கு, விருப்பு, வெறுப்பு, அஞ்ஞானம் ஆகிய குற்றங்கள் மூன்று னுடைய பெயர்களும் கூடக் கெடுதலால், அவற்றின் காரிய மாகிய வினைப்பயன்களும் உளவாகாவாம்!

# 37. அவா அறுத்தல்

## [மெய்ப்பொருள் உணர்வால் ஆசைகள் அனைத்தையும் அறுத்தல்]

1. அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து. 361

[ப-ரை] எல்லா - எல்லா, உயிர்க்கும் - உயிர்களுக்கும், எஞ்ஞான்றும் - எல்லாக் காலத்திலும், தவா - கெடாமல் வருகின்ற, பிறப்பு - பிறப்பினை, ஈனும் - உண்டாக்கு வதாகிய, வித்து - விதை, அவா என்ப - ஆசையாகும் என்று உயர்ந்தோர் கூறுவர்.

[க-ரை] எல்லா உயிர்கட்கும் எக்காலத்தும் கெடாமல் வருகின்ற பிறப்பினை உண்டாக்கும் வித்து அவா (ஆசை) என்று நூலோர் சொல்லுவார்.

2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 362

[ப-ரை] வேண்டுங்கால் - ஒன்றினை விரும்பினால், பிறவாமை - பிறவாதிருப்பதையே, வேண்டும் - விரும்ப வேண்டும், அது - அப்பிறவாமை என்பது, வேண்டாமை - தான் எப்பொருளையும் விரும்பாமையினை, வேண்டவரும்- விரும்ப உண்டாவதாகும்.

[க-ரை] பிறப்புத் துன்பத்தினை உணர்ந்தவன் ஒன்றினை விரும்பினால், அவன் பிறவாமை என்பதனையே விரும்புதல் வேண்டும். அவன் ஆசை இல்லாமையை விரும்ப அவனுக்கு அப்பிறவாமை உண்டாகும்.

3. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல். 363

[ப-ரை] வேண்டாமை-எப்பொருளையும் விரும்பாமை [என்பதை], அன்ன - ஒப்பதான, விழு - சிறப்புமிக்க,

செல்வம்-செல்வமானது, ஈண்டு-இவ்உலகத்தில், இல்லை-இல்லையாகும் [அதுமட்டுமின்றி] யாண்டும் - எவ்வுலகத்திலும், அஃது - அதனை, ஒப்பது இல் - ஒத்திருப்பது இல்லையாகும்.

[க-ரை] 'எப்பொருளையும் விரும்பாமை' என்பதனை ஒக்கும் சிறந்த செல்வம் இவ்வுலகின்கண் இல்லை. அது வேயன்றி எவ்வுலகிலும் அதனை ஒப்பது இல்லை.

4. தூஉய்மை என்பது அவாஇன்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 364

[ப-ரை] தூஉய்மை - பேரின்பவீடு, என்பது - என்று சொல்லப்படுவது; அவா - ஆசை, இன்மை - இல்லாதிருத்தலேயாகும், அது - அந்த ஆசை இன்மை, வாஅய்மை - மெய்ம்மையை, வேண்ட - விரும்ப, வரும் - வருவதாகும்.

[க-ரை] ஒருவருக்குப் பேரின்ப விடு என்று சொல்லப் படுவது அவா இல்லாமையே ஆகும். அது மெய்ம்மையை விரும்பத் தானே உண்டாவதாகும்.

5. அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர். 365

[ப-ரை] அற்றவர் - பிறவி அற்றவர்கள், என்பார் - எனப்படுவோர், அவா - ஆசைகள், அற்றார் - முழுதும் அற்றவரேயாவார், மற்றையார் - பிறரெல்லாம், அற்றாக-சில துன்பங்கள் அற்றவரேயல்லாமல், அற்றது இலர்-பிறவி அற்றவராகார்.

[க-ரை] பிறவியற்றவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அதற்கு நேர்க்காரணமான அவா அற்றவர்களாவர். மற்ற எல்லாம் நீங்கி அது ஒன்று மட்டும் நீங்காதவர்கள் சில துன்பங்கள் அற்றவர்களேயல்லாமல் பிறவி அற்றவர்களாகார்.

6. அஞ்சுவது ஓரும் அறனே ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா. 366

[ப-ரை] ஒருவனை - (வீடுபேறு அடைவதற்குரிய) ஒருவனை, வஞ்சிப்பது அவா - வஞ்சித்து கெடுக்க வல்லது ஆசையேயாகும், [ஆதலால்] அஞ்சுவது - அஞ்சிக் காப்பாற்றப்பட வேண்டியது, அறம் - துறவறமேயாகும். (ஓரும் அசைநிலை.)

[கு-ரை] மெய்யுணர்தல் முதலியன எல்லாம் எய்தி அவற்றால் வீடு எய்தற்குரிய ஒருவனை வஞ்சனையால் புகுந்து வீழ்த்த வல்லது, ஆசையே யாகும். ஆதலால், அந்த அவாவினை அஞ்சிக் காப்பதே துறவற மாகும்.

7. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும். 367

[ப-ரை] அவாவினை - ஆசையினை, ஆற்ற - முழுதும், அறுப்பின் - அறுக்க வல்லவனுக்கு, தவா - கெடாமைக்குக் காரணமான, வினை - செயல், தான் வேண்டும் - தான் விரும்பிய, ஆற்றான் - நெறியானே, வரும் - வருவதாகும்.

[கு-ரை] ஒருவன் அவாவுக்கு அஞ்சி அதனை முழுதும் கெடுக்க வல்லவனானால், அவனுக்குக் கெடாமைக்குக் காரணமான வினை, தான் விரும்பும் நெறியாலே உண்டாவதாகும்.

8. அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்
அஃதுஉண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். 368

[ப-ரை] அவா - ஆசை, இல்லார்க்கு - அற்றவர்களுக்கு, துன்பம் - துன்பங்கள், இல்லாகும் - இல்லையாகும், அஃது - அந்த ஆசை ஒன்று, உண்டேல் - இருந்து விட்டால், [துன்பங்கள்] தவா அது - முடிவின்றி, மேன்மேல் - இடைவிடாமல் மேலும் மேலும், வரும் - வந்து கொண்டே இருக்கும்.

[க-ரை] அவா இல்லாதவர்களுக்கு வருவதொரு துன்பம் இல்லை. அந்த ஒன்றும் இருந்துவிட்டால் எல்லாத் துன்பங்களும் இடைவிடாமல் வரும்.

9. இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 369

[ப-ரை] அவா - ஆசை, என்னும் - எனப்படும், துன்பத்துள் துன்பம் - துன்பங்களுக்குள்ளே பெரிய துன்பமானது, கெடின் - கெட்டு விட்டால், [பேரின்ப உலகில் மட்டுமின்றி] ஈண்டும் - உடம்போடு நின்றவழி இங்கேயும், இன்பம் - இன்பமானது, இடையறாது - இடைவிடாமல் வரும்.

[க-ரை] அவா என்று கூறப்படுகின்ற மிகுதியான துன்பம் ஒருவனுக்குக் கெடுமானால், அவனுக்குப் பேரின்பம் வீடு பெற்ற வழியேயன்றி உடம்போடு நின்ற வழியும் இன்பம் இடையீடின்றி வந்துகொண்டே இருக்கும்.

10. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். 370

[ப-ரை] ஆரா - ஒருபோதும் நிறைவு பெறாத, இயற்கை - தன்மையுடைய, அவா - ஆசையினை, நீப்பின் - நீக்குவானானால், அந்நிலையே - அப்போதே அந்த நிலைமை, பேரா - எப்போதும் [நீங்காத] ஒரே நிலையான, இயற்கை - தன்மையினை, தரும் - கொடுக்கும்.

[க-ரை] ஒருபோதும் நிறைவுபெறாத தன்மையுடைய ஆசையினை ஒருவன் நீக்கிவிட்டால், நீக்கிய அச்செயல் அவனுக்கு அப்போதே எக்காலத்திலும் ஒரு நிலையில் நிலைத்திருக்கும் தன்மையைத் தரும்.

## 38. ஊழ்

[ஊழின் தன்மை, வன்மை முதலியன கூறல்]

1. ஆகுஊழால் தோன்றும் அசைவுஇன்மை கைப்பொருள்
போகுஊழால் தோன்றும் மடி. 371

[ப-ரை] கைப்பொருள் - ஒருவற்குக் கையிலுள்ள பொருள், ஆகு - ஆவதற்குக் காரணமான, ஊழ் - ஊழினாலே, அசைவு இன்மை - முயற்சியானது, தோன்றும் - உண்டாவதாகும், போகு ஊழால் - பொருள் போவதற்குக் காரணமான ஊழினாலே, மடிதோன்றும் - சோம்பல் உண்டாகும்.

[க-ரை] ஒருவருக்குக் கைப்பொருள் ஆவதற்குக் காரணமான ஊழினால் முயற்சியானது தோன்றும். பொருள் அழிவதற்குக் காரணமான ஊழினால் சோம்பல் தோன்றும்.

2. பேதைப் படுக்கும் இழவுஊழ் அறிவகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை. 372

[ப-ரை] இழவு - கைப்பொருளினை இழப்பதற்குக் காரணமான, ஊழ் - ஊழ் உண்டான போது, அறிவு - ஒருவனுக்கு எல்லா அறிவும் இருந்தாலும், பேதை - அந்த அறிவினை அறியாமையாக, படுக்கும் - ஆக்கிவிடும், ஆகல் - பொருள் உண்டாவதற்கான, ஊழ் - ஊழானது, உற்றக்கடை - வந்துற்ற போது, அகற்றும் - அந்த அறிவினை நன்கு விரிவுபடுத்தும்.

[க-ரை] ஒருவனுக்கு எல்லா அறிவும் இருந்தாலும், கைப்பொருள் போவதற்குக் காரணமான ஊழ்வந்தபோது அது அந்த அறிவினைப் பேதையாக்கும். இனி, அவன் அறிவு சுருங்கி இருந்தாலும் கைப்பொருள் ஆவதற்குக் காரணமான ஊழ் வந்தபோது அது அவ்வறிவினை விரிவாக்கும்.

3. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும். 373

[ப-ரை] நுண்ணிய - நுட்பமான, நூல்பலகற்பினும்- பற்பல நூல்களையும் ஒருவன் கற்றானாயினும், மற்றும் - அவனுக்குப் பின்னும், தன் - தனது, உண்மை - ஊழினா லாகிய, அறிவே - பேதை அறிவே, மிகும் - மிகுந்து நிற்கும்.

[க-ரை] ஒருவன் நுண்ணிய பொருள்களை உணர்த்தும் நூல் பலவற்றைக் கற்றிருந்தாலும், அவனுக்குப் பின்னும் தன் ஊழாலாகிய பேதைமை (அறியாமை) அறிவே மேற்பட்டு நிற்கும்.

4. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. 374

[ப-ரை] உலகத்து - உலகத்தினுடைய, இயற்கை - ஊழென்னும் இயற்கையானது, இரு - இரண்டு, வேறு - வேறுபட்ட தன்மையாக இருக்கின்றது, திரு - செல்வம் உண்டாவதும், வேறு - வேறு, தெள்ளியராதலும் - அறிவுடையராதலும், வேறு - வேறு ஆகும்.

[க-ரை] உலகத்தில் ஊழினாலாகிய இயற்கை இரண்டு வகைப்படும். இரண்டு வேறுபட்ட தன்மையதாக இருக்கும். ஆதலால், செல்வம் உடையராதலும் வேறு; அறிவுடையராதலும் (தெள்ளியராதலும்) வேறு.

5. நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. 375

[ப-ரை] செல்வம் - செல்வத்தினை, செயற்கு - செய்து ஈட்டுவதற்கு, நல்லவை - நன்மையானவை, எல்லாம் - எல்லாம், தீயவாம் - தீயவைகளாக முடியும், தீயவும் - தீமையானவைகள், நல்லவாம் - நல்லவைகளாகச் செய்யும்.

[க-ரை] செல்வத்தை ஆக்குவதற்கு நல்லவையெல்லாம் தீயனவாய் அழிக்கும். அதுவேயன்றித் தீயவையெல்லாம் நல்லனவாய் ஆக்கும்; இவை ஊழினால் நடப்பதாகும்.

6. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 367

[ப-ரை] பால் - ஊழ்வகையால், அல்ல - தம்முடன் இருக்கமுடியாத பொருள்கள், பரியினும் - காப்பாற்றி வைக்கப்பட்டிருந்தாலும், ஆகாவாம் - நில்லாமற் போய் விடும், தம் - தம்மிடம் இருந்தே ஆக வேண்டிய பொருள்கள், உய்த்து - தாமே வெளியில் கொண்டுபோய், சொரியினும் போகா - எறிந்தாலும் போகாவாம்.

[க-ரை] ஊழினால் தம்மிடம் இருக்கக் கூடாத பொருள்கள், வருந்திக் காப்பாற்றினாலும் தம்மிடத்து நில்லாமல் போகும். ஊழினால் தம்மிடம் இருக்க வேண்டிய பொருள்கள் புறத்தே கொண்டு போய்த் தள்ளினாலும் தம்மை விட்டுப் போகாவாம்.

7. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. 377

[ப-ரை] கோடி - செல்வத்தினைக் கோடி அளவில், தொகுத்தார்க்கும் - முயன்று சேர்த்தவர்களுக்கும், வகுத்தான் - ஊழால் வகுத்தவன், வகுத்த - வகுத்து வைக்கப்பட்ட, வகை - வகையின்படி, அல்லாமல் - அல்லாமல், துய்த்தல் - நுகர்தல், அரிது - முடியாததாகும்.

[க-ரை] ஐம்பொறியினால் நுகரப்படும் பொருள்கள் கோடி அளவில் சேர்த்து வைத்திருந்தாலும் இயற்கையாகிய ஊழ் வகுத்த வகையால் அல்லது நுகர்தல் (அனுபவித்தல்) முடியாததாகும்.

8. துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும எனின். 378

[ப-ரை] உறற்பால - ஊழ் உண்டாக்கும் துன்பங்களை, ஊட்டா - உண்டாக்காமல், கழியும் - நீங்கும், எனின் - என்றால், துப்புரவு - நுகர்தற்கு ஏதும், இல்லார் - இல்லாதவர்கள், துறப்பார் - துறவியாகும் எண்ணமுடையவராவர்.

[க-ரை] ஊழ்வினைகள் அடைவிக்க வேண்டிய துன்பங்களை அடையும்படிச் செய்யாமல் நீங்குமேயானால், வறுமையினால் நுகர்தல் இல்லாதவர்கள் துறக்கும் கருத்துடையராவார்கள்.

9. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவது எவன். 379

[ப-ரை] நன்று - நல்வினைகள், ஆங்கால் - நன்மையினைத் தரும்போது, நல்லவாக் காண்பவர் - இவை இன்பம் தருபவைவயென்று கண்டு நுகர்பவர், அன்று - தீவினை, ஆங்கால் - துன்பங்களை உண்டாக்கும்போது, அல்லற்படுவது - [அதனையும் நுகர்ந்திருக்காமல்] துன்பப் படுவது, எவன் - யாது கருதியோ?

[க-ரை] நல்வினை விளையுங்கால் இன்பம் என்று அனுபவிப்பவர்கள், மற்ற தீவினை விளையும்போது துன்பங்களை அனுபவிக்காமல் வருந்துவது ஏனோ?

10. ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். 380

[ப-ரை] மற்று - [ஊழினை விலக்க] மாறான, ஒன்று - ஒரு வழியினை, சூழினும் - ஆராய்ந்து செய்தாலும், தான் - ஊழாகியதான், முந்துறும் - வேறு வழியாகவாவது வந்து முந்தியாக நிற்கும், [ஆதலால்] ஊழின் - ஊழினைப் போல,

பெரு-மிகப் பெரிய, வலி - வலிமையானது, யாஉள - எவை உள்ளன.

[க-ரை] தன்னை விலக்குதற் பொருட்டு வேறாகிய வழியினை முயன்றாலும், தான் பிறிதோர் வழியாகவாவது அந்த முயற்சிக்கு முந்தி நிற்கும். அதனால் ஊழினைப் போல மிக்க வலிமையுடையன யாவை உள?

# பொருட்பால்

## அரசியல்

### 39. இறைமாட்சி

[நாட்டிற்குத் தலைவனான மன்னனைப் பற்றிக் கூறுதல்]

1. படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 381

[ப ரை] படை - படையும், குடி - குடிமக்களும், கூழ் - பொருளும், அமைச்சு - அமைச்சும், நட்பு - நட்பும், அரண் - அரணும் [ஆகிய] ஆறும் உடையான் - ஆறு உறுப்புக்களையும் உடையவன், அரசருள் - அரசர்களுக்குள்ளே, ஏறு - ஆண் சிங்கம் போன்றவனாவான்.

[கு-ரை] படையும், குடிமக்களும், பொருளும், அமைச்சும், நட்பும், அரணும் ஆகிய ஆறு உறுப்புக்களையும் உடையவன் அரசர்களுள் ஆண் சிங்கம் போன்றவன் ஆவான்.

2. அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு. 382

[ப-ரை] வேந்தற்கு - வேந்தனுக்கு, இயல்பாவது - இயல்பான குணமாவது, அஞ்சாமை - அஞ்சாத

தன்மையும், ஈகை - ஈகைத்தன்மையும், அறிவு - அறிவும், ஊக்கம் - ஊக்கமும், இந்நான்கும் - ஆகிய இந்த நான்கு பண்புகளும், எஞ்சாமை - எப்போதும் நீங்காமல் இருத்தலாகும்.

[க-ரை] வேந்தர்க்கு இயல்பாக இருக்க வேண்டிய பண்புகள் எவையென்றால், அஞ்சாத திண்மை, கொடை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கும் இடைவிடாது நிற்றலாகும்.

**3. தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.** 383

[ப-ரை] நிலன் - நிலத்தினை, ஆள்பவர்க்கு - ஆளும் மன்னர்க்கு, தூங்காமை - செயல்களில் விரைவு உடைமையும், கல்வி - ஏற்ற கல்வியும், துணிவுடைமை - துணிவென்னும் ஆண்மையுடைமையுமாகிய, இம்மூன்றும் - இந்த மூன்று தன்மைகளும், நீங்கா - எக்காலத்திலும் நீங்காதிருப்பனவாகும்.

[க-ரை] பூமியை ஆட்சி புரியும் திருவுடையார்க்கு, செல்வங்களில் விரைவு உடைமையும், தக்க கல்வியும், ஆண்மையுடைமையும் ஆகிய இம்மூன்று குணங்களும் எப்பொழுதும் நீங்காதிருப்பனவாகும்.

**4. அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா**
**மானம் உடையது அரசு.** 384

[ப-ரை] அறன் இழுக்காது - அறத்திலிருந்து தவறாமல், அல்லவை - அறமல்லாதவற்றை, நீக்கி - தன்னிடம் உண்டாக்காமல் நீக்கி, மறன் - மறமான வீரத்திலிருந்து, இழுக்கா - தவறாது, மானம் - மானத்தினை [தாழ்வு இன்மையினை], உடையது அரசு - உடையவன் அரசனாவான்.

[க-ரை] அறத்திலிருந்து வழுவாமல் ஒழுகி, அறமல்லாதவற்றை நிகழவொட்டாமல் கடிந்து வீரத்தில் வழுவாத தாழ்வு இன்மையினை உடையான் அரசனாவான்.

5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. 385

[ப-ரை] இயற்றலும் - பொருள் வரும் வழிகளை மென்மேலும் உண்டாக்கலும், ஈட்டலும் - அவைகளை ஒரு வழித்தொகுத்தலும், காத்தலும் - அவைகளைப் பிறர் கொள்ளாமல் காத்தலும் காத்த வகுத்தலும் காத்தவற்றை முறையாகச் செலவிடுதலும், வல்லது அரசு - இவைகளில் வல்லவனே அரசனாவான்.

[கு-ரை] பொருள் வரும் வழிகளை மேன்மேல் உண்டாக்கலும், வந்தவற்றைத் தொகுத்தலும், காப்பாற்று தலும், காப்பாற்றியதைத் தக்கபடி வகுத்துச் செலவிடு தலும் ஆகியவற்றில் வல்லவனே அரசன்.

6. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 386

[ப-ரை] காட்சிக்கு — யாவரும் காண்பதற்கு, எளியன்- எளியவனாகி, கடும் - கடுமையான, சொல்லன் - சொல் லினன், அல்லனேல் - இல்லாதவனாக இருந்தால், மன்னன் - அம்மன்னனது, நிலம் - பூமியை, உலகம் - உலக மானது, மீக்கூறும் - எல்லா பூமிகளிலும் மேலானதென்று உயர்வாகப் பேசும்.

[கு-ரை] யாவர்க்கும் காணுவதற்கு எளியவனாகவும், யாவர்மாட்டும் கடுஞ்சொல்லன் அல்லனாகவும் இருப்பானே யானால் அம்மன்னனது நிலத்தினை எல்லா நிலங்களிலும் உயர்ந்ததாக உலகம் கூறும்.

7. இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் உலகு. 387

[ப-ரை] இன் - இனிய, சொலால் - சொற்களுடனே, ஈத்து - ஈதலைச் செய்து, அளிக்க - காப்பாற்ற, வல்லாற்கு- வல்ல மன்னனுக்கு, இவ்வுலகு - இந்த உலகமானது, தன் -

தனது, சொலால் - புகழுடன் பொருந்தி, தான் - தான், கண்டனைத்து - கருதின அளவினதாக அமையும்.

[க-ரை] இனிய சொல்லுடனே ஈதலைச் செய்து காப்பாற்ற வல்ல அரசனுக்கு இவ்வுலகம் தனது புகழோடு பொருந்தி அவன் எண்ணிய அளவில் இருக்கும்.

8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். 388

[ப-ரை] முறை - அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறியில், செய்து - ஆட்சி செய்து, காப்பாற்றும் - மக்களைக் காப்பாற்றுகிற, மன்னன் - மன்னவன், மக்கட்கு - மக்களுக்கு, இறை - செயலினாலே இறைவன், என்று - என்பதாக, வைக்கப்படும் - வைக்கப்படுவான்.

[க-ரை] அரசனுக்கு ஏற்ற முறையைச் செய்து மக்களைத் துன்புறாமல் காப்பாற்றும் மன்னவன் பிறப்பால் மகனேயானாலும் செயலால் மக்களுக்கு இறைவன் என்று வைக்கப்படும்.

9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 389

[ப-ரை] சொல் - துணைநிற்பவர் சொல்லும் சொற்கள், செவி - காது, கைப்ப - பொறுக்க முடியாததாக இருந்தாலும், பொறுக்கும் - பயன் கருதிப் பொறுத்துக் கொள்ளுகின்ற, பண்பு - நற்குணம், உடைய - உடைய, வேந்தன் - வேந்தனது, கவிகைக்கீழ் - குடைநிழலின் கீழ், தங்கும் உலகு - இந்த உலகமானது தங்கி இருக்கும்.

[க-ரை] துணையாக இருப்போர் செவிப்பொறுத்துக் கொள்ள முடியாத சொற்களைச் சொன்னாலும் அவற்றின் நன்மை கருதிப் பொறுத்துக் கொள்ளும் பண்புடை வேந்தனது குடை நிழலில் உலகம் தங்கி நிற்கும்.

**10. கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க்கு ஒளி. 390**

[ப-ரை] *கொடை* - ஈகைத்தன்மையால் கொடுத்தலும், *அளி* - முகமலர்ந்து இன்சொல் கூறலும், *செங்கோல்* - முறை செய்தலும், *குடி* - குடிமக்களை, *ஓம்பல்* - பேணிக் காத்தலும், [ஆகிய] *நான்கும்* - இந்த நான்கும், *உடையான்* - உடையவன், *வேந்தர்க்கு ஒளி* - வேந்தர்களுக்கெல்லாம் ஒளிதரும் விளக்கு போன்றவன் ஆவான்.

[க-ரை] கொடுத்தலும், முகமலர்ந்து பேசுதலும், முறைசெய்தலும், குடிகளைக் காத்தலும் ஆகிய இந்நான்கும் உடையவன் வேந்தர்களுக்கெல்லாம் விளக்காவான்.

## 40. கல்வி

[கற்கவேண்டியவைகளும் சிறப்பும் பயனும்]

**1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. 391**

[ப-ரை] *கற்பவை* - படிப்பதற்குரிய நூல்களை, *கசடு* - பழுது, *அற* - இல்லாமல், *கற்க* — கற்றல் வேண்டும், *கற்ற* — அப்படிக் கற்ற; *பின்* - பிறகு, *அதற்கு* - அக்கல்விக்கு, *தக* - தக்கபடி, *நிற்க* - நின்று ஒழுகுதல் வேண்டும்.

[க-ரை] ஒருவன் கற்றற்குரிய நூல்களைப் பழுதறக் கற்றல் வேண்டும். அப்படிக் கற்றபிறகு அக்கல்விக்கேற்பத் தக்கபடி ஒழுகுதல் வேண்டும்.

**2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு. 392**

[ப-ரை] *எண்* - எண், *என்ப* - என்று சொல்லப்படுபவைகளையும், *ஏனை* — மற்றை, *எழுத்து* - எழுத்து,

என்ப - என்று சொல்லப்படுபவைகளையும், இவ்விரண்டும் - ஆக இந்த இரண்டினையும், வாழும் - வாழ்தற்குரிய, உயிர்க்கு - மக்களுக்கு, கண்என்ப - கண்களாகும் என்று அறிந்தோர் கூறுவர்.

[க-ரை] எண் என்று சொல்லப்படுவதும், எழுத்து என்று சொல்லப்படுவதும் ஆகிய இரண்டையும் அறிந்தோர், சிறப்புடைய மக்களுயிர்கட்குக் கண் என்று சொல்லு வார்கள்.

3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 393

[ப-ரை] கண் - கண்கள், உடையர் - உடையவர்கள், என்பவர் - என்று சிறப்பாகச் சொல்லப்படுபவர்கள், கற்றோர் - கற்றவர்களே ஆவார்கள், கல்லாதவர் - கற்காதவர்கள், முகத்து - முகத்தில், இரண்டு - இரண்டு, புண் - புண்களை, உடையவர் - உடையவர்களாவார்கள்.

[க-ரை] கண்ணுடையவர்கள் என்று உயர்த்திச் சொல்லப்படுபவர்கள் கற்றவர்களே ஆவார்கள். கல்லாத வர்கள் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்கள் ஆவார்கள்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 394

[ப-ரை] உவப்ப - பிறர் மகிழுமாறு, தலைக்கூடி - அவருடன் கலந்து, உள்ள - இனி எப்போது அவரைக் காண்போம் என்று நினைக்கும்படியாக, பிரிதல் - பிரிவ தாகிய, அனைத்து - அத்தன்மையினை உடையதே, புலவர் - கற்றறிந்தவர்களது, தொழில் - செயலாகும்.

[க-ரை] யாவரும் மகிழுமாறு அவர்களுடன் சேர்ந்து பழகி, 'இனி அவரை எப்போது காண்போம்' என நினைத் துப் பிரிகின்ற தன்மையுடையதே கற்றவர்களின் தொழி லாகும்.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். 395

[ப-ரை] உடையார் - செல்வந்தர், முன் - முன்னே, இல்லார்போல் - பொருளில்லாத வறிஞர் போல, ஏக்கற்றும்-தாழ்ந்து நின்று, கற்றார் - கற்றவர்களே, சிறந்தோரா வார், கல்லாதவர் - அவ்வாறு கல்லாதவர்கள், கடையரே- தாழ்ந்தவரேயாவார்.

[க-ரை] செல்வர்கள் முன்னே வறியவர்கள் நிற்றல் போல, தம்முடைய ஆசிரியர் முன்னே நின்று கல்வி கற்றவர்களே உயர்ந்தோராவர். அவ்வாறு கற்பதற்கு நாணமுற்றுக் கல்லாதவர்கள் இழிந்தோரேயாவர்.

6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு. 396

[ப-ரை] மணற்கேணி - மணலின்கண்ணேயுள்ள கேணியானது, தொட்டனைத்து - தோண்டிய அளவுதான், ஊறும் - நீரானது சுரக்கும், [அதுபோல] மாந்தர்க்கு - மக்களுக்கு, அறிவு - அறிவானது, கற்றனைத்து - கற்ற அளவுதான், ஊறும் - சுரக்கும்.

[க-ரை] மணலின்கண் இருக்கும் கேணியானது தோண்டிய அளவுதான் நீரினைச் சுரக்கும். மக்களுக்குக் கற்ற அளவுதான் அறிவு சுரக்கும்.

7. யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. 397

[ப-ரை] யாதானும் - கற்றவனுக்கு எந்த ஒரு நாடும், நாடாம் - தன்னுடைய நாடாகும், ஊராம் - தன்னுடைய ஊராகும், [அப்படியிருக்க] சாந்துணையும் - இறப்பு வரும் வரையிலும், ஒருவன் கல்லாதவாறு - ஒருவன் கல்லாமல் காலம் கழிப்பது, என் - என்ன கருதி.

[க-ரை] கற்றவனுக்குத் தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த ஊரும் நாடும் தன்னுடைய ஊராகும்; நாடாகும். அப்படியிருக்க, ஒருவன் தான் இறக்குமளவும் கல்லாமல் காலம் கழிப்பது என்ன நினைத்தோ?

8\. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. 398

[ப-ரை] ஒருவற்கு - ஒருவனுக்கு, தான் - தான், ஒருமைக்கண் - ஒரு பிறப்பிலே, கற்ற - கற்ற, கல்வி - கல்வியானது, எழுமையும் - எழுகின்ற பல பிறப்புக்களிலும், ஏமாப்பு - பாதுகாப்பாக, உடைத்து - உதவுதலை உடையதாகும்.

[க-ரை] ஒருவனுக்குத் தன் பிறப்பிலே கற்ற கல்வியானது எழுகின்ற பல பிறப்புக்களிலும் பாதுகாப்பாக உதவுதலை உடையதாகும்.

9\. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 399

[ப-ரை] தாம் இன்புறுவது - தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்விக்கு, உலகு - உலகமானது, இன்புறக் கண்டு - இன்பமடைவதைக் கண்டறிந்து, கற்றறிந்தார் - கற்றறிந்த பெரியோர்கள், காமுறுவர் - பின்னும் அக்கல்வியினையே பெரிதும் விரும்புவார்கள்.

[க-ரை] தாங்கள் இன்பமடைவதற்குக் காரணமான கல்விக்கு உலகமானது இன்பமடைவதைக் கண்டறிந்து கற்றறிந்தவர் பின்னும் அக்கல்வியினையே பெரிதும் விரும்புவர்.

10\. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை. 400

[ப-ரை] ஒருவற்கு - ஒருவனுக்கு, கேடு - அழிவு, இல் - இல்லாத, விழுச்செல்வம் - சீர்மை நிறைந்த செல்வமானது;

கல்வி - கல்வியாகும், மற்றையவை - மற்ற செல்வங்கள்; மாடு - பெருமையுடையவை, அல்ல - அல்ல.

[க-ரை] ஒருவனுக்கு அழியாத சீரிய செல்வமானது கல்வியேயாகும். அஃது அல்லாமல் மற்றைய செல்வங்களெல்லாம் பெருமையானவை அல்ல.

## 41. கல்லாமை

### [கல்வி இல்லாமையின் இழிவு]

1. அரங்குஇன்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல். 401

[ப-ரை] நிரம்பிய - தன் அறிவு நிரம்புவதற்குக் காரணமான, நூல் இன்றி - நூல்களைக் கற்றறியாமல், கோட்டி கொளல் - அவையில் ஒன்றினைச் சொல்லுதல், அரங்கு இன்றி - ஆடுகின்ற அரங்கில்லாமல், வட்டாடியற்றே - உண்டை [பகடைக்காய்] உருட்டியது போன்றதாகும்.

[க-ரை] தனக்கு அறிவு நிரம்புதற்குக் காரணமான நூல்களைக் கல்லாத ஒருவன், அவையில் ஒன்றனைச் சொல்லுதல், ஆடுகின்ற அரங்கினை அமைக்காமல் உண்டை (பகடைக்காய்) உருட்டியது போன்றதாகும்.

2. கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 402

[ப-ரை] கல்லாதான் - கல்வி இல்லாதவன், சொல் காமுறுதல் - அவையில் [சபையில்] ஒன்றைச் சொல்ல ஆசைப்படுதல், முலை இரண்டும் - இரண்டு முலைகளும்; இல்லாதாள் - இல்லாத ஒருத்தி, பெண் - பெண் தன்மையினை [இன்பத்தினை], காமுற்றற்று - ஆசைப்பட்டது போன்றதாகும்.

[க-ரை] கல்வி இல்லாத ஒருவன் அவையில் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுதல் முலை இரண்டும் இல்லாத (முகிழ்த்தல் இல்லாத) பெண்ணான ஒருத்தி பெண்ணின் பத்தை விரும்பியது போலாகும்.

3. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். 403

[ப-ரை] கற்றார்முன் - கற்றறிந்தவர்கள் இருக்கும் அவையில், சொல்லாது - யாதொன்றையும் சொல்லாமல், இருக்க - இருக்கும் தன்மையினை, பெறின் - பெற்றிருப்பார்களேயானால், கல்லாதவரும் - கல்வி இல்லாதவர்களும், நல்லர் - நல்லவர்களாவார்கள்.

[க-ரை] தாமே தம்மையுணர்ந்து கொண்டு கற்றார் இருக்கும் அவையின்கண் ஒன்றனையும் சொல்லாதிருந்தால், கல்லாதவர்களும் மிகவும் நல்லவர்கள் ஆவார்கள்.

4. கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடை யார். 404

[ப-ரை] கல்லாதான் - கல்லாதவனுடைய, ஒட்பம் - அறிவுடைமையானது, கழிய - மிகவும், நன்றாயினும் - ஒரோ வழி நன்றாக இருந்தாலுங்கூட, அறிவுடையார் - அறிவுள்ளவர்கள், கொள்ளார் - அதனை அறிவுடைமையாகக் கொள்ள மாட்டார்கள்.

[க-ரை] கல்லாதவனுடைய அறிவுடைமை ஒரு நேரத்தில் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையவர்கள் அதனை அறிவாகக் கொள்ள மாட்டார்கள்.

5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 405

[ப-ரை] கல்லா - கல்வியறிவில்லாத, ஒருவன் - ஒருவன், தகைமை - கற்றவனென்று தன்னை மதிக்கும் மதிப்பு, தலைப்பெய்து - கற்றவனைக் கண்டு, சொல்லாட - உரையாட, சோர்வுபடும் - கெட்டுவிடும்.

[க-ரை] நூல்களைக் கல்லாத ஒருவன், தான் கற்றவ னென்று தன்னை மதித்துக் கொள்ளும் மதிப்பு அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக் கெட்டுவிடும்.

6. உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
 களர்அனையர் கல்லா தவர். 406

[ப-ரை] கல்லாதவர் - கல்லாதவர்கள், உளர் - இருக் கின்றார்கள், என்னும் - என்று சொல்லப்படும், மாத்தி ரையர் அல்லால் - அளவினர் ஆவதேயல்லாமல், பயவா - விளையாத, களர் - பயனில்லாத களர் நிலத்தினை, அனையர் - போன்றவர்கள் ஆவார்கள்.

[க-ரை] கல்லாதவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்று சொல்லப்படும் அளவினர் ஆவதேயல்லாமல், தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் அவர்கள் விளையாத களர் நிலத்தினை ஒப்பராவர்.

7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
 மண்மாண் புனைபாவை அற்று. 407

[ப-ரை] நுண் - நுட்பமாகிய, மாண் - மாட்சிமை யுடையதாகி, நுழைபுலம் - நூல்களில் சென்ற அறிவினை, இல்லான் - இல்லாதவனுடைய, எழில் நலம் - எழுச்சியும் நல்ல அழகும், மண் - மண் சாந்தினாலே, மாண் - மாட்சிமை யாக, புனை - அலங்காரம் செய்து புனையப்பட்ட, பாவை - பாவை அழகையும் எழுச்சியையும் கொண்டிருப்பதை, அற்று - போன்றதாகும்.

[க-ரை] நுண்ணியதாகப் பெருமையுடையதாகிப் பல நூல்களிலும், சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சி யும், அழகும் மண் சாந்தினால் செய்யப்பட்ட பாவையி னுடைய எழுச்சியும் அழகும் போன்றதாகும்.

8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. 408

[ப-ரை] கல்லார்கண் - கல்லாதவரிடத்தில், பட்டதிரு - இருக்கின்ற செல்வம், நல்லார்கண் - நன்கு கற்றவரிடத்தில், பட்டவறுமையின் - உண்டாகியுள்ள வறுமையினைக் காட்டிலும், இன்னாதே - துன்பம் தருவதாகும்.

[க-ரை] கல்லாதவர்களிடத்தில் உண்டாகிய செல்வமானது கற்றவரிடத்தில் உண்டாக்கிய வறுமையினை விடவும் துன்பம் செய்வதாகும்.

9. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்துஇலர் பாடு. 409

[ப-ரை] கல்லாதார் - கல்வியறிவில்லாதவர்கள் மேற்பிறந்தார் - மேலான குடும்பத்தில் பிறந்தவர்கள், ஆயினும் - ஆனாலும், கீழ்ப்பிறந்தும் - கீழான குடும்பத்தில் பிறந்திருந்தும், கற்றாரனைத்து - கற்றவரடையும் அளவு, பாடு இலர் - சிறப்பு இல்லாதவராவார்கள்.

[க-ரை] கல்லாதவர்கள் மேலானவர்கள், பிறந்த குடும்பத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும், கீழானவர்கள் குடும்பத்தில் பிறந்து, கற்றவர்களாக இருப்பவரது பெருமையினைப் பெறாதவர்களாவார்கள்.

10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். 410

[ப-ரை] இலங்கு - விளங்கிய, நூல் - நூலினை, கற்றாரோடு - கற்றவர்களோடு நோக்க, ஏனையவர் - கல்லாதவர்கள், விலங்கொடு - விலங்குகளோடு [ஒப்பிட்டுப் பார்க்க] மக்களனையர் - மக்கள் எவ்வளவு நன்மையுடையவர்களோ அவ்வளவு தீமையுடையவர்களாவார்கள்.

[க-ரை] விளக்கம் நிறைந்த நூல்களைக் கற்றவருடன் நோக்கக் கல்லாதவர்கள் - மிருகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க மக்களாய்ப் பிறந்தவர்கள் எவ்வளவு நல்லவர்களோ - அவ்வளவு தீமையுடையவர்களாவார்கள்.

## 42. கேள்வி

### [கற்றறிந்தவர் சொல்வதைக் கேட்டல்]

1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 411

[ப-ரை] செல்வத்துள் - செல்வங்களுள் எல்லாம், செல்வம் - சிறப்பான செல்வமானது, செவிச் செல்வம் - செவியால் வரும் செல்வமாகும், அச்செல்வம் - அச் செல்வமானது, செல்வத்துள் - பிற செல்வங்கள், எல்லாம் - எல்லாவற்றிலும், தலை - தலைமையானதாகும்.

[க-ரை] ஒருவர்க்குச் சிறப்புடைய செல்வமானது செவியால் வரும் செல்வமாகும். அச்செல்வம் பிற செல்வங்கள் எல்லாவற்றையும்விடத் தலையாய செல்வமாகும்.

2. செவிக்கு உணவு இல்லாதபோழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 412

[ப-ரை] செவிக்கு - காதுக்கு, உணவு - உணவாகிய கேள்வி, இல்லாத - இல்லாத, போழ்து - நேரத்தில், வயிற்றுக்கும் - வயிற்றுக்கும், சிறிது ஈயப்படும் - சிறிதளவு உணவு இடப்படும்.

[க-ரை] காதுக்கு உணவாகிய கேள்வி இல்லாதபோது வயிற்றுக்கும் சிறிதளவு உணவு இடப்படும்.

3. செவியுணவிற் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து. 413

[ப-ரை] செவி - செவிக்கு, உணவின் - உணவாகிய, கேள்வி உடையார் - கேள்வியினை உடையவர்கள், நிலத்து - பூமியில் இருந்தாலும், அவி - வேள்வித்தீயில் இடப்படும், உணவின் - [அவியாகிய] உணவினையுடைய, ஆன்றாரோடு - தேவர்களோடு, ஒப்பர் - ஒப்பாவார்கள்.

[க-ரை] செவி உணவாகிய கேள்வியினையுடையவர்கள், பூமியில் வாழ்பவர்களாக இருந்தாலும் அவி உணவினையுடைய தேவர்களோடு ஒப்பாவார்கள்.

4. கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை. 414

[ப-ரை] கற்றிலன் - ஒருவன் கல்லாதவனே, ஆயினும் - ஆனாலும், கேட்க - கற்றார் சொல்லக் கேட்டல் வேண்டும், அஃது - அக்கேள்வியறிவானது, ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒற்கத்தின் - மனத்தளர்ச்சி வந்தபோது, ஊற்றாம் - பற்றுக்கோடான, துணை - துணையாகும்.

[க-ரை] நூல்களை ஒருவன் கற்காவிட்டாலும், கற்றறிந்தார் சொல்லக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்டது, ஒருவனுக்குத் தளர்ச்சி வந்த காலத்தில் பற்றுக்கோடாகத் துணை செய்யும்.

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். 415

[ப-ரை] ஒழுக்கம் - ஒழுக்கம், உடையார் - உடையவர்களின், வாய்ச்சொல் - வாயில் பிறக்கின்ற சொற்கள், இழுக்கல் - வழுக்குதல், உடையுழி - உண்டானபோது, [சேற்று நிலத்தில்] ஊற்றுக் கோல் - ஊற்றுக்கோல், அற்றே - போன்று உதவும்.

[க-ரை] வழுக்குதலையுடைய சேற்று நிலத்தில் நடந்து போகின்றவர்களுக்கு ஊன்றுகோல் போல, துன்பம் வந்த காலத்தில் ஒழுக்கமுடையவர்களுடைய வாயிலிருந்து வரும் சொற்கள் துணையாக நின்று உதவும்.

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 416

[ப-ரை] எனைத்தானும் - எவ்வளவு சிறிதேயானாலும், நல்லவை கேட்க - நல்ல உறுதிப்பொருள்களைக் கேட்டறிதல் வேண்டும், [அவ்வாறு கேட்டறிவது] அனைத்தானும் - அந்த அளவினாலும், ஆன்ற - நிறைந்த. பெருமை - பெருமையினை, தரும் - தருவதாகும்.

[க-ரை] ஒருவன் சிறிதளவாகவேனும் நற்பொருள் களைக் கேட்டாலும், அக்கேள்வியானது அந்த அளவுக் காவது நிறைந்த பெருமைகளைத் தரும் என்பதாகும்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்
[இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி அவர். 417

[ப-ரை] இழைத்துணர்ந்து - நுண்ணியதாக ஆராய்ந்தறிந்து, ஈண்டிய - நிறைந்த, கேள்வியவர் - கேள்வியினையுடையவர்கள், பிழைத்து - தவறாக, உணர்ந்தும் - உணர்ந்த போதும், பேதைமை - அறியாமையினைப் பயக்கும் சொற்களை, சொல்லார் - சொல்லமாட்டார்கள்.

[க-ரை] நுட்பமாக ஆராய்ந்து அறிந்து நிறைந்த கேள்வியுடையவர்கள் தவறாக பேதைமையினை உண்டாக்கும் சொற்களைச் சொல்லமாட்டார்கள்.

8. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. 418

[ப-ரை] கேள்வியால் - உறுதிப் பொருள்களைக் கேட்டு, தோட்கப்படாத - துளைக்கப்படாத, செவி -

காதுகள், கேட்பினும் - ஓசையைக் கேட்பதாக இருந்தாலும் கேளா - கேட்காத, தகையவே - தன்மையானவையே ஆகும்.

[க-ரை] கேள்வி ஞானத்தாலே துளைக்கப்படாத காதுகள் ஓசையினைக் கேட்பதாக இருந்தாலும் கேளாத - செவிடான தன்மை உடையனவே ஆகும்.

9. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது. 419

[ப-ரை] நுணங்கிய - நுண்ணியதாகிற, கேள்வியர் - கேள்வியினையுடையவர், அல்லார் - அல்லாதவர்கள், வணங்கிய - பணிவான வணக்கத்தினையுடைய, வாயினர் - சொல்லினையுடையவர், ஆதல் - ஆகுதல், அரிது - கூடாததாகும்.

[க-ரை] நுட்பமாக கேள்வி ஞானத்தினை உடையவரல்லாதவர்கள் வணக்கத்தினைக் காட்டுகிற சொற்களையுடையவராதல் என்பது முடியாததாகும்.

10. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். 420

[ப-ரை] செவியின் - செவியால் அறிந்துணரும், சுவை - சுவைகளை, உணரா - அறியாமல், வாயுணர்வின் - வாயின் சுவை உணர்ச்சிகளையுடைய, மாக்கள் - மாந்தர், அவியினும் - இறந்தாலும், வாழினும் - வாழ்ந்தாலும், என் - என்ன பயனாகும்.

[க-ரை] செவிகளால் அறியப்படும் சுவைகளை அறியாமல் வாய் உணர்வினை மட்டும் உடைய மாந்தர் இறந்தாலும் வாழ்ந்தாலும் ஆகும் பயன் யாது?

# 43. அறிவுடைமை

## [கல்வி கேள்விகளினால் அறிவுடையவனாக இருத்தல்]

1. அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண். 421

[ப-ரை] அறிவு - அறிவு என்பது, அற்றம் - இறுதி வராமல், காக்கும் கருவி - காப்பாற்றுகிற படையாகும், செறுவார்க்கும் - பகைவர்களுக்கும், அழிக்கல் - அழிக்க, ஆகா - முடியாத, உள் அரண் - உள்ளிருப்பதாகிய காவலிடமும் ஆகும்.

[க-ரை] அறிவு என்பது இறுதி வராமல் காப்பாற்றுகின்ற கருவியாகும். பகைவர்களாலும் அழிக்க முடியாத உள்ளிருப்பதாகிய காவலிடமென்னும் கோட்டையாகும்.

2. சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. 422

[ப-ரை] சென்ற - மனத்தினை அது சென்ற, இடத்தால் - எண்ணமாகிய வழியிலே, செலவிடா - போக விடாமல், தீது - தீமையிலிருந்து, ஒரீஇ - நீக்கி, நன்றின் பால் - நல்லவையிடத்து, உய்ப்பதுஅறிவு - செலுத்துவது அறிவாகும்.

[க-ரை] மனத்தினை அது சென்ற வழியிலே போக விடாமல் தீமையிலிருந்து நீக்கி நல்லவையிடத்தே செலுத்துவது அறிவாகும்.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 423

[ப-ரை] எப்பொருள் - எந்தவொரு பொருளை, யார் யார் - எவரெவர், வாய்க் கேட்பினும் - சொல்லக்

கேட்டாலும், அப்பொருள் அப்பொருளினுடைய, மெய்ப் பொருள் - உண்மையான பயனை, காண்பது அறிவு - காணும் வல்லமையுள்ளது அறிவாகும்.

[க-ரை] எந்த ஒரு பொருளைப் பற்றியும் யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளினுடைய உண்மையான கருத்தின் பயனைக் காணும் வல்லமையுள்ளது அறிவாகும்.

4. எண்பொருள ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.

[ப-ரை] தான் - தான், எண் - பிறர் அறிந்து கொள்ள எளிமை, பொருள் ஆக - விளங்கும் பொருளாக, செலச் சொல்லி, மனங்கொள்ளுமாறு சொல்லி, பிறர்வாய் - பிறர் வாயில் கேட்கும் சொற்களில், நுண் - நுணுக்கமான, பொருள் - பொருள்களை, காண்பது அறிவு - கண்டறிய வல்லது அறிவாகும்.

[க-ரை] தான் பிறர் அறிந்து கொள்ளுவதற்கு எளிமையாக மனங்கொள்ளும்படியாகச் சொல்லி, பிறர் வாயில் கேட்கும் சொற்களில் நுணுக்கமான பொருள்களைக் கண்டறிய வல்லது அறிவாகும்.

5. உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு. 425

[ப-ரை] உலகம் - உலகத்தில் உயர்ந்தோரை, தழீ இயது - நட்பாக்கிக் கொள்ளுவது ஒட்பம் - ஒருவனுக்கு அறிவுடைமையேயாகும், மலர்தலும் - முன்மலர்தலும், கூம்பலும் - பின் குவிதலும், இல்லது அறிவு - இல்லாதது அறிவாகும்.

[க-ரை] உயர்ந்தோர்களை நட்பாக்கிக் கொள்ளுவது ஒருவனுக்கு அறிவுடைமையாகும். உலகத்தினைத் தழுவி நடப்பதும் அதுவேயாகும். அந்நட்பின்கண் முன் மலர்

தலும், பின் குவிதலும் இல்லாமல் ஒரே நிலையில் நிற்பது அறிவாகும்.

6. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு. 426

[ப-ரை] உலகம் - உலகமானது, எந்த முறையினால், உறைவது - நடந்து வருகின்றதோ, உலகத்தோடு - அவ்வாறு உலகத்துடன் பொருந்தி, அவ்வது - தானும் அந்த முறையினால், உறைவதும் அறிவு - நடந்து கொள்ளுவது அறிவுடைமையாகும்.

[க-ரை] உலகமானது எந்த முறையில் நடந்து வருகின்றதோ அவ்வுலகத்துடன் பொருந்தித் தானும் அந்த முறையில் நடந்து கொள்ளுவது அறிவுடைமையாகும்.

7. அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர். 427

[ப-ரை] அறிவு - அறிவினை, உடையார் - உடையவர்கள், ஆவது - பின்னர் வர இருப்பதை, அறிவார் - முன்பாகவே அறிய வல்லவராவார்கள். அறிவு - அறிவு, இலார் - இல்லாதவர்கள், அஃது - அவ்வாறு பின்னர் வர இருப்பதனை, அறிகல்லாதவர் - முன்னே அறிந்து கொள்ள முடியாதவர்கள்.

[க-ரை] அறிவுடையார் பின்னர் வருவதை அறிய வல்லவராவர், அறிவில்லாதவர்கள் அவ்வாறு பின்னர் வர இருப்பதனை முன்னே அறிந்துகாள்ள முடியாதவர்கள் ஆவார்கள்.

8. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். 428

[ப-ரை] அஞ்சுவது - அஞ்ச வேண்டியதற்கு, அஞ்சாமை - அஞ்சாதிருத்தல், பேதைமை - அறிவில்லாமையாகும், அஞ்சுவது - அஞ்ச வேண்டியதற்கு, அஞ்சல் -

அஞ்சுதல். அறிவார் - அறிவுடையோர்களது, தொழில் - செயலாகும்.

[க-ரை] அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாதிருத்தல் அறியாமையாகும். அஞ்சவேண்டியதற்கு அஞ்சுதல் அறிவுடையோர்களது தொழிலாகும்.

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய். 429

[ப-ரை] எதிரதா - பின் வருவதனை முன்னறிந்து, காக்கும் - காத்துக் கொள்ளும், அறிவினார்க்கு - அறிவுடையோர்க்கு, அதிர - நடுங்கும்படியாக, வருவதோர் - வருவதொரு, நோய் இல்லை - துன்பம் இல்லை.

[க-ரை] இனி வரக்கூடியதனை முன்னமேயே அறிந்து காத்துக் கொள்ளும் அறிவுடையோர்க்கு நடுங்கும்படியாக வருவதொரு துன்பம் இல்லை.

10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 430

[ப-ரை] அறிவுடையார் - அறிவுடையவர்கள், எல்லாம் - வேறெதுவும் இல்லாதிருந்தாலும், உடையார் - எல்லாம் உடையவரேயாவார்கள், அறிவிலார் - அறிவில்லாதவர்கள், என் - எல்லாம், உடையரேனும் - உடையவராக இருந்தாலும், இலர் - ஒன்றும் இல்லாதவரே ஆவார்கள்.

[க-ரை] அறிவுடையவர்கள், வேறு பொருள்கள் எதுவும் இல்லாதிருந்தாலும், எல்லாம் உடையவர்களே யாவார்கள். அறிவில்லாதவர்கள் எல்லாப் பொருள்களும் உடையவர்களாகவே இருந்தாலும் ஒன்றும் இல்லாதவர்களேயாவார்கள்.

# 44. குற்றங்கடிதல்

[குற்றங்கள் யாவை என்பதும் வாராமல் காத்தலும்]

1. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 431

[ப-ரை] செருக்கும் - மதம் என்பதும், சினமும் - கோபமும், சிறுமை - காமமும் [ஆகிய குற்றங்கள்] இல்லார் - இல்லாதவருடைய, பெருக்கம் - செல்வமானது, பெருமித - மேம்பாடான, நீர்த்து - தன்மையினையுடையதாகும்.

[க-ரை] செருக்கும் (மதமும்), கோபமும், காமமும் ஆகிய குற்றங்கள் இல்லாதவருடைய செல்வம் மேம்பாடான தன்மையினை உடையதாகும்.

2. இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. 432

[ப-ரை] இவறலும் - கொடுக்க வேண்டியதற்குப் பொருள் கொடாதிருத்தலும், மாண்பு - நன்மையின், இறந்த - நீங்கிய, மானமும் - மானமும், மாணா - அளவு கடந்த, உவகையும் - களிப்பும், இறைக்கு - மன்னனுக்கு, ஏதம் - குற்றங்கள் எனப்படும்.

[க-ரை] கொடுக்க வேண்டியவற்றிற்குப் பொருள் கொடாதிருத்தலும், நன்மையில் நீங்கிய மானமும், அளவு கடந்த உவகையும் அரசனுக்குக் குற்றங்களாகும்.

3. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 433

[ப-ரை] பழி - பழிக்கு, நாணுவார் - நாணமுற்று அஞ்சுபவர்கள், தினைத்துணையாம் - தினையளவு சிறிதான, குற்றம் - குற்றமானது, வரினும் - தம்மிடத்தில்

உண்டானாலும், [அதனை] பனைத்துணையா - பனையி னளவு பெரிதாக, கொள்வர் - கருதுவார்கள்.

[க-ரை] பழிக்கு நாணமுற்று அஞ்சுபவர்கள் தினை யளவு சிறிதான குற்றமானது தங்களிடத்தில் உண்டானா லும் அதனைப் பனையளவு பெரிதாகக் கருதுவார்கள்.

4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை. 434

[ப-ரை] அற்றம் - முடிவினை, தரூஉம் - தருவதான, பகை - பகை, குற்றமே - குற்றமேயாகும், [ஆதலால்] குற்றமே - அக்குற்றமானது வாராமல், பொருளாக - கருத்தாகக் கொண்டு, காக்க - தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] முடிவினைத் தருவதாகிய பகை குற்றமே யாகும். ஆதலால் அக்குற்றம் தனக்கு வாராதிருப் பதனையே பயனாகக் கொண்டு காத்தல் வேண்டும்.

5. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 435

[ப-ரை] வருமுன்னர் - குற்றமானது வருவதற்கு முன்னதாகவே, காவாதான் - தன்னைக் காத்துக் கொள் ளாதவனுடைய, வாழ்க்கை - வாழ்க்கையானது, எரி - நெருப்பின், முன்னர் - முன்னே இருக்கும், வைத்தூறு - வைக்கோல் குவியலை, போல - போன்று, கெடும் - கெட்டு விடும்.

[க-ரை] குற்றம் வருவதற்கு முன்பாகவே தன்னைக் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை அக்குற்றம் வந்தால் நெருப்பின் முன்னே இருக்கும் வைக்கோலினைப் போல அழிந்துவிடும்.

6. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு. 436

[ப-ரை] தன் - தன்னுடைய, குற்றம் - குற்றத்தினை, நீக்கி - முன்னே நீக்கிவிட்டு, பிறர் - மற்றவருடைய, குற்றம் - குற்றத்தினை, பின் காண்கின் - பின்னே காண வல்லவனானால், இறைக்கு - தலைவனுக்கு, ஆகும் - உண்டாகக் கூடிய, குற்றம் என் - குற்றம் யாதாக இருக்க முடியும்?

[க-ரை] தன்னுடைய குற்றத்தினை முன்னதாகவே கண்டுகொண்டு அதனை நீக்கிப் பின்னர், பிறர் குற்றத்தினைக் காண வல்லவராக இருந்தால் தலைவனுக்கு நேரக் கூடிய குற்றம் யாது?

7. செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். 437

[ப-ரை] செயற்பால - பொருளால் தனக்குச் செய்யப் படவேண்டியவைகளை, செய்யாது - செய்துகொள்ளாமல், இவறியான் - உலோபம் செய்தவனுடைய, செல்வம் - செல்வம், உயல் - பின்பு இருப்பதாகிய, பாலது - தன்மை, அன்றி - இல்லாமல், கெடும் - பயனின்றிக் கெட்டுவிடும்.

[க-ரை] செல்வத்தினால் தனக்குச் செய்து கொள்ள வேண்டியவற்றைச் செய்து கொள்ளாமல் உலோபியாக அதனிடம் மிகுந்த பற்று வைத்திருப்பவனுடைய செல்வம், பின்னர் இல்லாததாகிக் கெட்டுவிடும்.

8. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன்று அன்று. 438

[ப-ரை] பற்று - பொருளினை விடாமல் பற்றிக் கொண்டிருக்கும், உள்ள - மனப்பான்மை, என்னும் - என்கின்ற, இவறன்மை - உலோபத் தன்மையானது, எற்றுள்ளும் - எல்லாக் குற்றத் தன்மைகளுள்ளும், எண்ணப்

படுவது - வைத்து எண்ணப்படுவது, ஒன்று - ஒன்று; அன்று - அல்ல என்பதாம். [எல்லாவற்றினும் மிகுதியான குற்றமாகும்]

[க-ரை] செய்யவேண்டிய ஈகைச் செயல்களைச் செய்யாமல் கருமித் தனத்தால் பற்றுதலை வைத்திருக்கும் அத்தன்மை, குற்றமான தன்மைகளுள் ஒன்றாக வைத்து எண்ணப்படுவதொன்று அன்று; அது மிகுந்த குற்றமாகும்.

9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 439

[ப-ரை] எஞ்ஞான்றும் - தான் மிக உயர்ந்திருக்கும் காலத்திலும், தன்னை - தன்னை, வியவற்க - செருக்கினால் மதியாதிருப்பானாக, நன்றிபயவா - நன்மையினை உண்டாக்காத, வினை - செயல்களை, நயவற்க - மனதில் விரும்பாதிருப்பானாக.

[க-ரை] செருக்கினால் எப்போதும் தன்னைத்தானே மதித்துக் கொள்ளாதிருப்பாயாக; தனக்கு நன்மையினை உண்டாக்காத தொழில்களை மனத்தால் விரும்பாதிருப்பாயாக.

10. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். 440

[ப-ரை] காதல - தான் காதலிக்கின்ற பொருள்களை, காதல் அறியாமை - அவ்விருப்பத்தினை [காதலினை]ப் பகைவர் அறிந்து கொள்ளாமல், உய்க்கிற்பின் - நுகர்வதற்கு வல்லவனாகிய பிறகு, ஏதிலார் - பகைவர், நூல் - தன்னை வஞ்சிக்க எண்ணும் எண்ணம், ஏதில - பழுதாகி விடும்.

[க-ரை] தான் விரும்பிய (காதலித்த) பொருள்கள் யாவையென்று தமது விருப்பத்தினைப் பகைவர் அறிந்து கொள்ளாதபடி அனுபவிக்க வல்லவனானால், அப்பகைவர்

அறிந்து கொள்ளாதபடி அனுபவிக்க வல்லவனானால், அப்பகைவர் தன்னை வஞ்சிக்க எண்ணும் எண்ணம் பழுதாகி விடும்.

## 45. பெரியாரைத் துணைக் கோடல்

[எல்லா வகைகளிலும் பெரியார்களானவர்களைத் துணையாக வைத்துக் கொள்ளுதல்]

1. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல். 441

[ப-ரை] அறன் - அறத்தினது சிறப்பினை, அறிந்து - அறிந்த, மூத்த அறிவுடையார் - தன்னைவிடமூத்த அறிவுடையவர்களுடைய, கேண்மை - நட்பினை, தேர்ந்து - அதனது சிறப்பினைத் தெரிந்து, திறன் - கொள்ளும் திறத்தினை, அறிந்து - அறிந்து, கொளல் - துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] அறத்தினது சிறப்பினையறிந்து தன்னைவிட மூத்த அறிவுடைய பெரியார்களது நட்பின் ஒருமையினையறிந்து தனக்குத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 442

[ப-ரை] உற்றநோய் - தனக்கு வந்த துன்பங்களை, நீக்கி - நீக்கும் வழியறிந்து நீக்கி, உறாமை - பிறகு அத்துன்பங்கள் வாராதபடி, முற்காக்கும் - முன்னதாகவே காக்கவல்ல, பெற்றியார் - ஆற்றல் மிக்க தன்மையுடையவர்களை, பேணிக்கொளல் - அவர் மகிழ்வன செய்து துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] தனக்குவரும் துன்பங்களை நீக்கும் வழியறிந்து நீக்கி, பிறகு அவ்வாறான துன்பங்கள் தனக்கு

வாராதபடி முன் அறிந்து காக்க வல்ல தன்மையுடைவர் களை அவர்கள் மகிழ்வனதைச் செய்து துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

3. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 443

[ப-ரை] பெரியாரை - ஆற்றல் மிகுந்த பெரியார் களை, பேணி - அவர் மகிழ்வனவற்றைச் செய்து, தமராக் கொளல் - தமக்கு உற்றவராகக் கொள்ளுதல், அரிய வற்றுள் - அருமையான பேறுகள், எல்லாம் - எல்லாவற் றுள்ளும், அரிதே - அரியதாகும் [சிறந்ததாகும்]

[க-ரை] ஆற்றல் மிகுந்த பெரியார்களை அவர் மகிழ்வன செய்து தமக்குச் சிறந்த துணையாகக் கொள்ளுதல், அரிய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் அரிதானதாகும்.

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 444

[ப-ரை] தம்மின் - அறிவுமுதலியவற்றால் தம்மைவிட, பெரியார் - பெரியவர்களை, தமரா - தமக்கு உற்றவராகக் கொண்டு, ஒழுகுதல் - அவர்வழிநின்றுநடந்து கொள்ளுதல், வன்மையுள் - வலிமைகள், எல்லாம் - எல்லாவற்றையும் விட, தலை - முதன்மையானதாகும்.

[க-ரை] அறிவு முதலியவற்றினால் தம்மைவிட மிகுந்தவர்களைத் தமக்குச் சிறந்தவராகக்கொண்டு நடந்து கொள்ளுதல் எல்லா வலிமைகளைக் காட்டிலும் தலைமை யானதாகும்.

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 445

[ப-ரை] சூழ்வார் - சூழ்ந்துள்ள பெரியார்களை, கண்ணாக - கண்களாகக் கொண்டு, ஒழுகலால் - தன்

ஆட்சியினை நடத்துவதால், மன்னவன் - மன்னன், சூழ்வாரை - அப்படிப்பட்ட பெரியார்களை, சூழ்ந்து கொளல் - ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] அரசனது பாரம் தன்னைச் சூழ்ந்துள்ள பெரியார்களைக் கண்ணாகக் கொண்டு நடத்தலால், அவன் அவ்வாறு சூழ்ந்துள்ளவர்களை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

6. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல். 446

[ப-ரை] தக்கார் - பெரியோர்களின், இனத்தனாய் - நட்புத் துணையினை உடையவனாகி, தான் - தானும், ஒழுக - அறிந்து நடந்துகொள்ள, வல்லானை - வல்லவனை, செற்றார் - பகைவர், செய்யக் கூடியதொரு துன்பம், இல் - இல்லை.

[க-ரை] தகுதியான பெரியார்களின் துணையினை உடையவனாகித் தானும் அறிந்து நடந்துகொள்ள வல்லவர்க்குப் பகைவர் செய்யக் கூடியதொரு துன்பம் இல்லையாகும்.

7. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர். 447

[ப-ரை] இடிக்கும் - தீயன கண்டால் இடித்து நெருங்கிப் புத்தி சொல்லும், துணையாரை - துணையாய் நின்ற பெரியார்களை, ஆள்வாரை - இவர் நமக்குச் சிறந்தவர் என்று கொள்கின்ற அரசரை, கெடுக்கும் - கெடுக்கின்ற, தகைமையவர் - தன்மையுடைய பகைவர், யார் - யாரே உளர்?

[க-ரை] தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் தன்மையுடைய பெரியார்களை, 'இவர்கள் தமக்குச்

சிறந்தார்' என்று கொள்ளுபவர்களைக் கெடுக்கும் பெருமையுடைய பகைவர் யாவர் உளர்?

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். 448

[ப-ரை] இடிப்பாரை இல்லாத - தக்க நேரத்தில் இடித்துப்புத்தி சொல்லுபவர்களைத் தனக்குத்துணையாகக் கொள்ளாத, ஏமரா -பாதுகாவலற்ற, மன்னன்- மன்னவன், கெடுப்பார் - பகையாய்க் கெடுப்பவர், இலானும் - இல்லாவிட்டாலும், கெடும் - தானே கெட்டுவிடுவான்.

[க-ரை] நெருங்கிப் புத்தி சொல்லும் பெரியார்களைத் துணையாகக் கொள்ளாத காவலற்ற அரசன், பகையாய்க் கெடுப்பவர்கள் இல்லாவிட்டாலும் தானே கெடுவான்.

9. முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்புஇலார்க்கு இல்லை நிலை. 449

[ப-ரை] முதல் - முதற்பொருள், இலார்க்கு -இல்லாத வணிகர்க்கு, ஊதியம் - அதனால் வரும் இலாபம், இல் - இல்லையாகும், [அதுபோல] மதலையாம் - தம்மைத் தாங்குவதாகிய, சார்பு - துணை, இலார்க்கு - இல்லாதவர்களுக்கு, நிலை இல்லை - உறுதியான நிலைத்தல் என்பது இல்லை.

[க-ரை] முதற் பொருள் இல்லாத வணிகர்களுக்கு அதனால் வரும் ஊதியம் இல்லையாகும். அதுபோலத் தம்மைத் தாங்குவதாம் துணை இல்லாதவர்களுக்கு அதனால் வரும் உறுதியான நிலை இல்லையாகும்.

10. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 450

[ப-ரை] பல்லார் - பலருடன், பகை - பகைமை, கொளலின் - கொள்ளுவதைவிட, பத்தடுத்த - பத்துப்

பங்கு, தீமைத்தே - தீமையுடையதேயாகும், [எது வென்றால்] நல்லார்-நல்ல பெரியோர்களோடு, தொடர்பு-நட்பினைக் கொள்ளாது, கைவிடல் - கைவிடுதலாகும்.

[க-ரை] பெரியோர்களது நட்பினைக் கொள்ளாமல் விட்டுவிடுதல் என்பது, பலரோடும் பகைமையினைக் கொள்ளுவதைவிடப் பத்து மடங்கு தீமையுடையதாகும்.

## 46. சிற்றினம் சேராமை

[தீமையான இழிந்தகுணமும் செயலும் உள்ளவர்களோடு தொடர்பு கொள்ளாதிருத்தல்]

1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 451

[ப-ரை] பெருமை - பெரியோர் தன்மை, சிற்றினம் அஞ்சும் – கீழான இயல்புடைய சிறிய இனத்தைக் கண்டு அஞ்சி நிற்பதாகும், சிறுமைதான் – சிறியோர் தன்மை, சுற்றமா - அந்த இனத்தை உறவைப் போல, சூழ்ந்துவிடும் - எண்ணும்.

[க-ரை] பெரியோர் இயல்பு கீழான இனத்தைக் கண்டால் அஞ்சி நிற்பதாகும். சிறியோர் இயல்பு அந்த இனத்தைத் தனக்குச் சுற்றமாக எண்ணும்.

2. நிலத்துஇயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு. 452

[ப-ரை] நிலத்து சேர்ந்த நிலத்தினுடைய, இயல்பான-தன்மையினாலே, நீர்திரிந்து - நீரானது தனது தன்மை வேறுபட்டு, அற்றாகும் - அந்த நிலத்தின் தன்மையதாகிய தாகிவிடும், [அதுபோல] மாந்தர்க்கு - மாந்தர்க்கு, அறிவு - அறிவும், இயல்பு - தாம் சேர்ந்த சேர்க்கையான இனத்

தினது தன்மையினாலே, அது ஆகும் - தன் தன்மை திரிந்து அந்த இனத்தின் தன்மைத்தாகிவிடும்.

*[க-ரை]* நீரானது, தான் சேர்ந்த நிலத்தினாலே மாறுபட்டு அந்த நிலத்தின் தன்மையதாகிவிடும். அதுபோல, மனிதர்க்கு அறிவானது தாம் சேர்ந்த இனத்தினாலே வேறுபட்டு அந்த இனத்தின் தன்மையதாகிவிடும்.

**3. மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல். 453**

*[ப-ரை]* மாந்தர்க்கு – மக்களுக்கு, உணர்ச்சி - பொது உணர்ச்சியானது, மனத்தான் ஆம் - தன் மனத்தின் காரணமாக உண்டாவதாகும், இன்னான் - இவன் இப்படிப் பட்டவன், எனப்படும் சொல் - என்று கூறப்படும் சொல்லானது, இனத்தான் - அவன் சேர்ந்த இனத்தினாலே; ஆம் - உண்டாவதாகும்.

[க-ரை] மாந்தர்க்குப் பொது உணர்வு மனம் காரணமாக உண்டாகும். இவன் இத்தன்மையன் என்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல், இனம் காரணமாக உண்டாகிவிடும்.

**4. மனத்துஉளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துஉளது ஆகும் அறிவு. 454**

[ப-ரை] அறிவு - சிறப்பான அறிவானது, ஒருவற்கு - ஒருவனுக்கு, மனத்து உளது போல - மனத்தினாலே உண்டாவதுபோல, காட்டி - தன்னைப் புலப்படுத்தி, [உண்மையில்] இனத்து - அவன் சேர்ந்த இனத்தினாலே, உளது - உள்ளது, ஆகும் - ஆகும்.

[க-ரை] ஒருவனுடைய சிறப்பான உணர்வானது தனது மனத்தில் உள்ளதுபோலப் புலப்படுத்தி உண்மையில் அவன் சேர்ந்த இனத்தினாலே அமைவதாகும்.

5. மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும். 455

[ப-ரை] மனம் - மனமானது, தூய்மை - தூய்மையனாகும் தன்மையும், செய்வினை - தூய்மை - செய்தொழிலில் தூய்மையனாகும் தன்மையும், இரண்டும் - ஆகிய இரண்டும், இனம் கோடாகக் கொண்டு, வரும் - வருவதாகும்.

[கு-ரை] மனம் தூய்மையுடையவனாகும் தன்மையும், செய்யும் தொழில் தூய்மையுடையதாகும் தன்மையும் ஆகிய இரண்டும் அவன் சேர்ந்த இனம் தூய்மையாயுள்ள தன்மையினைப்பற்றுக்கோடாகக் கொண்டு வருவனவாகும்.

6. மனம்தூயார்க்கு எச்சம்நன்று ஆகும் இனம்தூயார்க்கு
இல்லைநன்று ஆகா வினை. 456

[ப-ரை] மனம் தூயார்க்கு - மனமானது தூய்மையானவர்களுக்கு, எச்சம் - வாழ்க்கையில் எஞ்சி நிற்பது, நன்றாகும் - நல்ல புகழாக இருக்கும், இனம் - சேர்ந்த இனம், தூயார்க்கு - தூய்மையானவர்களுக்கு, நன்று ஆகா - நன்மையானதாக இல்லாத, வினை - செயல், இல்லை — இல்லை.

[கு-ரை] மனம் தூய்மையானவர்களுக்கு எஞ்சி நிற்பதாகிய எச்சம் சிறப்பானதாக அமையும். இனம் தூய்மையானவர்களுக்கு நன்றாகாத செயல் எதுவுமே இல்லை.

7. மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும். 457

[ப-ரை] மன் - நிலைபெற்ற, உயிர்க்கு - உயிர்களுக்கு, மனம் - மனம், நலம் - நன்றாக இருப்பது, ஆக்கம் - செல்வத்தினைக் கொடுக்கும், இனநலம் - சேர்ந்த இனமானது நன்றாக இருப்பது, எல்லா - எல்லா வகையான, புகழ் - புகழினையும், தரும் - தருவதாகும்.

[க-ரை] நிலைபெற்ற மக்களுயிர்க்கு மனம் நன்றாக இருப்பது செல்வத்தினைத் தரும். இனமானது நன்றாக இருப்பதானது எல்லாப் புகழினையும் கொடுக்கும்.

8. மனநலம்நன்கு உடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து. 458

[ப-ரை] மனநலம் - மனம் நன்றாக இருப்பதை, நன்கு உடையராயினும் - நல்லபடியாகத் தாமே உடையவராக இருந்தாலும், சான்றோர்க்கு - நிறைகுணம் பெற்ற பெரியார்களுக்கு, இனம்-சேர்ந்த இனம், நலம் - நன்றாக இருப்பது, ஏமாப்பு - பாதுகாப்பான வலிமையாதலை, உடைத்து - உடையதாகும்.

[க-ரை] மனம் நன்றாக இருப்பதனை நல்லபடியாகத் தாமே தம் பிறவியிலேயே உடையவராக இருந்தாலும், நிறைகுணம் பெற்ற பெரியோர்களுக்குச் சேர்ந்த இனம் நன்றாக இருப்பது, காப்பான வலிமை உடையதாகும்.

9. மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து. 459

[ப-ரை] மன நலத்தின் - ஒருவனுக்கு மனம் நன்றாக இருந்தால், மறுமை ஆகும் - மறுமை இன்பம் உண்டாகும், மற்று அஃதும் - அதற்கு அந்தச் சிறப்பும், இன நலத்தின் - இனம் நன்றாக இருப்பதால், ஏமாப்பு உடைத்து - பாது காப்பான வலிமையினை உடையதாகும்.

[க-ரை] ஒருவனுக்கு மனம் நன்றாக இருந்தால் மறுமை இன்பம் உண்டாகும். அதற்கு அந்தச் சிறப்புத் தானும் இனம் நன்றாக இருந்தால் பாதுகாப்பான வலிமையினை உடையதாகும்.

10. நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல். 460

[ப-ரை] நல் - நல்ல, இனத்தின் - இனத்தினைவிட, ஊங்கும் - மேற்பட்ட, துணை - துணை, இல்லை -

இல்லையாகும், தீயினத்தின் - தீய இனத்தினைவிட; அல்லற் படுப்பதூஉம் - துன்பம் கொடுப்பதும். இல் - இல்லை.

[க-ரை] ஒருவனுக்கு நல்ல இனத்தினைவிட மேற்பட்ட துணையும் இல்லை. தீய இனத்தினைவிட மிக்க பகையும் இல்லை.

## 47. தெரிந்து செயல்வகை

[தலைவனானவன் தானே செய்ய வேண்டியவைகளை நன்கு ஆராய்ந்து செய்தலாகும்]

1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

[ப-ரை] அழிவதூஉம் - தொழில் செய்யுங்கால் உண்டாகும் அழிவினையும், ஆவதூஉம் - பின்னே பயனாக ஆவதையும், ஆகி - ஆராய்ந்து அறிந்து, வழி பயக்கும் - பின்பு வருகின்ற, ஊதியமும் ஊதியத்தினையும், சூழ்ந்து செயல் - ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

[க-ரை] தொழில் செய்யும்போது, அப்போது அதனால் ஆகும் அழிவினையும், பிறகு ஆவதனையும், ஆனபிறகு தரும் ஊதியத்தினையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.

2. தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். 462

[ப-ரை] தெரிந்த - ஆராய்ந்து தெரிந்து கொண்டிருக்கும், இனத்தொடு - சேர்ந்திருக்கும் இனத்தாருடனே, தேர்ந்து எண்ணி - ஆராய்ந்து பழுதற எண்ணி, செய்வார்க்கு - செய்து முடிக்க வல்லவர்களுக்கு, அரும் - பெறு

தற்கு அருமையான, பொருள் - பொருள் என்று யாதொரு பொருளும், இல் - இல்லை.

[க-ரை] தாம் தெரிந்து கொண்ட இனத்துடனே செய்யத்தகும் தொழிலினை ஆராய்ந்து எண்ணிச் செய்து முடிக்க வல்லவர்களுக்கு அடைவதற்கு அரிய பொருள் யாதொன்றும் இல்லை.

3. ஆக்கம் கருதிமுதல் இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 463

[ப-ரை] அறிவுடையார் - அறிவு நிறைந்தவர்கள், ஆக்கம் - பிறகு வரக்கூடிய ஊதியத்தினை, கருதி - எண்ணி, முதல் இழக்கும் முதலாக வைத்துள்ளதை இழப்பதற்குக் காரணமான, செய்வினை - தொழிலினை, ஊக்கார் - செய்ய நினைக்க மாட்டார்கள்.

[க-ரை] பின்பு வரக்கூடிய ஊதியத்தினைக் கருதி முன்பு பெற்றுள்ள முதலினையும் இழப்பதற்குக் காரண மான தொழிலினை அறிவுடையோர் மேற்கொள்ள மாட்டார்கள்.

4. தெளிவு இலதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர். 464

[ப-ரை] இளிவு - தமக்கு இழிவு, என்னும் - என்கின்ற, ஏதப்பாடு - குற்றம் உண்டாவதற்கு, அஞ்சுபவர் — அஞ்சு பவர்கள், தெளிவு இலதனை - ஆய்ந்து முடிவு செய்யப் படாத தொழிலினை, தொடங்கார் - செய்வதற்குத் தொடங்கமாட்டார்கள்.

[க-ரை] தமக்கு இழிவு எனப்படும் குற்றம் உண்டா வதற்கு அஞ்சுபவர்கள், இனத்துடனும் தனித்தும் ஆராய்ந்து துணியப்படாத தொழிலைத் தொடங்க மாட்டார்கள்.

5. வகைஅறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு. 465

[ப-ரை] வகை - வழிமுறைகளை யெல்லாம், அற - முழுவதும், சூழாது - எண்ணிப் பாராமல், எழுதல் - வினை

மேற் செல்லுதல் [பகைமேற் செல்லுதல்] பகைவரை - அப்பகைவர்களை, பாத்தி - தானாக வளர்கின்ற நிலத்திலே, படுப்பது - நிலைத்து நிற்கச் செய்கின்ற, ஓர் - ஒரு, ஆறு - வழியாகும்.

[க-ரை] வினைமேல் சென்றால் நிகழும் திறங்களை யெல்லாம் முழுவதும் எண்ணாமல் சிலவற்றை எண்ணிய வுடனே தொழில்மேல் செல்லுதல், பகைவரை வளரும் நிலத்திலே நிலைபெறச் செய்யுமொரு வழியாகும்.

6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். 466

[ப-ரை] செய்தக்க அல்ல - செய்யக் கூடாத செயல்களை, செயக் கெடும் - செய்வதால் கெட்டு விடுவான். செய் - செய்ய, தக்க - தகுந்த செயல்களை, செய்யாமையானும் - செய்யாதிருப்பதாலும், கெடும் - கெட்டுவிடுவான்.

[க-ரை] தான் செய்யக் கூடாத செயல்களைச் செய்வதால் ஒருவன் கெட்டுவிடுவான். செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாதிருப்பதாலும் கெட்டு விடுவான்.

7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. 467

[ப-ரை] கருமம் - தொழிலினை, எண்ணி - முடிக்கும் திறத்தினை நன்கு எண்ணிப் பார்த்து, துணிக - தொடங்குதல் வேண்டும், துணிந்தபின் - தொழிலினை. தொடங்கிய பிறகு, எண்ணுவம் - முடிக்கும் திறத்தினை எண்ணுவோம், என்பது இழுக்கு - என்று சிந்திப்பது குற்றமேயாகும்.

[க-ரை] தொழிலினை, முடிக்கும் திறத்தினை நன்கு எண்ணிப் பார்த்துத் தொடங்க வேண்டும். தொழிலினைத் தொடங்கிய பிறகு முடிக்கும் திறத்தினை எண்ணுவோம் என்பது குற்றமேயாகும்.

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 468

[ப-ரை] ஆற்றின் - செய்து முடிக்க வேண்டிய வழியினால், வருந்தாவருத்தம் - தொழிலினை முயலாத முயற்சி, பலர் - துணையாகப் பலர், நின்று- இருந்து, போற்றினும் - குற்றம் வராமல் காப்பாற்றினாலும், பொத்துப்படும் - குற்றமுடையதாகவே முடியும்.

[க-ரை] செய்து முடிக்க வேண்டிய வழியினால் தொழிலினை முயலாத முயற்சி, துணையாகப் பலர் இருந்து குற்றம் வராமல் காப்பாற்றினாலும் குற்றம் உடையதாகவே முடியும்.

9. நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்
பண்புஅறிந்து ஆற்றாக் கடை. 469

[ப-ரை] அவரவர் - அவரவர்களுடைய, பண்பு அறிந்து - குணங்கள் இத்தன்மையதென்று ஆராய்ந்து அறிந்து, ஆற்றாக்கடை - செய்யாமற் போனால், நன்று - நல்லனவற்றை, ஆற்றலுள்ளும் - செய்வதனாலும், தவறு உண்டு - குற்றம் என்பது உண்டாகும்.

[க-ரை] அவரவர் குணங்களை ஆராய்ந்து அவற்றிற் கேற்ப செய்யாமற் போனால், பிறர்க்கு நல்லவற்றையே செய்தாலும் குற்றம் உண்டாகிவிடும்.

10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு. 470

[ப-ரை] தம்மொடு - தமது நிலைமைக்கு, கொள்ளாத பொருத்தமில்லாத வழிமுறைச் செய்தால், உலகு கொள்ளாது - உலகமானது ஏற்றுக் கொள்ளாது, [ஆதலால்] எள்ளாத - உலகத்தால் இகழ்ந்து கூறப்படாத வழிகளை, எண்ணிச் செயல் - எண்ணி அறிந்து செய்தல், வேண்டும் - வேண்டுவதாகும்.

[க-ரை] தொழிலினை முடிப்பதற்காக வேண்டித் தம் நிலைமைக்குப் பொருந்தாத வழிமுறைகளைச் செய்வாராயின், உலகம் தம்மை இகழும். ஆதலால், இகழப்படாத வழிமுறைகளை நாடிச் செய்தல் வேண்டும்.

## 48. வலி அறிதல்

[எல்லாவகையான வலிமையினையும் அறிதல்]

1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். 471

[ப-ரை] வினைவலியும் - செய்யும் தொழிலினது வலிமையினையும், தன் வலியும் - தன்னுடைய வலிமையினையும்; மாற்றான் - பகைவனது, வலியும் - வலிமையினையும், துணை வலியும் - இருவருக்கும் துணை நிற்பவர் வலிமையினையும், தூக்கிச் செயல் - ஆராய்ந்தறிந்து செய்தல் வேண்டும்.

[க-ரை] தான் செய்யக் கருதிய தொழிலின் வலிமையினையும், அதனைச் செய்து முடிக்கின்ற தனது வலிமையினையும் பகைவனது வலிமையினையும், இருவர்க்கும் துணையாயினர் வலிமையினையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

2. ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல். 472

[ப-ரை] ஒல்வது - செய்யக்கூடும் தொழிலினையும், அறிவது அறிந்து - அதற்கு அறியக்கூடிய வலிமையினையும் அறிந்துணர்ந்து, அதன் கண் - அவ்வினையில், தங்கி - எண்ணத்தினை அதனிடம் எப்போதும் வைத்து, செல்வார்க்கு - பகைமேல் செல்பவர்களுக்கு, செல்லாதது இல் - முடியாதது எதுவும் இல்லையாகும்.

[க-ரை] தம்மால் முடியும் தொழிலையும், அதற்கு அறிய வேண்டிய வலிமையினையும், அறிந்து எப்போதும் அதனையே நினைவாகக் கொண்டு பகைமேல் செல்லும் அரசர்க்கு முடியாத பொருள் இல்லை.

3. உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 473

[ப-ரை] உடை - தலைமையாகிய, தம் - தமது, வலி - வலிமையினை, அறியார் - அறிந்து கொள்ளாதவராகி, ஊக்கத்தின் - தமது மன ஊக்கத்தினால், ஊக்கி - போர் செய்யத் தொடங்கி [அது முடிவு பெறாமல்] இடைக்கண் - நடுவிலே, முரிந்தார் பலர் - கெட்ட அரசர் உலகில் பலராவார்.

[க-ரை] முதன்மையாக உடைய தனது வலிமையினை அளந்தறியாமல் மன எழுச்சியால் தம்மைவிட வலியரோடு போர் செய்தலைத் தொடங்கி முடிக்கப் பெறாமல் இடையே கெட்ட அரசர் பலருண்டு.

4. அமைந்துஆங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 474

[ப-ரை] ஆங்கு - மாற்றாரிடத்தில், அமைந்து ஒழுகான் - பொருந்தி நடந்து கொள்ளாதவனாயும், அளவு - தனது வலிமையின் அளவினை, அறியான் - அறிந்து கொள்ளாதவனாயும், தன்னை வியந்தான் - தன்னையே புகழ்ந்து கொண்டு பகைத்த அரசன், விரைந்து கெடும் - விரைவினில் கெட்டுவிடுவான்.

[க-ரை] பிறரொடு பொருந்தி ஒழுகுவதும் செய்யாமல், தனது வலிமையினையும் அறியாமல் தன்னையே பெருமையாக வியந்து கொண்டு பகைத்துக் கொண்ட அரசன் விரைவாகக் கெடுவான்.

5. பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 475

[ப-ரை] பீலி - மயிலிறகு, பெய் - ஏற்றிவைக்கப்பட்ட, சாகாடும் — வண்டியும், அச்சு - அச்சு, இறும் - முறியும், [எப்போதென்றால்] அப்பண்டம் - அம்மயிலிறகானது, சால - மிகவும், மிகுத்துப் பெயின் - அதிகப்படுத்தி ஏற்பட்டால் என்பதாகும்.

[க-ரை] மயிலிறகு ஏற்றி வைக்கப்பட்ட வண்டியும் அச்சு முறிவதாகிவிடும்; எப்போது என்றால். அம்மயிலிறகானது மிகவும் அதிகப்படுத்தப்பட்டு ஏற்றப்பட்டால் என்பதாம்.

6. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி யாகி விடும். 476

[ப-ரை] கொம்பர்நுனி - ஒரு மரக் கொம்பினது நுனியில், ஏறினார் -ஏறி நின்றவர், அஃது - அந்த அளவினையும், இறந்து - கடந்து, ஊக்கின் - மேலும் ஏறிச் செல்ல மன ஊக்கம் கொண்டால், உயிர்க்கு - அவருடைய உயிர்க்கு, இறுதி -முடிவு, ஆகிவிடும் - உண்டாகிவிடும்.

[க-ரை] ஒரு மரக்கொம்பின் நுனியில் ஏறி நின்றவர் அந்த அளவினையும் கடந்து மேலும் ஏற, தமது ஊக்கத்தால் மனஎழுச்சி கொண்டு விட்டால் உயிர்க்கு முடிவாகிவிடும்.

7. ஆற்றின் அளவுஅறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. 477

[ப-ரை] ஆற்றின் - ஈதல் செய்யும் நெறியில், அளவு - தனக்குள்ள பொருளின் அளவினை, அறிந்து - அறிந்து கொண்டு, ஈக - அதற்கேற்ப ஈதல் வேண்டும், அது - அவ்வாறு செய்வதானது, பொருள் போற்றி - பொருளினைக் காப்பாற்றிக் கொண்டு, வழங்கும் - ஒழுகும், நெறி - வழியாகும்.

[க-ரை] ஈதல் செய்வதனைத் தமக்கு உள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப ஈதலினைச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தல், பொருளினைப் போற்றிக் கொண்டொழுகும் வழியாகும்.

**8. ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை. 478**

[ப-ரை] போகு -பொருள் செலவாகின்ற, ஆறு - வழி, அகலாக்கடை - அதனைவிடப் பெரியதாக இல்லாதிருக்குமானால், ஆகு - வருவாய் [பொருள்] வருகின்ற, ஆறு - வழியானது, அளவு - அளவானது, இட்டிது - சிறிதானதாக, ஆயினும் - இருந்தாலும், கேடு - கெடுதி, இல்லை - இல்லையாகும்.

[க-ரை] செலவு செய்யப்படுகின்ற வழியின் அளவு அதனைவிடப் பெரிதாக இல்லாமலிருந்தால் பொருள் வருகின்ற வழியளவு சிறிதாக இருந்தாலும் அதனால் கெடுதி இல்லை.

**9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும். 479**

[ப-ரை] அளவு அறிந்து - தனக்குள்ள பொருளின் அளவினை அறிந்து கொண்டு, வாழாதான் வாழ்க்கை - அதற்கேற்ப வாழாதவனுடைய வாழ்க்கையானது, உள போல - உள்ளது போலத் தோற்றமளித்து, இல்லாகி - உண்மையில் இல்லாததாகி, தோன்றா - பிறகு அந்தத் தோற்றமும் இல்லாமல், கெடும் - கெட்டுவிடும்.

[க-ரை] தனக்குள்ள பொருளின் அளவினை அறிந்து அதற்கேற்ப வாழாதவன் வாழ்க்கை, இருப்பது போலத் தோன்றி உண்மையாகவே இல்லாததாகி, பிறகு அத் தோற்றமும் இல்லாமல் கெட்டுவிடும்.

10. உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை
வளவரை வல்லைக் கெடும். 480

[ப-ரை] உளவரை - தனக்குள்ள அளவினை, தூக்காத- ஆராய்ந்தறியாமல், [செய்யப்படும்] ஒப்புரவாண்மை - உபகாரமுடைமை என்னும் தன்மையால், வளவரை - ஒருவனுடைய செல்வத்தின் அளவு, வல்லை - சீக்கிரம், கெடும் - கெட்டுவிடுவதாகும்.

[க-ரை] தனக்குள்ள அளவினை ஆராய்ந்தறியாமல் ஒப்புரவாண்மையெனும் உபகாரம் செய்பவனுடைய செல்வத்தின் அளவு விரைவாகக் கெடும்.

## 49. காலம் அறிதல்

### [காலத்தின் அருமையினைக் கூறுதல்]

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 481

[ப-ரை] கூகையை - தன்னைவிட வலிமையுள்ள கோட்டானை, காக்கை - காகமானது, பகல் - பகற்பொழுதினில், வெல்லும் - வென்றுவிடும், [அது போல] இகல் - பகைவர்களது பகைமையினை, வெல்லும்-வெல்லக் கருதும், வேந்தர்க்கு – வேந்தர்க்கு, பொழுது வேண்டும் - அதற்குத் தகுந்த காலம் இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

[க-ரை] தன்னைவிட வலிமையுள்ள (கூகையை) கோட்டானைக் காக்கையானது பகற்பொழுதில் வென்றுவிடும். அதுபோலவே, பகைவரை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாததாகும்.

**2. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்கும் கயிறு.** 482

[ப-ரை] பருவத்தோடு - காலத்தோடு, ஒட்ட - பொருந்த, ஒழுகல் - நடந்துகொள்ளுதல், திருவினை - செல்வத்தினை, தீராமை - தன்னிடமிருந்து நீங்காமல், ஆர்க்கும் கயிறு - கட்டுகின்ற கயிறாகும்.

[க-ரை] காலத்தோடு பொருந்த தொழில் செய்து நடந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்வதானது செல்வத்தினைத் தன்னிடமிருந்து நீங்காமல் கட்டுகின்ற கயிறாகும்.

**3. அருவினை என்ப உளவோ கருவியால்**
**காலம் அறிந்து செயின்.** 483

[ப-ரை] கருவியால் - செய்யவேண்டிய கருவிகளைக் கொண்டு, காலம் - தகுந்த காலத்தினை, அறிந்து செயின் - அறிந்து செய்தால், அரு - செய்வதற்கு அருமையான, வினை - தொழில், என்ற - என்று சொல்லப் படுகின்ற தொழில்களும், உளவோ - இருக்கின்றனவோ.

[க-ரை] அவற்றை முடித்தற்கு ஏற்ற கருவிகளுடனே காலமறிந்து செய்வாராயின், செய்வதற்கு அருமையான தொழில்கள் என்று சொல்லப்படுவனவும் உண்டா?

**4. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தான் செயின்.** 484

[ப-ரை] காலம் கருதி - தகுதியான காலத்தினைக் கருதி, இடத்தால் செயின் - தக்க இடத்தோடு பொருந்த அதற்குச் செய்ய வேண்டிய செயலினைச் செய்வாராயின், ஞாலம் - உலகம் முழுவதையும், கருதினும் - ஒருவன் ஆள நினைத்தாலும், கைகூடும் - கைகூடும்.

[க-ரை] காலத்தினைக் கருதித் தக்க இடத்தோடு பொருந்த அதற்குச் செய்யவேண்டிய செயல்களைச் செய்

வாராயின், உலகு முழுவதையும் ஒருவன் ஆள நினைத்தாலும் அது முடியும்.

5. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர். 485

[ப-ரை] கலங்காது - தவறாமல், ஞாலம் - பூமி முழுவதையும், கருதுபவர் - கொள்ளக் கருதும் அரசர், காலம் - அதற்கேற்ற காலத்தினையே, கருதி இருப்பர்-சிந்தித்து அது வருமளவும் காத்திருப்பர்.

[க-ரை] தவறாமல் பூமி முழுவதையும் கொள்ளக் கருதும், அரசர், தமக்கு வலிமை அதிகமாக இருந்தாலும் அதற்கேற்ற காலத்தினையே சிந்தித்து அது வருமளவும் காத்திருப்பர்.

6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. 486

[ப-ரை] ஊக்கம் - ஊக்கம், உடையான் - வலிமையுடையவன், ஒடுக்கம் - பகை மேற் செல்லாமல் காலம் பார்த்து ஒடுங்கி இருப்பதானது, பொரு - போரினைச் செய்கின்ற, தகர் - ஆட்டுக்கடா, தாக்கற்கு - தாக்கிப் பாய்வதற்காக, பேரும் - பெயர்ந்து செல்லும், தகைத்து - தன்மையதாகும்.

[க-ரை] வலிமை மிகுதியுடைய மன்னன் பகைமேற் செல்லாமல்காலம் பார்த்திருக்கின்ற செய்கை எப்படிப்பட்டதென்றால், போரி செய்கின்ற ஆட்டுக்கடா மிகுந்த வேகத்துடன் தாக்குவதற்குக் கால்களைப் பின்வாங்கும் தன்மையதாகும்.

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். 487

[ப-ரை] ஒள்ளியார் - அறிவு நிறைந்தவர்கள், ஆங்கே - பகைவர் தீமை செய்த அப்பொழுதே, பொள்ளென - விரை

வாக, புறம் - புறத்திலே, வேரார் - அவர் அறிய கோபிக்க மாட்டார், காலம் - தக்க காலத்தினை, பார்த்து - பார்த்திருந்து, [உள்வேர்ப்பர் அது வரும் வரை உள்ளுக்குள்ளேயே வெகுள்வர்.

[கு-ரை] அறிவுடைய அரசர் பகைவர் தீமை செய்த அப்போதே புறத்தில் தெரியுமாறு கோபம் செய்ய மாட்டார்கள். வெல்லுதற்கேற்ற காலம்வரை உள்ளுக்குள்ளேயே கோபத்தினை வைத்திருப்பர்.

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை. 488

[ப-ரை] செறுநரை - பகைவர்களை, காணின் - காணுங்கால், சுமக்க - காலம் வரும் வரை பணிவுடன் இருத்தல் வேண்டும், இறுவரை - இறுதிக்காலம், காணின் வந்து முடியும் போது, கிழக்காம்தலை - அப்பகைவர் தலை கீழாகிக் கெடுவர்.

[கு-ரை] தாம் வெல்லக் கருதினால் பகைவருக்கு இறுதிக்காலம் வரும் வரை அவரைக் கண்டால் பணிக; பணியவே அந்தக் காலம் வந்து முடியும்போது அப்பகைவர் தலை கீழாவார்.

9. எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல். 489

[ப-ரை] எய்தற்கு - அடைதற்கு, அரியது - அரியதான காலம், இயைந்தக்கால் - வந்து கூடிய போது, அந்நிலையே - அக்காலம் நிற்கும் அளவுக்குள்ளே, செய்தற்கு - செய்வதற்கு, அரிய - அருமையான, செயல்களை செயல் - செய்து கொள்ளுதல் வேண்டும்.

[கு-ரை] பகைவரை வெல்லுவதற்குப் பெறுதற்கரிய காலம் வந்து கூடியபோது, அக்காலம் கழிவதற்கு முன்பே செய்தற்கு அரிய தொழில்களைச் செய்து கொள்ளுவார்களாக.

10. கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து. 490

[ப-ரை] கூம்பும் - சுருங்கிய, பருவத்து - காலத்தில், கொக்கு - கொக்கு, ஒக்க - இருப்பதைப்போல அமைதியாக இருக்க வேண்டும், மற்று - மற்றபடி, சீர்த்தவிடத்து - செய்து முடிக்கும் காலம் உண்டான போது, அதன் - அந்தக் கொக்கின், குத்து - தவறாத குத்தினை, ஒக்க - ஒத்து செயலினைச் செய்து முடித்தல் வேண்டும்.

[க-ரை] தொழில்மேல் செல்லாதிருக்கும் காலத்தில் கொக்கு இருப்பது போல அமைதியாக இருத்தல் வேண்டும். மற்றபடி, தொழில் மேல் செல்லும் காலம் வந்து வாய்த்த போது, அக்கொக்கினைப் போலத் (குத்துவதைப் போல) தப்பாமல் செய்து முடித்துக் கொள்ளுதல் வேண்டும்.

## 50. இடனறிதல்

### [இடனறிந்து தொழிலினைச் செய்தல் வேண்டும்]

1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது. 491

[ப-ரை] முற்றும் - பகைவரை முற்றுகையிட்டுக் கொள்ளுவதற்காக, இடம் - தக்க இடத்தினை, கண்டபின் - கண்டறிந்தபின், அல்லால் - அல்லாமல், எவ்வினையும் - யாதொரு தொழிலினையும், தொடங்கற்க - அவர் மேல் தொடங்காதிருக்க வேண்டும், எள்ளற்க - அப்பகைவரை சிறியர் என்று இகழாதிருக்கவேண்டும்.

[க-ரை] பகைவரை முற்றுகை இடுவதற்கு ஏற்ற இடம் பெற்றபின் அல்லாமல் அவர்மீது யாதொரு தொழிலினையும் தொடங்காதிருத்தல் வேண்டும். அப்பகைவரைச் சிறியர் என்று இகழாதிருத்தல் வேண்டும்.

2 முரண்சேர்ந்த மொய்ம்பின் அவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும். 492

[ப-ரை] முரண் சேர்ந்த - மாறுபாட்டோடு கூடிய, மொய்ம்பினவர்க்கும் - வலிமையுடையவர்க்கும், அரண் சேர்ந்து-கோட்டையினைச் சேர்ந்து, ஆம்-ஆகின்ற, ஆக்கம்--செல்வாக்கானது, பலவும் தரும் - பற்பல பயன்களையும் தருவதாகும்.

[க-ரை] மாறுபாட்டுடன் கூடிய மறத்தினையுடைய வலிமை நிறைந்த அரசர்க்கு அரசினைச் சேர்ந்து ஆகின்ற ஆக்கம் பற்பல பயன்களைக் கொடுப்பதாகும்.

3. ஆற்றாரும் ஆற்றி அடுப இடன்அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். 493

[ப-ரை] இடன் அறிந்து- அதற்குத் தகுந்த இடத்தினையறிந்து, போற்றி - தம்மைக் காத்து கொண்டு, போற்றார்கண் - பகைவரிடம், செயின் - வினையினைச் செய்வார்களானால், ஆற்றாரும் - வலிமையில்லாதவர்களும், ஆற்றி -வலிமையுடையவராகி, அடுப - வெல்லுவார்கள்.

[க-ரை] வலிமை இல்லாதவர்களும் வலிமையுடையவராகி வெல்லுவார்கள். எப்போது என்றால், அதற்குத் தகுந்த இடத்தினை அறிந்து, தம்மைக் காத்துக் கொண்டு பகைவரிடம் வினைகளைச் செய்வார்களானால் என்பதாம்.

4. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 494

[ப-ரை] இடனறிந்து - தக்க இடத்தினை அறிந்து கொண்டு, துன்னியார் - செய்த மன்னர், துன்னி-அரணைப் பொருந்தி நின்று, செயின்-தொழிலினைச் செய்வாரானால், எண்ணியார் - வெல்லக் கருதிய பகைவர், எண்ணம் இழப்பர் - அந்த எண்ணத்தினை இழந்து விடுவார்கள்.

[க-ரை] தாம் தொழில் செய்வதற்கேற்ற இடத்தினை யறிந்து சென்ற அரசர் அரணைப் பொருந்தி (கோட்டையினை) நின்று அதனைச் செய்வாராயின், வெல்லக் கருதிய பகைவர்தம் எண்ணத்தினை இழப்பார்கள்.

5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 495

[ப-ரை] முதலை - முதலையானது, நெடும் - ஆழமுள்ள, புனலுள் - நீரிலிருந்தால், பிற - மற்ற உயிரினங்களையெல்லாம், வெல்லும் வென்று விடுவதாகும், புனலின் நீங்கின் - அந்நீரிலிருந்து நீங்கிவிட்டால், அதனை - அந்த முதலையை, பிற அடும் - மற்ற உயிர்கள் வென்று விடும்.

[க-ரை] நீரில் வாழும் முதலை, ஆழமுடைய நீரில் பிற வற்றையெல்லாம் வென்றுவிடும். அந்த நீரைவிட்டு நீங்கி விட்டால் அம்முதலையை மற்றவை வென்றுவிடும்.

6. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து. 496

[ப-ரை] கால் - உருளைகளாலானவை, வல் - வலிமையாகக் கொண்ட, நெடும் - பெரிய, தேர் - தேர்கள், கடல் - கடலில், ஓடா - ஓடமுடியாதவையாகும், கடல் - கடலில், ஓடும் - ஓடுகின்ற, நாவாயும்-மரக்கலங்களும், நிலத்துஓடா- பூமியில் ஓடமுடியாதவைகளாகும்.

[க-ரை] வலிமையுள்ள உருளைகளைக் கொண்ட பெரிய தேர்கள் கடலில் ஓட மாட்டாவாம். கடலில் ஓடும் மரக்கலங்களும் நிலத்தில் ஓடமாட்டாவாம்.

7. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின். 497

[ப-ரை] அஞ்சாமை - தொழில் செய்யும் திறங்களில் குறைவில்லாமல், எண்ணி - எண்ணிப் பார்த்து, இடத்தால் செயின் - இடத்துடன் பொருந்த செய்வாரானால்,

அஞ்சாமை – மனத்திண்மை, அல்லால் - அல்லாமல், [வேறு துணை வேண்டா - துணை வேண்டுவதில்லை.

[க-ரை] பகைவரிடத்தில் தொழில் செய்யும் திறங்களில் குறையாமல் எல்லாவற்றையும் எண்ணி அவற்றை அரசர் இடத்தோடு பொருந்தச் செய்வாராயின், அச் செயலுக்குத் தமது மனத்தின் திண்மையல்லாமல் வேறு துணை வேண்டுவதில்லை.

8. சிறுபடையான் செல்இடம் சே ரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். 498

[ப-ரை] உறு – மிகப்பெரிய, படையான் - படையினையுடைய வேந்தன், சிறு – சிறிய, படையான் – படையினையுடையவனது, செல்லிடம் - ஆகும் இடத்தினை, சேரின் - சேர்வானானால், ஊக்கம் அழிந்துவிடும் - அதனால் தனது சிறப்பு அழிந்து விடுவதாகும்.

[க-ரை] பெரும் படையினையுடைய அரசர் சிறுபடையுடையவனை வெல்லக்கருதி அவன் இருக்கும் இடத்தினைச் சேருவானானால், அப்பகையால் தனது பெருமை அழிவான்

9. சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது. 499

[ப-ரை] சிறை – அரண், நலனும் - அழித்தற்கு அருமையினையும், சீரும் - சிறப்பான ஆற்றலினையும், இலர் - உடையவர்களாக இல்லை, எனினும்-என்றாலும், மாந்தர் - தொழில் செய்வதற்குரிய மக்களை, உறை - நிலையாக இருக்கின்ற, நிலத்தோடு - இருப்பிடத்திற்குச் சென்று, ஒட்டல் - தாக்குதல், அரிது - அரியதாகும்.

[க-ரை] அரண் அழித்தற்கு அருமையினையும் பெருமையினையும் ஆகிய ஆற்றலினையும் இல்லாதவராக இருந்தாலும் தொழிலுக்கு உரிய மாந்தரை அவர்கள் இருக்கின்ற இடத்திற்குச் சென்று தாக்குதல் அரிதானதாகும்.

10. கால்ஆழ் களரின் நரிஅடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு. 500

[ப-ரை] கண்ணஞ்சா - பாகர்க்கு அடங்காதவை வேலாள் - வேலினையுடைய ஆட்களை, முகத்த - கோத்த கொம்பினையுடையவையாயும் உள்ள, களிறு - யானைகளை, கால் - கால்கள், ஆழ் - புதைகின்ற அளவுள்ள, களரில் - சேற்று நிலத்திலே, நரி அடும் - நரிகள் கொன்று விடும்.

[க-ரை] பாகர்க்கு அடங்காததாயும், வேலினையுடைய ஆட்களைக் கோத்த கொம்பினையுடைய வாயுமுடைய யானைகளை, அவை கால் புதைகின்ற அளவுக்குச் சேற்று நிலத்தில் அகப்பட்டுக் கொண்டால் நரிகள் கொல்லும்.

## 51. தெரிந்து தெளிதல்

### [அமைச்சர் முதலியவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்]

1. அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும். 501

[ப-ரை] அறம் - அறமும், பொருள் - பொருளின், இன்பம் - இன்பமும், உயிரெச்சம் - உயிர்க் காரணமாக வரும் அச்சமும், [ஆகிய] நான்கின் - நான்கு வகையான், திறம் தெரிந்து - திறத்தினால் மனத்தின் இயல்பு அறிந்து, தேறப்படும் - தெளியப்படுவான்.

[க-ரை] அரசன் தெளியப்பட வேண்டிய ஒருவன். அறம், பொருள், இன்பம், உயிர் அச்சம் ஆகிய நான்கு வகைகளினால் மனத்தின் தன்மையினைத் தெளிந்து தேர்ந்து அறிந்து கொள்ளப்படுவான்.

**2.** குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. 502

[ப-ரை] குடிப்பிறந்து - நற்குடியிலே பிறந்து, குற்றத்தின் - குற்றங்களிலிருந்து, நீங்கி - நீங்கி, வடு - குற்றம் உண்டாகுமோ என்று, பரியும் - அஞ்சுகின்ற, நாணுடையான கட்டே-நாணமுடையனிடத்தில், தெளிவு- அரசனுக்குத் தெளிவு உண்டாவதாகும்.

[க-ரை] உயர்ந்த குடியில் பிறந்து குற்றங்கள் இல்லாமல் 'நமக்குக் கெடுதி வருமோ' என்று அஞ்சி நாணுகின்றவனைத் தேர்ந்து அமைத்துக் கொள்ளுவதே தலைவனுக்குத் தெளிவாகும்.

**3.** அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 503

[ப-ரை] அரியகற்று - சிறந்த அருமையான நூல் களைக் கற்றறிந்து, ஆசு - குற்றங்கள், அற்றார் - இல்லாத வர்கள், கண்ணும்-இடத்திலும், தெரியுங்கால் - நுட்பமான ஆராயும் போது, வெளிறு - அறியாமையென்பது, இன்மை- இல்லாதிருப்பது, அரிது - அருமையேயாகும்.

[க-ரை] சிறந்த அருமையான நூல்களைக் கற்றறிந்து குற்றங்கள் எதுவும் இல்லாதவரிடத்திலும் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் அறியாமையென்பது இல்லா திருப்பது அருமையேயாகும்.

**4.** குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 504

[ப-ரை] குணம்நாடி - ஒருவனுடைய நற்குணங் களையும் ஆராய்ந்தறிந்து, குற்றமும் நாடி-ஏனைய குற்றங் களையும் ஆராய்ந்தறிந்து, அவற்றுள் - அந்த இருவகை களிலும், மிகை-மிகுதியாக இருப்பவற்றை, நாடி-ஆராய்ந்து

கொண்டு, மிக்க - மிகுந்திருப்பதை வைத்து, கொளல் - அவனை யாவன் என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] ஒருவனுடைய குணங்களையும் ஆராய்ந்து, குற்றங்களையும் ஆராய்ந்து அந்த இரண்டு வகைகளிலும் மிக்கவற்றை ஆராய்ந்து, அந்த மிக்கவற்றைக் கொண்டு அவனை அறிந்துகொள்ளல் வேண்டும்.

5. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 505

[ப-ரை] பெருமைக்கு - ஒருவனுடைய பெருமைக்கும், ஏனை - மற்றைய, சிறுமைக்கு - சிறுமைக்கும் [தெரிந்து கொள்ள] கட்டளைக்கல் - உரைக்கல்லாக இருப்பது, தம்தம் - அவரவர் செய்கின்ற, கருமமே - செயல்களேயாகும்.

[க-ரை] ஒருவனுடைய பெருமைக்கும் மற்றைய சிறுமைக்கும் உரைகல்லாக இருப்பது அவனவன் செய்கின்ற செயல்களேயாகும்.

6. அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்றுஅவர்
பற்றுஇலர் நாணார் பழி. 506

[ப-ரை] அற்றாரை - சுற்றத்தார் இல்லாதவர்களை தேறுதல் - தெளிவதனை, ஓம்புக - நீக்குக, மற்று அவர் - அவர்கள், பற்று - உலகத்தோடு தொடர்பு, இலர் - இல்லாதவர்கள், பழிநாணார் - பழிக்கு அஞ்ச மாட்டார்கள்.

[க-ரை] சுற்றம் இல்லாதவர்களைத் தெரிந்து அமைத்துக் கொள்ளுவதை நீக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் உலகத்துடன் தொடர்பு இல்லாதவர்கள் ஆண படியால் பழிக்கு அஞ்சமாட்டார்கள்.

7. காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். 507

[ப-ரை] காதன்மை - அன்புடைமை என்பதனை, கந்தா - காரணமாகக் கொண்டு, அறிவு அறியார் - அறிய

வேண்டுவனவற்றை, அறியாதவர்களை, தேறுதல் - தெரிந்து கொள்ளுவது, பேதைமை - அறிவற்ற தன்மையினை, எல்லாம் தரும் - எல்லாம் கொடுக்கும்.

[க-ரை] அன்புடையவர்கள் என்பதனைக் காரணமாகக் கொண்டு, தாம் அறிய வேண்டுவனவற்றை அறியாதவர்களைத் தேர்ந்தெடுத்தல் அரசனுக்கு எல்லா அறியாமையினையும் கொடுக்கும்.

8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். 508

[ப-ரை] பிறனை - தன்னுடன் தொடர்பில்லாதவனை, தேரான் - ஆராய்ந்து பார்க்காமல், தெளிந்தான் - தெளிந்த மன்னனுக்கு, வழிமுறை - தனது பரம்பரையான வழிமுறையெல்லாம், தீரா இடும்பை - நீங்காத துன்பத்தினை, தரும் - கொடுக்கும்.

[க-ரை] தன்னுடன் தொடர்பு இல்லாதவனை ஆராயாமல் தெளிந்த (தேர்ந்து கொண்ட) அரசனுக்கு அச்செயல் அவன் சந்ததி முறையிலும் நீங்காத துன்பத்தினைக் கொடுக்கும்.

9. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 509

[ப-ரை] யாரையும் - எவரையும், தேராது - ஆராய்ந்து கொள்ளாமல், தேறற்க - தெளியாதிருப்பானாக, தேர்ந்த - ஆராய்ந்த, பின் - பிறகு, தேறும் - தெளியப்படுகின்ற, பொருள் - பொருள்களை, தேறுக - ஐயுறாமல் தெளிதல் வேண்டும்.

[க-ரை] யாரையும் ஆராய்ந்து பாராமல் தெளிய வேண்டா, ஆராய்ந்த] பின் தெளியப்படும் பொருள்களை ஐயுறாமல் (சந்தேகிக்காமல்) தெளிதல் வேண்டும்.

10. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். 510

[ப-ரை] தேரான் - யாரையும் ஆராயாமல், தெளிவும் தெளிந்து கொள்ளலும், தெளிந்தான்கண் - ஆராய்ந்து தெளிந்து கொண்டவனிடத்தில், ஐயுறவும் - சந்தேகம் கொள்ளுதலும், தீரா - நீங்காத, இடும்பைதரும் - துன்பத்தினைத் தருவதாகும்.

[க-ரை] மன்னன் யாரையும் ஆராயாமல் தெளிதலும் ஆராய்ந்து தெளிந்த பிறகு தெளியப்பட்டவனிடத்தில் ஐயப்படுதலும் ஆகிய இவ்விரண்டும் அவனுக்கு நீங்காத துன்பத்தினைக் கொடுக்கும்.

## 52. தெரிந்து வினையாடல்

### [தெளியப்பட்டவர்களை ஆளுகின்ற திறன்]

1. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். 511

[ப-ரை] நன்மையும் - ஆகும் தொழிலினையும், தீமையும் - ஆகாதனவாகிய தொழிலினையும், நாடி - நன்கு ஆராய்ந்து கண்டு, நலம் - அவற்றில் முடியக் கூடியவைகளை, புரிந்த - தெரிந்து விரும்பிய, தன்மையான் - தன்மையுடையவன், ஆளப்படும் - அரசனாலே அத்தொழில்களில் ஆளப்படுவான்.

[க-ரை] தலைவன் தொழிலினைத் தன்னிடத்தில் வைத்தால் ஆவனவும் ஆகாதனவுமாகிய தொழில்களை ஆராய்ந்தறிந்து அவற்றுள் ஆவனவற்றையே விரும்பும் இயல்புடையான், அரசனால் சிறந்த தொழில்களில் ஆளப்படுவான்.

2. வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. 512

[ப-ரை] வாரி - பொருள் வரக்கூடிய வழிகளை, பெருக்கி - பெருகச் செய்து, வளம் - செல்வத்தினை படுத்து - வளர்த்து, உற்றவை - இடையில் வந்த இடையூறு முதலியவற்றை, ஆராய்வான் - ஆராய்ந்து கண்டு நீக்குபவன், வினைசெய்க - தொழில்களை மேற்கொண்டு செய்வானாக.

[க-ரை] பொருள் வருகின்ற வழிகளை விரியச் செய்து செல்வங்களை வளர்த்து அவற்றிற்கு உண்டான இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவன் மன்னனுக்குத் தொழில் செய்தல் வேண்டும்.

3. அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 513

[ப-ரை] அன்பு அறிவு - அன்புடைமையும் நிறைந்த அறிவும், தேற்றம் - கலங்காத தன்மையும், அவா ஆசையும், இன்மை - இல்லாத இயல்பும், [ஆகிய] இந்நான்கும் - இந்த நான்கு பண்பு களையும், நன்கு - நன்றாக, உடையான்கட்டே - பெற்றிருப்பவனிடத்தில், தெளிவு - தொழிலினை ஒப்படைக்கும் தெளிவு இருத்தல் வேண்டும்.

[க-ரை] அன்பும் அறிவும் கலங்காத தெளிவும் ஆசையில்லாமையும் ஆகிய இந்த நான்கும் நல்லபடியாக உடையவனிடத்தில் தொழிலினை விட்டிருப்பதே தெளிவாகும்.

4. எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்
வேறாகும் மாந்தர் மலர். 514

[ப-ரை] எனை - எல்லாவிதமான, வகையால் - வகைகளினாலும், தேறியக்கண்ணும் - ஆராய்ந்து தெளிந்த பிறகும், வினை - அத்தொழிலினை, வகையான் - தன்மை

யினால், வேறாகும் - மாறிவிடுகின்ற, மாந்தர் பலர் - மாந்தர் பலர் உலகத்தில் உண்டு.

[க-ரை] எல்லா வகையிலும் ஆராய்ந்து தெளிந்து தொழிலில் வைத்த பின்னும், அத்தொழிலின் தன்மையால் வேறுபடும் மாந்தர் உலகத்தில் பலருண்டு.

5. அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று. 515

[ப-ரை] அறிந்து - ஆராய்ந்தறிந்து, ஆற்றி- இடையில் வரும் துன்பங்களைத் தாங்கி, செய்கிற்பாற்கல்லால் - செய்து முடிக்கும் வல்லவனையல்லாமல், வினை தான் - அத்தொழில் என்பதனை, சிறந்தான் - இவன் நம்மிடத்தில் அன்புடையவன் என்று நினைத்து, ஏவல்-தொழிலின் மேல் அவனை ஏவுகின்ற, பாற்று - தன்மையுடையது, அன்று - தொழிலல்ல.

[க-ரை] தொழிலினைத் தக்கபடி ஆராய்ந்தறிந்து முடிவு செய்து வல்லவனையல்லாமல், 'இவன் நம்மிடத்தில் அன்பு உள்ளவன்' என்ற காரணத்தினால் தொழிலின்மேல் ஒருவனை அமர்த்தும் தன்மை கூடாது.

6. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல். 516

[ப-ரை] செய்வானை நாடி - முதலில் தொழில் செய்பவன் இலக்கணத்தினை ஆராய்ந்தறிந்து, வினைநாடி - அத்தொழிலினுடைய தன்மையினை ஆராய்ந்தறிந்து, காலத்தோடு-காலத்தினையும் பொருத்திப் பார்த்து, எய்த உணர்ந்து - பொருத்தமுற அறிந்துணர்ந்து, செயல் - தொழிலில் அவனை நடத்துதல் வேண்டும்.

[க-ரை] முதலில் தொழில் செய்பவனுடைய இலக்கணத்தினை ஆராய்ந்து, செய்யப்படும் தொழிலினுடைய இயல்பினை ஆய்ந்து, பிறகு நாமே தக்க காலத்தினைத் தெரிந்து அவனை அத்தொழிலினிடத்தில் ஆளக்கடவன்.

7. இதனைஇதனால் இவன் முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல். 517

[ப-ரை] இதனை - இந்தத் தொழிலினை, இதனால் - இந்தக் கருவியினால், இவன் - இவன், முடிக்கும் - முடிக்கின்ற வல்லமையுடையவன், என்று - என்று, ஆய்ந்து - ஆராய்ந்து, [இம்மூன்றும் ஒத்திருந்தால்] அதனை - அத்தொழிலினை, அவன்கண் - அவனிடத்தில், விடல் - செய்வதற்கு விடுதல் வேண்டும்.

[க-ரை] இத்தொழிலினை இக்கருவியினால் இவன் முடிக்க வல்லவன் என்று வகைப்படுத்தி ஆராய்ந்து, அவையனைத்தும் ஒத்திருந்தால் அத்தொழிலினை அவனிடம் விடுதல் வேண்டும்.

8. வினைக்கு உரிமை நாடியபின்றை அவனை
அதற்குரியவன் ஆகச் செயல். 518

[ப-ரை] வினைக்கு உரிமை - தொழிலினைச் செய்ய உரியவனாக இருக்கும் தன்மையினை, நாடிய - ஆராய்ந்து அறிந்த, பின்றை - பிறகு, அவனை அதற்கு - அவனை அத்தொழிலினை மேற்கொண்டு செய்வதற்கு, உரியவனாக - உரிமை உடையவனாக, செயல் - செய்து வைத்தல் வேண்டும்.

[க-ரை] ஒருவனை ஆராய்ந்தறிந்து தனது தொழிலுக்கு உரியவனாகத் துணிந்த பிறகு அவனை அத்தொழிலுக்கு உரியவனாக உயரச் செய்தல் வேண்டும்.

9. வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும் திரு. 519

[ப-ரை] வினைக்கண் - மேற்கொண்ட தொழிலினிடத்தில், வினையுடையான் - எப்போதும் நல்ல முயற்சியுடையவன், கேண்மை - உரிமையால் சுற்றம் போல் நடக்கின்ற, தன்மையினை, வேறாக நினைப்பானை -

தவறாக நினைக்கின்ற தலைவனை, திரு - திருமகள், நீங்கும் - நீங்குவாள்.

[க-ரை] எப்போதும் தொழிலினிடத்தில் முயற்சியாய் இருப்பவன் உரிமையால் தன்னிடம் சுற்றமாகப் பழகுகின்றவனை அதற்குப் பொறாதவர்கள் சொன்னதைக் கேட்டு, மாறுபட நினைக்கும் தலைவனைவிட்டுத் திருமகள் நீங்குவாள்.

**10. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்**
**கோடாமை கோடாது உலகு.** 520

[ப-ரை] வினை - தொழில், செய்வான் - செய்யும் தொழிலாளியானவன். கோடாமை-மனம் கோணாதிருக்க, உலகு கோடாது - உலகம் கோணாது இருக்கும் [ஆகையினால்] நாடோறும் - நாள்தோறும், மன்னன் - மன்னன், நாடுக - அவன் செயல் முறைகளைக் கவனித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] தொழில் செய்பவன் மனம் கோணாதிருந்தால் உலகம் கோணாது. ஆகையால் மன்னவன் நாள் தோறும் அவன் செயல் முறைகளை ஆராய்ந்து கவனித்தல் வேண்டும்.

## 53. சுற்றம் தழால்

**[தனது சுற்றமாயினோரை நீங்கவிடாமல் அணைத்துக் காத்தல்]**

**1. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்**
**சுற்றத்தார் கண்ணே உள.** 521

[ப-ரை] பற்று - செல்வம், அற்றகண்ணும் - இழந்து வறிஞனான காலத்திலும், பழைமை - தம்முடன் உண்டான பழைமையை, பாராட்டுதல் - நினைத்துக் கொண்டாடும்

தன்மைகள், சுற்றத்தார் - உறவினரான சுற்றத்தார், கண்ணே - இடத்தில், உள - இருப்பனவாகும்.

ஒருவன் செல்வமிழந்து வறியவனான காலத்திலும் அவனுடைய பழைமையை எடுத்துக் கொண்டாடுகின்ற இயல்புகள் சுற்றத்தாரிடம் இருப்பனவாகும்.

2. விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா
ஆக்கம் பலவும் தரும். 522

[ப-ரை] விருப்பு - அன்புடைமை, அறா - நீங்காத, சுற்றம் - சுற்றம் என்பது, இயையின் - இருந்து விடுமானால், அருப்பறா - கிளைத்தல் என்பது நீங்கிவிடாத, ஆக்கம் - செல்வம், பலவும் - பலவற்றையும், தரும் - அவனுக்குத் தருவதாகும்.

[க-ரை] அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்கு உண்டாகி விடுமானால், அது அவருக்குக் கிளைத்தல் நீங்காத பல செல்வங்களையும் தரும்.

3. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந் தற்று. 523

[ப-ரை] அளவளாவு - சுற்றத்தாருடன் நெஞ்சு கலந்து பழகுதல், இல்லாதான் - இல்லாதவனுடைய, வாழ்க்கை - வாழ்க்கையானது, குளவளா - குளத்தின் பரப்பானது, கோடு - இருக்க வேண்டிய கரை; இன்றி - இல்லாமல், நீர் - நீர், நிறைந்தற்று - நிறைந்தது போன்றதாகும்.

[க-ரை] சுற்றத்தாருடன் நெஞ்சு கலந்து பழகுதல் இல்லாதவனுடைய வாழ்க்கையானது குளத்தின் பரப்பானது இருக்க வேண்டிய கரையில்லாமல் நீர் நிறைந்தது போலாகும்,

4. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 524

[ப-ரை] செல்வம் - செல்வத்தினை, பெற்றதால் - ஒருவன் பெற்றிருப்பதனால், பெற்ற - பெற்றிருக்க

வேண்டிய, பயன் - பயனாவது, சுற்றத்தால் - சுற்றத்தார் களால், தான் - தான், சுற்றப்பட - சூழப்பட்டிருக்கும் வகையில், ஒழுகல் - நடந்து அவர்களைத் தழுவி வாழ்தலாகும்.

[க-ரை] செல்வம் பெற்ற ஒருவன் அதனால் அடையும் பயன் என்னவென்றால் சுற்றத்தார்களால் தான் சூழப்படும் வகையில் தழுவி நடந்து கொள்ளுதலாகும்.

5. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். 525

[ப-ரை] கொடுத்தலும் - சுற்றத்தார்க்குக் கொடுப்பதையும், இன் - இனிய, சொலும் - சொற்கள் சொல்லுவதையும், ஆற்றின் ஒருவன் செய்வானாயின், அடுக்கிய - என்றும் தொடர்ந்து வருகின்ற, சுற்றத்தால் - சுற்றத்தார் களால், சுற்றப்படும் - சூழப்பட்டு வாழ்வான்.

[க-ரை] ஒருவன் தம் சுற்றத்தார்க்கு வேண்டுவன கொடுத்தலையும், இன்சொல் சொல்லுவதையும் செய்வானானால், தொடர்ந்து பலவகையான சுற்றத்தால் சூழப்படுவான்.

6. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல். 526

[ப-ரை] பெரும் - சிறந்த, கொடையான் - கொடையாளியாகவும், வெகுளி - சினத்தினை, பேணான் - விரும்பாதவனாகவும் இருந்து விட்டால், அவனின் - அவனைவிட, மருங்குடையார் - கிளையென்னும் சுற்றத்தார் உடையவர்கள், மா - இப்பெரிய, நிலத்து இல் - உலகில் இல்லையாகும்.

[க-ரை] ஒருவன் சிறந்த கொடையாளியாகவும், கோபத்தினை விரும்பாதவனாகவும் இருப்பானானால், அவனைப் போல கிளை உடையார் இவ்வுலகில் இல்லை.

7. காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 527

[ப-ரை] காக்கை - காக்கைகள், கரவா - மறைத்து உண்ணாமல், கரைந்து - கூவித் தன் இனத்தை அழைத்து, உண்ணும் - உண்ணுகின்றனவாகும், ஆக்கமும் - செல்வப் பெருக்கமும், அன்ன - அப்படிப்பட்ட, நீரார்க்கே - தன்மையுடையவர்களுக்கே, உள - இருப்பதாகும்.

[க-ரை] காகங்கள் தமக்கு இரை கிடைத்தவுடன் அதனை மறைக்காமல் தமது இனத்தை அழைத்து அதனோடு உண்ணும். சுற்றத்தினால் அடையக்கூடிய செல்வங்களும் அத்தன்மை உடையவர்களுக்கே உண்டாகும்.

8. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 528

[ப-ரை] பொது - எல்லோரையும் பொதுப்பட ஒரு தன்மையாராக, நோக்கான் - பார்க்காமல், வேந்தன் - வேந்தனானவன், வரிசையா - அவரவருடைய தகுதிக்கு ஏற்றபடி, நோக்கின் - நோக்கி நடப்பானாகில், அது - அச் சிறப்பினை, நோக்கி - கருதி, வாழ்வார் பலர் - அவனைச் சூழ்ந்து வாழ்கின்ற சுற்றத்தார் பலராவார்.

[க-ரை] எல்லோரையும் ஒரே தன்மையராக நோக்காமல், அரசன் அவரவர் தகுதிக்கு ஏற்ப நோக்கிக் கவனிப்பானாகில், அச்சிறப்பு நோக்கி அவனை விடாமல் வாழ்கின்ற சுற்றத்தார் பலராவர்.

9. தமர்ஆகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும். 529

[ப-ரை] தமராகி - முன்னர் சுற்றத்தாராக் கூடி இருந்து, தன் துறந்தார் - யாதானுமொரு காரணங் கொண்டு பிரிந்து சென்றவர்கள், சுற்றம் - மறுபடியும் வந்து

சுற்றமாகுதல், அமராமை - முன்பு பொருந்தாமைக்கு, காரணம் - காரணம், இன்றி - இப்போது தன்னிடம் இல்லாதலால், வரும் - உண்டாவதாகும்.

[க-ரை] முன்பு சுற்றத்தாராக இருந்து தன்னோடு பொருந்தாமல் யாதானுமொரு காரணத்தால் பிரிந்து போனவர், பின்னும் வந்து சுற்றமாகுதல் என்பது முன் பிருந்த பொருந்தாத காரணம் தன்னிடத்தில் இல்லை யாதலால் உண்டாவதாகும்.

10. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல். 530

[ப-ரை] உழைப்பிரிந்து - காரணம் ஒன்றுமில்லாமல் பிரிந்து போய், காரணத்தின் - பின்பு காரணத்தால், வந் தானை - வந்து சேருகின்ற சுற்றத்தானை, வேந்தன் - வேந்தனானவன், இழைத்திருந்து பிரியாதிருக்க அக் காரணத்தைச் செய்து அமைத்து, எண்ணிக் கொளல் - ஆராய்ந்தறிந்து - சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] காரணமின்றித் தன்னைவிட்டுப் பிரிந்து போய்ப் பின் காரணத்தால் வந்த சுற்றத்தானை, வேந்தன் அந்தக் காரணத்தைச் செய்து வைத்து ஆராய்ந்து தழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

## 54. பொச்சாவாமை

### [களிப்பு மிகுதியால் சோர்வு என்னும் மறதி கொள்ளாதிருத்தல்]

1. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு. 531

[ப-ரை] சிறந்த - மிகுந்த, உவகை மகிழ்ச்சியின் - உவகைக் களிப்பினால் [வருகின்ற] சோர்வு - மறதியானது - இறந்த - அளவு கடந்த, வெகுளியின் - சினத்தினைவிட, தீது - தீமை பயப்பதாகும்.

[க-ரை] மிகுந்த உவகைக் களிப்பினால் வருகின்ற மறதியானது, அரசனுக்கு அளவு கடந்த கோபத்தினை விடவும் தீமையாகும்.

2. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 532

[ப-ரை] அறிவினை - ஒருவனுடைய அறிவினை, நிச்ச- நாள்தோறும் வருகின்ற, நிரப்பு - வறுமை, கொன்றாங்கு- கொல்லுவதைப் போல, புகழை - ஒருவனுடைய புகழினை, பொச்சாப்பு - மறதியானது, கொல்லும் - கொன்று விடும்.

[க-ரை] நாள்தோறும் வரும் வறுமையானது ஒருவனுடைய அறிவினைக் கொல்லுவதைப் போல, ஒருவனுடைய புகழினை மறதியானது கொன்றுவிடும்.

3. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து
எப்பால் நூலோர்க்கும் துணிவு. 533

[ப-ரை] பொச்சாப்பார்க்கு - மறதியைக் கொண்டு நடப்பவர்களுக்கு, புகழ்மை இல்லை - புகழ் உடைமை இல்லையாகும், அது - இவ்வுண்மையானது, உலகத்து - உலகத்தில், எப்பால் - எவ்வகைப்பட்ட, நூலோர்க்கும் - நூலுடையவர்களுக்கு, துணிவு - ஒப்ப முடிந்த முடிபாகும்.

[க-ரை] மறதியைக் கொண்டு நடப்பவர்களுக்கு புகழுடைமை இல்லை. இவ்வுண்மை நீதி நூலுடையார்க்கே யன்றி உலகத்தில் எவ்வகைப்பட்ட நூலுடையவர்களுக்கும் ஒப்ப முடிந்த முடிவாகும்.

4. அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்குஇல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு. 534

[ப-ரை] அரண் - சிறப்பான கோட்டையிருந்தாலும் அச்சம் - பயம், உடையார்க்கு - உடையவர்களுக்கு, இல்லை; அதனால் பயனில்லை, ஆங்கு - அதுபோலவே, பொச்சாப்பு- மறதி, உடையார்க்கு - உடையவர்களுக்கு, நன்கு செல்வம்

எல்லாம் இருந்தாலும் கூட, இல்லை - அவற்றால் எந்தப் பயனும் இல்லையாகும்.

[க-ரை] சிறந்த அரண் என்னும் கோட்டை இருந்தாலும்மனத்தில் அச்சம் உடையவர்களுக்கு அதனால் பயன் இல்லை. அதுபோல, செல்வமெல்லாம் உடையவராயினும் மனத்தில் மறதியுடையவர்களுக்கு அதனால் பயனில்லை.

5. முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்ஊறு இரங்கி விடும். 535

[ப-ரை] முன்னுற - முன்னதாகவே, காவாது - தெரிந்து, தன்னைக் காத்துக் கொள்ளாமல், இழுக்கியான் - மறந்திருந்தவன், பின் - பிறகு, ஊறு - துன்பம் வந்துற்ற போது, தன் - தன்னுடைய, பிழை - தவறினை உணர்ந்து, இரங்கி விடும் - இரக்கப்பட்டு கவலையடைவான்.

[க-ரை] வருகின்ற துன்பங்களை முன்னதாகவே அறிந்து காத்துக் கொள்ளாமல் மறந்திருந்தவன், பின்னர் தனது பிழையினை நினைத்து இரங்கிக் கவலைப்படுவான்.

6. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அஃதுஒப்பது இல். 536

[பரை] இழுக்காமை - மறவாமைக் குணம், யார் மாட்டும் - யாவரிடத்தும், என்றும் - எக்காலத்திலும், வழுக்காமை - ஒழிவில்லாமல், [எப்போதும்] வாயின் - வாய்த்து இருக்குமேயானால், அஃது ஒப்பது - அதனை ஒத்த நன்மை, இல் - வேறு எதுவும் இல்லை.

[க-ரை] மறவாமைக் குணம் யாவரிடத்தும் எக்காலத்திலும் இடையீடின்றி உண்டாகி விடுமானால், அதனையொத்த நன்மை வேறு எதுவும் இல்லை.

7. அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியான் போற்றிச் செயின். 537

[ப-ரை] பொச்சாவா - மறதியில்லாத, கருவியால் - மனத்தினாலே, போற்றிச் செயின் - எண்ணிச் செய்தால்

அரிய - செய்து முடிக்க அருமையானது, என்று - என்று சொல்லப்படும், ஆகாத இல்லை - ஒருவற்கு முடியாத காரியங்கள் எதுவும் இல்லை.

[க-ரை] மறதி இல்லாத மனத்தாலே எண்ணிச் செயய்யப்பட்டால் 'இவை செய்வதற்கு அருமையானவை" என்று சொல்லப்படும் முடியாத செயல்கள் எதுவுமே இல்லை.

8. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். 538

[ப-ரை] புகழ்ந்தவை - நீதி நூலுடையார் உயர்த்திச் சொல்லியவைகளை, போற்றி - கடைப் பிடித்து, செயல் - செய்தல், வேண்டும் - வேண்டும், செய்யாது - அவ்வாறு இகழ்ந்தார்க்கு-மறந்தவர்க்கு, எழுமையும் இல் - எழுமையிலும் நன்மை இல்லை.

[க-ரை] நீதி நூலுடையார் இவை மன்னர்க்கு உரியன என்று கூறியவற்றைக் கடைப்பிடித்துச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்தவர்களுக்கு எழுமையிலும் நன்மை இல்லை.

9. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 539

[ப-ரை] தம் - தமக்குண்டான, மகிழ்ச்சியில் - களிப்பில், தாம் - தாங்கள், மைந்து உறும் போழ்து - செருக்கடையும் போது, இகழ்ச்சியின் - முன்பு அப்படிப் பட்ட மறதியினாலே, கெட்டாரை -கெட்டவர்களை - உள்ளுக - நினைத்துப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] மன்னர்கள் தமது செருக்கில் களிப்புற்றிருக் கும்போது, முற்காலத்தில் அப்படிப்பட்ட குணத்தினால் உண்டான மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

10. உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். 540

[ப-ரை] தான் - தான், உள்ளியது - அடைய நினைத்த பொருளினை, எய்தல் - அடைதல், எளிது மன் - எளிதானதாகும், மற்றும் - பின்னும் [அவன்] உள்ளியது - நினைத்த அப் பொருளினையே, உள்ள - நினைத்துக் கொண்டிருக்க, பெறின் - தன்மைப் பெற்றால்.

[க-ரை] தான் அடைய நினைத்த பொருள்கள் அனைத்தையும் ஒருவன் அடைதல் எளிதாக முடியும். எப்போது என்றால், பின்னும் தான் அதனையே நினைத்திருப்பானேயானால் என்பதாம்.

# 55. செங்கோன்மை

## [அரசன் ஆட்சியின் சிறப்புத் தன்மை]

1. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. 541

[ப-ரை] ஓர்ந்து - குற்றத்தினையறிந்து, யார் மாட்டும் - யாவரிடத்தும், கண்ணோடாமல் - முகம் கொடாமல் [தாட்சண்யமின்றி] இறை - நடுவு நிலைமை, புரிந்து - பொருந்துமாறு, தேர்ந்து - குற்றத்திற்குரிய தண்டனையை ஆராய்ந்து, செய்வஃதே - அந்த அளவில் செய்வதே, முறை - செங்கோன்மை என்பதாகும்.

[க-ரை] குடிமக்கள் குற்றம் செய்தால் அக்குற்றத்தினை நாடி அறிந்து பகைவரிடத்தும் கண்ணோட்டம் இல்லாமல் நடுவு நிலைமையாக அமைந்து, குற்றத்திற்குச் சொல்லப்பட்ட தண்டனையை ஆராய்ந்து செய்வதே முறையாகும்.

2. வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. 542

[ப-ரை] உலகு - உலகத்திலுள்ள, எல்லாம் - உயிர்கள் எல்லாம், வான் நோக்கி - மழை உண்டானால், வாழும் - வாழ்வனவாகும், குடி - குடிமக்கள், மன்னவன் - மன்னவனுடைய, கோல் - செங்கோன்மையினை, நோக்கி - பார்த்து, வாழும் - வாழ்வார்கள்.

[க-ரை] உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழும். குடிமக்கள் அரசனுடைய செங்கோலினை நோக்கி வாழ்வார்கள்.

3. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். 543

[ப-ரை] அந்தணர் - அந்தணர்களுடைய, நூற்கும் - மறையாகிய நூலுக்கும், அறத்திற்கும் - அறம் என்பதற்கும், ஆதியாய் - முதற்காரணமாக, நின்றது - நிலை பெற்றிருப்பது, [எதுவென்றால்] மன்னவன் - மன்னவனால் செலுத்தப்படும், கோல் - செங்கோலாகும்.

[க-ரை] அந்தணர்களுடைய மறையாகிய நூலுக்கும் அறத்திற்கும் முதற்காரணமாக நிலைபெற்றது எதுவென்றால், அரசனால் செலுத்தப்படும், செங்கோலாகும்.

4. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 544

[பரை] குடி - தன் குடி மக்களையும், தழீஇ - அணைத்து, கோல் - செங்கோல், ஓச்சும் - செலுத்தும், மாநில - பெருநில, மன்னன் - மன்னனது, அடியை, தழீஇ - பொருந்தியிருந்து, நிற்கும் உலகு - விடாமல் உலகமக்கள் இருப்பார்கள்.

[க-ரை] தம் குடிமக்களை அணைத்துச் செங்கோல் செலுத்தும் பெருநில மன்னனது அடியைப் பொருந்தி உலகத்தோர் விடாது நிற்பர்.

5. இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. 545

[ப-ரை] பெயலும் - பருவகாலத்து மழையும், விளையுளும் - குன்றாத விளைச்சலும், தொக்கு - ஒன்றுகூடி, இயல்புளி - நூல்களில் கூறப்பட்ட இயல்பினாலே, கோல் - செங்கோலினை, ஓச்சும் - செலுத்தும், மன்னவன் - மன்னனது, நாட்ட - நாட்டில் இருப்பனவாகும்.

[க-ரை] நூல்கள் சொல்லிய இயல்பால் செங்கோலினைச் செலுத்தும் மன்னனது நாட்டில் பருவ மழையும் குன்றாத விளைச்சலும் ஒருங்கே சேர்ந்து இருப்பனவாகும்.

6. வேல்அன்று வென்றி தருவது மன்னவன்
கோல்அதூஉம் கோடாது எனின். 546

[ப-ரை] மன்னவன் - மன்னனுக்கு, வென்றி - போரில் வெற்றியினை, தருவது - கொடுப்பது, வேல் - வேற்படை, அன்று - அல்ல, கோல் - அவனுடைய செங்கோலாகும், அதூஉம் - அக்கோலும், கோடாது - தான் கோணாமல், எனின் - இருக்குமானால்.

[க-ரை] மன்னனுக்குப் போரில் வெற்றியினைக் கொடுப்பது அவன் எறியும் வேல் அல்ல; செங்கோலே யாகும். அக்கோலும் கோணாது இருக்குமானால் என்பதாம்.

7. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 547

[ப-ரை] வையகம் - பூமி, எல்லாம் - முழுவதையும், இறைகாக்கும் - மன்னவன் காப்பாற்றுவான், அவனை - அம்மன்னனை, முறை - அவனுடைய செங்கோலானது, காக்கும் - காப்பாற்றும், [எப்போது] முட்டாச்செயின் - செங்கோலினை முட்டாமல் செலுத்துவானானால்.

[க-ரை] வையகத்தையெல்லாம் அரசன் காப்பாற்றுவான்; அந்த அரசனை அவனுடைய செங்கோல்

காப்பாற்றும்; அதனை அவன் முட்டாமல் செலுத்துவானா னால் என்பதாம்.

8. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும். 548

[ப-ரை] எண்பதத்தான் - குடிமக்கள் எளிமையாகக் காண்பவனாகி, ஓரா - ஆராய்ந்து முறை - நீதி, செய்யா வழங்காத, மன்னவன் - மன்னவன், தண்பதத்தால் - தாழ்ந்த பழிபாவத்திலே நின்று, தானே - தானே கெடும் - கெடுவான்.

[க-ரை] எல்லாரும் எளிமையாகக் காண முடிகின்றவனாகி, ஆராய்ந்து முறை செய்யாத மன்னவன், தாழ்ந்த பாவமும் பழியும் அடைந்து கெடுவான்.

9. குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில். 549

[ப-ரை] குடி - மக்களை, புறங்காத்து - பிறர் துன்புறுத்தாமல் காப்பாற்றி, ஓம்பி - தானும் நலியாது பேணி, குற்றம் - அவர்களிடம் குற்றம் உண்டானால், கடிதல் - தண்டித்தல், வேந்தன் - வேந்தனுக்கு, வடு - பழி, அன்று - அல்ல, தொழில் - அவனுடைய தொழிலாகும்.

[க-ரை] குடிமக்களைப் பிறர் துன்புறுத்தாமல் பேணிக் காத்துக் குற்றம் செய்தால் தண்டனையளிப்பது வேந்தனுக்குப் பழியாகாது, அவனுடைய தொழிலே யாகும்.

10. கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர். 550

[ப-ரை] வேந்து - வேந்தனானவன், கொடியாரை - கொடியவர்களை, கொலையின் - கொலையினாலே, ஒறுத்தல் - தண்டித்தல் [தக்கோரைக் காத்தல்] பைங்கூழ் - உழவன் பசுமையான பயிரை, களைக்கட்டு - களையைக்

களைந்துகோத்தலாகிய, அதனோடு - அந்தச் செயலோடு, நேர் - ஒக்கும்.

[க - ரை] வேந்தனானவன் கொடியவர்களைக் கொலையினால் தண்டித்துத் தக்கோரைக் காப்பாற்றுதல், உழவன் களையைக் களைந்து பசுமையான பயிரைக் காப்பாற்றுவதோடு ஒக்கும்.

## 56. கொடுங்கோன்மை

[அரசன் முறை செய்தலில் கோணாதிருத்தல்]

1. கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவைசெய்து ஒழுகும் வேந்து. 551

[ப-ரை] அலை - பொருளுக்காகக் குடி மக்களை அலைத்தல் செய்வதை, மேற்கொண்டு-தன்மேற் கொண்டு, அல்லவை - முறை அல்லாதவற்றை, செய்து ஒழுகும் - செய்து நடக்கும், வேந்து - மன்னவன், கொலை - பகைமையால் கொல்லுதல் தொழிலை, மேற்கொண்டாரின் - மேற்கொண்டு நடப்பவர்களைவிட, கொடிதே - கொடியவன் எனப்படுவான்.

[க-ரை] பொருளைக் கருதி நீதியற்ற முறையில் குடிமக்களிடம் அல்லாதவற்றைச் செய்தொழுகும் வேந்தன், கொலை செய்யும் தொழிலை மேற்கொண்டவர்களைவிடவும் கொடியவனாவான்.

2. வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. 552

[ப-ரை] கோலொடு - தண்டிக்கும் தொழிலோடு, நின்றான் - நின்ற அரசன், இரவு - குடிமக்களிடம் பொருள்

வேண்டுதல், வேலோடு - வேலினைக் கையில் கொண்டு நின்றான் - வழியில் தனியே நின்ற கள்வன், இடு - வழிப் போக்களை நோக்கி உன் கைப் பொருளைத் தா, என்றது போலும் - என்று சொல்லியது போலும்.

[க-ரை] தண்டிக்கும் தொழிலோடு நின்ற அரசன் குடிமக்களிடம் பொருள் வேண்டிக் கேட்டல், வேற்படைகளுடனே தனியே நின்ற கள்வன் வழிப்போக்களை நோக்கிக் கைப்பொருளினைத் 'தா' என்பதனோடு ஒக்கும்.

3. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும். 553

[ப-ரை] நாள்தொறும் - நாள்தோறும், நாடி - நாட்டின் திமைகளை ஆராய்ந்து, முறை செய்யா - அதற்குத் தக்க முறையில் முறைமையை ஏற்றபடி செய்யாத, மன்னவன் - மன்னனுடைய, நாடு - நாடு, நாடொறும் - நாள்தோறும், கெடும் - கெட்டுவிடுவதாகும்.

[க-ரை] தனது நாட்டில் நிகழ்பவற்றை நாள்தோறும் ஆராய்ந்து அதற்குத் தக்க முறைகளைச் செய்யாத மன்னன் நாள்தோறும் நாட்டினை இழப்பான்.

4. கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. 554

[ப-ரை] சூழாது - பின் விளைவதனை, நினைக்காமல், கோல் - செங்கோல், கோடி - தப்ப, செய்யும் - செய்கின்ற, அரசு - அரசன், கூழும் - பொருளையும், குடியும் - குடிமக்களையும், ஒருங்கு இழக்கும் - ஒன்று சேர இழப்பான்.

[க-ரை] பின்னர் விளைவதனையறியாமல் முறை தப்பச் செய்யும் அரசன், அச்செயலால் முன்பு ஈட்டிய பொருளையும், பின்பு ஈட்டுவதற்கு ஏதுவாகிய குடிமக்களையும் இழப்பான்.

5. அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 555

[ப-ரை] அல்லல்பட்டு - [அரசனால்] குடி மக்கள் துன்பப்பட்டு, ஆற்றாது-அதனை பொறுக்க முடியாமல், அழுத - அழுத, கண்ணீரன்றே - கண்ணீரல்லவா, செல்வத்தை, அவனுடைய செல்வத்தினை, தேய்க்கும் - குறைக்கின்ற, படை - படைக்கருவியாகும்.

[க-ரை] குடிமக்கள் அரசனால் துன்பப்பட்டு அதனைப் பொறுக்க முடியாமல் அழுத கண்ணீரல்லவா, அவனுடைய செல்வத்தினைக் குறைக்கும் கருவியாகும்.

6. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதுஇன்றேல்
மன்னாவாம் மன்னர்க்கு ஒளி. 556

[ப-ரை] மன்னர்க்கு - மன்னவர்களுக்கு, மன்னுதல் - புகழ் நிலை பெறுதல், செங்கோன்மை - செங்கோன்மையினாலாகும், அஃது இன்றேல் - அவ்வாறான செங்கோன்மை இல்லையானால், மன்னர்க்கு - மன்னர்க்கு, ஒளி-அப்புகழானது, மன்னாவாம் - நிலை பெற்றிருக்காது.

[க-ரை] மன்னர்கள் புகழுடன் நிலை பெற்றிருத்தல் என்பது செங்கோன்மையினாலே யாகும். அச்செங்கோன்மை இல்லாவிட்டால் அப்புகழ் உளவாகாது.

7. துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு. 557

[ப-ரை] வேந்தன் - வேந்தனுடைய, அளி - அருள், இன்மை - இல்லாமையானது, வாழும் உயிர்க்கு - அவன் நாட்டில் வாழும் மக்களுக்கு, துளி - மழைத்துளியானது, இன்மை - இல்லாமற்போனால், ஞாலத்திற்கு - பூமியில் வாழும் உயிர்களுக்கு, எற்று - எவ்வளவு துன்பம் தருமோ, அற்றே - அத்தகைய துன்பத்தினைத் தரும்.

[க-ரை] மழை இல்லாமையானது உலகில் வாழும் உயிர்களுக்கு எவ்வகைத் துன்பத்தினை உண்டாக்குமோ,

அவ்வகைத் துன்பம் அருளில்லாத வேந்தன் நாட்டில் வாழும் மக்களுக்கு உண்டாகும்.

8. இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். 558

[ப-ரை] முறை - செங்கோல்முறையை, செய்யா - செய்யாத, மன்னவன் - மன்னன், கோற்கீழ் - கொடுங் கோலின் கீழ், படின் - வாழ்ந்தால், [யாவர்க்கும்], உடைமை - பொருள் வைத்திருப்பதானது, இன்மையின் - பொருள் இல்லாமையினைக் காட்டிலும், இன்னாது - அதிகத் துன்பத்தினைச் செய்வதாகும்.

[க-ரை] செங்கோல் முறையினைச் செய்யா, மன்னவனது கொடுங்கோலின் கீழ் வாழ்ந்தால் யாவர்க்கும் பொருள் வைத்திருப்பதானது பொருள் இல்லாமையினைக் காட்டிலும் அதிகமான துன்பத்தினைச் செய்வதாகும்.

9. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 559

[ப-ரை] மன்னவன் - மன்னன், முறைகோடி - செங்கோல் முறை தப்பி, செய்யின் - பொருளினைச் சேர்ப்பானே யானால், உறை - பருவமழை - கோடி - இல்லாமற்போகும் படியாக, வானம் - மேகம், பெயல் - மழை பொழிவதை, ஒல்லாது - செய்தல் பொருந்தாது.

[க-ரை] மன்னவன் தான் செய்யும் பொருளை முறை தப்பச் செய்வானானால் அவன் நாட்டில் பருவ மழை இல்லாமற் போகும்படி மேகம் மழை பொழிதலைச் செய்யாது.

10. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். 560

[ப-ரை] காவலன் - காத்தற்குரிய அரசன், காவான் - உயிர்களைக் காப்பாற்றாதவன், எனின் - என்றால், ஆ -

பசுக்கள் தருகின்ற, பயன் - பயனாகிய பால், குன்றும் - சுருங்கிவிடும், அறுதொழிலோர் - ஆறுவகைப்பட்ட தொழிலைச் செய்பவர்கள், நூல்மறப்பர் - தாங்கள் கற்கும் நூல்களை, மறப்பர் - மறந்து விடுவார்கள்.

[க-ரை] காத்தற்குரிய காவலனாக அரசன் உயிர்களைக் காப்பாற்றானாகில் அறம் இல்லாத அவன் நாட்டுப் பசுக்கள் பால் தருவது குறைந்து விடும். ஆறு வகைப்பட்ட தொழிலாளர்கள் தாங்கள் நூல் கற்பதை மறந்து விடுவார்கள். தொழில்கள் நசித்து விடும்.

## 57. வெருவந்த செய்யாமை

### [குடிமக்கள் அஞ்சி நடுங்கக் கூடியவைகளைச் செய்யாதிருத்தல்]

**1. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. 561**

[ப-ரை] தக்காங்கு - குற்றத்தினை நடுவாக நின்று, நாடி - நல்லபடியாக ஆராய்ந்து, தலைச்செல்லா வண்ணத்தால் - மீண்டும் அப்படிப்பட்ட குற்றத்தினை அவன் செய்யாமற் பொருட்டு, ஒத்தாங்கு - குற்றத்திற்குத் தகுந்தபடி, ஒறுப்பது வேந்து - தண்டிப்பவனே வேந்தனாவான்.

[க-ரை] தக்க முறையில் நடுவாக நின்று ஆராய்ந்து குற்றம் செய்தவன் பின்னும் அதனைச் செய்யாமல் இருக்கும் பொருட்டு அக்குற்றத்திற்குத் தகுந்தபடி தண்டிப்பவனே வேந்தனாவான்.

**2. கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்**
**நீங்காமை வேண்டு பவர். 562**

[ப-ரை] ஆக்கம் - தமது செல்வம், - நெடிது நீண்ட காலம், நீங்காமை - நீங்காதிருக்க வேண்டுமென்று,

வேண்டுபவர் - விரும்பி வேண்டி இருப்பவர்கள், கடிது, தொடங்கும்போது அளவு கடந்து செய்வதுபோல், ஒச்சி - தொடங்கி, மெல்ல - செய்யும்போது அளவு மீறாமல், எறிக - செய்தல் வேண்டும்.

[க-ரை] செல்வம் தன்னைவிட்டு நெடுங்காலம் நீங்காமல் நிற்பதை வேண்டுபவர்கள் தண்டிக்கும்போது அளவு கடந்து செய்வது போலத் தொடங்கி, செய்யும்போது அளவு கடவாமல் செய்தல் வேண்டும்.

3. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 563

[ப-ரை] வெருவந்த - குடிமக்கள் மிகவும் அஞ்சுகின்ற தொழில்களை, செய்து ஒழுகும் - செய்து நடக்கின்ற, வெங்கோலன் - கொடுங்கோலன், ஆயின் - ஆனால், ஒருவந்தம்- உறுதியாகவே, ஒல்லை - விரைவில், கெடும் - அழிவான்.

[க-ரை] குடிகள் மிகவும் அஞ்சுகின்ற செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனாகிவிடில், அவ்வரசன் உறுதியாகக் கடிதில் கெடுவான்.

4. இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல்
வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். 564

[ப-ரை] இறை - வேந்தன், கடியன் - கொடியன், என்று உரைக்கும் - என்று மக்களாலே சொல்லப்படுகின்ற, இன்னாச்சொல் - துன்பமான சொல்லையுடைய, வேந்தன்- வேந்தன், உறைகடுகி - தனது ஆயுளும் குறைந்து, ஒல்லை- விரைவில் [செல்வத்தையும்] கெடும் - இழந்து விடுவான்.

[க-ரை] குடிமக்களால் 'தங்கள் தலைவன் கொடுமையானவன்' என்று சொல்லப்படும் துன்பமான சொல்லினையுடைய வேந்தன் ஆயுளும் குறைந்து செல்வமும் விரைவில் இழப்பான்.

5. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து. 565

[ப-ரை] அருஞ்செவ்வி - தன்னைக் காண வருவோர்க்கு காண முடியாதபடி அரிதாகவும், இன்னா - இனிமையில்லாத, முகத்தான் - முகத்தையுடையவனாகவும், [இருக்கின்றவனது] பெரும் - பெரிய, செல்வம் - செல்வமானது, பேஎய் - பேயால், கண்டன்னது - காணப்பட்டாற்போன்றதொரு குற்றத்தினை, உடைத்து - பெற்றதாகும்.

[க-ரை] தன்னைக் காண வருவோர்க்கு எளிதில் காண முடியாதவனாயும், கண்டால் கடிய முகத்தினையுடையவனாகவும் இருக்கின்ற மன்னனுடைய செல்வம் பேயால் காணப்பட்டதொரு குற்றத்தினை உடையதாகும்.

6. கடுஞ்சொல்லன் கண்இலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும். 566

[ப-ரை] கடும் - கடுமையான, சொல்லன் - சொல்லினையுடையவனும், கண்ணிலன் - கண்ணோட்டம் [இரக்கம்] இல்லாதவனும், ஆயின் - ஆனால், நெடும் - பெரிய, செல்வம் - செல்வமானது, நீடு - நீடுதல், இன்றி - இல்லாமல், கெடும் - கெட்டுவிடும்.

[க-ரை] அரசன் கடிய சொல்லினையுடையவனாகவும், கண்ணோட்டம் (இரக்கம்) இல்லாதவனாகவும் இருந்தால், அவனுடைய பெரிய செல்வம் நீடுதலில்லாமல் அப்பொழுதே கெடும்.

7. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். 567

[ப-ரை] கடு - கடுமையான, மொழியும் - சொல்லும், கையிகந்த - குற்றத்தின் மிக்க, தண்டமும்-தண்டனையும், வேந்தன் — வேந்தனது, அடும் - பகையினை வெல்லுதற்கேற்ற, முரண் - மாறுபாடு என்னும் இரும்பினை, தேய்க்கும் அரம் - தேய்க்கின்ற அரமாகும்.

[க-ரை] கடுமையான சொல்லும் குற்றத்திற்கு மேம்பட்ட தண்டனையும் ஆன இரண்டும் அரசனது வெல்லுதற்கேற்ற மாறுபாடு என்னும் இரும்பினைத் தேய்க்கின்ற அரமாகும்.

8. இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்
சீறின் சிறுகும் திரு. 568

[ப-ரை] இனத்து - தனது இனமாகிய அமைச்சர்களுடன், ஆற்றி - பொருந்த அமைந்து, எண்ணாத - கலந்து எண்ணிச் செய்யாத, வேந்தன் - வேந்தன் [தனது செயல் பழுது பட்டபோது] சினத்தாற்றி - தன்னை சினமாகிய குற்றத்திலே செலுத்தி, சீறின் - அவர்களைச் சினந்து கொண்டால், திரு—அவனுடைய செல்வம், சிறுகும்- நாள்தோறும் சுருங்கும்.

[க-ரை] தன் அமைச்சர்களோடு தானும் சிந்தனை செய்து செயல்படாத வேந்தன், அக்குற்றத்தினால் தமது செயல் பழுதுபட்டபோது பிறர்மேல் கோபம் கொள்ளுவானாகில், அவனுடைய செல்வம் நாள்தோறும் சுருங்கும்.

9. செருவந்த போழ்தின் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 569

[ப-ரை] சிறை - முன்னரே, அரண் - அரண், செய்யா- செய்து கொள்ளாத, வேந்தன் - வேந்தனாவான், செரு வந்த - பகை [போர்] வந்த, போழ்து - காலத்தில், வெரு வந்து - பாதுகாப்பு இல்லாததால் பயந்து, வெய்துகெடும் - விரைவில் கெடுவான்.

[க-ரை] பகைவர் வருவதற்கு முன்பாகவே தனக்குப் புகலிடமானதோர் அரண் செய்து கொள்ளாத அரசன் போர் வந்த காலத்தில், பாதுகாப்பு இல்லாததால் விரைவில் கெடுவான்.

10. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அது அல்லது
இல்லை நிலக்குப் பொறை. 570

[ப-ரை] கடுங்கோல் - கடுங்கோலனாகிய வேந்தன், கல்லார் - நீதி நூற்களைக் கல்லாதவர்களை, பிணிக்கும் - தனது ஆட்சிக்கு உறுப்புகளாகக் கூட்டி வைத்துக் கொள்ளுவான், அது - அந்தக் கூட்டம், அல்லது - அல்லாமல், நிலக்கு - பூமிக்கு, பொறை இல்லை - மிகையான பாரம், வேறு எதுவும் இல்லை.

[க-ரை] கடுங்கோலனாகிய அரசன் நீதி நூல் முதலியவற்றைக் கல்லாதாரைத் தனக்கு அங்கங்களாக வைத்துக் கொளளுவான். அக்கூட்டத்தினரைவிடப் பூமிக்கு அதிகமான பாரம் வேறு இல்லை.

## 58. கண்ணோட்டம்

[தன்னுடன் பழகியவரைக் கண்டால் அவர் கூறியதை மறுக்க முடியாமை]

1. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டுஇவ் வுலகு. 571

[ப-ரை] கண்ணோட்டம் - கண்ணோட்டம், [அன்பால் இரக்கப்படுதல்] என்னும் - என்று சொல்லப்படுகின்ற, கழி - மிகவும், பெரும் - பெரிய, காரிகை - அழகானது, உண்மையால் - இருப்பதால்தான், இவ்வுலகு - இவ்வுலகமானது, உண்டு - உண்டாகி இருந்து வருகிறது.

[க-ரை] கண்ணோட்டம் (பழகியவர் மீது அன்புடைமை) என்னும் சிறப்புடைய அழகு இருந்து வருவதால் தான் இந்தவுலகம் இருந்து வருகின்றது.

2. கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 572

[ப-ரை] உலகில் - உலக நடைமுறையானது, கண்ணோட்டத்து - கண்ணோட்டம் இருப்பதால்தான், உள்ளது - அன்றாடம் நிகழ்ந்து வருவதாகும், அஃது- அக்கண்ணோட்டம், இலார் - இல்லாதவர்கள், உண்மை- இருப்பது, நிலக்குப் பொறை - பூமிக்குப் பாரமே யாகும்.

[க-ரை] உலக நடைமுறையென்பது கண்ணோட்டத்தினால் நிகழ்வதாகும். ஆதலால், கண்ணோட்டம் இல்லாதவர்கள் இருப்பது இந்நிலத்திற்குப் பாரமாகும்.

3. பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். 573

[ப-ரை] பண் - இசையானது, என் ஆம் - என்ன பயனைச் செய்வதாகும், [எப்போது] பாடற்கு - பாடல் தொழிலோடு, இயைபு - பொருத்தம், இன்றேல் - இல்லையானால், கண் - கண்ணானது, என் ஆம் - என்ன பயனை செய்வதாகும், [அதுபோல] கண்ணோட்டம் - கண்ணோட்டம், இல்லாத கண் - இல்லாத கண்கள்.

[க-ரை] பாடுவதற்குப் பொருத்தமில்லாமற் போனால் பண் என்ன பயனையுடையதாகும்? அது போலவே கண்ணோட்டமில்லாத கண் என்ன பயனையுடையதாகும்?

4. உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண். 574

[ப-ரை] அளவினால் - தக்க அளவோடு, கண்ணோட்டம்- கண்ணோட்டம் என்பது, இல்லாத -இல்லாத கண் - கண்கள், முகத்து - முகத்தினில், உளபோல- இருப்பது போல் தோற்றம் தருவதன்றி, எவன் - வேறு- என்ன பயனை, செய்யும் - செய்வன என்று கூற முடியும்.

[க-ரை] அளவு மீறாத கண்ணோட்டம் (தாட்சண்யம்) இல்லாத கண்கள், பார்ப்பதற்கு - பார்ப்பவர்களுக்கு, இருப்பதுபோலத் தோன்றுமே யல்லாமல் என்ன பயனைச் செய்யும்?

5. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதுஇன்றேல்
புண்என்று உணரப் படும். 575

[ப-ரை] கண்ணிற்கு - கண்களுக்கு, அணி - அணியப் படுகின்ற, கலம் - ஆபரணமானது, கண்ணோட்டம் - கண்ணோட்டமாகும், அஃது - அந்த அணிகலம், இன்றேல் - இல்லையானால், [கண்கள்] புண் - புண்கள், என்று - என்பதாக, உணரப்படும் - தெரிந்துணரப்படும்.

[க-ரை] ஒருவனுடைய கண்ணிற்கு அணியும் ஆபரணம் கண்ணோட்டமேயாகும். அந்த ஆபரணம் இல்லையானால், அஃது அறிவுடையோரால் புண் என்று உணரப் படும்.

6. மண்ணொடு இயைந்த மரத்துஅனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர். 576

[ப-ரை] கண்ணோடு - கண்ணோட்டத்திற்குரிய கண்களோடு, இயைந்து - பொருந்தி வைத்தும், கண்ணோடா தவர் - கண்ணோட்டமில்லாதவர்கள், மண்ணொடு - மண்ணொடு, இயைந்த - பொருந்தி நிற்கும், மரத்து - மரத்தினை, அனையர் - ஒப்பர்.

[க-ரை] கண்ணோட்டம் இருக்க வேண்டிய கண்களோடு பொருந்தி, அதற்குரிய கண்ணோட்டம் இல்லாதவர்கள் மண்ணோடு பொருந்தி இருக்கின்ற மரத்தினை ஒப்பர்.

7. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். 577

[ப-ரை] கண்ணோட்டம் - கண்ணோட்டம், இல்லவர் - இல்லாதவர்கள், கண் - கண் உடையவரும், இலர் -

அல்லர், கண்ணுடையார்- கண்ணுள்ளவர்கள், கண்ணோட்டம் - கண்ணோட்டம், இன்மையும் - இல்லாதவராதலும், இல்-இல்லையாகும்.

[க-ரை] கண்ணோட்டம் இல்லாதவர்கள் கண்ணுடையரும் அல்லர்; கண்ணுடையவர்கள் கண்ணோட்டம் இல்லாதிருப்பதும் இல்லை.

8. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் வுலகு. 578

[ப-ரை] கருமம் - முறை செய்தலாகிய தன்னுடைய செயல், சிதையாமல் - கெடாமல், கண்ணோட - கண்ணோட்டம் செய்ய, வல்லார்க்கு - வல்லவர்களுக்கு, இவ்வுலகு - இந்த உலகம், உரிமை- உரியதாகின்ற, தன்மையினை, உடைத்து - உடையது.

[க-ரை] முறை செய்தலாகிய தனது தொழில் கெடாமல் கண்ணோட்டம் செலுத்த வல்லவர்களுக்கு இவ்வுலகம் உரியதாகிய தன்மையுடையது.

9. ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்துஆற்றும் பண்பே தலை. 579

[ப-ரை] ஒறுத்து ஆற்றும் - தம்மைத் தண்டித்து வருகின்ற, பண்பினார் கண்ணும் - குணமுடையவரிடத்தும் கண்ணோடு - கண்ணோட்டமுடையவராகி, பொறுத்தாற்றும் - குற்றத்தினைப் பொறுத்துக் கொள்ளும், பண்பே தலை - பண்புடைமையே தலையாய தன்மையாகும்.

[க-ரை] தமக்குத் துன்பம் கொடுக்கும் தன்மையுடையவரிடத்திலும், கண்ணோட்டம் உடையவராகிக் குற்றத்தினைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு தலையான பண்பாகும்.

10. பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 580

[ப-ரை] நஞ்சு - நஞ்சினை, பெயக்கண்டும் - பழகியவர்கள் இடக்கண்டும், உண்டு - மறுக்க முடியாமல் அதனை உட்கொண்டு, அமைவர் - பின்னும் அவருடன் பழகிச் சேர்ந்து இருப்பர், [யாரெனில்] நயத்தக்க- யாவராலும் விரும்பப்படுகின்ற, நாகரிகம் வேண்டுபவர்- கண்ணோட்டத்தினை விரும்பி வேண்டுபவர்கள்.

[க-ரை] பழகியவர்கள் தமக்கு நஞ்சிடுவதைக் கண்டும் மறுக்க முடியாமல் அதனையும் உண்டு பின்பும் அவ்வருடன் பொருந்தி இருப்பர்; யாரென்றால், யாராலும் விரும்பத் தக்க கண்ணோட்டத்தினை விரும்புகிறவர்கள் என்பதாம்.

# 59. ஒற்றாடல்

## [ஒற்றர்களின் ஆற்றல் கடமை முதலியன]

1. ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். 581

[ப-ரை] ஒற்றும் - ஒற்றனும், உரைசான்ற - புகழ் நிறைந்த, நூலும் - நீதி நூலுமாகிய, இவை, இரண்டு- இரண்டினையும், மன்னவன் - மன்னன், கண் - [இரண்டு] கண்களாக, தெற்றென் - தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] ஒற்றர்கள், புகழ் வாய்ந்த நீதி நூல்கள் ஆகிய இரண்டினையும் மன்னன் தம்முடைய இரண்டு கண்களாகக் கொள்ளுதல் வேண்டும்.

2. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில். 582

[ப-ரை] எல்லார்க்கும் - எல்லாரிடத்திலும், நிகழ்பவை - நடப்பவை, எல்லாம் - எல்லாவற்றையும், எஞ்

ஞான்றும் - எப்போதும், வல்லறிதல் - ஒற்றர்களால் விரைவில் அறிதல், வேந்தன் - வேந்தனுக்கு, தொழில் - உரிய தொழிலாகும்.

[க-ரை] எல்லாரிடத்திலும் நிகழ்கின்ற எல்லாவற்றையும் நாள்தோறும் ஒற்றனால் விரைவில் அறிந்து கொள்ளுதல் வேந்தனுக்கு உரிய தொழிலாகும்.

3. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல். 583

[ப-ரை] ஒற்றினால் - ஒற்றர்களாலே, ஒற்றி - எல்லாரிடத்தும் நிகழ்வதை அறிந்து கொண்டு, பொருள் - அதனால் அடையும் பயனை, தெரியா மன்னன் - ஆராய்ந்தறியாத மன்னன், கொற்றம் - வெற்றி, கொளக்கிடந்தது - அடையக் கிடந்தது, இல் - பிறிது ஒரு நெறி இல்லையாகும்.

[க-ரை] ஒற்றராலே எல்லாரிடத்திலும் நிகழ்ந்தவற்றை அறிந்து வருமாறு செய்து அதனால் அடையும் பயனை ஆராயாத மன்னவன், வெற்றியடைவதற்குரிய வழி இல்லை.

4. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று. 584

[ப-ரை] தம் - தம்முடைய, வினை - தொழிலினை, செய்வார் - செய்வார்கள், சுற்றம் - சுற்றத்தார், வேண்டாதார் - பகைவர், என்றாங்கு - என்று சொல்லப்பட்ட, அனைவரையும் - எல்லோரையும், ஆராய்வது ஒற்று - ஆராய்பவனே ஒற்றனாவான்.

[க-ரை] தம்முடைய தொழில் செய்பவர்கள், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் சொல் செயல்களால் ஆராய்பவனே ஒற்றனாவான்.

5. கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. 585

[ப-ரை] கடாஅ - பிறரால் சந்தேகிக்க முடியாத, உருவோடு - வடிவத்தோடு அமைந்து, கண்ணஞ்சாது- பிறர் தெரிந்து கொண்டு எதிர்த்து நோக்கினால் அஞ்சாமல், யாண்டும் - எவ்வித முறைகளை அவர்கள் செய்தாலும், உகாமை - மனத்தில் உள்ளதை வெளிப்படுத்தாதிருக்க, வல்லதே ஒற்று - வல்லவனே ஒற்றனாவான்.

[க-ரை] அறிதற்குச் செல்லும் ஒற்றன் மற்றவர்களால் சந்தேகிக்கப்படாத உருவத்தோடு பொருந்தி, அவர்கள் சந்தேகித்து, அறியத் தொடங்கினால் அஞ்சாமல் நின்று, பகைவர் என்ன செய்தாலும் மனத்தில் இருப்பதைச் சொல்லாதவனே ஒற்றனாவான்.

6. துறந்தார் படிவத்தர்ஆகி இறந்து ஆராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று. 586

[ப-ரை] துறந்தார் - முற்றுந்துறந்த துறவியும், படிவத்தர் - விரத வொழுக்கினரும், ஆகி - ஆகிய தோற்றத்தினராகி, இறந்து - போவதற்கரிய இடங்களுக்கெல்லாம் சென்று, ஆராய்ந்து - அனைத்தையும் ஆராய்ந்து, என் - [ஐயுற்றுப்பிடித்து] எத்துன்பத்தினை, செயினும் - செய்தாலும், சோர்விலது - தன்னை வெளிப்படுத்தாதவனே, ஒற்று - ஒற்றன் என்பவனாவான்.

[க-ரை] முற்றும் துறந்தவராயும், விரத ஒழுக்கினராயும் தோற்றமளித்து அரிய இடங்களில் எல்லாம் புகுந்து ஆய்ந்து, சந்தேகப்பட்டுப் பிடித்து எத்துன்பம் செய்தாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான்.

7. மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று. 587

[ப-ரை] மறைந்தவை - மறைவாக செய்த செயல்களை, கேட்க - கேட்டறிவதில், வற்று - வல்லது, ஆகி

ஆகி, அறிந்தவை - அவ்வாறு உள்ளவரால் கேட்டறிந்தவை களிலே, ஐயப்பாடு - சந்தேகம், இல்லதே - இல்லாமல் துணிபவனே, ஒற்று - ஒற்றனாவான்.

[க-ரை] அறியப்பட வேண்டியவர்கள், மறைவாகச் செய்த செயல்களை அவர்க்கு உள்ளாயினரால் கேட்க வல்லவனாகி, கேட்டறிந்த செயல்களிலே பிறகு சந்தேகம் இல்லாதபடி துணிய வல்லவனே ஒற்றனாவான்,

8. ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். 588

[ப-ரை] ஒற்று - ஓர் ஒற்றனாலே, ஒற்றி - மறைவாக அறிந்து வந்து, தந்த பொருளினையும் - அறிவித்த செய்தியினையும், மற்றுமோர் - பின்னும் வேறொரு, ஒற்றினால் - ஒற்றனால், ஒற்றி - அறிந்து கொண்டு, கொளல் - ஒத்திருப்பதை உணர்ந்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] ஓர் ஒற்றன் தெரிந்து வந்து அறிவித்த காரியத்தையும் மற்றொரு ஒற்றன் கொண்டுவந்த செய்தியுடன் ஒப்புமை கண்டு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

9. ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும். 589

[ப-ரை] ஒற்று - ஓர் ஒற்றன், ஒற்று - மற்றொரு ஒற்றனை [ஒருவனையொருவன்] உணராமை ஆள்க - அறியாதிருக்குமாறு செய்க, உடன் மூவர் - வெவ்வேறாக அனுப்பப்பட்ட மூவர், சொல் - சொற்களும், தொக்க - ஒத்திருக்குமானால், தேறப்படும் - அது உண்மையென்று அறியப்படுவதாகும்.

[க-ரை] ஒற்றர்களை ஆளும்பொழுது ஒருவரை ஒருவர் அறியாதபடி ஆளுதல் வேண்டும். அவ்வாறுள்ள ஒற்றர்கள் மூவரை வேறு வேறாக ஒரு பொருளினை அறியச்செலுத்தி, அம்மூவர் தருவதும் ஒத்திருந்தால் அது மெய் என்று தெரியப்படும்.

10. சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை. 590

[ப-ரை] ஒற்றின்கண் - ஒற்றனிடத்துச் செய்யும், சிறப்பு அறிய - சிறப்பினைப் பிறர் அறிந்து கொள்ளுமாறு, செய்யற்க - செய்யாதிருத்தல் வேண்டும். செய்யின் - பிறர் அறியச் செய்தால், மறை - மறைவாக அடக்கி வைக்கப்பட வேண்டியதை, புறப்படுத்தான் - தானே வெளிப்படுத்தினவன், ஆகும் - ஆகிவிடும்.

[க-ரை] மறைவாகச் செய்தவற்றை அறிந்து கூறிய ஒற்றனுக்குச் செய்யும் சிறப்பினைப் பிறர் அறியுமாறு செய்யாதிருக்க வேண்டும். அப்படிச் செய்வானானால், மறைத்து வைக்கப்பட வேண்டியதைத் தானே வெளிப்படுத்திவிட்டான் என்பதாகும்.

## 60. ஊக்கம் உடைமை

[மனம் தளர்ச்சியின்றி எழுச்சியுடன் செயல் புரிதல்]

1. உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதுஇல்லார்
உடையது உடையரோ மற்று. 591

[ப-ரை] உடையர் - ஒருவரை உடையவர், எனப்படுவது - என்று சொல்லச் சிறந்தது, ஊக்கம் - ஊக்கம் என்னும் மன உணர்ச்சியேயாகும், அஃது - அத்தகைய ஊக்கம், இல்லார் - இல்லாதவர்கள், மற்று - வேறு, உடையது - உடையரேயாயினும், உடையரோ - உடையவர்கள் ஆவார்களோ? [ஆக மாட்டார் என்பதாம்.]

[க-ரை] ஒருவரை 'உடையவர்' என்று சொல்லச் சிறந்தது ஊக்கமே யாகும். அந்த ஊக்கம் இல்லாதார் வேறு யாது உடையவராயினும் உடையவர் ஆவரோ! ஆகார் என்பதாம்.

2. உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும். 592

[ப-ரை] உள்ளம் - ஊக்கம், உடைமை - உடைமையே, உடைமை - நிலைபெற்ற உடைமையாகும், பொருள் - செல்வம், உடைமை - பெற்றிருப்பதானது, நில்லாது - நிலைத்திருக்காமல், நீங்கிவிடும் - அகன்று போய்விடும்.

[க-ரை] ஊக்கம் உடையவராக இருப்பதே ஒருவர்க்கு நிலையான உடைமையாகும். மற்றபடி பொருள் உடைமை யென்பது நிலையாக நில்லாமல் நீங்கிவிடும்.

3. ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். 593

[ப-ரை] ஒருவந்தம் - நிலைத்திருப்பதாகிய, ஊக்கம் - ஊக்கத்தினை, கைத்து உடையார்-தமது கைப் பொருளாக உடையவர்கள், ஆக்கம் - கைப்பொருளை [செல்வம்] இழந்தேம் - இழந்து விட்டோம், என்று - என்று நினைத்து, அல்லாவார் - மனம் துன்புற மாட்டார்கள்.

[க-ரை] நிலைபெற்ற ஊக்கத்தினைக் கைப்பொருளாகக் கொண்டவர்கள் இழந்தாராயினும், கைப்பொருளை இழந்தோம் என்று மனம் வருந்த மாட்டார்கள்.

4. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை. 594

[ப-ரை] அசைவு - தளர்ச்சி என்பது, இலா - இல்லாமல், ஊக்கம் - ஊக்கத்தினை, உடையான் - உடைய ஒருவன், உழை - இருக்கும் இடத்திற்கு, ஆக்கம் - செல்வமானது, அதர்வினாய் - தானே வழி கேட்டுக்கொண்டு, செல்லும் - போய்ச் சேரும்.

[க-ரை] அசைவில்லாத ஊக்கத்தினை உடையவன் இருக்கும் இடத்திற்குப் பொருள்தானே வழி தேடிக் கொண்டுபோகும்.

5. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு. 595

[ப-ரை] மலர்நீட்டம் - நீர்ப்பூக்களுடைய தண்டு அளின் நீளம், வெள்ளத்தனைய - இருக்கின்ற நீரினது அளவேயாகும், [அதுபோல] மாந்தர் - மக்களுடைய, உள்ளத்தனையது - அவர்கள் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவினதேயாகும், [எதுவென்றால்] உயர்வு - அவர் களுடைய உயர்ச்சியான சிறப்பு.

[க-ரை] நீர்ப்பு பூக்களின் தாளினது நீளமானது நின்ற நீரினது அளவினதாக இருக்கும். அதுபோல மக்களுடைய ஊக்கத்தின் அளவினதேயாகும், அவர்களுடைய உயர்ச்சி.

6. உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 596

[ப-ரை] உள்ளுவது- நினைப்பது, எல்லாம் - எல்லாம், உயர்வு - உயர்ச்சியினையே, உள்ளல் - நினைத்தல் வேண்டும், அது - அவ்வாறு நினைத்த உயர்ச்சியானது- தள்ளினும் - கைகூடாமல் போனாலும், தள்ளாமை - தள்ளாமையான, நீர்த்து - தன்மையினை உடையதாகும்.

[க-ரை] தாங்கள் கருதுவதெல்லாம் தங்களின் உயர்ச் சியினையே கருதுதல் வேண்டும். அவ்வுயர்ச்சி கூடிவர வில்லையென்றாலும், அக்கருத்து, தள்ளாத தன்மையினை உடையதாகும்.

7. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு. 597

[ப-ரை] களிறு - யானையானது, புதை - கட்டாக இருக்கும், அம்பின் - அம்புகளினாலே, பட்டு . புண்பட்ட போதும், பாடு - தளராமல் தனது பெருமையினை, ஊன்றும் - நிலை நிறுத்தும், [அதுவேபோல] உரவோர் - ஊக்கம் உடையவர்கள், சிதைவிடத்து—தாம் கருதிய உயர்ச்

சிக்கு சிதைவு வந்தபோதும், ஒல்கார் - தளராது தமது பெருமையினை நிலைநிறுத்துபவர் ஆவார்கள்.

[க வுரை] யானையானது புதையாகிய அம்பினால் புண்பட்ட போதும், தளராமல் நின்று தனது பெருமையினை நிலைநிறுத்தும். அதுபோல ஊக்கம் உடையவர்கள், தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்த போதும் மனம் தளர மாட்டார்கள். தமது பெருமையினை நிலை நிறுத்துவார்கள்.

8. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. 598

[ப-ரை] உள்ளம் - ஊக்கம், இலாதவர் - இல்லாதவர்கள், உலகத்து - உலகத்தாருள், வள்ளியம் - வண்மையுடையேம் [ஈகைக்குணம் உடையேம்] என்னும் - என்கின்ற, செருக்கு - தம்மைத் தாமே மதித்தலை, எய்தார் - அடையப்பெற மாட்டார்கள்.

[க-ரை] ஊக்கம் இல்லாதவர்கள் இவ்வுலகத்தாருள் 'யாம் வண்மையுடையேம்' என்று தம்மைத் தாமே மதிக்கும் பெருமையினைப் பெறமாட்டார்கள்.

9. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 599

[ப-ரை] பரியது - மற்ற மிருகங்களைவிட பெரிய உடம்பினை உடையது, கூர் - கூர்மையான, கோட்டது - கொம்புகளையும் உடையது, ஆயினும் - என்றாலும்- யானை - அந்த யானை, புலி - புலியானது, தாக்குறின் - தன்னை எதிர்த்து வந்தால், வெரூஉம் - பயப்படும்.

[க-ரை] எல்லா விலங்கினங்களிலும் தானே பெரிய உடம்பினையுடையது அதுவேயன்றி கூரிய கொம்புகளையும் [தந்தங்களையும்] உடையது. என்றாலும், அப்படிப் பட்ட யானையானது, ஊக்கம் நிறைந்த சிறிய உருவங் கொண்ட புலி தனக்கு எதிர்ப்பட்டால் அதற்கு அஞ்சும்.

10. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதுஇல்லார்
மரமக்கள் ஆதலே வேறு. 600

[ப-ரை] ஒருவற்கு - ஒருவருக்கு, உரம் - திண்மையான அறிவென்பது, உள்ள வெறுக்கை - ஊக்கம் - நிறைந்திருப்பதேயாகும், அஃது - அந்த ஊக்கம், இல்லார் - இல்லாதவர்கள், மரம் - மரங்களாவர் [மக்களாகார்] வேறு - [இயற்கை மரங்களுக்கும் இந்த மரங்களுக்கும்] வேறுபாடு என்னவென்றால் மக்களாதலே - மக்களுக்குள்ள வடிவத்தில் இவர்களும் இருப்பதேயாகும்.

[க-ரை] ஒருவர்க்குத் திண்ணிய அறிவானது ஊக்கம் மிகுந்திருப்பதேயாகும். அந்த ஊக்கம் இல்லாதவர்கள் மக்களாக மாட்டார்கள்; மரங்களாவார். இயற்கையாக உள்ள மரங்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், மக்கள் தோற்றமேயாகும்.

## 61. மடியின்மை

### [சோம்பல் இல்லாத தன்மை]

1. குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசுஊர மாய்ந்து கெடும். 601

[ப-ரை] குடி - தான் பிறந்த குடி, என்னும் - எனப்படுகின்ற, குன்றா - அணையாத, விளக்கம் - விளக்கானது, மடி - சோம்பல், என்னும் - என்கின்ற, மாசு - இருளானது, ஊர - அடர்ந்து நெருங்க, மாய்ந்து - மழுங்கி, கெடும் - கெட்டுப் போகும்.

[க-ரை] தான் பிறந்த குடியென்னும் அணையா விளக்கு ஒருவனுடைய சோம்பல் என்னும் மடியாகிய இருள் அடர மழுங்கிக் கெடுவதாகும்.

2. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். 602

[ப-ரை] குடியை - தனது குடியினை, குடியாவேண்டு பவர் - உயர்ந்த நற்குடியாக இருக்க விரும்புகிறவர்கள், மடியை - சோம்பல் தன்மையினை, மடியா - சோம்பலாகவே கருதி, ஒழுகல் - முயற்சியுடன் ஒழுகுவார்களாக.

[க-ரை] தாம் பிறந்த குடியை மேன்மேலும் உயர்ந்த குடியாகச் செய்ய வேண்டுவோர் சோம்பலாகவே நினைத்து முயற்சியுடன் ஒழுகுதல் வேண்டும்.

3. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. 603

[ப-ரை] மடி - விட்டு விடவேண்டிய, மடிகொண்டு - சோம்பலினைத் தன்னுள்ளே இருக்க வைத்து, ஒழுகும் பேதை - நடந்து கொள்ளும் அறிவற்றவன், பிறந்த குடி - பிறந்துள்ள குடியானது, தன்னினும் - அவன் காலம் முடிவதற்குள், முந்து - முன்னமேயே, மடியும் - கெட்டுப் போகும்.

[க-ரை] விடவேண்டிய சோம்பலினைத் தன்னுள்ளே வைத்து நடக்கின்ற அறிவில்லாதவன் பிறந்துள்ள குடியானது, அவனுடைய காலம் முடிவதற்குள் அழிந்து விடும்.

4. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றுஇ லவர்க்கு 604

[ப-ரை] மடி - சோம்பலிலேயே, மடிந்து - வீழ்ந்து தமிழ்ந்து, மாண்ட - சிறந்த, உஞற்றிலவர்க்கு - முயற்சி இல்லாதவர்களுக்கு, குடிமடிந்து - தனது குடியும் அழிந்து, குற்றம் பெருகும் - குற்றமும் பெருகிவிடும்.

[க-ரை] சோம்பலிலேயே வீழ்ந்தமிழ்ந்து சிறந்த முயற்சி இல்லாதவர்களுக்குத் தனது குடியும் அழிந்து குற்றமும் பெருகிவிடும்.

5. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 605

[ப-ரை] மடி - மடிமைத் தன்மையும், நெடுநீர் - விரைவில் செய்ய வேண்டியதைத் தாமதமாகச் செய்யும் குணமும், மறவி - மறதியும், துயில் - தூக்கமும், நான்கும் - இந்த நான்கும், கெடு - கெட்டழியும், நீரார் - தன்மையினர், காமக் கலன் - விரும்பி ஏறிச் செல்லும் மரக்கலங்களாகும்.

[க-ரை] சோம்பலும், விரைந்து செய்ய வேண்டியதை நீட்டித்துச் செய்யும் இயல்பும், மறதியும், தூக்கமும் ஆகிய இந்நான்கும் கெட்டுப்போகும் தன்மையுடையவர்கள் விரும்பி ஏறும் மரக் கலங்களாகும்.

6. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது. 605

[ப-ரை] படிஉடையார் - நிலம் முழுதும் ஆண்டவரது, பற்று - செல்வம், அமைந்தக் கண்ணும் - தானாகவே வந்து அடைந்த போதும், மடி - மடித்தனம், உடையார் - உள்ளவர்கள், மாண் - சிறப்பான, பயன் - பயனை, எய்தல் - அடைதல், அரிது - முடியாததாகும்.

[க-ரை] நிலம் முழுவதனையும் ஆண்டவரது செல்வம் தானே வந்து சேர்ந்த போதும், சோம்பல் கொண்டவர்கள் அதனால் சிறந்த பயனை அடைவதில்லை.

7. இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றுஇ லவர். 607

[ப-ரை] மடி - சோம்பலினை, புரிந்து - விரும்பி மேற்கொண்டு, மாண்ட - சிறப்புமிக்க, உஞற்றிலவர் - முயற்சியினைக் கொள்ளாதவர்கள், இடிபுரிந்து - பிறர் கண்டித்துப் பேசி, எள்ளும் - இழிவாகப் பேசும், சொல் - சொற்களை, கேட்பர் - கேட்பவர்கள் ஆவார்கள்.

[க-ரை] சோம்பலினை விரும்பி சிறந்த முயற்சியினை மேற்கொள்ளாதவர்கள், நண்பர்களும் பிறரும் கண்டித்துப் பேசி இகழும் சொல்லினைக் கேட்பவராவர்.

8. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். 608

[ப-ரை] மடிமை - மடிமைக் குணம், குடிமைக்கண் - நற்குடியாளனிடம், தங்கின் - இருந்து, விடுமேயானால் [அவனை] தன் - தன்னுடைய, ஒன்னார்க்கு - பகைவர்களுக்கு, அடிமை - அடிமையாகும் நிலைமையினை, புகுத்தி விடும் - உண்டாக்கிவிடும்.

[க-ரை] மடியானது நற்குடியில் பிறந்தவனிடத்தில் இருந்துவிடுமானால், அது அவனைத் தன்னுடைய பகைவர்களுக்கு அடிமையாகும் தன்மையினை உண்டாக்கிவிடும்.

9. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். 609

[ப-ரை] ஒருவன் - ஒருவன், மடி - மடியினை, ஆண்மை - ஆளும் தன்மையினை, மாற்ற - நீக்கிவிட்டால், குடி - அவனுடைய குடிக்குள்ளும் ஆண்மையுள் - ஆண்மையினுள்ளும், வந்த - வந்த, குற்றம் கெடும் - குற்றங்கள் கெட்டோடும்.

[க-ரை] ஒருவன் தன்னிடமிருந்து மடியென்னும் சோம்பலினை ஒழித்துவிட்டால், அவனுடைய குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் நீங்கிவிடும்.

10. மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு. 610

[ப-ரை] அடி - தனது அடி அளவினாலே, அளந்தான் - எல்லா உலகத்தினையும் அளந்தவன், தாயது - கடந்த பரப்பு, எல்லாம் - முழுவதையும், மடி - சோம்பல் தன்மை, இலா - இல்லாத, மன்னவன் - மன்னன், ஒருங்கு - ஒரே காலத்தில் சேர, எய்தும் - அடைந்து விடுவான்.

[க-ரை] தன் அடியளவினாலே எல்லா உலகையும் அளந்தவனுடைய பரப்பு முழுவதையும் மடியில்லாத (சோம்பலில்லாத) மன்னன் ஒரே காலத்தில் ஒருங்கே அடைவான்.

## 62. ஆள்வினை உடைமை

### [இடைவிடாத மெய்ம்முயற்சி உடையவனாதல்]

1. அருமை யுடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 611

[ப-ரை] அருமை - இச்செயல் முடிப்பதற்கு அருமைத் தன்மையினை, உடைத்து - உடையதாக இருக்கின்றது, என்று - என்று கருதி, அசாவாமை - மனம் தளராமை, வேண்டும் - வேண்டியதாகும், பெருமை - அத்தொழிலினைச் செய்து முடிக்கும் பெருமையினை, முயற்சி - முயற்சி - முயற்சியானது, தரும் - உண்டாக்கித் தருவதாகும்.

[க-ரை] 'இத்தொழில் செய்து முடிக்க அருமையானது' என்று எண்ணி மனம் தளராதிருத்தல் வேண்டும்; அதனை முடித்தற்கேற்ற பெருமையினைத் தனக்கு முயற்சி உண்டாக்குவதாகும்.

2. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு. 612

[ப-ரை] வினை - தொழிலாகிய, குறை - குறைபாட்டினை, தீர்ந்தாரின் - செய்யாது விட்டவரை, உலகு - உலகம், தீர்ந்தன்று - விட்டு விட்டது [ஆகையால்] வினைக்கண் - செய்யத் தகும் தொழிலினிடம், வினைகெடல் - செய்யாமல் செயலற்று இருப்பதை, ஓம்பல் - நீக்குதல் வேண்டும்.

[க-ரை] தொழில் செய்தல் என்னும் குறைபாட்டினைச் செய்யாது விட்டவரை உலகம் விட்டுவிட்டது ஆதலால் செய்யப்படும் தொழில் செயலற்று இருப்பதை நீக்குதல் வேண்டும்.

3. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. 613

[ப-ரை] வேளாண்மை - எல்லோருக்கும் உபகாரம் செய்தல், என்னும் - எனப்படுகின்ற, செருக்கு - மேம்பாடு, தாளாண்மை - முயற்சி, என்னும் - என்று கூறப்படும், தகைமைக்கண் - உயர்ந்த [குணத்தினிடம், தங்கிற்றே - நிலை பெற்றிருப்பதேயாகும்.

[க-ரை] எல்லோருக்கும் உபகாரம் செய்தல் என்னும் மேம்பாடு, முயற்சி என்று சொல்லப்பட்ட உயர்ந்த குணத்தினிடத்தில் நிலை பெற்றிருப்பதாகும்.

4. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 614

[ப-ரை] தாளாண்மை - முயற்சியின்மை, இல்லாதான் - இல்லாதவன், வேளாண்மை - உபகாரியாக இருக்கும் தன்மையானது, பேடி - படையினைக் கண்டால் அஞ்சுகின்ற பேடியானவன், கை - தனது கையில், வாளாண்மை போல - வாளினை ஆளும் தன்மைபோல, கெடும் - இல்லையாக முடியும்.

[க-ரை] முயற்சி இல்லாதவன் உபகாரியாக இருக்கும் தன்மையென்பது, படையினைக் கண்டால் அஞ்சுகின்ற பேடி தனது கையில் வாளினை வைத்திருக்கும் தன்மை போல இல்லையாக முடியும்.

5. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்து ஊன்றும் தூண். 615

[ப-ரை] இன்பம் - தனக்கு இன்பத்தினை, விழையான் - விரும்பாதவனாகி, வினை - தொழில் முடிப்பதையே

விழாவைன் - விரும்புவான், தன் - தன்னுடைய, கேளிர் - சுற்றத்தார், நண்பர்களுடைய, துன்பம் - துன்பத்தினை, துடைத்து - நீக்கி, ஊன்றும் தூண் - அதனைத் தாங்கும் தூணாகும்.

[க-ரை] தனக்கு இன்பத்தினை விரும்பாதவனாகித் தொழில் முடிப்பதையே விரும்புகிறவன், தன் சுற்றத்தாரின் துன்பத்தினை நீக்கிச் சுற்றத்தாராகிய பாரத்தினைத் தாங்கும் தூணாகவும் ஆவான்.

6. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 616

[ப-ரை] முயற்சி - முயற்சியானது, திருவினை - செல்வத்தினை, ஆக்கும் - வளர்க்கும், முயற்று - அம்முயற்சி இன்மை - இல்லாமையானது, இன்மை - வறுமையினை, புகுத்தி விடும் - சேர்த்து விடும்.

[கரை] முயற்சியானது செல்வத்தினை வளர்க்கும். அம்முயற்சி இல்லாதிருப்பதானது வறுமையில் கொண்டு போய் விட்டுவிடும்.

7. மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். 617

[ப-ரை] மாமுகடி - கரிய சேட்டையானவள், மடி உளாள் - ஒருவனுடைய சோம்பலின் கண்ணே இருப்பவளாவாள், தாமரையினாள் - தாமரையினாள் என்னும் திருமகள், மடி - சோம்பல், இலான் - இல்லாதவனுடைய, தாள் - முயற்சியினிடத்தில், உளாள் என்ப - இருப்பாள் என்று அறிந்தோர் சொல்லுவர்.

[க-ரை] கரிய சேட்டையானது ஒருவனுடைய சோம்பலினிடத்திலே வாசம் செய்யும். திருமகள் மடியில்லாதவனுடைய முயற்சியினிடத்தே தங்கியிருப்பாள் என்று அறிந்தோர் சொல்லுவர்.

8\. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து
ஆள்வினை இன்மை பழி. 618

[ப-ரை] பொறி - பயனைத் தரும் விதி, இன்மை - இல்லாமையானது, யார்க்கும் - எவர்க்கும், பழி - பழி - அன்று - அல்ல, அறிவு - அறிய வேண்டுவனவற்றை, அறிந்து - அறிந்து தெரிந்து, ஆள்வினை - முயன்று தொழில் செய்தல், இன்மை - இல்லாதிருப்பதே, பழி - ஒருவருக்குப் பழியாகும்.

[க-ரை] பயனைத் தருவதாகிய விதி இல்லாமை ஒருவற்குப் பழி ஆகாது. அறிய வேண்டியவற்றை அறிந்து முயன்று தொழில் செய்யாமையே பழியாகும்.

9\. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும். 619

[ப-ரை] தெய்வத்தான் - ஊழ்வகையான், ஆகாது - கருதிய பயனைத் தாராதாயினும், முயற்சி - முயற்சியானது, தன் - தனக்கு இடமாகிய, மெய் - உடம்பு, வருத்த - வருந்திய வருத்தத்தின், கூலி - கூலி அளவு, தரும் - பயனைத் தருவதாகும் [வீண் போகாது]

[க-ரை] முயன்ற தொழில் ஊழ்வினையால் கருதிய பயனைத் தராமல் போனாலும், வருந்திய வருத்தத்தின் கூலி அளவு பயனைத் தரும்; வீண் போகாது.

10\. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர். 620

[ப-ரை] உலைவு - தளர்ச்சி, இன்றி - இல்லாமல், தாழாது - தாழ்வு இல்லாமல், உஞற்றுபவர் - தொழிலில் முயற்சி செய்வோர், ஊழையும் - பயனை விலக்குகின்ற ஊழையும், உப்பக்கம் - புறமாகியபின் பக்கம், காண்பர் - காண்பார்கள்.

[க-ரை] ஊழ்வினைச் செயலுக்கு இளைக்காமல் தொழிலில் தாழ்வில்லாமல் முயற்சி செய்பவர்கள், பயனை விலக்குவதாகிய ஊழினையும் புறங்காண்பர்.

# 63. இடுக்கண் அழியாமை

[தனக்குத் துன்பம் வந்த போது கலங்காமை]

1. இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல். 621

[ப-ரை] இடுக்கண் வருங்கால் - துன்பமானது வந்த போது, நகுக - மனம் கலங்காமல் உள்மகிழ்தல் வேண்டும், அதனை - அத்துன்பத்தினை, அடுத்து - தொடர்ந்து மேன் மேலும், ஊர்வது - மனவெழுச்சியால் போக்கக் கூடிய, அஃது - அம்மகிழ்ச்சியினை, ஒப்பது - போன்றது, இல் - வேறு எதுவும் இல்லையாகும்.

[க-ரை] ஒருவன் தனக்கு இடுக்கண் (துன்பம்) வந்த போது அதற்கு அழியாமல் உள்மகிழ்தல் வேண்டும். அத்துன்பத்தினை மேன்மேலும் நெருக்க வல்லது, அம் மகிழ்ச்சி போன்றது வேறு எதுவும் இல்லை.

2. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 622

[ப-ரை] வெள்ளம் - வெள்ளத்தினை, அனைய - போன்ற, இடும்பை - [கரையில்லாத] துன்பம் எல்லாம், அறிவுடையான் - அறிவுள்ளவன், உள்ளத்தின் - தனது மனத்தினில், உள்ள - ஒன்றினை நினைக்க, கெடும் - அப்போதே கெட்டு விடும்.

[க-ரை] வெள்ளம் போலக் கரையில்லாத துன்பங்கள் (இடும்பைகள்) எல்லாம், அறிவுடையவன் தனது உள்ளத்தி னாலே நினைத்துப் பார்க்க அப்பொழுதே கெடும்.

3. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர். 623

[ப-ரை] இடும்பைக்கு - துன்பத்திற்கு, இடும்பை - துன்பம், படாஅதவர் - அனுபவிக்காதவர், இடும்பைக்கு -

வந்த அந்தத் துன்பத்திற்கு, இடும்பை படுப்பர் - துன்பத்தினை உண்டாக்கி விடுவர்.

[க-ரை] தொழில் செய்யும்போது இடையில் வந்த துன்பங்களுக்குத் துன்பப்படாதவர்கள், வந்த அத்துன்பங்களுக்குத் துன்பத்தினை உண்டாக்கி விடுவர்.

4. மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. 624

[ப-ரை] மடுத்த - விலக்கித் தடுத்த, வாய் எல்லாம் - வழியான இடங்களில் எல்லாம், பகடு - [வண்டியினை இழுத்துச் செல்லும்] மாடு, அன்னான் - போன்றவனை, உற்ற - வந்தடைந்த, இடுக்கண் - துன்பமானது, இடர்ப்பாடு - தானே துன்பப்படுவதை, உடைத்து - உடையதாகும்.

[க-ரை] விலக்கிய இடங்களில் எல்லாம் வண்டியினைப் பெரு முயற்சியுடன் இழுத்துச் செல்லுகின்ற மாட்டினைப் போல, தொழிலினை முயன்று செய்து கொண்டு போகின்றவனைத் துன்புறுத்தும் துன்பம், தானே துன்பப்படும்.

5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். 625

[ப-ரை] அடுக்கி - இடைவிடாமல் மேன்மேல், வரின் - வந்து கொண்டிருந்தாலும், அழிவு - தனது உள்ளக் கோட்பாடு கெடுதல், இலான் - இல்லாதவனை, உற்ற - வந்தடைந்த, இடுக்கண் - துன்பமானது, இடுக்கண்படும் - துன்பப்பட்டு மறையும்.

[க-ரை] இடைவிடாமல் துன்பங்கள் மேன்மேல் வந்தாலும், தன் மனத்தில் உள்ள கோட்பாட்டினை விடாதவனிடம் வந்த துன்பங்கள் தாமே துன்பப்படும்.

6. அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர். 626

[ப-ரை] பெற்றேம் - செல்வம் பெற்றுள்ளோம், என்று - என்பதை நினைத்து, ஓம்புதல் - [செல்வக் காலத்தில்]

உலோபத் தன்மையினை, அறியாதார் - அறியாதவர்கள் [ஈகைத் தன்மையில் இருந்தவர்கள்], அற்றேம் - பொருளின்றி வறியரானோம், என்று - என்று நினைத்து, அல்லல் - மனத்தால் துன்பம், படுபவோ - அடைவார்களோ! [அடையமாட்டார்கள்].

[க-ரை] செல்வம் பெற்றிருந்த காலத்தில் உலோபியாக இருப்பதை அறியாதவர்கள், வறுமையுற்ற காலத்தில் மனத்தினாலே துன்பப்படுவார்களோ? படமாட்டார்கள்.

7. இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். 627

[ப-ரை] உடம்பு - இந்த உடம்பானது, இடும்பைக்கு - துன்பத்திற்கு, இலக்கம் - வருகின்ற குறியிடம், என்று - என்பதனைத் தெளிந்து, கலக்கத்தை - தமக்கு வந்த துன்பத்தினை, கையாறா - துன்பம் என்பதாக, கொள்ளாதாம் - கொள்ளமாட்டார்கள், மேல் - அறிவு நிறைந்தவர்கள்.

[க-ரை] உடம்பானது துன்பம் என்பதற்கு இலக்கு என்பதைத் தெரிந்துணர்ந்து தமக்கு வந்த துன்பத்தினைத் துன்பமாகக் கொள்ளமாட்டார்கள் அறிவுடையார் என்பதாம்.

8. இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இலன். 628

[ப-ரை] இன்பம் - இன்பமானவற்றை, விழையான் - விரும்பாமல், இடும்பை - துன்பம் வந்தால், இயல்பு - இது இயற்கை, என்பான் - என்று சொல்லுபவன், துன்பம் - எந்நாளும் துன்பம், உறுதல் - அடைதல், இலன் - இல்லையாவான்.

[க-ரை] தனக்கு இன்பமானவற்றை விரும்பாமல், துன்பம் வந்தால் இயற்கையென்று உணர்ந்திருப்பவன் தனது முயற்சியால் துன்பம் அடையமாட்டான்.

9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 629

[ப-ரை] இன்பத்துள் - இன்பம் வந்த போது, இன்பம் - அந்த இன்பத்தினை, விழையாதான் - மனத்தால் விரும்பாதவன், துன்பத்துள் - துன்பம் வந்த போதும், துன்பம் - அத்துன்பத்தினை, உறுதல் - மனத்தால் அடைதல், இலன் - இல்லையாகும்.

[க-ரை] தனக்கு இன்பம் வந்தபோது அதனை அனுபவித்து மனத்தால் விரும்பாதவன், துன்பம் வந்த போதும் அதனை அனுபவித்து மனத்தால் வருந்த மாட்டான்.

10. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 630

[ப-ரை] இன்னாமை - வந்த துன்பத்தினையே, இன்பம் - இன்பமாகும், என-என்று, கொளின் - கற்பித்துக் கொள்ளுவானானால், தன் - தன்னுடைய, ஒன்னார் - பகைவர், விழையும் - நன்கு மதிப்பதற்குக் காரணமான, சிறப்பு - சிறப்பானது, ஆகும் - அவனுக்கு உண்டாம்.

[க-ரை] ஒருவன் தனக்கு வந்த துன்பத்தினையே இன்பமாகக் கற்பித்துக் கொண்டு இருக்கின்ற தன்மையுடையவனானால், அத்தன்மை அவனுடைய பகைவர்களும் நன்கு மதிக்கும் முயற்சியினை அவனுக்கு உண்டாக்கி விடும்.

# அங்க இயல்

## 64. அமைச்சு

[அமைச்சர்களுடைய கடமைகள் ஆற்றல்கள் முதலியன]

1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. 631

[ப-ரை] கருவியும் - தொழில் முடிக்கும் கருவிகளும் - ஏற்ற காலமும், செய்கையும் - செய்யும் வழிமுறையும், செய்யும் - அவற்றினால் செய்யப்படும், அரு - அரியதான, வினையும் - தொழிலும், மாண்டது - ஆகியவற்றை நன்கு பொருத்தமாக எண்ண வல்லவனே, அமைச்சு - அமைச்சனாவான்.

[க-ரை] தொழில் செய்யும்போது அதற்கு வேண்டிய கருவிகளும், அதற்கு ஏற்ற காலமும், செய்யும்வகையும், செய்யப்படும் அரிய தொழிலும் ஆகியவற்றை நன்கு எண்ண வல்லவனே அமைச்சனாவான்.

2. வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு. 632

[ப-ரை] வன்கண் - கலங்காத கண்ணையும், குடி-குடிமக்களை, காத்தல் - காப்பாற்றுதலும், கற்று - நீதி நூல்களைக் கற்று, அறிதல் - நன்கு அறிதலும், ஆள்வினை - முயற்சியும், ஐந்துடன் - இந்த ஐந்து பண்புகளுடனே, மாண்டது - சிறப்புடன் திருத்தமாக அமையப் பெற்றிருப்பவனே, அமைச்சு - அமைச்சனாவான்.

[க-ரை] தொழில் செய்யுங்கால் மனம் தளராமையும், குடிகளைக் காத்தலும் நீதி நூல்களைக் கற்றுநல்லன தீயன

வற்றை அறிதலும், முயற்சியும் ஆகிய இந்த ஐந்தும் சிறப்பாக உடையவனே அமைச்சனாவான்.

3. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு. 633

[ப-ரை] பிரித்தலும் - பிரிக்க வேண்டியவைகளைப் பிரித்தலும், பேணி - ஆதரவு தந்து இருக்க வேண்டியவர்களைப் பிரியாமல் போற்றி, கொளலும்-வைத்துக்கொள்ளலும், பிரிந்தாரை-முன்பு பிரிந்தவர்களை, பொருத்தலும்- பொருத்த வேண்டின் பொருத்திச் சேர்த்துக் கொள்ளலும், வல்லது அமைச்சு-இவைகளில் வல்லமையாக இருப்பவனே அமைச்சனாவான்.

[க-ரை] தக்க காலத்தில் பிரிக்க வேண்டியவர்களைப் பிரித்தலும், வேண்டியவர்களை நன்கு ஆதரித்துப் பிரியாமல் வைத்துக் கொள்ளலும், பிரிந்தவர்களைப் பொருத்த வேண்டின் பொருத்தலும் ஆகியவற்றில் வல்லவனே அமைச்சனாவான்.

4. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. 634

[ப-ரை] தெரிதலும் - யாவற்றையும் ஆராய்ந்து அறிதலும், தேர்ந்து - தொழில் முடியும் வகையினை நாடி, செயலும் - செய்தலும், ஒருதலையா - முடிவாகவும் துணிவுண்டாகுமாறும், சொல்லலும் - சொல்லுவதிலும், வல்லது அமைச்சு - இவைகளில் வல்லவனே அமைச்சனாவான்.

[க-ரை] செய்தொழிலில் ஆவன ஆராய்ந்து தெரிதலும், செய்யும்போது வகைத் திறத்தினை நாடிச் செய்தலும், திட்டமிட்டுச் செய்ய வேண்டியவற்றை முடிவாகச் சொல்லலும் ஆகியவற்றில் வல்லவனே அமைச்சனாவான்.

5. அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை. 635

[ப-ரை] அறன் அறிந்து - அறம் இன்னது என்பதனை அறிந்துதெரிந்து, ஆன்று - நிறைந்த கல்வியால், அமைந்த

தகுதியாக அமைந்த, சொல்லான் - சொல்லையுடையவனாகி, எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், திறன் - தொழில் புரியும் திறங்களை, அறிந்தான் - அறிந்த அமைச்சனே, தேர்ச்சித்துணை - தலைவனுடைய ஆலோசனைகளுக்கு ஏற்ற துணையாவான்.

[க-ரை] செய்யவேண்டிய அறம் இன்னது என்று அறிந்து ஏற்ற கல்வியால் அமைந்த சொல்வினையுடையவனாக, எக்காலத்திலும் தொழில் செய்யும் திறங்களையுடைய அமைச்சனே மன்னனுக்குச் சிறந்த துணையாவான்.

6. மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை. 636

[ப-ரை] மதி - இயற்கையாகவுள்ள அறிவு, நுட்பம் - நுண்ணிய நுட்பத்துடனே, நூலோடு - செயற்கையாகிய நூலறிவினையும், உடையார்க்கு - உடைய அமைச்சர்களுக்கு, அதி - மிகுதிப்பட்ட, நுட்பம் - நுட்பமான ஆலோசனைகள் என்பதாக, முன்நிற்பவை - எதிராக இருக்கக் கூடியவை, யா - எவை, உள - இருக்கின்றன.

[க-ரை] இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடைய அமைச்சர்க்கு மிகவும் நுட்பத்தினையுடைய செயல்களாக முன் நிற்பவை யாவை உள?

7. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல். 637

[ப-ரை] செயற்கை - நூல்கள் வழிகளால் செய்யும் திறத்தினை, அறிந்த - அறிந்திருந்த, கடைத்தும் - இடத்தும், உலகத்து - உலகத்தில், இயற்கை - அவ்வப்போது நடக்கின்ற இயற்கை நிலைமைகளை, அறிந்து செயல் - அறிந்துகொண்டு அதனோடு பொருந்தச் செய்தல் வேண்டும்.

[க-ரை] நூல்வழிகளால் தொழில் செய்யும் திறங்களை அறிந்தபோதும், அவ்வப்போது நடக்கின்ற உலக இயற்கையினை அறிந்து அதனோடு பொருந்தச் செய்தல் வேண்டும்.

8. அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 638

[ப-ரை] அறி - அறிந்து சொல்லியவாறு அறிவையும், கொன்று - அழித்து, அறியான் - தலைவனான மன்னன் தானும் அறியாதவன், எனினும் - என்றாலும், [அதனால் மன்னனை விட்டுவிடாமல்] உறுதி - உறுதியானவைகளைச் சொல்லுதலும், உழையிருந்தான் - பக்கத்திலிருக்கும் அமைச்சனுடைய, கடன் - கடமையான முறையாகும்.

[க-ரை] அறிந்து சொல்லியவரது அறிவையும் அழித்து, தலைவன் தானும் அறியாதவனானாலும் அதனால் தலைவனை விட்டுவிடாமல் அக்குற்றம் நீக்கி, உறுதியானவற்றைக் கூறுதல் அமைச்சனுக்கு முறைமையாகும்.

9. பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர்
எழுபது கோடி யுறும். 639

[ப-ரை] பக்கத்துள் - பக்கத்திலேயேஇருந்துகொண்டு பழுது - தீமையானவைகளைச் செய்ய, எண்ணும் - எண்ணுகின்ற, மந்திரியின் - அமைச்சர் ஒருவனைவிட, [தலைவனுக்கு எதிராக நிற்பவர்] ஓர் - ஒரு, எழுபதுகோடி - ஏழாகிய பத்துக் கோடி, தெவ் - பகைவர், உறும் - ஆவர் என்பதாம்.

[க-ரை] பக்கத்திலிருந்து கொண்டே தவறானவற்றை எண்ணுகின்ற அமைச்சன் ஒருவன், அரசனுக்கு எதிராக நிற்கும் ஓர் எழுபது கோடி பகைவர்களை விடவும் கொடியவனாவான்.

10. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர். 640

[ப-ரை] திறப்பாடு - செயலினை முடித்தற்கேற்ற முறைகளை, இலாதவர் - அறிந்தில்லாதவர்கள், முறைப்பட-செய்ய வேண்டிய செயல்களை முன்பாகவே தெளிவுற, சூழ்ந்தும் - ஆராய்ந்து வைத்திருந்தும், முடிவிலவே - செய்யும்போது அவர்கள் முடிவுறாதபடியே, செய்வர் - செய்பவராவார்.

[கு-ரை] முடிப்பதற்கு ஏற்ற கூறுபாடுகள் அறியாதவர்கள், செய்யப்படும் தொழில்களை முன்பாகவே நன்கு எண்ணி வைத்திருந்தும் செய்யும்போது அவை முடியாதபடியே செய்வார்கள்.

## 65. சொல் வன்மை

### [சொற்களைச் சொல்லுவதில் ஆற்றலுடைமை]

1. நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று. 641

[ப-ரை] நா - நாவினால் உளதாகிய, நலம் - நன்மை, என்னும் - என்று சிறப்பித்துக் கூறப்படும், நலம் - நலத்தினை, உடைமை - உடையவராக இருத்தல் [வேண்டும்], அந்நலம் - அந்தச் சிறப்பானது, யாநலத்து - பிற நலங்கள் எல்லாவற்றிலும், உள்ளதூஉம் - அடங்குவதும், அன்று - அல்ல [எல்லாவற்றையும்விட மேலானதாம்]

[கு-ரை] அமைச்சர்க்கு மிகச் சிறந்த குணமாவது நாவின் நலம் உடையவராக இருத்தலாகும். அந்நலம் பிற எல்லா நலங்களையும் விட மேலானதாகும்.

2. ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. 642

[ப-ரை] ஆக்கமும் - செல்வப் பெருக்கமும், கேடும் - கெடுதியும், அதனால் - தம் சொல்லால், வருவதால் - வரும் ஆதலால், சொல்லின்கண் - சொற்களிடத்தில், சோர்வு - சோர்வு உண்டாக்காமல், காத்து - பாதுகாத்து, ஓம்பல் - போற்றுதல் வேண்டும்.

[க-ரை] செல்வப் பெருக்கமும் அழிவும் தமது சொல்லால் வரும். ஆகையால், சொற்களில் சோர்வில்லாமல் போற்றிக் காத்தல் வேண்டும்.

3. கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 643

[ப-ரை] கேட்டார் - நண்பராக ஏற்றுக் கொண்டவரை, பிணிக்கும் - வேறுபடாமல் கட்டுகின்ற, தகை அவாய் - குணத்தினை விரும்புகின்றதாகவும், கேளாரும் - பகைமையால் ஏற்றுக்கொள்ள மனமில்லாதவரும், வேட்ப - நட்பினை விரும்புமாறு, மொழிவதாம் சொல் - சொல்லப் படுவதே சொல்லாகும்.

[க-ரை] நண்பர்களாக இருந்தும் கேட்கும் உள்ளம் படைத்தவர்களைப் பிணிக்கும் தன்மையுடையதாகிப் பகைமையால் ஏற்றுக் கொள்ளாதாரும் பகை நீங்கி நண்பராக ஆக விரும்பும் வண்ணம் சொல்லப்படுவதே சொல்லாகும்.

4. திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின் ஊங்குஇல். 644

[ப-ரை] சொல்லை - சொல்லினை, திறனறிந்து - திறங்களைத் தெரிந்து, சொல்லுக - சொல்லுதல் வேண்டும், அதனின் - அப்படிச் சொல்லுவதைவிட, ஊங்கு - மேலான, அறனும் - அறமும், பொருளும் - பொருளும், இல் - வேறு இல்லை.

[க-ரை] சொல்லின் திறங்களை அறிந்து தெரிந்து சொல்லுதல் வேண்டும். அப்படிச் சொல்வதற்கு மேலான அறமும் பொருளும் வேறு இல்லை என்பதாம்.

5. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. 645

[ப-ரை] சொல்லை - தாம் சொல்ல வேண்டிய சொல்லினை, பிறிதோர் - மற்றும் ஒரு, சொல் - சொல், வெல்லும் - வெல்லுகின்ற, சொல் - சொல்லாக, இன்மை - இல்லாமையினை, அறிந்து - அறிந்து தெரிந்து, அச் சொல்லை - அந்தச் சொல்லினை, சொல்லுக - சொல்லுதல், வேண்டும்.

[க-ரை] தாம் சொல்லக் கருதிய சொல்லினைப் பிறிதோர் சொல் வெல்லுதற்கு இல்லாமை யறிந்து பின் அச்சொல்லினைச் சொல்லுதல் வேண்டும்.

6. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். 646

[ப-ரை] வேட்ப - பிறர்விரும்புமாறு, தாம் - தாங்கள் சொல்லி - எடுத்துச் சொல்லி, பிறர் - மற்றவர்கள் சொல் - சொல்லுகின்ற சொற்களில், பயன் - பயனை, கோடல் - கொள்ளுதல், மாட்சியின் - அமைச்சர்கள் இலக்கணத்தில், மாசு - குற்றம், அற்றார் - இல்லாதவர்களது, துணிபு - துணிபாகும்.

[க-ரை] பிறர்க்குத் தாம் சொல்லும்போது, அவர் கேட்பதற்கு விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச் சொல்லும்போது அச்சொல்லின் பயனைக் கொண்டறிதல் குற்றம் அற்றவரது துணிபாகும்.

7. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 647

[ப-ரை] சொலல் - பிறர்க்குச் சொல்லுவதில், வல்லன் - வல்லவனாக இருந்து, சோர்வு - ஒன்றிலும்

சோர்வு, இலன் - இல்லாதவனாகி, அஞ்சான் - அச்சம் இல்லாதவனாகி, [இருப்பவனாகிய] அவனை - அவனை, இகல் - மாறுபாடான பகைமை கொண்டு, வெல்லல் - வெல்லுதல், யார்க்கும் அரிது - எவர்க்கும் அருமையான தாகும் [முடியாததாகும்.]

[க-ரை] தான் எண்ணியவற்றைப் பிறர்க்குச் சொல்லு வதில் வல்லவனாகி, சொல்லுவதில் சோர்வில்லாதவனாகி, அவைக்கு அஞ்சாதவன் எவனோ அவனை மாறுபாட்டி னால் வெல்லுதல் யாவர்க்கும் அரிதாகும்.

8. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 648

[ப-ரை] தொழில் - தொழில்களை [செயல்களை] நிரந்து ஒழுங்குபட கோர்த்து, இனிது சொல்லுதல் - இனிமையாகச் சொல்லுவதில், வல்லார்ப் பெறின் - வல்லவரைப் பெற்றால், ஞாலம் - உலகமானது, விரைந்து கேட்கும் - அவற்றை விரைவாகக் கேட்டு ஏற்றுக் கொள்ளும்.

[க-ரை] சொல்லப்படுவற்றை ஒழுங்காகவும் முறை யாகவும் இனிதாகவும் சொல்லுகிற வல்லவரைப் பெற்று விட்டால், உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக் கொள்ளும்.

9. பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். 649

[ப-ரை] மாசு - குற்றம், அற்ற - இல்லாதவர்களாக. சில - சில சொற்களை, சொல்லல் - ஆற்றலினால் சொல்லு தலை, தேற்றாதவர் - அறியாதவர்கள், பல - பற்பல வகையான சொற்களை, சொல்லக் காமுறுவர் - எடுத்துக் கூற ஆசைப்படுவார்கள்.

[க-ரை] குற்றமில்லாதவையாகச் சில வார்த்தைகளில் சொல்லும் ஆற்றல் அறியாதவர்கள். பற்பல வார்த்தை களைத் தொகுத்துச் சொல்ல ஆசைப்படுவார்கள்.

10. இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துரையா தார். 650

[ப-ரை] கற்றது - தாம் கற்ற நூல்களை, உணர - பிறர் அறியுமாறு, விரித்து - விரிவாகவும் தெளிவாகவும், உரையாதார் - உரைக்க முடியாதவர்கள், இணர் - கொத்தினிடத்தே, ஊழ்த்தும் - மலர்ந்து வைத்தும், நாறா - மணம் - இல்லாத, மலர் - பூவினை, அனையர் - ஒப்பர்.

[க-ரை] தாம் கற்று வைத்துள்ள நூல்களைப் பிறர் அறியும் வண்ணம் விரித்துரைக்க முடியாதவர்கள், கொத்தாக மலர்ந்திருந்தும் மணமில்லாத மலரினை ஒப்பர்.

## 66. வினைத்தூய்மை

### [அறமும் பொருளும் தரும் நல்லனவற்றையே செய்தல்]

1. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். 651

[ப-ரை] துணை - ஒருவனுக்குத் துணையினது, நலம் - நன்மையானது, ஆக்கம் - செல்வத்தினை மட்டும், தரும் - தருவதாகும், வினை - தொழிலினது, நலம் - நன்மை யென்பது, வேண்டிய - அவன் விரும்பிய, எல்லாம் தரும் - எல்லாவற்றையும் தரும்.

[க-ரை] ஒருவனுக்குத் துணையினது நன்மையாவது செல்வம் ஒன்றினை மட்டும் தரும். தொழிலினது நன்மை யாவது அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

2. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 652

[ப-ரை] புகழொடு - புகழினையும், நன்றி - அறத்தினையும் பயவா, கொடுக்காத - வினை தொழில்களை,

என்றும் - எக்காலத்திலும், ஒருவுதல் - ஒழித்து விடுதல் வேண்டும் - வேண்டுவதாகும்.

[க-ரை] புகழினையும் அறத்தினையும் பயனாகத் தராத தொழில்களை எக்காலத்திலும் ஒழித்து நீக்குதல் வேண்டும்.

3. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர். 653

[ப-ரை] ஆஅதும் - மேலாகக் கடவோம், என்னும் - என்ற எண்ணுகின்ற, அவர் - அவர்களை, ஒளி - தம்முடைய புகழ், மாழ்கும் - கெடுதற்குக் காரணமாக, வினை - தொழிலினை, செய் - செய்வதை, ஓதல் - தவிர்த்தல் வேண்டும் - வேண்டுவதாகும்.

[க-ரை] 'மேலாகக் கடவோம்' என்று நினைப்பவர்கள் எல்லோராலும் மதிக்கப்படுவதாகிய தமது புகழினைக் கெடுக்கின்ற தொழில்களைச் செய்வதை விடுதல் வேண்டும்.

4. இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்குஅற்ற காட்சி யவர். 654

[ப-ரை] நடுக்கற்ற - கலக்கமில்லாத, காட்சியவர் - தெளிந்த அறிவினையுடையவர்கள், இடுக்கண் - துன்பம் படினும் - அடைய நேரிட்டாலும், [அதிலிருந்து தப்புவதற்காக] இளிவந்த - இழிவான தொழில்களை, செய்யார் - செய்யமாட்டார்கள்.

[க-ரை] அசைவு இல்லாத தெளிவினையுடையவர்கள் தாம் துன்பம் அடைய நேரிட்டாலும் அது நீங்குதற் பொருட்டு இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

5. எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று. 655

[ப-ரை] எற்று - யான் செய்தசெயல் எப்படிப்பட்டது என்று - என்று நினைத்து, இரங்குப - வருத்தப்படும்

தொழில்களை, செய்யற்க – செய்யாதிருத்தல் வேண்டும், செய்வானேல் – ஒரு வேளை தவறிச் செய்வானேயானால், மற்றுஅன்ன – பிறகு அவ்வாறு தானே வருத்தப்படும் செயல்களை, செய்யாமை நன்று - செய்யாதிருத்தல் நல்லதாகும்.

[க-ரை] 'யான் செய்தது எப்படிப்பட்டது என்று பின்னர் தானே இரக்கப்படுகின்ற தொழில்களை ஒருகாலும் செய்யாதிருத்தல் வேண்டும். அப்படி ஒரு கால் மயங்கி செய்துவிடுவானேயானால், மீண்டும் அப்படிப் பட்டவற்றைச் செய்யாதிருத்தல் நல்லதாகும்.

6. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 656

[ப-ரை] ஈன்றாள் - தன்னுடைய தாயினது, பசி - பசியினை காண்பான் - காணுகின்றவன், ஆயினும் – என்றாலும், [அதை நீக்க] சான்றோர் - அறிவு நிறைந்தோர், பழிக்கும் வினை - பழிக்கின்ற செயல்களை, செய்யற்க - செய்யாதிருத்தல் வேண்டும்.

[க-ரை] தன்னைப் பெற்ற தாயினது வறுமையினைக் கண்டு இரக்கப்படுகின்ற போதும், அதனைக் காட்டி அறிவுடையோர் பழிக்கும் தொழில்களை ஒருவன் செய்யாதிருக்க வேண்டும்.

7. பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. 657

[ப-ரை] பழி - பழியினை, மலைந்து -சுமந்துகொண்டு, எய்திய - அடைந்த, ஆக்கத்தின் - செல்வத்தினை விட, சான்றோர் - பெரியோர்களின், கழி - மிகுதிப்பட்ட நல்குரவே - வறுமையே, தலை - உயர்ந்ததாகும்.

[க-ரை] தீமையான தொழில்களைச் செய்து அதனால் பழியினைத் தம் மேற்கொண்டு பெற்ற செல்வத்தினை விடப் பழியினை மேற்கொள்ளாத சான்றோர்கள் அனுபவிக்கும் மிகுந்த வறுமையே உயர்ந்ததாகும்.

8. கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 658

[ப-ரை] கடிந்த - அறமான நூலோர் விலக்கிய தொழில்களை, கடிந்து - தாமும் கடிந்து நீக்கி, ஒரார் - ஒழிக்காதவராகி, செய்தார்க்கு - பொருள் கருதி செய்தவர்களுக்கு, அவைதாம் - அத்தொழில்கள்தாம், முடிந்தாலும் - ஒரு வகையில் முடிந்தாலும், பீழைதரும் - துன்பத்தினையே தரும்.

[க-ரை] நூலோர் தீயவை யென்று நீக்கிய தொழில்களைப் பொருள் கருதி நீக்காமல் செய்த அமைச்சர்க்கு அவை ஒரு வகையில் முடிந்தாலும் துன்பத்தினையே தரும்.

9. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. 659

[ப-ரை] அழ - பிறர் அழுது இரங்க [வருந்த], கொண்ட - தான் சேர்த்துக் கொண்ட, எல்லாம் - பொருள் எல்லாம், அழப்போம் - சேர்த்தவன் அழுது இரங்க அவனை விட்டுப் போய்விடும், நற்பாலவை - நல்ல செயல்களால் வந்தவை, [வந்தபொருள்கள்] இழப்பினும் - முன்பு இழந்து விட்டான் என்றாலும், பிற்பயக்கும் - அவனுக்குப் பின்பு வந்து பயனைத் தரும்.

[க-ரை] ஒருவன் தீய தொழில்களைச் செய்து பிறர் அழுது இரங்கத் தான் கொண்டு சென்ற பொருள் எல்லாம், அவனே இரங்கி அழப் போய்விடும். தூயவழியில் சேர்த்த பொருள் முன்பு இழக்க நேரிட்டாலும் பின்பு வந்து நற்பயனைக் கொடுக்கும்.

10. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று. 660

[ப-ரை] சலத்தால் - தீய தொழில்களினால், பொருள் - பொருளினை, செய்து - சேர்த்துக் கொண்டு, ஏமார்த்தல் -

அதனைப் பாதுகாத்தல், பசுமண் - பசிய மண்ணாலான கலத்துள் - பாத்திரத்திற்குள், நீர் - நீரினை, பெய்து - ஊற்றி, இரீஇயற்று - அதனைப் பாதுகாத்தற்கு சமமாகும்.

[க-ரை] தீய தொழில்களால் பொருள் சேர்த்து அதற்குப் பாதுகாப்புச் செய்தல் என்பது, பச்சை மண் பாத்திரத்திற்குள்ளே நீரைப் பெய்து அதனைப் பாதுகாப்பது போலாகும்.

## 67. வினைத் திட்பம்

### [தொழில் செய்வதற்கு வேண்டிய மனத்திண்மை]

1. **வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற.** 661

[ப-ரை] வினை - தொழில் செய்வதில், திட்பம் - திண்மையான வலிமை, என்பது - என்று சொல்லப்படுவது, ஒருவன் - செய்கின்ற ஒருவனுடைய, மனத்திட்பம் - மனத்தின்கண் கொண்ட வலிமையேயாகும், மற்றைய - அது இல்லாத மற்ற வல்லமை, எல்லாம் - எல்லாம், பிற - தொழிலுக்கு வலிமையென்று சொல்லப்படுபவை அல்லவாம்.

[க-ரை] தொழில் செய்யும்போது திண்மையென்று சொல்லப்படுவது அதனை முடித்தற்குரியவனுடைய மனத் திண்மையேயாகும். அதுவல்லாத மற்றவையெல்லாம் திண்மையென்று சொல்லப்பட மாட்டாவாம்.

2. **ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.** 662

[ப-ரை] ஆய்ந்தவர் கோள் - நீதி நூல்களை அறிந்தவரது துணிவு, [என்னவென்றால்] ஊறு - பழுதுண்டாகும் வினைகளை, ஒரால் - செய்யாதிருத்தலும், உற்றபின் -

செய்யும் தொழிலில் பழுது உண்டான போது, ஒல்காமை - அதனை நினைத்து மனம் தளராமையும் [ஆகிய] இவ் விரண்டின் - அந்த இரண்டினுடைய, ஆறுஎன்பர் - வழி யாகும் என்று கூறுவர்.

[க-ரை] நீதி நூல்களை ஆராய்ந்தவர்களுடைய துணிவு என்னவென்றால், பழுதுபடும் தொழில்களைச் செய்யாமையும், செய்தொழிலில் ஒருகால் பழுது உண்டா னால் அதற்கு மனம் தளராமையும் ஆகிய இரண்டின் வழியேயாகும்.

3. கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும். 663

[ப-ரை] கடை - தொழில் முடிந்த பிறகே, கொட்க - தெரியுமாறு, செய்தக்கது - செய்வதுதான், ஆண்மை - வலிமை என்பதாகும், இடை - [அவ்வாறில்லாமல்] இடை யிலே, கொட்கின் - வெளிப்பட்டுத் தெரிந்து விடுமானால், எற்றா - நீங்காத, விழுமம் தரும் - துன்பத்தினைத் தந்து விடும்.

[க-ரை] செய்யப்படும் தொழில்களை முடிந்த பிறகே தெரியுமாறு செய்தல் வேண்டும். இடையில் மறைத்துச் செய்வதே திண்மையாகும். இடையில் தெரிந்து விடுமா னால் நீங்காத துன்பத்தினைக் கொடுக்கும்.

4. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 664

[ப-ரை] சொல்லுதல் - தொழில் செய்வதைச் சொல்லால் சொல்லுதல், யார்க்கும் எளிய - யாவர்க்கும் எளிமையானதேயாகும், [ஆனால்] சொல்லிய வண்ணம் - சொல்லியபடியே, செயல் அரியவாம் - செய்து முடித்தல் என்பது அரியதாகும்.

[க-ரை] "யான் இத்தொழிலினை இவ்விதத்தில் செய்து முடிப்பேன்" என்று சொல்லுதல் யார்க்கும்

ளிதானதாகும். அதனை அவ்வாறே செய்தல் யார்க்கும் அரியதாகும்.

5. **வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறுஎய்தி உள்ளப் படும்.** 665

[ப-ரை] வீறு - எண்ணத்தால் சிறப்பினை, எய்தி - அடைந்து, மாண்டார் - பெருமையுற்ற அமைச்சரது, வினைத்திட்பம் - தொழில் திண்மையானது, வேந்தன்கண்- வேந்தனிடத்தில், ஊறு எய்தி - ஆக்கமும் புகழும் உண்டாக்குவதனாலே, உள்ளப்படும் - எல்லோராலும் நன்கு மதித்துப் பாராட்டப்படும்.

[க-ரை] எண்ணத்தால் சிறப்படைந்து மாட்சிமைப் பட்ட அமைச்சரது தொழில் வலிமையானது வேந்தனிடத்தில் செல்வத்தினையும் புகழினையும் உண்டாக்குவதால் எல்லோராலும் நன்கு மதிக்கப்படும்.

6. **எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.** 666

[ப-ரை] எண்ணியார் - எண்ணியவர்கள், திண்ணிய ராக - எண்ணிய தொழிலினிடத்தில் வலிமையுடையவராக, பெறின் - இருந்துவிட்டால், எண்ணிய - எண்ணப்பட்டவை களையெல்லாம், எண்ணியாங்கு - எண்ணியவாறே, எய்துப - அடையப் பெறுவார்கள்.

[க-ரை] ஒன்றை நினைத்தவர்கள் அவற்றிற்குக் காரணமான தொழிலின்கண் திண்மையுடையவராக இருந்தால், தாம் அடைவதற்கு நினைத்த எல்லாவற்றை யும் நினைத்தபடியே அடைய முடியும்.

7. **உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து.** 667

[ப-ரை] உருள் - உருளுகின்ற, பெரும் - பெரிய, தேர்க்கு - தேரினுக்கு, அச்சாணி - அச்சில் உள்ள ஆணி,

அன்னார் - போன்ற தொழில் வலிமையுள்ளவரை, உடைத்து இவ்வுலகம் உடையது, [ஆதலால்] உருவு - ஒருவருடைய உருவத்தினை, கண்டு-பார்த்து, எள்ளாமை- இகழாதிருத்தல், வேண்டும் - வேண்டப்படுவதாகும்.

[க-ரை] உருளுகின்ற பெரிய தேருக்கு அச்சிலுள்ள ஆணிபோல, தொழிலின்கண் திண்மையுள்ளவர்களை இவ்வுலகம் பெற்றிருக்கின்றது. ஆதலால் ஒருவரை அவருடைய தோற்றத்தின் சிறுமை கண்டு இகழாதிருத்தல் வேண்டும்.

8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். 668

[ப-ரை] கலங்காது - மனம் கலங்காமல் தெளிந்து, கண்ட - செய்து முடிக்கத் துணிந்த, வினைக்கண் - தொழிலில், துளங்காது - அசைவில்லாமல் [மனத்திட்பத்துடன்] தூக்கம் - தொழிலை நீட்டித்துச் செய்வதை, கடிந்து - நீக்கி, செயல் - செய்தல் வேண்டும்.

[க-ரை] மனம் தெளிந்து செய்வதற்குத் துணிந்த தொழிலினிடத்து அசைதலின்றி நீட்டித்துவிடாமல் செய்தல் வேண்டும்.

9. துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை. 669

[ப-ரை] துன்பம் -தொடக்கத்தில் துன்பமானது, உற - மிகுதியாக, வரினும் - வந்தாலும், [அதனால் மனம் தளராமல்] இன்பம் - இன்பத்தினை, பயக்கும் - முடிவின்கண் தருகின்ற, வினை - தொழிலினை, துணிவாற்றி - துணிந்து கலங்காமல் வலிமையுடன், செய்க - செய்தல் வேண்டும்.

[க-ரை] முதற்கண் மெய்ம்முயற்சியால் தனக்கு மிகுந்த துன்பம் வந்தாலும் அது கண்டு தளராமல் முடிவில் இன்பம் பயக்கும் தொழிலினைத் திட்பமுடையவராகச் செய்தல் வேண்டும்.

10. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. 670

[ப-ரை] வினைத்திட்பம் - தொழிலில் திண்மையினை, வேண்டாரை - விரும்பி மேற்கொள்ளாதவர்களை, எனைத் திட்பம் - [அதுவன்றி] வேறு பல வலிமைகள் எல்லாம் [அவர்கள்] எய்தியக் கண்ணும் - உடையவராகப் பெற்றிருந்த போதிலும், உலகு - உயர்ந்தோர், வேண்டாது - நன்கு மதிக்க மாட்டார்கள்.

[க-ரை] தொழிலின் திட்பங்களை, "இது நமக்குச் சிறந்தது" என்று கொள்ளாதவர்கள் வேறு பல திட்பங்கள் உடையவர்களாக இருந்தாலும் உயர்ந்தோர் நன்கு மதிக்க மாட்டார்கள்.

## 68. வினை செயல்வகை

### [தொழிலினைச் செய்யும் திறம்]

1. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 671

[ப-ரை] சூழ்ச்சி முடிவு - ஆலோசனை என்பதற்கு எல்லை எதுவென்றால், துணிவு - மேற்கொண்ட தொழில் தப்பாது என்னும் துணிவினை, எய்தல் - பெறுதலாகும், அத்துணிவு - அவ்வாறு துணிவு பெற்றபின், தாழ்ச்சியுள் - நீட்டித்துச் செய்வதில், தங்குதல் தீது - தங்கி விடுமானால் அது குற்றமுடையதாகும்.

[க-ரை] ஆலோசனை செய்வதற்கு எல்லையென்பது யாதென்றால் ஆலோசிப்பவன் 'இனி இது தவறாது' என்ற துணிவினைப் பெறுதலாகும். அப்படித் துணிந்தபின் நீட்டிக்கப்படுமானால் அது குற்றமுடையதாகிவிடும்.

2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 672

[ப-ரை] தூங்கி - நீட்டித்து, செயற்பால - செய்ய வேண்டிய தன்மையான தொழிலினை, தூங்குக - நீட்டித்துச் செய்தல் வேண்டும், தூங்காது - நீட்டியாமல், செய்யும் - செய்யவேண்டிய, வினை - தொழில்களில் தூங்கற்க- நீட்டியாமலும் தாமதிக்காமலும் இருத்தல் வேண்டும்.

[க-ரை] நீட்டித்துச் செய்யும் தகுதியான தொழில்களை நீட்டியாமல் செய்தல் வேண்டும். நீட்டியாது செய்ய வேண்டிய தொழில்களை நீட்டியாமல் செய்தல் வேண்டும்.

3. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
சொல்லும்வாய் நோக்கிச் செயல். 673

[ப-ரை] ஒல்லும் - முடியக்கூடிய, வாய்எல்லாம்-இடத்தில் எல்லாம், வினை - தண்டத்தினால் செய்தல், நன்று - நல்லதாகும், ஒல்லாக்கால் - அது முடியாதவிடத்தில், செல்லும் - அது முடிவதாகிய, வாய் நோக்கி - வேறு வழிகளைக் கருதி, செயல் - செய்தல் வேண்டும்.

[க-ரை] தொழில் செய்யும்போது முடிந்த இடத்தில் எல்லாம் தண்டத்தினால், அதாவது போரினால் செய்தல் நன்று. அது முடியாதபோது மற்ற வழிமுறைகளினால் செய்தல் நல்லது.

4. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். 674

[ப-ரை] வினை - எடுத்துக் கொண்ட தொழில், பகை- பகை, என்ற-என்று சொல்லப்பட்ட, இரண்டின் - இரண்டினுடைய, எச்சம் - குறை [மிச்சமாக வைத்தல்] நினையுங்கால் - ஆராய்ந்து பார்த்தால், தீ - நெருப்பானது, எச்சம் போல் - மிச்சம் போல, தெறும் - பிறகு வளர்ந்து கெடுப்பதாகும்.

[க-ரை] செய்யத் தொடங்கிய தொழில், ஒழிக்க வேண்டிய பகை ஆகிய இரண்டிலும் எச்சமாக (மீதியாக) வைத்தால், அவை மிச்சமாக விட்டுவிட்ட தீயானது வளர்ந்து விடுவதுபோல வளர்ந்து கெடுக்கும்.

5. பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். 675

[ப-ரை] பொருள் - பொருளினையும், கருவி - செய்யும் கருவியினையும், காலம் - தகுந்த காலத்தினையும், வினை - செய்யப்படும் தொழிலினையும், இடன் – இடத்தினையும்- ஐந்தும் - ஆகிய ஐந்தினையும், இருள்-இவைகளில் மயக்கம், தீர - நீங்கித் தெளிவு பெற்று, எண்ணிச் செயல் - நன்கு சிந்தித்துச் செய்தல் வேண்டும்.

[க-ரை] தொழில் செய்யும்போது பொருளும், கருவியும், காலமும், தொழிலும், இடமும் ஆகிய இந்த ஐந்தினையும் மயக்கம் நீங்க எண்ணிச் செய்தல் வேண்டும்.

6. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 676

[ப-ரை] முடிவும் - தொழில் முடிப்பதற்கேற்ற முயற்சியினையும், இடையூறும் - செய்யுங்கால் வரும் இடையூற்றினையும், முற்றியாங்கு - வினை முடிந்தபிறகு, எய்தும் - அமைகின்ற, படு -பெரிய, பயனும் - பயனையும், பார்த்துச் செயல் - சீர் தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.

[க-ரை] தொழில் செய்யும்போது அது முடிவதற்குண்டான முயற்சியும், அதற்கு உண்டாகும் இடையூறும், அது நீங்கி முடிந்தால் தான் அடையும் பெரிய பயனும் ஆகியவற்றைச் சீர் தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.

7. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல். 677

[ப-ரை] செய்வினை - செய்யப்படுகின்ற தொழிலினை, செய்வான் – செய்யப் புகுந்தவன், செயல் - செய்ய

வேண்டிய, முறை - வழிமுறை யென்னவென்றால், அவ்வினை - அத் தொழிலினை, உள் அறிவான் - முன்பு செய்து முடித்தவனுடைய, உள்ளம் - கருத்தினை, கொளல் - தான் அறிந்து தெரிந்து கொள்வதாகும்.

[க-ரை] தொழில் செய்யத் தொடங்கியவன் தொழில் செய்யும் முறைமை எவ்வாறென்றால், அத்தொழிலினை முன்பு செய்தவனுடைய உளப்பாட்டினைத் தான் அறிந்து நடந்து கொள்ளுதலாகும்.

8. வினையான் வினைஆக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 678

[ப-ரை] வினையான் - செய்து கொண்டிருக்கும் ஒரு தொழிலினாலேயே, வினை - பிறிதொரு தொழிலினையும், ஆக்கி - முடித்து, கோடல் - கொள்ளுதல் வேண்டும், [அப்படிச் செய்வது] நனை - மதத்தால் நனைந்த, கவுள் - கபோலத்தினையுடைய, யானையால் - ஒரு யானையினால், யானை - மற்றொரு யானையினை, யாத்தற்று - பிடித்துக் கட்டியதற்குச் சமமாகும்.

[க-ரை] செய்கின்ற ஒரு தொழிலினைக் கொண்டு பிறிதொரு தொழிலினையும் முடித்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படிச் செய்வது, மதம் பிடித்த யானை யொன்றினாலே மற்றுமோர் யானையினைப் பிடிப்பது போன்றதாகும்.

9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். 679

[ப-ரை] நட்டார்க்கு - நண்பர்களுக்கு, நல்ல - இனியவற்றை, செயலின் - செய்வதைக் காட்டிலும், விரைந்ததே - விரைவாகச் செய்யப்பட வேண்டியது, [யாதெனில்] ஒட்டாரை - தனது பகைவருடைய பகைவரை, ஒட்டி - தனக்கு நண்பராக, கொளல் - கொள்ளுதலாகும்.

[க-ரை] தொழில் செய்பவன் தன் நண்பர்களுக்கு இனியன செய்வதைக் காட்டிலும் விரைவாகச் செய்ய வேண்டியது என்னவென்றால், தன் பகைவரோடு பகைவராக இருப்பவர்களைத் தனக்கு நட்பாக்கிக் கொள்ளுதலாகும்.

10. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 680

[ப-ரை] உறை - ஆளும் இடம், சிறியார் - சிறியரானவர்கள், [தம்மைவிட வலியவர் தாக்கிய போது] உள் - தமது நாட்டின் பகுதிகள், நடுங்கல் அஞ்சி - நடுங்குவதைக் கண்டு அஞ்சி, குறைபெறின் — வாய்ப்புக் கிட்டுமானால், பெரியார் - அவ்வாறு பெரியாராயினோரை, பணிந்து கொள்வர் - தாழ்ந்து அதனை ஏற்றுக் கொள்வர்.

[க-ரை] சிறிய நாட்டின் அமைச்சர் தம்மின் வலியவரால் எதிர்க்கப்பட்டபோது தம்முடைய பகுதிகள் நடுங்குவதற்கு அஞ்சி, அந்நிலைக்கு வேண்டுவதான வாய்ப்பு உண்டானால் அவரைத் தாழ்ந்து அதனை ஏற்றுக் கொள்ளுவார்கள்.

# 69. தூது

## [தூது செல்வோர் தன்மைகள்]

1. அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு. 681

[ப-ரை] அன்புடைமை - அன்புடையவனாக இருத்தலும், ஆன்ற - சிறந்த உயர்ந்தோர், குடிப்பிறத்தல் - குடியில் பிறத்தலும், வேந்து - மன்னர், அவாம் - விரும்பும், பண்புடைமை - குணமுடையவனாக இருத்தலும், தூது - தூதுவனாகச் சென்று, உரைப்பான் - செய்தி சொல்லுவோனுக்கு, பண்பு - நற்பண்புகளான இலக்கணமாகும்.

[க-ரை] எல்லோரிடத்திலும் அன்புடையவராக இருத்தலும், உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருத்தலும், வேந்தன் விரும்புகின்ற பண்புடையவராக இருத்தலும் ஆகிய இத் தன்மைகள் தூது செல்வோர்க்குரிய இலக்கணமாகும்.

2. அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை
தூதுஉரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று. 682

[ப-ரை] அன்பு – தலைவனிடத்தில் அன்பும், அறிவு - நிறைந்த அறிவுடைமையும், ஆராய்ந்த - ஆராய்ந்தறிந்த, சொல்வன்மை – எடுத்துச் சொல்லும் சொல்வன்மையும், தூது - தூதுவராகச் சென்று, உரைப்பார்க்கு – உரைப்பவர்களுக்கு, இன்றியமையாத மூன்று - இருந்து ஆக வேண்டிய மூன்று குணங்களாகும்.

[க-ரை] மன்னரிடம் நிறைந்த அன்புடைமையும், அறிவுடைமையும், ஆராய்ந்து சொல்லும் வன்மையும் என தூதுரைப்பார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று.

3. நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. 683

[ப-ரை] வேலாருள் - வேலினையுடைய வேற்றரசரிடம் சென்று, வென்றி - தனது தலைவனுக்கு வெற்றியைத் தேடித் தருகின்ற, வினையுரைப்பான் - தூதாகிய தொழிலின் மேல் செல்லுகிறவனுக்கு. பண்பு - இலக்கணம் எனப்படுவது, நூலாருள் - நீதி நூற்களைக் கற்றவை அமைச்சருக்குள், நூல் – தான் இந்நூல்களுள், வல்லன் - வல்லவனாக இருத்தலாகும்.

[க-ரை] வேலினையுடைய வேற்றரசனிடம் சென்று தம் அரசனுக்கு வெற்றியைத் தரும் தொழில் சொல்வானுக்கு இலக்கணமாவது, நீதி நூல்களைக் கற்ற அமைச்சருக்குத் தான் அவற்றில் வல்லவனாதல்.

4. அறிவுஉரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 684

[ப-ரை] அறிவு - இயற்கையான அறிவும், உரு - கண்டார் விரும்பும் வடிவழகும், ஆராய்ந்த - ஆராய்ந் துணர்ந்த, கல்வி - கல்வியும், இம்மூன்றன் - இந்த மூன்றனது, செறிவு - நிறைந்திருக்கும் தன்மை, உடையான் - உடையவனே, வினைக்கு - தூதுவனான தொழிலுக்கு, செல்க - செல்லுதல் வேண்டும்.

[க-ரை] இயற்கையான அறிவும், கண்டார் விரும்பும் தோற்றமும், பற்பல வகையில் ஆராய்ந்த கல்வியும் ஆகிய இம்மூன்றும் நிறைந்திருக்கப் பெற்றவனே வேற்றரசரிடம் தூது செல்லக் கடவன்.

5. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது. 685

[ப-ரை] தொகச்சொல்லி - வேற்றரசரிடம் செய்திகளைச் சுருக்கமாகத் தொகுத்துச் சொல்லியும், தூவாத - வெம்மையான கடிய சொற்களை, நீக்கி - சொல்லாமல் நீக்கியும், நக - கேட்பவர் மனம் மகிழுமாறு, சொல்லி - இனிமையாக சொல்லியும், நன்றி - தமது மன்னனுக்கு நன்மையினை, பயப்பது - உண்டாக்குபவனே, தூதன் - தூதன் ஆவான்.

[க-ரை] வேற்றரசரிடம் சொல்லும்போது தொகுத்துச் சொல்லியும், வெம்மையான சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனம் மகிழச் சொல்லியும் தன் அரசனுக்கு நன்மை பயப்பவனே தூதனாவான்.

6. கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது. 686

[ப-ரை] கற்று - நீதி நூல்களைக் கற்று, செலச் சொல்லி - தான் வந்த பணியினை எடுத்துக் கூறி, கண் - சினந்து நோக்கினால் அப்பார்வைக்கு, அஞ்சான் - அச்சம்

இல்லாதவனாகி, காலத்தால் - காலத்தோடு பொருந்து மாறு, தக்கது - செயல் முடிக்கத்தக்க வழியினை, அறிவதூ தூதாம் - அறிபவனே தூதுவன் ஆவான்.

[க-ரை] நீதி நூல்களைக் கற்று, தான் சென்ற காரியத்தை வேற்றரசன் மனங்கொள்ளச் சொல்லி அவர் கோபமாகப் பார்த்தால் அதற்குப் பயப்பட்டுவிடாமல் காலத்தோடு பொருந்த செயல் முடிக்கவல்ல அறிவுடைய வனே தூதனாவான்.

7. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை. 687

[ப-ரை] கடன் அறிந்து - தனது கடமையினைச் செய்யும் முறையினை அறிந்து கொண்டு, காலம் - தக்க நேரத்தினை, கருதி - தெரிந்து, இடன் அறிந்து - ஏற்ற இடத்தினையும் அறிந்து, எண்ணி - முன்கூட்டியே நன்கு சிந்தித்து, உரைப்பான் தலை - சொல்ல வல்லவனே முதன்மையான தூதுவனாவான்.

[க-ரை] தான் செய்ய வேண்டிய முறையினை அறிந்து, காலம் பார்த்து இடத்தினையும் அறிந்து சொல்ல வேண்டியதை முன்னமேயே சிந்தித்துச் சொல்லுபவனே தூதுவர்களில் சிறந்தவன்.

8. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. 688

[ப-ரை] வழி - தனது தேசத்தலைவன் சொன்ன நெறியிலேயே, உரைப்பான் - வேற்றரசனுக்குச் சொல்லு கிறவனுடைய, பண்பு - தகுதி யாதென்றால், தூய்மை - மனம் தூய்மை உடையவனாதலும், துணைமை - அவருடைய அமைச்சர் துணையாக இருப்பதும், துணிவு - மனத்துணிவு, உடைமை - உடையவனாக இருத்தலும்,

இம்மூன்றின் - இந்த மூன்றுடன் சேர்ந்த, வாய்மை- வாய்மையும் உடையவனாக இருத்தலுமேயாகும்.

[க-ரை] தன் அரசன் சொன்னவற்றை வேற்றரசரிடம் கொண்டு சென்று கூறும் தூதுவனின் இலக்கணம் என்னவென்றால், மனம், செயல் இவற்றில் தூய்மையாதலும், அவரமைச்சர் தனக்குத் தக்க துணையாம் தன்மையும் துணிவுடைமையும் ஆகிய இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையும் ஆகும்.

9. விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். 689

[ப-ரை] விடுமாற்றம் - தனது வேந்தன் சொல்லி யனுப்பிய வார்த்தைகளை, வேந்தர்க்கு - வேற்று நாட்டு மன்னரிக்கு, உரைப்பான் - சொல்லுதற்கு உரிய தூதன், வடு - தாழ்மையான, மாற்றம் - வார்த்தைகளை, வாய் சோரா - வாய் தடுமாறியும் சொல்லாத, வன்கணவன் - திண்மையுடையவனாவான்.

[க-ரை] தன் அரசன் சொல்லிய வார்த்தைகளை வேற்று அரசர்களுக்குச் சொல்லுதற்கு உரியவன், தனக்கு வரும் குற்றத்திற்கு அஞ்சித் தாழ்வான வார்த்தைகளை வாய் சோர்ந்தும் சொல்லாத வலிமை யுடையவனாவான்.

10. இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது. 690

[ப-ரை] இறுதி - தனது உயிர்க்கு முடிவினை, பயப்பினும் - தருவதாக இருந்தாலும், எஞ்சாது - உறுதியான அதற்கு அச்சப்பட்டு விடாமல், இறைவற்கு - தனது தலைவனுக்கு, உறுதியான மேம்பாட்டினை, பயப்பது தூதாம் - வேற்றரசனிடம் சொல்லுகின்றவனே தூதுவனாவான்.

[க-ரை] தன் உயிருக்கு முடிவினைத் தருவதாக இருந்தாலும் அதற்கு அஞ்சாமல் தனது தலைவன் சொல்லியபடியே வேற்று அரசனுக்குச் சொல்ல வேண்டிய வற்றைச் சொல்லுபவனே தூதனாவான்.

## 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

[அமைச்சர் அரசரைப் பொருந்தி நடந்து கொள்ளுதல்]

1. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 691

[ப-ரை] இகல் [விரைவில் கோபம் கொள்ளும்] மாறு பாட்டினையுடைய, வேந்தர் சேர்ந்து - வேந்தரிடம் சேர்ந்து, ஒழுகுவார் - பழகும் அமைச்சர், அகலாது - அதிகமாக நீங்கி விடாமலும், அணுகாது - மிகவும் நெருங்கி விடாமலும், தீ - தீயில், காய்வார் - குளிர்காய்பவர், போல்க - போன்று இருத்தல் வேண்டும்.

[க-ரை] விரைவில் கோபித்துக் கொள்ளும் இயல்புடைய மாறுபாடுடைய வேந்தர்களைச் சேர்ந்தொழுகும் அமைச்சர் அவரிடமிருந்து மிக நீங்காமலும் மிக நெருங்காமலும், தீக்காய்வார் போல இடையிலே நின்று பழகுதல் வேண்டும்.

2. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும். 692

[ப-ரை] மன்னர் - தமது மன்னர், விழைப - ஆவலுடன் விரும்புவனவற்றை, விழையாமை - தாமும் விரும்பாதிருத்தல் வேண்டும், மன்னரால் - [அத்தகைய குணம்] அம்மன்னராலே, மன்னிய - நிலைபெறுதலை யுடைய, ஆக்கம் தரும் - செல்வாக்கினைத் தமக்குத் தருவதாகும்.

[க-ரை] தம் மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதிருத்தல் வேண்டும். அவ்வாறிருத்தல் அமைச்சர்க்கு மன்னராலே நிலைபெற்ற செல்வத்தினைக் கொடுக்கும்.

3. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. 693

[ப-ரை] போற்றின் - அமைச்சர் தம்மைத் தாமே காக்க விரும்பினால், அரியவை - பொறுத்தற்கரிய குற்றங் களை, போற்றல் - [தம்மிடம் உண்டாகாமல்] காத்துக் கொள்ளுதல் வேண்டும், கடுத்தபின் - மன்னர் ஐயம் கொண்டு விட்டால் பிறகு, தேற்றுதல் - அந்த மன்னரைத் தெளிவு படுத்துதல், யார்க்கும் அரிது - எவர்க்கும் அரிதான காரியமாகிவிடும்.

[க-ரை] அமைச்சர் தங்களைக் காத்துக் கொள்ள நினைத்தால் அரிய பிழைகள் தம்மிடம் வராமல் காத்தல் வேண்டும். அவை வந்ததாகக் கேட்டு அரசன் சந்தேகப் பட்டுவிட்டால் அவ்வரசரைப் பிறகு தெளிவுப் படுத்துதல் யாவர்க்கும் அரியதாகும்.

4. செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. 694

[ப-ரை] ஆன்ற - பெருமை பெற்ற, பெரியார் - பெரியார்களின், அகத்து - மத்தியில் இருக்கும்போது, செவிச் சொல்லும் - ஒருவன் மற்றவன் காதில் சொல்லு வதையும், சேர்ந்த - ஒருவனைப் பார்த்து மற்றவன், நகையும் - சிரிப்பதையும், அவித்து - தவிர்த்து விட்டு, ஒழுகல் - நடந்து கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] ஆன்ற பெரியோர்கள் அருகில் தாம் இருக் கும்போது அவருக்குத் தெரியுமாறு ஒருவருக்கொருவர் காதிலே சொல்லுவதும், ஒருவர் முகம் நோக்கி மற்றவர்

சிரித்துக் கொள்ளுவதும் நீக்கி நடந்து கொள்ளுதல் வேண்டும்.

5. எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை. 695

[ப-ரை] மறை - தலைவர்கள் பிறருடன் மறைவாகப் பேசும்போது, எப்பொருளும் - யாதொரு கருத்தினையும், ஓரார் - செவி கொடுத்துக் கேட்கக் கூடாது, தொடரார் - அவரிடம் வினவுதலும் கூடாது, அப்பொருளை - அந்த மறை பொருளினை, விட்டக்கால் கேட்க - தலைவரே வெளியிட்டுச் சொன்னால் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] அரசன் பிறரிடம் மறைவாகப் பேசும்போது எதையும் செவி கொடுத்துக் கேளாமல், அரசனிடம் சென்று வினவாமல் இருந்து கொண்டு அரசனே அம்மறைவான செய்திகளைத்தானே சொன்னால் கேட்க வேண்டும்.

6. குறிப்புஅறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். 696

[ப-ரை] குறிப்பு - அரசனுடைய குறிப்பினை, அறிந்து - அறிந்து கொண்டு, காலம் - ஏற்ற காலத்தினை, கருதி - தெரிந்து, வெறுப்பில - வெறுப்பு இல்லாதவையும், வேண்டுப - வேண்டுபவையும் ஆகியவற்றை, வேட்பச் சொலல் - அரசன் மனம் மகிழும் வகையில் சொல்லுதல் வேண்டும்.

[க-ரை] அரசனுடைய குறிப்பினை எப்போதும் புரிந்துகொண்டு சொல்லுதற்கேற்ற காலத்தினையறிந்து வெறுப்பிலாதனவும் விரும்புதற்குரிய செயல்களை அவன் மனம் விரும்பும் வகையிலும் சொல்லுதல் வேண்டும்.

7. வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல். 697

[ப-ரை] வேட்பன சொல்லி - பயனுள்ளதான விரும்புவனவற்றைச் சொல்லி, எஞ்ஞான்றும் - எப்போதும், வினையில - பயனில்லாதவற்றை, கேட்பினும் - அரசனே விரும்பிக் கேட்டாலும், சொல்லா - சொல்லாமல், விடல் - விட்டு விடுதல் வேண்டும்.

[க-ரை] அரசன் விரும்புபவையும், பெரிய பயனுள்ளவையுமானவற்றை அவன் கேட்டிலனாயினும் சொல்ல வேண்டும்; எப்போதும் பயனில்லாதவற்றை அரசன் தானே கேட்டாலும் சொல்லாதிருக்க வேண்டும்.

8. இளையர் இனமுறையர் என்றுஇகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும். 698

[ப-ரை] இளையர் - தம்மைவிட வயதில் இளையர், இன - தமக்கு இன்ன இனத்தினது, முறையர் - முறையினையுடைய உறவினர், என்று - என்பதாகக் கூறி, இகழார் - தாழ்வாக அவமதிக்காமல், நின்ற - நிலை பெற்ற, ஒளியோடு - மன்னரிக்குப் பொருந்திய மேலான சிறப்புடனே, ஒழுகப்படும்-மன்னரிடம் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] இவர் நமக்கு இளையவர் என்றும், இன்ன முறையில் இனத்தவர் என்றும், அரசரை அவமதிக்காமல் அவ்வரசுக்குள்ள உயர்ந்த நிலைக்குப் பொருந்த அமைச்சரானவர் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

9. கொளப்பட்டேம் என்றுஎண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்குஅற்ற காட்சி யவர். 699

[ப-ரை] துளக்கற்ற - மாறுதலின்றி நிலைபெற்ற, காட்சியவர் - அறிவினையுடையவர்கள், கொளப்பட்டேம் - அரசரால் நன்கு மதிக்கப்பட்டு விட்டோம், என்று - என்ப

தாக, எண்ணி - நினைத்து, கொள்ளாத - அரசன் விரும்பாதவைகளை, செய்யார் - செய்யமாட்டார்கள்.

[க-ரை] நிலைபெற்ற அறிவினையுடையவர்கள், அரசனால் 'நாம் நன்கு மதிக்கப்பட்டுள்ளோம்' என்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யமாட்டார்கள்.

10. பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். 700

[ப-ரை] பழையம்-தலைவர்க்கு யாம் பழமையானவர்கள், என - என்று, கருதி - நினைத்து, பண்பு - தமக்கு ஏற்பன, அல்ல - அல்லாதவற்றை, செய்யும் - செய்கின்ற, கெழுதகைமை - பழமையாய் வந்த உரிமையானது, கேடு - தீமையினை, தரும் - கொடுத்துவிடும்.

[க-ரை] அரசனுக்கு யாம் பழையவர்கள் என்று கருதித் தமக்கு இயல்பல்லாதவற்றைச் செய்யும் உரிமை அமைச்சர்க்குக் கேட்டினைப் பயப்பதாகும்.

## 71. குறிப்பு அறிதல்

### [ஒருவர் கூறாமலேயே அவர் மனத்தில் உள்ளதை அறிதல்]

1. கூறாமை நோக்கிக் குறிப்பு அறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி. 701

[ப-ரை] குறிப்பு - குறிக்கப்பட்ட தொழிலினை, கூறாமை - சொல்லாமலேயே, நோக்கி - முகத்திலும் கண்ணிலும் நோக்கி, அறிவான் - அறிகின்ற ஆற்றல் உள்ளவன், எஞ்ஞான்றும் - எப்போதும், மாறா - வற்றாத, நீர் - நீரினால் [கடலால்] சூழப்பட்ட, வையக்கு அணி - உலகில் உள்ளவர்களுக்குச் சிறந்த அணிகலன் ஆவான்.

[க-ரை] அரசன் குறித்த கருத்தினை அவன் கூறாம லேயே முகத்தினாலும் கண்ணினாலும் நோக்கி அறியும் ஆற்றல் உள்ளவன் எப்போதும் கடலால் சூழப்பட்ட வையகத்தில் வாழ்பவர்களுக்கு ஓர் ஆபரணம் ஆவான்.

2. ஐயப் படாஅது அகத்தது உணர்வானை
தெய்வத்தோடு ஒப்பக் கொளல். 702

[ப-ரை] அகத்தது - ஒருவனுடைய மனத்தில் நிகழ்வ தனை, ஐயப்படாது - யாதொரு சந்தேகமுமின்றி, உணர் வானை - உறுதியாக அறிய வல்லவனை, தெய்வத்தோடு - தெய்வத்திற்கு, ஒப்ப - சமத்துவமாக, கொளல்-கொண்டு மகிழ்தல் வேண்டும்.

[க-ரை] ஒருவன் மனத்தில் உள்ளதைச் சந்தேகமின்றி உணரவல்ல ஒருவனை, மக்களில் அவன் ஒருவனே யானாலும் தெய்வத்தோடு ஒப்ப நன்கு மதித்தல் வேண்டும்.

3. குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். 703

[ப-ரை] குறிப்பின் - தன்னிடம் குறிப்பு நிகழ்வதை யறிந்து, [அதுகொண்டு] குறிப்பு - பிறர்பால் நிகழும் குறிப்பினை, உணர்வாரை - அறியும் தன்மையாளரை, உறுப்பினுள் - அரசர் தனது உறுப்புக்களுள், யாது - அவர் வேண்டுவதொன்றனை, கொடுத்தும் - கொடுத்தாகிலும், கொளல் - துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை[ தன்னுடைய குறிப்பு நிகழ்வதை அறிந்து அதனால் பிறனுடைய குறிப்பினை அறியும் தன்மை யாளரை, அரசர் தம் உறுப்புக்களுள் அவர் வேண்டுவ தொன்றனைக் கொடுத்தாகிலும் துணையாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

4. குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்புஓ ரனையரால் வேறு. 704

[ப-ரை] குறித்தது கூறாமை - ஒருவன் மனத்தில் கருதியதனை அவன் கூற வேண்டாமலேயே, கொள்ளுவா

ரோடு - அறியும் ஆற்றலில் வல்லவரோடு, ஏனை - அவ்வாறு அறியமாட்டாத மற்றவர்கள், உறுப்பு - உறுப்புக்களினால், ஓரனையர் - ஒரு தன்மையராக ஒத்திருந்தாலும், வேறு - அறிவினால் வேறுபடுபவர்கள் ஆவார்கள். [ஆல் - அசை]

[க-ரை] ஒருவன் மனதில் கருதியதனை அவன் கூறாமலேயே அறிய வல்லவரோடு, மற்றவர்கள் உறுப்பால் ஒரு தன்மையராக ஒப்பாராயினும் அறிவால் வேறுபடுவர்.

5. குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். 705

[ப-ரை] குறிப்பின் - குறித்ததைக் காணவல்ல தனது பார்வையால், குறிப்பு - பிறருடைய மனத்தின் குறிப்பினை, உணரா வாயின்—உணர்ந்தறிய முடியாவிட்டால், கண் - சிறப்பான கண்கள், என்ன - என்ன, பயத்தவோ - பயனைச் செய்வதாகும்.

[க-ரை] குறித்ததைக் காணவல்ல தம் பார்வையால் பிறர் குறிப்பினை உணரவில்லையானால் உறுப்புக்களுள் சிறந்த கண்கள் வேறு என்ன பயனைச் செய்வனவாகும்?

6. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 706

[ப-ரை] அடுத்தது - தன்னை அடுத்து நின்ற பொருளினது நிறத்தினை, காட்டும் - தானே கொண்டு காட்டுகின்ற, பளிங்கு - கண்ணாடி பளிங்கினை, போல் - போல, நெஞ்சம் - ஒருவனுடைய மனத்தினில், கடுத்தது - மிகுதியாகும் குணத்தினை, முகம் - அவனுடைய முகமானது, காட்டும் - தானே கொண்டு காட்டிவிடும்

[க-ரை] தன்னையடுத்த பொருளினது நிறத்தினைத் தானே கொண்டு காட்டும் பளிங்கினைப் போல ஒருவன் நெஞ்சத்தில் மிக்கதனை அவன் முகம் தானே கொண்டு காட்டும்.

7. முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும். 707

[ப-ரை] உவப்பினும் - உயிர் ஒருவனை விரும்பினாலும், காயினும் - விரும்பாமல் வெறுத்தாலும், தான் முந்துறும் - முகம் தானே அறிந்து முற்பட்டு நின்று உணர்த்தும், [ஆகையினால்] முகத்தின் - முகத்தினைப் போல, முதுக்குறைந்தது - அறவு மிக்கதொன்று, உண்டோ - வேறு இருக்கின்றதோ? [இல்லை என்பதாம்]

[க-ரை] உயிரானது ஒருவனை விரும்பினாலும், வெறுத்தாலும், முகம் தான் அறிந்து முற்பட்டு நின்று உணர்த்தும். ஆதலால், முகத்தினைப் போல அறிவு மிக்கது வேறு ஒன்று இருக்கின்றதோ? (இல்லை என்பதாம்.)

8. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின். 708

[ப-ரை] அகம் - மனத்தில் உள்ளதை, நோக்கி - குறிப்பால் அறிந்துணர்ந்து, உற்றது - தான் உற்ற அதனை, உணர்வார் - தெரிந்து தீர்ப்பாரை, பெறின் - பெற்றிருந்தால், முகம் - அவர் தம் முகத்தினை நோக்கும் வகையில், நோக்கி - அவர் முகத்தினைத் தான் பார்த்து, நிற்க - நின்றால், அமையும் - போதுமானதாக அமையும்.

[க-ரை] மனத்தில் உள்ளதைக் குறிப்பால் உணர்ந்து குறைநீக்க வல்லாரைப் பெற்றால் அவர்தம் முகம் நோக்கும் வகையில், தானும் அவர் முகம் நோக்கி நிற்க அமையும்.

9. பகைமையும் கேண்மையும்கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். 709

[ப-ரை] கண்ணின் - பார்வையின், வகைமை - வேறுபாட்டுத் தன்மைகளை, உணர்வார் - அறியும் ஆற்றலில் வல்லவர்களை, பெறின் - அரசர் பெற்றிருந்தால், பகைமையும் - பகைமை எண்ணத்தினையும், கேண்மையும் -

நட்புத் தன்மையினையும், [பிறர் சொல்லாமலேயே] கண் உரைக்கும் - கண்களே சொல்லிவிடும்.

[க-ரை] பார்வையினால் அறிய வல்ல ஆற்றல் படைத்தவரை அரசன் பெற்றிருந்தால், கிடந்த பகைமையினையும் நட்பினையும் வேற்று வேந்தர் சொல்லாவிட்டாலும் அவர்கள் கண்களே சொல்லும்.

**10.** நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண் அல்லது இல்லை பிற. 710

[ப-ரை] நுண்ணியம் - நுண்ணறிவுடையோம், என்பார் - என்கின்ற அமைச்சர்க்கு, அளக்கும் - பிறர் கருத்தினை அளந்தறியும், கோல் - அளவு கோல் என்பது, காணுங்கால் - ஆராயும் போது, கண் - அவரது கண்கள், அல்லது - அல்லாமல், பிற இல்லை - வேறு எதுவும் இல்லையாகும்.

[க-ரை] 'நுண்ணறிவு படைத்துள்ளோம்' என்று கூறும் ஆற்றல் உள்ளவர்கள் பிறர் கருத்தினை அளக்கும் கோலாக இருப்பது, ஆராயுங்கால் கண்கள் அல்லாமல் பிற இல்லையாகும்.

## 72. அவை அறிதல்

### [அவையினது - சபையின் - இயல்பினை அறிதல்]

**1.** அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். 711

[ப-ரை] சொல்லின் - சொற்களின், தொகை - வகைகளை, [கூட்டத்தினை] அறிந்த - அறிந்துணர்ந்த, தூய்மையவர் - தூய்மையான தன்மையினர், அவை அறிந்து - அப்போதுள்ள சபையினை அறிந்துகொண்டு, ஆராய்ந்து - ஆராய்ந்து தெரிந்து, சொல்லுக - பேசுதல் வேண்டும்.

[க-ரை] சொற்களின் வகைகளை அறிந்த தூய்மையினை யுடையவர்கள் தாம் ஒன்று சொல்லும்போது அப்போதுள்ள அவையினை அறிந்து ஆராய்ந்து சொல்லுதல் வேண்டும்.

2. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். 712

[ப-ரை] சொல்லின் - சொற்களின், நடை - நடைமுறையினை, தெரிந்த - ஆராய்ந்து கண்ட, நன்மையவர் - நன்மையுடையவர்கள், இடை - சபையின் நேரத்தினையும் நிலைமையினையும், தெரிந்து - ஆராய்ந்து தெரிந்து, நன்கு - குற்றமற, உணர்ந்து - தெளிந்து, சொல்லுக - சொல்லுதல் வேண்டும்.

[க-ரை] சொற்களின் நடையினை ஆராய்ந்தறிந்த நன்மையுடையவர்கள் அவையில் ஒன்று சொல்லும் போது நிலைமையினை ஆராய்ந்து குற்றமல்லாமல் நன்கு தெளிந்து சொல்லுதல் வேண்டும்.

3. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகைஅறியார் வல்லதூஉம் இல். 713

[ப-ரை] அவை - சபையினுடைய தன்மையினை, அறியார் - அறிய முடியாதவராகி, சொல்லல் - ஒன்று சொல்லுவதனை, மேற்கொள்பவர் - தம் மேற்கொண்டு சொல்லுபவர், சொல்லின் - அவ்வாறு சொல்லுதலின், வகை-வகை முறையினையும், அறியார் - அறிய மாட்டார், வல்லதூஉம் - கற்று வல்ல கலையும், இல் - அவரிடம் இல்லை.

[க-ரை] அவையினுடைய அளவினை அறியாமல் ஒன்று சொல்ல முயன்றவர் சொல்லுவதனுடைய கூறுபாடும் அறியார்; கற்றுவல்ல கலையும் அவருக்கு இல்லையாம்.

4. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். 714

[ப-ரை] ஒளியார்முன் - அறிவால் மிக்கவரும் ஒத்தவரும் இருக்கும் சபையில், ஒள்ளியராதல் - தாமும் சிறந்த அறிவுடையராதல் வேண்டும், வெளியார்முன் - அறிவில்லாதவர் [புல்லர்கள்] சபையில், வான் - வெண்மையான, சுதை - சுண்ணாம்பின், வண்ணம் - நிறத்தினை, கொளல் - கொண்டிருத்தல் [ஒன்றும் அறியாதார்] போல் இருத்தல் வேண்டும்.

[க-ரை] தம்மைவிடச் சிறந்தவர்கள் இருக்கும் அவைக்கண் (சபையில்) தானும் சிறந்த அறிஞராக விளங்குதல் வேண்டும். புல்லர்கள் இருக்கும் சபையில் அவர்கள் மதித்தற் பொருட்டு அவர்கள் போலவே ஆதல் வேண்டும்.

5. நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 715

[ப-ரை] முதுவருள் - தம்மைவிட அறிஞர் மிக்க சபையில், முந்து - அவர்களுக்கு முற்பட்டு, கிளவா - ஒன்றனைச் சொல்லாத, செறிவு - அடக்கமான குணம், நன்று - இது நல்லது, என்றவற்றுள்ளும் - என்று சொல்லப்பட்ட குணங்களுக்கெல்லாம், நன்றே - நல்லதேயாகும்.

[க-ரை] ஒருவற்கு நல்லது என்ற குணங்கள் எல்லாவற்றிலும் நல்லதாவது எதுவென்றால் தம்மைவிட மிக்கவர்கள் உள்ள அவைக் கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாததேயாகும்.

6. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுஉணர்வார் முன்னர் இழுக்கு. 716

[ப-ரை] வியன்புலம் - அகன்ற நூற்பொருள்களை, உணர்வார் - அவற்றினை உணரவல்லார், முன்னர் - சபையினிடத்து, இழுக்கு - [கற்றறிந்தவன்] சொற்குற்றம்

உடையனாதல், ஆற்றின் – நன்னெறிக்கண் நின்ற ஒருவன்; நிலை - தனது நிலைமை, தளர்ந்தற்றே – கெட்டு வீழ்ந்த தைப் போன்றதாகும்.

[க-ரை] அகன்ற நூற் பொருள்களை ஆய்ந்துணர வல்லார் அவையில் வல்லானொருவன் சொற்குற்றப் படுதல், நன்னெறிக்கண் நின்றான் ஒருவன் அந்நெறியி லிருந்து நிலை தளர்ந்து வீழ்ந்ததைப் போன்றதாகும்.

7. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடுஅறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து. 717

[ப-ரை] கசடு - குற்றம், அற – இல்லாமல், சொல் - சொற்களை, தெரிதல் - ஆராய்ந்து அறிவதில், வல்லார் - வல்லவர்கள், அகத்து - சபையில், கற்று - பல நூல்களை யும் கற்று, அறிந்தார் - அறிந்த புலமையாளரது, கல்வி விளங்கும் - கல்வியானது எல்லோருக்கும் விளங்கித் தோன்றுவதாகும்.

[க-ரை] குற்றமின்றிச் சொற்களை ஆராய்வதில் வல்லவர்கள் உள்ள அவைக் கண் சொன்னால் பல நூல் களையும் கற்று அவற்றின் பயனை அறிந்தவரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும்.

8. உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. 718

[ப-ரை] உணர்வது - தாமே நற்கருத்துக்களை உணர வல்ல அறிவினை, உடையார்முன் - பெற்றிருப்பவர்கள் முன்னே, சொல்லல் - கற்றார் ஒன்றனைச் சொல்லுதல், வளர்வதன் - தானாகவே வளர்கின்ற பயிர் உள்ள, பாத்தியுள் - பாத்திக்குள், நீர் - தண்ணீரை, சொரிந்தற்று - விட்டது போன்றதாகும்.

[க-ரை] பிறர் உணர்த்தாமல் தாமே உணரவல்ல அறிவினையுடையவர்கள் இருக்கும் அவையில் ஒன்றனைச்

சொல்லுதல் தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக் கண் நீரினைச் சொரிந்தது போன்றதாகும்.

9. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார். 719

[ப-ரை] நல்லவையுள்-நல்லறிஞர் இருக்கும் அவையுள்-நன்கு - நல்ல கருத்துக்களை, செலச் சொல்லுவார் - கேட்பவர் மனம் ஏற்ப சொல்லுவதற்குரியவர்கள், புல்லவையுள் - புல்லர்கள் நிறைந்த அவையுள், பொச் சாந்தும் - மறந்தும்கூட, சொல்லற்க - சொல்லாதிருப் பார்களாக.

[க-ரை] நல்லார் இருந்த அவையில் நல்ல பொருட் களை அவர் மனங்கொள்ளுமாறு சொல்லுதற்குரியவர், புல்லர்கள் இருந்த அவையில் அவற்றை மறந்தும் சொல்லா திருத்தல் வேண்டும்.

10. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். 720

[ப-ரை] தம் - தம் வகையினைச் சார்ந்த, கணத்தர் - இனத்தர், அல்லார்முன் - அல்லாதவர்கள் சபையில், கோட்டி - பேசுவதை, கொளல் - மேற் கொள்ளாதிருத்தல் வேண்டும், [அப்படி ஏதேனும் சொன்னால்] அங்கணத்துள் - தூய்மையில்லாத முற்றத்தில், உக்க - சிந்திய, அமிழ்தற்று, அமிழ்தத்தினைப் போன்றதாகும்.

[க-ரை] நல்லவர்கள், தம் இனத்தவர் அல்லாதார் அவையில் ஒன்றனையும் சொல்லாதிருத்தல் வேண்டும். அப்படிச் சொன்னால், அது தூய்மையில்லாத முற்றத்தில் அமிழ்தத்தினை ஊற்றுதல் போன்றதாகிவிடும்.

# 73. அவை அஞ்சாமை

## [அவையில் - சபையில் - அஞ்சாமல் பேசுதல்]

1. வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 721

[ப-ரை] சொல்லின் - சொற்களின் தொகை - பல்வேறு சொற்களின் கூட்டத்தினை, அறிந்து - அறிந்து தெரிந்த, தூய்மையவர் - தூய்மையான பண்பாளர்கள், வகை - சபைகளின் வகைகளை, அறிந்து - அறிந்து கொண்டு, வல்லவை - வல்லவர் சபையில் பேசும் போது, வாய் சோரார் - அச்சத்தால் பிழைபடச் சொல்ல மாட்டார்கள்.

[க-ரை] சொல்லின் தொகையெல்லாம் அறிந்த தூய்மையுடையவர்கள், வல்லவர்கள் நிறைந்த அவை, அஃலாதார் அவை என்னும் வகையினை யறிந்து அச்சத்தால் வழுப்படச் சொல்ல மாட்டார்கள்.

2. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். 722

[ப-ரை] கற்றார்முன் - கற்றவர்கள் இருக்கும் அவையில், கற்ற - தாம் கற்றவைகளை, செலச் சொல்லுவார் - கேட்பவர் மனம் ஏற்ப சொல்ல வல்லவர்கள், கற்றாருள் - கற்றவர்கள் எல்லாருள்ளும், கற்றார் - இவர் நன்கு கற்றவர், எனப்படுவர் - என்று உலக மக்களால் சொல்லப் படுவர்.

[க-ரை] கற்றவர்கள் இருக்கும் அவையில் (சபையில்) அஞ்சாமல் தாம் கற்றவற்றைச் சொல்ல வல்லாரைக் கற்றார் எல்லோரையும்விட 'இவர் நன்கு கற்றவர்' என்று உலகத்தார் சொல்லுவார்கள்.

3. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர். 723

[ப-ரை] பகை - பகைவர்கள், அகத்து - இருக்கும் இடத்திற்கு [அஞ்சாமல் சென்று] சாவார் - இறப்பவர்கள், எளியர் - உலகில் பலருண்டு, [ஆனால்] அவையிடத்து - சபையில் சென்று, அஞ்சாதவர் - அஞ்சாமல் சொல்லும் ஆற்றல் உள்ளவர்கள், அரியர் - சிலரேயாவர்.

[க-ரை] பகையினை எதிர்த்து அஞ்சாமல் சென்று இறப்பவர்கள் உலகத்தில் பல பேருண்டு; ஆனால், சபைக்கு அஞ்சாமல் சென்று சொல்ல வல்லவர்கள் சிலரேயாவர்.

4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். 724

[ப-ரை] கற்றார்முன் - கற்றவர்கள் சபையில், கற்ற - தாம் கற்றவைகளை, செலச் சொல்லி - பிறர் மனம் ஏற்ப எடுத்துச் சொல்லி, தாம் - தாம், கற்ற - கற்றதை விட, மிக்க - மிகுதியான பொருள்களை, மிக்காருள் - மிக அதிகமாகக் கற்றவரிடத்தில், கொளல் - தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] கற்றவர்கள் நிறைந்த அவையில் தாம் கற்றவற்றைச் சொல்லி அவற்றின் மிக்க பொருள்களை மிகுதியாகக் கற்ற அவர்களிடமிருந்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

5. ஆற்றின் அளவு அறிந்து கற்க அவைஅஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. 725

[ப-ரை] அவை - அவையில் [சபையில்] அஞ்சா - அஞ்சாமல், மாற்றம் - மறுமொழியினை, கொடுத்தற் பொருட்டு - சொல்லுவதற்காக, ஆற்றின் - சொல்லிலக்கண நெறியில், அளவு - அளவை நூற்களை, அறிந்து கற்க - அறிந்துணர்ந்து கற்றல் வேண்டும்.

[க-ரை] அவையில் அஞ்சாமல் பிறர் சொல்லுவதற்குப் பதிலாகச் சொல்லும் பொருட்டு, சொல் இலக்கண நெறியால் அளவை நூற்களைக் கற்றல் வேண்டும் என்பதாம்.

6. வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்
நுண்அவை அஞ்சு பவர்க்கு. 726

[ப-ரை] வன் கண்ணர் - மனத்துணிவு என்னும் திண்மை, அல்லார்க்கு - இல்லாதவர்க்கு, வாளொடு - போரி செய்தற்கான வாளுடன், என் - என்ன தொடர்பு உண்டு, [அதுபோல] நுண் - நுட்பமான, அவை - [அறிவு படைத்தோர் இருக்கும்] சபையினை, அஞ்சுபவர்க்கு - கண்டு அஞ்சுவோருக்கு, நூலொடு—தாம் கற்ற நூலுடனே, என் - என்ன தொடர்பு உண்டு?

[க-ரை] வன்கண்மை இல்லாதவர்களுக்கு வாளுடன் என்ன தொடர்பு உண்டு? அதுபோல, நுட்பமுள்ளவர்கள் நிறைந்த சபையைக் கண்டு அஞ்சுபவர்களுக்கு கற்ற நூலோடு என்ன தொடர்பு உண்டு?

7. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். 727

[ப-ரை] அவையகத்து - பேச வேண்டிய அவை நடுவில், அஞ்சும் - அஞ்சுகின்ற, அவன், - கற்ற அவன், கற்ற - கற்றறிந்த, நூல் - நூல்கள், பகை - போரிட வேண்டிய பகை, அகத்து - நடுவில், பேடி — போருக்கு அஞ்சுகின்ற பேடி, கை - தனது கையில் பிடித்த, ஒள் - கூரிய, வாள் - வாளினை ஒக்கும்.

[க-ரை] சொல்லப்பட வேண்டிய சபையினிடத்து அஞ்சுகின்றவன் கற்ற நூலானது, பகை நடுவில், அப்பகைக்கு அஞ்சுகின்ற பேடி பிடித்த கூர் வாளினை ஒக்கும்

8. பல்லவை கற்றும் பயம்இலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 728

[ப-ரை] நல்லவையுள் - நல்லோரிருந்த அவையில், நன்கு — நல்ல கருத்துக்களை, செலச் சொல்லாதார் -

கேட்பவர் ஏற்ப சொல்ல முடியாதவர்கள், பல்லவை - பல நூல்களை, கற்றும் - கற்றிருந்தாலும், பயமிலரே - பயனில்லாதவர்களே யாவார்கள்.

[க-ரை] நல்லவர்கள் இருந்த அவைக்கண் நல்ல சொற்பொருள்களை ஏற்கும்படி அச்சத்தால் சொல்ல மாட்டாதவர்கள் பல நூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயனுள்ளவர் ஆகார்.

9. கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்
நல்லா ரவைஅஞ்சு வார். 729

[ப-ரை] கற்று - நூல்களைக் கற்று, அறிந்தும் - அதன் பயன்களைத் தெரிந்திருந்தும், நல்லார் - நல்லவர்கள் நிறைந்த, அவை - அவையினை, அஞ்சுவார் - பயந்து சொல்லாதவரை, கல்லாதவரின் - கல்லாதவர்களைவிட, கடைஎன்ப - கடையர் என்று அறிந்தோர் சொல்லுவர்.

[க-ரை] நூல்களைக் கற்றிருந்தும் அவற்றின் பயனறிந்தும் சபைக்கு அஞ்சி ஆங்கே சொல்ல முடியாதவர்கள், உலகத்தாரால் கல்லாதவர்களைவிடக் கடையர் என்று சொல்லப்படுவார்கள்.

10. உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். 730

[ப-ரை] களன் - அவைக்களத்திற்கு, அஞ்சி - அச்சப்பட்டு, கற்ற - தாம் கற்றவைகளை, செலச் சொல்லாதார் - கேட்பவர் மனம் அறியுமாறு சொல்ல முடியாதவர்கள், உளர் - உயிரோடு வாழ்கின்றார்கள், எனினும்-என்றாலும், இல்லாரொடு - உயிரில்லாதவரோடு, ஒப்பர் ஒப்பவராவார்.

[க-ரை] அவை (சபை)க் களத்திற்குப் பயந்து தாம் கற்றவற்றை ஏற்கும்படியாகச் சொல்ல மாட்டாதார், உயிர் வாழ்கின்றார் என்றாலும் இறந்தவரொடு ஒப்பாவார்.

# 74. நாடு

## [நாட்டின் இயல்புகளும் சிறப்பும்]

**1. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.** 731

[ப-ரை] தள்ளா - குன்றாத, விளையுளும் - விளைவு செய்வோரும், தக்காரும் - அறப்பெரியோர்களும், தாழ்வு - கேடு, இலா - இல்லாத, செல்வரும் - செல்வமுடையோரும், சேர்வது - ஒருங்கு வாழ்வதே, நாடு - நாடாகும்.

[க-ரை] குறையாத விளைவு செய்வோரும், தக்க பெரியோர்களும் கேடில்லாத செல்வந்தர்களும் ஒருங்கு வாழ்வதே நாடாகும்.

**2. பெரும்பொருளால் பெட்டக்கது ஆகிஅருங் கேட்டான்
ஆற்ற விளைவது நாடு.** 732

[ப-ரை] பெரும் - அளவற்ற, பொருளால் - பொருளுடைமையால், பெட்டக்கதாகி - பிற தேயத்தாரும் விரும்பத்தக்கதாகி, அருங் கேட்டால் - கேடில்லாமையோடு பொருந்தி, ஆற்ற - மிக்க, விளைவது - விளைச்சலையுடையதே, நாடு - நாடாகும்.

[க-ரை] அளவற்ற பொருளுடைமையால் பிற தேசத்தாரும் விரும்பத்தக்கதாகி கேடில்லாமையோடு கூடி மிக்க விளைச்சலினை யுடையதே நாடாகும்.

**3. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு.** 733

[ப-ரை] பொறை - பிறநாடு பொறுத்த பாரமெல்லாம், ஒருங்கு - ஒன்று சேர, மேல்வருங்கால் - தன்னிடம் வந்து சேரும் போது, தாங்கி - அவற்றைத் தாங்கிக் கொண்டு, இறைவற்கு - தன் மன்னருக்கு, இறை

இறைப் பொருள், ஒருங்கு - முழுவதையும், நேர்வது - கொடுப்பதே, நாடு - நாடாகும்.

[க-ரை] பிற நாடுகள் பொறுத்த பாரமெல்லாம் தன் மீது வந்தாலும் அவற்றைத் தாங்கி அதற்குமேல் அரசனுக்கு இறைப்பொருள் முழுவதையும் கொடுப்பதே நாடாகும்.

4. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு. 734

[ப-ரை] உறு - மிகுதியான, பசி - பசியும், ஓவா - நீங்காத, பிணியும்-நோயும், செறு - அழிவினைச் செய்யும்; பகை - பகையும், சேராது - இல்லாமல், இயல்வது - இனிது நடப்பதுவே, நாடு-நாடாகும்.

[க-ரை] மிக்க பசியும் நீங்காத நோயும், அழிவினைத் தரும் பகையும் இல்லாமல் இனிதாக நடப்பதுவே நாடாகும்.

5. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. 735

[ப-ரை] பல் பற்பல காரணங்களால் உண்டாகும், குழுவும் - கூட்டங்களும், பாழ்செய்யும் - உடனிருந்தே பாழாக்குகின்ற, உட்பகையும் - உட்பகையினரும், வேந்து-சமயம் வந்தபோது வேந்தனை, அலைக்கும்-அலைக்கின்ற, கொல் - கொலைத்தொழில் புரிகின்ற, குறும்பும் - குறும்பர்களும், இல்லது - இல்லாமல் இருப்பதே, நாடு - நாடாகும்.

[க-ரை] பற்பல காரணங்களால் மாறுபட்டுக் கூடும் கூட்டங்களும், உடனிருந்தே பாழாக்கும் உட்பகையும்; சமயம் வந்தால் வேந்தனை அலைக்கின்ற கொலைத் தொழில் குறும்பரும் இல்லாததே நாடாகும்.

6. கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடுஎன்ப நாட்டின் தலை. 736

[ப-ரை] கேடு - பகைவரால் கெடுதல் என்பதனை, அறியா - அறியாததாய், கெட்ட விடத்தும் - கெட்ட காலத்திலும், வளம் - தனது வளப்பம், குன்றா - குன்றாத நாட்டினை, நாட்டின் - எல்லா நாடுகளிலும், தலை என்ப - முதன்மையானதென்று நூலோர் கூறுவார்கள்.

[க-ரை] பகைவரால் கெடுதல் என்பதனை அறியாத தாய், கெட்டுப் போன காலத்திலும் தனது வளம் குன்றாத நாட்டினை எல்லா நாடுகளிலும் தலையானது என்று நூலோர் கூறுவர்.

7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு. 737

[ப-ரை] இரு - கீழ்நீர், மேல்நீர் என்ற இருவகை, புனலும் - நீரும், வாய்ந்த - வாய்ப்புடைத்தான [வளமான] மலையும் - மலைகளும், வருபுனலும் அவைகளிலிருந்து வரும் நீரும், வல் - அழியாத வலிமையுடைய, அரணும்-அரணும், [கோட்டையும்]நாட்டின் உறுப்பு - ஒரு நாட்டிற்கு உறுப்புக் களாகும்.

[க-ரை] கீழ்நீர், மேல்நீர் எனப்பட்ட நீரும், வாய்ப்பான மலையும், அதிலிருந்து வரும் நீரும், அழியாத அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாகும்.

8. பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கு இவ்வைந்து. 738

[ப-ரை] பிணி - நோய், இன்மை - இல்லாமையும், செல்வம் - செல்வமும், விளைவு - நல்ல விளைச்சலும், இன்பம் - இன்பமும், ஏமம் - பாதுகாவலும், இவ்வைந்து - இந்த ஐந்தினையும், நாட்டிற்கு - ஒரு நாட்டிற்கு, அணி என்ப - அழகாகும் என்று நூலோர் கூறுவர்.

[க-ரை] நோய் இல்லாமையும், செல்வமும், நல்ல விளைச்சலும், இன்பமும், பாதுகாவலும் ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகாகும் என்று நூலோர் கூறுவர்.

9. நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல
நாட வளந்தரும் நாடு. 739

[ப-ரை] நாடா - மக்கள் தேடி வருந்தாமல், வளத்தன - தானே வந்தடையும் செல்வத்தினையுடையவைகளை, நாடு என்ப - சிறந்த நாடு என்று நூலோர் கூறுவர், நாட - தேடிவருந்த, வளம் - செல்வத்தினை, தரும் - கொடுப்பதாகிய, நாடு - நாடுகள், அல்ல - ஆகாவாம்.

[க-ரை] நாட்டில் வாழ்பவர்கள் தேடி வருந்தாமல் தாமே வந்தடையும் செல்வத்தனை உடையதனை நாடு என்று நூலோர் சொல்லுவர், தேடி வருந்தச் செல்வம் அடைவிக்கும் நாடுகள் நாடு ஆகா.

10. ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்துஅமைவு இல்லாத நாடு. 740

[ப-ரை] வேந்து - வேந்தனோடு, அமைவு - பொருந்துதல், இல்லாத - இல்லாத, நாடு - நாடானது, ஆங்கு - கூறப்பட்ட நற்பண்புகள் எல்லாவற்றாலும், அமைவு - நிறைந்த பொருத்தம், எய்தியக் கண்ணும் - அடைந்திருந்தாலும், பயம் - அவற்றால் பயன், இன்றே - இல்லாததேயாகும்.

[க-ரை] வேந்தனோடு பொருந்துதல் இல்லாத நாடு எல்லாவிதமான குணங்களால் நிறைவு பெற்றிருந்தாலும் பயனுடையதல்ல என்பதாகும்.

# 75. அரண்

[நாட்டிற்குச் சிறப்பான அரண் - கோட்டை - விளக்கப்படுதல்]

1. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 741

[ப-ரை] ஆற்றுபவர்க்கும் - [பலவகை ஆற்றலுடைய ராய்.] பகைவர் மேல் படையெடுத்துச் செல்வார்க்கும், அரண் - அரணானது, பொருள் - சிறந்த பொருளாகும், அஞ்சி - தம் மேல் வரும் பகைவர்க்குப் பயந்து, தற்போற்று பவர்க்கும் - தன்னை வந்து அடைபவர்களுக்கும், பொருள் - அரண் சிறப்புடையதாகும்.

[க-ரை] பலவகை ஆற்றலும் உடையவர்களாகப் பகைவர்மேல் செல்லுவோர்க்கு அரண் சிறந்ததாகும். அதுவேயன்றித் தம்மேல் வருவோர்க்கு அஞ்சித் தன்னை அடைவார்க்கும் அரண் சிறந்ததாகும்.

2. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண். 742

[ப-ரை] மணி - மணி போலும் நிறத்தினையுடைய, நீரும் - நீரும், மண்ணும் - வெள்ளிடை நிலமும், மலையும் - மலையும், அணி - குளிர்ந்த, நிழற்காடும் - நிழலையுடைய காடும், உடையது - உடையதே, அரண் - அரணாகும்.

[க-ரை] மணிபோலும் நிறத்தினையுடைய நீரும், வெள்ளிடை நிலமும், மலையும், குளிர்ந்த நீரையுடைய காடும் உடையதே அரணாகும்.

3. உயர்வு அகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவுஅரண் என்றுஉரைக்கும் நூல். 743

[ப-ரை] உயர்வு - நல்ல உயர்ச்சியும், அகலம் - அகலமும், திண்மை - வலிமையும், அருமை - பொறிகளால்

நெருங்க முடியாத அருமையும், [என்று சொல்லப்பட்ட] இந்நான்கின் - இந்த நான்கினையும், அமைவு - மிகுதியாக வுடைய மதிலை, அரண் - அரண் [கோட்டை] என்று - என்பதாக, உரைக்கும் நூல் - நூலோர் கூறுவர்.

[க-ரை] உயர்ச்சியும், அகலமும், திண்மையும், அருமையும் என்று சொல்லப்பட்ட இந்த நான்கின் மிகுதி யினையுடைய மதிலை அரண் என்று சொல்லுவர் நூலோர்.

4. சிறுகாப்பின் பேர் இடத்தது ஆகிஉறுபகை
ஊக்கம் அழிப்பது அரண். 744

[ப-ரை] சிறுகாப்பின் - காக்க வேண்டிய இடம் சிறிய தாக, பேரிடத்ததாகி - அகன்ற இடத்தினையுடையதாகி, உறு - தம்மை முற்றுகையிட்ட, பகை-பகைவரது, ஊக்கம் - ஊக்கமான மன எழுச்சியினை, அழிப்பது - அழிப்பதே, அரண் - அரண் எனப்படும்.

[க-ரை] காக்க வேண்டிய இடம் சிறியதாகவும், அகல மான இடத்தினையுடையதாகவும் அமைந்து தன்னை வந்து முற்றுகையிட்ட பகைவரின் எழுச்சியினைக் கெடுப்பதே அரணாகும்.

5. கொளற்கு அரிதாய்க் கொண்டகூழ்த்து ஆகிஅகத்தார்
நிலைக்குஎளிதாம் நீரது அரண். 745

[ப-ரை] கொளற்கு - புறத்தோரால் கொள்ளுவதற்கு, அரிதாய் - முடியாமல் அருமையானதாகி, கொண்ட - உள்ளே கொண்ட, கூழ்த்தாகி - பலவகை உணவும் பொருள், நிலைக்கு - போர் செய்ய வேண்டிய நிலைக்கு, எளிதாம் - எளிமையானதாகியுள்ள, நீரது - தன்மையினை யுடையதே, அரண் - அரணாகும்.

[க-ரை] வெளியாரால் கொள்ளுதற்கு அரியதாகி உள்ளே பலவகையான உணவினை உடையதாகி உள்ளிருப் போர் செய்வதற்கு எளிய தன்மையுடையதே அரணாகும்.

6. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்
நல்லாள் உடையது அரண். 746

[ப-ரை] எல்லா - அகத்தோர்க்கு வேண்டுவனவாகிய எல்லாவிதமான, பொருளும் - பொருள்கள் பலவற்றையும், உடைத்தாய் - உள்ளே உடையதாகி, இடத்து - புறத்தோரால் அழிவு உண்டாகும்போது, உதவும் - அது வராமல் உதவிக் காக்கும், நல்லாள் உடையது - நல்ல வீரர்களை உடையதே, அரண் - அரணாகும்.

[க-ரை] உள்ளே இருப்பவர்கள் வேண்டும் பொருள்கள் எல்லாம் உடையதாகி புறத்தோரால் அழிவு உண்டாகும் போது அவ்வாறு உண்டாகாமல் காக்க வல்ல வீரரை உடையதே அரணாகும்.

7. முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற்கு அரியது அரண். 747

[ப-ரை] முற்றியும் - போக்கு வரவு முடியாத வகையில் நெருங்கி முற்றுகையிட்டும், முற்றாது எறிந்தும் - அப்படி முற்றுகை யிடாமல் வாய்த்த இடம் நோக்கி ஒரு முகமாகப் போரிட்டும், அறைப்படுத்தும் - உள்ளிருந்தோரை தெரிந்தாரை விட்டுக் கீழறுத்துத் திறப்பித்தும், பற்றற்கு - புறத்தோரால் கொள்ளுவதற்கு, அரியது - அருமையானதாக இருப்பதே, அரண் - அரணாகும்.

[க-ரை] போக்குவரவு ஒழியும் வகையில் நெருங்கிச் சூழ்ந்தும், அவ்வாறு சூழாமல் நெகிழ்ந்தபோது இடம் நோக்கி ஒருமுகமாய்ப் போர் செய்தும், உள்ளிருப்போரை அவரைத் தெரிந்தோரால் கீழறுத்துத் திறப்பித்தும் புறத்தோரால் கொள்ளுதற்கு அரிதானதே அரணாகும்.

8. முற்றுஆற்றி முற்றி யவரையும் பற்றுஆற்றிப்
பற்றியார் வெல்வது அரண். 748

[ப-ரை] முற்று ஆற்றி - படைப் பெருமையால் முற்றுகையிட வல்லவராகி, முற்றியவரையும் - வந்து சூழ்ந்த பகைவரையும், பற்றியார் - தன்னைப்பற்றி நின்ற உள்

இடத்தார், பற்று - தாம் நின்ற இடத்தில், ஆற்றி - விடாமல் நின்று, வெல்வது - போர் செய்து வெல்வதே, அரண் - அரணாகும்.

[க-ரை] படைப்பெருமையால் சூழ வல்லாராய் வந்து சூழ்ந்த பகைவரையும், தம்மைப் பற்றி நின்ற உள்ளிடத்து வீரரால் பற்றிய இடம் விடாமல் நின்று போர் செய்து வெல்வதே அரணாகும்.

9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறுஎய்தி மாண்டது அரண். 749

[ப-ரை] முனை முகத்து - போர் தொடங்கிய போது, மாற்றலர் - பகைவர்கள், சாய - கெடும் வண்ணம், வினை முகத்து - உள்ளிருப்போர் செய்யும் செயல் வேறுபாடு களால், வீறு - உயர்வு, எய்தி - பெற்று, மாண்டது - மற்றும் வேண்டிய சிறப்பினையுடையதே, அரண் - அரணாகும்.

[க-ரை] போர் தொடங்கியபோது பகைவர் கெடும் வண்ணம், உள்ளிருப்போர் செய்யும் செயல் வேறுபாடு களால் வீறுபெற்று மேலும் வேண்டிய ஆட்சியினை உடையதே அரணாகும்.

10. எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண். 750

[ப-ரை] அரண் - கோட்டையானது, எனை - எல்லா வகையான, மாட்சித்து - சிறப்புக்களையெல்லாம், ஆகியக் கண்ணும் - உடையதாக இருந்த போதிலும், வினை - தொழில் செய்யும் போது, மாட்சி - பெருமையினை [திண்மையினை] இல்லார்கண் - இல்லாதவர்களாக இருந் தால், இல்லது - அவை இல்லாததேயாகும்.

அரண் எனப்படும் கோட்டையானது மேற்கூறிய பெருமைகளையெல்லாம் பெற்றிருந்தாலும், செயல் புரிவதில் சிறப்புடைய வீரர்கள் இல்லாதபோது அவை களும் இல்லாதனவேயாகும்.

## 76. பொருள் செயல்வகை

[பொருள் செய்தலின் திறம், சிறப்பு முதலியன]

1. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லதுஇல்லை பொருள். 751

[ப-ரை] பொருள் - எத்தகுதியுமின்றி ஒரு பொருளாக, அல்லவரை - மதிக்கப்படாதவர்களையும், பொருளாக - மதிக்கப்படுபவராக, செய்யும் - செய்கின்ற, பொருள் - பொருள், அல்லது - அல்லாமல், பொருள் - ஒருவருக்குப் பொருளாவது, இல்லை - வேறு எதுவும் இல்லையாம்.

[க-ரை] ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் மதிக்கப்படுபவராகச் செய்யவல்ல பொருள் அல்லாமல் வேறு ஒருவனுக்குப் பொருளாவதில்லை.

2. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 752

[ப-ரை] இல்லாரை - பொருள் இல்லாதவர்களை - எல்லாரும் எள்ளுவர் - எல்லோரும் இகழ்வார்கள், செல்வரை - செல்வர்களை, எல்லாரும் - எல்லோரும், சிறப்பு - சிறப்பாக, செய்வர் - உயர்த்துவர் [எல்லாத் தீமையும் உடையவரானாலும் தாம் தாழ்ந்து அச்செல்வரை உயரச் செய்வர்]

[க-ரை] எல்லா நன்மைகளும் இருந்தாலும் பொருள் இல்லாதவர்களை யாவரும் இகழ்வர். எல்லாத் தீமை

களும் உடையவரானாலும், பொருள் வைத்திருப்பவரை யாவரும் உயரச் செய்வர்.

3. பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. 753

[ப-ரை] பொருள் - பொருள், என்னும் - எனப்படுகின்ற, பொய்யா - அணையாத, விளக்கம் - விளக்கமானது எண்ணிய - தன்னையுடையவர் நினைத்த, தேயத்து - தேசத்திற்கு, சென்று - சென்று, இருள் அறுக்கும் - பகையென்னும் இருளினை அழிக்கும்.

[க-ரை] பொருள் என்று கூறப்படுகின்ற பொய்யாத விளக்கானது தன்னை உடையவர்க்கு அவர் நினைத்த தேசத்திற்குச் சென்று பகை என்னும் இருளைக் கெடுக்கும்.

4. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதுஇன்றி வந்த பொருள். 754

[ப-ரை] திறன் - பொருளீட்டும் நல்வழியினை, அறிந்து - தெரிந்து, தீது - கேடு, இன்றி - இல்லாதபடி, வந்த - உண்டான, பொருள் - பொருள், அறன் - அறத்தினையும், ஈனும் - தரும், இன்பமும் ஈனும் - இன்பத்தினையும் தருவதாகும்.

[க-ரை] செய்யும் திறனறிந்து நல்வழியில் உண்டான பொருளானது அவனுக்கு அறத்தினையும் கொடுக்கும்; இன்பத்தினையும் கொடுக்கும்.

5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். 755

[க-ரை] அருளொடும் - அருள் நிறைந்த வழியாலும், அன்பொடும் - அன்பு நெறியாலும், வாரா பொருளாக்கம் - வாராத பொருள் ஆக்கத்தினை, புல்லார் - பொருந்தாதவராகி, புரளவிடல் - விட்டு விடுதல் வேண்டும்.

[க-ரை] குடிகளிடம் கொண்ட அருளுடைமை யினாலும், அன்புத் தன்மையினாலும் வாராத பொருள் பெருக்கத்தினைப் பொருந்தாராகிக் கழிய விடுதல் வேண்டும்.

6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 756

[ப-ரை] உறு - [உடையவர் இல்லாமையால்] அரசுக்கு வந்த, பொருளும் - பொருளும், உல்கு - சுங்க வரிகளால், பொருளும் - வந்த பொருளும், தன் - தனது, ஒன்னார் - பகைவர்களை, தெறுபொருளும் - வென்றதால் திறையாக வந்த பொருளும், வேந்தன் - வேந்தனுக்குரிய, பொருள் - பொருள்களாகும்.

[க-ரை] உடையவர் இல்லாததால் தானே வந்த பொருளும், சுங்கமாகிய பொருளும் தம் பகைவரிடமிருந்து திறையாகக் கொள்ளும் பொருளும் வேந்தனுக்கு உரிய பொருள்களாகும்.

7. அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு. 757

[ப-ரை] அன்பு - அன்பானது, ஈன் - பெற்ற, அருள் - அருள், என்னும் - எனப்படும், குழவி - குழந்தையானது, பொருள் என்னும் - பொருள் என்று சிறப்பித்துக் கூறப் படும், செல்வம் - செல்வமாகிய, செவிலியால் - செவிலித் தாயாரால், உண்டு - வளர்வதாகும்.

[க-ரை] அன்பு பெருகி அதனால் வந்த அருள் என்னும் குழவி, பொருள் என்னும் உயர்த்திச் சொல்லப்படும் செல்வத்தினையுடைய செவிலியால் வளரும்.

8. குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று
உண்டாகச் செய்வான் வினை. 758

[ப-ரை] தன் - தன்னுடைய, கைத்து - கையிலே பொருள், உண்டாக - உளதாயிருக்க, ஒன்று செய்வான் -

ஒரு தொழிலினைச் செய்பவனது, வினை - செயலானது, குன்று - குன்றின்மீது, ஏறி - ஏறிநின்று, யானைப்போர் - யானைகள் போரிடுவதை, கண்டற்று - காண்பதற்குச் சமமாகும்.

[க-ரை] தன் கையில் பொருளினை வைத்துக்கொண்டு ஒரு தொழிலினை எடுத்துச் செய்தல், ஒருவன் மலைமேல் ஏறிநின்று யானைப் போரினைக் கண்டதை ஒக்கும்.

9. செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்
எஃகு அதனிற்கூரியது இல். 759

[ப-ரை] பொருள் - செல்வத்தினை, செய்க - உண்டாக்கிக் கொள்ளுவார்களாக, செறுநீர் - தமது பகைவரது, செருக்கு அறுக்கும்-செருக்கினை அறுத்து விடுகின்ற, எஃகு - கருவி, அதனின் - அதுபோன்று, கூரியதுஇல் - கூர்மையான படைக்கலம் வேறு எதுவும் இல்லையாகும்.

[க-ரை] தமக்கு ஒன்று உண்டாகக் கருதுபவர்கள் பொருளினை உண்டாக்குதல் வேண்டும். தமது பகைவர் செருக்கினை அறுக்கும் படைக்கலம் அதுவேயாம். அதற்கு அதுபோலக் கூரிய படைக்கலம் பிறிது இல்லை.

10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. 760

[ப-ரை] ஒண்- நல்வழியில் இருப்பதான, பொருள் - செல்வத்தினை, காழ்ப்ப - மிகுதியாக, இயற்றியார்க்கு - உண்டாக்கிக் கொண்டவர்க்கு, ஏனை - மற்றைய அறமும் இன்பமுமான, இரண்டும் – இரண்டும், ஒருங்கு - ஒருங்கு சேர்ந்து, எண் - எளிமையாக வந்தடையும், பொருள் - பொருள்களாகும்.

[க-ரை] நல்ல வழியில் வளரும் பொருளினை மிகுதியாகப் படைத்தவர்க்கு மற்றையதான அறமும் இன்பமும் ஒன்றாக அடைவதற்கு எளிய பொருள்களாகும்.

# 77. படைமாட்சி

## [படையினுடைய சிறப்பும் நன்மையும்]

1. உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. 761

*[ப-ரை] உறுப்பு அமைந்து - படைக்குரிய உறுப்புக்களால் நிறைந்திருந்து, ஊறு - போரில் உண்டாகும் துன்பங்களுக்கு, அஞ்சா - அஞ்சாமல் நிலைத்து நின்று, வெல் படை - வெல்வதாகிய படை, வேந்தன் - வேந்தனுடைய, வெறுக்கையுள் - செல்வங்களுள், எல்லாம் - எல்லாவற்றிலும், தலை - தலையான [முதன்மையான] செல்வமாகும்.*

*[க-ரை] படைக்குரிய உறுப்புக்களால் அமைந்து போரினிடத்து ஊறுபடுவதற்கு அஞ்சாமல் நின்று பகையினை வெல்வதாகிய படை, வேந்தனுடைய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலையான செல்வமாகும்.*

2. உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது. 7o2

*[ப-ரை] தொலைவிடத்து - தான் சிறிதாகியபோது, உலைவிடத்து - தனக்கு அழிவு வந்து விட்டால், ஊறு அஞ்சா - உண்டான துன்பத்திற்கு அஞ்சாமல் நின்று போரிடுகின்ற, வன்கண் - திண்மையும் உறுதியும், தொல் படைக்கு - அவன் முன்னோரைத் தாங்கிவரும் படைக்கு, அல்லால் - அல்லாமல், அரிது - மற்றவற்றிற்கு உண்டாகாது.*

*[க-ரை] தான் சிறிதாக இருந்த இடத்தும் போரில் அழிவு வந்தால் அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை இவனுடைய முன்னோரைத் தாங்கிவரும் படைக்கு (தொன்றுதொட்டு வருவது) அல்லாமல் உளதாகாது.*

3. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 763

[ப-ரை] எலி - எலிகளாகிய, பகை - பகை மிகுந்து, உவரி - கடல் போன்று, ஒலித்தக்கால் - ஒலித்து ஓசையிட்டால், என்னாம் - நாகத்திற்கு என்ன துன்பம் உண்டாகும், நாகம் - அந்த நாகப்பாம்பு, உயிர்ப்பது - மூச்சு விட்டவுடனே, கெடும் - அவை கெட்டழியும்.

[க-ரை] எலியாகிய படை திரண்டு கடல்போல ஒலித்தாலும், நாகத்திற்கு என்ன துன்பத்தினைச் செய்ய முடியும்? அந்த நாகம் மூச்சு விட்டவுடனே அந்த எலிப்பகை கெட்டுவிடும்.

4. அழிவின்றி அறை போகாது ஆகிவழிவந்த
வன்கண் அதுவே படை. 764

[ப-ரை] அழிவு - போரில் கெடுதல், இன்றி - இல்லாமல், அறைபோகாது - பகைவரால் கீழறுக்கப்படாததாய், ஆகி - ஆகியிருந்து, வழி - தொன்றுதொட்டுப் பழமையாய், வந்த - வந்த, வன்கணதுவே - வன்கண்மையாகிய வலிமையுடையதே, படை - சிறந்த படையாகும்.

[க-ரை] போரில் கெடுதல் இல்லாமல், பகைவரால் கீழறுக்கப்படாததாகித் தொன்றுதொட்டு வந்த வலிமையினையுடையதே அரசனுக்குப் படையாவதாகும்.

5. கூற்றுஉடன்று மேல்வரினும் கூடிஎதிர் நிற்கும்
ஆற்ற லதுவே படை. 765

[ப-ரை] கூற்று - கூற்றுவன், உடன்று - சினங்கொண்டு, மேல்வரினும் - தாக்குவதற்குத் தன்மேல் வந்தாலும், கூடி - நெஞ்சு ஒத்து, எதிர் நிற்கும் - எதிர்த்து நிற்கின்ற, ஆற்றலதுவே - வலிமையினையுடையதுவே, படை - படையாகும்.

[க-ரை] கூற்றுவனே கோபித்து எதிர்த்து வந்தாலும் நெஞ்சத் துணிவுடன் எதிர்த்து நின்று தாங்கும் ஆற்றலை உடையதே படையாகும்.

**6.** மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. 766

[ப-ரை] மறம் - வீரமும் தறுகண்மையும், மானம் - மானம் உடைமையும், மாண்ட - சிறப்பமைந்த, வழிச் செலவு - முன்பு வீரராயினார் சென்ற வழியில் செல்லுதலும், தேற்றம் - தலைவனுடைய நம்பிக்கைக்குட்பட்டதும், என - என்று கூறப்பட்ட, நான்கே - இந்த நான்கு குணங் களுமே, படைக்கு ஏமம் - படைக்குப் பாதுகாவல்களாகும்.

[க-ரை] வீரமும் மானமும் மாட்சிமைப்பட்ட வீரர் வழியில் செல்லலும் நம்பிக்கையுள்ளதும் ஆகிய நான்கு குணங்களுமே சேனைக்குப் பாதுகாப்பாகும்.

**7.** தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து. 767

[ப-ரை] தலைவந்த - பகைவரால் தன்னை எதிர்த்து வந்த, போர் - போரினை, தாங்கும் - நீக்கி விலக்குகின்ற, தன்மை - வகைமுறையினை, அறிந்து- வகுத்துக்கொண்டு, தார் - அவரது படைத் தாக்குதலை, தாங்கி - தன்மேல் தடுத்துக் கொண்டு, செல்வது தானை - தான் அப்பகைவர் மீது செல்வதே படையாகும்.

[க-ரை] பகைவரால் தன்மேல் வந்த போரின் விலக்குகிற வழிமுறையினை அறிந்து வகுத்துக்கொண்டு தான் அப்படையின் மேல் செல்வதே படையாகும்.

**8.** அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். 768

[ப-ரை] தானை - சேனையானது, அடல்தகையும் - போர் செய்கின்ற சிறந்த வீரமும், ஆற்றலும் - பகை தன்

மேல் வந்தால் தாங்கும் வலிமையும், இல் - பெற்றில்லை, எனினும் - என்றாலும், படைத்தகையால்-தனது தோற்றப் பொலிவாலே, பாடுபெறும் - பெருமையினை எய்தும்.

[க-ரை] சேனைக்குப் பகைவரைக் கொல்லும் தன்மையும், சிறந்த வீரமும் இல்லையென்றாலும், தனதுதோற்றப் பொலிவாலே பெருமையினை அடையும்.

9. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை. 769

[ப-ரை] சிறுமையும் - குறைந்துசிறிதாவதும், செல்லா - நீங்காத, துனியும் - வெறுப்புணர்ச்சியும், வறுமையும் - வறுமையும், இல்லாயின் - இல்லாதிருந்தால், படை வெல்லும் - சேனையானது பகைவரை வென்றுவிடும்.

[க-ரை] குறைந்து சிறிதாகிக்கொண்டு போவதும், வெறுப்புணர்ச்சியும் வறுமையும் ஆகியவை இல்லாமலிருந்தால் அச்சேனையானது பகைவரை வெல்லும்.

10. நிலைமக்கள் சால உடைத்துஎனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். 770

[ப-ரை] நிலைமக்கள் - போரில் நிலைத்து நின்று போரிடும் வீரர்களை, சால - மிகுதியாக, உடைத்து - உடையதே, எனினும் - என்றாலும், தலைமக்கள் - தலைவர்களாகிய வீரர்கள், இல்வழி - இல்லாவிட்டால், தானை இல் - சேனை நிற்காது.

[க-ரை] போரில் நிலைத்து நிற்கும் வீரர் பலரை மிகுதியாகப் பெற்றிருந்தாலும் தனக்குத் தலைவர்களான தலைமை வீரர்கள் இல்லாதபோது சேனை நிற்காது.

# 78. படைச் செருக்கு

[படையினது வீர மிகுதியினைக் கூறுவதாகும்]

1. என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர். 771

[ப-ரை] தெவ்விர் - பகைவர்களே, என் - என்னுடைய, ஐ - தலைவன், முன் - எதிரே, நின்று - போர் செய்து நின்று, கல் - தோற்று வீழ்ந்து நடுக்கல்லாக, நின்றவர் - நின்றவர்கள், பலர் - பலராவார், [ஆதலால்] என் - என்னுடைய, ஐ - தலைவன், முன் - எதிரே, நில்லன்மின் - நிற்காது நீங்குவீர்களாக.

[க-ரை] பகைவர்களே! எனது தலைவனை எதிர்த்து நின்று இறந்து கல்லாய் நின்ற வீரர் பலராவர். ஆதலால் எனது தலைவன் முன்பாகப் போர் செய்து நிற்பதை நீக்குவீராக.

2. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 772

[ப-ரை] கானமுயல் - காட்டினில் முயலினை, எய்த - தப்பாமல் எய்த, அம்பினில் - அம்பினை ஏந்துவதைக் காட்டிலும், யானை - யானையின்மீது எறிந்து, பிழைத்த - பாயாமல் தவறிய, வேல் - வேலினை, ஏந்தல் இனிது - கையினில் ஏந்தி வருதல் மகிழ்ச்சியுடையது.

[க-ரை] காட்டினில் ஓடும் முயலினைத் தப்பாது எய்திய அம்பினை ஏந்துவதைவிட யானையின்மீது எறிந்து தப்பிய வேலினை ஏந்தி வருதல் இனிமையானதாகும்.

3. பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றுஅதன் எஃகு. 773

[ப-ரை] தறுகண் - [பகைவர்மீது இரக்கமின்றிப் போர் செய்யும்] வீரத்தினை, பேராண்மை - மிகுந்த பேராண்மை

யாகும், என்ப - என்று கூறுவர், ஒன்று – பகைவர்க்கு ஒரு தாழ்வு, உற்றக்கால் - வந்தபோது, ஊராண்மை - இரக்கங் காட்டி உதவி செய்தல், அதன் எஃகு – அதற்குக் கூர்மை, யென்று கூறுவர்.

[க-ரை] பகைவர்மேல் கண்ணோடாமல் செய்யப்படும் வீரத்தினையே நூலோர், மிக்கஆண் தன்மைஎன்று கூறுவர். பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்தபோது கண்ணோட்டம் செய்து அவர்க்கு உதவுகின்ற தன்மையினை, அந்த ஆண் தன்மைக்குக் கூர்மை என்று கூறுவர் நூலோர்.

4. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 774

[ப-ரை] கைவேல் - கைப் படையாகிய வேலினை, களிற்றொடு - தன்னை எதிர்த்து வந்த யானைமீது, போக்கி - செலுத்தி விட்டு, வருபவன் - வேறு வேல் தேடி வருகின்றவன், மெய் - தனது மார்பில் பாய்ந்திருந்த, வேல் – வேலைப் பார்த்து, பறியாநகும் - அதனைப் பறித்தெடுத்து மகிழ்வான்.

[க-ரை] கைப்படையான வேலினை, தன்னை எதிர்த்து வந்த யானைமீது எறிந்து, வருகின்ற யானைக்கு வேல் தேடுபவன் தனது மார்பினிடத்தே பாய்ந்திருந்த வேலைக் கண்டு அதனைப் பார்த்து மகிழ்வான்.

5. விழித்தகண் வேல்கொண்டு எறியஅழித்து இமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. 775

[ப-ரை] விழித்த - [பகைவர் மேல் சினங்கொண்டு] பார்த்த, கண் - கண்கள், வேல் - வேலினை, கொண்டு - பகைவர் வைத்துக் கொண்டு, எறிய - தன்மீது எறிய, அழித்து - அதற்குப் பொறாமல் பார்வையினை அழித்து, இமைப்பின் - கண் இமைக்குமானால், வன்கணவர்க்கு - ஆண்மை நிறைந்த வீரர்களுக்கு, ஓட்டன்றோ - புறங் கொடுத்தலாகுமல்லவா?

[க-ரை] பகைவரைக் கோபித்து நோக்கிய கண், பகைவர் எறிந்த வேலைக் கண்டு பொறுக்காமல் இருக்குமானால் அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாகும்.

6. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. 776

[ப-ரை] தன்நாளை - தனக்குக் கழிந்த நாட்களையெல்லாம், எடுத்து - எண்ணியெடுத்து, விழு - போரில் உண்டாகும் மேலான, புண்-புண்கள், படாத - ஏற்படாத, நாள் - நாட்களை, எல்லாம் - எல்லாம், வழுக்கினுள் - வீணான நாட்களுக்குள்ளே, வைக்கும் - வீரன் வைப்பான்.

[க-ரை] தனக்குச் சென்ற நாட்களை எடுத்து எண்ணி அவற்றுள் போரில் சென்று சிறப்பான புண்கள் படாத நாட்களையெல்லாம் பயன்படாமல் கழிந்த நாட்களுக் குள்ளே வீரன் வைப்பான்.

7. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 777

[ப-ரை] சுழலும் - சூழ்ந்து நிற்கும், இசை வேண்டி - புகழினை விரும்பி, வேண்டா - உயிர் வாழ்தலை விரும்பாத, உயிரார் - மறவர், கழல் - வீரக்கழலினை, யாப்பு - கட்டுதல், காரிகை - அலங்காரமான, நீர்த்து - தன்மையுடையதாகும்.

[க-ரை] உலகில் சூழ்ந்து நிற்கும் புகழினை விரும்பி உயிர் வாழ்தலை வேண்டாத வீரர் வீரக்கழலைக் கட்டிக் கொளுதல் அலங்காரத் தன்மையினை உடையதாகும்.

8. உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். 778

[ப-ரை] உறின் - போர் வந்தால், உயிர் அஞ்சா - உயிருக்கு அஞ்சாமல் [போர் மேற்செல்லும்] மறவர் - வீர மறவர், இறைவன் - தமது தலைவனான மன்னன், செறி

னும் - அது வேண்டாமென்று சினந்தாலும், சீர் - அவ்வீர மிகுதியில், குன்றல் இலர் - குறைதல் என்பது இல்லாதவர் ஆவார்.

[க-ரை] போர் வந்தால் தமது உயிர்ப்பொருட்டு அஞ்சாமல் போர்மேல் செல்லும் வீரர், தமது தலைவனாகிய இறைவன் (மன்னன்) 'அது வேண்டாம்' என்று கோபித்தாலும் அவ்வீர மிகுதியில் குன்றமாட்டார்கள்.

9. இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர். 779

[ப-ரை] இழைத்தது - தாம் கூறிய வஞ்சினம், இகவாமை - தப்பாமல் இருக்க வேண்டி, சாவாரை - போருக்குச் சென்று இறக்க வல்ல வீரரை, பிழைத்தது - அது தப்பிய வாறு சொல்லி, ஒறுக்கிற்பவர் யார் - ஏளனமாகப் பேசுபவர் யாவர்?

[க-ரை] தாம் கூறிய வஞ்சினம் தப்பாமற் பொருட்டுப் போரிற் சென்று சாவவல்ல வீரரை அது தப்பியவாறு சொல்லி இகழ்ந்து பேசுவதற்குரியார் யார்?

10. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து. 780

[ப-ரை] புரந்தார் - தம்மை ஆட்சி, செய்த அரசனது, கண் - கண்களில், நீர் - நீர், மல்க - பெருகுமாறு, சாகிற்பின் - போரிலே சாக முடிந்தால், சாக்காடு - அத்தகைய சாக்காடு (இறப்பு) இரந்து - யாசித்தேனும், கோள் - கொள்ள, தக்கது - தகுதியினை, உடைத்து - உடையதாகும்.

[க-ரை] தமக்குச் செய்த நன்றிகளை நினைத்து ஆளும் அரசர் கண்களில் நீர் பெருகும் வகையில் போரில் சாகப் பெற்றால் அச்சாக்காடு இரந்தாயினும் (யாசித்தேனும்) பெற்றுக்கொள்ளும் தகுதியினை உடையதாகும்.

# 79. நட்பு

## (நண்பர்களைப் பற்றிய விளக்கமும் சிறப்பும், பயனும்)

**1. செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்குஅரிய யாவுள காப்பு. 781**

[ப-ரை] *நட்பின்-நட்பு செய்தலைப் போல, செயற்கு- ஒருவன் தனக்குச் செய்து கொள்ளுவதற்கு, அரிய - அருமை யான செயல், யாஉள - எவை உண்டு, அதுபோல் - அதனைப்போல, வினைக்கு - [பகைவர்] செய்யும் தொழி லுக்கு, அரிய காப்பு - அருமையான பாதுகாவலானவை, யாஉள -எவை உண்டு?*

[க-ரை] *நட்பினைப்போல செய்து கொள்ளுவதற்கு அரிய பொருள்கள் யாவை உள? எவையும் இல்லை? அந் நட்பினைச் செய்து கொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் தொழிலுக்கு அரிய பாதுகாப்பாவன யாவை உள? வேறு எவையும் இல்லை என்பதாம்.*

**2. நிறைநீர் நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்நீர பேதையார் நட்பு. 782**

[ப-ரை] *நீரவர் - அறிவுடையார்களுடன் செய்து கொள்ளும், கேண்மை - நட்புக்களானவை, பிறை - பிறையைப்போல, நிறை - அன்றாடம் நிறைகின்ற, நீர - தன்மையினவாம், பேதையார் - அறிவில்லாதவரது, நட்பு- நட்புக்கள், மதி - நிறைந்த சந்திரனானவன், பின்- பின்னே [நாள்தோறும் குறையும்] நீர - தன்மையுடையதாகும்.*

*[க-ரை] அறிவுடையாருடன் கொள்ளும் நட்பு நாள் தோறும் பிறை மதியினைப்போல நிறையும் தன்மையுடைய தாகும். பேதைமையுடையார் நட்பு நிறைந்த மதி குறையும் தன்மைபோல நாள்தோறும் குறைந்து வருவதாகும்.*

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புஉடை யாளர் தொடர்பு. 783

[ப-ரை] பண்பு - நற்குணம், உடையாளர் - உடைய மேன் மக்கள், தொடர்பு - தமக்குள் செய்த நட்பானது, பயில்தொறும் - பழகும் போதெல்லாம் [இன்பம் தரும் அது] நூல் - நூற்பொருளினை, நவில்தொறும் - கற்கும் போதெல்லாம், நயம் போலும் - கற்பவர்களுக்கு இன்பம் செய்தலைப் போன்றிருக்கும்.

[க-ரை] நற்குணமுடைய மக்கள் தமக்குள் செய்த நட்பு பழுகுந்தோறும் அவர்க்கு இன்பம் செய்வதாவது நூற்பொருள்களைக் கற்குந்தோறும் இந்நூலானது கற்றார்க்கு இன்பம் செய்தலை ஒக்கும் என்பதாம்.

4. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு. 784

[ப-ரை] நட்டல் - ஒருவரோடொருவர் நட்புச் செய்து கொள்ளுதல், நகுதற் பொருட்டன்று - நகைத்துப் பழகுவதற்காக அல்ல, மிகுதிக்கண் - நண்பனிடம் வேண்டாத செய்கை உண்டானபோது, மேற்சென்று - முற்பட்டு, இடித்தற் பொருட்டு - கண்டித்துப் புத்திமதி சொல்லு வதற்கேயாகும்.

[க-ரை] ஒருவரோடு ஒருவர் நட்புச் செய்து கொள்ளு தல் தம்முள் நகைத்துப் பழுகுவதற்காக அல்ல; நண்பனிடம் வேண்டாத செய்கை உண்டாகும்போது முற்பட்டுக் கண்டித்து அவர்க்குப் புத்திமதி சொல்லுதற்கேயாகும்.

5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். 785

[ப-ரை] புணர்ச்சி - ஒரு தேசத்தில் இருந்தாலும், பழகுதல் - அடிக்கடி பார்த்தலும் கண்டு பழகுதலும், வேண்டா - வேண்டுவதில்லையாகும், உணர்ச்சிதான் —

இருவருக்கும் உண்டான ஒத்த மனவுணர்ச்சியே, நட்பாம் - நட்பு என்னும், கிழமைதரும் - உரிமையினைத் தருவ தாகும்.

[க-ரை] ஒருவனோடு ஒருவன் நட்பாவதற்கு ஒரே இடத்தில் இருப்பதும் பழுகுதலுமாகிய காரணங்கள் வேண்டியதில்லை. ஒத்த மனவுணர்ச்சியே நட்பு என்கின்ற உரிமையைக் கொடுப்பதாகும்.

6. முகம்நக நட்பது நட்புஅன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு. 786

[ப-ரை] முகம் - முகத்தினால் மட்டும், நக - மலர்ச்சி யினைச் செய்து, நட்பது - நண்பனாக இருப்பது, நட்பு - நட்பு, அன்று - ஆகாது, நெஞ்சத்து - அன்பினால், அகம் - உள்ளம், நக - மகிழ்ச்சியால் மலர, நட்பது நட்பு - நட்புச் செய்வதே நட்பாகும்.

[க-ரை] கண்டபொழுது மனத்தால் அல்லாமல் முகத் தினாலே மட்டும் மலர்ந்து நட்புச் செய்வது நட்பு ஆகாது. அன்பினால் மனமும் மலர நட்புச் செய்வதே நட்பு என்பதாகும்.

7. அழிவி னவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. 787

[ப-ரை] அழிவின் அவை - கேட்டினைத் தருகின்ற தீய வழிகளிலிருந்து, நீக்கி - நண்பனை நீக்கி, ஆறு - மற்ற நன்னெறியிலே, உய்த்து - செலுத்தி, அழிவின்கண் - கெடுதி வந்துற்ற போது, அல்லல் - துன்பத்தினை, உழப்பதாம் - தானும் உடனிருந்து அனுபவிப்பதே, நட்பு - நட்பாகும்.

[க-ரை] கெடுதியினைத் தரும் தீய வழிகளில் செல்லும் போது நண்பனை அவ்வாறு செல்லாமல் விலக்கி நல்லவழி களில் செலுத்துவதும் கெடுதல் வந்தபோது தானும் உடனிருந்து அனுபவிப்பதுமே சிறந்த நட்பாகும்.

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 788

[ப-ரை] உடுக்கை - உடை, இழந்தவன் - குலைந்த ஒருவனுக்கு, கைபோல - உடனே கைசென்று உதவுதல் போல, ஆங்கே - நண்பனுக்குத் துன்பம் வந்த அப்போதே, இடுக்கண் - அத்துன்பத்தினை, களைவதாம் - நீக்கி விடுவது தான், நட்பு - நட்பாகும்.

[க-ரை] ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவி செய்து இழிவினை நீக்குவதுபோல நண்பனுக்குத் துன்பம் வந்தபோது அப்பொழுது சென்று உதவிசெய்து அதனை நீக்குவதே நட்பாகும்.

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்புஇன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 789

[ப-ரை] நட்பிற்கு - நட்பு என்பதற்கு, வீற்றிருக்கை இருக்கும் இடம் என்பது,' யாது - எது, எனின் - என்றால், கொட்பு - திரிதல் [மாறுதல்] இன்றி - இல்லாமல், [எப்போதும்] ஒல்லும் - முடியும், வாய் - இடங்களில் எல்லாம், ஊன்றும் - தளர்ச்சியின்றி உதவும், நிலை - மனவலிமையாகும்.

[க-ரை] நட்பானது சிறப்பாக வீற்றிருக்கும் இடம் எதுவென்றால் அது எப்போதும் மாறுபாடு இல்லாமல் முடிந்த இடங்களில் எல்லாம் தளராமையினைத் தாங்கும் திண்மையாகும்.

10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. 790

[ப-ரை] இவர் - இந்த நண்பர், எமக்கு - எனக்கு- இனையர் - இப்படிப்பட்ட நண்பர், யாம் - யாம், இன்னம், இத்தகைய அன்புடையோம், என்று - என்பதாக் கூறி, புனையினும்-ஒருவரை யொருவர் சிறப்பித்துப் பேசினாலும்

[வேற்றுமையாகத் தோன்றுவதால்] நட்பு, புல்லெனனும் - நட்பானது சிறுமையுடையதாகி விடும்.

[க-ரை] 'இவர் நமக்கு இத்தகைய நண்பர், யாம் இவர்க்கு இத்தன்மையான நண்பர்' என்று வேறுபடுத்திக் கொண்டு ஒருவரையொருவர் சிறப்பித்தாலும் நட்புக்கு அது சிறுமையுடையதாகும்.

## 80. நட்பு ஆராய்தல்

### [ஒருவரை நன்கு ஆராய்ந்தபின் நட்பினராக்குதல்]

1. நாடாது நட்டலின் கேடுஇல்லை நட்டபின்
வீடுஇல்லை நட்புஆள் பவர்க்கு. 791

[ப-ரை] நட்பு - நட்பினை, ஆள்பவர்க்கு - விரும்பி அந்த நட்பில் இருப்பவர்களுக்கு, நட்ட - நட்பினைச் செய்த, பின் - பின்னே, வீடு இல்லை - விடுதல் என்பது உண்டாகாது, [ஆதலால்] நாடாது - ஆராய்ந்தறியாமல், நட்டலில் - நட்பு செய்வதைப் போல, கேடு இல்லை - தீமை தருவது வேறு எதுவும் இல்லையாகும்.

[க-ரை] நட்பினை விரும்பி ஒருவரோடு நட்புச் செய்த பின் அந்த நட்பினை விட்டுவிடுதல் என்பது உண்டாகாது. ஆதலால் ஆராயாமல் நட்புச் செய்தல் போலக் கேடு தருவது பிறிதொன்றுமில்லை.

2. ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும். 792

[ப-ரை] ஆய்ந்து ஆய்ந்து - பலகாலும் பலமுறையிலும் ஆராய்ந்து, கேண்மை - நட்பினை, கொள்ளாதான் - செய்து கொள்ளாதவன், கடைமுறை - கடைசியில், தான் - [பகைவர் செய்யாமல்] தானே, சாம் துயரம் - சாவதற்குக்

காரணமான துன்பத்தினை, தரும் - உண்டாக்கிக் கொள்ளுபவனாவான்.

[க-ரை] குணம் செய்கை முதலியவற்றைப் பலகாலும் பலவாற்றாலும் ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவன் முடிவில் தான் சாதற்குக் காரணமான துன்பத்தினைத் தானே உண்டாக்கிக் கொள்ளுவான்.

3. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு. 793

[ப-ரை] குணனும் - குணத்தினையும், குடிமையும் - குடிப்பிறப்பினையும், குற்றமும்-குற்றத்தினையும், குன்றா - குறைவில்லாத, இனனும் - சுற்றத்தினையும், அறிந்து - ஆராய்ந்தறிந்து, [பின்பு] நட்புயாக்க - நட்பினைச் செய்து கொள்ளுவானாக.

[க-ரை] ஒருவனுடைய குணத்தினையும், குடிப்பிறப்பினையும், குற்றத்தினையும், குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்தறிந்து அவனோடு நட்புச் செய்தல் வேண்டும்.

4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. 794

[ப-ரை] குடி - நல்லோர் குடியில், பிறந்து - பிறந்திருந்து, தன்கண் - தனக்குண்டாகும், பழி - பிறர் கூறும் பழிச் சொல்லுக்கு, நாணுவானை - நாணமுறுபவனை, கொடுத்தும் - வேண்டுவன சில கொடுத்தாகிலும், நட்பு - அவனுடைய நட்பினை, கொளல் - செய்து கொள்ளுதல், வேண்டும் - வேண்டும் என்பதாகும்.

[க-ரை] உயர்ந்த குடியின்கண் பிறந்து உலகோர் சொல்லும் பழிக்கு அஞ்சுபவனைச் சில கொடுத்தாயினும் நட்பு கொள்ளுதல் சிறந்ததாகும்.

5. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல். 795

[ப-ரை] அல்லது - தகாதவற்றைச் செய்யப் புகுந்தால் அழ - வருத்தம் உண்டாகும் அளவுக்கு, சொல்லி - சொல்லி

யும், இடித்து - செய்தக்கால் நெருக்கியும், வழக்கு - உலக நடைமுறையினைச் செய்யாத போது, அறியவல்லார் - அறிந்து செய்விக்கும்படியும் ஆக்க வல்லவரை, ஆராய்ந்து - நன்கு ஆராய்ந்தறிந்து, நட்புக்கொளல் - நட்பாகக் கொள்ளுதல் வேண்டும்.

[க-ரை] தான் தகாதது செய்யப் புகுந்தால் வருத்தம் உண்டாகுமாறு சொல்லி விலக்கியும், செய்தக்கால் பின்னும் செய்யாமல் நெருக்கியும், செய்ய வேண்டியதைச் செய்யத் தவறினால் செய்யுமாறு ஆக்க வல்லவர்களை ஆராய்ந்து நட்பினைச் செய்தல் வேண்டும்.

6. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல். 796

[ப-ரை] கிளைஞரை - நண்பர்கள் என்னும் நிலங்களை, நீட்டி அளப்பது - குறைவு இல்லாமல் அளக்கின்ற, ஓர்-ஒரு, கோல் - அளவுகோல் [எதுவென்றால்] ஒருவனுக்கு நேரிடும் கெடுதியேயாகும், [ஆதலால்] கேட்டினும் - அக் கெடுதியிலும், ஓர் உறுதி - தெரிந்து கொள்ளுகின்ற ஓர் நல்ல அறிவு, உண்டு - உண்டு என்பதாகும்.

[க-ரை] ஒருவனுக்குக் கெடுதி உண்டானால் அக் கெடுதியானது தனது நண்பர்களை உறுதியாக அளந்து பார்க்கும் கோலாகும். ஆதலால் அக்கெடுதியிலும் தெரிந்து கொள்ளுவதொரு நல்லறிவு உண்டு.

7. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். 797

[ப-ரை] ஒருவற்கு - ஒருவனுக்கு, ஊதியம் - நன்மை, [இலாபம்] என்பது - என்று சொல்லப்படுவது, [யாதென்றால்] பேதையார் - அறிவற்றவர்களது, கேண்மை - நட்பினை, ஒரீஇவிடல் - ஒழித்து நீங்கி விடுவதாகும்.

[க-ரை] ஒருவனுக்கு ஊதியம் என்பது யாதென்றால் அறிவில்லாதவருடன் கொண்ட நட்பினை ஒழித்து நீங்கி விடுவதாகும்.

8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு. 798

[ப-ரை] உள்ளம் - தனது ஊக்கமானது, சிறுகுவ - சுருங்கி விடுவதற்கான செயல்களை, உள்ளற்க - மனத்தில் செய்ய நினையாதிருப்பானாக, அல்லற்கண் - தனக்கு ஒரு துன்பம் வந்த காலத்தில் ஆற்றறுப்பார், நட்பு - கைவிட்டு விடுபவரது நட்பினை, கொள்ளற்க - கொள்ளாதிருப்பானாக.

[க-ரை] தன்னுடைய ஊக்கம் சுருங்குவதற்குக் காரணமான செயல்களைச் செய்ய நினையாதிருத்தல் வேண்டும். அதுபோல, தனக்கு ஒரு துன்பம் வந்தபோது கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். 799

[ப-ரை] கெடுங்காலை - ஒருவன் கெடுகின்ற காலத்தில், கைவிடுவார் கேண்மை - அவனைவிட்டு நீங்கிவிடுபவர் நட்பினை, அடுங்காலை - கூற்றுவன் உயிர் கொள்ளும் காலத்தில், உள்ளினும் - நினைத்தாலும், உள்ளம் சுடும் - மனத்தினைச் சுட்டுவிடும்.

[க-ரை] ஒருவன் கெட்டுப்போகும் காலத்தில் அவனை விட்டு நீங்குபவர்களிடம் செய்துகொண்ட நட்பினை, தன்னிடம் கூற்றுவன் வருகின்ற காலத்தில் நினைத்தாலும் அந்த நினைப்பு உள்ளத்தினைச் சுடும்.

10. மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 800

[ப-ரை] மாசு - குற்றம், அற்றார் - இல்லாதவரது, கேண்மை - நட்பினையே, மருவுக - தழுவிக் கொள்ளுவா

னாக, ஒப்பு - உலகத்தோடு ஒத்து வாழ்தல், இலார் - இல்லாதவர்களுடைய, நட்பு - நட்பினை, ஒன்று ஈத்தும் - அவன் வேண்டிய ஒன்றினைக் கொடுத்தாகிலும், ஒருவுக - விட்டுவிடுவாயாக.

[க-ரை] உலகத்தோடு ஒத்து வாழ்கின்ற குற்றமில்லாதவர்களுடைய நட்பினையே செய்தல் வேண்டும். உலகத்தோடு பொருந்துதல் இல்லாதவரது நட்பினை அவர் வேண்டிய தொன்றனைக் கொடுத்தாயினும் விட்டு விலகுதல் வேண்டும்.

## 81. பழைமை

1. பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 801

[ப-ரை] பழைமை - பழைமை, எனப்படுவது - என்று சொலலப்படுவது, யாது - எது, எனின் - என்று வினவின், கிழமையை - பழைய நண்பர்கள் உரிமையால் செய்தவைகளை, யாதும் - சிறிதளவுகூட, கீழ்ந்திடா - விலக்காமல் ஏற்றுக் கொள்ளும், நட்பு - நட்பாகும்.

[க-ரை] பழைமை என்று சொல்லப்படுவது யாது என்றால் பழைய நண்பர்கள் உரிமையால் செய்தவைகளைச் சிறிதேனும் நீக்காமல் அப்படியே உடன்படும் நட்பாகும்.

2. நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு
உப்பாதல் சான்றோர் கடன். 802

[ப-ரை] நட்பிற்கு - நட்பினுக்கு, உறுப்பு - உறுப்பானவை எவையென்றால், கெழுதகைமை - நண்பர்கள் உரிமையால் செய்வனவாகும், அதற்கு - அந்த உரிமைக்கு,

உப்பாதல் - உடன்பட்டு இனியவராதல், சான்றோர் கடன்-நிறை குணம் செறிந்த பெரியோர்களுக்கு முறையான கடமையாகும்.

[க-ரை] நட்பினுக்கு உறுப்புக்களானவை யாவை என்றால் நண்பர்கள் உரிமையால் செய்வனவேயாகும். அந்த உரிமைக்கு உடன்பட்டு இனியவராதல் பெரியோர் களுக்கு முறையான கடமையாகும்.

3. பழகிய நட்பு எவன்செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை. 803

[ப-ரை] கெழுதகைமை - நண்பர்கள் உரிமை கொண்டு செய்தவைகளுக்கு, செய்தாங்கு - தாமே செய்தாற்போல, அமையாக்கடை - உடன்பட்டு இராவிட்டால், பழகிய நட்பு - பழையதாய் வந்த நட்பு, எவன் செய்யும் - என்ன பயனைச் செய்யும்.

[க-ரை] நட்பினர் உரிமையால் செய்தவைகளைத் தாமே செய்ததுபோல உடன்படாராயின் பழமையால் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும்?

4. விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையான்
கேளாது நட்டார் செயின். 804

[ப-ரை] நட்டார் - நண்பர்கள், கெழுதகையான் - பழகிய உரிமையால், கேளாது செயின் - தம்மைக் கேளாமலேயே தமது செயலினைச் செய்து விடுவாரானால், விழை- அச்செயல் விரும்பப்படும், தகையான் - தன்மையுடைய தாதலால், வேண்டியிருப்பர் - அறிவுடைய நண்பர்கள் அதற்கு உடன்பட்டு விரும்பி இருப்பார்கள்

[க-ரை] நண்பர்கள் பழகிய உரிமையால் தம்மைக் கேளாமலேயே தமது காரியத்தைச் செய்வாராயின் அச் செயல் விரும்பப்படும் தன்மையுடையதாதலால் நண்பர்கள் அதற்கு உடன்பட்டு விரும்பி இருப்பார்கள்.

5. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின். 805

[ப-ரை] நோதக்க - நாம் வருந்தக் கூடியவைகளை, நட்டார் செயின் - நண்பர்கள் செய்தால் [அதற்குக் காரணம்] பேதைமை யொன்றோ ஒன்று அறியாமையினால் இருத்தல் வேண்டும், [அல்லது] பெருங்கிழமை - மிகுந்த உரிமையாய் வேண்டும், என்று உணர்க - என்பதாக அறிந்து கொள்ள வேண்டும்.

[க-ரை] நண்பர்கள் நாம் வெறுக்கத்தக்கனவற்றைச் செய்வாரானால் அதற்குக் காரணம் ஒன்று அறியாமையாக இருக்க வேண்டும்; அல்லது மிகுதியான உரிமையினால் இருத்தல் வேண்டும்.

6. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 806

[ப-ரை] எல்லைக்கண் - நட்பு என்பதன் வரம்புக்குள், நின்றார் - நின்றவர்கள், தொல்லைக்கண் - தம்முடன் பழைமையில், நின்றார் - மாறாமல் நின்றவரது, தொடர்பு - நட்பினை, தொலைவிடத்தும் - அவரால் கேடு வந்த காலத்திலும், துறவார் - விடமாட்டார்கள்.

[க-ரை] நட்பு ஆகிய வரம்பினைத் தாண்டாமல் அதன் கண்ணே நின்றவர்கள், தம்முடன் பழைமையான தன்மையில் மாறாமல் வந்தவரது நட்பினை அவரால் கெடுதிவந்த போதும் விடமாட்டார்கள்.

7. அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 807

[ப-ரை] அன்பின் - அன்பு கொண்டு, வழி - பழைமையாய், வந்த - வந்த, கேண்மையவர் - நட்பினைக் கொண்டவர்கள், அழிவந்த - நட்பு செய்தவர் அழிவுக்குக் காரணமானவைகளை, செய்யினும் - தமக்குச் செய்தாரேயானா

லும், அன்பு - அவரிடம் கொண்ட அன்பிலிருந்து, அறார் - நீங்கமாட்டார்கள்.

[க-ரை] பழைமையாய் வந்த நட்பினை உடையவர்கள் தமக்கு அழிவு வருவனவற்றை நண்பர்கள் செய்தாலும் அவர்களிடம் கொண்டுள்ள அன்பிலிருந்து நீங்க மாட்டார்கள்.

**8. கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு**
**நாள்இழுக்கம் நட்டார் செயின்.** 808

[ப-ரை] கேள் - நண்பர்கள் செய்த, இழுக்கம் - குற்றத்தினை, கேளா - தாமேயன்றிப் பிறர் சொன்னாலும் கேளாத, கெழுதகைமை - உரிமையினை, வல்லார்க்கு - அறிய வல்லவரான நண்பர்களுக்கு, நட்டார் - அந்த நண்பர்கள், இழுக்கம் செயின் குற்றத்தினைச் செய்வாரானால், நாள் - அந்த நாள் பயன்பட்ட நாளாகக் கருதப்படும்.

[க-ரை] நண்பர்கள் செய்த பிழையினைத் தாமேயல்லாமல் பிறர் சொன்னாலும் கொள்ளாத உரிமையறிய வல்லவர்களுக்கு அந்த நண்பர்கள் பிழை செய்த நாள் பயன் பட்ட நாளாகும்.

**9. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**
**விடாஅர் விழையும் உலகு.** 809

[ப-ரை] கெடாஅ - உரிமையானது கெட்டு விடாமல், வழி - பழையதாய், வந்த - வந்ததான, கேண்மையார் - நட்புள்ளவரது, கேண்மை - நட்பினை, விடாஅர் - குற்றம் கருதி விடாதவரை, உலகு விழையும் - உலகமானது நட்பினைக் கருதி விரும்புவதாகும்.

[க-ரை] உரிமை அற்றுப்போகாமல் பழையதாய் வந்த நட்புடையவரது, நட்பினை அவர் பிழை நோக்கியும் விடாதிருப்பவர்களை உலகம் அந்த நட்புக் குறித்து விரும்பும்.

10. விழையார் விழையப் படுப பழையார் கண்
பண்பின் தலைப்பிரியா தார். 810

[ப-ரை] பழையார் கண் - பழமையாய் வந்த நண்பர்கள், [குற்றம் செய்தாலும்] பண்பின் - நற்குணத்தில் [எப்போதும்] தலைப்பிரியாதார் - நீங்காதவர்கள், விழையார் - பகைவர்களாலும், விழையப்படுப - விரும்பப் படுவார்கள்.

[க-ரை] பழமையாய் வந்த நண்பர்கள் பிழை செய்தாலும் தம் பண்பினால் அவர்களை விட்டு நீங்காதவர்கள், பகைவர்களாலும் விரும்பப்படுவார்கள்.

## 82. தீ நட்பு

[தீய குணமுடையவர்களுடைய நட்பு]

1. பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது. 811

[ப-ரை] பருகுவார் - ஆவல் மிகுதியால் பருகுபவர், போலினும் - போன்றாராயினும், பண்பு - நற்குணம், இலார் - இல்லாதவருடைய, கேண்மை - நட்பு, பெருகலின் - வளர்வதைவிட, குன்றல் இனிது - தேய்தல் நல்லதாகும்.

[க-ரை] அன்பு மிகுதியால் நீரைப் பருகுவது போலப் பழகினாலும் தீய குணமுடையவர்களின் நட்பு வளர்வதை விடத் தேய்வதே நல்லதாகும்.

2. உறின்நட்டு அறின்ஒருஉம் ஒப்புஇலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என். 812

[ப-ரை] உறின் - பயனுள்ள போது நட்பினைச் செய்து, அறின் - பயனில்லாதபோது, ஒருஉம் - நீங்கி

விடுகின்ற, ஒப்பிலார் - பழகுவதற்குப் பொருத்தமில்லாதவருடைய, கேண்மை - நட்பினை, பெறினும் இழப்பினும் - பெற்றாலும் அல்லது இழந்தாலும், என் — என்ன பயன்?

[க-ரை] தமக்குப் பயன் உள்ளவரைக்கும் நட்பினைச் செய்து பயனில்லாதபோது நீங்கிவிடும் தீயவர்களின் நட்பினைப் பெற்றிருந்தால்தான் என்ன பயன்? இழந்தால் தான் என்ன பயன்?

3. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். 813

[ப-ரை] உறுவது - நட்பினைக் கருதாமல் வருகின்ற பயனை, சீர்தூக்கும் - அளவு கண்டு பார்க்கும், நட்பும் - நட்பினரும், பெறுவது - பெறுகின்ற பொருளை, கொள்வாரும் - கருதுகின்ற பொது மகளிரும், கள்வரும் - பிறர் கேட்டினைக் கருதாத கள்வர்களும், நேர் - ஒரே தன்மையினராவார்கள்.

[க-ரை] நட்பினைக் கருதாமல் நட்பினால் வரும் பயனைக் கருதுவோரும், கொடுப்பாரைக் கருதாமல் பணத்தின் அளவைக் காணும் பொது மகளிரும், பிறர் கேடு நோக்காமல் அவரது சோர்வினைப் பார்க்கும் கள்வரும் ஒரே தன்மையராவர்.

4. அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. 814

[ப-ரை] அமரகத்து - போர் வந்தபோது போர்க்களத்தில், ஆற்று அறுக்கும் - வீழ்த்தி விட்டுப் போகும், கல்லாத - கல்வியில்லாத குதிரை, அன்னார் - போன்றவர்கள் தமரின் - உற்றார் போன்றிருக்கும் நட்பின் தன்மையினை விட, தனிமை தலை - தனிமையாக இருப்பதே பெருமையுடையதாகும்.

[க-ரை] முன்பெல்லாம் தாங்கிக் கொண்டிருந்து போர்க்களத்தில் வீழ்த்தி விட்டுப் போகும் கல்லாத

குதிரையைப் போன்றவர்களுடைய நட்பினை விடத் தனிமையாக இருப்பதே சிறப்பு உடையதாகும்.

5. செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. 815

[ப-ரை] செய்து - நன்மையினைச் செய்து வைத்தாலும், ஏமம் - பாதுகாப்பு, சாரா - ஆகாத, சிறியவர் - கீழ்மையானவர், புன் கேண்மை - தீய நட்பானது, எய்தலின் - உண்டாவதைவிட, எய்தாமை நன்று - உண்டாகாமல் இருப்பதே நல்லதாகும்.

[க-ரை] நன்மை நிற்குமாறு செய்து வைத்தாலும், பாதுகாப்பு ஆகாத கீழ்மையானவர்களின் தீய நட்பானது உண்டாவதைவிட உண்டாகாமல் இருப்பதே நல்லதாகும்.

6. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும். 816

[ப-ரை] பேதை - அறிவில்லாதவர்களுடைய, பெரும் - மிகவும், கெழீஇ - செறிந்த, நட்பின் - நட்பினைக் காட்டிலும், அறிவுடையார் - அறிவுடையவர்களுடைய, ஏதின்மை - பகைமையானது, கோடி - கோடி மடங்கு, உறும் - நல்லதேயாகும்.

[க-ரை] அறிவில்லாத பேதையினுடைய மிக நெருங்கிய நட்பினைவிட அறிவுடையவர்களது பகைமை கோடி மடங்கு நல்லதாகும்.

7. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும். 817

[ப-ரை] நகை - நகைத்துக் கொண்டு மட்டும் இருக்கும், வகையர் - வகையினர், ஆகிய - ஆனவர், நட்பின் - நட்பினால், [வரும் இன்பத்தைவிட] பகைவரால் - பகைவர்களால், [வரும் துன்பங்கள்] பத்தடுத்தக் கோடி-பத்துக் கோடி மடங்கு, உறும் - நல்லவையாக இருக்கும்.

[க-ரை] அறிய வேண்டியதை அறியாமல் எப்போதும் நகைத்துக் கொண்டு மட்டும் இருக்கின்ற நட்பினால் வருவதைவிடப் பகைவரால் வருவது பத்துக் கோடி மடங்கு நல்லதாகும்.

8. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 818

[ப-ரை] ஒல்லும் - தம்மால் முடியக்கூடிய, கருமம் - செயலினையும், உடற்றுபவர் - முடியாததென்று இருப்பவர்களுடன் கொண்ட, கேண்மை - நட்பினை, சொல்லாடார் - அவருக்குத் தெரிவித்துச் சொல்லாமலேயே, சோர - விடுவது தெரியாமலேயே, விடல் - நட்பினை விட்டு விடுதல் வேண்டும்.

[க-ரை] தம்மால் செய்து முடிக்கக் கூடிய செயல்களையும் முடியாதென்று இருப்பவர்களுடன் கொண்ட நட்பினைக் கண்டால் சொல்லாமலேயே கைவிடுதல் வேண்டும்.

9. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 819

[ப-ரை] வினை - செய்யும் செயல், வேறு - வேறாகவும், சொல் - பேசும்சொல், வேறு - வேறாகவும், பட்டார் - இருப்பவருடைய, தொடர்பு - நட்பானது, கனவிலும் - கனவிலும் கூட, இன்னாது - துன்பத்தினைத் தருவதாகும்.

[க-ரை] செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் இருப்பவர்களுடைய நட்பானது கனவில்கூடத் துன்பத்தினைத் தருவதாகும்.

10. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு. 820

[ப-ரை] மனை - மனையில் இருக்கும்போது, கெழீஇ - நெருங்கிப் பழகி, மன்றில் பழிப்பார் - பலர் இருக்கும்

மன்றத்தில் பழித்துப் பேசுபவருடைய, தொடர்பு - நட்பினை, எனைத்தும் - எவ்வளவு சிறிதேயானாலும், குறுகுதல் - தம்முடன் நெருங்குவதை, ஓம்பல் - விலக்குதல் வேண்டும்.

[க-ரை] தனித்து வீட்டிலிருக்கும்போது நெருங்கிய நட்புடன் பழகி, பலர் கூடியிருக்கும் மன்றத்தில் பழித்துப் பேசுவோர் நட்புச் சிறிதளவேனும் தம்மைச் சாராமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

## 83. கூடா நட்பு

[மனத்தால் கூடாமல் இருக்கும் பகைவர் நட்பு]

1. சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 821

[ப-ரை] நேரா மனத்தால் கூடாதிருந்தே, நிரந்தவர் - [தீமை செய்ய வாய்ப்புக் கிட்டும் வரையில்] புறத்தே நண்பர்கள் போல இருப்பவரது, நட்பு - நட்பு, சீரிடம் காணின் - [கெடுதி செய்ய] வாய்க்குமிடத்தினைக் கண்டதும், எறிதற்கு - எறிதற்கு [நசுக்குதற்கு]த் துணையாக, பட்டடை - பட்டடை என்பதாகும்.

[க-ரை] மனத்தால் கூடாதிருந்து தீமையினைச் செய்வதற்குத் தக்க நேரம் வரும் வரையில் நட்பினர் போலப் பழகும் நட்பு, வாய்க்குமிடம் கண்டால் நன்றாக எறிதற்குத் துணையான பட்டடை போன்றதாகும்.

2. இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 822

[ப-ரை] இனம் - நமக்கு உற்ற இனத்தவர், போன்று - போல, இனம் - நமக்கு உற்றவர், அல்லார் - அல்லாத

வருடைய, கேண்மை - நட்பு [இடம் பெற்றால்] மகளிர் - பெண் பாலாருடைய, மனம் போல - மனத்தினைப் போல, வேறுபடும் - வேறுபட்டு விடுவதாகும்.

[க-ரை] உற்றார் போன்று காட்டித் தமக்கு இனமல்லாதவர்களுடைய நட்பு இடம் பெற்றால் பெண்பாலாருடைய மனம்போல வேறுபடும்.

3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது. 823

[ப-ரை] நல்லபல - நல்லனமாகிய பற்பல நூல்களை, கற்றக் கடைத்தும் - கற்றிருந்தாலும், மனம் - மனம், நல்லர் - திருந்தி நல்லவர், ஆகுதல் - ஆகுதல், மாணார்க்கு - பகைவக்கு, அரிது - முடியாததாகும்.

[க-ரை] நல்லனவாகிய பல நூல்களைக் கற்றறிந்த போதும், பகைமை உள்ளம் படைத்தவர்களுக்கு அவைகளினால் மனந் திருந்தி நட்பாதல் இல்லை.

4. முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும். 824

[ப-ரை] முகத்தின் - முகத்தினால் மட்டும், இனிய - இனிமையாக, நகாஅ - நகைத்து, அகத்து - நெஞ்சினில், இன்னா - பகைமை கொண்ட, வஞ்சரை அஞ்சப் படும் - வஞ்சகர்களைக் கண்டு பயப்படுதல் வேண்டும்.

[க-ரை] கண்ட பொழுது முகத்தால் இனிதாகச் சிரித்து எப்போதும் மனத்தால் தீயவர்களான வஞ்சகர்களைப் பார்த்து நாம் அஞ்சுதல் வேண்டும்.

5. மனத்தின் அமையாதவரை எனைத் தொன்றும்
சொல்லினால் தேறல்பாற் றன்று. 825

[ப-ரை] மனத்தின் அமையாதவரை - மனத்தினால் தம்முடன் பொருந்துதல் இல்லாதவர்களை, எனைத்

தோன்றும் - எந்த விதமான செயலிலும், சொல்லால் - சொற்களினால், தேறல்பாற்று - தெரிந்து புரிந்து கொள்ளும் முறையானது, அன்று - கூடாததாகும்.

[க-ரை] மனத்தினால் தம்முடன் பொருந்துதல் இல்லாதவர்களை எவ்விதமான செயலிலும் சொல்லினால் தெரிந்து கொள்ளும் முறையானது கூடாது என்பதாம்.

6. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். 826

[ப-ரை] நட்டார் போல் - நண்பர்களைப் போல, நல்லவை சொல்லினும் - நன்மை பயக்கும் சொற்களையே சொன்னாரேயானாலும், ஒட்டார் - பகைவர்களுடைய, சொல் - சொற்கள், ஒல்லை - விரைவில், உணரப்படும் - அறிந்து தெரிந்து கொள்ளப்படும்.

[க-ரை] நண்பர்கள் போல நன்மை பயக்கும் சொற்களைச் சொன்னாலும் பகைவர்களுடைய சொற்கள் சொல்லிய அப்பொழுதே அறிந்து கொள்ளப்படும்.

7. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 827

[ப-ரை] வில் - வில்லினது, வணக்கம் - வளையும் தன்மையானது, தீமை - தீமையுண்டாக்குவதை, குறித்தமையான் - குறிப்பதானபடியால், ஒன்னார்கண் - பகைவரிடத்தில் [காணப்படும்] சொல் - சொற்களையுடைய, வணக்கம் - வணக்கத்தினையும், கொள்ளற்க - நல்லதென்று கொள்ளாதிருத்தல் வேண்டும்.

[க-ரை] வில் வளைகின்ற வணக்கமானது தீமை செய்ததைக் குறித்தமையால் பகைவர்களிடம் உண்டாகின்ற சொற்களின் வணக்கத்தினையும் தீமையுண்டாக்குவதாகவும் கொள்ளுதல் வேண்டும்.

8. தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. 828

[ப-ரை] ஒன்னார் - பகைவர்கள், தொழுத - தொழுது வணங்குகின்ற, கையுள்ளும் - கையினுள்ளும், படை - படைக்கருவி, ஒடுங்கும் - மறைந்திருப்பதாகும், அழுத - அவர்கள் அழுத, கண்ணீரும் - கண்ணீரும் அனைத்து - அவ்வாறு அது மறைந்திருப்பதற்கு இடமானதாகும்.

[க-ரை] பகைவர்கள் தொழுத கையினுள்ளும் படைக்கலம் மறைந்திருக்கும். அப்பகைவர் அழுத கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருப்பதற்கு இடமானதாகும்.

9. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று. 829

[ப-ரை] மிக - புறத்தில் மட்டும் நட்பினை மிகுதியாக, செய்து - செய்து காட்டி, தம் எள்ளுவாரை - உள்ளத்தில் தம்மை இகழ்கின்ற பகைவர்களை, நட்பினுள் - நாமும் அவர் போலவே நட்புறவில் இருந்து, நக - புறத்தில் அவர் மகிழுமாறு, செய்து - செய்து, சாப்புல்லற்பாற்று - உள்ளுக்குள் அந்த நட்பு சாகும்படிச் செய்தல் வேண்டும்.

[க-ரை] பகைமையுள்ள மனம் தெரியாதபடி வெளிப்புறத்திலே நட்பினை மிகுதியாகச் செய்துகாட்டி, உள்ளத்தில் தம்மை இகழும் பகைவரை, தாமும் அவர் போலவே நட்பினைச் செய்து அந்நட்பு சாகுமாறு செய்தல் வேண்டும்.

10. பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல். 830

[ப-ரை] பகை - பகைவர்கள், நட்பு - தம்மிடம் நண்பராக, ஆம் - நடந்து கொள்ளுகின்ற, காலம் -

காலம், வருங்கால் - வந்தபோது, முகம்நட்டு - அவர்களுடன் முகத்தினால் மட்டும் நட்பினைச் செய்து, அகம் - மனத்தினால், நட்பு - அவர்கள் நட்பினை, ஒரீஇ - நீக்கி, விடல் - முற்றிலும் விட்டு விடுதல் வேண்டும்.

[க-ரை] பகைவர்கள் தம்மிடம் நண்பராக நடந்து கொள்ளுகின்ற காலம் வந்தபோது அவர்களுடன் முகத்தினால் மட்டும் நட்பினைச் செய்து மனத்தினால் அவர்கள் நட்பினைத் தவிர்த்தல் வேண்டும்.

## 84. பேதைமை

### [அறிவிலிகளின் அறியாமைக் குணம்]

1. பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல். 831

[ப-ரை] பேதைமை - அறியாத்தன்மை, என்பது - என்பது, ஒன்று - ஏனைய குற்றங்களைவிட மிக்கது ஒன்று, யாது - அது எது, எனின் - என்று கேட்டால், ஏதங்கொண்டு - தமக்குத் தீங்கு உண்டாக்குவதை மேற்கொண்டு, ஊதியம் - ஆக்கம் தருகின்றவைகளை, போகவிடல் - விட்டு விடுவதாகும்.

[க-ரை] பேதைமை என்று சொல்லப்படுவது எல்லாக் குற்றங்களிலும் மிக்கதாகும். அது யாதென்று கேட்டால், தமக்குக் கெடுதி உண்டாக்குவதைக் கைக்கொண்டு ஆக்கம் தருவதை விட்டு விடுவதாகும்.

2. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல். 832

[ப-ரை] பேதைமையுள் - பேதைமைகளுக்குள், எல்லாம் - எல்லாம், பேதைமை - மிக்கதான பேதைமை,

என்னவென்றால், கையல்லதன்கண் - தன்னால் முடியாத பணிகளில், காதன்மை - மிக்க விருப்பத்தினை, செயல் - கொண்டு செய்தலாகும்.

[க-ரை] பேதைமைகளுக்கெல்லாம் மிகுந்த பேதைமை என்னவென்றால், தன்னால் முடியாத செயல்களில் மிக்க விருப்பத்தினைக் கொண்டு செய்தலாகும்.

**3. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.** 833

[ப-ரை] நாணாமை - எதற்கும் வெட்கப்படாமையும் நாடாமை - விரும்ப வேண்டியவற்றை விரும்பாமையும் நார் - அன்பு, இன்மை - இல்லாமையும், யாதொன்றும் நல்லன எதையும், பேணாமை - பேணிப் போற்றாமையும், பேதை - பேதை எனப்படும் மூடனது, தொழில் - தொழில் களாகும்.

[க-ரை] நாண வேண்டுவனவற்றிற்கு நாணம் கொள் ளாமையும், நாட வேண்டுவனவற்றை நாடாமையும், யாவரிடத்தும் அன்பில்லாமையும், விரும்பாமையும் பேதைமையினுடைய தொழில்களாகும்.

**4. ஓதிஉணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.** 834

[ப-ரை] ஓதி -"நல்ல நூல்களைக் கற்றும், உணர்ந்தும்" அவைகளின் பயன்களை உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியும், தான் - தான் மட்டும், அடங்கா - முறையாக அடங்கி ஒழுகாத, பேதையின் - பேதையினைப் போல, பேதையார் இல் - அறிவிலிகள் இல்லையாம்.

[க-ரை] நல்ல நூல்களைச் கற்றிருந்தும் அதன் பொருளினை உணர்ந்திருந்தும் மற்றவர்களுக்கு எடுத்துக்

கூறியும் தான் அடங்கி நடக்காத பேதையைப் போல பேதையார் உலகத்தில் இல்லை.

5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு. 835

[ப-ரை] பேதை - அறிவற்ற பேதை, எழுமையும் - வருகின்ற எல்லாப் பிறவிகளிலும், தான்புக்கு - தான் புகுந்து, அழுந்தும் - துய்க்கின்றவற்றிற்கு இடமான அளறு - துன்பம் என்னும் நரகத்தினை, ஒருமை - இந்த ஒரு பிறவியிலேயே, செயலாற்றும் - செய்து கொள்கின்றவனாவான்.

[க-ரை] பேதையானவன் வருகின்ற பிறவிகளில் எல்லாம் தான் புகுந்து துய்க்கின்ற துன்பத்தினை இந்த ஒரு பிறவியிலேயே செய்து கொள்ளுவான்.

6. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். 836

[ப-ரை] கையறியா - செயலினைச் செய்யும் முறை தெரியாத, பேதை - பேதையானவன், வினை - தொழிலொன்றினை, மேற்கொளின் - மேற்கொண்டால், பொய்படும் - அத்தொழிலும் கெட்டுவிடும், ஒன்றோ - அது மட்டுமல்ல, புனை - தளையினை, பூணும்-பூணுகின்ற நிலையும் அடைவான்.

[க-ரை] செய்யும் முறையறியாத பேதை ஒரு காரியத்தை மேற்கொண்டால் அக்காரியமும் கெடும்; அவனும் தானே தளை பூணுகின்ற நிலைமையினையும் அடைவான்.

7. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 837

[ப-ரை] பேதை - பேதையானவன், பெரும் - மிகுந்த செல்வம் - செல்வத்தினை, உற்றக் கடை - பெற்றிருப்பானானால், ஏதிலார் - எவ்வித தொடர்பும் இல்லாதவர்கள்,

ஆர - பயன் நிறையப் பெற, தமர் பசிப்பர் - தொடர்புள்ள சுற்றத்தார் பசித்திருப்பார்கள்.

[க-ரை] பேதையானவன் பெரிய செல்வத்தினைப் பெற்றுவிட்டால் தன்னோடு யாதொரு தொடர்பும் இல்லாதவர்கள் பயனடைவார்கள். எல்லாத் தொடர்பும் கொண்ட சுற்றத்தார் பசித்திருப்பர்.

**8. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்**
**கைஒன்று உடைமை பெறின்.** 388

[ப-ரை] பேதை - அறிவில்லாத பேதை, தன்கையில் - தனது கையில், ஒன்று - ஒன்றினை, உடைமை - உடைமையாக, பெறின்-பெற்றால் [அது], மையல் - பித்துப் பிடித்த, ஒருவன் - ஒருவன், களித்தற்று - மதுவினை உண்டது போன்றதாகும்.

[க-ரை] தன்னிடம் ஒன்றை உடையனாகப் பெற்றிருக்கும் பேதையானவன் மயக்கம் அடைவது எப்படிப்பட்டதென்றால், முன்னேயே பித்துப் பிடித்தவன் மதுவுண்டு மயங்குவது போன்றதாகும்.

**9. பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்**
**பீழை தருவதுஒன்று இல்.** 839

[ப-ரை] பிரிவின்கண் - பிரியும் நேரம் வந்தபோது, தருவது - உண்டாவதாகிய, பீழை :- துன்பம், ஒன்று - என்பதொன்று, இல் - இல்லையாதலினால், பேதையார் - அம்மூடரது, கேண்மை - நட்பு, பெரிது - மிகவும், இனிது - இனிமையானதாகும்.

[க-ரை] பிரிந்து போகின்ற காலம் வரும்போது துன்பம் தருவது ஒன்றும் இல்லையாதலால் பேதையானவர்களுடன் நட்புக் கொள்ளுதல் மிகவும் இனிமையானதாகும்.

10. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். 840

[ப-ரை] சான்றோர் - மேலான சான்றோர்கள் இருக்கும், குழாஅத்து - அவையில், பேதைபுகல் - பேதையானவன் நுழைதல், கழாஅக்கால் - கழுவாத காலினை, பள்ளியில் - இன்பம் சுவைக்கும் அமளியின்மேல், வைத்தற்று - வைத்தது போன்றதாகும் [ஆல் - அசை]

[க-ரை] சான்றோர்கள் நிறைந்திருக்கும் அவையில் பேதையானவன் நுழைதல், இன்பம் தரும் அமளிக்கண் தூய்மை அல்லாதவற்றை மிதித்த காலினை வைத்தது போன்றதாகும்.

## 85. புல்லறிவாண்மை

[அற்ப அறிவுள்ளவன் தன்னைச் சிறந்த அறிஞனாக எண்ணி நடத்தல்]

1. அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு. 841

[ப-ரை] இன்மையுள் - இல்லாமை பலவற்றிலும், இன்மை - இல்லாமையென்பது என்னவென்றால், அறிவு - அறிவு, இன்மை - இல்லாமையேயாகும், பிறிது - மற்றவை, இன்மை - இல்லாமையினை, இன்மையா - அவ்வாறு இல்லாமையாக, உலகு - உலகத்தார், வையாது - கருத மாட்டார்கள்.

[க-ரை] ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க இல்லாமை அறிவில்லாமையேயாகும். மற்றைப் பொருளில்லாமையோ என்றால் அதனை இல்லாமையாக உலகத்தார் கொள்ள மாட்டார்கள்.

**2.** அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம். 842

[ப-ரை] *அறிவிலான் - புல்லறிவாளன், நெஞ்சு - மனம், உவந்து - களித்து, ஈதல் - பிறர்க்குக் கொடுப்பானே யானால், [அவ்வாறு கொடுப்பதற்கு காரணம்] பெறுவான் - அதனைப் பெறுகின்றவனுடைய, தவம் - நல்வினையே யாகும், பிறிது - வேறு, யாதும் - எந்தக் காரணமும், இல்லை - இல்லையென்பதாகும்.*

[க-ரை] *புல்லறிவாளனானவன் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுப்பானேயானால் அதற்குக் காரணம் பெறுகின்றவனுடைய நல்வினையே அல்லாமல் வேறொன்றுமில்லையாகும்.*

**3.** அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843

[ப-ரை] *அறிவிலார் - சிற்றறிவாளர்கள், தாம் - தமக்குத் தாமே, தம்மை - தங்களை, பீழிக்கும் - துன்புறுத்திக் கொள்ளும், பீழை - துன்பமானது, செறுவார்க்கும் - அவர்களின் பகைவர்க்கும், செய்தல் அரிது - செய்வதற்கு முடியாததாகும்.*

[க-ரை] *புல்லறிவுடையவர்கள் தமக்குத் தாமே உண்டாக்கிக் கொள்ளும் துன்பம், அவர்களுடைய பகைவர் களும் அவர்களுக்குச் செய்ய முடியாததாகும்.*

**4.** வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. 844

[ப-ரை] *வெண்மை - புல்லறிவுடைமை, எனப்படுவது - என்று சொல்லப்படுவது, யாது - எது, எனின் - என்று கேட்டால், ஒண்மை - நல்லறிவு, உடையம் யாம் - யாம் உடையோம், என்னும் - என்று தம்மைத் தாமே மதித்துக் கொள்ளும், செருக்கு - மயக்கமான எண்ணமாகும்.*

[க-ரை] புல்லறிவுடைமை என்பது யாது என்று கேட்டால், அது தம்மைத் தாமே 'யாம் நல்லறியுடையோம்' என்று நன்கு மதித்துக் கொள்ளும் மயக்கமேயாகும்.

5. கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற
வல்லதூஉம் ஐயம் தரும். 845

[ப-ரை] கல்லாத - தாம் கல்லாதவற்றையும், மேற்கொண்டு - கற்றவராக மேற்கொண்டு, ஒழுகல் - நடந்து கொள்ளுதல், கசடு - குற்றம், அற - நீங்க, வல்லதூஉம் - கற்றிருக்கும் நூலிருக்குமேயானால், [அதைப் பற்றியும்] ஐயம் தரும் - சந்தேகத்தினை மற்றவர்களுக்கு உண்டாக்கி விடும்.

[க-ரை] புல்லறியுடையவர்கள் தாம் கற்றறியாத நூல்களையும் கற்றவர்களாகச் சொல்லிக்கொண்டு நடத்தல், அவர்கள் குற்றமறக் கற்றதொரு நூலுண்டாயின், அதனிடத்தும் மற்றவர்களுக்கு ஐயத்தினை உண்டாக்கும்.

6. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி. 846

[ப-ரை] தம்வயின் - தம்மிடத்திலிருக்கும், குற்றம் - குற்றங் குறைகளை, மறையாவழி - நீக்காவிட்டால், அற்றம் - மறைக்க வேண்டிய உறுப்புக்களை, மறைத்தலோ - உடைகளினால் மறைத்து விட்டதாக எண்ணுவதும், புல் - கீழ்மையான, அறிவு - அறிவேயாகும்.

[க-ரை] புல்லறிவாளர்கள் தம்மிடத்தில் நிகழும் குற்றங்களை நீக்காவிட்டால், ஆடைகளினால் மறைக்க வேண்டிய உறுப்புக்களை மறைத்தலும் அற்ப அறிவேயாகும்.

7. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. 847

[ப-ரை] அரு-அரிய, மறை-மறை மொழிப் பொருளை, சோரும் - மனத்திற் கொள்ளாமல் விட்டு விடுகின்ற,

அறிவிலான் - புல்லறிவாளன், தானே தனக்கு - அவனே தனக்கு, பெரும்-மிகுந்த, இறை - துன்பத்தினை, செய்யும்-செய்து கொள்ளுவான்.

[க-ரை] பெறுதற்கரிய மறை மொழிப் பொருள்களைக் கற்றாலும், அதனை மனத்திற் கொள்ளாமல் போக்கும் புல்லறிவாளன், அறியாமையால் தனக்குத் தானே மிகுந்த வருத்தத்தினைச் செய்து கொள்ளுவான்.

8. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய். 848

[ப-ரை] ஏவவும் செய்கலான் - பிறர் சொன்னாலும் அறிந்து செய்யமாட்டான், தான் தேறான் - தானாகவும் தெரிந்து கொள்ள மாட்டான், அவ்வுயிர் போஒம் அளவும் - அவன் இறக்கும் காலம் வரை அக்குணம், ஓர்நோய் - ஓர் நோய் போல அவனிடம் இருக்கும்.

[க-ரை] புல்லறிவாளன் அறிவுடையவர்கள் சொல்லியபடியும் செய்யமாட்டான். தானாகவும் செய்வனவற்றை அறியான். அவன் உயிர் நீங்கும்வரை இது அவனுக்கு ஒரு நோயாகும்.

9. காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. 849

[ப-ரை] காணாதான் - புல்லறிவால் அறியமாட்டாதவனுக்கு, காட்டுவான் - அறிவிக்கச் செல்லும் ஒருவன், தான் - அறிந்ததான், காணான் - அறியாதவனாக முடிய நேரும், காணாதான் - அறியும் தன்மையில்லாத புல்லறிவாளன், தான் - அவன், கண்டவாறு - கண்டறிந்தபடியே, கண்டானாம் - அறிந்தவனென்று முடியும்.

[க-ரை] தன்னை எல்லாம் அறிந்தவனாக மதித்தலால் பிறர் அவனுக்கு அறிவிக்கப் புகுந்தால் அவனால் பழிக்கப்படுவதுடன் அப்படிச் சொல்லப் போனவன் ஒன்றும் அறியாதவனாக முடியும். இனி அறியும் தன்மை இல்லாத அவன் தான் அறிந்தபடியே அறிந்தவனாகச் செய்து கொள்ளுவான்.

10. உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். 850

[ப-ரை] உலகத்தார் - உலகத்தில் உயர்ந்த பெரியோர், உண்டு - உண்டு, என்பது - என்று சொல்லப் படுகின்ற ஒன்றினை, இல் - இல்லை, என்பான் - என்று சொல்லுகின்ற ஒருவன், வையத்து - இந்த உலகில், அலகையா - ஒரு பேயாக, வைக்கப்படும் - கருதப்படுவான்.

[க-ரை] உலகில் அறிந்தோர் பலரும் உண்டு என்பதைப் புல்லறிவாளன் இல்லையென்று சொல்லுவான். அவன் மகன் என்று கருதப்படான். உலகில் சொல்லப் படுவதோர் பேய் என்று கருதப்படுவான்.

## 86. இகல்

[பகைமை உள்ளத்தால் உண்டாகும் மனவேறுபாடு]

1. இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்புஇன்மை பாரிக்கும் நோய். 851

[ப-ரை] எல்லா - எல்லா, உயிர்க்கும் – உயிர்களுக்கும், பகல் – பிற உயிர்களோடு சேராமை, என்னும் - என்கின்ற, பண்பின்மை - தீமையான குணத்தினை. பாரிக்கும் - வளர்க்கின்ற, நோய் - குற்றமானது, இகல் - மாறுபாடு, என்ப - என்று நூல்வல்லார் கூறுவர்.

[க-ரை] எல்லா உயிர்களுக்கும், மற்ற உயிர்களோடு சேராமை என்கின்ற தீக்குணத்தினை வளர்க்கின்ற குற்றத்தினை இகல் என்று சொல்லுவர் நூலோர்.

2. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னா செய்யாமை தலை. 852

[ப-ரை] பகல் - ஒன்று பட்டுக் கூடாமை, கருதி - நினைத்து, பற்றா - வெறுப்பான செயல்களை, செயினும் - செய்தான் என்றாலும், இகல் - மாறுபாட்டினை, கருதி - நினைத்து, இன்னா - துன்பம் தரும் தீமையினை, [மற்ற

வனுக்கு] செய்யாமை தலை - செய்யாதிருத்தல் சிறந்ததாகும்.

[க-ரை] தம்முடன் கூடாமை கருதி ஒருவன் வெறுப்பன செய்தாலும், அவனுடன் மாறுபடுதலைக் கருதித் தாம் அவனுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் உயர்ந்த பண்பாகும்.

3. இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும். 853

[ப-ரை] இகல் - மாறுபாடு, என்னும் - எனப்படுகின்ற, எவ்வம் - துன்பம் உண்டாக்கும், நோய் - நோயினை, நீக்கின் - விலக்கி விடுவானாகில், தவல் - அழிவு, இல்லா - இல்லாததற்குக் காரணமான, தாவில் - கெடுதலில்லாத, விளக்கம்தரும் - புகழினைத் தருவதாகும்.

[க-ரை] மாறுபாடு என்கின்ற துன்பம் செய்யும் நோயினை ஒருவன் நீக்கி விடுவானாகில், அவனுக்கு அது எப்போதும் இருப்பதற்குக் காரணமான புகழினைக் கொடுக்கும்.

4. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 854

[ப-ரை] இகல் - மாறுபாடு, என்னும் - எனக்கூறப்படும், துன்பத்துள் - துன்பங்கள் எல்லாவற்றிலும், துன்பம் - மிக்க துன்பமானது, கெடின் - இல்லையென்றால், இன்பத்துள் - இன்பங்கள் எல்லாவற்றிலும், இன்பம் பயக்கும் - சிறந்த இன்பத்தினைத் தருவதாகும்.

[க-ரை] மாறுபாடு என்கின்ற துன்பங்களுக்கெல்லாம் துன்பமான ஒன்று இல்லையென்றால், அது அவனுக்கு இன்பங்கள் எல்லாவற்றிலும் மிக்க இன்பத்தினைக் கொடுக்கும்.

5. இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர். 855

[ப-ரை] இகல் - மாறுபாடு மனத்தில் உண்டானபோது, திர் சாய்ந்து - அதனை ஏற்காமல் எதிர்த்து, ஒழுக

வல்லாரை - நடந்து கொள்ளும் வல்லவர்களை, மிகல் ஊக்கும் - வெல்வதற்கு எண்ணும், தன்மையவர் - இயல்புடையவர்கள், யாரே - யாவர் உண்டு.

[க-ரை] மனதில் மாறுபாடு தோன்றியபோது அதனை எதிர்த்து நடந்து கொள்ளும் வல்லவர்களை வெல்லக் கருதும் தன்மையுடையவர்கள் யாவர்?

6. இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. 856

[ப-ரை] இகலின் - மாறுபாடு கொள்ளுவதில், மிகல - மிகுந்திருத்தலை, இனிது - இனிமை, என்பவன் - என்று நடப்பவனுடைய, வாழ்க்கை - உயிர் வாழ்க்கையானது, தவலும் - துன்பப்படுதலும், கெடலும் - கெட்டு விடுதலும், நணிந்து - சிறிது நேரத்தில் உண்டாகி விடும்.

[க-ரை] பிறருடன் மாறுபாடு கொள்வதில் தனக்கு இனிமையென்று கருதி அதனைச் செய்வானது உயிர் வாழ்க்கை துன்பப்படுதலும் கெடுதலும் சிறிதுபொழுதில் நடப்பனவாகும்.

7. மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். 857

[ப-ரை] இகல் - மாறுபாடு என்பதோடு, மேவல் - ஒன்றுபட்டு, இன்னா - துன்பத்தினை உண்டாக்கும், அறிவினால் - அறிவினையுடையவர், மிகல் மேவல்-வெற்றி தரக்கூடிய, மெய்ப்பொருள் - நீதி நூற் கருத்துக்களை, காணார் - அறிந்து கொள்ள மாட்டார்கள்.

[க-ரை] இகலோடு சேர்ந்து ஒழுகுகின்ற துன்பமான அறிவினையுடையார் வெற்றியினைத் தருகின்ற நீதி நூற் பொருள்களை அறிந்து கொள்ள மாட்டார்கள்.

8. இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு. 858

[ப-ரை] இகலிற்கு - மனத்தின்கண் மாறுபாடு தோன்றிய போது, எதிர் சாய்தல் - அதனை எதிர்த்து நீங்குதல்,

ஆக்கம் - ஒருவனுக்கு ஆக்கத்தினைத் தரும், அதனை - அந்த மாறுபாடு என்பதனை, மிகல் ஊக்கின் - மிகுதியாக்குவதை மேற்கொண்டு நடப்பானாகில், கேடு - தீமையும், ஊக்கு மாம் - அவனிடம் வருவதை மேற் கொள்ளுமாம்.

[க-ரை] மனத்தில் மாறுபாடு தோன்றிய போது அதனை நீக்குதல் ஒருவனுக்கு ஆக்கம் தரும். அதனைச் செய்யாமல் அதனை மேற்கொள்ளுவானானால் கேடும் தனக்கு வந்து சேரும்.

9. **இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை**
**மிகல்காணும் கேடு தரற்கு.** 859

[ப-ரை] ஆக்கம் - தனக்குச் செல்வம், வருங்கால் - வருவதாகின்ற போது, இகல் - மாறுபாடு என்பதனை, காணான் - நினைக்க மாட்டான், கேடுதரற்கு - கெடுதி செய்து கொள்வதற்கு, அதனை - அந்த இகலினிடத்தில், மிகல் காணும் - மிகுந்திருத்தலை நினைத்திருப்பவன் ஆவான்.

[க-ரை] தனக்கு ஆக்கம் உண்டான காலத்தில் இகல் என்பதனை நினையாதான், தனக்குக் கேடு செய்வதற்கு இகலின்கண் மிகுந்து நிற்பான்.

10. **இகலான்ஆம் இன்னாத எல்லாம் நகலான்ஆம்**
**நன்னயம் என்னும் செருக்கு.** 860

[ப-ரை] இகலான் - மாறுபாடு என்ற ஒன்றினாலேயே, இன்னாத - துன்பம் தருவன, எல்லாம் - எல்லாம், ஆம் - உண்டாவதாகும், நகலான் - நட்பு ஒன்றினாலேயே, நன்னயம் - நல்ல நீதி, என்னும் - என்ப்படுகின்ற, செருக்கும் ஆம் - பெரிய செல்வம் உண்டாவதாகும்.

[க-ரை] ஒருவனுக்கு மாறுபாடு என்னும் இகல் ஒன்றினாலே துன்பமானவைகள் எல்லாம் உண்டாகும். நட்பு என்ற ஒன்றினாலே நல்ல நீதி என்ற பெருஞ்செல்வம் உண்டாகும்.

# 87. பகைமாட்சி

[அறிவின்மையால் பகையினை மாட்சிமைப் படுத்துதல்]

1. வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. 861

[ப-ரை] வலியார்க்கு - தம்மைவிட வலிமை உள்ளவர்களுக்கு, மாறு - பகைமையாய், ஏற்றல் - நின்று எதிர்ப்பதை, ஓம்புக - நீக்குதல் வேண்டும், மெலியார் மேல் - மற்ற மெலியவர்கள் மேல், பகை - பகையாக இருப்பதை, ஓம்பா - நீக்காமல், மேக - விரும்புதல் வேண்டும்.

[க-ரை] தம்மைவிட வலிமையுடையவர்களிடத்தில் பகையாய் இருப்பதை நீக்குதல் வேண்டும். தம்மைவிட மெலியார்களுக்குப் பகையாய் இருப்பதை ஒழியாமல் விரும்புதல் வேண்டும்.

2. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. 862

[ப-ரை] அன்பு-சுற்றத்தாரிடம் அன்பு, இலன் - இல்லாதவனாகவும், ஆன்ற - வலிமையான, துணையிலன் - துணையில்லாதவனாகவும், தான் - தானும், துவ்வான் - வலிமை இல்லாதவனாகவும், [இருக்கும் ஒருவன்] ஏதிலான் - பகைவனுடைய, துப்பு - வலிமையினை, என் - எவ்வாறு, பரியும் - தொலைப்பவனாவான்.

[க-ரை] ஒருவன், தனது சுற்றத்தின்மீது அன்பில்லாமலும், வலிமையான துணையில்லாமலும், தானும் வலிமையில்லாமலும் இருப்பானாகில் தன்மீது வந்த பகைவன் வலியினை எவ்வாறு தொலைப்பான்?

3. அஞ்சும் அறியான் அமைவுஇலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு. 863

[ப-ரை] அஞ்சும் - அஞ்ச வேண்டாதபோது அஞ்சுபவன், அறியான் - அறியாமையுள்ளவன், அமைவு -

மற்றவரோடு பொருந்துதல், இலன் - இல்லாதவன், ஈகலான் - ஈகைக் குணம் இல்லாதவன், பகைக்கு - பகைவர்களுக்கு, தஞ்சம் - மிகவும், எளியன் - எளிமையானவனாகி விடுவான்.

[க-ரை] ஒருவன் அஞ்ச வேண்டாததற்கு அஞ்சுபவனாகவும், அறிய வேண்டுவனவற்றை அறியாதவனாகவும், பிறரோடு பொருந்துதல் இல்லாதவனாகவும், யாரிடத்தும் ஈகைத்தன்மை இல்லாதவனாகவும் இருப்பானேயானால், அவன் பகைவர்க்கு மிகவும் எளிமையானவன் ஆவான்.

4. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. 864

[ப-ரை] வெகுளி - கோபம் கொள்ளுவதிலிருந்து, நீங்கான் - நீங்காதவனாயும், நிறை - நிறைகுணம், இலன் - இல்லாதவனாயும் [இருந்தால்] எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், யாங்கணும் - எந்த இடத்திலும், யார்க்கும் - எவர்க்கும், எளிது - அவன் எளியவனாகி விடுவான்.

[க-ரை] ஒருவன் கோபத்தினின்று நீங்காதவனாயும், நிறைகுணம் இல்லாதவனாயும், இருப்பானானால் அவன் மேல் பகை செல்லுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் எளிமையாகும்.

5. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. 865

[ப-ரை] வழி - நீதி நூல் வழிகளை, நோக்கான் - கற்கமாட்டான், வாய்ப்பன - நூல்களில் விதிக்கப்பட்ட செயல்களை, செய்யான் - செய்யமாட்டான், பழி - தனக்கு வரும் பழிகளை, நோக்கான் - கருதமாட்டான், பண்பு - நற்குணம், இலன் - உடையவனல்லன், [அப்படிப்பட்டவன்] பற்றார்க்கு - பகையாயினோர்க்கு, இனிது - இன்பமானவனாவான்.

[க-ரை] ஒருவன் நீதி நூல்களைக் கற்காமலும், அவை விதித்த நெறிமுறைகளைச் செய்யாமலும் தனக்கு வரும் பழிகளைப் பாராமலும் தான் பண்புடையவன் அல்லாமலும் இருந்தால் அவனுடைய பகைவர்க்கு அவனது பகைமை இனிதாகும்.

6. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். 866

[ப-ரை] காணா - அறியாமைக்குக் காரணமான, சினத்தான் - மிகுந்த கோபமுடையவன், கழிபெரும் - மிகுந்து வளர்கின்ற, காமத்தான் - காமத்தினையுடையவன் யாவனோ, [அவனுடைய] பேணாமை - பகைமை, பேணப்படும் - விரும்பிக் கொள்ளப்படும்.

[க-ரை] தன்னையும் பிறனையும் அறிந்து கொள்ள முடியாத பெரும் கோபத்தினைக் கொண்டவனும் மிகுந்து வளரும் காமத்தினையும் உடையவன் எவனோ [அவனுடைய பகைமையினைப் பகைவர்கள் விரும்பிக் கொள்ளுவார்கள்.

7. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து
மாணாத செய்வான் பகை. 867

[ப-ரை] அடுத்து இருந்து - ஒரு தொழிலினைத் தொடங்கியபின், மாணாத - அதற்குப் பொருந்தாதவைகளை, செய்வான் பகை - செய்கின்றவனுடைய பகைமையினை, கொடுத்தும் - பொருள் கொடுத்தாகிலும், மன்ற - உறுதியாக, கொளல் - கொள்ளுதல், வேண்டும் - வேண்டப்படுவதாகும்.

[க-ரை] தொழிலினைத் தொடங்கிய பின் அதற்குப் பொருந்தாதனவற்றைச் செய்பவனுடைய பகைமையைச் சில பொருள் கொடுத்தாயினும் கொள்ளுதல் ஒருதலையாக வேண்டும்.

8. குணன் இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து. 868

[ப-ரை] குணம்-நற்குணம் ஏதும், இலனாய் - இல்லாதவனாகி, குற்றம் - குற்றங்கள், பலவாயின் - பலவாகிய போது, இனன் - துணை, இலனாம் - இல்லாதவனாவான், [ஆதலால்] மாற்றார்க்கு - பகைவர்களுக்கு, ஏமாப்பு - துணையாதலை, உடைத்து - உடையதென்பதாகும்.

[க-ரை] ஒருவன் நற்குணம் ஒன்றும் இல்லாதவனாகி குற்றங்கள் பலவாகியபோது அவன் யாதொரு துணையும் இல்லாதவனாவான். அதனால் அவன் பகைவர்க்கு எளியவனாவான்.

9. செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 869

[ப-ரை] அறிவு - நூல்களை அறிதல், இலா - இல்லாதவனாகவும், அஞ்சும் - அஞ்சுகின்ற தன்மையும் உடைய, பகைவர்ப் பெறின் - பகைவர்களைப் பெற்று விட்டால், செறுவார்க்கு - அவரை வெல்லுபவர்களுக்கு, சேண் - மேலான, இன்பம் - இன்பம், இகவா - நீங்காவாம்.

[க-ரை] நீதியை அறிந்திராத அஞ்சுகிற பகைவரைப் பெற்றால் அவரை வெல்லுபவர்களுக்கு உயர்வான இன்பங்கள் நீங்காமல் இருக்குமாம்.

10. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி. 870

[ப-ரை] கல்லான் - அற நூல்களைக் கல்லாதவனுடன், வெகுளும் - பகைத்தலால் வருகின்ற, சிறு - எளிமையான, பொருள் - பொருள்களை, ஒல்லானை - அடைந்து கொள்ளாதவனை, எஞ்ஞான்றும் - எக்காலத்தும், ஒளி ஒல்லாது - புகழ் அடையாது.

[க-ரை] நீதி நூல்களைக் கல்லாதவனோடு பகைத்து வால் வருகின்ற எளிய பொருள்களை மேற்கொள்ளாதவனை எக்காலத்திலும் புகழ் வந்து சேராது.

## 88. பகைத்திறம் தெரிதல்

[பகைவர்களை ஆராய்ந்தறிந்து நடந்து கொள்ளுதல்]

1. பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 871

[ப-ரை] பகை - பகை, என்னும் - என்று கூறப்படுகின்ற, பண்பு - பண்பு, இலதனை - இல்லாமல் தீங்கு உண்டாக்குவதனை, ஒருவன் - ஒருவன், நகையேயும் - விளையாட்டிற்காகவேனும், வேண்டல் - விரும்புகின்ற, பாற்று - தன்மை, அன்று - அல்லாததாகும்.

[க-ரை] பகையென்று சொல்லப்படும் தீமை பயப்பது ஒருவன் விளையாட்டுக்காகவும் கூட விரும்புகின்ற தன்மையுடையதன்று.

2. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
செல்லோர் உழவர் பகை. 872

[ப-ரை] வில் - வில்லினை, ஏர் - ஏராகவுடைய, உழவர் - உழவருடன், பகை - பகைமை, கொளினும் - கொண்டாலும், சொல் - சொல்லினை, ஏர் - ஏராகவுடைய, உழவர் - உழவரோடு, பகை கொள்ளற்க - பகைமையினைக் கொள்ளாதிருப்பானாக.

[க-ரை] ஒருவன், வில்லினை ஏராகவுடைய உழவரோடு பகை கொண்டானாயினும், சொல்லினை ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதிருத்தல் வேண்டும்.

3. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 873

[ப-ரை] தமியனாய் - தன்னந் தனியாக இருந்து, பல்லார் - பலரிடமும், பகை - பகையினை, கொள்பவன் - கொள்ளுபவன், ஏமுற்றவரினும் - பித்துக் கொண்டவர் களைவிட, ஏழை - அறிவில்லாதவனாவான்.

[க-ரை] தான் தனியாக இருந்து பலருடன் பகை கொள்ளுபவன் பித்துப் பிடித்தவர்களைவிட அறிவில்லாத வனாவான்.

4. பகைநட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. 874

[ப-ரை] பகை - பகையினையும், நட்பா - நட்பாகவே, கொண்டு - செய்துகொண்டு, ஒழுகும் - நடந்து ஒழுகுகின்ற பண்புடையாளன் - தன்மையுடைய மன்னனது, தகைமைக் கண் - சிறப்பினுள்ளே, உலகு தங்கிற்று - உலகமானது அடங்கி இருப்பதாகும்.

[க-ரை] வேண்டியபோது பகையினையும் நட்பாகவே கொண்டு நடந்து கொள்ளுகின்ற தன்மையுடைய மன்னனது சிறப்பினுள்ளே உலகமானது அடங்கி இருப்ப தாகும்.

5. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று. 875

[ப-ரை] தன் - தனக்கு உதவி செய்கின்ற, துணை - துணை, இன்றால் - இல்லாமல், பகை இரண்டு - பகைமை இரண்டாக இருந்தால், தானொருவன் இருக்கும் தான், அவற்றின் - அப்பகைகளுள், இன்துணையா - ஒன்றினை அந்த நேரத்திற்குத் தனக்குத் துணையாக, கொள்க - கொள்ளுதல் வேண்டும்.

[ந-கை] இன்துணையாகக் கொள்க அவற்றின் ஒன்று தனக்கு உதவியாக இருக்கும், துன்பம் கொடுக்கும் பகை

இரண்டாக இருந்தால் ஒருவனாக இருக்கும் தான் அப்பகை இரண்டினுள் பொருத்தமான ஒன்றினை அப்போதைக்கு இனிய துணையாகச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

6. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். 876

[ப-ரை] தேறினும் - பகைவன் முன்பு தெளியப்பட்டவனானாலும், தேறாவிடினும் - தெளியப்படாதவனானாலும், அழிவின் கண் - தனக்குத் தாழ்வு வந்துற்ற போது, தேறான். அவனுடன் கூடாதவனாயும், பகாஅன்விடல் - பகைத்து நீங்காமலும் நடுவாக விட்டு வைத்திருத்தல் வேண்டும்.

[க-ரை] பகைவனை முன்பு தெளிந்து அறிந்து இருந்தாலும் அல்லது தெளிந்து அறியாமல் இருந்தாலும் தனக்கு அழிவு வந்துற்றபோது அப்பகைவனைக் கூடாமலும் நீக்கிவைக்காமலும் இடையே விட்டுவைக்க வேண்டும்.

7. நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து. 877

[ப-ரை] நொந்தது அறியார்க்கு - தான் நொந்து இருப்பதனை அறிந்திராதவர்களுக்கு, நோவற்க - தனது துன்பத்தினைச் சொல்லாதிருத்தல் வேண்டும், மென்மை - வலிமையில்லாத் தன்மையினை, பகைவர் அகத்து- அதனை எதிர் நோக்கியிருக்கும் பகைவரிடத்தில், மேவற்க - மேலிட்டுத் தெரியப் படுத்தாதிருத்தல் வேண்டும்.

[க-ரை] தான் நொந்திருப்பதனைத் தாமாக அறியாதவர்களுக்குச் சொல்லா திருத்தல் வேண்டும். தனது மென்மையினைப் பார்த்திருக்கும் பகைவரிடத்தில் மேலிட்டுத் தெரியப்படுத்தாதிருத்தல் வேண்டும்.

8. வகைஅறிந்து தன்செய்து தன்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. 878

[ப-ரை] வகை - தொழிலினைச் செய்யும் வகையினை, அறிந்து - தெரிந்து, தன் செய்து - தன்னைப் பெருக்கிக்

கொண்டு, தன் காப்ப - தன்னைக் காத்துக் கொண்டால், பகைவர்கண் - தனது பகைவரிடத்தில், பட்ட செருக்கு - உண்டான செருக்கு, மாயும் - அழிந்து விடும்.

[க-ரை] தான் தொழில்செய்யும் வகையினை அறிந்து அது முடித்தற்கேற்றபடி தன்னைப் பெருக்கிக் காத்துக் கொண்டால் தனது பகைவரிடத்தில் உள்ள செருக்கு கெட்டுவிடும்.

9. இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. 879

[ப-ரை] முள் - முள்ளாகிய, மரம் - மரத்தினை, இளைதாக - இளையதாக இருக்கும் போதே, கொல்க - களைதல் வேண்டும், காழ்த்தவிடத்து - முதிர்ந்து விட்டபோது, களையுநர் - களைபவருடைய, கை கொல்லும் - கையினைக் கெடுக்கும்.

[க-ரை] களைய வேண்டிய முள் மரத்தினை இளையதாக இருக்கும் போதே களைந்து விடுதல் வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் முதிர்ந்தபோது களைபவர்கள் கையினை அது தானே கெடுக்கும்.

10. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 880

[ப-ரை[ செயிர்ப்பவர் - தம்முடன் பகைக்கும் பகைவருடைய, செம்மல் - தருக்கினை, [அழிக்கும் நிலையில் இருந்தும்] சிதைக்கலாதார் - இகழ்ச்சியால் அழிக்காத வேந்தர், உயிர்ப்ப - மூச்சு விடுகின்ற அளவிற்கும், மன்ற - உறுதியாக, உளர் - இருப்பவர், அல்லர் - அல்லர் என்பதாகும்.

[க-ரை] தம்முடன் பகைப்பவரது தருக்கினைக் கெடுக்கக் கூடியவராய் இருந்து, இகழ்ச்சியால் அது செய்யாத அரசர், பிறகு மூச்சு விடும் அளவிற்கும் உயிருடன் இருப்பவராக மாட்டார்.

# 89. உட்பகை

[உடனிருந்து கொண்டே தீமை செய்யும் பகைவர்கள்]

1. நிழல்நீரும் இன்னாத வின்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். 881

[ப-ரை] *நிழலும் - நுகரப்படுவனவாகிய நிழலும், நீரும் - நீரும், இன்னாத - பின்பு நோய் செய்யுமாம், இன்னா - இனிமையானவையல்ல, தமர் - தம்மவர் [உட்பகையாயினோர்] நீரும் - தன்மைகளும், இன்னாசெயின் - முன்னர் இன்பம் செய்தாலும் பின்னர் துன்பம் தருபவையாகும் [ஆதலால்] இன்னாவாம் - இனிமையானவையல்ல.*

[க-ரை] *நிழலும் நீரும் முன்னர் இனியவைபோல் இருந்தாலும் பின்னர் நோய் செய்வனவாகும். அதுபோல் உட்பகையினர் முன்னர் இனியவரேயானாலும் பின்னர் தீங்கு பயப்பவராவார்கள்.*

2. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 882

[ப-ரை] *வாள் - வெட்டுகின்ற வாளினை, போல - போன்று வெளிப்பட்டிருக்கும், பகைவரை - பகைவர்களுக்கு, அஞ்சற்க - அஞ்சாதிருக்க வேண்டும், கேள்போல் - உறவினர்கள், போல் காட்டி [பகைமையினை மறைத்து வைத்திருக்கும்] பகைவர் - பகைவருடைய [உட்பகை] தொடர்பு, அஞ்சுக - நட்பினை அஞ்சியிருத்தல் வேண்டும்.*

[க-ரை] *வாள்போல் வெளிப்பட்டு நிற்கும் பகைவர்களுடைய பகைமைக்கு அஞ்சாதிருத்தல் வேண்டும். உறவு போலவே மறைந்து நிற்கும் பகைவர்களின் நட்பினை அஞ்சுதல் வேண்டும்.*

3. உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 883

[ப-ரை] உட்பகை - உட்பகைக்கு, அஞ்சி - அச்சப்பட்டு, தற்காக்க - தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும், [அப்படி நடக்காவிட்டால்] உலைவிடத்து - தமக்கு ஒரு சோர்வு வந்த போது, மட்பகையின் - குயவர் மட்கலத்தினை அறுக்கின்ற கருவிபோல, மாண - தப்பாமல், தெறும் - உட்பகையினர் கெடுத்துவிடுவர்.

[க-ரை] உட்பகைக்கு அஞ்சித் தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், குயவன் மட்கலத்தினை அறுக்கும் கருவிபோல மறைவாக இருந்தே கெடுத்துவிடுவர்.

4. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும். 884

[ப-ரை] மனம் - மனம், மாணா - திருந்தாத, உட்பகை - உள்ளுக்குள்ளான பகை, தோன்றின் - உண்டாகிவிட்டால், இனம் - சுற்றம், மாணா - தனது வசம் இல்லாமைக்குக் காரணமான, ஏதம் - குற்றம், பலவும் - பலவற்றையும், தரும் - தந்துவிடும்.

[க-ரை] புறத்தில் திருந்தியதுபோல் இருந்து உள்ளுக் குள்ளே திருந்தாத உட்பகை உண்டாகிவிட்டால் அது அவனுக்குத் தனது சுற்றத்தார் தனது வசப்படாமைக்குக் காரணமான குற்றம் பலவற்றையும் கொடுக்கும்.

5. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். 885

[ப-ரை] உறல் - உறவின், முறையான் - முறையினர் இயல்போடு சேர்ந்த, உட்பகை - உட்பகையானது, தோன்றின் - தோன்றிவிட்டால், இறல் - இறத்தல், முறையான் - தன்மையோடு கூடிய, ஏதம் - குற்றங்கள், பலவும் - பலவற்றையும், தரும் - தந்துவிடும்.

[க-ரை] புறத்தில் உறவு முறைத் தன்மையோடு கூடிய உட்பகை வேந்தனுக்கு உண்டாகிவிட்டால் அது அவனுக்கு இறத்தல் முதலிய குற்றங்களையெல்லாம் தந்துவிடும்.

6. ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. 886

[ப-ரை] ஒன்றாமை - பகை என்பது, ஒன்றியார் கண்படின் - உள்ளுக்குள்ளே இருப்பவரிடத்தில் உண்டாகி விடுமானால், பொன்றாமை - இறவாதிருத்தல், ஒன்றல் - முடியும் என்பது, எஞ்ஞான்றும் அரிது - எந்த நாளிலும் அருமையானதாகும் [முடியாததாகும்].

[க-ரை] பகைமை தனக்கு உள்ளாயினாரிடத்திலேயே உண்டாகிவிடுமானால் அரசனுக்கு இறவாமை என்பது முடியாததாகிவிடும்.

7. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. 887

[ப-ரை] செப்பின் - செப்பினுடைய, புணர்ச்சி போல் - சேர்ந்திருக்கும் தன்மை போல், கூடினும் - [வெளித் தோற்றத்திற்குக்] கூடிக் காணப்பட்டாலும், உட்பகை - உள்ளாகிய பகை, உற்றகுடி - உண்டாகியிருக்கும் குடியி லுள்ளவர்கள், கூடாதே - மனத்தால் கூடமாட்டார்கள்.

[க-ரை] செப்பு ஒன்றுகூடி இருப்பதுபோலப் புறத்தில் வேற்றுமை தெரியாமல் கூடினாராயினும் உட்பகை உண்டான குடியிலுள்ளவர்கள் மனத்தால் தம்முள் கூடமாட்டார்கள்.

8. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி. 888

[ப-ரை] உட்பகை - உட்பகையானது, உற்ற - உண்டாகியிருக்கும், குடி - குடியானது, அரம் - அரத்தி னால், பொருத - தேய்க்கப்பட்ட, பொன் போல் - இரும்

பினைப் போல, பொருது - தேய்க்கப்பட்டு, உரம் தேயும் - தனது வலிமை தேய்ந்து விடும்.

[க-ரை] உட்பகை உண்டாகியிருக்கும் குடியானது அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்பினைப் போலத் தேய்க்கப்பட்டுத் தனது வலிமை தேய்ந்து விடுவதாகும்.

9. எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. 889

[ப-ரை] உட்பகை - உட்பகையானது, எட்பகவு - எள்ளினது பிளவினை, அன்ன - ஒத்திருக்கும், சிறுமைத்தே - சிறுமையுடையதே, ஆயினும்-ஆனாலும், கேடு உள்ளதாம்- அதனால் வரும் கெடுதி அதனுள்ளே இருப்பதாகும்.

[க-ரை] உட்பகை எள்ளின் அளவுபோன்று சிறுமையுடையதே ஆனாலும், பெருமையெல்லாம் அழிக்கக் கூடிய கேடு அதனுள்ளே இருப்பதாகும்.

10. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று. 890

[ப-ரை] உடம்பாடு - மனப் பொருத்தம், இல்லாதவர் - இல்லாதவருடன், வாழ்க்கை - கூடி வாழ்கின்ற வாழ்க்கையானது, குடங்கருள் - ஒரு குடிசையினுள், பாம்போடு - பாம்புடன், உடன் - சேர்ந்து, உறைந்தற்று - வாழ்வதைப் போன்றதாகும்.

[க-ரை] உள்ளத்தில் பொருத்தம் இல்லாதவரோடு கூடிவாழும் வாழ்க்கை ஒரு குடிசையினுள்ளே பாம்புடன் கூடிவாழ்வதைப் போன்றதாகும்.

# 90. பெரியாரைப் பிழையாமை

## [ஆற்றல்களினால் பெரியாராயினோரை அவமதித்து நடக்காதிருத்தல்]

1. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. 891

[ப-ரை] ஆற்றுவார் - சிறந்த ஆற்றல் மிக்கவர்களின், ஆற்றல் இகழாமை - வல்லமைகளை இகழாதிருத்தல், போற்றுவார் - தமக்குத் தீமைவராமல் காப்பவருடைய, போற்றலுள் - போற்றிக் காக்கும் காவல்கள், எல்லாம் தலை - எல்லாவற்றினும் சிறந்ததாகும்.

[க-ரை] எடுத்ததை முடிக்கும் ஆற்றல் படைத்தவர்களுடைய வல்லமைகளை அவமதியாது நடந்து கொள்ளுதல் என்பது, தமக்குத் தீங்கு வராமல் செய்யும் காவல்கள் எல்லாவற்றிலும் மிக்கதாகும்.

2. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். 892

[ப-ரை] பெரியாரை - ஆற்றல்களினால் பெரியோர்கள் ஆனவர்களை, பேணாது - நன்கு போற்றி மதியாமல், ஒழுகின் - நடப்பாராகில், பெரியாரால் - அப்பெரியோர்களால், பேரா - நீங்காத, இடும்பை - துன்பங்கள், தரும் - உண்டாவதாகும்.

[க-ரை] ஆற்றல்களினால் பெரியாராயினோரைப் போற்றாமல் அவமதித்து நடப்பானானால் அப்பெரியாரால் எக்காலத்திலும் அவனுக்கு நீங்காத துன்பங்கள் உண்டாகும்.

3. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. 893

[ப-ரை] அடல் - மாற்றாரைக் கொல்ல, வேண்டின் - வேண்டியபோது, ஆற்றுபவர்கண் - அதனைச் செய்யவல்ல

மன்னரிடத்தில், இழுக்கு - குற்றத்தினை, கெடல் - தான் கெட்டுப்போக, வேண்டின் - விரும்பினால், கேளாது - நீதி நூல்களில் கூறியவற்றையும் கேளாமல், செய்க - செய்வானாக.

[க-ரை] பிறரை அழிக்க வேண்டிய போது அதனை அப்பொழுதே செய்யவல்ல ஆற்றல் படைத்தவர்களிடத்தில், தான் கெட்டுவிட விரும்பினால் நீதி நூல்களையும் கடந்து குற்றங்களைச் செய்வானாக.

4. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். 894

[ப-ரை] ஆற்றுவார்க்கு - ஆற்றல் மிக்கவர்களுக்கு ஆற்றாதார் - ஆற்றல் இல்லாதார், இன்னா செயல் துன்பங்களைச் செய்தல், கூற்றத்தை - உயிர் கொள்ளும் கூற்றுவனை, கையால் விளித்தற்று - கையினைக் காட்டி அழைத்ததற்குச் சமமாகும்.

[க-ரை] ஆற்றல் மிக்கவர்களுக்கு அவ்வாற்றல் இல்லாதார் தாம் முற்பட்டுத் துன்பத்தினைச் செய்தல், தானே வரக்கூடிய கூற்றுவனை அதற்கு முன்னதாகவே கையால் அழைத்தது போன்றதாகும்.

5. யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். 895

[ப-ரை] வெந்துப்பின் - மிக்க வல்லமை நிறைந்த, வேந்து - வேந்தனால், செறப்பட்டவர் - கோபிக்கப் பட்டவர்கள், யாண்டு - அவனிடமிருந்து தப்பி எங்கே, சென்று - போய் இருப்பார், யாண்டும் - எந்த இடத்திலும், உளர் - இருப்பவர், ஆகார் - ஆக மாட்டார்கள்.

[க-ரை] வலிமை மிகுந்த வேந்தனால் கோபிக்கப் பட்டவர்கள் அவனிடமிருந்து தப்பி எங்கே சென்றாலும் உயிர் வாழமாட்டார்கள்.

6. எரியாற் சுடப்படினும் உய்வுஉண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 896

[ப-ரை] எரியால் - [காட்டிற்குச் சென்றவன்] அவ்விடத்தில் நெருப்பினால், சுடப்படினும் - சுடப்பட்டாலும், உய்வு உண்டாம்-ஒரு வழியில் உயிர் தப்புதல் உண்டாகும், பெரியார் - ஆற்றல் மிக்க பெரியார்களுக்கு, பிழை - குற்றம் செய்து, ஒழுகுவார் - நடப்பவர்கள், உய்யார் - எவ்வழியிலும் உயிர் தப்பிக்க மாட்டார்கள்.

[க-ரை] தீயாற் சுடப்பட்டாலும் ஒரு வழியில் உயிர்த் தப்புதல் முடியும். பேராற்றல் கொண்ட பெரியோர்களுக்குக் குற்றம் செய்து நடந்து கொள்பவர்கள் எவ்விதத்திலும் உயிர் தப்புதல் முடியாததாகும்.

7. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின். 897

[ப-ரை] தகைமாண்ட - ஆற்றல் மிக்க பெருமையால் சிறப்படைந்த, தக்கார் - அருந்தவத்தோர், செறின் - சினம் கொள்ளுவாரானால், வகைமாண்ட - பலவகை உறுப்புக்களால் பெருமைப்பட்ட, வாழ்க்கையும் - உயர்ந்த அரச வாழ்க்கையும், வான் - ஈட்டி வைத்த மிகப் பெரிய, பொருளும் - பொருளும், என்னாம் - என்னவாகும்.

[க-ரை] மாட்சிமைப்பட்டுப் பெருமை நிறைந்தவர்கள், அருந்தவத்தோர் கோபிப்பாராயின் மிகச் சிறப்பான அவர்களுடைய வாழ்வும் பெரும் பொருளும் என்னவாகும்?

8. குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 898

[ப-ரை] குன்று - மலைக்குன்றினை, அன்னார் - ஒத்த அருந்தவப் பெரியார்கள், குன்ற மதிப்பின் - ஒருவன் கெட்டுவிட நினைப்பாரானால், நிலத்து-பூமியில், நின்றன்னார் - நிலைத்து இருப்பதைப் போன்ற செல்வந்தர்,

குடியோடு மாய்வார் - தமது குடியுடன் அப்போதே மடிந்து விடுவார்.

[க-ரை] குன்றினையொத்த அருந்தவத்தோர் கெட்டுப் போகுமாறு நினைப்பாராயின் அப்போதே இப் பூமியில் நிலைபெற்றுள்ள செல்வந்தர் தம் குடியோடும் அழிவர்.

9. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். 899

[ப-ரை] ஏந்திய - உயர்ந்த, கொள்கையார் - நோன்பு கொண்ட கொள்கையாளர்கள், சீறின் - சினம் கொள்ளுவாரானால், இடை - நடுவே, வேந்து முரிந்து - தனது ஆட்சி நிலை கெட்டு, வேந்தனும் கெடும் - சிறந்த அரசன் தானும் கெட்டுப் போவான்.

[க-ரை] காத்தற்கு அருமையான உயர்ந்த நோன்பு களையுடையார் கோபிப்பாராயின் அவர் ஆற்றலால் வேந்தனும் தனது நிலைகெட்டு அழிவான்.

10. இறந்துஅமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்துஅமைந்த சீரார் செறின். 900

[ப-ரை] சிறந்து - மிகவும் சிறப்பாக, அமைந்த - அமைந்த, சீரார் - தவ ஆற்றல் பெற்றவர், செறின் - சினம் கொண்டு விட்டால், இறந்து - மிகவும் பெரியதாக, அமைந்த - அமைந்த, சார்புடையார் - சார்பாகிய துணைகள் பலவும் உடையவர்கள், ஆயினும் உய்யார் - தப்பித்துவிட மாட்டார்கள்.

[க-ரை] மிக்க தவத்தினையுடையார் கோபிப்பாராயின் அவரால் கோபிக்கப்பட்டவர் மிகப் பெரிய படைபலம் முதலியன உடையவராயினும் தப்பிக்க மாட்டார்.

# 91. பெண்வழிச் சேறல்

## [மிகுந்த காமத்தால் மனைவிக்கு ஏவல் செய்து அவள் வழி நடத்தல்]

1. **மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.** 901

[ப-ரை] *மனை - இன்பம் காரணமாக மனையாளை, விழைவார் - விரும்பி அவள் வழி நடப்பவர், மாண் - மாட்சிமைப்பட்ட, பயன் - அறமாகிய பயனை, எய்தார் - அடைய மாட்டார்கள், வினை விழைவார் - பொருள் ஈட்ட முயல்பவர்கள், வேண்டா - தடையானதென்று இகழும், பொருளும் - பொருளும், அது - அவ்வின்ப மேயாகும்.*

[க-ரை] *மிகுந்த பெண்ணின்பம் காரணமாக மனையாளை விரும்பி அவள் தன்மையராக நடப்பவர்கள், தமக்குத் துணையான அறத்தினை அடையமாட்டார்கள்.*

2. **பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.** 902

[ப-ரை] *பேணாது - தனது ஆண்தன்மையினைப் போற்றி விரும்பாமல், பெண் - மனையாளது பெண் தன்மையினை, விழைவான் - விரும்பி இருப்பவன் ,ஆக்கம் - பெற்ற செல்வம், பெரியதோர் - பெரியதானதொரு, நாண் ஆக - ஆடவர்களுக்கெல்லாம் நாணம் உண்டாக்கி, நாணுத்தரும் - தனக்கும் நாணத்தினைக் கொடுக்கும்.*

[க-ரை] *தனது ஆண்மையினை விட்டு மனையாளது பெண்மையினை விரும்புவான் எய்தி நின்ற செல்வம் இவ்வுலகத்து ஆண்பாலர்க்கெல்லாம் நாணு தலைக் கொடுக்கும்.*

3. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 903

[ப-ரை] இல்லாள் கண்-மனைவியினிடத்தில், தாழ்ந்த - தாழ்ந்து பயந்து நடக்கும், இயல்பின்மை - இயல்பல்லாத தன்மை, நல்லாருள் - நல்லவரிடத்தில் [செல்லும்போது] நாணு - நாணம் அடைதலை, எஞ்ஞான்றும் தரும் - எக்காலத்திலும் அவனுக்குத் தருவதாகும்.

[க-ரை] ஒருவன் தனது இல்லாளிடத்தில் தாழ்ந்திருப்பதற்குக் காரணமான அச்சம், அது இல்லாதவராகிய நல்லாரிடம் செல்லுங்கால் நாணுறுதலை எக்காலத்திலும் அவனுக்குக் கொடுக்கும்

4. மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறுஎய்தல் இன்று. 904

[ப-ரை] மனையாளை - தனது மனைவிக்கு, அஞ்சும் - பயந்து ஒழுகுகின்ற, மறுமை - மறுமைப் பயன், இலாளன் - இல்லாதவனுக்கு, வினை - தொழிலில், ஆண்மை - ஆளும் தன்மை [இருந்த போது], வீறு - நல்லோரால் கொண்டாடப்படுதலை, எய்தல் - பெறுதல், இன்று - இல்லையாகும்.

[க-ரை] மனையாளை அஞ்சும் (அஞ்சி நடக்கும்) மறுமைப் பயன் இல்லாதவனுக்குத் தொழிலை ஆளும் தன்மை உண்டானபோதும் நல்லோரால் பாராட்டப்பட மாட்டாது.

5. இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 905

[ப-ரை] இல்லாளை - மனைவிக்கு, அஞ்சுவான் - அஞ்சுகின்றவன், நல்லார்க்கு - நல்லவர்களுக்கு, நல்ல - நல்லனவற்றை, செயல் - செய்தற்கு, எஞ்ஞான்றும் அஞ்சும் - எந்நாளிலும் அஞ்சுபவனாவான்.

[க-ரை] தனது மனையாளுக்கு அஞ்சி நடப்பவன் தான் தேடிய பொருளேயானாலும் நல்லவர்களுக்கு எப்போதும் நல்லன செய்தற்கு அஞ்சி இருப்பவனாவான்.

6. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமைஆர்தோள் அஞ்சு பவர். 906

[ப-ரை] இல்லாள் - இல்லாளுடைய, அமையார் - மூங்கில் போன்ற, தோள்-தோள்களுக்கு, அஞ்சுபவர்-அஞ்சு கிறவர்கள், இமையாரின் வாழினும் - இமையவர்களைப் போல வாழ்ந்தாலும், பாடு - பெருமை, இலரே - இல்லாத வர்களே யாவார்கள்.

[க-ரை] தம் இல்லாளுடைய வேல் போன்ற தோள் களுக்கு அஞ்சி நடப்பவர் இமையவர்கள் போல இவ்வுலகில் வாழ்ந்தாலும் ஆண்மை இல்லாதவர்களாவர்.

7. பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாண்உடைப்
பெண்ணே பெருமை உடைத்து. 907

[ப-ரை] பெண் - மனைவிக்கு, ஏவல் செய்து - அவள் கட்டளையிட்ட தொழிலினைச் செய்து கொண்டு,ஒழுகும்- நடக்கின்ற, ஆண்மையின் - ஆண்தன்மையினைக் காட்டி லும், நாண் - நாணத்தினை, உடை - உடைய, பெண்ணே - பெண்தன்மையே, பெருமை உடைத்து- பெருமையினை உடையதாகும்.

[க-ரை] நாணம் இல்லாமல் இல்லாளுக்கு ஏவல் தொழில் செய்து திரிகின்றவனுடைய ஆண் தன்மை யினைவிட நாணமுடைய பெண் தன்மையே பெருமை யுடையதாகும்.

8. கட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நல்நுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர். 908

[ப-ரை] நல் - அழகுள்ள, நுதலாள் - நெற்றியினை உடைய இல்லாள், பெட்டாங்கு - வேண்டியபடி, ஒழுகு

பவர் - நடப்பவர்கள், நட்டார் - நண்பர்களது, குறை முடியார் - குறை பாட்டினைச் செய்து முடிக்க மாட்டார் கள், நன்று ஆற்றார் - நல்ல அறத்தினையும் செய்து முடிக்க மாட்டார்கள்.

[க-ரை] தன் விருப்பப்படி அல்லாமல் தனது மனையாள் வேண்டியவாறு நடப்பவர் தம்முடன் நட்பு கொண்டவர் குறையினை முடிக்க மாட்டார். நல்ல அறச் செயலையும் செய்ய மாட்டார்.

9. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல். 909

[ப-ரை] அறவினையும் - அறமான செயலும், ஆன்ற பொருளும் - அது முடிந்ததற்கான பொருட்செயலும், பிற - மற்ற, வினையும் - இன்பச் செயல்களும், பெண் - மனை யாளுக்கு, ஏவல் - ஏவல் தொழில், செய்வார்கண் - செய் பவர்களிடத்தில், இல் - உண்டாவதில்லையாம்.

[க-ரை] அறச் செயலும், அது முடித்ததற்குக் காரண மான பொருட்செயலும், இவ்விரண்டிற்கும் வேறான இன்பச் செயலும் தனது மனையாளுக்கு ஏவல் செய் பவரிடத்தில் உண்டாகா.

10. எண்சேர்ந்த நெஞ்சத்து இடன்உடையார்க்கு
எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். 910

[ப-ரை] எண் - செயல் சிந்தனையில், சேர்ந்த - சென்ற, நெஞ்சத்து - நெஞ்சத்தினையும், இடன் உடை யார்க்கு - அதனாலான செல்வத்தினையும் உடையவர் களுக்கு, பெண் - மனையாளை, சேர்ந்தாம் - சார்ந்தே நடப்பதால் உண்டாகும், பேதைமை - அறியாமை, எஞ்ஞான்றும் இல் - எக்காலத்திலும் உண்டாகாது.

[க-ரை] தொழிலினிடத்தில் ஆலோசனையுள்ள நெஞ்சத்தினையும் அதனாலாய செல்வத்தினையும் உடைய வேந்தர்க்கு மனையாளைச் சேர்தலால் விளையும் பேதைமை எக்காலத்திலும் உண்டாகாது.

## 92. வரைவின் மகளிர்

### [ஆவார், ஆகாதார் என்ற வரையில்லாத பொது மகளிர்]

1. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 911

[ப-ரை] அன்பின் - யாரையும் மனத்தில் அன்பு கொண்டு, விழையார் - விரும்பாமல், பொருள் - பொருள் களைக் கருதியே, விழையும் - விரும்புகின்ற, ஆய் தொடி யார் - ஆய்ந்த வளையல்களையுடைய வரைவின் மகளிர், இன் - இனிய, சொல் - சொற்கள், இழுக்குத் தரும் - துன்பத்தினைக் கொடுப்பதாகும்.

[க-ரை] ஒருவனை அன்புபற்றி விரும்பாமல் பொருள் பற்றி விரும்புகிற மகளிருடைய இனிய சொற்கள் துன்பத் தினைக் கொடுக்கும்.

2. பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்புஇல் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 912

[ப-ரை] பயன் - தமக்கு வரும் பொருளை, தூக்கி - அளந்தறிந்து, பண்பு - தமது பண்புடைமையினை, உரைக்கும் - சொல்லும், பண்புஇல் - நற்குணம் இல்லாத, மகளிர் - பொது மகளிரது, நயன்-நடத்தையினை, தூக்கி - ஆராய்ந்தறிந்து, நள்ளாவிடல் - அவர்களைப் பொருந் தாமல் விட்டுவிடுதல் வேண்டும்.

[க-ரை] ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்தறிந்து அதனை அடையும் வரையில் பண்புடைமை பேசும் பண்பில்லாத மகளிரது நடத்தையினை ஆராய்ந்தறிந்து அவர்களைப் பொருந்தாது விடுதல் வேண்டும்.

3. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. 913

[ப-ரை] பொருட்பெண்டிர் - கொடுப்பவர்களை இச்சிக்காமல் பொருளையே விரும்பும் பொது மகளிரது, பொய்ம்மை - பொய்மையுடைய, முயக்கம் - தழுவுதல் என்பது, இருட்டு - இருண்ட, அறையில் - அறையில், ஏதில் - அறிந்திராத, பிணம் தழீஇயற்று - பிணத்தினைத் தழுவியது போன்றதாகும்.

[க-ரை] பொருளையே விரும்பும் பொது மகளிரது பொய்ம்மையுடைய முயக்கம் பிணம் தூக்குவோர் இருட்டறையொன்றில் முன்னறியாத பிணத்தினைத் தழுவினது போன்றதாகும்.

4. பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 914

[ப-ரை] பொருட்பொருளார் - பொருளையே பொருளாக விரும்பி இன்பத்தினை விரும்பாத மகளிரது, புன்னலம் - புல்லிய அற்பமான இன்பத்தினை, அருள் - அருளுடன் பொருந்திய, பொருள் - மெய்ப் பொருளினை, ஆயும் - ஆராய்ந்து சேர்க்கும், அறிவினவர் தோயார் - அறிவினையுடையவர்கள் தீண்டமாட்டார்கள்.

[க-ரை] அருளோடு கூடிய பொருளை ஆராயும் அறிவுடையார் இன்பமாகிய பொருளை இழந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது அற்ப இன்பத்தினைத் தீண்டமாட்டார்கள்.

5. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். 915

[ப-ரை] மதி - இயற்கையான மதி, நலத்தின் - நன்மையால், மாண்ட சிறப்புடன் கூடிய, அறிவினவர் - செயற்கை அறிவினையுடையவர்கள், பொது - எல்லோரிடத்திலும் பொதுவாகிய, நலத்தார் - ஆசையுடைய மகளிரது, புன்னலம் - புல்லிய இன்பத்தினை, தோயார் - தீண்ட மாண்டார்கள்.

[க-ரை] இயற்கையான மதி நன்மையினால் மாட்சிமைப்பட்டு செயற்கை அறிவினையும் உடையவர்கள், பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவான ஆசையுடைய மகளிரது புல்லிய நலத்தினைத் தீண்டார்கள்.

6. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பூரிப்பார் தோள். 916

[ப-ரை] தகை - ஆடல் பாடல் அழகு போன்றவைகளால், ;செருக்கி - களிப்பெய்தி, புன்னலம் - புல்லிய இன்பத்தினை, பாரிப்பார் - விலை கொடுப்பார்க்குப் பரப்புகின்ற [மகளிரது] தோள் - தோள்களை, தம் - தமது, நலம் - புகழினை, பாரிப்பார் - உலகில் பரப்பும் மேலானவர்கள், தோயார் , தீண்ட மாட்டார்கள்.

[க-ரை] ஆடல், பாடல், அழகு முதலியவைகளினால் களிப்புற்றுத் தமது புல்லிய நலத்தினை விலை கொடுப்பார்க்கு அளிக்கும் மகளிர் தோளினைத் தம் புகழினை உலகில் பரப்பும் உயர்ந்தோர் தீண்டமாட்டார்.

7. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள். 917

[ப-ரை] நெஞ்சின் - மனத்தினால், பிற - வேறொன்றினை, பேணி - ஆசைப்பட்டு, புணர்பவர் - பொருள் கொடுப்பாரை உடம்பால் புணருகின்ற மகளிரது, தோள்-

தோள்களை, நிறை - நிறைகுணத்தால் திருந்திய, நெஞ்சம் - நெஞ்சம், இலாதவர் - இல்லாதவர்கள், தோய்வர் - புணரச் செய்வார்கள்.

[க-ரை] நிறை குணத்தினால் திருந்திய நெஞ்சம் இல்லாதவர்களே நெஞ்சினால் பிறவற்றை விரும்பி உடம்பினால் பொருள் கொடுப்பாரை விரும்பும் மகளிர் தோள்களைத் தோய்வார்கள்.

8. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப
மாய மகளிர் முயக்கு. 918

[ப-ரை] மாய - வஞ்சனை நிறைந்த, மகளிர் - பொது மகளிர், முயக்கு - தழுவிப் புணர்தலை, ஆயும் - ஆராய்ந்தறியும், அறிவினர் - அறிவினையுடையவர், அல்லார்க்கு - அல்லாதவர்களுக்கு, அணங்கு - தெய்வமகள், என்ப - என்று கூறுவர்.

[க-ரை] மயக்கி வஞ்சிக்க வல்ல மகளிரது முயக்கத்தினை, அவ்வஞ்சகத்தினை ஆராய்ந்தறியும் அறிவுடையார் அல்லாதார்க்கு அணங்கு என்று சொல்லுவார்.

9. வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 919

[ப-ரை] வரைவுஇலா - உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற அளவு இல்லாமல் [விலைகொடுப்போர் யாரையும் சேர்கின்ற] மாண் - சிறப்பான, இழையார் - ஆபரணத்தையுடைய மகளிரது, மென் - மெல்லிய, தோள் - தோள்கள், புரையிலா - அக்குற்றத்தினை அறியும் அறிவில்லாத, பூரியர்கள் - கீழ் மக்கள், ஆழும் அளறு - அழுந்துகின்ற நரகமாகும்.

[க-ரை] விலை கொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்கள், அக்குற்றத்தினை அறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புகுந்து அழுந்தும் நரகமாகும்.

10. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 920

[ப-ரை] இரு - ஒருவரோடு கூடுதலும் கூடாமையுமான இரண்டுவித, மனப் பெண்டிரும் - மனத்தினையுடைய மகளிரும், கள்ளும் - கள்ளும், கவறும் - சூதாட்டமும், திருநீக்கப்பட்டார் - திருமகளால் துறக்கப்பட்டவர்களுக்கு தொடர்பு - நட்பு என்பதாம்.

[க-ரை] இருவித மனத்தினையுடைய மகளிரும், கள்ளும், சூதும் என்ற இம்மூன்றும் செல்வத்தால் நீக்கப் பட்டவர்களுக்கு நட்புடையவையாகும்.

## 93. கள் உண்ணாமை

### [கள்ளினை உட்கொள்ளாதிருத்தல்]

1. உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். 921

[ப-ரை] கள் - கள்ளின்மீது, காதல் கொண்டு - காதலினைக் கொண்டு, ஒழுகுவார் - நடப்பவர்கள், எஞ்ஞான்றும் - எந்த நாளிலும், உட்கப் படார் - பகைவர்களால் அஞ்சப்பட மாட்டார்கள், [அதுவுமல்லாமல்] ஒளியிழப்பர் - புகழையும் இழப்பார்கள்.

[க-ரை] கள்ளின்மீது காதல் கொண்டு ஒழுகுபவர்கள் எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்பட மாட்டார்கள். அதுவேயல்லாமல் தங்கள் புகழினையும் இழப்பர்.

2. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார். 922

[ப-ரை] கள்ளை - கள்ளினை, உண்ணற்க - அறிவுடையோர் உண்ணாதிருக்கக் கடவர், உணில் - உண்ணுவதை

விரும்புபவர்களானால், சான்றோரால் - சான்றாண்மை நிறைந்தவர்களால், எண்ணப்பட - மதித்து எண்ணப்பட, வேண்டாதார் - விரும்பாதவர்கள், உண்க - உண்ணுவார் களாக.

[க-ரை] அறிவுடையவர்கள் கள்ளினை உண்ணா திருக்கக் கடவர். நல்லவர்களால் மதிக்கப்பட விரும்பாத வர்கள் உண்ணுவார்களாக, என்பதாம்.

3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 923

[ப-ரை] ஈன்றாள் - என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்ளும் ஈன்ற தாயானவள், முகத்தேயும் - முன்னேயும், களி - கள்ளுண்டு களித்தல், இன்னாது - துன்பம் செய்வ தாகும், [அப்படியிருக்க] மற்று - மற்ற, சான்றோர் - பெருந்தகைமை கொண்ட சான்றோர், முகத்து - முன்பாகக் கள்ளுண்டு களித்தல், என் - எப்படி இருக்கும். [ஆல் - அசை]

[க-ரை] பெற்ற தாயின் முன்பும் கள்ளுண்டு களித்தல் துன்பமாகும். அப்படியானால், குற்றத்தினைப் பொறுத்துக் கொள்ள முடியாத சான்றோர் முன்பு கள்ளுண்டு களித்தல் என்னவாகும்?

4. நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 924

[ப-ரை] கள் - கள்குடித்தல், என்னும் - என்கின்ற, பேணா - யாவரும் இகழ்கின்ற, பெரும் - மிகப் பெரிய, குற்றத்தார்க்கு - குற்றத்தினையுடையவர்க்கு, நாண் - நாணம், என்னும் - எனப்படும், நல்லாள் - நல்ல பெண் ணானவள், புறம் கொடுக்கும் - அவனைவிட்டு நீங்குவாள்.

[க-ரை] கள் குடித்தல் என்று சொல்லப்படுகின்ற மிக்க குற்றத்தினையுடையாரை, நாண் என்று சொல்லப் படுகின்ற மிக்க உயர்ந்தவள் விட்டு நீங்குவாள்.

5. கையறியாமை உடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 925

[ப-ரை] பொருள் - விலைப் பொருளினைக் கொடுத்து, மெய் - தன்னைத்தானே, அறியாமை - மறந்து விடுதலை, கொளல் - கொள்ளுதல், கையறியாமை - செய்வது இன்னதென்றே அறியாமையினை, உடைத்து - உடையதால் வந்த செயலாகும்.

[க-ரை] பொருள் கொடுத்து ஒருவன் கள்ளினால் தனக்கு மெய் மறப்பினைத் தேடிக் கொள்ளுதல், செய்வது இன்னது என்ற அறியாமையினைக் காரணமாகக் கொண்டதாகும்.

6. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர். 926

[ப-ரை] துஞ்சினார் - தூங்கியவர்கள், செத்தாரின் - இறந்து போனவரின், [அப்போதைக்கு] வேறு - வேறு, அல்லர் - என்பவராக மாட்டார், கள் - கள்ளினை, உண்பவர் - குடிப்பவர், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், நஞ்சு - நஞ்சினை, உண்பார் - உண்பவரினும் வேறாகக் கருதப் படார்.

[க-ரை] உறங்கினவர்கள் அந்த நேரத்தில் செத்தாரின் வேறாகக் கருதப்பட மாட்டார்கள். அதுபோலக் கள்ளுண்போர் நஞ்சு உண்பவரினின்றும் வேறாகக் கருதப் பட மாட்டார்கள்.

7. உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர். 927

[ப-ரை] கள் - கள்ளினை, ஒற்றி - மறைத்துக் குடித்து, கண் - அக்களிப்பினால் அறிவு, சாய்பவர் - தளர்பவர், உள்ளூர் - உள்ளூரில் வாழ்பவரால், உள்ளொற்றி - உள்ளே நடப்பது தெரிந்து கொள்ளப்பட்டு, எஞ்ஞான்றும் - எப்போதும், நகப்படுவர் - நகுதல் செய்யப் படுவர்.

[க-ரை] கள்ளினை மறைந்துண்டு அக்களிப்பால் தம் அறிவு தளர்பவர் உள்ளூரில் வாழ்பவரால் உள்நிகழ்வது உய்த்துணரப்பட்டு எப்போதும் நகுதல் செய்யப்படுவார்.

8. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 928

[ப-ரை] களித்து - கள்ளினை மறைந்துண்டு, அறியேன் - உண்ணாதபோது கள்ளுண்டறியேன், என்பது - என்று கூறுவதை, கைவிடுக - நீக்குக, நெஞ்சத்து - மனத்தில், ஒளித்தது - மறைத்து வைத்த குற்றமும், ஆங்கே - முன்னைய அளவில், மிகும் - பன்மடங்கு மிகுந்து வெளிப்படும்.

[க-ரை] கள்ளினை மறைந்துண்டு, உண்ணாதபோது 'யான் கள்ளுண்டறியேன்' என்று கூறுதலை நீக்குதல் வேண்டும். கள்ளுண்டபோது நெஞ்சத்தில் ஒளித்த குற்றமும் மிகுந்து வெளிப்பரப்புவதாகும்.

9. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 929

[ப-ரை] களித்தானை - கள்ளுண்டு களிப்பவனுக்கு, காரணம் - ஆகாதென்று காரணம், காட்டுதல் - காட்டமுற்படுதல், கீழ் நீர் - நீரினுள்ளே, குளித்தானை - மூழ்கிய ஒருவனை [மற்றவன்] தீத்துரீ இயற்று-விளக்கினால் தேடுவதை ஒக்கும்.

[க-ரை] கள்ளுண்டு களிப்பவனிடம் 'இது ஆகாது' என்று காரணங்காட்ட முற்படுதல், நீரினுள் மூழ்கிய ஒருவனை விளக்கினால் தேடுவது ஒக்கும்.

10. கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 930

[ப-ரை] கள் - கள்ளினை, உண்ணா - உண்ணாதிருந்த, போழ்தில் - சமயத்தில், களித்தானை - கள்ளுண்டவனை,

காணுங்கால் - காணும்போது, உண்டதன் சோர்வு - தான் உண்ட போதிருக்கும் மயக்கத்தினை, உள்ளான் கொல் - நினைத்துப் பார்க்க மாட்டான் போலும்.

[க-ரை] கள்ளுண்பான் ஒருவன் தான் உண்ணாதிருந்த போது கள்ளுண்டு களிப்பவன் நிலைமையினைக் கண்டு, தான் உண்டபோதும், 'இப்படித்தான் இருந்திருப்பான்" என்று கருத மாட்டான் போலும்!

## 94. சூது

### [சூதாட்டத்தின் தீமைகளும் விளைவுகளும்]

1. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 931

[ப-ரை] வென்றிடினும் - வெற்றியடைந்தாலும், சூதினை - சூதாடலை, வேண்டற்க - விரும்பாதொழிக, வென்றதூஉம் - வென்று அடைந்த பொருளும், தூண்டில் - [இரையினால் மறைந்து] தூண்டிலிருக்கும், பொன் - இரும்பினை, மீன் - மீன், விழுங்கியற்று - விழுங்கியது போலும்.

[க-ரை] தான் வெல்லும் ஆற்றல் உடையவனாக இருந்தாலும் சூதாடலை விரும்பாதிருத்தல் வேண்டும். வென்று பொருளீட்டினாலும் அது இரையில் மறைந்திருக்கும் தூண்டிலிரும்பினை இரையென எண்ணி மீன் விழுங்கியதாகும்.

2. ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு. 932

[ப-ரை] ஒன்று - ஒன்றனை, எய்தி முன்னதாக அடைந்து, நூறு - நூற்றினை, இழக்கும் - பிறகு இழந்து விடும், சூதர்க்கும் - சூதாட்டக்காரர்களுக்கும், நன்று -

அறமும் இன்பமும், எய்தி - பெற்று, வாழ்வதோர் -வாழ்வதொரு, ஆறு - நல்வழி, உண்டாங்கொல் - உண்டாகுமோ?

[க-ரை] ஒன்றை முன்னர் வென்று பிறகு நூற்றினை இழக்கும் சூதர்க்கும் பொருளால் அறமும் இன்பமும் எய்தி வாழ்வதொரு வழி உண்டாகுமோ?

3. உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்
போஒய்ப் புறமே படும். 933

[ப-ரை] உருள் - உருளுகின்ற, ஆயம் - சூதாட்ட ஆயத்தினை, ஓவாது கூறின் - இடைவிடாமல் சொல்லிச் சூதாடுவானானால், பொருள் அவனுடைய பொருளும், ஆயம் - அவனுடைய பொருள் வரும் நெறியும், போஒய் அவனை விட்டுப் போய், புறமேபடும் - பகைவரிடத்தில் தங்கும்.

[க-ரை] உருளும் கவற்றின் (சூதாடும் கருவி கண்பட்ட ஆயத்தினை) ஓயாது சொல்லிச் சூதாடுவானானால் அவன் ஈட்டிய பொருளும் வருவாயும் அவனைவிட்டு நீங்கிப் பகைவரிடத்தே தங்கும்.

4. சிறுமை பலசெய்து சீர் அழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல். 934

[ப-ரை] சிறுமை - துன்பங்கள், பல - பலவற்றையும், செய்து - உண்டாக்கி, சீர்அழிக்கும் - உள்ள புகழினையும் அழிக்கின்ற, சூதின் - சூதினைப் போல, வறுமை தருவது - வறுமையினைக் கொடுக்க வல்லது, ஒன்று இல்-வேறொன்றும் இல்லை.

[க-ரை] தனக்குத் துன்பங்கள் பலவற்றையும் கொடுத்துப் புகழையும் கெடுக்கின்ற சூதினைப் போல வறுமையினைக் கொடுக்கவல்லது பிறிதொன்றும் இல்லையாகும்.

5. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். 935

[ப-ரை] இல்லாகியார் - இருந்தும் இல்லாதவரானவர்கள், [யாரென்றால்] கவறும் - சூதாட்டத்தினையும், கழகமும் - சூதாடும் இடத்தினையும், கையும் - அதற்குரிய கைத் தொழிலினையும், தருக்கி - மேற்கொண்டு, இவறியார் - கைவிடாமல் இருந்தவர்கள் ஆவார்கள்.

[க-ரை] இருந்தும் இல்லாதாராயினோர் யாரென்றால் சூதினையும் அது ஆடப்படும் இடத்தினையும் ஆடுதற்கேற்ற தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாதிருந்தவர்கள் ஆவார்கள்.

6. அகடுஆரார் அல்லல் உழப்பர்சூது என்னும்
முகடியான் மூடப்பட் டார். 936

[ப-ரை] சூது - சூதாட்டம், என்னும் - சொல்லப்படுகின்ற, முகடியான் - முகடி [மூதேவி] யாலே, மூடப்பட்டார் - விழுங்கப் பட்டவர், அகடு - வயிறு, ஆரார் - உண்டு நிறையப் பெறார், அல்லல் - நீங்காத் துன்பத்தில் உழப்பர் - வருந்திக் கொண்டிருப்பர்.

[க-ரை] சூது என்று சொல்லப்படும் முகடியால் விழுங்கப்பட்டவர்கள் வயிறார உண்ணப் பெறார். துன்பத்திலேயே உழன்று கொண்டிருப்பார்கள்.

7. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். 937

[ப-ரை] காலை - நற்பணிபுரிய வேண்டிய காலத்தினை, கழகத்து - சூதாடுமிடத்தில், புகின் - புகுந்து கழிப்பானானால், [அச்செயல்] பழகிய செல்வமும் - தொன்று தொட்டு வந்த செல்வத்தினையும், பண்பும் கெடுக்கும் - நற்குணத்தினையும் கெடுத்து விடும்.

[க-ரை] நற்பணி செய்யவேண்டிய காலமானது சூதாடும் இடத்தில் கழியுமானால் நெடுங்காலமாக வந்த செல்வத்தினையும் நற்குணங்களையும் அது அழிக்கும்.

8. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது. 938

[ப-ரை] சூது - சூதாடுதல், பொருள் - ஒருவனுடைய பொருளையும், கெடுத்து - அழித்து, பொய் - பொய்யினை, மேற்கொண்டு - மேற்கொள்ளச் செய்து, அருள் - அருளான எண்ணத்தினையும், கெடுத்து - கெடுத்து, அல்லல் - துன்பத்தில், உழப்பிக்கும் - உழல வைத்துவிடும்.

[க-ரை] சூதானது, பொருளையும் கெடுத்துப் பொய்யினை மேற்கொள்ளச் செய்து மனத்தில் எழுகின்ற அருளையும் கெடுத்துத் துன்பத்திலேயே உழல வைக்கும்.

9. உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். 939

[ப-ரை] ஆயம்கொளின் - சூதாட்டத்தினை ஒருவன் விரும்பி மேற் கொள்ளுவானானால், [அவனிடம்] ஒளி - புகழும், கல்வி - கல்வியும், செல்வம் - செல்வமும், ஊணும் - உணவும், உடை - உடையும், என்றைந்தும்-என்ற ஐந்தும், அடையாவாம் - அவனிடம் போய்ச் சேராவாம்.

[க-ரை] சூதாட்டத்தினையே ஒருவன் விரும்பி மேற் கொள்ளுவானாகில் அவனிடத்தில் புகழும் கல்வியும் செல்வமும் ஊணும் ஆகிய இவ்வைந்தும் சேராவாம்.

10. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர். 940

[ப-ரை] இழத்தொறூஉம் - பொருளினை இழக்கின்ற போதெல்லாம், காதலிக்கும் - அதன் மேல் ஆசை கொள்ளுகின்ற, சூதே போல் - சூதனைப்போல, உயிர் - உயிரானது, துன்பம் - துன்பத்தினை, உழத்தொறூஉம் -

உடம்பினால் அனுபவிக்கும் போதெல்லாம், காதற்று அவ்வுடம்பின்மீது ஆசை கொள்ளுவதாகின்றது.

[க-ரை] இழக்குந்தோறும் அச்சூதின் மேல் காதல் செய்யும் சூதினைப்போல உடம்பால் துன்பம் அனுபவிக்குந் தோறும் அதன்மேல் உயிர் காதலை உடைத்தாகும்.

## 95. மருந்து

[பிணி தீர்க்கும் மருந்து பற்றியன கூறல்]

1. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 941

[ப-ரை] மிகினும் - ஒருவனுடைய அளவிற்கு மிகுந்தாலும், குறையினும் - குறைந்தாலும், நூலோர் - மருத்துவ நூலாரால், வளி - வாதம், முதலா - முதலாக, எண்ணிய—கூறப்பட்ட, மூன்று-மூன்றும், நோய் செய்யும்- அவனுக்கு நோயினை உண்டாக்கும்.

[க-ரை] உணவு செயல்களும் ஒருவனுடைய அளவுக்கு மிகுமாயினும் குறையுமாயினும் வாதம் முதலாகக் கூறப்பட்ட மூன்று நோயும் துன்பத்தினைக் கொடுக்கும்.

2. மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். 942

[ப-ரை] அருந்தியது - முன்னர் உண்ணப்பட்ட உணவு, அற்றது - செரித்து விட்டதை, போற்றி - தெளிய அறிந்து கொண்டு, உணின் - பின்பு உண்பானானால், யாக்கைக்கு- அவனுடைய உடம்புக்கு, மருந்து - மருந்து, என - என்ற வேறொன்று, வேண்டாவாம் - வேண்டியதில்லையாம்.

[க-ரை] ஒருவன், தான் முன்னதாக உண்ட உணவு அற்ற நிலையை (சீரணித்ததை) அறிந்து பின் உண்ணுவா

னானால் அவனுடைய உடம்புக்கு மருந்து என்று வேறு வேண்டாவாம்.

3. அற்றால் அளவறிந்து உண்க அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு. 943

[ப-ரை] அற்றால் - முன்பு உண்ட உணவு செரித்த பிறகு, அளவு - செரிக்கும் அளவினை, அறிந்து - அறிந்து தெரிந்து, உண்க - உண்ணுவானாக, உடம்பு - பெற்றான், உடம்பினைப், பெற்றவன், நெடிது நீண்டகாலம், உய்க்கும் - அவ்வுடம்பினைக் காப்பாற்றி வைக்கும், நெறி- அஃது அதுவேயாகும்.

[க-ரை] முன்பு உண்டது அற்றதையறிந்து பின்பு உண்பதனைச் சீரணிக்கும் அளவறிந்து உண்ணுதல் வேண்டும். அப்படிச் செய்தால், அது உடம்பினை நெடுங் காலம் கொண்டு செலுத்தும் வழியாகும்.

4. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 944

[ப-ரை] அற்றது-முன்பு உண்ணப்பட்டதுசெரித்ததை, அறிந்து-அறிந்து கொண்டு, துவர - மிக நன்றாக, பசித்து - பசித்துமாறு - தமக்குள் குணமாறுபாடு, அல்ல - இல்லாத [உணவினை] கடைப்பிடித்து-குறியாகக் கொண்டு, துய்க்க - உண்ணுதல் வேண்டும்.

[க-ரை] முன் உண்டது அற்றதையறிந்து, பிறகு நன்றாகப் பசித்து உண்ணுங்கால், தம்முள் மாறுபாடு இல்லாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணுதல் வேண்டும்.

5. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. 945

[ப-ரை] மாறுபாடு - குணமாறுபாடுகள், இல்லாத - இல்லாத, உண்டி - உணவினை, மறுத்து - [மனம் விரும்பிய

அளவு உண்ணாமல்] மறுத்து உண்ணின் - சீரணிக்கும் அளவு உண்டால், உயிர்க்கு - அவனுடைய உயிர்க்கு, ஊறுபாடு - நோய்களினால் துன்பம் உண்டாதல், இல்லை- இல்லையாகும்.

[க-ரை] மாறுபட்ட தன்மைகள் இல்லாத உணவினை மனம் விரும்பிய அளவு உண்ணாமல் அளவறிந்து உண்பானானால் அவன் உயிர்க்குப் பிணிகளால் துன்பம் விளைதல் உண்டாகாது.

6. இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய். 946

[ப-ரை] இழிவு - குறைவாக உண்ணுவதை நல்ல தென்று, அறிந்து - அறிந்து கொண்டு, உண்பான்கண் - உண்பவனிடத்தில், இன்பம் போல - இருக்கின்ற இன்பத்தினைப் போல, கழி - மிகவும், பேர் - பெரிய, இரையான்கண் - இரையினைத் தின்பவனிடத்தில், நோய் - நோய், நிற்கும்-நீங்காது.

[க-ரை] குறைவாக உண்பதை நல்லதென்று அறிந்து உண்பவனிடம் இன்பம் நீங்காமல் நிற்பதைப் போல, மிகப் பெரிய இரையை விழுங்குகிறவனிடம் நோய் நீங்காமல் நிலைத்து நிற்கும்.

7. தீயளவன்றித் தெரியான் பெரிது உண்ணின்
நோய்அள வின்றிப் படும். 947

[ப-ரை] தெரியான் - [தனது உடம்பின் தன்மையினையும் அளவும் காலமும்] தெரியாதவனாகி, தீயள வின்றி - வயிற்று பசியினளவுக்கு மீறி, பெரிது - அதிகமாக, உண்ணின் - உண்ணுவானானால் [அவனிடம்] நோய் - நோய்கள், அளவு - அளவு, இன்றி - இல்லாமல், படும் - உண்டாகும்.

[க-ரை] பசியினளவும் சீரணிக்கும் அளவும் தெரியாத படி மிகுதியாக உண்ணுவானேயானால் அவனிடத்தில் நோய்கள் எல்லையற்று வளரும்.

8. நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 948

[ப-ரை] நோய் - பிணியுற்றோன் பிணியினை, நாடி குறிகளால் அறிந்து, நோய் - நோய் வருவதற்கு, முதல் அடிப்படைக் காரணத்தினை, நாடி - ஆராய்ந்தறிந்து, அது - அந்த நோயினை, தணிக்கும் - தீர்க்கும், வாய் - வழியினை, நாடி - அறிந்து, வாய்ப்ப - அதனைச் செய்யும் வழியினைப் பிழைபடாமல், செயல் - செய்தல் வேண்டும்.

[க-ரை] மருத்துவன் குறிகளால் நோயினை இன்ன தென்று அறிந்து, பின் அது வருதற்குக் காரணத்தினை ஆராய்ந்து அறிந்து அதனை நீக்கும் வழியினை அறிந்து அதனைச் செய்யும் முறை பிழையாமல் செய்தல் வேண்டும்.

9. உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். 949

[ப-ரை] கற்றான் - நூல்களைக் கற்ற மருத்துவன், உற்றான் - நோயுற்றான், அளவும் - அளவினையும், பிணி - நோயினுடைய, அளவு - அளவினையும், காலமும் - தன் செயலுக்கு ஏற்ற காலத்தினையும், கருதிச் செயல் - நூல் நெறியால் நோக்கி அவற்றிற்கு ஏற்பச் செய்தல் வேண்டும்.

[க-ரை] மருத்துவ நூல்களைக் கற்ற மருத்துவன் நோயுற்றோன் அளவினையும், நோயின் அளவினையும், செய்தற்கு ஏற்ற காலத்தையும் நூல் நெறியால் அறிந்து அவற்றோடு பொருந்தச் செய்தல் வேண்டும்.

10. உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து. 950

[ப-ரை] மருந்து - நோய்க்கு மருந்தானது, உற்றவன் - நோயுற்றவன், தீர்ப்பான் - நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து - மருந்து, உழைச் செல்வான் - மருந்தினைப்

பிழை படாமல் செய்பவன், என்று - என்பதாகச் சொல்லப் பட்ட, அப்பால் நாற்கூற்றே - அப்பகுதிகளையுடைய நான்கு வகைப்பட்டதாகும்.

[க-ரை] பிணிக்கு மருந்தென்பது நோயுற்றவன் அதனைத் தீர்க்கும் மருத்துவன், மருந்து அதனைப் பிழை படாமற் செய்வோன் என்று சொல்லப்பட்ட நான்கு பகுதியினையுடையதாகும்.

# ஒழிபு இயல்

## 96. குடிமை

[உயர்ந்த நற்குடியில் பிறந்தாரது தன்மைகள்]

1. இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாக
செப்பமும் நாணும் ஒருங்கு. 951

[ப-ரை] செப்பமும் - நடுவு நிலைமையாகிய தன்மையும், நாணும் - நாணம் என்பதும், ஒருங்கு - ஒன்று சேர்ந்து, இற் பிறந்தார் கண் - உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடம், அல்லது - அல்லாமல், இயல்பாக - இயற்கையாகவே, இல்லை - மற்றவர்களிடம் உண்டாகாது.

[க-ரை] நடுவு நிலைமையாகிய தன்மையும், நாணம் என்பதும் ஒன்று சேர்ந்து, உயர்ந்த குடியில் பிறந்தார்களிடம் அல்லாமல் மற்றவர்களிடம் இயற்கையாகவே உண்டாகாது.

2. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 952

[ப-ரை] குடி - உயர்ந்த குடியின் கண், பிறந்தார் - பிறந்த பெரியோர்கள், ஒழுக்கமும் - நல்லொழுக்கமும், வாய்மையும் - மெய்ம்மையும், நாணமும் - நாணமும்; [எனப்பட்ட] இம்மூன்றும் - இந்த மூன்று தன்மைகளிலும், இழுக்கார் - தவறமாட்டார்கள்.

[ப-ரை] ஒழுக்கமும் வாய்மையும் நாணும் ஆகிய இம்மூன்றினிடத்தும் உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் தாமாகவே வழுவ மாட்டார்கள்.

3. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. 953

[ப-ரை] வாய்மைக் குடிக்கு - எக்காலத்திலும் மாறுபடாத நற்குடியில் பிறந்தவர்க்கு, நகை - முகமலர்ச்சியும், ஈகை - ஈகைக் குணமும், இன் - இனிய, சொல் - சொற்கள் பேசுதலும், இகழாமை - பிறரை இகழாதிருத்தலும், [ஆகிய] நான்கும் - இந்த நான்கு பண்புகளும், வகை என்ப - உரிமையானவைகளாக இருக்கும் என்று கூறுவர்.

[க-ரை] எக்காலத்திலும் திரிதலில்லாத நற்குடியில் பிறந்தார்க்கு முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இனிய சொல் சொல்லலும், இகழாமையும் ஆகிய இந் நான்கும் உரியவை என்று கூறுவர்.

4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 954

[ப-ரை] அடுக்கிய கோடி - கோடிக்கணக்கில் அடுக்கிய பொருளை, பெறினும் - பெறுவதானாலும், குடி - உயர்ந்த குடியிலே, பிறந்தார் - பிறந்தோர்கள், குன்றுவ - ஒழுக்கம் குன்றும் தொழில்களை, செய்தல் - செய்வதில், இலர் - இருக்க மாட்டார்கள்.

[க-ரை] பலவாக அடுக்கிய கோடி அளவினதாகிய பொருளைப் பெற்றாலும் உயர்ந்த குடியின்கண் பிறந்தவர்கள் தம் ஒழுக்கம் குன்றும் தொழில்களைச் செய்ய மாட்டார்கள்.

5. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று. 955

[ப-ரை] பழம் - தொன்று தொட்டு வந்த, குடி - நற்குடியில் பிறந்தவர்கள், வழங்குவது - தமது ஈகைக் குணத்தின் [தன்மையின்] அளவு, உள்வீழ்ந்தக் கண்ணும் - முந்தியதை விடக் குறைந்த போதும், பண்பின் - தமது

உயர்ந்த தன்மையிலிருந்து, தலைப்பிரிதல் - நீங்குதல், இன்று - இல்லையாகும்.

[க-ரை] தொன்று தொட்டு வருகின்ற நற்குடியில் பிறந்தவர்கள் தம்முடைய ஈகைத் தன்மையின் அளவு முன்னையதைவிட சுருங்கியபோதும் தம்முடைய பண்புடைமையினின்றும் நீங்கமாட்டார்கள்.

6. சலம்பற்றிச் சால்பில செய்யார்மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும் என்பார். 959

[ப.ரை] மாசு - குற்றம், அற்ற - இல்லாத, குலம்பற்றி- தமது குடியின் பரம்பரைத் தன்மையில் நின்று, வாழ்தும் - வாழ்ந்து வருவோம், என்பார் - என்பவர்கள், சலம்பற்றி - வஞ்சனைத் தன்மை கொண்டு, சால்பு - பெருந்தன்மைக்கு, இல - பொருந்தாத தொழில்களை, செய்யார் - செய்யமாட்டார்கள்.

[க-ரை] குற்றமின்றி வருகின்ற தமது குடிமரபினோடு ஒத்து வாழக் கடவோம் என்று வாழ்பவர்கள், வறுமையுற்ற காலத்திலும் வஞ்சனையால் தமக்குப் பொருந்தாத செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 957

[ப-ரை] குடி - உயர்ந்த[மேலானவர்கள் பிறந்திருக்கும்] குடியில், பிறந்தார்கண் - பிறந்தவர்களிடத்தில், குற்றம் - காணப்படுகின்ற குற்றமானது, [சிறிதாக இருந்தாலும்] விசும்பின் - வானத்தில் தோன்றும், மதிக்கண்-சந்திரனிடத்தில் காணப்படும், மறுப்போல் - களங்கத்தினைப் போல, உயர்ந்து விளங்கும் - ஓங்கித் தோன்றுவதாகி விடும்.

[க-ரை] உயர்ந்த குடியில் பிறந்தவரிடம் காணப்படும் குற்றம் சிறிதாக இருந்தாலும் வானத்தில் மதியினிடம் மறுப்போல ஓங்கித் 'தோன்றும்.

8. நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். 958

[ப-ரை] நலத்தின்கண் - நற்குடிப் பிறந்தவனாக வருபவனிடத்தில், நார் - அன்பு, இன்மை - இல்லாமை, தோன்றின் - காணப்படுமாகில், அவனை - அப்படிப்பட்டவனை, குலத்தின்கண் - அந்தக் குலப் பிறப்பின்கண்ணே, ஐயப்படும் - உலகம் சந்தேகப்படும்.

[க-ரை] நற்குடியில் பிறந்தவனாக வருபவனிடத்தில் அன்பில்லாமை காணப்படுமானால் அவனை அக்குலப் பிறப்பின் கண்ணே இவ்வுலகம் ஐயப்படும் என்பதாம்.

9. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 959

[ப-ரை] நிலத்தில் கிடந்தமை - நிலத்தினுடைய தன்மையினை, கால்காட்டும் - அங்கே முளைந்த முளையானது காண்பித்து விடும், [அது போல] குலத்தில் - நற்குலத்தின் தன்மையினை, பிறந்தார் - அக்குலத்தில் பிறந்தாருடைய, வாய்ச் சொல் - வாயில் வரும் சொற்கள், காட்டும் - காட்டுவதாகும்.

[க-ரை] நிலத்தின் தன்மையினை அதனிடத்து முளைத்த முளை காட்டும். அதுபோல் நற்குடியின் இயல்பினை அக்குலத்தில் பிறந்தார் வாய்ச் சொற்கள் காட்டும்.

10. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 960

[ப-ரை] நலம் - ஒருவன் நன்மையுடைமையினை, வேண்டின் - விரும்புவானாகில், நாணுடைமை - நாணம் உடையவனாக இருத்தலை, வேண்டும் - விரும்புவானாக, குலம் - நற்குலமுடைமையினை, வேண்டின் - விரும்புவானாகில், யார்க்கும் - வணங்குதற்குரிய யாவரிடத்திலும், பணிவுவேண்டுக - வணங்கி நடத்தலை விரும்ப வேண்டும்.

[க-ரை] ஒருவன் தனக்கு நன்மையினை விரும்புவானாயின் அவன் நாணமுடைமையினை விரும்புதல் வேண்டும். நற்குலமுடைமையினை விரும்புவானாயின் பணியப்படுவார். எல்லோரிடமும் பணிதல் வேண்டும்.

## 97. மானம்

[எக்காலத்திலும் தனது நிலையிலிருந்து தாழாமை]

1. இன்றி அமையாச் சிறப்பினை ஆயினும்
குன்ற வருப விடல். 961

[ப-ரை] இன்றி - செய்யாதபோது, அமையா - உயிர் வாழமுடியாத சிறப்பின் - சிறப்பினையுடையதே, ஆயினும் - லும், குன்ற வருப - தனது குடிப்பிறப்புத் தாழ வருவதான செயல்களை, விடல் - விட்டு விடுதல் வேண்டும்.

[க-ரை] செய்யாதபோது உயிர்வாழ முடியாத நிலை ஏற்படுவதாக இருந்தாலும் தம் குடிப்பிறப்புத் தாழ வரும் செயல்களைச் செய்யாதிருத்தல் வேண்டும்.

2. சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 962

[பரை] சீரொடு - புகழ் என்பதுடனே, பேராண்மை - தமது மானத்தினையும், வேண்டுபவர் - காப்பாற்ற விரும்புகின்றவர்கள், சீரினும் - புகழ் தேடும் காலத்திலும், சீர் - தமது குடியின் பெருமைக்கு, அல்ல - தகாத இழி தொழில்களை, செய்யார் - செய்யமாட்டார்கள்.

[க-ரை] புகழுடனே மானத்தினை நிலை நாட்டுதலை விரும்புகிறவர்கள் புகழினை நாடும்போதும் தம் குடிமைக்கு இழிவான செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963

[ப-ரை] பெருக்கத்து - நற்குடிப் பிறந்தார்க்கு நிறைந்த செல்வம் உண்டான போது, பணிதல் வேண்டும் - யாவரிடத்தும் பணிவு வேண்டும், சிறிய - குறைந்த, சுருக்கத்து - செல்வம் சுருங்கி வறுமையுண்டான போது, உயர்வு வேண்டும்-உயர்ச்சியான தன்மை வேண்டுவதாகும்.

[க-ரை] நற்குடியில் பிறந்தார்க்கு நிறைந்த செல்வம் உண்டானபோது யாவரிடத்தும் பணிவு வேண்டும். செல்வம் குறைந்து வறுமையுண்டான போது உயர்ச்சி வேண்டுவதாகும்.

4. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 964

[ப-ரை] மாந்தர் - நற்குடியில் பிறந்த மாந்தர், நிலையின் - உயர்வான தமது நிலையிலிருந்து, இழிந்தக் கடை - தாழ்ந்து விட்ட போது, தலையின்-தலையிலிருந்து, இழிந்த - வீழ்ந்த, மயிர் - மயிரினை, அனையர் - ஒப்பவராவர்.

[க-ரை] நற்குடியில் பிறந்த மக்கள் தம்முடைய உயர்ந்த நிலையைவிட்டுத் தாழ்ந்தபோது தலையைவிட்டு நீங்கி வீழ்ந்த மயிரினை ஒப்பர்.

5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 965

[ப-ரை] குன்றின் - குன்றினை, அனையாரும்-போன்று உயர்ந்தோரும், குன்றி - குன்றிமணி, அனைய - அளவினதாக, குன்றுவ - தாழ்தற்குக் காரணமான செயல்களை, செயின் - செய்தாலும், குன்றுவர் - தாழ்ந்து விடுவார்கள்.

[க-ரை] குடிப்பிறப்பால் குன்றினைப் போல் உயர்ந்தோரும் தாழ்தற்குக் காரணமான செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்வாராயின் தாழ்ந்துவிடுவர்.

6. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை. 966

[ப-ரை] இகழ்வார் - தன்னை அவமதிப்பார், பின் - பின்னே, சென்று நிலை - [மானத்தைவிட்டு] சென்று நிற்கின்ற நிலை, புகழ் - இவ்வுலகிலும் புகழினை, இன்றால் - தராது, புத்தேள் நாட்டு - புத்தேளிர் நாட்டிலும், உய்யாது - அவனைச் செலுத்தாது, [அப்படியிருக்க] மற்றுஎன் - அவன் அவ்வாறு நடந்து கொள்வது ஏன்?

[க-ரை] மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே ஒருவன் சென்று நிற்கின்ற நிலை இவ்வுலகில் புகழினையும் கொடுக்காது. புத்தேள் உலகத்தும் செலுத்தாது. இனி, அவன் அப்படி நடப்பதுஏன்?

7. ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967

[ப-ரை] ஒட்டார் - தன்னை இகழ்பவர், பின் - பின்னே, சென்று - போய், ஒருவன் - ஒருவன், வாழ்தலின் - உயிர் வாழ்வதைவிட, அந்நிலையே - தனது நிலையில் நின்றே, கெட்டான் - இறந்தான், எனப்படுதல் நன்று - சொல்லப்படுதல் நல்லதாகும்.

[க-ரை] தன்னை இகழ்வார் பின்னே சென்று ஒருவன் வாழ்வதைவிட அப்படிச் செய்யாமல் இறந்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று.

8. மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடுஅழிய வந்த இடத்து. 968

[ப-ரை] பெருந்தகைமை - உயர்குடிப் பிறப்பின் தன்மையான, பீடு - பெருமையாகிய மானம், அழிய - அழிந்து போக, வந்த இடத்து - வந்தகாலத்தில் [இறவாமல்] ஊன் - உடம்பினை, ஓம்பும் - காப்பாற்றும்

வாழ்க்கை -வாழ்க்கையானது, மற்று மருந்தோ - பின்னும் பிறவாதிருப்பதற்கு மருந்தாகுமோ?

[க-ரை] உயர்குடிப் பிறப்புத் தன்மையாகிய மானம் அழிய வந்தபோது இறவாமல் இவ்வுடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னும் இறவாமைக்கு மருந்தாகுமோ?

9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 969

[ப-ரை] மயிர் - தனது மயிர்த்திரளில் ஒரு மயிர், நீப்பின் - நீங்கினாலும், வாழா - உயிர் வாழாத, கவரிமா - கவரிமானை, அன்னார் - ஒத்தவர்கள், மானம் வரின் - தங்கள் மானம் பெருமளவு கெடவரின், உயிர் நீப்பர் - உயிரை விட்டு விடுவர்.

[க-ரை] தன்னுடைய மயிர்த்திரளில் ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர்கள் தங்கள் (உயிர் நீங்குவதற்கான) மானம் கெடவரின் தாங்காது இறப்பர்.

10. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970

[ப-ரை] இளிவரின் - ஓர் இழிவு வந்தபோது, வாழாத- உயிர் வாழாமல் [உயிர் நீத்த] மானம் - மானத்தினை, உடையர் - உடையர்களது, ஒளி - புகழினை, உலகு - உலகத்தார், தொழுது - வணங்கி, ஏத்தும் - துதிப்பர்.

[க-ரை] தமது மானத்திற்கு இழிவு வந்துற்றபோது உயிர் வாழாமல் இதனை நீத்த, மானமுடையாரது புகழ் வழியினை எப்போதும் உலகத்தார் தொழுது துதிப்பர்.

# 98. பெருமை

[மிகச்சிறந்த நற்குணங்களால் பெரியாராயினோரது தன்மைகள்]

1. ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளியொருவற்கு
அஃதுஇறந்து வாழ்தும் எனல். 971

[ப-ரை] ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒளி - புகழ் என்பது, உள்ள - செயற்கரிய செய்வோம் என்று கருதும், வெறுக்கை - ஊக்க மிகுதியாகும், ஒருவற்கு - ஒருவனுக்கு இளி - குற்றமாவது, [என்னவென்றால்] அஃது - அச் செயலை, இறந்து - நீக்கி, வாழ்தும் - வாழ்ந்திருப்போம், எனல் - என்று நினைப்பதாகும்.

[க-ரை] ஒருவனுக்குப் புகழாவது பிறரால் செயற்கரிய செய்வோம் என்று கருதும் ஊக்க மிகுதியேயாகும். ஒருவனுக்கு இழிவாவது அச்செயலினை ஒழித்து வாழக் கடவோம் என்று கருதுதலாகும்.

2. பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 972

[ப-ரை] எல்லா - எல்லா, உயிர்க்கும் - மக்கள் உயிர்க்கும், பிறப்பு ஒக்கும் - பொதுவாக இருக்கும் பிறப்பின் தன்மை ஒரு தன்மையாகத்தான் இருக்கும், [ஆனால்], செய் - அவரவர் செய்கின்ற, தொழில் - நல்லன தீயன வாகிய தொழில்களது, வேற்றுமையான் - வேறுபாட்டால், சிறப்பு - பெருமை சிறுமை என்று கூறப்படும் சிறப்புத் தன்மைகள், ஒவ்வா - ஒத்திருக்காவாம்.

[க-ரை] எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பின் தன்மைஒத்ததேயென்றாலும், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா. ஏனெனில், அவை

அவரவர் செய்யும் தொழில்களது வேறுபாட்டால், என்பதாகும்.

3. மேல்இருந்தும் மேலல்லார் மேல்அல்லர் கீழ்இருந்தும்
கீழ் அல்லார் கீழல் லவர். 973

[ப-ரை] மேல் - மேலான செயல்களை, அல்லர் - செய்யாமல் சிறியராயினர், மேல் - உயர்ந்த நிலையில், இருந்தும் - இருந்தாலும், மேல் - மேலான பெரியோர், அல்லர் - ஆகமாட்டார்கள், கீழ் அல்லவர் - அரிய செயல் புரிந்து பெரியாராயினோர், கீழ் - தாழ்ந்த நிலையில், இருந்தும் - இருந்தாலும், கீழ் அல்லார் - சிறியராக மாட்டார்கள்.

[க-ரை] செயற்கரிய செய்யாமல் சிறியராயினோர் உயர்ந்த நிலைகளில் இருந்தாராயினும் பெரியராகார். அச் செயல்களைச் செய்து பெரியராயினோர் தாழ்ந்த நிலை யில் இருந்தாலும் சிறியராகார்.

4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு. 974

[ப-ரை] ஒருமை - உறுதிப்பாடான ஒரு மனங் கொண்ட, மகளிரே போல - கற்புள்ள பெண்களைப் போல, பெருமையும் - பெருஞ்சிறப்பும், தன்னைத்தான் - நிறைகுணத்தில் வழுவாமல் தன்னைத்தானே, கொண்டு - நிறை குணத்திலிருந்து காத்துக்கொண்டு, ஒழுகின் - நடப்பானாகில், உண்டு - உண்டாகும்.

[க-ரை] மாறுபடாத மனத்தினையுடைய மகளிர் நிறைகுணத்தில் வழுவாமல் தம்மைக் காத்துக்கொண்டு ஒழுகுதல் போல, பெருமைக்குணமும் ஒருவன் நிறை குணத் தில் வழுவாமல் தன்னைத்தான் காத்துக்கொண்டு நடப் பானாகில் உண்டாவதாகும்.

5. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 975

[ப-ரை] பெருமை - பெருமைக்குணம், உடையவர் - உடைய பெரியோர்கள், அருமையுடைய - செயற்கரியவை யான, செயல் - செயல்களை, ஆற்றின் - செய்து முடிக்க வேண்டிய நல்ல நெறியில், ஆற்றுவார் - செய்து முடிப்ப தில் வல்லவராவார்.

[க-ரை] பெருமையுடையவர் தாம் வறுமையிலிருந் தாலும் பிறரால் செய்தற்கு அருமையான செயல்களை விடாமல் அவைகளைச் செய்யும் நெறியில் முடிவு பெறச் செய்வதில் வல்லவராவர்.

6. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. 976

[ப-ரை] பெரியாரை - பெரியாரை, பேணி - போற்றி அவர் வழி நின்று, கொள்வோம் - அவர் இயல்பினைக் கொள்ளுவோம், என்னும் - என்கின்ற, நோக்கு - சிந்தனை, சிறியார் - சிறியவர்களுடைய, உணர்ச்சியுள் - மனத்தில், இல்லை - இருக்காது.

[க-ரை] ஆற்றல் மிகுந்த பெரியோரை வழிபட்டு அவர் இயல்பினைக் கைக் கொள்ளுவோம் என்னும் கருத்து, மற்றைச் சிறியோர் மனத்தில் உண்டாகாது.

7. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின். 977

[ப-ரை] சிறப்புந்தான் - சிறப்பானவை என்று கருதப் படுபவையும், சீர் - பெருமைக்கு, அல்லவர்கண் - தகுதி யற்ற சிறியவர்களிடத்தில், படின் - இருந்து விடுமானால், இறப்பே புரிந்த - அமைதியின்றிச் செருக்கு மிகுந்து செய்யும், தொழிற்றாம் - தொழில்களையே செய்யுமாம்.

[க-ரை] சிறப்பானவை, தகாத சிறியவர்களிடத்தில் இருந்து விடுமானால் அவை செருக்கு மிகுந்த செய்யும் தொழில்களையே செய்யும் என்பதாம்.

8. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 978

[ப-ரை] பெருமை - பெருமையுடையவர்கள், என்றும் - சிறப்புண்டான போதும், பணியும் - பணிவாக நடந்து கொள்ளுவார்கள், சிறுமை - சிறுமையுடையவர்கள், தன்னை - தம்மை, வியந்து - தாமே புகழ்ந்து கொண்டு, அணியுமாம் - சிறப்பித்துக் கொள்ளுவார்கள்.

[க-ரை] பெருமையுடையவர்கள் சிறப்பு உண்டான போதும் பணிவுடன் அமைந்து ஒழுகுவார்கள். மற்றைச் சிறுமையுடையார் அது இல்லாதபோதும் தம்மை மெச்சிக் கொண்டு சிறப்பித்துக் கொள்வர்.

9. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். 979

[ப-ரை] பெருமை - பெருமைக் குணம் என்பதாவது, பெருமிதம் - செருக்கு, இன்மை - இல்லாதிருத்தலாகும், சிறுமை - சிறுமைக் குணம் என்பது, பெருமிதம் - காரணம் இல்லாத போதும் செருக்குடன், ஊர்ந்துவிடல் - அச் செருக்கினை ஏற்றுக்கொண்டு நடத்தலாகும்.

[க-ரை] பெருமைக்குணம் என்பதாவது காரணம் உண்டானபோதும் தருக்கின்றி இருத்தலாகும். சிறுமைக் குணமாவது காரணமின்றியே தன்னைச் செருக்கின்கண் நிறுத்திக் கொள்ளுவதாகும்.

10. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 980

[ப-ரை] பெருமை - பெருமையுடைய பெரியோர்கள், அற்றம் - பிறருடைய குறைபாடான குற்றத்தினை

மறைத்துப் பேசுவர், சிறுமை - சிறுமைக்குணம் படைத்தோர், குற்றமே - பிறர் நற்குணத்தை மறைத்துக் குற்றத்தினையே, கூறிவிடும் - சொல்லிக் கொண்டிருப்பர்.

[க-ரை] பெருமையுடையவர்கள் பிறருடைய சிறப்பினையே கூறி அவமானத்தை மறைத்து விடுவார்கள். மற்றைச் சிறுமையுடையார் பிறருடைய நற்குணத்தை மறைத்துக் குற்றத்தினையே கூறிக்கொண்டிருப்பர்.

## 99. சான்றாண்மை

[நற்குணங்கள் பலவும் நிறைந்தவர்கள்]

1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 981

[ப-ரை] கடன் - தமக்குக் கடமையாக இது நல்லது என்று, அறிந்து - நன்கு அறிந்து, சான்றாண்மை - சால்பு என்ற பல நற்குணங்களும் நிறைந்த பண்பினை, மேற்கொள்பவர்க்கு - மேற்கொண்டு ஒழுகுபவர்களுக்கு, நல்லவை - நற்பண்புகள், எல்லாம் - அனைத்தும், கடன் என்ப - இயற்கையாகவே இருக்கும் என்று நூலோர் கூறுவர்.

[க-ரை] தமக்குச் சிறந்தது என்று அறிந்து சான்றாண்மையினை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு நல்ல குணங்கள் எல்லாம் இயல்பாக இருக்கும் என்று நூலோர் சொல்லுவர்.

2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று. 982

[ப-ரை] சான்றோர் - சான்றோர்களுக்கு, நலம் - நலமானது [அழகு] குண - நற்குணங்களினாலான, நலனே-

நலமேயாகும், பிற - மற்றைய, நலம் - உறுப்புக்கள் முதலியவற்றாலான நலம், எந்நலத்து - ஒரு நலத்திலும், உள்ளதூஉம் அன்று - உள்ளது ஆகாது.

[க-ரை] சான்றோர்க்கு அழகாவது குணநலன்களாகிய அழகேயாகும். அது நீங்கி ஏனைய உறுப்பு முதலியன வற்றால் உண்டான அழகு எந்த அழகிலும் உள்ளதாகாது.

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். 983

[ப-ரை] அன்பு - அன்புடைமையும், நாண் - பழி பாவங்கட்கு நாணுதலும், ஒப்புரவு - யாவரிடத்தும் ஒப்புரவு செய்தலும், கண்ணோட்டம் - பழைய நண்பர்களிடத்தில் கண்ணோட்டம் காட்டலும், வாய்மையோடு - எவ்விடத்தும் மெய்ம்மை கூறலும், [என] ஐந்தும் - ஐந்தும் சால்பு - சான்றாண்மை என்பதனை, ஊன்றிய தூண் - தாங்கிய தூண்களாகும்.

[க-ரை] அன்பும், நாணமும், ஒப்புரவும், கண்ணோட்டமும், வாய்மையும் என்ற ஐந்தும் சால்பு என்கின்ற பாரத்தினைத் தாங்கும் தூண்கள் ஆகும்.

4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 984

[ப-ரை] நோன்மை - நோன்பு நோற்கும் தவமானது, கொல்லா - ஓர் உயிரையும் கொல்லாத, நலத்தது - அறத்தினது ஆகும், சால்பு - சால்பு என்பது, பிறர் - மற்றவர்களுடைய, தீமை - குணங்களை, சொல்லா - சொல்லாத, நலத்தது - குணத்தினையுடையதாகும்.

[க-ரை] தவம் செய்கின்ற நோன்பு என்பது ஓர் உயிரையும் கொல்லாத அறத்தின் கண்ணதாகும். அது போல, சால்பு என்பது பிறர் குற்றத்தினைச் சொல்லாத குணத்தின் கண்ணதாகும்.

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 985

[ப-ரை] ஆற்றுவார்-செயலைச் செய்து முடிப்பவரது, ஆற்றல் - வலிமையானது [யாதெனில்] பணிதல் - அதற்கானவர்களைத் தாழ்ந்து பணிந்து துணையாக்கிக் கொள்ளுதல், சான்றோர் - சான்றோர்கள், மாற்றாரை - பகைவரின், மாற்றும் - பகைமையை யொழிக்கும், படை - கருவியும், அது - அதுவேயாகும்.

[க-ரை] ஒரு செயலினைச் செய்து முடிப்பவரது வலிமை என்னவென்றால் அதற்குத் துணையாவாரைப் பணிந்து கூட்டிக்கொள்ளுதலாகும். சால்புடையார் தம் பகைவரின் பகைமையொழிக்கும் கருவியும் அதுவேயாகும்.

6. சால்பிற்குக் கட்டளை யாதுஎனின் தோல்வி
துலைஅல்லார் கண்ணும் கொளல். 986

[ப-ரை] சால்பிற்கு - சால்பாகிய பொன்னினை அளந்தறிவதற்கு, கட்டளை - உரைதல் என்னும் செயல், யாது - எது, எனின் - என்றால், தோல்வி - தோல்வியினை, துலை - தமக்குச் சமமாக, அல்லார் கண்ணும்-இல்லாதவர்களிடத்திலும், கொளல் - ஏற்றுக் கொள்ளுதலாகும்.

[க-ரை] சால்பாகிய பொன்னினை அளந்தறியும் உரைகல்லாகிய செயல் யாது என்றால், தம்மைவிட உயர்ந்தாரிடம் கொள்ளுவதாகிய தோல்வியை இழிந்தார் மாட்டும் கொள்ளுதலாகும்.

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 987

[ப-ரை] இன்னா செய்தார்க்கும் - துன்பம் செய்தவர்களுக்கும், இனியவே - இனியவற்றையே, செய்யாக்கால் - செய்யாமற் போனால், சால்பு - சான்றாண்மை என்பது,

என்ன - வேறு என்ன, பயத்ததோ - பயனை உடையதாகும்.

[க-ரை] தனக்குத் துன்பத்தினைச் செய்தார்க்கும் சால்புடையார் இனியவற்றைச் செய்யாமற் போனால் அச்சால்பு வேறு என்ன பயனை உடைத்து?

8. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 988

[ப-ரை] சால்பு - சான்றாண்மை, என்னும் - என்று சொல்லப்படும், திண்மை - வலிமையானது, உண்டாகப் பெறின் - உண்டாகி இருந்து விட்டால், ஒருவற்கு - ஒருவனுக்கு, இன்மை - வறுமையானது, இளிவு - இழிவுடையது, அன்று - ஆகாது.

[க-ரை] சான்றாண்மை என்று சொல்லப்படும் வலிமையானது உண்டாகப் பெற்றால், ஒருவனுக்கு வறுமையானது இழிவுடையதாகாது.

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். 989

[ப-ரை] சான்றாண்மைக்கு - சான்றாண்மையாகிய கடலுக்கு, ஆழி - கரை, எனப்படுவார் - என்று சொல்லப் படுவோர், ஊழி பெயரினும் - [அந்தக் கடலும் கரை கடந்து] காலம் வேறுபட்டாலும், தாம் - சான்றாண்மை கொண்ட தாம், பெயரார் - வேறுபடமாட்டார்கள்.

[க-ரை] சான்றாண்மை என்கின்ற கடலுக்குக் கரை என்று சொல்லப்படுவோர், அக்கடலும் கரையுள்ளில்லாமல் காலம் திரிந்தாலும் தாம் திரிய மாட்டார்கள்.

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 990

[ப-ரை] சான்றவர் - சான்றாண்மையாளர்கள், சான்றாண்மை - சால்பு என்கின்ற தன்மையில், குன்றின் -

குன்றிவிடுவாராயின், இரு - இப்பெரிய, நிலந்தான் - பூமியும், பொறை - தனது பாரத்தினை, தாங்காது பொறுத்துக் கொள்ள முடியாததாகிவிடும். [மன்னோ - அசை நிலை]

[க-ரை] சான்றோர்கள் தங்களுடைய சான்றாண்மை என்னும் தன்மையில் குன்றிவிடுவாராயின் மற்றைய இப்பூமியும் தன் பாரத்தினைத் தாங்காததாக முடியும்.

## 100. பண்பு உடைமை

[பெருமை சான்றாண்மைகளால் நிறைந்த நற்குணம்]

1. எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 991

[ப-ரை] யார்மாட்டும் - யாவரிடத்திலும், எண்பதத்தால் - எளிமையாகப் பழகுபவராக இருத்தல், பண்புடைமை - பண்பு உடைமை, என்னும் - எனப்படுகின்ற, வழக்கு-நல்ல நெறியினை, எய்தல் - அடைவதற்கு, எளிது என்ப - எளிதானதென்று நூலோர் கூறுவர்.

[க-ரை] யாரிடத்திலும் எளிய தன்மையராய் இருத்தல் பண்புடைமையென்னும் அரியதான நல்வழியை அடைதற்கு எளிது என்று நூலோர் சொல்லுவர்.

2. அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல்இவ்விரண்டும்
பண்புஉடைமை என்னும் வழக்கு. 992

[ப-ரை] அன்புடைமை - அன்புடையவனாக இருத்தலும், ஆன்ற - உலகத்தோடு அமைந்து ஒழுகும், குடி - நற்குடியில், பிறத்தல் - பிறந்திருத்தலும், இவ்விரண்டும் - ஆகிய இந்த இரண்டும், பண்பு உடைமை - பண்-

உடைமை, என்னும் - என்று கூறப்படும், வழக்கு - நன்னெறியாகும்.

[க-ரை] பிறர்மேல் அன்புடையவராதலும், தொன்று தொட்டு வந்த நற்குடிப்பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் ஒருவனுக்குப் பண்புடைமை என்று உலகத்தார் சொல்லும் நன்னெறியாகும்.

3. உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு. 993

[ப-ரை] உறுப்பு - உடம்பு உறுப்புக்களால், ஒத்தல் - பிறருடன் ஒத்திருத்தல், மக்கள் - மக்களோடு, ஒப்பு அன்று - பொருந்திய ஒப்பாகாது, ஒப்பதாம் - பொருந்துவதாகிய, ஒப்பு ஒத்திருத்தலாவது, வெறுத்தக்க - நிலைபெறுதலுடைய, பண்பு - பண்புடைமையால், ஒத்தல் - ஒத்திருத்தலாகும். [ஆல் - அசைநிலை]

[க-ரை] உடம்பின் உறுப்புக்களால் ஒத்திருத்தல் ஒருவனுக்கு நன் மக்களோடு ஒப்பாகாமையினால் அது பொருந்துவதன்று. இனிப் பொருந்துவதாகிய ஒப்பாவது பண்புடைமையால் ஒத்திருத்தலாகும்.

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. 994

[ப-ரை] நயனொடு - நீதியுடன், நன்றி - அறத்தினையும், புரிந்த - விரும்புபவர்களாகி, பயனுடையார் - தமக்கும் பிறர்க்கும் பயனுடைய மக்களது, பண்பு - பண்பினை உலகு பாராட்டும் - உலக மக்கள் பாராட்டுவார்கள்.

[க-ரை] நீதியையும் அறத்தினையும் விரும்பி பிறர்க்கும் தமக்கும் பயன்படுதலை உடையவரது பண்பினை உலகத்தார் கொண்டாடி நிற்பர்.

5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புஉள பாடறிவார் மாட்டு. 995

[ப-ரை] இகழ்ச்சி - தன்னை இகழ்தல் என்பது, நகையுள்ளும் - விளையாட்டின் கண்ணும், இன்னாது - துன்பத்தினைத் தருவதாகும், பாடறிவார் - பிறர்தன்மையறிந்து நடப்பவரிடத்து, பகையுள்ளும் - பகைமையுண்டான காலத்திலும், பண்புஉள - இனிமையான பண்புகள் இருப்பனவாகும்.

[க-ரை] தன்னை இகழ்தல் என்பது ஒருவற்கு விளையாட்டின் கண்ணும் துன்பம் தருவதாகும். ஆதலால் பிறருடைய தன்மையறிந்து நடப்பவரிடத்தில் பகையுள்ள போதும் இனிமையான நற்பண்புகள் இருப்பனவாகும்.

6. பண்புஉடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். 996

[ப-ரை] பண்பு உடையார் - பண்பு நிறைந்த மக்களிடத்திலே, பட்டு - இருந்து வருவதால், உலகம் உண்டு - உலகியல் நடப்பு எப்போதும் நிலை பெற்று நடந்து வருவதாகின்றது, இன்றேல் - அவ்வாறு பண்புடையார் மாட்டு இல்லையானால், அது - அந்த உலகியல், மண் - மண்ணிலே, புக்கு - புகுந்து, மாய்வது - மாய்ந்து போவதாகும், [மன் - அசைநிலை]

[க-ரை] பண்புடையவர்கள் இந்த உலகின்கண்ணே உள்ளதால் உலகியல் எந்நாளும் இருந்து வருவதாகின்றது. அவ்வாறு இல்லையாயின் அது மண்ணில் புகுந்து மாய்ந்து போவதாகும்.

7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். 997

[ப-ரை] மக்கள் - நன்மக்களுக்கு இருக்க வேண்டிய, பண்பு - நற்குணம், இல்லாதவர் - இல்லாதவர்கள், அரம்

போதும் - பொருள்களைத் தேய்க்கின்ற அரத்தினைப் போன்று, கூர்மையரேனும் - கூர்மையான புத்தியுடைய வராக இருந்தாலும், மரம் - ஓர் அறிவினையுடைய மரத்தினை, போல்வர் - போன்றவர்களேயாவார்கள்.

[க-ரை] நன்மக்களுக்குரிய பண்பில்லாதவர்கள் அறத்தினைப் போன்று கூர்மையுடைய புத்தியுடையவரானாலும் ஓர் அறிவினையுடைய மரத்திற்கு ஒப்பாவார்கள்.

8. நண்புஆற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்புஆற்றா ராதல் கடை. 998

[ப-ரை] நண்பு - தம்முடனே நட்பினை, ஆற்றாராகி - செய்யாதவர்களாகி, நயமில - நன்மையல்லாத [பகைமையினை], செய்வார்க்கும் - செய்து நடந்து கொள்ளுபவரிடத்திலும், பண்பு - தாம் பண்புள்ளவராக, ஆற்றாராதல் - மேற்கொண்டு நடவாதிருப்பது, கடை - நன்மக்களுக்குக் குற்றமாகும்.

[க-ரை] தம்முடன் நட்பு கொள்ளாமல் பகைமையினைச் செய்து ஒழுகுவாரிடத்திலும் தாம் பண்புடையவராக நடந்து கொள்ளாதிருத்தல் அறிவுடையார்க்குக் குற்றமேயாகும்.

9. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். 999

[ப-ரை] நகல் வல்லர் - நற்பண்பு இல்லாததால் எவரிடத்தும் கலந்து மகிழ்தல், அல்லார்க்கு - அல்லாதவர்களுக்கு, மா - மிகவும், இரு - பெரிய, ஞாலம் - பூமியானது, பகலும் - பகற்பொழுதிலும், இருள் பாற் பட்டன்று - இருளிலேயே கிடைத்ததாகும்.

[க-ரை] பண்பில்லாததால் ஒருவரோடும் கலந்து மனமகிழும் தன்மை இல்லாதவர்களுக்கு மிகப்பெரிய இந்த ஞாலம் இருளில்லாத பகல் பொழுதிலும் இருளின்கண் இருந்ததாகும்.

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரி ந்தற்று. 1000

[ப-ரை] பண்பு - நற்பண்பு, இலான் - இல்லாத ஒருவன், பெற்ற - பெற்றிருக்கின்ற, பெரும் - பெரிய, செல்வம் - செல்வமானது, நன்பால் - பசுவின் நல்ல பால், கலம் - வைக்கப்பட்ட பாத்திரத்தின், தீமையால் - குற்றத் தால், திரிந்தற்று - கெட்டு விட்டது போன்றதாகும்.

[க-ரை] பண்பில்லாதவன் பெற்ற பெரிய செல்வம் பயன்படாமல் கெடுதலால் பசுவின் நல்ல பால் பாத்திரத் தின் குற்றத்தினால் இன்சுவையின்றிக் கெட்டது போன்ற தாகும்.

## 101. நன்றியில் செல்வம்

[சேர்த்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படாமல் போகும் செல்வம்]

1. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுஉண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல். 1001

[ப-ரை] வாய் - தனதுமனை அகல மெல்லாம், சான்ற- நிறையும், பெரும் - பெரிய, பொருள் - செல்வத்தினை, வைத்தான் - சேர்த்து வைத்தான், அஃது - அச்செல்வத் தினை உண்ணான் [உலோபத்தன்மையால்] அனுபவிக்கா தவன், செயக்கிடந்தது - அச் செல்வத்தினைத் தான் நுகரும் உரிமை, இல் - இல்லாத காரணத்தால், செத்தான் - செத்தவனே யாவான்.

[க-ரை] தமது வீடு நிறைய பெருஞ் செல்வத்தினைத் தேடிவைத்து உலோப குணத்தினால் உண்ணாதவன், உயிரோடிருப்பினும் செத்தவனேயாவான். அச்செல்வத்

தின்கண் அவன் செய்வதோடு உரிமை இல்லாத காரணத்தினால் என்பதாம்.

2. பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு. 1002

[ப-ரை] பொருளான் - செல்வம் ஒன்றினாலேதான், எல்லாம் ஆம் - எல்லாம் உண்டாகும், என்று - என்று அறிந்து [அதனைச் சம்பாதித்து] ஈயாது - பிறர்க்கும் ஈதல் செய்யாமல், இவறும் - உலோபியாக வாழும், மருளான் - மயக்கம், ஆம் - உண்டாவதாகும்.

[க-ரை] பொருளொன்றினால் தான் எல்லாம் உண்டாகும் என்று அறிந்து அதனைச் சேர்த்துப் பிறர்க்கு யாதொன்றும் ஈயாது உலோபத்தனம் செய்யும் மயக்கத்தினாலே ஒருவனுக்கு நிறைதலில்லாத இழிபிறப்பு உண்டாகும்.

3. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. 1003

[ப-ரை] ஈட்டம் - பொருள் மிகுதியும் சேர்ப்போம் என்று, இவறி - பொருள் ஈட்டுவதில் மட்டுமே விருப்பப்பட்டு, [அப்பொருளினால்] இசை - புகழினை, வேண்டா - விரும்பாத, ஆடவர் - மக்களுடைய, தோற்றம் - பிறப்பானது, நிலக்குப் பொறை - இப்பூமிக்குப் பாரமேயாகும்.

[க-ரை] பொருள் மிகுதியாகச் சேர்ப்பதையே விரும்பி அதன் பயனான புகழினை விரும்பாத மக்களது பிறப்பு இப்பூமிக்குப் பாரமேயாகும்.

4. எச்சம்என்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன். 1004

[ப-ரை] ஒருவரால் - ஒருவராலும், நச்சப்படாஅதவன் - விரும்பப்படாதவன், எச்சம் - தனக்குப் பிறகு எஞ்சி நிற்பது, என்று - என்பதாக, என் - எதனை, எண்ணுங் கொல்லோ - எண்ணுவானோ?

[க-ரை] ஈதல் தன்மை இல்லாததால் ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்த பிறகு எஞ்சி நிற்பது என்பதாக எதனை எண்ணுவானோ?

5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். 1005

[ப-ரை] கொடுப்பதூஉம் - பிறர்க்கு ஈகையினைச் செய்வதும், துய்ப்பதூஉம் - தான் நுகர்வதும், இல்லார்க்கு - ஆகிய இரண்டும் இல்லாதார்க்கு, அடுக்கிய - பற்பலவாக அடுக்கிச் சேர்ந்த, கோடி - கோடியளவான பொருள், உண்டாயினும் - உண்டாகி இருந்தாலும், இல் - பயன் ஒன்றும் இல்லையாகும்.

[க-ரை] பிறர்க்கு ஈகை செய்வதும் தாம் நுகர்வதும் ஆகிய இரண்டு செய்கையும் இல்லாதவர்களுக்கும் பலவாக அடுக்கிய கோடிப் பொருள் உண்டாயினும் பயன் ஒன்றும் இல்லையாம்.

6. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கு ஒன்று
ஈதல் இயல்பிலா தான். 1006

[ப-ரை] தான்-செல்வம் படைத்த தானும், துவ்வான்-நுகராதவனாகிய, தக்கார்க்கு - தகுதியான நல்லவர்களுக்கு ஒன்று - ஒரு பொருளினை, ஈதல் - கொடுக்கும், இயல்பிலாதான் - ஈகைத் தன்மை இல்லாதவன், பெரும் - பெரிய, செல்வம் - செல்வத்திற்கு, ஏதம் - ஒரு நோயாவான்.

[க-ரை] தான் நுகர்ந்து அனுபவியானாகி தகுதியுடையவர்களுக்குக் கொடுப்பதென்னும் ஈகையும் செய்யாதவனால், அவன் அந்த இரண்டும் செய்வதற்குரிய செல்வத்திற்கு ஒரு நோய் ஆவான்.

7. அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகுநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. 1007

[ப-ரை] அற்றார்க்கு - பொருளேதும் இல்லாதார்க்கு ஒன்று - அவர் வேண்டிய ஒரு பொருளினை, ஆற்றாதான் -

கொடுத்தறியாதவனுடைய, செல்வம் - செல்வம் [பயனின்றி கழிதல்] மிகு - சிறந்த, நலம் - அழகினை, பெற்றாள் - பெற்றிருக்கும் பெண்ணொருத்தி, தமியள் - மணமாகாமல் தனித்திருந்தே, மூத்தற்று - முதுமை யடைந்தது போன்றதாகும்.

[க-ரை] ஒரு பொருளும் இல்லாதாரிக்கு அவர் வேண்டிய ஒன்றினைக் கொடுக்காதவனுடைய செல்வம் வீணாகக் கழிதல், பெண்களில் மிக்கஅழகினைப் பெற்றாள் ஒருத்தி மணமாகாமல் கொழுநன் இன்றித் தனியாளாய் மூத்தத் தன்மை அடைந்தது போன்றதாகும்.

8. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று. 1008

[ப-ரை] நச்சப்படாதவன் - ஈகைக்குணமே இல்லாத தால் பிறரால் சிறிதும் விரும்பப்படாதவன், செல்வம் - செல்வம் பெற்றிருத்தல், நடுஊருள் - ஊர் நடுவில் இருக்கும், நச்சு - நஞ்சாகிய, மரம் - நச்சுமரம், பழுத்தற்று - பழுத்திருப்பது போன்றதாகும்.

[க-ரை] ஈகைத் தன்மை இல்லாததால் ஒருவராலும் விரும்பப்படாத ஒருவன் செல்வம் பெற்றிருத்தலானது, ஊரின் நடுவில் இருக்கும் நச்சுமரம் பழுத்ததைப் போன்றதாகும்.

9. அன்புஒரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய
ஒண் பொருள் கொள்வார் பிறர். 1009

[ப-ரை] அன்பு - அன்பு செய்வதனை, ஒரீஇ - ஒழித்து, தற்செற்று - நுகராமல் தன்னையும் வருத்தி, அறம் நோக்காது - அறம் செய்தவனையும் நினைக்காமல், ஈட்டிய - சேகரித்த, ஒண் - சிறப்பானதாகிய, பொருள் - பொருளினை, பிறர் - மற்றவர், கொள்வார் - எடுத்துக் கொண்டு போய்ப் பயன் பெறுவர்.

[க-ரை] நண்பர்கள் சுற்றத்தார் முதலியவர்களிடம் அன்பில்லாமல் வேண்டியவற்றை நுகராமல் தன்னையும் வருத்திக் கொண்டு வறியார்க்கு ஈதல் முதலிய அறத்தினையும் செய்ய நினையாமல்சேர்த்த சிறந்த பொருளினைப் பிறர் கொண்டுபோய்ப் பயன் அடைவார்கள்.

10. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து. 1010

[ப-ரை] சீர் - புகழுடையதான, உடைச் செல்வர் - செல்வத்தினையுடையவரது, சிறு - சிறிது காலமே நிற்கின்ற, துனி - வறுமையானது, மாரி - மேகம், வறங் கூர்ந்த அனையது - வறுமை மிகுந்தது போன்றதோர் தன்மையினை, உடைத்து - உடையதாகும்.

[க-ரை] புகழினை உடைத்தாகிய செல்வத்தினை பெற்றவரது சிறிதுகால வறுமை, உலகத்தினைக் காப்பாற்றுகிற மேகம் வறுமை மிகுந்தது போல்வதோர் தன்மையினை உடையது.

## 102. நாண் உடைமை
### [இழி செயல்களைச் செய்ய நாணுதல்]

1. கருமத்தான் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1011

[ப-ரை] நாணு - நன்மக்களின் நாணம் என்பது என்னவென்றால், கருமத்தால் - இழிவான செயல்கள் செய்வதற்கு, நாணுதல் - நாணம் அடைதலாகும், பிற - அவ்வாறல்லாமல், [மனம், மொழி, மெய்களால் வரும் நாணங்கள்] திரு - அழகிய, நுதல் - நுதலினையுடைய, நல்லவர் - நல்ல குலமகளிர், நாணு - நாணங்கள் என்பதாகும்.

[க-ரை] நன்மக்களுடைய நாணம் என்பதாவது இழிந்த செயல்கள் செய்ய நாணுதலாகும். அப்படி இன்றி மனம் மொழி மெய்கள் ஆகின்ற பிற அடக்கத்தினால் வரு இன்ற நாணம் என்றால் அது அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண வேண்டிய தன்மைகள் ஆகும்.

2. ஊண் உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறல்ல
நாண் உடைமை மாந்தர் சிறப்பு. 1012

[ப-ரை] ஊண் - உண்ணும் உணவும், உடையும் - உடையும், எச்சம் - மற்றவைகளும்; உயிர்க்கெல்லாம் - எல்லா உயிரினங்களுக்கும், வேறு - வேறானதாக, அல்ல - அல்லவாம் [பொதுவாக அமைந்திருப்பனவாகும்] மாந்தர்- நன்மக்களுக்கு, சிறப்பு - சிறப்பாக இருக்க வேண்டியது [என்னவென்றால்] நாணுடைமை - நாணம் உடைமை என்பதேயாகும்.

[க-ரை] உணவும் உடையும் மற்றவைகளும் எல்லா உயிர்களுக்கும் பொதுவேயாகும். நன்மக்களுக்குச் சிறப் பானது நாணமுடைமையேயாகும்; மற்றவையல்ல என்பதாம்.

3. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு. 1012

[ப-ரை] உயிர் - உயிரினங்கள், எல்லாம் - எல்லாம், ஊனைக்குறித்த - உடம்பினை இருப்பிடமாகக் கொண்டு அதனை விடாமல் இருக்கின்றன, சால்பு - நிறைகுணம் என்னும் சான்றாண்மை, நாண் - நாணம், என்னும் - என்கின்ற, நன்மை - நற்குணத்தினை, குறித்தது - தனக்கு இருப்பிடமாகக் கொண்டிருப்பதாகும்.

[க-ரை] எல்லா உயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக் கொண்டு அதை விடாதிருப்பனவாகும். அதுபோல சால்பு என்ற உயர்ந்த தன்மை நாணம் என்பதனை நிலைக்களனாகக் கொண்டு அதனைவிடாது.

4. அணியன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை. 1014

[ப-ரை] சான்றோர்க்கு - சான்றாண்மை நிறைந்த பெரியோர்களுக்கு, நாண் - நாணம் என்கின்ற குணம், உடைமை - உடைமையாய் இருப்பது, அணி - அணிகலன், அன்றோ - அல்லவோ?, அஃது - அந்த அணிகலன், இன்றேல் - இல்லையென்றால்[அவர்களுடைய] பீடு - பெருமிதமான, நடை - நடத்தல் என்பது, பிணி - கண்டார்க்கு நோய், அன்றோ - அல்லவா?

[க-ரை] சான்றோர்களுக்கு நாணுடைமை என்பது ஆபரணமாகும். அந்த ஆபரணம் இல்லையானால், அவருடைய பெருந்தன்மையான நடை கண்டார்க்கும் பிணியாவதொன்றாம்.

5. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு. 1015

[ப-ரை] பிறர் - மற்றவர்களுக்கு உண்டாகும், பழியும் - பழியினையும், தம் - தமக்கு வரும், பழியும் - பழியினையும், நாணுவார் - ஒப்பமதித்து நாணுகின்றவரை, உலகு - உலகத்தார், நாணுக்கு - நாணம் என்பதற்கு, உறைபதி - இருப்பிடம், என்னும் - என்று கூறுவர்.

[க-ரை] பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் ஒரு சமமாக மதித்து நாணுவாரை, உலகத்தார் நாணம் என்பதற்கு உறைவிடம் என்று கூறுவர்.

6. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 1016

[ப-ரை] மேலாயவர் - பண்பு நிறைந்த பெரியார், வேலி - தமக்குப் பாதுகாப்பாக, நாண் கொள்ளாது - நாணம் என்பதனைக் கொள்ளுவதன்றி, வியன் - அகன்ற,

ஞாலம் - இந்தப் பூமியினை, பேணலர் - [பாதுகாப்பாகக் கொள்ள] விரும்ப மாட்டார்கள். [மன், ஓ - அசை நிலை]

[க-ரை] உயர்ந்த மக்கள் தமக்குப் பாதுகாப்பாக நாணத்தினைக் கொள்ளுவதல்லாமல் அகன்ற ஞாலத்தினைக் கொள்ள விரும்ப மாட்டார்கள்.

7. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். 1017

[ப-ரை] நாண் - நாணத்தினை, ஆள்பவர் - விடாமல் காப்பவர்கள், நாணால் - நாணத்தினை, காப்பாற்ற வேண்டி, உயிர் துறப்பவர் - உயிரினையும் விடுவார்கள், உயிர்ப் பொருட்டால் - உயிரைக் கருதி, நாண் துறவார் - நாணத்தினை விட்டுவிட மாட்டார்கள்.

[க-ரை] நாணத்தினது சிறப்பினை அறிந்து அதன்வழி நிற்பவர்கள் அந்த நாணமும் உயிரும் தம்முள் மாறுபட்ட போது நாணத்தினைக் காக்க உயிரை விடுவார்களே தவிர, உயிரைக் காப்பாற்ற நாணத்தினை விட்டுவிட மாட்டார்கள்.

8. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து. 1018

[ப-ரை] பிறர் - மற்றவர்கள், நாண - நாணமுற, தக்கது - காரணமான பழியினை, தான் - தான் ஒருவன், நாணான் - செய்ய நாணப்படாதவன், ஆயின் - ஆனால், [அச் செயல்] அறம் - அறமானது, நாணத்தக்கது - அவனை விட்டு நீங்கும் படியான குற்றத்தினை, உடைத்து - உடையதாகும்.

[க-ரை] பிறர் நாணமடையக் கூடிய பழியை ஒருவன் நாணமின்றிச் செய்வானாயின் அச்செயல் அவனைவிட்டு அறம் நீங்கிவிடுகின்ற குற்றத்தினை உடையதாகும்.

9. குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை. 1019

[ப-ரை] கொள்கை - ஒருவனுடைய ஒழுக்கம், பிழைப்பின் - கெட்டுவிட்டால், [அது] குலம் சுடும் - குலப்பிறப்பினைக் கெடுப்பதாகும், நாண் - நாணம் என்பது, இன்மை- இல்லாமை, நின்றக்கடை - அவனிடம் இருந்துவிட்டால், [அது] நலன் - நன்மை யாவையினையும், சுடும் - அழித்து விடுவதாகும்.

[க-ரை] ஒருவனுக்கு ஒழுக்கம் கெடுமாயின் அப்படிக் கெடுதல் அவனுடைய குடிப்பிறப் பொன்றினை மட்டுமே கெடுக்கும். அவன் நாணமின்றி இருப்பானானால், அது அவன் நலம்—நன்மைகள்—யாவற்றையும் கெடுக்கும்.

10. நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. 1020

[ப-ரை] அகத்து - மனத்தின்கண், நாண் இல்லார் - நாணம் இல்லாதவர்கள், இயக்கம் - உயிருள்ளவர்கள் போல வாழ்கின்ற வாழ்க்கை, மரப்பாவை - மரத்தினால் செய்யப்பட்ட பாவையானது, நாணால் - இயந்திரக் கயிற்றின் ஆட்டத்தினால், உயிர் மருட்டியற்று - உயிருள்ளது போல மயக்கியது போன்றதாகும்.

[க-ரை] மனத்தில் நாணமில்லாதவர்கள் உயிருடையார் போன்று வாழ்ந்து வருவது, மரத்தால் செய்யப்பட்ட மரப்பாவை இயந்திரக் கயிற்றினால் உயிருடையது போல இயங்கிக் கொண்டு இருத்தல் போன்றதாகும்.

# 103. குடி செயல் வகை

## [குடிமக்களை உயரச் செய்யும் திறம்]

1. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல். 1021

[ப-ரை] கருமம் - குடிமக்கள் உயரும் செயல், செய - புரிவதென்பதனை, கைதூவேன் - கைவிடமாட்டேன், என்னும் - என்கின்ற, பெருமையின் - முயற்சி செய்கின்ற பெருமையினைப் போல, பீடு - மேம்பாடு, உடையது - உடையதென்பது, ஒருவன் - ஒருவனுக்கு, இல் - பிறிதொன்றும் இல்லை.

[க-ரை] தன் குடி உயர எண்ணிய செயல் செய்வதற்கு தான் தொடங்கிய பணியினைக் கைவிட மாட்டேன் என்று கூறும் முயற்சிப் பெருமையினைப் போல ஒருவனுக்கு சிறந்த பெருமை பிறிதொன்றும் இல்லை.

2. ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையான் நீளும் குடி. 1022

[ப-ரை] ஆள்வினையும் - முயற்சியும், ஆன்ற - நிறைந்த, அறிவும் - அறிவும், என - என்ற, இரண்டின் - இரண்டினையும் கொண்ட, நீள் வினையால் - ஓய்வின்றிச் செய்கின்ற செயலால், குடி நீளும் - ஒருவனுடைய குடி உயரும்.

[க-ரை] முயற்சியும் நிறைந்த அறிவும் என்ற இரண்டினையும் கொண்டு ஓய்வின்றிச் செய்கின்ற செயலால் ஒருவனுடைய குடி உயரும்.

3. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 1023

[ப-ரை] குடிசெய்வல் - குடி மக்களை உயரச் செய்வேன், என்னும் - என்று முயன்று செயல் புரியும்,

ஒருவற்கு - ஒருவனுக்கு, தெய்வம் - தெய்வமானது, மடிதற்று - ஆடையினை இறுகக் கட்டிக் கொண்டு, தான் முந்துறும் - தான் துணைபுரிய முன் வந்து நிற்கும்.

[க-ரை] 'என் குடியினை உயரச் செய்வேன்' என்று முயன்று செயல்புரியும் ஒருவனுக்குத் தெய்வம் ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு தான் முன் நின்று துணை செய்யும்.

4. சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. 1024

[ப-ரை] தம் - தம்முடைய, குடியை - குடிமக்கள் உயரும் செயல்களை, தாழாது - காலம் தாழ்த்தாமல் விரைந்து, உஞற்றுபவர்க்கு - முயல்கின்றவர்களுக்கு, சூழாமல் - செயலினை முடிக்க சிந்திக்காமலேயே, தானே - அத்தொழில் தனாகவே, முடிவு - முடிவுறுதலை, எய்தும் - அடைதலாகும்.

[க-ரை] தன் குடிமக்கள் உயரும் செயல்களைக் காலம் தாழ்த்தாமல் விரைந்து முயல்கின்றவர்களுக்கு, செயலினை முடிக்க ஆலோசிக்காமலேயே அத்தொழில் தானாகவே முடிவுறும் என்பதாகும்.

5. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 1025

[ப-ரை] குற்றம் - குற்றம் யாதும், இலனாய் - இல்லாதவனாகி, குடி - தனது குடிமக்களை, செய்து - உயரச் செய்து, வாழ்வானை - வாழ்கின்றவனை, சுற்றமாய் - அப்படிப்பட்டவனுக்குச் சுற்றமாக இருக்க வேண்டி, உலகுசுற்றும் - உலகத்தார் தாமே சென்று சூழ்ந்து கொள்வார்கள்.

[க-ரை] குற்றம் யாதும் செய்யாமல் தன் குடியை உயரச் செய்து ஒழுகுவானை உலகத்தார் தாமே சென்று சூழ்ந்து கொள்வார்கள்.

6. நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 1026

[ப-ரை] ஒருவற்கு - ஒருவனுக்கு, நல்-நல்ல, ஆண்மை-ஆண்மைத்தன்மை, என்பது - என்று உயர்த்திச் சொலலப்படுவது, (எதுவென்றால்) தான் - தான், பிறந்த - பிறந்துள்ள, இல்லாண்மை - குடிமக்களைத் தன் வசப்படுத்தி ஆளும் தன்மையினை, ஆக்கிக் கொளல் - தனக்கு உள்ளதாக ஆக்கிக் கொள்ளுதலாகும்.

[க-ரை] ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்றுஉயர்த்திச் சொல்லப்படுவது எதுவென்றால் தான் பிறந்த குடியிலுள்ள மக்களைத் தன்வயப்படுத்தி ஆளும் தன்மையினைத் தனக்கு உள்ளதாக்கிக் கொள்ளுதலாகும்.

7. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 102

[ப-ரை] அமரகத்து - போர்க்களத்தில் (போரினைத் தாங்கி நடத்துதல்) வன்கண்ணர்போல - வீரம் மிகுந்தவர் மேல் ஆகுதல் போல, தமரகத்தும் - குடியின் கண்ணும், பொறை-அதனைத் தாங்குதல் (பலருள்ளும்), ஆற்றுவார் - தாங்கி நடத்த வல்லவர், மேற்றே - மேலதேயாகும்.

[க-ரை] போர்க்களத்திற்குச் சென்றவர்களில் போரை தாங்கும் தன்மை, மிகுந்த வீரம் செறிந்தவர் மேலாகுதல் போலக் குடியில் பிறந்தார் பலராயினும் அதன் பாரம் தாங்குதல் வல்லவர் மேலதாம்.

8. குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். 1028

[ப-ரை] மடி - சோம்பலினை, செய்து - செய்து கொண்டு, மானம் - மானத்தினையும், கருத - நினைத்துக் கொண்டு, (இருப்பாரானால்) கெடும் - குடி கெட்டு விடும்.

(ஆதலால்) பருவம் இல்லை - காலக் கட்டுப்பாடு இல்லை என்பதாம்.

[க-ரை] தம் குடிமக்களை உயரச் செய்வார் காலத்தினைக் கருதிக் கொண்டு மானத்தைப் பற்றியும் நினைத்துக் கொண்டு இருப்பாரானால் குடி கெட்டுவிடும். ஆதலால் அவர்களுக்குக் காலக் கட்டுப்பாடும், மானத்தினை நினைத்துக் கொண்டிருப்பதும் இல்லையாகும்.

9. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. 1029

[ப-ரை] குடும்பத்தை - தனது குடிமக்களை, குற்றம் - துன்பம் வராமல், மறைப்பான் - காப்பாற்ற முயற்சிப்பவனது, உடம்பு - உடம்பானது, இடும்பைக்கே - துன்பத்திற்கே, கொள்கலம் கொல்லோ - கொண்டிருக்கும் இடமாகுமோ?

[க-ரை] தன் குடி மக்களுக்குத் துன்பம் வராமல் குற்றத்தினை மறைக்க முயற்சிப்பவனுடைய உடம்பு துன்பத்திற்கே இடமாக இருக்குமோ? இன்பத்திற்கு ஆதல் இல்லையோ?

10. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி. 1030

[ப-ரை] அடுத்து - தாங்குவதைக் கொடுத்து, ஊன்றும் - தாங்குவதற்குவல்ல, நல் - நல்ல, ஆள் - ஆண்மகன், இலாதகுடி - பிறக்காத குடி, இடுக்கண் - துன்பமாகிய ஒன்று, கால் - அடிப்படையான முதலினை (மரம்), கொன்றிட - வெட்டிச் சாய்க்கின்ற போது, வீழும் - வீழ்ந்துவிடும்.

[க-ரை] துன்பம் உற்றபோது தக்க காலத்தில் பற்றுக்கோடு கொடுத்துத் தாங்கவல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம், துன்பமாகிய கோடரி வெட்டிச் சாய்க்க ஏற்றின்றி விழுந்துவிடும்.

# 104. உழவு

## உழவுத் தொழிலின் சிறப்பு

1. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. 1031

[ப-ரை] சுழன்றும் - பிற தொழில்களைச் செய்து திரிந்தும், ஏர் - ஏரின்(உழவர்), பின்னது -வழியில் நிற்பது, உலகம் - உலகமானது, அதனால் - ஆகையினால், உழந்தும் - எல்லா வருத்தம் அடைந்தும், உழவே தலை - உழவே முதன்மையான தொழில் ஆகும்.

[க-ரை] பிற தொழில்களைச் செய்து திரிந்தும் முடிவில் ஏருடையார் வழியாயிற்று இந்த உலகம். ஆதலால் எல்லாரும் வருத்தமுற்றாலும் தலைமையான தொழில் உழவேயாகும்.

2. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. 1032

[ப-ரை] அஃது - அந்த உழவுத் தொழிலினை, ஆற்றாது - செய்யாமல், எழுவாரை - பிறதொழில்களை மேற்கொண்டுள்ள, எல்லாம் - எல்லோரையும், பொறுத்து - தாங்கிக் கொண்டிருப்பதால், உழுவார் - உழவர்கள், உலகத்தார்க்கு - உலக மக்களாகிய தேருக்கு, ஆணி - அச்சாணி எனப்படுவார்கள்.

[க-ரை] உழவுத் தொழிலினை மேற்கொள்ளாமல் பிற தொழில்களை மேற்கொண்டுள்ள எல்லோரையும் தாங்கிக் கொண்டிருப்பதால், உழவர்கள் உலக மக்களாகிய தேருக்கு அச்சாணி எனப்படுவார்கள்.

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 1033

[ப-ரை] உழவு - உழவுத் தொழிலினைச் செய்து, உண்டு - உண்டு, வாழ்வாரே - வாழ்பவர்களே, வாழ்வார் - தமக்கு உரியவராய் வாழ்பவராவார், மற்றெல்லாம் - மற்றவர்கள் எல்லோரும், தொழுது உண்டு - பிறரைத் தொழுது தாம் உண்டு, பின் - அவர்களுக்குப் பின்னே, செல்பவர் - செல்லுபவர்கள் ஆவார்கள்.

[க-ரை] உழுதலைச் செய்து தாமும் உண்டு பிறரையும் வாழ வைத்து வாழ்பவர்களே தமக்கு உரியராய் வாழ்பவராவார். மற்றவரெல்லாரும் பிறரைத் தொழுது தாம் உண்டு அவருக்குப் பின் செல்லுகின்றவராவார்.

4. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ் காண்பர்
அலகுஉடை நீழ லவர். 1034

[ப-ரை] அலகு - நெற்கதிரினை, உடை - உழவுத் தொழிலால் உடையராகி, நீழலவர் - ஈகைத் தன்மையுடையோர், பலகுடை நீழலும் - பல மன்னர்களது குடை நிழலாகிய பூமி முழுதும், தம் - தமது, குடைக்கீழ் - வேந்தனுடைய குடையின் கீழ், காண்பர் - காண்பார்கள்.

[க-ரை] உழவுத் தொழிலால் நெல்லினை உடையவராகி ஈகைத் தன்மையுடயார் பல மன்னர்களின் குடை நிழலாகிய பூமி முழுவதையும் தமது மன்னர் குடைக்கீழ் காண்பவராவார்.

5. இரவார் இரப்பார்க்கு ஒன்றுஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 1035

[ப-ரை] கைசெய்து - தம் கையால் உழுதலைச் செய்து, ஊண் - உண்ணுவதை, மாலையவர் - இயல்பாக உடைய உழவர்கள், பிறரிடம் போய் யாசிக்க மாட்டார்கள், இரப்பார்க்கு - தம்மிடம் வந்து யாசிப்பவர்களுக்கு, ஒன்று -

அவர் விரும்பியதொன்றினை, கரவாது-அவர்-மறைக்காமல் தருவார்கள்.

[க-ரை] தம் கையால் உழுது உண்ணுதலை இயல்பாக உடையவர்கள் பிறரிடம் போய் யாசிக்க மாட்டார்கள். தம்மிடம் வந்து யாசிப்போர்க்கு வேண்டியதை மறைக்காமல் கொடுப்பார்கள்.

6. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கு நிலை. 1036

[ப-ரை] உழவினார் - உழுதலை உடையார், கை - கையானது, மடங்கின் - உழவினைச் செய்யாமல் மடங்குமானால், விழைவதூஉம் - மக்கள் விரும்பும் உணவையும், விட்டோம் - துறந்து விட்டோம், என்பார்க்கு - என்பவர்களுக்கு, நிலை - தம் நிலையில் நிற்றலும், இல்லை - இல்லாமற் போகும்.

[க-ரை] உழவர்களின் கை உழுதல் தொழிலைச் செய்யாது மடங்குமானால் யாவரும் விரும்பும் உணவையும் (யாம் துறந்தோம்) என்பார்க்கு அவ்வறத்திலேயே நிற்றலும் உளவாகாதாம்.

7. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 1037

[ப-ரை] தொடிப் புழுதி - அளவில் ஒரு பலப்புழுதி, கஃசா - காற்பலம் ஆகுமாறு, உணக்கின் - உழுது காயவிடுவானானால், பிடித்து - ஒருபிடி அளவாகிய, எரு - எருவும், வேண்டாது - போட வேண்டியதன்றி, சாலப் படும் - பயிர் தழைத்து வளரும்.

[க-ரை] உழுபவன் நிலத்தின் ஒரு பலப் புழுதி காற்பலம் ஆகுமாறு அதனை உழுது காய விடுவானாகில் அந்நிலத்தில் விளையும் பயிர் ஒரு பிடி எருவும் இடவேண்டாமல் தழைத்து விளையும்.

8. ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு. 1038

[ப-ரை] ஏரினும் - உழுதலைவிட, எரு - எருவினை, இடுதல் - போடுதல், நன்று - நல்லதாகும், கட்டபின் - களை எடுத்தபின், அதன் - அப்பயிரினை, காப்பு - காப்பாற்றுதல், நீரினும் - நீர்ப்பாய்ச்சுவதைவிட, நன்று - நல்லதாகும்.

[க-ரை] பயிர்க்கு உழுதலைவிட எருப்போடுதல் நல்லதாகும்; களை எடுத்த பிறகு அப்பயிரினைக் காப்பாற்றுதல் நீர்ப்பாய்ச்சுதலைவிட நல்லதாகும்.

9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். 1039

[ப-ரை] கிழவன் - நிலத்திற்கு உரியவன், செல்லான் இருப்பின் - நாள்தோறும் சென்று நேரில் பார்க்காமலும், தக்கவை செய்யாமலும் சோம்பலாக இருந்துவிட்டால், நிலம் - அவனுடைய நிலம், இல்லாளின் - மனைவியைப் போல, புலந்து தன்னுள்ளே-சினந்துவெறுத்து, ஊடிவிடும் - அவனுடன் பிணங்கிக் கொள்ளும்.

[க-ரை] நிலத்திற்கு உரியவன் நாள்தோறும் சென்று நிலத்தினைப் பார்த்துத் தக்கவை செய்யாதிருப்பானானால், அந்தநிலம் தமது மனைவியைப்போலத் தன்னுள்ளே வெறுத்து அவனுடன் பிணங்கிவிடும்.

10. இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும். 1040

[ப-ரை] இலம் - ஒன்றுமில்லாமல் வறியவரானோம், என்று - என்று சொல்லிக் கொண்டு, அசைஇ - சோம்பலாக, இருப்பாரை - இருப்பவர்களை, காணின் - பார்த்தால், நிலம் - நிலமடந்தை, என்னும் - என்று சொல்லப்படுகின்ற

நல்லாள் - நல்ல பெண்ணானவள், நகும் - தனக்குள்ளே சிரிப்பாள்.

[க-ரை] 'ஒன்றுமில்லாத வறியராானோம்' என்று சொல்லிக்கொண்டு சோம்பலாக இருப்பவர்களைக் கண்டால், நிலமடந்தை என்று சொல்லப்படுகின்ற நல்ல பெண்ணானவள் தனக்குள்ளே சிரிப்பாள்.

# 105. நல்குரவு

## [அனுபவிக்கப்படுவன எதுவும் இல்லாமை]

**1. இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.** 1041

இன்மையின் - வறுமையினைப் போல, இன்னாதது - துன்பத்தினைத் தருவது, யாது - எது, எனின் - என்று வினவின், இன்மையின் - வறுமையினைப் போல, இன்னாதது - துன்பத்தினைத் தருவது, இன்மையே - வறுமையேயாகும்.

[க-ரை] ஒருவனுக்கு வறுமையினைப் போல் துன்பம் தருவது யாது என்று வினவினால், வறுமைபோலத் துன்பம் தருவது வறுமையேயாகும். பிறிது யாதும் இல்லை எனலாம்.

**2. இன்மை எனஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்.** 1042

[ப-ரை] இன்மை - வறுமை, என - எனப்படுகின்ற, ஒருபாவி - ஒரு பாவியானாவன், மறுமையும் - மறுமை இன்பமும், இம்மையும் - இம்மை இன்பமும், இன்றிவரும் - அவனுக்கு இல்லையாகும்படி வருவான்.

[க-ரை] ஒருவனுக்கு வறுமையென்று சொல்லப்படுகின்ற பாவி வந்தபோது அவனுக்கு இம்மை மறுமை இன்பங்கள் இல்லாதவாறு வரும்.

3. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை. 1043

[ப-ரை] நல்குரவு - வறுமை, என்னும் - என்று சொல்லப்படுகின்ற, நசை - ஆசையானது, தொல் - பழங்குடியின், வரவும் - சிறப்பினையும், தோலும் - சொற்களையும், தொகையாக - ஒருங்கே, கெடுக்கும் - அழித்து விடும்.

[க-ரை] வறுமை என்று சொல்லப்படுகின்ற ஆசையானது பழங்குடிப் பெருமையினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒரு சேரக் கெடுக்கும்.

4. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும். 1044

[ப-ரை] இற்பிறந்தார்கண்ணேயும் - உயர்ந்த நற்குடியில் பிறந்தோரிடத்திலும், இன்மை - வறுமையானது, இளிவந்த - இழிவான, சொல் - சொற்கள், பிறக்கும் - உண்டாவதற்குக் காரணமான, சோர்வுதரும் - தளர்ச்சியினை உண்டாக்கிவிடும்.

[க-ரை] நற்குடிப் பிறந்தாரிடத்திலேயும் வறுமையானது இழிவான சொற்கள் பிறப்பதற்குக் காரணமான சோர்வினை உண்டாக்கும்.

5. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். 1045

[ப-ரை] நல்குரவு - வறுமை, என்னும் - என்று சொல்லப்படுகின்ற, இடும்பையுள் - துன்பம் ஒன்றுக்குள்ளே, பல்குரை - பலதிறப்பட்ட, துன்பங்கள் - துன்பங்கள் எல்லாம், சென்றுபடும் - வந்து சேர்ந்து விளையும்.

[க-ரை] வறுமை என்று சொல்லப்படுகின்ற துன்பம் ன்றனுள் பலவாகிய துன்பங்கள் எல்லாம் வந்து சேர்ந்து ளையும்.

6. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு தரும். 1046

[ப-ரை] நற்பொருள் - நல்ல நூல்களின் பொருளினை, ன்கு - தெளிவாக, உணர்ந்து - அறிந்துணர்ந்து, சொல்லி ம் - சொன்னாலும், நல்கூர்ந்தார் - வறுமையில் நப்பவரது, சொல் - சொல்லானது, பொருள் சோர்வு ரும் - பொருள் இல்லாத் தன்மையாகிப் பயனில்லாது ாகும்.

[க-ரை] நல்ல நூல்களின் பொருள்களை நன்கு றிந்துணர்ந்து சொன்னாலும் வறுமையில் இருப்பவரது ால்லானது பொருள் இல்லாது பயனின்றிப் போகும்.

7. அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 1047

[ப-ரை] அறம் - அறத்தொடு, சாரா - பொருந்தாத, குரவு - வறுமையினையுடையவன், ஈன்ற - தன்னைப் ற்றெடுத்த, தாயானும் - தாயாராலும், பிறன்போல - றோ ஒருவனைப் போல, நோக்கப்படும் - நோக்கப் வான்.

[க-ரை] அறத்தொடு பொருந்தாத வறுமையினை டயவன் தன்னைப் பெற்றெடுத்த தாயாராலும் றோ ஒருவனைப் போல நோக்கப்படுவான்.

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு. 1048

[ப-ரை] நெருநலும் - நேற்றைய தினமும், கொன்றது - ான்றதை, போலும்-போன்று எனக்குத் துன்பத்தினைச்

செய்த, நிரப்பு - வறுமை, இன்றும் வருவது கொல்லோ-இன்றைய தினமும் என்னிடம் வருவதாகுமோ?

[கு-ரை] நேற்றும் கொன்றதைப் போன்று துன்பத் தினைச் செய்த நல்குரவு இன்றும் என்பால் வருகின்றதோ? வந்தால் யாது செய்வேன்.

9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது. 1049

[ப-ரை] நெருப்பினுள் - நெருப்பின் மேல் படுத்து, துஞ்சலும் - தூங்குதலும், ஆகும் - மருந்து வகைகளினால் முடியக் கூடும், நிரப்பினுள் - வறுமை வந்துற்ற போது, யாதொன்றும் - எந்த வகையிலும், கண்பாடு அரிது - தூங்குதல் முடியாததாகும்.

[கு-ரை] ஒருவனுக்கு நெருப்பின்மேல் படுத்துத் தூங்கு தலும் முடியும்; வறுமை வந்துவிட்டபோது யாதொன்றி னாலும் தூங்குதல் முடியாததாகும்.

10. துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 1050

[ப-ரை] துப்புரவு - அனுபவிக்கப்படும் பொருள்கள், இல்லார் - இல்லாதவர்கள், துவர-முழுதுமாக, துறவாமை-துறந்து விடாதிருத்தல், உப்பிற்கும் - பிறர் வீட்டிலுள்ள உப்பிற்கும், காடிக்கும் - புளித்த கஞ்சிக்கும், கூற்று - கூற்று வனாவான்.

நுகரப்படும் பொருள்கள் எதுவும் இல்லாதவர்கள் செய்ய வேண்டியது முற்றத் துறத்தலேயாகும். அவ்வாறு செய்யாதிருத்தல், பிறர் வீட்டிலிருக்கும் உப்பிற்கும் காடிக்கும் கூற்றுவனாக முடியும்.

## 106. இரவு

[வறுமையால் பிறரிடம் சென்று யாசித்தல்]

1. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று. 1051

[ப-ரை] இரத்தக்கார் - யாசித்துக் கேட்பதற்குப் பொருத்தமானவரை, காணின் - கண்டால், இரக்க - யாசித்தல் வேண்டும், கரப்பின் - அவர் கொடாமல் மறைத்தாரானால் [அப்படிச் செய்வது] அவர் - அவருக்கு, பழி - பழியாகும், தம் - யாசித்தவருக்கு, பழி அன்று - பழியாகாது.

[க-ரை] வறுமையுற்றவர்கள் யாசிப்பதற்குப் பொருத்தமானவர்களைக் கண்டால், அவர்களிடம் யாசித்தல் வேண்டும். அவர்கள் கொடுக்காமல் மறைந்தாரானால், அது அவர்களுக்குப் பழியாகுமே தவிர யாசிப்பவருக்குப் பழியாகாது.

2. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின். 1052

[ப-ரை] இரந்தவை - யாசித்த பொருள்கள், துன்பம் - தான் துன்பம், உறாஅ - அடையாமல், வரின் - வருமேயானால், ஒருவற்கு - ஒருவனுக்கு, இரத்தல் - யாசித்தலும், இன்பம் - இன்பம் தருவதாக இருக்கும்.

[க-ரை] யாசிக்கப்பட்ட பொருள்கள் தான் துன்புறாமல் வருமானால், ஒருவனுக்கு யாசித்தல் கூட இன்பம் தருவதாகும்.

3. கரப்பிலா நெஞ்சின் கடனறி வார் முன்நின்று
இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து. 1053

[ப-ரை] கரப்பிலா - மறைதலில்லாத, நெஞ்சின் - மனத்தினையுடையராகி, கடன் - கடமையினையும்,

அறிவார் முன் - உணர்வார் முன்னே, நின்று - நின்று, இரப்பும் - இரத்தலும் [யாசித்தாலும் யாசிப்பவர்க்கு] ஓர் - ஓர், ஏஎர் - அழகினை, உடைத்து - உடையதாகும்.

[க-ரை] மறைத்தல் அறியாதநெஞ்சினையுடைவராகி, கடமை உணர்வுடையார் முன்நின்று யாசித்திலும், வறுமை யாளர்களுக்கு ஓர் அழகினை உடையதாகும்.

4. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. 1054

[ப-ரை] கரத்தல் - மறைத்தல் என்பதனை, கனவிலும் - கனவிலும் கூட, தேற்றாதார் மாட்டு - அறியாதவரிடத்தில் சென்று, இரத்தலும் - இரத்தலும், ஈதலே - வறியவர்க்கு ஈகையினைச் செய்வதே, போலும் - போன்றதாகும்.

[க-ரை] தம்மிடம் இருப்பதைக் கனவிலும் மறைத்தலை அறியாதாரிடம் சென்று ஒன்றனை யாசித்தல், வறியவர்கள் ஈதலே போன்றதாகும்.

5. கரப்பிலார் வையகத்து உண்மையான் கண்ணின்று
இரப்பவர் மேர்கொள் வது. 1055

[ப-ரை] கண் - [கொடுப்பவர்] கண் முன்னே; நின்று - நின்று, இரப்பவர் - யாசிப்பவர்கள் [உயிரினைப் பாதுகாக்க] மேற்கொள்வது - யாசிப்பதை மேற் கொள்ளுவதற்குக் காரணம், கரப்பிலார் - மறைக்காமல் கொடுப்பவர்கள், வையகத்து - உலகத்தில், உண்மையான் - சிலர் இருப்பதனால்தான் என்க.

[க-ரை] உள்ளதை மறைக்காமல் கொடுப்பவர்கள் சிலர் உலகத்தில் இருந்து வருவதால்தான், முன்னின்ற மாத்திரத்தில் யாசிப்பவர் உயிர் காத்தற் பொருட்டு இரத்தலை மேற்கொண்டுள்ளார்கள்.

6. கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரப்புஇடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். 1056

[ப-ரை[ கரப்பு - மறைத்தல் என்கின்ற, இடும்பை - துன்பமான நோய், இல்லாரை - இல்லாதவர்களை,

காணின் - கண்டால், நிரப்பு - வறுமையாய் வரும், இடும்பை - துன்பங்கள், எல்லாம் - எல்லாம், ஒருங்கு - ஒரு சேர, கெடும் - அழிந்து போகும்.

[க-ரை] உள்ளது மறைத்தலாகிய நோய் இல்லாதவர்களைக் கண்டால், மானம் விடாமல் இரப்பார்க்கு வறுமையால் வரும் துன்பங்கள் எல்லாம் ஒரு சேரக் கெடும்.

7. இகழ்ந்து எள்ளாது ஈவாரைக்காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து. 1057

[ப-ரை] இகழ்ந்து - இழிவாகப் பேசி, எள்ளாது - ஏளனம் செய்யாமல், ஈவாரைக் காணின் - கொடுப்பவரைக் கண்டால், உள்ளம் - இரப்பவர் மனம், மகிழ்ந்து - மகிழ்ச்சியடைந்து, உள்ளுள் - உள்ளுக்குள்ளே, உவப்பது உடைத்து - உவகை கொள்ளும் தன்மை உடையதாகும்.

[க-ரை] தம்மை அவமதித்துப் பேசாமல் பொருள் கொடுப்பாரைக் கண்டால், இரப்பவரது உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே உவக்கும் தன்மை உடையதாகும்.

8. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. 1058

[ப-ரை] இரப்பார் - யாசிக்கும் வறுமையாளர்கள், இல்லாயின் - இல்லாமற் போனால், ஈர்ங்கண் - குளிர்ந்த, மா - பெரிய, ஞாலம் - பூமி [பூமியில் உள்ளவர்கள் வாழ்க்கை] மரப்பாவை - உயிரற்ற மரப்பாவை, [இயந்திரக் கயிற்றால்] சென்று வந்தற்று - செல்லுவதும் வருவதாகும் போன்றதாகும்.

[க-ரை] வறுமையுற்ற இரப்பார் இல்லையானால் குளிர்ந்த இடத்தினையுடைய பெரியஞாலத்துள்ளார்களின் வாழ்க்கை, உயிரில்லாத மரப்பாவை இயந்திரக் கயிற்றினால் சென்று வந்தது போன்றதாகும்.

9. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை. 1059

[ப-உரை] இரந்து - யாசித்து, கோள் - வாங்கிக் கொள்ளுதலை, மேவார் - விரும்புவார், இலாக் கடை - இல்லாமற் போனால், ஈவார்கண் - கொடுப்பவரிடத்தில், என் தோற்றம் - என்ன புகழ், உண்டாம் - உண்டாகக் கூடும்.

[க-உரை] வறுமையானவர்கள் சென்று ஒன்றனை யாசித்துக் கொள்ள விரும்புதல் இல்லாத போது கொடுப்பவரிடத்தில் என்ன புகழுண்டாகும்? ஒன்றும் இல்லை.

10. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்புஇடும்பை
தானேயும் சாலும் கரி. 1060

[ப-உரை] இரப்பான் - இரப்பவன் [யாசிப்பவன்], வெகுளாமை - கோபங் கொள்ளாதிருத்தல், வேண்டும் - வேண்டுவதாகும், [கோபத்தினால் வந்த இந்த நிலைமையினை] நிரப்பு - வறுமையால் வந்த, இடும்பை - துன்பம், தானேயும் - தானாகவே, கரி - சான்றாக இருந்தால், சாலும் - போதுமானதாகக் காட்டும்.

[க-உரை] வறுமையால் இரப்பவன் கோபிக்காதிருத்தல் வேண்டும். ஏனெனில் அவன் இரத்தல் தொழில் செய்வதற்குக் காரணம் அக்கோபமே என்பது சான்றாக அமையும்.

## 107. இரவு அச்சம்

[இரத்தற்கு - யாசிப்பதற்கு - அஞ்சுதல் வேண்டும்]

1\. கரவாது உவந்துஈயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும். 1061

[ப-ரை] கரவாது - மறைக்காமல், உவந்து - மன மகிழ்ந்து, ஈயும் - ஈதல் செய்கின்ற, கண் - கண்கள், அன்னார் கண்ணும் - போன்ற சிறந்தவரிடத்திலும், இரவாமை - யாசிக்காமல் இருப்பது, கோடி - கோடி மடங்கு, உறும் - நல்லதாகும்.

[க-ரை] தமக்கு உள்ளதை மறைக்காமல் கொடுக்கும் கண் போன்று சிறந்தவரிடத்தும் வறுமையால் இரவாதிருத்தல், கோடி மடங்கு நல்லதாகும்.

2\. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான். 1062

[ப-ரை] உலகு - உலகத்தினை, இயற்றியான் - உண்டாக்கியவன் என்பான், இரந்தும்-[உலகில் வாழ்வோர்] யாசித்தும், உயிர் - உயிரினைக் காத்து, வாழ்தல் - வாழ்வதை, வேண்டின் - விரும்பி விதித்திருப்பானாகில், பரந்து - தானும் அவர்களைப் போல எங்கும் திரிந்து, கெடுக - அழியக் கடவானாக.

[க-ரை] உலகத்தினை உண்டாக்கியவன் வாழ்வார்க்கு முயற்சி செய்து வாழ்வதல்லாமல் யாசித்தும் உயிர் வாழ்தலை விரும்பி விதித்தானாயின் அக்கொடியோன் தானும் அவரைப் போன்று எங்கும் திரிந்து கெடக் கடவன்.

3\. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல். 1063

[ப-ரை] இன்மை - வறுமையால் உண்டாகும், இடும்பை - துன்பத்தினை, [முயன்று நீக்க எண்ணாமல்]

இரந்து - யாசித்தே, தீர்வாம் - நீக்குவோம், என்னும் - என்று எண்ணும், வன்மையின் - முரட்டுத் தன்மையைப் போன்ற, வன்பாட்டது - வலிமையினையுடையது, இல் - வேறு எதுவும் இல்லை.

[க-ரை] வறுமையால் வரும் துன்பத்தினை முயற்சியால் நீக்கக் கருதாமல், யாசித்தே நீக்குவோம் என்று நினைக்கும் முரட்டுத் தன்மைபோல, வன்மையுடையது பிறிதொன்றும் இல்லை.

4. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம் இல்லாக்
காலும் இரவுஒல்லாச் சால்பு. 1064

[ப-ரை] இடம் - அனுபவிக்க வேண்டியவை, இல்லாக் காலும் - இல்லாமல் வறுமைப்பட்ட காலத்திலும், இரவு - யாசிப்பதனை, ஒல்லா - மேற்கொள்ளாத, சால்பு - நிறை குணம், இடமெல்லாம் - உலகமெல்லாம் ஒன்று சேர்ந்தாலும், கொள்ளா - கொள்ளாத, தகைத்தே - சிறப்பினையுடையதாகும்.

[க-ரை] நுகரவேண்டுவன இல்லாமல் வறுமையுற்ற போதும் பிறரிடம் சென்று இரத்தலுக்கு உடன்படாத பெருந்தன்மை, எல்லா உலகும் ஒருங்கு சேர்ந்தாலும் கொள்ளாத, பெருமை உடைத்து.

5. தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனியது இல். 1065

[ப-ரை] தாள் - தனது முயற்சியானது, தந்தது - கொண்டு வந்து கொடுத்தது, தெள் - தெளிந்த, நீர் - நீரினைப் போன்ற, அடுபுற்கை - சமைத்த கூழ், ஆயினும் - ஆனாலும், உண்ணலின் ஊங்கு - அதனை உண்பதைவிட, இனியதுஇல் - இனியதாக இருப்பது வேறு எதுவும் இல்லை.

[க-ரை] முயற்சி கொண்டுவந்து தந்தது தெளிந்த நீர் போன்ற கூழேயாயினும் அதனை உண்பதைவிட இன்பம் தருவது வேறு எதுவும் இல்லை.

6. ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். 1066

[ப-ரை] ஆவிற்கு - பசுவுக்கு, நீர் - தாகம் நீக்க நீர் வேண்டும், என்று - என்று கேட்டு, இரப்பினும் - யாசித்துக் கேட்கும் போதும், இரவின் - அவ்வாறு இரத்தலினைப் போல, நாவிற்கு - நாவினுக்கு, இளி - இழிவு, வந்ததுஇல் - தருவது வேறு எதுவும் இல்லை.

[க-ரை] தண்ணீரின்றித் தவிக்கும் பசுவிற்குத் தண்ணீர் தரல் வேண்டும் என்று இரந்து கேட்கும் போதும், இவ்வாறு யாசிப்பதுபோல ஒருவன் நாவிற்கு இழிவினைத் தருவது வேறில்லையாம்.

7. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பிற்
கரப்பார் இரவன்மின் என்று. 1067

[ப-ரை] இரப்பின் - யாசிக்க வேண்டுமானால், கரப்பார் - வைத்திருப்பதை மறைப்பவரிடம், இரவன் மின் என்று - இரவாதிருப்பீர்களாக என்று, இரப்பாரை - யாசிப்பவர்கள், எல்லாம் - எல்லோரிடமும் இரந்து கேட்டுக் கொள்வேன்.

[க-ரை] 'நீங்கள் யாசிக்க வேண்டுமென்றால், உள்ளது மறைப்பவர்களிடம் யாசிக்காதிருங்கள்' என்று சொல்லி யாசிப்பவர்களிடமெல்லாம் யான் சென்று யாசிப்பேன்.

8. இரவு என்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும்
பார்தாக்கப் பக்கு விடும். 1068

[ப-ரை] இரவு - யாசித்தல், என்னும் - எனப்படும், ஏமாப்பு-பாதுகாப்பு, இல் - இல்லாத, தோணி - மரக்கலம், கரவு - மறைத்தல், என்னும் - எனப்படும், பார்தாக்க - வன்னிலத்துடன் தாக்கி விடுமானால், பக்குவிடும் - பிளந்து போவதாகும்.

[க-ரை] இரத்தல் என்னும் பாதுகாப்பில்லாத தோணி மறைத்தல் என்னும் வன்னிலத்தில் தாக்குமாயின் பிளந்து போகும்.

9. இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுஉள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 1069

[ப-ரை] இரவு - இரந்து கேட்கின்ற கொடுமையினை, உள்ள நினைக்கும் போது, உள்ளம் உருகும் - மனம் கரைந்து உருகுகின்றது, கரவு-மறைத்துவைத்து இல்லை, என்பதனை, உள்ள - நினைக்க, உள்ளதூஉம் - உருகுகின்ற அந்த அளவும், இன்றிக் கெடும்-இல்லாமல் அழிந்து போவதாகும்.

[க-ரை] உடையவர்களின் முன் வறியவர்கள் நின்று யாசிக்கும் கொடுமையினை நினைத்தால், உள்ளம் கரைந்து உருகுகின்றது. உடையவர் இல்லையென்னும் கொடுமையினை நினைத்தால், உருகிய அளவும் இல்லாமல் அழிந்து விடும்.

10. கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர். 1070

[ப-ரை] சொல்லாட - இரப்பவர்க்கு இல்லையென்று சொல்லியவுடனே, இரப்பர் - யாசிப்பவருக்கு, உயிர்போஒம்-உயிரானது போகின்றது [அவ்வாறாயின்] கரப்பவர்க்கு. மறைத்து வைத்து இல்லையென்பார்க்கு உயிர்பின்னும் இருத்தலால், யாங்கு - அவர் உயிர் எங்கு புகுந்து, ஒளிக்கும் கொல்லோ - மறைந்திருக்குமோ?

[க-ரை] உள்ளதை மறைத்து வைத்து இல்லையென்ற போதே இரப்பார்க்கு உயிர் போகும் நிலையாகின்றது. இனி உள்ளதை மறைத்து இல்லை என்பவர்க்கு உயிர் போகாதிருத்தலால், அது எங்கு சென்று மறைந்திருக்குமோ?

# 108. கயமை

[மனிதத் தன்மை எதுவுமே இல்லாத கீழோர் இயல்பு]

1. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல். 1071

[ப-ரை] கயவர் - கீழ்மக்கள், மக்களே போல்வர் - தோற்றத்தால் முழுவதும் மக்களைப் போலவே இருப்பர், அவர் - அவர்களை, அன்ன - போல, ஒப்பாரி - ஒப்பு, யாம் கண்டது - நாம் வேறெங்கும் கண்டதும், இல் - இல்லை.

[க-ரை] கீழ்மக்கள் வடிவத்தால் முழுதும் மக்களைப் போலவே இருப்பர். அவர்களைப் போல ஒப்பு நாம் வேறு எங்கும் கண்டது இல்லை,

2. நன்றுஅறி வாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர். 1072

[ப-ரை] நன்று அறிவாரின் - தமக்கு இருக்க வேண்டிய நல்லவைகளை அறிந்திருப்பவர்களை விட, கயவர் - கீழ் மக்கள், நெஞ்சத்து - நெஞ்சத்தில், அவலம் - [நல்லவை களை நினைத்து] கவலை, இலர் - இல்லாதவர்கள் ஆனபடி யால், திருவுடையர் - [அவர்கள்] நன்மையுடையவர்களா வார்கள்.

[க-ரை] நல்லவைகளை அறிந்திருப்பவர்களை விட அதனை அறியாத கீழ்மக்களாகிய கயவர்கள், அவை காரணமாகத் தம் நெஞ்சத்தில் கவலை இல்லாதவர் களாதலால் நன்மையுடையவராவர்.

3. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான். 1073

[ப-ரை] அவரும் - அக்கயவரும் [தேவர்களைப் போல தம்மை நியமிப்பாரின்றி] தாம் - தம், மேவன - விரும்பின

வற்றை, செய்து - செய்து, ஒழுகலான் - நடந்து கொள்ளுவ தால், கயவர் - கயவரும், தேவர் - தேவரும், அனையர் ஒரு தன்மையர் ஆவர்.

[க-ரை] கயவரும் தாம் விரும்பியவாறு தேவரைப் போலத் தம்மை நியமிப்பாரின்றி விரும்பியவற்றைச் செய்வதால், கயவரும் தேவரும் ஒரு தன்மையராவர்.

4. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். 1074

[ப-ரை] கீழ் - கீழ்மகனான கயவன், அகப்பட்டி தன்னைவிடச் சுருங்கிப் பட்டியாய், ஆவாரை - நடப்பவரை காணின் - கண்டானானால், அவரின் மிகப்பட்டு - அவரை விடத் தான் மேம்பாடு காட்டி, செம்மாக்கும் - இறுமாப்புக் கொள்ளுவான்.

[க-ரை] கீழ்மகன் தன்னில் சுருங்கிய பட்டியாய் நடப்பவரைக் கண்டால் அப்படிப்பட்ட நடத்தையில் அவரைவிட மேம்பட்டு தன் மிகுதியினைக் காட்டி இறுமாப் படைவான்.

5. அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது. 1075

[ப-ரை] கீழ்களது - கீழ்மக்களது, ஆசாரம் - ஆசாரத் திற்குக் காரணம், அச்சமே - துன்பம் வருமென்ற அச்சமே யாகும், எச்சம் - அந்தக் காரணம் இல்லையானால், அவா விரும்பிய பொருள், உண்டேல்-அதனால் வருமேயானால், சிறிது உண்டாம்-அப்போதும் சிறிது ஆசாரம் உண்டாகும்.

[க-ரை] கயவர்களிடம் ஆசாரம் இருக்கக் கண்டால் அதற்குக் காரணம் மேலாக உள்ளவரால் துன்பம் வருமென்ற அச்சமேயாகும். அதுவேயன்றித் தம்மால் விரும்பப்படும் பொருள் கிடைக்குமென்றாலும் ஆசாரம் காட்டுபவனாவன்.

6. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். 1076

[ப-ரை] தாம் - கயவர்தாம், கேட்ட - கேட்டறிந்த, மறை - மறைபொருள்களை, உய்த்து - போகுமிட மெல்லாம் தாங்கிக் கொண்டு போய், பிறர்க்கு - மற்றவர் களுக்கு, உரைக்கலான் - சொல்லுதலால் கயவர் - கயவர் அறை - அடிக்கப்படுகின்ற, பறை - பறையினை, அன்னர் - ஒப்பவராவர்.

[க-ரை] கயவர் தாம் கேட்டறிந்த மறைபொருள் போகும் இடமெல்லாம் தாங்கிக் கொண்டுபோய் மற்றவர் களுக்குச் சொல்லுதலால், அக்கயவர் அடிக்கப்படுகின்ற பறையினை ஒப்பவராவர்.

7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு. 1077

[ப-ரை] கயவர் - கயவர்கள், கொடிறு-கன்னத்தினை, உடைக்கும் - உடைக்கின்ற, கூன் - வளைத்து முருக்கிய, கையர் அல்லாதவர்க்கு - கையினையுடையஅல்லாதவர்க்கு, ஈர்ங்கை - உணவு சாப்பிட்டுப் பூசிய ஈரக்கையினையும், விதிரார் - தெறிக்க மாட்டார்கள்.

[க-ரை] முறுக்கிய கையினால் தமது கன்னத்தினை நெரிப்பவர்க்கு அல்லாமல் கீழ்மக்கள் தாம் உணவு உண்டு பூசிய ஈரக் கையினையும் யாசிப்பவர்களுக்குத் தெறிக்க மாட்டார்கள்.

8. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். 1078

[ப-ரை] சொல்ல - சொல்லிய அளவிலேயே- சான்றோர் - மேலான சான்றோர், பயன் படுவர் - பிறர்க்குப் பயன் படுவார்கள், கீழ் - கயவர்கள், கரும்பு போல் - கரும்பினை நசுக்குவது போல, கொல்லப் பயன் படும் - நைய நெருக்கிய போதுதான் பயன்படுவார்கள்.

[க-ரை] மெலியார் தமது குறையினைச் சொல்லிய வுடனேயே சான்றோர் பயன்படுவர். மற்றைய கயவர் கரும்புபோல நைய நெருக்கியபோதுதான் பயன்படுவர்.

9. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். 1079

[ப-ரை] உடுப்பதூஉம் - பிறர் நன்கு உடுத்திக் கொள்ளுவதையும், உண்பதூஉம் - உண்ணுவதையும், கீழ் - கயவன், காணின் - காண்பானானால், [மனம் பொறாமல்] பிறர்மேல் - அத்தகைய மற்றவர்கள்மீது, [குற்றம் இல்லை என்றாலும்] வடு - குற்றத்தினை, காண - தானே உண்டாக்கிக் காட்டுவதில், வற்றாகும் - வல்லவனாவான்.

[க-ரை] மற்றவர்கள் செல்வத்தால் நன்கு உடுத்திக் கொள்ளுவதையும் உண்ணுவதையும் கயவன் கண்டு விட்டால், அவற்றைப் பொறாமல் அவர்மீது குற்றம் இல்லையென்றாலும் உண்டாக்கிச் சொல்வதில் வல்லவனா வான்.

10. எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து. 1080

[ப-ரை] கயவர் - கீழ்மக்கள், ஒன்று உற்றக்கால் - யாதானுமொரு துன்பம் தமக்கு வந்து விட்டால், விரைந்து - விரைவாகச் சென்று, விற்றற்கு - தம்மைப் பிறரிடம் விற்பதற்கு, உரியர் - உரியவராவர் [அதனையன்றி], எற்றிற்கு - வேறு எத்தொழிலுக்கு, உரியர் - உரியவராவர்?

[க-ரை] கயவர் தமக்கு யாதானுமொரு துன்பம் வந்த போது தம்மைப் பிறர்க்கு விரைவாக விற்றற்கு உரியர்; அதுவன்றி வேறு எத்தொழிலுக்கு உரியர்?

# காமத்துப் பால்

## களவு இயல்

### 109. தகை அணங்கு உறுத்தல்

[பெண்ணின் அழகு தலைவனை வருத்தல்]

1. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு. 1081

[ப-ரை] கனம் - கனத்த, குழை - காதணிகளையுடைய இப்பெண், அணங்குகொல் - ஒரு தெய்வமகளோ, ஆய் - தனிச் சிறப்புப் பெற்ற, மயில் கொல் - ஒரு மயிலோ, மாதர் கொல் - அல்லது மாது தானோ என்று, என் - எனது, நெஞ்சு - நெஞ்சம், மாலும் - மயங்குகின்றது. [ஒ - அசை நிலை]

[க-ரை] பொருந்த குழையுடைய இப்பெண் ஒரு தெய்வ மகளோ? அல்லது தனிச்சிறப்புடைய ஒரு மயிலோ? அல்லது மாது தானோ? இன்னவள் என்று துணிய முடியாமல் எனது நெஞ்சு மயங்குகின்றது.

2. நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து. 1082

[ப-ரை] நோக்கினாள் - இத்தகைய வனப்பினை யுடைய இப்பெண், நோக்கு - எனது நோக்கிற்கு,

எதிர் - எதிரில், நோக்குதல் - பார்த்தல், தாக்கு-தானே தாக்கி வருகின்ற, அணங்கு - தெய்வமகள், தானை- சேனையையும், கொண்டு - கொண்டுவந்த, அன்னது - தன்மையினை, உடைத்து - உடையதாகும்.

[க-ரை] இப்பெண் எனது பார்வைக்கு எதிராகப் பார்த்தல், தானே வருத்துகின்றஇப்பெண், சேனையையும் கொண்டு வந்த தன்மையினை உடைத்து.

3. பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை இனியறிந்தேன்
பெண்தகையான் பேரமர்க் கட்டு. 1083

[ப-ரை] கூற்று - கூற்றுவன், என்பதனை - என்று கூறப்படுவதனை, பண்டு - முன்பெல்லாம், அறியேன் - கண்டறியேன், இனி - இப்போது, அறிந்தேன் - அறிந்து கொண்டேன், [அது] பெண் - பெண்மைக்குரிய, தகையான் - தன்மைகளுடனே, பேர் - பெரியதான, அமர் கட்டு - போர் செய்கின்ற கண்களை உடையது.

[க-ரை] கூற்றுவன் என்று கூறப்படுவதினை முன்பெல் லாம் கண்டு அறியேன். இப்போது கண்டறிந்தேன். அது பெண் தன்மையுடனே பெரியனவாகப் போர் செய்யும் கண்களை உடையதாகும்.

4. கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தான் பெண்தகை
பேதைக்கு அமர்த்தன கண். 1084

[ப-ரை] பெண்தகை - பெண் தன்மையுடனே கூடிய, பேதைக்கு - இப்பேதைப் பெண்ணுக்கு, [இருக்கின்ற] கண் - கண்கள், கண்டார் - பார்த்தவரது, உயிர் - உயிரினை, உண்ணும் - உண்ணுகின்ற, தோற்றத்தான் - தோற்றத்துடனே பொருந்தி, அமர்த்தன - பெண்- தன்மைக்கு மாறுபட்டனவாய் இருந்தன.

[க-ரை] பெண் தன்மையுடன் கூடிய இப்பேதைக்கு இருக்கும் கண்கள், தம்மைக் கண்டவர் உயிரை உண்ணுகிற

தோற்றத்துடனே கூடி பெண் தன்மைக்கு மாறு பட்டிருந்தன.

5. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 1085

[ப-ரை] கூற்றமோ - கூற்றுவன் தானோ? கண்ணோ - கண்களோ, பிணையோ - பெண் மானோ, மடவரல் - இப்பெண்ணின், நோக்கம் - நோக்கமானது, இம்மூன்றும் - இந்த மூன்று தன்மைகளையும், உடைத்து - கொண்டதாக இருக்கின்றது.

[க-ரை] கூற்றுவன் தானோ? பெண்ணின் கண்கள் தானோ? மானோ, யாதென்று அறிய முடியாதவனானேன். இப்பெண்ணின் கண்கள் நோக்கம் இம்மூன்று தன்மையினையும் உடையதாக இருக்கின்றது.

6. கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர்
செய்யல மன்இவள் கண். 1086

[ப-ரை] கொடும் - கொடுமையான, புருவம் - இப் பெண்ணின் புருவங்கள், கோடா - வளையாமல் நேராக இருந்து, மறைப்பின் - விலக்கினால், இவள் - இப் பெண்ணின், கண் - கண்கள், நடுங்கு - நடுக்கத்தினை உண் டாக்குகிற, அஞர் - துன்பத்தினை, செய்யல - செய்ய மாட்டா (மன் - ஒழியிசை)

[க-ரை] கொடுமையான புருவங்கள் வளையாமல் செம்மையாயிருந்து விலக்குமானால் இப்பெண்ணின் கண் கள் நடுங்குவதற்குக் காரணமான துன்பத்தினைச் செய்யா திருக்கும்.

7. கடாஅக் களிற்றின் மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். 1087

[ப-ரை] மாதர் - இப்பெண்ணினுடைய, படாஅ - சாயாதிருக்கும், முலை - முலைகளின், மேல் - மேலே அணியப்பட்ட, துகில் - துகிலானது (துணியானது கடாஅ)

கொல்லக்கூடிய, களிற்றின் மேல் - மதயானையின் மேலே போடப்பட்ட, கட்படாம் - முகபடாம் என்னும் துணியினை ஒத்திருக்கின்றது.

[க-ரை] இம்மாதினுடைய சாய்தலில்லாத முலைகளின் மேலிட்ட துணியானது கொல்லுவதாகிய மதயானையின் மேலிட்ட முகப்படாத்தினைஒத்திருக்கின்றது.

8. ஒண்ணுதற்கு ஓஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு. 1088

[ப-ரை] ஞாட்பினுள் - போர்க்களத்தினில், நண்ணாரும் - வந்து நேரில் எதிர்க்காதவர்களும், உட்கும் - அஞ்சுகின்ற, என் - எனது, பீடு - வலிமையெல்லாம், [இப்பெண்ணின்] ஒள் - ஒளிபொருந்திய, நுதற்கு ஓஒ - நெற்றியின் அழகு ஒன்றற்கே, உடைந்ததே - உடைந்து அழிந்து விட்டதே.

[க-ரை] போர்க்களத்திற்கு வந்து எதிர்க்காத பகைவர்களும் எதிர்த்தவர் சொல்லியதைக் கேட்டு அஞ்சுவதற்குக் காரணமான எனது வலிமை இம்மாதின் ஒளி பொருந்திய நுதல் ஒன்றிற்கே அழிந்துவிட்டது.

9. பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து. 1089

[ப-ரை] பிணை - பெண்மானை, ஏர் - ஒத்த, மட - மடமையுள்ள, நோக்கும் -,நோக்கினையும், நாணும் - நாணத்தினையும், உடையாட்கு - உடையவளாகிய இப்பெண்ணிற்கு, ஏதில - வேற்றுமையான (அணிகலன்களை) தந்து - படைத்து, அணி- அணிந்திருக்கச் செய்தல், எவன்- என்ன பயனைத் தருவதாகும்.(ஓ-அசைநிலை)

[க-ரை] மானைப் போன்ற மடநோக்கினையும் நாணத்தினையும் உடைய இவளுக்கு வேறு அணிகலன்களை அணிதல் என்ன பயனுடைத்து?

10. **உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்**
**கண்டார் மகிழ்செய்தல் இன்று.** 1090

[ப-ரை] அடு - காய்ச்சி எடுக்கப்பட்ட, நறா - மது வானது, உண்டார்கண் - உண்டவர்களிடத்தில், அல்லது - அல்லாமல், காமம் போல் - காமத்தினைப் போல், கண்டார் - பார்த்தவர்களிடத்தில், மகிழ் - மகிழ்ச்சியினை, செய்தல் இன்று - செய்தல் இல்லை.

[க-ரை] காய்ச்சப்பட்ட மதுவானது தன்னை உண்டார்களிடத்தில் தான் மகிழ்ச்சியினைக் செய்வதாகும். காமத்தினைப் போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியினைச் செய்தல் உடைத்தன்று.

## 110. குறிப்பு அறிதல்

(ஒருவர் குறிப்பினை ஒருவர் அறிந்து கொள்ளுதல்)

1. **இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு**
**நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து.** 1091

[ப-ரை] இவள் - இப்பெண்ணினுடைய, உண்கண் - மையுண்ட கண்களில், உள்ளது - இருக்கும் நோக்கானது, இரு - இரண்டு, நோக்கு - நோக்காயிற்று (அவைகளில்) ஒரு நோக்கு - ஒரு நோக்கானது, நோய் - நோயினைச் செய்யும், நோக்கு - நோக்காகும், ஒன்று - பிறிதொரு நோக்கானது, அந்நோய் - அந்த நோய்க்கு, மருந்து - மருந்தாகும்.

[க-ரை] இவளுடைய நோக்கு இதுபோது என்மேல் இரண்டு நோக்காயிற்று. அவற்றுள் ஒரு நோக்கு எனக்கு நோய் செய்யும் நோக்கு. மற்றையது அந்நோய்க்கு மருந்தான நோக்காகும்.

2. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தின்
செம்பாகம் அன்று பெரிது. 1092

[ப-ரை] கண் - இப்பெண்ணினுடைய கண்கள், களவு- களவுத் தன்மையில் யான் காணாமல், கொள்ளும் - என் மேல் நோக்குகின்ற, சிறு - சிறிய, நோக்கம் - நோக்கானது, காமத்தின் - மெய்யுறு புணர்ச்சியின், செம்பாகம் - ஒத்த பாதியளவு, அன்று - அல்ல, பெரிது - அதனை விடப் பெரிதாகும்.

[க-ரை] இவள் கண்கள் யான் காணாமல் என்மேல் நோக்குகின்ற சிறிய நோக்கம் மெய்யுறு புணர்ச்சியின் ஒத்த பாதியன்று. அதனினும் மிகும்.

3. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃது அவள்
யாப்பினுள் அட்டிய நீர். 1093

[ப-ரை] நோக்கினாள் - யான் காணாத போது என்னை நோக்கியவள், நோக்கி - என்னை நோக்கி, இறைஞ்சினாள் - மனதில் ஒன்றை நினைத்து நாணத்துடன் குனிந்தாள், அஃது - அச்செயலின் குறிப்பு, யாப்பினுள் - எங்களிடையே தோன்றிய காதற்பயிர் வளர அதற்கு, அவள் - அப்பெண், அட்டிய - ஊற்றிய, நீர் - நீராக இருந்தது.

[க-ரை] யான் நோக்காதிருக்கும் போது அவள் என்னை அன்போடு நோக்கினாள். நோக்கி ஒன்றனை மனதிற் கொண்டு நாணத்துடன் தலை குனிந்தாள். அக் குறிப்பு எங்களிடம் உண்டான அன்பாகிய பயிர் வளர நீர் வார்த்தது போலாயிற்று.

4. யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும். 1094

[ப-ரை] யான் - நான், நோக்குங்காலை - அவளை நோக்கும்போது, நிலன் - அவள் குனிந்து நிலத்தினை,

நோக்கும் - நோக்குகின்றாள், நோக்காக்கால் -நான் நோக்காதபோது, தான் - அவள், நோக்கி - என்னை நோக்கி, மெல்ல - மெதுவாக வெளிப்படாமல், நகும் - மகிழ்ச்சி கொள்ளுவாள்.

[க-ரை] யான் அவளைப் பார்க்கும் போது நிலத்தினை நோக்கி நின்றாள். நான் நோக்காதபோது என்னை நோக்கித் தன்னுள்ளே மகிழ்கின்றாள்.

5. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். 1095

[ப-ரை] குறிக்கொண்டு - நேராக ஒரு குறிப்பினைக் கொண்டு, நோக்காமை - நோக்காதது, அல்லால் - அல்லாது, ஒரு கண் - ஒரு கண்ணை, சிறக்கணித்தாள் - சுருக்கிக் கொண்டவள், போல - போன்று, நகும் - என்னை நோக்கி உள்ளுக்குள் மகிழ்வாள்.

[க-ரை] அவளாகக் குறிக்கொண்டு நோக்குவதுபோல் அல்லாமல் ஒரு கண்ணைச் சுருக்கினவள் போல என்னை நோக்கிப் பின் தனக்குள்ளே மகிழ்கின்றாள்.

6. உறாஅ தவர்போல் சொலினும் செறாஅச்சொல்
ஒல்லை உணரப் படும். 1096

[ப-ரை] உறாஅதவர்போல் - வெளிப் பார்வைக்கு அயலார் போல, சொலினும் - கடுமையான சொற்களைச் சொன்னாலும், செறாஅர் - உள்ளத்தில் பகையில்லாதவர் சொல் - சொற்கள், ஒல்லை - விரைவில், உணரப்படும் - உணர்ந்து தெரிந்து கொள்ளப்படும்.

[க-ரை] வெளிப்பார்வைக்கு அயலார் போலக் கடுஞ்சொல் சொன்னாலும் மனத்தில் பகைமையில்லாதவருடைய சொல் விரைவில் அறிந்து கொள்ளப்படும்.

**7.** செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு. 1097

[ப-ரை] செறாஅ - பின்னே இனிதாகவும் முன்னே துன்பமாகவும் இருக்கின்ற, சிறு - சிறிய, சொல்லும் - சொல்லும், செற்றார் போல் - உள்ளத்தில் பகையாதிருந்து வெளித் தோற்றத்திற்குப் பகைத்தவர் போன்ற, நோக்கும் - சினங்கொண்ட நோக்கும், உறாஅர் போன்று - அயலார் போல இருந்து காட்டி, உற்றார் - காதலில் நட்பு கொண்டவர்களுக்கு, குறிப்பு - ஒரு குறிப்பினைக் கருதி உண்டாதாகும்.

[க-ரை] பின்னர் இனிதாகவும் முன்னர் இனிமை இல்லாததுமான சொல்லும், மனத்தில் கோபியாதிருந்து புறத்தே கோபித்தார் போன்ற வெகுளி நோக்கும் அயலார் போன்றிருந்து நட்பாயினார்க்கு ஒரு குறிப்புப் பற்றி வருவனவாகும்,

**8.** அசையியற்கு உண்டுஆண்டு ஓர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும். 1098

[ப-ரை] யான் - நான், நோக்க - கடிய சொல்லுக்கு வருந்தி இரந்து பார்த்தபோது, பசையினாள் - அன்பும் இரக்கமும் கொண்டவளாகி, பைய - மெல்ல, நகும் - நகைத்து நின்றாள், (ஆகையினால்) அசை - துவளுகின்ற, இயற்கு - தன்மையுடைய இப்பெண்ணிற்கு, ஆண்டு - அந்த நகைப்பினால் (தோன்றுகின்ற) ஓர் - ஒரு, ஏஎர் - நன்மைக் குறிப்பு, உண்டு - இருக்கின்றது.

[க-ரை] என்னை விலக்குகின்ற சொற்களுக்குப் பொறுக்காமல் யான் யாசிப்பது போல நோக்கியபோது அதையறிந்து உள்ளே மகிழ்ந்து நின்றாள். அதனால், அசைந்த சாயலுடைய அவள் காட்டிய அந்த நகைப்பினிடத்தே ஒரு நன்மைக் குறிப்பு உண்டு.

9. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள 1099

[ப-ரை] ஏதிலார் முன்பெல்லாம் அறிந்திராதவர்கள், போல - போல, பொது - பொதுத்தன்மையான, நோக்கு - நோக்கினில், நோக்குதல் - ஒருவரையொருவர் நோக்கிக் கொள்ளுதல், காதலார்கண்ணே - காதலர் இருவரிடத்தும், உள - இருப்பதாகின்றது.

*[க-ரை]* முன்னறியாதவர்போல ஒருவரையொருவர் பொது நோக்கினால் பார்த்துக் கொள்ளுதல் காதல் உடையாரிடத்தில் இருப்பதாகும்.

10. கண்ணொடு கண்ணிணை. நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. 1100

[ப-ரை] கண்ணொடு - ஒருவர் கண்களோடு, கண் இணை - மற்றவர் கண்களும், (ஒன்று சேர்ந்து) நோக்கு - நோக்கினால், ஒக்கின் - ஒத்து விட்டால், வாய்ச் சொற்கள் - அவர்கள் பேசுகின்ற வாய்ச்சொற்கள், என்ன பயனும் இல - எந்தப் பயனும் உடையன அல்லவாம்.

*[க-ரை]* காதலர் இருவருடைய கண்கள், ஒருவர் கண்கள் நோக்கால் ஒக்குமாயின் அவர்கள் சொல்லுகின்ற வாய்ச் சொற்கள் ஒரு பயனும் உடையன அல்லவாம்.

## 111. புணர்ச்சி மகிழ்தல்

[தலைமகன் இன்பம் நுகர்ந்ததை மகிழ்ந்து கூறல்]

1. கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. 1101

[ப-ரை] கண்டு - கண்டும், கேட்டு - கேட்டும், உண்டு, உண்டும், உயிர்த்து - மோந்தும், உற்று - தொட்டும் அறியும் - நுகரப்படுகின்ற, ஐம்புலனும் - ஐந்து புலன்களும்

ஒண் - ஒளி பொருந்திய, தொடிகண்ணே - வளையல் களையுடைய இப்பெண்ணினிடத்தே, உள - இருக்கின்றன.

[க-ரை] கண்ணால் கண்டும், செவியால் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும், மெய்யால் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலனும் ஒளிபொருந்திய வளையல்களையுடைய இப்பெண்ணினிடத்தே இருக்கின்றன.

2\. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. 1102

[ப-ரை] பிணிக்கு - நோய்களுக்கு, மருந்து - மருந்து எனப் படுவன, பிற - மாறான குணத்தினையுடையன வாகும், அணியிழை - அணிகலன்களை அணிந்த இம்மாது, தன் - தன்னாலுண்டான, நோய்க்கு - நோய்க்கு, தானே - அப்பெண்ணே, மருந்து - மருந்தும் ஆனாள். (மன் - ஒழியிசை)

[க-ரை] பிணிக்கு மருந்தானவை அவற்றிற்கு மாறான தன்மையினையுடையனவாகும். அவ்வாறின்றி ஆபரணங் களையுடைய இம்மாது தன்னாலுண்டான பிணிக்குத் தானே மருந்தும் ஆயினாள்.

3\. தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. 1103

[ப-ரை] தாம் - தம்மால், வீழ்வார் - விரும்பப்படும் பெண்ணினது, மென் - மெல்லிய, தோள் - தோள்களின் மேல்; துயிலின் - தூங்குவதைப் போல, தாமரைக்கண்ணான் - தாமரைக்கண்ணனுடைய, உலகம் - உலகம், இனிதுகொல் - இன்பமுடையது ஆகுமோ?

[க-ரை] தாம் விரும்பிய மகளிரது மெல்லிய தோள் களின்மீது துயிலும் துயில்போலத் தாமரைக் கண்ணன் உலகம் இனிமையுடையதோ?

4. நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள். 1104

[ப-ரை] நீங்கின் - அம்மாதைவிட்டு நீங்கிய போது தெறூஉம் - சுடும், குறுகுங்கால் - அவளிடம் நெருங்கி - சென்றபோது, தண் என்னும் - குளிர்ச்சியாக இருக்கும், தீ- இத்தகைய நெருப்பினை, இவள் - இம்மாது, யாண்டு-எந்த உலகத்தில், பெற்றாள் - பெற்றாள்.

[க-ரை] தன்னை விட்டு நீங்கினால் சுடுகின்றது; அணுகினால் குளிர்ச்சியாக இருக்கின்றது. இத்தன்மைத் தான தீயினை இப்பெண் எவ்வுலகில் பெற்றாள்?

5. வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 1105

[ப-ரை] தோட்டார் - பூவினையணிந்த, கதுப்பினாள்- கூந்தலினை யுடையவளின், தோள் - தோள்கள், வேட்ட - இனிமையானவற்றை விரும்பிய, பொழுதின் - நேரத்தில்- அவையவை -விரும்பிய அவைதானே வந்து இன்பத்தினைச் செய்வன, போலுமே - போலவே இருக்கின்றன.

[க-ரை] எப்போது புணர்ந்தாலும் பூவினையணிந்து தழைத்த கூந்தலையுடைய இவளுடைய தோள்கள் விரும்பியபோது தாமே வந்து இன்பம் செய்வதுபோல இன்பம் செய்கின்றன.

6. உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலாம் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். 1106

[ப-ரை] உயிர் - உயிரானது, உறுதோறு - பெற்று அனுபவிக்கும் பொழுதெல்லாம், தளிர்ப்ப - தளிர்க்கும் வகையில், தீண்டலால் - தொடுவதாலே; பேதைக்கு - இப் பேதைப் பெண்ணுக்கு, தோள் - தோள்கள், அமிழ்தின் - அமிழ்தத்தினாலே, இயன்றன-செய்யப்பட்டிருப்பனவாகும்.

[க-ரை] எனது உயிர் அவளைப் பெற்று அனுபவிக்குந் தோறும் தளிர்க்கும் வகையில் தீண்டுதலால் இப்பேதைப் பெண்ணுக்குத் தோள்கள் அமிழ்தத்தினால்செய்யப்பட்டன வாகும்.

7. தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. 1107

[ப-ரை] அம் - அழகிய, மா - மாமைநிறமுடைய, அரிவை - இப்பெண்ணின், முயக்கு - தழுவுதல் என்பது (இன்பம் தருவதால்), தம் - தமக்குரிய, இல் - மனையில், இருந்து - இருந்து கொண்டு, தமது - தாம் வைத்துள்ள பொருளை, பாத்து - மற்றவர்களுக்கும் பகுத்துக் கொடுத்து, உண்டற்று - உண்பதுபோல மகிழ்ச்சியாக இருக்கின்றது. (ஆல் - அசைநிலை)

[க-ரை] அழகிய மாமை நிறத்ினையுடைய இப் பெண்ணினைத் தழுவும்போது தமது மனையிலிருந்து தமக்கு வந்த பொருளைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு மகிழ்வது போலிருக்கின்றது.

8. வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. 1108

[ப-ரை] வளி - காற்று, இடை - இருவருக்கும் இடையில், போழப்படாஅ-போகமுடியாதபடி இருக்கின்ற, முயக்கு-தழுவிப் புணர்தலானது, வீழும்-காதல் கொண்ட, இருவருக்கு - காதல் இருவருக்கும், இனிதே - இனிமை தருவதாகும்.

[க-ரை] ஒரு பொழுதும் நெகிழாமையால் காற்று இடையில் புகாமல் தழுவுதல் ஒருவரையொருவர் விரும்புகின்ற இருவர்க்கும் இன்பம் தருவதாகும்.

9. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன். 1109

[ப-ரை] ஊடல் - ஊடிக் கொள்ளுதலும், உணர்தல் - அதனை அளவோடு நீக்கிக் கொள்ளுதலும், புணர்தல்-

புணர்தலும், இவை - எனப்படும் இவைதாம், காமம் கூடியார் - மணந்து கொண்டு வாழ்ந்தார், பெற்ற - அடைந்த, பயன் - பயன்களாகும்.

[க-ரை] புணர்ச்சி இனிமையாதற் பொருட்டு வேண்டுவதாய கூடலும், அதனை அளவறிந்து நீக்குதலும் பிறகு ஆகிய புணர்தலும் இவை தாம் திருமணம் செய்துகொண்டு காமத்தை இடைவிடாமல் எய்தியவர்கள் பெற்ற பயன்களாகும்.

10. அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. 1110

[ப-ரை] சேயிழைமாட்டு - சிவந்த அணிகலன்களையுடைய இம்மாதிடத்தில், செறிதோறும் - இன்பம் நுகருந்தோறும், காமம் -[இவள் மாட்டுக்] காதல், அறிதோறு - நூற் பொருள்களைக் கற்று அறிய அறிய, அறியாமை - முன்னர் அறியாதிருந்தவைகளை, கண்டற்று - புதிதாகக் கண்டறிந்தது போல இருக்கின்றது. [ஆல் - அசை நிலை]

[க-ரை] நூற்பொருள்களைக் கற்குந்தோறும் முன்னை அறியாமையினைக் கண்டாற்போல, சிவந்த இழையினையுடையாளை இடைவிடாது செறியச் செறிய இவளிடம் புதுமை காணப்படுகிறது.

## 112. நலம் புனைந்து உரைத்தல்

[தலைமகன் தலைமகளது சிறப்பினைப் புனைந்துரையால் சிறப்பித்துக் கூறல்]

1. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். 1111

[ப-ரை] அனிச்சமே - அனிச்ச மலரே, வாழி - நீ வாழ்வாயாக, நன்னீரை - நல்ல இயற்கையினையுடையாய்,

யாம் - யாம், வீழ்பவள் - விரும்பிக் கொண்ட காதலி, நின்னினும் - உன்னைவிட, மென் - மென்மையான, நீரள் - தன்மையினையுடையவளாவாள்.

[க-ரை] அனிச்சப்பூவே! நீ வாழ்வாயாக! மென்மைத் தன்மையில் நீ எல்லாப் பூவினும் நல்ல இயற்கையினை யுடையாய் இருப்பினும் என்னால் காதலிக்கப்பட்ட இப் பெண் உன்னைவிட மெல்லிய இயற்கையழகு உடையவள் ஆவாள்.

2. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று, 1112

[ப-ரை] நெஞ்சே - நெஞ்சமே, இவள் - இவளுடைய, கண் - கண்கள், பலர் - பலரும், காணும் - பார்க்கின்ற, பூ - மலர்களை, ஒக்கும் - ஒத்திருக்கும், என்று - என்று எண்ணி, மலர் - மற்ற மலர்களை, காணின் - பார்த்தால், மையாத்தி - மயக்கமுறுகின்றாய்.

[க-ரை] நெஞ்சமே! இவளுடைய கண்கள் பலராலும் காணப்படும் பூக்களை ஒக்கும் என்று கருதி மற்ற மலர்களைக் கண்டால் மயங்கி நிற்கின்றாய். நின் அறிவு இருந்தவாறு என்னே?

3. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு. 1113

[ப-ரை] வேய் - மூங்கில் போலும், தோள் - தோள் களையுடைய, அவட்கு - அம்மாதுக்கு, மேனி - உடல் நிற மானது, முறி - தளிர் போன்றதாகும், முறுவல் - பல் முத்தம் - முத்துக்களாக இருக்கும், நாற்றம் - இயல்பான மணம், வெறி - சிறந்த மணமாக இருக்கும், உண் கண் - மை தீட்டப் பெற்ற கண்கள், வேல் - கூரிய வேல்களாக இருக்கும்.

[க-ரை] வேய் போலும் தோள்களையுடைய இப் பெண்ணிற்கு நிறம் தளிர் நிறமாயிருக்கும், பல் முத்துக்

களைப்போல இருக்கும், இயல்பாக மணம் நறுமணமா யிருக்கும்; மை தீட்டப்பெற்ற கண்கள் வேலாக இருக்கும்.

4. காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வேம் என்று. 1114

[ப-ரை] குவளை - குவளைப் பூக்களும், காணின் - காணுகின்ற, தன்மையைப் பெற்றிருந்தால், மாண் - மாட்சிமையுடைய, இழை - அணிகலன்களை அணிந்த, [இப்பெண்ணின்] கண் - கண்களை, ஒவ்வேம் - ஒத்திருக்க மாட்டோம், என்று - என்று, கவிழ்ந்து - கவிழ்ந்து, நிலன் - பூமியை, நோக்கும் - நோக்கியிருக்கும்.

[க-ரை] குவளை மலர்களுக்குக் காணுகின்ற தன்மை இருக்குமானால் சிறந்த இழையினையுடைய இப்பெண்ணின் கண்களுக்கு ஒப்ப மாட்டோம் என்று எண்ணிக் கவிழ்ந்து நிலத்தினைப் பார்க்கும்.

5. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 1115

[ப-ரை] அனிச்சப்பூ - அனிச்சப் பூக்களை, கால் -காம்புக் களையாள்-களையாமல்[நீக்காமல்] பெய்தாள் - தலையில் வைத்துக்கொண்டாள், நுசுப்பிற்கு - இவளுடைய இடுப்பிற்கு, நல்ல - நல்லவற்றிற்கு ஒலிக்கும்; பறை - பறைகள், படாஅ - இனி ஒலிக்கா [இடைமுரியும்].

[க-ரை] இவள் தனது மென்மைத் தன்மையினைக் கருதாமல் அனிச்சப்பூவினைக் காம்பு களையாமல் சூடிக் கொண்டாள். இனி இவள் இடையில் நல்ல பறைகள் ஒலிக்கா!

6. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன். 1116

[ப-ரை] மீன் - விண்மீன்கள், மதியும் - சந்திரனுக்கும் மடந்தை - இப்பெண்ணின், முகனும் - முகத்திற்கும், அறியா - வேறுபாடு தெரியாமல், பதியின் - தமது இடத்

தினின்றும், கலங்கிய - கலக்கமுற்றுத் திரிந்து கொண்டிருக்கின்றன.

[க-ரை] விண்மீன்கள், சந்திரனுக்கும் எம்மடந்தைக்கும் வேறுபாட்டினை அறிய முடியாமல் தம் இடத்திலிருந்து கலங்கித் திரிகின்றன.

7. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 1117

[ப-ரை] அறுவாய்-முன்பு குறைந்திருந்த இடமானது, நிறைந்த - முன்பு நிறையப் பெற்று, அவிர் - ஒளிவிடுகின்ற, மதிக்குப் போல - சந்திரனிடத்தில் இருப்பதைப் போல, மாதர் - இப் பெண்ணின், முகத்து - முகத்தில், மறு உண்டோ - களங்கமானது இருக்கின்றதோ?

[க-ரை] இடம் குறைந்து பின்பு நிரம்பி விளங்கும் சந்திரனைப் போல இம்மாதின் முகத்தில் மறுவுண்டோ?

8. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. 1118

[ப-ரை] மதி - மதியே, வாழி - நீ வாழ்வாயாக! மாதர் - மாதர்களின், முகம் போல் - முகத்தினைப் போல, ஒளிவிட - ஒளி விடுவதற்கு, வல்லையேல் - வல்லமை பெற்றிருந்தால், காதலை - நீயும் என்னால் காதலிக்கப் படுகின்ற சிறப்பினைப் பெறுவாய்.

[க-ரை] மதியே! நீ வாழ்வாயாக! இம்மாதர் முகம் போல் யாம் மகிழும் வகையில் ஒளி வீசவல்லையாயின் நீயும் என்னுடைய காதலினைப் பெறுவாய்!

9. மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி. 1119

[ப-ரை] மதி - மதியே! மலர் - மலரினை, அன்ன - போன்ற, கண்ணாள் - கண்களையுடைய, இப் பெண்ணி

னுடைய, முகம் - முகத்தினை, ஒத்தியாயின் - ஒத்திருக்க விரும்புவாயானால், பலர் - பலரும், காண - காணும்படி; தோன்றல் - தோன்றாதிருப்பாயாக.

[க-ரை] மதியே! மலர்போன்ற கண்ணினையுடைய இப்பெண்ணின் முகத்தினை நீ ஒத்திருக்க விரும்புவா யானால் யான் மட்டும் காணத் தோன்றுவாயாக! பலரும் காணுமாறு தோன்றாதிருப்பாயாக.

10. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 1120

[ப-ரை] அனிச்சமும் - மென்மைத் தன்மை நிறைந்த அனிச்சப்பூவும், அன்னத்தின் - அன்னப்பறவையினுடைய, தூவியும் - மெல்லிய இறகும், மாதர் - பெண்களின் அடிக்கு - பாதங்கட்கு, நெருஞ்சிப் பழம் - முள் நிறைந்த நெருஞ்சிப்பழம் போலத் துன்பம் செய்யும்.

[க-ரை] மென்மையான அனிச்சப்பூவும் அன்னப் பறவையின் சிறகும் ஆகிய இரண்டும் மாதர் அடிகளுக்கு நெருஞ்சிப் பழத்தினைப் போல வருத்தம் செய்யும்.

## 113. காதற் சிறப்பு உரைத்தல்

[தலைமகனும் தலைமகளும் காதல் மிகுதியினைக் கூறல்]

1. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர். 1121

[ப-ரை] பணி - மென்மையான, மொழி-சொல்லினை யுடைய இப்பெண்ணினது, வால் - வெண்மையான, எயிறு - பற்களில், ஊறிய நீர் - ஊறிவரும் நீரானது, பாலொடு - பாலோடு, தேன் - தேன், கலந்தற்றே - கலந்த அவை போன்று இனிமையானதாகும்.

[க-ரை] மெல்லிய சொல்லினை யுடையாளது வெண்மையான பற்களில் ஊறிய நீர் பாலொடு தேனைக் கலந்த கலவை போன்றதாகும்.

2. உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 1122

[ப-ரை] மடந்தையொடு - இப் பெண்ணுடன், எம்மிடை - எம்மிடத்தில், [உண்டான] நட்பு - நட்பு, உடம்பொடு - உடம்புடன், உயிரிடை - உயிருக்குள்ள தொடர்பு, என்ன - எவ்வாறு உள்ளதோ, அன்ன - அத் தன்மை கொண்டதாகும்.

[க-ரை] இப்பெண்ணுடன் எமக்கு உண்டான நட்பு உடம்போடு உயிரிடை உண்டான நட்பு எத்தன்மை யானதோ அத்தன்மை உடையதாகும்.

3. கருமணியிற் பாவாய்நீ போதாய் யாம்வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 1123

[ப-ரை] யாம் - எம்மால், வீழும் - காதலிக்கப்பட்ட, திரு - அழகிய, நுதற்கு - நெற்றியினையுடைய காதலி வந்து இருக்க, இடம் இல்லை - வேறு இடம் இல்லை யாதலால், கரு - கருமையான, மணியில் - கண்ணின் மணிகள் உள்ள, பாவாய் - பாவையே, நீ போதாய் - நீ அந்த இடத்தை விட்டுச் செல்லுவாயாக!

[க-ரை] கண்களில் இருக்கும் கருமணிகளில் உள்ள பாவையே! நீ அங்கிருந்து போவாயாக! போகாதிருந்தால், எம்மால் காதலிக்கப்பட்ட அழகிய நுதலினையுடையவள் இருக்க இடமில்லாமற் போகும்.

4. வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்
அதற்குஅன்னள் நீங்கு மிடத்து. 1124

[ப-ரை] ஆயிழை - ஆராய்ந்தணியப் பெற்ற அணி கலன்களையுடைய இப்பெண் [புணரும் போது] உயிர்க்கு -

உயிருக்கு, வாழ்தல் - உடம்போடு சேர்ந்து வாழ்வது, அன்னள் - போல இருக்கின்றாள். நீங்குமிடத்து - விட்டு நீங்கும்போது, அதற்கு - அந்த உயிருக்கு, சாதல் - உடம்பி லிருந்து அவ்வுயிர் நீங்கிப் போவது, அன்னள் - போல ஆகிவிடுகின்றாள்.

[கு-ரை] ஆராய்ந்து அணியப் பெற்ற ஆபரணங்களை யுடைய பெண், 'புணரும் போது உயிர் உடம்புடன் கூடி வாழ்தல் போல் இருக்கின்றாள். பிரியும்போது அந்த உயிர் அவ்வுடம்பிலிருந்து விலகிப் போவது போல் ஆகிவிடு கின்றாள்.

5. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்புஅறியேன்
ஒள்அமர்க் கண்ணாள் குணம். 1125

[ப-ரை] ஒள் - ஒளி பொருந்திய, அமர் - போரினைச் செய்கின்ற, கண்ணாள் - கண்களையுடைய இம்மாதின் குணம் - சிறப்பான குணங்களை, யான் - நான், மறப்பின் - மறந்திருத்தல், உள்ளுவன் - மீண்டும் நினைப்பவனாவேன், மறப்பு - எக்காலத்திலும் மறப்பதை, அறியேன் - அறிய மாட்டேன் [மன் - ஒழியிசை]

[கு-ரை] ஒளி பொருந்தியதாய் போர் செய்யும் கண்ணினையுடையாள் குணங்களை யான் மறப்பே னானால் நினைப்பேன். (ஆனால் நான்) ஒருபோதும் மறத்தலையறியேன், ஆதலால், நினைத்தலையும் அறியேன்.

6. கண்ணுள்ளில் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எம் காத லவர். 1126

[ப-ரை] எம் - எம்முடைய, காதலவர் - காதலர் கண் - கண்களின், உள்ளில் - உள்ளேயிருக்கும், போகார் - போக மாட்டார், இமைப்பின் - நான் இமைப்பேனாகில், பருவரார் - வருந்தப் படமாட்டார், நுண்ணியர் - காண

முடியாத அப்படிப்பட்ட நுண்ணிய தன்மையுடையவ ராவார்.

[க-ரை] எமது காதலர் எமது கண்ணுளிருந்து போக மாட்டார். அறியாமல் இமைத்தேனானாலும் அதனால் வருத்தப்படமாட்டார். ஆகையால் நுட்பமான தன்மை யுடையவராவார்.

7. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து. 1127

[ப-ரை] காதலர்- எனது அருமையான காதலர், கண்- கண்களில், உள்ளவராக - இருக்கின்றார் ஆனபடியால், கரப்பாக்கு - அத்துணை நேரமும் அவர் மறைந்திருப்பார், அறிந்து - என்பதைத் தெரிந்து, கண்ணும் - கண்களினை, எழுதேம் - மையினால் எழுதுவதையும் செய்ய மாட்டோம்.

[க-ரை] காதலர் எப்போதும் எம் கண்ணில் உள்ளார். ஆதலால், எழுதுகின்ற அத்துறைக் காலமும் அவர் மறைவதனை அறிந்து, கண்ணினை மையினால் எழுதுவதும் செய்யமாட்டோம்.

8. நெஞ்சத்தார் காத லவராக வெய்துஉண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. 1128

[ப-ரை] காதலர் - எம்முடைய காதலர், நெஞ்சத்தார் ஆக - நெஞ்சத்தினுள்ளேயே இருக்கின்றார் ஆனபடியால், வேபாக்கு - அவர் அச்சூட்டினாலே சுடப் பட்டு விடுவார் என்பதனை, அறிந்து- அறிந்து கொண்டு, வெய்து - சூடாக இருக்கும் உணவினை, உண்டல் - உண்ணுவதற்கு, அஞ்சுதும் - அஞ்சுகின்றேன்.

[க-ரை] எம் காதலர் எமது நெஞ்சிலேயே இருக்கின்றார்; எனவே சூடான உணவை உண்டால் அவர்

சூடுபட நேரும் என்றறிந்து சூடான உணவை உண்ண அஞ்சுகிறேன்.

9. இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலார் என்னும்இவ் ஊர். 1129

[ப-ரை] இமைப்பின் - எனது கண்கள் இமைக்கு-மானால், கரப்பாக்கு - கண்ணுள்ளே இருக்கும் காதலர் மறைவார் என்பதை, அறிவல் - நான் அறிவேன்-[ஆதலால் இமையாதிருக்கின்றேன்] அனைத்திற்கே - அந்தத் தன்மைக்கே, இவ்வூர் - இந்த ஊர், ஏதிலர்-[காதலர் துயிலாதநோய் செய்த] அன்பில்லாதவர், என்னும்-என்று கூறும்.

[க-ரை] எனது கண்கள் இமைக்குமாயின் உள்ளிருக்கின்ற என் காதலர் மறைதலையறிந்து இமைக்காமல் இருப்பேன். இமையாதிருப்பதைக் கண்ட இவ்வூர் மக்கள் அவரைத் தூங்காத நோய் செய்தார் என்று கூறுகிறார்கள்.

10 உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர். 1130

[ப-ரை] என்றும் - எந்த நேரத்திலும், உள்ளத்துள் எனது உள்ளத்தினுள் [காதல்], உவந்து - மகிழ்ச்சியுடன், உறைவர் - இருந்து கொண்டிருக்கின்றார், [அப்படி இருப்பது தெரியாமல்] இவ்வூர் - இருந்த ஊர், இகந்து-காதலர் பிரிந்து, உறைவர்- வசிக்கின்றார், ஏதிலார் - காதலர் அன்பில்லாதவர், என்னும் - என்று கூறும்.

[க-ரை] காதலர் எக்காலத்திலும் என் உள்ளத்துள்ளே மனமகிழ்ந்து தங்கியிருக்கின்றார். அதனை அறியாமல் அவர், பிரிந்திருக்கின்றார், அன்பில்லாதவர், என்று இவ்வூர் சொல்லும்.

# 114. நாணுத்துறவு உரைத்தல்

[சந்திப்பு இல்லாமல் தடுக்கப்பட்டிருத்தலும்
நாணம் இழத்தலும்]

1. காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை வலி. 1131

[ப-ரை] காமம் - காம இன்பத்தினை, உழந்து - துகர்ந்து, [பின்னர் இந்த இன்பம் இல்லாமல்] வருந்தினார்க்கு-வருந்துகின்ற ஆண்களுக்கு, ஏமம் - பண்டு தொட்டு வருகின்ற பாதுகாப்பு, மடல்-மடல் மா ஏறுதல், அல்லது - அல்லாமல், வலி இல்லை - வலியானது பிறி தொன்றுமில்லை.

[க-ரை] தம் காதலியோடு காமத்தினை அனுபவித்துப் பின்பு அது பெறாமல் இருக்கும் ஆடவர்க்கு, பழங்காலந் தொட்டு வருகின்ற பாதுகாப்பு, மடல் அல்லாமல் வேறு ஏதுமில்லை.

2. நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து. 1132

[ப-ரை] நோனா வருத்தத்தினைத் தாங்கமுடியாமல், உடம்பும் -எனது உடம்பும், உயிரும்-உயிரும், நாணினை- நாணத்தினை, நீக்கி-நீக்கி, நிறுத்து-அகற்றி விட்டு, மடல்- மடல் மா, ஏறும் - ஏறுவதற்கு எண்ணுகின்றன.

[க-ரை] வருத்தத்தினைப் பொறுத்துக் கொள்ள முடியாத உடம்பும் உயிரும் நாணத்தினை அகற்றி விட்டு வருத்தத்திற்குப் பாதுகாப்பான மடல்மாவினை ஊர்ந்து செல்லக் கருதுகின்றன.

3. நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். 1133

[ப-ரை] நாணொடு - நாணத்தோடு, நல்-நல்ல, ஆண்மை - சிறந்த ஆண்மையினையும், பண்டு - முன்பெல்லாம், உடையேன் - பெற்றிருந்தேன், [அவை காமவேகத்தால் நீக்கப்பட்டு விட்டபடியால்] காமுற்றார் - காமம் நிறைந்தவர், ஏறும்-ஏறுகின்ற, மடல் - மடல்மாவினை, இன்று - இந்த நேரத்தில், உடையேன் - உடைய உடையவனாக இருக்கின்றேன்.

[கு-ரை] நாணத்தினையும் மிக்க ஆண் தன்மையினையும் யான் கண்டு கொண்டிருந்தேன். அவை காமத்தால் நீக்கப் பட்டுவிட்டதால் இன்று காமுற்றார், ஏறுகின்ற மடலினை உடையவனானேன்.

4. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. 1134

[ப-ரை] நாணொடு - நாணத்துடன், நல் - நல்ல, ஆண்மை-ஆண் தன்மை, என்னும்- எனப்படுகின்ற, புணை- [பாதுகாப்பினை] புணைகளை, காமக் கடும்புனல்- காமமாகிய கடுமையான வெள்ளம், உய்க்குமே- அடித்துக் கொண்டு போய் விடுகின்றது.

[கு-ரை] காமத்தினைக் கடப்பதற்காக நான் கொண்டிருந்த நாணம், நல்லாண்மையாகிய புணைகளை என்னிடமிருந்து பிரித்துக் கொண்டு காமமாகிய கடுமையான புனல் கொண்டு போய் விட்டது.

5. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர். 1135

[ப-ரை] [மாலை - மாலைப் பொழுதில், உழக்கும் - வருந்தி அனுபவிக்கின்ற, துயர் - துயரத்தினையும், மடலொடு - மடல் மாவுடன், தொடலை - அணியும் மாலையினைப் போலத் தொடர்ந்திருக்கும், குறுந்தொடி - சிறு

வளையல்களையுடைய இப்பெண், தந்தாள் - எனக்குக் கொடுத்து விட்டாள்.

[க-ரை] மாலைப் பொழுதில் அனுபவிக்கும் துயரத்தினையும் அதற்கு மருந்தான மடலினையும் முன்பு அறியேன். இப்போது மாலை போலத் தொடர்ந்து சிறு வளையல்களையுடைய இப்பெண் அவைகளைத் தந்தாள்.

6. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்குஎன் கண். 1136

[ப-ரை] பேதைக்கு - பேதையாகிய இப்பெண்ணின் காரணமாக, என் - என்னுடைய, கண் - கண்கள், படல் - தூங்குதல், ஒல்லா - பொருந்தா வண்ணம் இருக்கின்றன, (ஆதலால்) யாமத்தும்-யாவரும் உறங்குகிற பாதிஇரவிலும், மன்ற மடலூர்தல் - மடல்மா ஏறுவதையே; உள்ளுவன் - உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருப்பேன்.

[க-ரை] என்னுடைய கண்கள் இப்பெண்ணின் காரணமாக ஒருபோதும் துயில் கொள்ளாமல் இருக்கின்றன. ஆகையினால் யாவரும் தூங்குகின்ற பாதி இரவிலும் யான் விழித்துக் கொண்டு மடலூர்தலையே நினைத்துக் கொண்டிருப்பேன்.

7. கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல். 1137

[ப-ரை] கடல் - கடலினை, அன்ன - போன்று அளவின்றி மிகுந்துவரும், காமம் - காம நோயினை, உழந்தும் - அனுபவித்துக் கொண்டிருந்தும், மடல் - மடல் மாவினை, ஏற - ஏற நினையாமல் பொறுமை கொண்டிருக்கும், பெண்ணின் - பெண் பிறப்புப் போல, பெருந்தக்கது - சிறந்த பெருமையுடைய பிறப்பு, இல் - வேறு எதுவும் இல்லையாகும்.

[க-ரை] கடல்போல மிகுந்து வருகின்ற காம நோயினை அனுபவித்தும் மடலூர்தலைச் செய்யாமல்

பொறுத்திருக்கும் பெண் பிறப்புப்போல மிக்க சிறப்புடைய பிறப்பு வேறு எதுவும் இல்லை.

8. நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும். 1138

[ப-ரை] நிறை - நிறை குணத்தினால், அரியர் - அருமையானவர், மன் அளியர் - மிகுந்த அன்பு காட்டத் தக்கவர், என்னாது - என்று இரக்கம் கொள்ளாமல், காமம் - மாதர்களுடைய காமம், மறை - அவர்கள் மறைத்திருப்பதை, இறந்து - கடந்து, மன்று - பிறர் அறியுமாறு மன்றத்தில், படும் - வெளிப்பட்டுவிடும்.

[க-ரை] 'இவர் நிறை குணத்தினால் நாம் செல்வதற்கு அருமையானவர்' என்று அஞ்சுதல் செய்யாமல் அன்பு காட்டத் தக்கவர் என்று இரக்கமும் கொள்ளாமல் மகளிர் காமம் அவர் மறைத்து வைத்திருப்பதையும் கடந்து பலர் அறிய மன்றத்தில் வெளிப்பட்டு விடுகின்றது.

9. அறிகிலார் எல்லோரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு. 1139

[ப-ரை] எல்லாரும் - எல்லா மக்களும், அறிகிலார் - அறிந்து கொள்ளவில்லை, என்றே - என்று கருதி, என் - என்னுடைய, காமம் - காமம், மறுகில் - இந்த ஊரின் தெருக்களில், மருண்டு மறுகும் - மயங்கிச் சுழன்று கொண்டிருக்கின்றது.

[க-ரை] 'யான் முன்பு அடங்கி இருந்ததனால் எல்லாரும் என்னை அறியவில்லை'. இனி அவ்வாறின்றி யானே வெளிப்பட்டு அறிவிப்பேன், என்று கருதி என் காமம் இவ்வூர் வீதியின் கண்ணே மயங்கிச் சுழல்கின்றது.

10. யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 1140

[ப-ரை] யாம் - யாம், பட்ட - அடைந்த காம நோய்களை, தாம் - அவர்களும், படாவாறு - அடைந்து

அனுபவிக்காததாலேயே, யாம் கண்ணில் - யாம் கண்ணால், காண - பார்க்கும்படியாக, அறிவில்லார் - அறிவில்லாத அவர்கள், நகுப - நகைக்கின்றார்கள்.

[கு-ரை] யாம் அடைந்த நோய்களை அறிவில்லாதவர்கள் அடையாமையினால் யாம் கண்ணாற் காணுமாறு எம்மைப் பார்த்து அவர்கள் நகைக்கின்றார்கள்.

## 115. அலர் அறிவுறுத்தல்

### [ஊரார் தூற்றிப் பேசுதல்]

1. அலர்எழ ஆர்உயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால். 1141

[ப-ரை] அலர் - ஊரார் தூற்றிப் பேசுகின்ற பேச்சு, எழ - உண்டாவதால், ஆர் - அரிய, உயிர் - எனது உயிரானது, நிற்கும் - நிலைத்து நிற்கும், அதனை - இவ்வுண்மையினை, பாக்கியத்தால் - என்னுடைய நல்வாய்ப்பினால், பலர் அறியார் - தூற்றுகின்ற பலரும் தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள்.

[கு-ரை] இப்பெண்ணுடன் எமக்குக் காதல் உண்டானதை இவ்வூரார் பேசுவதால் அவளைப் பெறாமல் வருந்தும் என அரிய உயிர் பெற்றது போன்ற நிலையுறும். இதனை [என்னையன்றி, எனது பாக்யத்தால் இவ்வூரார் பலரும் அறியவில்லை.

2. மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர்எமக்கு ஈந்ததுஇவ் வூர். 1142

[ப-ரை] மலர் - மலரினை, அன்ன - போன்ற, கண்ணாள் - கண்களையுடைய இப்பெண்ணின், அருமை அறியாது - அருமையினை அறிந்து கொள்ளாமல், இவ்வூர்—

இவ்வூர், அலர் - தூற்றிப் பேசுவதை, எமக்கு ஈந்தது - எமக்கு ஈந்தது.

[க-ரை] மலர் போன்ற கண்ணினையுடைய இப் பெண்ணின் அருமையினை அறிந்து கொள்ளாமல் இவ்வூர் அப்பெண்ணை எளியவளாகக் கருதி அலர் கூறுவதைச் செய்தது.

3. உறாஅதோ ஊர்அறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. 1143

[ப-ரை] ஊர் - இவ்வூரார், அறிந்த - அறிந்து கொண்டதால் உண்டான, கௌவை - அலர், உறாஅதோ - எனக்கு வேண்டியதொன்றுதான், (அலர் கேட்பதால் எனது நெஞ்சம்) அதனைப் பெறாஅது - அந்த இன்பம் பெறாமல் இருந்தும், பெற்றன்ன - பெற்றது போன்ற, நீர்த்து - தன்மையுடையதாகும்.

[க-ரை] எங்கள் காதல் உண்மையினை இவ்வூர் அறிதலால் உண்டான அலர் எனக்குத் தேவைப்பட்டதே யாகும். இது கேட்ட என்மனம் அவளுடன் கூடுவதைப் பெறாதிருந்தும் பெற்றது போன்ற தன்மையை அடைகின்றது.

4. கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து. 1144

[ப-ரை] காமம் - காமமானது, கவ்வையால் - ஊர் மக்கள் தூற்றிப் பேசுவதால், கவ்வியது - அலர்கின்ற தன்மையுடையதாகின்றது, அது - அந்த அலர் என்பது, இன்றேல் - இல்லையென்றால் தனது இயல்பினை, இழந்து - இழந்து, தவ்வென்னும் - சுருங்கி விடுவதாகும்.

[க-ரை] என்னுடைய காமம் இவ்வூரார் எடுக்கின்ற அலரினாலே அலர்தலையுடையதாக இருக்கின்றது. அந்த

அலர் இல்லாவிட்டால் காமம் தனது இயல்பு குறைந்து சுருங்கிவிடும்.

5. களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது. 1145

[ப-ரை] களித்தொறும் - களிப்படையும் போதெல்லாம், கள் - கள்ளினை, உண்டல் - உட்கொள்ளுதல், வேட்டற்று - இனிமையாவதைப் போல, காமம் - காம நுட்பமானது, வெளிப்படுந்தோறும் - அலர் தூற்றிப் பேசுவதால் வெளிப்படும் போதெல்லாம், இனிது - இனிமையாகவே இருக்கின்றது. (ஆல் - அசைநிலை)

[க-ரை] கள் உண்பவர்களுக்குக் களிக்கும் போதெல்லாம் கள்ளுண்டல் இனிதாவதைப் போல எனக்குக் காமம் அலரால் வெளிப்படும் போதெல்லாம் இனிமையானதாக இருக்கின்றது.

6. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று. 1146

[ப-ரை] கண்டது - காதலனை யான் கண்டது, ஒரு நாள் - ஒரு நாளேயாகும், அலர் - அதனால் உண்டாக்கப் பட்டுவிட்ட அலரானது, திங்களை – சந்திரனை, பாம்பு - இராகுவென்னும் பாம்பு, கொண்டு- கொண்டு மறைந்தது, அற்று - போன்று எங்கும் பரவி விட்டது (மன், உம் - அசைநிலை)

[க-ரை] யாம் காதலரைக் கண்டது ஒருநாளேயாகும். அதனால் உண்டாகிவிட்ட அலர் அந்த அளவின்றித் திங்களைப் பாம்பு கொண்ட அலர் போன்று எங்கும் பரவி விட்டது.

7. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந் நோய். 1147

[ப-ரை] இந்நோய் - இந்தக் காம நோயானது, ஊரவர் - ஊர் மக்கள் உண்டாக்குகின்ற, கௌவை -

அலரினை, எருவாக - எருவாகவும், அன்னை - அன்னை, சொல் - சொல்லுகின்ற கோபச்சொல், நீராக - தண்ணீரா கவும், (கொண்டு) நீளும் - நீண்டு வளர்கின்றது.

[க-ரை] இந்த காமநோயாகிய பயிரானது இவ்வூரின் மகளிர் எடுக்கின்ற அலர் எருவாகவும் அதுகேட்ட அன்னை சொல்லும் கடுஞ்சொல் நீராகவும் கொண்டு வளர்கின்றது.

8. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல். 1148

[ப-ரை] கௌவையால் - ஊரார் தூற்றிப் பேசுதல் என்னும் அலரால், காமம் - காமத்தினை, நுதுப்பேம் - அவித்துவிடுவோம், எனல் - என்று எண்ணுதல், நெய் யால் - நெய்யினைப் பெய்து, எரி - தீயினை, நுதுப்பேம் - அவித்து விடுவோம், என்றற்றால் - என்று எண்ணுவதைப் போன்றதாகும்.

[க-ரை] ஊர்மக்கள் எடுக்கின்ற அலரால் காமத் தினை அவித்துவிடுவோம் என்று எண்ணுதல் நெய்யால் எரியை அவித்து விடுவோம் என்று எண்ணுதற்குச் சமமாகும்.

9. அலர்நாண ஒவ்வதோ அஞ்சல் ஓம்புஎன்றார்
பலர்நாண நீத்தக் கடை. 1149

[ப-ரை] அஞ்சல் - அஞ்சுவதை, ஓம்பு - நீக்கி விடு. என்றார் - என்று கூறிய அவரே (காதலரே) பலர் - இன்று பலரும், நாண நாணமுறும்படியாக, நீத்தக்கடை - நம்மை விட்டுப் போனபிறகு, அலர் - மற்றவர்கள் தூற்றிப் பேசும் அலருக்கு, நாண - நாணம் அடைதல், ஒவ்வதோ - முடியுமோ?

[க-ரை] எம்மைக் கண்டபோது 'உம்மைப் பிரியேன் அஞ்சாதே' என்று கூறியவர், தானே இன்று கண்டார்

பலரும் நாணும் வகையில் பிரிந்திருப்பாராயின், நாம் அயலார் கூறும் அலருக்கு நாணுதல் கூடுமோ?

10. தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர். 1150

[ப-ரை] யாம் வேண்டும் - (அவருடன் செல்லுவதற்கு யாம் விரும்பிய, கௌவை - அலரினை, இவ்வூர் எடுக்கும் - இந்த ஊர் உண்டாக்குகின்றது(ஆதலால்), காதலர் - எமது காதலர், வேண்டின் - யாம் வேண்டி விரும்பினால், தாம் நல்குவர் - தாமும் விரும்பி உடன்பட்டு விடுவார்.

[க-ரை] உடன் போவதற்குக் காரணமாக அலரை இவ்வூர் தானே எடுக்கின்றது. இனிக் காதலர் தாமும் யாம் விரும்பியபடியே செய்வர்; அதனால் இந்த அலர் நமக்கு நன்மையாய் வந்தது.

# கற்பு இயல்

## 116. பிரிவு ஆற்றாமை

[நாயகன் பிரிவும் நாயகியின் துயரமும்]

1. செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. 1151

[ப-ரை] செல்லாமை - நீங்கள் எம்மை விட்டுப் பிரியாதிருப்பது, உண்டேல் - இருக்குமானால், எனக்குரை - என்னிடம் சொல்லுங்கள், மற்று - அதுவல்லாமல், [பிரிந்து சென்று] நின் - உம்முடைய, வல் - விரைவான, வரவு - வருகையினை, வாழ்வார்க்கு - [நீங்கள் வரும்போது] உயிருடன் வாழ்கின்றவர்க்கு, உரை - சொல்லுங்கள்.

[க-ரை] தாங்கள் எம்மைவிட்டுப் பிரியாதிருப்பதென்றால் அதனை எனக்குச் சொல்லுங்கள், 'பிரிந்துபோய் விரைவில் வருவேன்' என்பீரானால் அதனைத் தாங்கள் திரும்பி வரும்போது உயிர் வாழ்கின்றவர்களுக்குச் சொல்லுங்கள்.

2. இன்கண் உடைத்துஅவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு. 1152

[ப-ரை] அவர் - அவருடைய, பார்வல் - பார்வையானது, இன் கண் - இனிய தன்மையினை, உடைத்து - உடையதாயிற்று, புணர்ச்சி - நிகழ்ந்த புணர்ச்சியின் தன்மை, பிரிவு - பிரிவார் என்று, அஞ்சும் - அஞ்சுகின்ற, புன்கண் உடைத்து - துன்பத்தினை உடையதாக இருந்தது [ஆல் - அசைநிலை]

[க-ரை] அவருடைய பார்வை மட்டும் நமக்கு இன்பம் தருவதாக இருக்கின்றது. அவர்பால் புணர்ச்சி நிகழ, அது அவர் பிரிவார் என்ற அச்சத்தினை உடையதாக இருந்தது.

3. அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவுஓர் இடத்துஉண்மை யான். 1153

[ப-ரை] அறிவு - பிரிதல் துன்பத்தினை அறிந்து, உடையார் கண்ணும் - உணரவல்ல நாயகரிடத்திலும், ஓரிடத்து - ஒரோவழி, பிரிவு - பிரிந்து - செல்லுதல், உண்மையான் - நிகழ்வதால், தேற்றம் - அவர் நம்மீது அன்புடையார் என்று உறுதி செய்தல், அரிது - முடியாத தாக இருக்கின்றது. [அரோ - அசைநிலை]

[க-ரை] 'பிரியேன்' என்று தான் சொன்னதையும் நமது பிரிவாற்றாமையினையும் அறிந்த காதலரிடத்தும் ஒரோவழி பிரிவு நிகழ்வதால் அவர் அன்புடையவர் என்று தெளிவது அரிதாக இருக்கின்றது.

4. அளித்துஅஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு. 1154

[ப-ரை] அளித்து - அன்பினைப் பெய்து, அஞ்சல் - பிரிய மாட்டேன் அஞ்சாதே, என்றவர் - என்று சொல்லி யவரே, நீப்பின் - பிரிந்து செல்லுபவரானால், தெளித்த - அவர் அன்புடன் சொல்லிய, சொல் - சொல்லினை, தேறியார்க்கு - உண்மையென்று நம்பியவர் மேல், தவறு உண்டோ - குற்றம் உண்டோ?

[க-ரை] 'உன்னைவிட்டுப் பிரியேன், அஞ்சாதே" என்ற தலைவர், தாமே பிரிந்து செல்லுவாராயின் அவர் தெரிவித்த சொல்லை நம்பியவர் மேல் தவறு உண்டோ?

5. ஓம்பின் அமைந்தார் பிரிவுஓம்பல் மற்றுஅவர்
நீங்கின் அரிதால் புணர்வு. 1155

[ப-ரை] ஓம்பின் - எனது உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால், அமைந்தார் - அதற்கு உரியவரான

தலைவர், பிரிவு - பிரிந்து போவதை, ஓம்பல்-நீக்குவாயாக; மற்று – அவ்வாறு பிரிவதை நிறுத்தாமல், அவர் நீங்கின் - தலைவர் நீங்கிச் சென்றால், புணர்வு அரிது - பிறகு அவரைக் கூடுதல் என்பது முடியாததாகும். [ஆல் - அசை நிலை]

[க-ரை] எனது உயிர் போகாமல் காப்பாற்ற வேண்டுமானால் அதற்குரிய தலைவர் பிரிந்து செல்லாமல் நிறுத்துவாயாக. நிறுத்துவாரின்றி அவர் சென்றுவிட்டால் என்னுயிரும் செல்லும், பின்பு அவரைக் கூடுதல் முடியாததாகும்.

6. பிரிவுஉரைக்கும் வன்கண்ண ராயின் அரிதுஅவர்
நல்குவர் என்னும் நசை. 1156

[ப-ரை] அவர் - நமது தலைவர், பிரிவு – பிரிந்து போவதனை, உரைக்கும் – சொல்லுகின்ற, வன்கண்ணர் - அன்பில்லாத கொடியவராக, ஆயின் -ஆனால், நல்குவர் – திரும்பி வந்து அன்பு செய்வார், என்னும் என்று நினைக்கின்ற, நசை - ஆசை, அரிது - முடியாததாகும்.

[க-ரை] தலைவர் முன்னின்று தம் பிரிவினை உணர்த்தும் வன்கண்மை உடையவராயின் அத்தன்மையர் பிறகு வந்து கூடி அன்பு செய்வார் என்று இருக்கும் ஆசை விடப்பட வேண்டியதாகும்.

7. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை. 1157

[ப-ரை] துறைவன் - தலைவனாகிய நாயகன், துறந்தமை - என்னைப் பிரிந்து செல்லுவதை, முன்கை - எனது முன் கையிலிருக்கும், இறை - இறையினையும், [கோடுகளையும்] இறவாநின்ற - கடந்து சுழலுகின்ற, வளை - வளையல்கள், தூற்றாகொல் - தூற்றுவது போலத் தெரியாவோ?

[க-ரை] தலைவர் என்னைப் பிரிந்து செல்லுகின்றார் என்பதை அவர் உணர்த்தாமலேயே தாமே உணர்ந்து என்முன் கையினின்றும் கழலுகின்றன வளையல்கள் அறிவியாவோ?

8. இன்னாது இனன்இல்லூர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. 1158

[ப-ரை] இனன் - [பெண்களுக்குத் தம்] தோழியர் இனம், இல்லூர் - இல்லாத ஊரில், வாழ்தல் - வாழ்வது என்பது, இன்னாது - துன்பமானதாகும், இனியார் - தம் இனிய காதலரை, பிரிவு - பிரிதல், அதனினும் - அப்படி வாழ்வதை விடவும்,இன்னாது - மிகுந்த துன்பமானதாகும்.

[க-ரை] பெண்களுக்குத் தம் குறிப்பு அறியும் துணையான தோழியர் இல்லாத வேற்றூரில் வாழ்வது துன்பம் செய்வதாகும். அதனைவிடத் தம் காதலரைப் பிரிதல் மேல் துன்பத்தினைச் செய்வதாகும்.

9. தொடின்சுடின் அல்லது காமநோய் போல
விடின்சுடல் ஆற்றுமோ தீ. 1159

[ப-ரை] தீ - தீயானது, தொடின் - தொட்டால்தான், சுடின் - சுடும், அல்லது - அல்லாமல், காமநோய் - காமமாகிய நோயினை, போல - போன்று, விடின்சுடல் - விட்டு நீங்கினால் சுடுதல், ஆற்றுமோ - செய்யவல்லதோ?

[க-ரை] தீயானது தன்னைத் தொட்டவரைத்தான் சுடும். காமமாகிய நோய்போலத் தன்னைவிட்டு நீங்கினால் சுடுகின்ற தன்மை உடையதோ?

10. அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவுஆற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர். 1160

[ப-ரை] அரிது - அரிய பிரிவினைக் கூறியபோது, ஆற்றி -அதற்கும் உடன்பட்டு, அல்லல் - துன்பம் தருகின்ற, நோய் - காமநோயினையும், நீக்கி-நீக்கி, பிரிவு - பிரிவினை

யும், ஆற்றி - பொறுத்து, பின் - அதற்குப் பிறகும், இருந்து உயிருடன் இருந்து, வாழ்வார் - வாழ்கின்ற பெண்கள் பலர் - உலகில் பலருண்டு.

[க-ரை] பிரிவினைச் சொல்லுங்கால் அதற்கு உடன்பட்டுப் பிரியுங்கால் உண்டாகும் துன்பத்தினையும் தாங்கிக் கொண்டு, பிரிந்து பின்னர் பொறுத்திருந்துஉயிர் வாழும் மகளிர் உலகத்தில் பலருண்டு.

## 117. படர் மெலிந்து இரங்கல்

### [தலைவன் பிரிவால் தலைவி மெலிதலும் இரங்கலும்]

1. மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். 1161

[ப-ரை] நோயை - இக்காமநோயினை, யான்மறைப்பேன் - நான் பிறருக்குத் தெரியாமல் மறைத்து வைக்கின்றேன், இஃதோ - இந்தக் காமநோயோ, இறைப்பவர்க்கு - தண்ணீர் இறைப்பவர்களுக்கு, ஊற்றி - ஊற்றிலிருந்து மிகுந்து வரும், நீர் போல - நீரினைப் போல, மிகும்- அதிகமாகின்றது. [மன் - அசைநிலை]

[க-ரை] இந்நோயினைப் பிறர் அறியாமல் இருக்கும் பொருட்டு நான் மறைக்க முயல்கின்றேன். ஆனால் இந்த நோய் இறைப்பவர்க்கு ஊற்று நீர் மிகுந்து வருவதுபோல மிகுந்து வருகின்றது.

2. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும். 1162

[ப-ரை] இந்நோயை - இந்தக் காம நோயினை, கரத்தலும் - மறைப்பதற்கும், ஆற்றேன் - முடியாதவனாக இருக்கின்றேன், நோய் - இந்த நோயினை, செய்தார்க்கு -

உண்டாக்கிய காதலர்க்கு, உரைத்தலும் - உரைப்பதும் நாணு - நாணத்தினை, தரும் - கொடுப்பதாகும்.

[க-ரை] இந்த நோயினை மறைக்க முடியாதவளாகின்றேன்; நோயினை உண்டாக்கினவர்க்கு எடுத்துக் கூறலாமென்றாலோ, நாணமாக இருக்கின்றது. என் செய்வேன்?

3. காமமும் நாணும் உயிர்காவா த் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து. 1163

[ப-ரை] காமமும் நாணும் - காமநோயும் நாணமும், நோனா - தம்மைத் தாங்க முடியாத, என் - எனது, உடம்பினகத்து - உடம்பினிலே, உயிர் - உயிரினை, காவா - காவடித்தண்டாக, [வைத்து] தூங்கும் - இரு முனைகளிலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

[க-ரை] காமமாகிய நோயும் தம்மைத் தாங்க முடியாத உடம்பின் கண்ணே உயிரைக் காவடித் தண்டாக வைத்து அதன் இரு முனைகளிலும் தொங்குகின்றன.

4. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். 1164

[ப-ரை] காமக்கடலே - காமமாகிய கடலே, உண்டு - என்னிடம் உண்டாகி இருக்கின்றது, அது - அந்தக் கடலினை, நீந்தும்- நீந்திச் செல்லுகின்ற, ஏமப்புணை-பாதுகாப்பாகியபுணை [தெப்பம்], இல் - என்னிடம் இல்லையாகும். (மன், உம் - அசைநிலை)

[க-ரை] காமமாகிய கடலே என்னிடம் உண்டாகின்றது. அந்தக் கடலினை நீந்திக் கடக்கின்ற பாதுகாப்பாகிற புணை இல்லாமல் இருக்கின்றேன்.

5. துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். 1165

[ப-ரை] நட்பினுள் - நட்பின்கண்ணே, துயர் - துன்பத்தின், வரவு - வரவினை, ஆற்றுபவர் - உண்டாக்கும் தலைவர், துப்பின் - பகைமையில், எவனாவர் - எப்படிப் பட்டவராக இருப்பாரோ? (மன், கொல் - அசை)

[க-ரை] இன்பத்தினைச் செய்தற்குரிய நட்பின் கண்ணே துன்பத்தினைச் செய்பவர், துன்பம் செய்வதற் கானபகைமையின் கண்ணே என்ன செய்வாரோ?

6. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 1166

[ப-ரை] காமம் - காமமானது, இன்பம் - இன்பம் தரும்போது, கடல்-கடல்போலப் பெரிதாக இருக்கின்றது, மற்று - பிறகு, அஃது - அக்காமமும், அடுங்கால் - தலைவன் பிரிவினால் துன்பம் உண்டாகும்போது, துன்பம் - அந்தத் துன்பமானது, அதனில் - அந்தக் கடலினையும்விட, பெரிது - பெரிதாக இருக்கின்றது.

[க-ரை] காமம் இன்பம் செய்கின்றபோது அந்த இன்பம் கடல் போலப் பெரிதாக இருக்கின்றது. அந்தக் காமம் பிரிவினால் துன்பம் செய்யுங்கால் அத்துன்பம் கடலினைவிடப் பெரிதாக இருக்கின்றது.

7. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன். 1167

[ப-ரை] காமம் - காமமாகிய, கடும் - கொடிய, புனல் - வெள்ளத்தினை, நீந்தி - நீந்தியும், கரை - அதன் கரை யினை, காணேன் - காணமுடியவில்லை, யாமத்தும் - யாவரும் உறங்கும் பாதி இரவிலும், யானே உளேன் - யானே தனித்து இருக்கின்றேன்.

[க-ரை] காமமாகிய கடலைக் கடந்து கரையினைக் காண முடியாதவளானேன். பாதி இரவிலும் யானே துணை யின்றி இருக்கின்றேனே; இறவாதிருக்கிறேன்.

8. மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா
என்னல்லது இல்லை துணை. 1168

[ப-ரை] இரா - இந்த இரவுப் பொழுது, அளித்து - அன்புடையதாக உள்ள, மன்து - நிலை பெற்ற, உயிர் எல்லாம் - உயிர்களையெல்லாம், துயிற்றி - தூங்கச் செய்து விட்டபடியால், என் - என்னை, அல்லது - அல்லாமல், துணை இல்லை - வேறு எந்தத் துணையும் இல்லாமல் இருக்கின்றது.

[க-ரை] இந்த இரவுப் பொழுது எல்லா உயிர்களையும் துயிலச் செய்வதால் துயிலாதிருக்கின்ற என்னை அல்லாமல் வேறு துணையில்லாமல் இருக்கின்றது.

9. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. 1169

[ப-ரை] இந்நாள் - தலைவனைப் பிரிந்திருக்கும் இப்போது இந்த நாட்கள், நெடியக் கழியும் - நீண்ட நேரம் உடையவையாகக் கழிகின்றன, இரா - இரவுப் பொழுதுகள், கொடியார் - கொடியத்தலைவர் செய்கின்ற, கொடுமையின் - கொடுமையினை விட, தாம் கொடிய - [இரவுகள்] தாம் கொடியவையாகக் கொடுமை செய்வனவாகும்.

[க-ரை] தலைவன் பிரிந்திருக்கும் இந்நாட்களில் இரவுப் பொழுதுகள் நெடியனவாய்க் கழிகின்றன. தலைவன் செய்கின்ற கொடுமைகளைவிடக் கொடுமை செய்கின்றன.

10. உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண். 1170

[ப-ரை] உள்ளம் - உள்ளத்தினை, போன்று - போல ஒத்து, உள்வழி - நாயகன் இருக்கின்ற இடத்திற்கு,

செல்கிற்பின் - விரைவில் செல்லுமானால், என் - என்னுடைய, கண் - கண்கள், வெள்ளநீர் நீந்தல - வெள்ளமாகிய நீரை நீந்தா. [மன் ஓ - அசை நிலை]

[க-ரை] மனம்போலக் காதலருள்ள இடத்திற்குக் கடிதிற் செல்ல வல்லலையானால். என் கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய நீரை நீந்தாதிருக்கும்.

## 118. கண் விதுப்பு அழிதல்

[கண்கள் நாயகனைக் காண விரும்பி வருந்துதல்]

1. கண்தாம் கலுழ்வது எவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது. 1171

[ப-ரை] தண்டா - தணியாத, நோய் - இக்காம நோயினை, யாம் கண்டது - யாம் அறிந்து கொண்டது, தாம் காட்ட - கண்கள் எமக்குக் காட்டியதால் அன்றோ? கண் - அவ்வாறு காட்டிய கண்கள், தாம் - தாமே, கலுழ்வது - இப்போது அழுவது, எவன் கொல் - எதனைக் கருதியோ [ஓ - அசை நிலை]

[க-ரை] இக்கண்கள் காதலரை எமக்குக் காட்டியதாலன்றோ இத்தணியா நோய் உண்டாயிற்று. அவ்வாறு செய்த கண்கள் இன்று அத்தலைவரை எம்மைக் காட்டச் சொல்லி அழுவது என் கருதி?

2. தெரிந்து உணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன். 1172

[ப-ரை] தெரிந்து - நன்கு ஆராய்ந்து, உணரா - உணராமல், நோக்கி - தலைவரை நோக்கிய, உண் கண் - மை தீட்டப் பெற்ற கண்கள், பரிந்து - நம்மால் தானே வந்தது என்று, உணரா - சிந்தித்து அறிய முடியாமல், பைதல் - வருத்தத்தினை, உழப்பது - மேற் கொண்டு அனுபவித்தல் எதனைக் கருதி?

[க-ரை] பின்னே விளைவதனை ஆராய்ந்தறியாமல் அன்று காதலரை நோக்கிய கண்கள் 'இத்துன்பம் நம்மால் தானே வந்தது' என்று பொறுத்திருப்பதை அறியாமல் வருத்தமுறுவது எதனைக் கருதி?

3. கதுமெனத் தாம்நோக்கி தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து. 1173

[ப-ரை] தாம் - கண்கள் தாம், கதுமென - காதலரை விரைந்து சென்று, நோக்கி - பார்த்து, தாமே - அவை தாமே, கலுழும் - அழுகின்றன, இது - கண்களின் இந்தச் செய்கை, நக - நகைப்பிற்கு, தக்கது - தகுதியுள்ளதாக உடைத்து - இருப்பதாகும்.

[க-ரை] இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கி இன்று தாமே அழுகின்ற தன்மை நம்மால் சிரிக்கத் தக்கதாக இருக்கின்றது.

4. பெயல்ஆற்றா நீர்உலர்ந்த உண்கண் உயல்ஆற்றா
உய்வில்நோ யென்கண் நிறுத்து. 1174

[ப-ரை] உண்கண் - மை தீட்டப்பட்ட கண்கள், உயல் - தப்பித்தல், ஆற்றா - முடியாததற்குக் காரணமான, உய்வு - நீக்கி விட, இல் - முடியாத, நோய் - நோயினை, என்கண் - என்னிடத்தில், நிறுத்து - இருத்தி வைத்து, பெயல் - நீருடன் அழ, ஆற்றா - முடியாதபடி, நீர் - கண்ணீரும், உலர்ந்த - வற்றிப் போய் விட்டன.

[க-ரை] மையுண்ட கண்கள் நீக்க முடியாத காம நோயினை என்னிடம் நிறுத்தித் தாமும் அழ முடியாதபடி நீர் வற்றி இருக்கின்றன.

5. படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்
காமநோய் செய்தஎன் கண். 1175

[ப-ரை] கடல் - கடலும், ஆற்றா - இணையின்றிச் சிறிதாகும் படி, காம நோய் - இப்பெரிய காம நோயினை,

செய்த - செய்துவிட்ட, என் - எனது, கண் - கண்கள், படல் - துயிலுதல், ஆற்றா - இல்லாதவையாகி, பைதல் - துன்பத்தினை, உழக்கும் - அனுபவித்துக் கொண்டு இருப்பனவாகும்.

[க-ரை] கடலும் சிறிதாகி விடுமாறு பெரிதாகிய காம நோயினைச் செய்து விட்ட எனது கண்கள் அத்தீமையான செயலால் தூக்கம் வராமல் துன்பத்தில் உழலுகின்றன.

6. ஓஒஇனிதே எமக்கு இந்நோய் செய்தகண்
தாஅம் இதன்பட் டது. 1176

[ப-ரை] எமக்கு இந்நோய் - எமக்கு இந்தக் காம நோயினை, செய்த கண் - உண்டாக்கிய கண்கள், தாஅம் இதன் பட்டது - தாமும் தூங்காமல் அழுது கொண்டு இருப்பது, ஓ ஓ இனிதே — எனக்கு மிகவும் இனிமையாக இருக்கின்றது.

[க-ரை] எமக்கு இந்தக்காம நோயினை உண்டாக்கிய கண்கள் தாமும் துயில் கொள்ளாமல் அழுது கொண்டிருக்கின்றன. இது மிகவும் இனிமையாக இருப்பதாயிற்று.

7. உழந்துழந்து உண்ணீர் அறுக விழைந்துஇழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண். 1177

[ப-ரை] விழைந்து - மிகவும் விருப்பப்பட்டு, இழைந்து - மனம் நெகிழ்ந்து, வேண்டி - விரும்பி, அவர் - காதலரை, கண்ட - கண்ட, கண் - கண்கள், உழந்து உழந்து - தூங்காமல் துன்பத்தினில் உழன்று, உள் - தம் அகத்துள் இருக்கின்ற, நீர் - நீர், அறுக - அற்றுப் போகட்டும்.

[க-ரை] மிகவும் விரும்பி மனம் நெகிழ்ந்து விடாமல் அவரை கண்ட கண்கள் இன்று துயிலாமல் துன்பத்தில் உழன்றுகண்களுக்குள் நீர் இன்றிப் போகட்டும்.

8. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண். 1178

[ப-ரை] பேணாது - உள்ளத்தால் என்னை விரும்பாமல், பெட்டார் - வார்த்தைகளினால் மட்டும் காதலித்த தலைவர், உளர்மன் - இங்கேயே இருக்கின்றார் [இருந்தும் ஆவதென்ன] கண் - எனது கண்கள், மற்று அவர் - மற்றும் அவரை, காணாது - காண முடியாமல், அமைவில - பொறுத்து அமைந்திருக்க முடியவில்லை [ஓ - அசைநிலை]

[க-ரை] உள்ளத்தால் விரும்பாமல் வார்த்தைகளினால் மட்டும் விரும்பிய தலைவர் இவ்விடத்திலேயே இருக்கின்றனர். அந்த உண்மையால் பயன் யாது? அவரைக் காணாமல் கண்களால் இருக்க முடியவில்லையே!

9. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். 1179

[ப-ரை] கண் - கண்கள், வாராக்கால் துஞ்சா - தலைவர் வராத போதும் [வருகையினை நோக்கி], தூங்க - இருக்கின்றன, வரின் - தலைவர் வந்த போதும், துஞ்சா - [பிரிந்து விடுவாரோ என்று நினைத்து] தூங்காமல் இருக்கின்றன, ஆயிடை - ஆக இரு வகையிலும், ஆர் - மிகுந்த, அஞர் - துன்பத்தினை, உற்றன - அடைந்தன.

[க-ரை] காதலர் வராதபோது அவர் வரவு பார்த்துக் கண்கள் துயிலவில்லை; வந்தபோது பிரிவாரோ என்று அஞ்சித் துயிலவில்லை. ஆதலால் இரு நேரங்களிலும் கண்கள் தூங்கமுடியாமல் துன்பத்தினை அடைந்தன.

10. மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து. 1180

[ப-ரை] எம் - எமக்கு இருப்பதை, போல் - போன்ற, அறைபறை - அடிக்கின்ற பறை போன்ற, கண்ணார் - கண்ணைப் பெற்றிருப்பவர்கள், அகத்து - மனத்திற்குள்,

மறை - மறைத்து வைத்திருப்பதை, பெறல் - தெரிந்து கொள்ளுதல், ஊரார்க்கு - இந்த ஊரில் உள்ள மக்களுக்கு, அரிது - அருமையானது, அன்று - அல்லவாம். [ஆல். அசை-நிலை]

[க-ரை] எம்மைப் போலும் அறைபறையாகிய கண்களையுடையார் தம் மனத்தில் மறைத்து வைத்துள்ளதை இவ்வூரில் உள்ளார் அறிந்து கொள்ளுதல் எளிதாகும்.

## 119. பசப்புறு பருவரல்

### [பிரிவு துன்பத்தால் உடம்பில் உண்டான நிற வேறுபாடு]

1. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்புயார்க்கு உரைக்கோ பிற. 1181

[ப-ரை] நயந்தவர்க்கு - என்னிடம் அன்புடன் கேட்ட தலைவர்க்கு, நல்காமை - பிரிந்து செல்லுவதை, நேர்ந்தேன் - உடன்பட்டு இசைந்தேன் [அதனால்] பசந்த - உடம்பில் பசப்பு நிறம் வந்துவிட்ட, என் - எனது, பண்பு - இத் தன்மையினை, யார்க்கு உரைக்கோ - எவரிடம் போய் உரைப்பேன் [பிற - அசைநிலை]

[க-ரை] என்னிடம் நயந்து பேசிய தலைவர்க்குப் பிரிவை உடன்பட்டேன். அப்பிரிவினைப் பொறுக்காமல் இப்போது பசந்த எனது நிலையினை யார்க்குச் சொல்லுவேன்?

2. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு. 1182

[ப-ரை] பசப்பு - இந்தப் பசப்பு நிறமானது, அவர் தந்தார் - தலைவர் உண்டாக்கினார், என்னும் - என்கின்ற,

நகையால் - பெருமிதத்தினால், என் - என்னுடைய, மேனி மேல் - உடம்பின் மீது, இவர்தந்து - ஏறிக் கொண்டு, ஊரும் - ஊர்ந்து செல்லுகின்றது.

[க-ரை] இந்தப் பசப்பு நிறம், அவர் உண்டாக்கினார் என்கின்ற பெருமிதத்தால் என் உடம்பின்மீது ஊர்ந்து செல்லுகின்றது.

3. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து. 1183

[ப-ரை] நோயும் - காம நோயினையும், பசலையும் - பசலை நிறத்தினையும், தந்து - எனக்குக் கொடுத்து விட்டு, கைம்மாறா - அதற்கு மாறாக, சாயலும் - அழகினையும், நாணும் - நாணத்தினையும், அவர் கொண்டார் - காதலராகிய அவர் கொண்டு சென்றார்.

[க-ரை] எனது தலைவர் பிரிந்தபோது காம நோயினையும் பசலை நிறத்தினையும் எனக்குத் தந்துவிட்டு எனது உடம்பின் அழகினையும் நாணத்தினையும் அவர் கொண்டு சென்றார்.

4. உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு. 1184

[ப-ரை] யான் உள்ளுவன் - நான் அவரையே உள்ளத்தில் நினைத்துக் கொண்டிருக்கின்றேன், உரைப்பதும் - பேசுவதும், அவர் - அவருடைய, திறம் - நற்குண நற்செயலேயாகும், [அப்படியிருக்க] பசப்பு - இந்தப் பசப்பு நிறம் வந்து விட்டது, கள்ளம் - வஞ்சனையாகத்தான் இருக்கின்றது. [மன், ஆல், பிற, ஓ-அசைநிலை]

[க-ரை] அவர் சொன்ன வார்த்தைகளை நான் மனத்தால் நினைத்துக்கொண்டு இருப்பேன். வாயால் பேசுவதும் அவர் சிறப்பினையேயாகும். அப்படியிருக்க இப்பசப்பு வந்தது வஞ்சனையாக அல்லவோ இருக்கின்றது.

5. உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனிபசப்பு ஊர் வது. 1185

[ப-ரை] எம் - எம்முடைய, காதலர் - தலைவர், உவக்காண் - முந்திய காலத்தில், செல்வார் - எம்மை விட்டுச் செல்வாராக [காதலர் பிரிந்து சென்றார்] என் - எனது, மேனி - உடம்பு, பசப்பு - பசப்பு நிறம், ஊர்வது - அடைந்திருப்பது. இவக்காண் - இங்கே அல்லவா?

[கு-ரை] அந்தக் காலத்தில் எமது காதலர் பிரிந்து சென்றார். என் மேனி பசப்பு நிறம் அடைவது இங்கே அன்றோ?

6. விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு. 1186

[ப-ரை] விளக்கு அற்றம் - விளக்கினது ஒளியின் மெலிவு நேரத்தினை, பார்க்கும் - பார்த்து நெருங்கி வருகின்ற, இருளே போல் - இருட்டினைப் போல- பசப்பு - இந்தப் பசப்பு நிறமானது, கொண்கன் - எனது தலைவரது, முயக்கு- புணர்ச்சியின், அற்றம்-மெலிவினை, பார்க்கும் - பார்த்து நெருங்கி வந்து விடும்.

[கு-ரை] விளக்கினுடைய மெலிவு பார்த்து நெருங்கி வருகின்ற இருட்டினைப் போன்று தலைவரது முயக்கத்தின் தளர்ச்சியினைப் பார்த்து இப்பசப்பு நிறம் நெருங்கி வருவதாயிற்று.

7. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 1187

[ப-ரை] புல்லி - தலைவரைத் தழுவிக் கொண்டு, கிடந்தேன் - இருந்தேன், புடை - ஒரு பக்கமாக, பெயர்ந்தேன் - சிறிது விலகிவிட்டேன், அவ்வளவில்-விலகிவிட்ட அந்தப் பொழுதே, பசப்பு - இந்த பசலை நிறமானது,

அள்ளிக் கொள்வற்றே - அள்ளிக் கொள்வதொரு பொருளினைப் போல வந்து குவிந்துவிட்டது.

[க-ரை] முன்னர் ஒருபோது காதலரைத் தழுவிக் கிடந்தேன். அறியாமல் சிறிது விலகிவிட்டேன். விலகிய அந்தப் பொழுதிலேயே பசப்பு நிறம் அள்ளிக்கொள்ளப் படுகின்ற பொருளினைப் போல வந்து நிறைந்துவிட்டது.

8. பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல். 1188

[ப-ரை] இவள் பசந்தாள் - இந்தத் தலைவி பசலை நிறம் அடைந்து விட்டாள், என்பது - என்று சொல்லுவது, அல்லால் - அல்லாமல், இவளை - இந்தத் தலைவியை அவர் துறந்தார்-அந்தத் தலைவர் விட்டுப் போய்விட்டார், என்பார்இல் - என்று அவரைப் பழி கூறுபவர் யாரும் இல்லை.

[க-ரை] இவள் பொறுத்திருக்க முடியாமல் பசப்பு நிறம் அடைந்துவிட்டாள் என்று என்னைப் பழிகூறுவ தல்லாமல், இந்த நாயகியை அவர் விட்டுப்போய் விட்டார் என்று அவரைக் குறைகூறுவார் ஒருவரும் இல்லை.

9. பசக்கமன் பட்டாங்குஎன் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின். 1189

[ப-ரை] நயப்பித்தார் - பிரிந்து போவதை நான் ஒத்துக் கொள்ளும்படியாகச் சொல்லிய கணவர், நன்னிலையர் - நல்லபடியாக, ஆவர் எனின் - இருப்பாரே யானால், என் - எனது, மேனி - உடம்பு, பட்டாங்கு - முன்னர் பசந்ததுபோல, பசக்க - பசப்பதாகுக. [மன் ஒழியிசை]

[க-ரை] இந்தப் பிரிவை நான் உடன்படும் முறையிற் சொன்ன தலைவர் நல்ல நிலையில் இருந்து வருவாரானால் என் உடம்பு பசப்பு நிறம் அடைந்தே இருக்கட்டும்!

10. பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின். 1190

[ப-ரை]" நயப்பித்தார் - மகிழ்வித்துக் கூடிய காதலரை, நல்காமை - இப்போது அன்பில்லாதவரென்று, தூற்றார் - பிறர் தூற்றாமல் இருப்பார்கள், எனின் - என்றால், பசப்பு என - பசப்பினைப் பெற்று விட்டாள் இவள் என்று, பேர் - பெயரினை, பெறுதல் நன்றே - யான் பெறுதல் நல்லதேயாகும்.

[க-ரை] அன்று அன்புடன் கூடிய தலைவரை அன்பில்லாதவரென்று பிறர் தூற்றாமல் இருப்பார்களேயானால் பசப்பு அடைந்து விட்டாள் என்ற பெயரினைப் பெறுதல் எனக்கு நல்லதேயாகும்.

# 120. தனிப்படர் மிகுதி

## [பிரிவுத் துன்பத்தால் தலைவி மிகவும் துன்புறுதல்]

1. தாம்வீழ்வார் தம்வீழப்பெற்றவர் பெற்றாரே
காமத்துக்காழ்இல் கனி. 1191

[ப-ரை] தாம் - தம்மால் (தலைவியால்) வீழ்வார் - காதலிக்கப்பெற்ற தலைவர், தம் - தம்மை, வீழ - விரும்பிக் காதலிக்க, பெற்றவர் - பெற்ற தலைவிமார், காமத்து - காமம் என்கின்ற இன்பத்தால் உண்டாகிய, காழ் - விதை, இல் - இல்லாத, கனி பெற்றாரே - கனியினைப் பெற்றவராவர்.

[க-ரை] தம்மால் விரும்பிக் காதலிக்கப்ப...
ரால் விரும்பப்பட்ட தலைவியர் கா...
விதையில்லாத கனியினைப் பெற்றவ...

2. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. 1192

[ப-ரை] வீழ்வார்க்கு - காதல் நிறைந்த தலைவிக்கு, வீழ்வார் - அன்பு நிறையப்பட்ட தலைவர், அளிக்கும் - காலமறிந்து வந்து காட்டுகின்ற, அளி - பேரன்பு, வாழ்வார்க்கு - உலகில் உயிர் வாழ்கின்ற மக்களுக்கு, வானம் - மழையானது, பயந்தற்று - காலம் அறிந்து வந்து பெய்து இன்பமளித்தது போன்றதாகும். (ஆல் - அசைநிலை)

[க-ரை] பிரிந்திருக்கும் கணவர் காலமறிந்து வந்து காட்டும் பேரன்பு மகளிர்க்கு, தன்னையே நம்பி உயிர் வாழுகின்ற மக்களுக்குக் காலமறிந்து மழை அளவுடன் பெய்தது போன்றதாகும்.

3. வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு. 1193

[ப-ரை] வீழுநர் - காதலிக்கப்படுகின்ற தலைவரால், வீழ்ப்படுவார்க்கு - விரும்பிக் காதலிக்கப்படுகின்ற தலைவியார்க்கு, வாழுநம் - தலைவர் வந்ததும் இன்பமிக வாழ்வோம், என்னும் - என்கின்ற, செருக்கு - பெருமிதம், அமையுமே - பொருத்தமானதாகும்.

[க-ரை] தாம் காதலிக்கும் தலைவரால் காதலிக்கப் படும் மகளிர்க்குப் பொருத்தமானது என்னவென்றால் காதலர் பிரிந்திருந்தாராயினும் நம்மை நினைத்து விரைவில் வருவார்; வந்தால் நாம் இன்புற்று வாழ்வோம் என்று இருக்கின்ற செருக்காகும்.

4. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின். 1194

[ப-ரை] வீழப்படுவார் - நன்கு மதிக்கப்படும் தலைவியரும், தாம் - தம்மால், வீழ்வார் - காதலிக்கப்படுகின்ற தலைவரால், வீழப்படாஅர் - விரும்பப்படாதவர்கள்

எனின் - என்றாகி விட்டால், செழுஇலர் - நல்வினை இல்லாதவர்களாவார்கள்.

[க-ரை] கற்பு நிறைந்த பெண்களால் நன்கு மதிக்கப் பெறும் தலைவியரும் தாம் விரும்பும் கணவரால் நன்கு விரும்பப்படாவிட்டால் தீவினையுடையவர்களே ஆவார்கள். நன்மதிப்பைப் பெற்றிருந்தும் பயனடையா தவர்களே ஆவார்கள்.

5. நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை. 1195

[ப-ரை] தாம் - காதலர் தாமும், காதல் - நம்மிடத்தில் காதல், கொள்ளாக்கடை - கொள்ளாமற் போனால், நாம் - நம்மால் (நம்முடைய) காதல் - அன்பினை, கொண்டார் - கொண்டுள்ள காதலர், நமக்கு எவன் - நமக்கு என்ன இன்பத்தினை, செய்ப - செய்து விடுவார்? (ஓ - அசைநிலை)

[க-ரை] காதலர் தாமும் நம்மிடத்தில் காதல் கொள்ளாமற் போனால் நம்முடைய காதலினைக் கொண்டுள்ள காதலர் நமக்கு என்ன இன்பத்தினைச் செய்து விடுவார்.

6. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது. 1196

[ப-ரை] காமம் - காமவேட்கை, ஒருதலையான் - ஒருவரிடத்தில் மட்டும் உண்டானால், இன்னாது - அது துன்பம் தருவதாகும், கா - காவடி தண்டின் சுமை, போல - போன்று, இருதலையானும் - இரண்டு பக்கங்களிலும் ஒத்திருந்தால், இனிது - அக்காமம் இனிமையானதாகும்.

[க-ரை] காதலர் இருவரிடமும் இருக்க வேண்டிய காம வேட்கை ஒருவரிடம் மட்டும் உண்டானால் அது துன்பமானதாகும். காவடித் தண்டின் பாரம் போல இரு பக்கமும் ஒத்திருந்தால் அது இனிமையானதாகும்.

7. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான். 1197

[ப-ரை] ஒருவர்கண் - ஒருவரிடத்தில் மட்டும், நின்று - இருந்து, ஒழுகுவான் - துன்பம்செய்கின்ற, காமன் - காமம், பருவரலும் பைதலும் - எனது நோயினையும் மிகுந்த துன்பத்தினையும், காணான்கொல் - கண்டறிய மாட்டானோ?

[க-ரை] இன்பம் நுகர்வதற்குள்ள ஆண் பெண் இரு பாலரிடத்தும், சமமாக நிற்காமல், ஒருவரிடத்தில் மட்டும் நின்று துன்பம் செய்கின்ற காமன் என்னுடைய நோயினையும் மிகுந்த துன்பத்தினையும் அறிய மாட்டானோ?

8. வீழ்வாரின் இன்சொற் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல். 1198

[ப-ரை] வீழ்வாரின் - தம்மால் காதலிக்கப்படும் தலைவருடைய, இன் - ஓர் இனிய, சொல் - சொல்லைக்கூட, பெறாஅது - பெறாமல், வாழ்வாரின் - வாழுகின்ற பெண்கள்போல, வன்கணார் - வன்மையுடையவர்கள், உலகத்து இல் - உலகத்தில் இல்லை.

[க-ரை] தம்மால் காதலிக்கப்படும் தலைவரிடமிருந்து ஓர்இனியசொல்லையும் பெறாமல் இருந்து பிரிவினையைப் பொறுத்துக் கொண்டு வாழ்கின்ற பெண்கள் போல வன்மையுடையார் இவ்வுலகில் இல்லை.

9. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு. 1199

[ப-ரை] நசைஇயார் - என்னால் காதலிக்கப்பட்ட தலைவர், நல்காரி - என்னிடம் காதலன்பு செய்ய மாட்டார், எனினும் - என்றாலும், அவர் மாட்டு - அவரிடமிருந்து, இசையும் - வருகின்ற எந்த ஒரு சொல்லும், செவிக்குஇனிய - எனது செவிகளுக்கு இன்பம் தருவதாகும்.

[க-ரை] என்னால் விரும்பிக் காதலிக்கப்பட்ட காதலர் என்னிடம் அன்பில்லாதவரேயானாலும், அவரிடமிருந்து வருகின்ற எந்த ஒரு சொல்லும் எனது செவிக்கு இனிமை தருவதாகும்.

10. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு. 1200

[ப-ரை] உறாஅர்க்கு - உன்னுடன் பொருந்தாத காதலர்க்கு, உறு - மிகுதியாக உனக்கு உண்டான, நோய் - காமநோயினை, உரைப்பாய் - எடுத்துரைக்கின்ற, நெஞ்சு - மனமே (முடியாத அச்செயலை விட்டு) கடலை - துன்பம் உண்டாக்குகின்ற கடலினை, செறாஅய் - தூர்க்க முயல்வாயாக (அது எளிது) (வாழிய - அசைநிலை)

[க-ரை] உன்னுடன் பொருந்தாத தலைவர்க்கு உனது மிகுந்த நோயினைச் சொல்ல முயற்சிக்கின்ற நெஞ்சமே! அது முடியாத செயலாகும். முடியாத அச்செயலை விட்டு, உனக்குத் துன்பம் செய்கின்ற கடலினைத் தூர்க்க முயற்சிப்பாயாக; அது எளிமையானதாகும்.

## 121. நினைந்தவர் புலம்பல்

[பிரிவுக் காலத்தில் இன்பத்தினை நினைத்து வருந்துதல்]

1. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. 1201

[ப-ரை] உள்ளினும் - முந்திய நாட்களில் நுகர்ந்த இன்பத்தினை நினைத்தாலும், தீரா - நீங்காத, பெரு - மகிழ், மகிழ்பெற்றது போன்ற மகிழ்ச்சியினை, செய்தலால் - உண்டாக்குவதால், கள்ளினும் - உண்டால் மட்டும்

மகிழ்ச்சி தரும் கள்ளினை விட, காமம் இனிது - காமமானது இன்பம் கொடுப்பதாகும்.

[க-ரை] பிரிந்திருக்கும்போது முன்பு கூடிய இன்பத்தினை நினைத்தாலும் அது அப்போது பெற்றதுபோல இருக்கின்றது. ஆதலால் நினைத்தாலும் மகிழ்ச்சியைத் தரும் காமம், உண்டால் அல்லாமல் மகிழ்ச்சி செய்யாத கள்ளினைவிட இன்பம் கொடுப்பதாகும்.

**2. எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம்வீழ்வார்**
**நினைப்ப வருவதொன்று இல்.** 1202

[ப-ரை] தாம் - தம்மால், வீழ்வார் - காதலிக்கப்படும் தலைவரை, நினைப்ப - நினைத்துக் கொண்டிருந்தால், வருவது - வருகின்ற, ஒன்று - பிரிவுத்துன்பம், இல் - இல்லையாகும் (அக்காரணத்தால்) காமம் - காமமானது, எனைத்து - எந்த அளவுடையதாக இருந்தாலும், இனிதே காண் - இன்பத்தினைக் கொடுப்பது, ஒன்று - ஒன்றே ஆகும்.

[க-ரை] தன்னுடைய அன்புக்குரிய காதலரைப் பிரிந்திருக்கும்போது நினைத்துக் கொண்டிருந்தால் நினைவார்க்குப் பிரிவினால் துன்பம் வருவது இல்லையாம்.

**3. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்**
**சினைப்பது போன்று கெடும்.** 1203

[ப-ரை] தும்மல் - தும்மலானது, சினைப்பது - வருவது, போன்று, போலக் காட்டி, கெடும் - வராமல் கெட்டு விடுகின்றது, (காரணம்) நினைப்பவர் - காதலர் என்னை நினைப்பது, போன்று - போல இருந்து, நினையார் கொல் - நினைக்க மாட்டாரோ?

[க-ரை] எனக்குத் தும்மலானது வருவது போலிருந்து வராமல் போகின்றது. அதனால் காதலர் என்னை நினைப்பார் போல இருந்து நினைக்க மாட்டாரோ?

4. யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர். 1204

[ப-ரை] எம் - எம்முடைய, நெஞ்சத்து - மனத்தில் அவர் - நம்முடைய காதலர், ஓஒஉளரே - எந்த நேரமும் இருந்து கொண்டே இருக்கின்றார் (அவ்வாறே) அவர் - அவருடைய, நெஞ்சத்து - மனதிலும், யாமும் உளேங் கொல் - நாமும்-இருக்கின்றோமா?

[க-ரை] எம்முடைய நெஞ்சத்தில் காதலர் எப்போதும் இருந்துகொண்டே இருக்கின்றார். அதுபோலவே அவருடைய நெஞ்சத்தில் நாமும் இருந்து கொண்டு இருக்கிறோமோ?

5. தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத்து ஓவா வரல். 1205

[ப-ரை] தம் - தம்முடைய, நெஞ்சத்து - மனதிற்குள், எம்மை - எம்மை, கடி - வராமல் காவல், கொண்டார் - காவல் புரியும் காதலர், எம் - எம்முடைய, நெஞ்சத்து - மனதிற்குள், ஓவா - நீங்காமல், வரல் - வருவதற்கு, நாணார் கொல் - வெட்கம் அடையாரோ?

[க-ரை] காதலராகிய அவருடைய மனதில் யாம் இருக்கக் கூடாதென்று காவல் செய்கின்ற அவர் எம்முடைய நெஞ்சத்திற்குத் தவறாமல் வருதற்கு வெட்கப்பட மாட்டாரோ?

6. மற்றுயான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன். 1206

[ப-ரை] யான் அவரொடு - நான் காதலராகிய அவரோடு, உற்ற - இன்புற்றிருந்த, நாள் - நாளினை, உள்ள உளேன் - எண்ணிக் கொண்டிருப்பதால் உயிரோடு இருக்கின்றேன், மற்று - அப்படி இல்லையென்றால், யான் என்னுளேன் - நான் எதனால் உயிர் வாழ்ந்துகொண் டிருப்பேன்? [மன் - ஒழியிசை, ஓ - அசைநிலை]

[க-ரை] நான் அவருடன் இன்பம் நுகர்ந்த நாளினை நினைப்பதால் இத்துன்ப காலத்திலும் உயிர் வாழ்கின்றேன். அவ்வாறு இல்லாமற் போனால் வேறு எப்படி உயிர் வாழ்ந்திருப்பேன்?

7. மறப்பின் உவனாவன் மற்கொல் மறுப்புஅறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும். 1207

[ப-ரை] மறுப்பு - அனுபவித்த இன்பத்தினை மறத்தலை, அறியேன் - அறிந்தேனில்லை, உள்ளினும் - அதனை இப்போது நினைத்தாலும் [பிரிவானது] உள்ளம் சுடும் - உள்ளத்தினைச் சுடுகின்றது. [அப்படியிருக்க] மறப்பின் எவனாவன் - மறந்தே இருப்பேனாகில் எவ்வாறு உயிர் வாழ்வேன்? [மன் - ஒழியிசை, கொல் - அசைநிலை]

[க-ரை] முன்பு நுகர்ந்த இன்பத்தினை மறக்காமல் நினைத்துக் கொண்டிருந்தாலும் பிரிவுத் துன்பம் எனது உள்ளத்தினைச் சுட்டு விடுகின்றது; அவ்வாறு இருக்க, அதனை மறந்தால் எவ்வாறு உயிர் வாழ்வேன்?

8. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்துஅன்றோ
காதலர் செய்யும் சிறப்பு. 1208

[ப-ரை] காதலர் - எனது காதலர், எனைத்து நினைப்பினும் - எவ்வளவு அதிகமாக நான் அவரை நினைத்தாலும், காயார் - அதற்காக சினம் கொள்ள மாட்டார், செய்யும் - காதலர் எனக்குச் செய்து தருகின்ற, சிறப்பு - இன்பமானது, அனைத்து - அத்தகையது, அன்றோ - அல்லவா?

[க-ரை] தலைவரை யான் எத்துணை அதிகமாக நினைத்தாலும் அதற்கு அவர் கோபிக்க மாட்டார். அதனால் காதலர் எனக்குச் செய்யும் சிறப்பான இன்பம் அத்தகையதல்லவா?

9. விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து. 1209

[ப-உரை] வேறு - நாம் வேறு வேறு, அல்லம் - அல்ல, என்பார் - என்று சொல்லும் காதலரது, அளி - காதலன்பு, இன்மை - இல்லாத தன்மையினை, ஆற்ற - மிகுதியாகவே, நினைந்து - எண்ணி, என் - என்னுடைய, இன் - இனிமையான, உயிர் - உயிர், விளியும் - கழிந்து சென்று கொண்டிருக்கின்றது.

[கு-உரை] "நாம் இருவரும் வேறல்ல" என்று சொன்ன காதலருடைய அன்பில்லாத தன்மையினை நினைத்து எனது இனிய உயிர் கழிந்து சென்று கொண்டிருக்கின்றது!

10. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி. 1211

[ப-உரை] மதி - மதியே, விடாஅது சென்றாரை - எனது மனதில் என்றும் இருந்தவராகி விட்டுப் போனவரை, கண்ணினால் - எனது கண்களினால், காண - காணுகின்ற வரையில், படாஅதி - மறைந்து போகாமல் இருப்பாயாக, வாழி - நீ வாழ்வாயாக!

[கு-உரை] மதியே! எனது நெஞ்சத்தில் எப்போதும் இருந்து விட்டுப் போன காதலரை யான் என் கண்ணினாலேனும் காணுகின்ற வரையில் நீ மறையாமல் இருப்பாயாக; நீ வாழ்வாயாக!

# 122. கனவு நிலை உரைத்தல்

[தலைவி தனது கனவினைப் பற்றிக் கூறுதல்]

1. காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து. 1211

[ப-ரை] காதலர் - காதலருடைய, தூதொடுவந்த - தூதினைக் கொண்டு வந்த கனவினுக்கு, விருந்து யாது செய்வேன் - நான் விருந்தாக எதனைச் செய்வேன்? [கொல் - அசைநிலை]

[க-ரை] காதலர் அனுப்பிய தூதினைக் கொண்டு என்னிடம் வந்த கனவினுக்கு யான் விருந்தாக யாதினைச் செய்வேன்?

2. கயலுண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன். 1212

[ப-ரை] கயல் - கயல் மீனைப் போல உள்ள, உண்கண் - மை தீட்டப்பட்ட எனது கண்கள், யான் இரப்ப - யான் கெஞ்சிக் கேட்பதற்காக, துஞ்சின் - துயில் கொள்ளுமானால், கலந்தார்க்கு - கனவில் வரும் காதலர்க்கு, உயல் - நான் பொறுத்துக் கொண்டிருக்கும் உண்மை - நிலைமையினை, சாற்றுவேன் - எடுத்துரைப்பேன் [மன் - ஒழியிசை]

[க-ரை] கயல் போன்ற எனது மையுண்ட கண்கள் தூங்குமானால் கனவில் காதலரைக் காண்பேன், கண்டால் அவருக்கு யான் பொறுத்துக் கொண்டிருக்கும் நிலைமையினைக் கூறுவேன்.

3. நனவினான் நல்கா தவரைக் கனவினான்
காண்டலின் உண்டுஎன் உயிர். 1213

[ப-ரை] நனவினான் - நனவுக் காலத்தில் வந்து, நல்காதவரை - அன்பு காட்டாத தலைவரை, கனவினான் -

கனவுக் காலத்தில், காண்டலின் - காணுவதால், என் - என்னுடைய, உயிர் உண்டு - உயிர் போகாமல் இருக்கின்றது.

[க-ரை] நனவில் வந்து அன்பு செய்யாதிருக்கும் கணவரை யான் கனவில் கண்ட காட்சியாலே என்னுடைய உயிர் இருந்து வருகின்றது.

**4. கனவினான் உண்டாகும் காமம் நனவினான்**
**நல்காரை நாடித் தரற்கு. 1214**

[ப-ரை] நனவினான் - நனவுக் காலத்தில் என்னிடம் வந்து, நல்காரை - அன்பினைப் பெய்யாத தலைவரை, நாடி - அறிந்து கொண்டு வந்து, தரற்கு - தருவதால், கனவினான் - அக்கனவின் கண்ணே, காமம் - உண்டாக்கும் இன்பம் எனக்கு உண்டாகின்றது.

[க-ரை] நனவுக் காலத்தில் வந்து அன்பு காட்டாத எனது தலைவரை அவர் சென்ற இடத்திலிருந்து இங்கு கொணர்ந்துக் காட்டுவதால் கனவில் காமமானது உண்டாகின்றது.

**5. நனவினான் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்**
**கண்டபொழுதே இனிது. 1215**

[ப-ரை] நனவினான் - பிரியாத முன்பு நனவின்கண், கண்டதூஉம் - காதலரைக் கண்டு நுகர்ந்த இன்பம் தானும், ஆங்கே - கண்ட அப்போதே இனிதாக இருந்தது. கனவும் தான் - இன்று கனவினில் காதலரைக்கண்டுநுகர்ந்த இன்பமும், கண்ட பொழுதே இனிது - கண்ட அப்போதே இனிதாக இருந்தது.

[க-ரை] நனவுப் பொழுதில் அவரைக் கண்டு நுகர்ந்த காம இன்பம் தானும் அப்போது இனிதாக இருந்தது. இப்போது நான் கனவில் கண்டு நுகர்ந்த இன்பமும் அது

கண்டபோதே இனிதாகத் தான் இருந்தது ஒன்று எனக்கு இரண்டும் ஒத்திருந்தன.

6. நனவுஎன ஒன்றுஇல்லை ஆயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன். 1216

[ப-ரை] நனவு - நனவு [நினைப்பு,, என - என்று சொல்லப் படுகின்ற, ஒன்று - ஒன்றானது, இல்லையாயின் - இல்லாது போனால், கனவினால் - கனவினில் வந்து என்னுடன் கலந்த, காதலர் - காதலர், நீங்கலர் - பிரிய மாட்டார். [மன் - ஒழியிசை]

[க-ரை[ நனவு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி இல்லையாயின் கனவிலே வந்து கூடிய காதலர் என்னைப் பிரியார்.

7. நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்எம்மைப் பீழிப் பது. 1217

[ப-ரை] நனவினான் - நனவுக் காலத்தில் வந்து நல்கா அன்புகாட்டாத, கொடியார் - கொடுமையான காதலர், கனவினான் - கனவினில் வந்து வந்து, எம்மைப் பீழிப்பது - நம்மைத் துன்புறச் செய்வது, என் - ஏனோ?

[க-ரை] ஒருபொழுதும் நனவிலே வந்து அன்பு செய்யாத கொடிய காதலர் நாள்தோறும் கனவில் வந்து நம்மை வருத்துவது எந்தப் பொருத்தம் பற்றியோ?

8. துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. 1218

[ப-ரை] துஞ்சுங்கால் - நான் தூங்குகின்ற போது வந்து, தோள் - தோள்களின், மேலராகி - இருக்கின்ற வராய், விழிக்குங்கால் - நான் விழிக்கும் போது, விரைந்து நெஞ்சத்தார் - விரைந்து நெஞ்சினிடத்துச் செல்பவர், ஆவர் - ஆகி விடுகின்றார்.

[க-ரை] எனது நெஞ்சில் விடாமல் இருக்கும் காதலர் யான் தூங்கும்போது வந்து என் தோள் மேலராய் இருக்கின்றார். பிறகு நான் விழித்துக் கொள்ளும்போது விரைந்து எனது பழைய நெஞ்சினிடத்துச் சென்று விடுகின்றார்.

9. நனவினான் நல்காரை நோவர் கனவினான்
காதலர்க் காணா தவர். 1219

[ப-ரை] கனவினான் - கனவில், காதலர் - காதலரை, காணாதார் - கண்டறியாத பெண்கள், நனவினான் - நனவு நேரத்தில் வந்து, நல்காரை - அன்புகாட்டாத காதலரை, நோவர் - அன்பில்லாதவரென்று நொந்து பேசுவர்.

[க-ரை] தமக்கு ஒரு காதலர் இல்லாமையால், அவரைக் கனவில் கண்டறியாத மகளிர், தாம் அறிய நினைவில் வந்து அன்பு செய்யாத காதலரை அன்பில்லாதவர் என்று நொந்து கொள்கின்றனர்.

10. நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்
காணார்கொல் இவ்வூ ரவர். 1220

[ப-ரை] இவ்வூரவர் - இந்த ஊரிலுள்ள பெண்கள், நனவினான் - நனவினில், நம் - நம்மை, நீத்தார் - நம் காதலர் நீங்கி விட்டார், என்பர் - என்று கூறுவர், கனவினான் - எப்போதும் கனவில் வருவதை, காணார் கொல் - காண மாட்டரோ?

[க-ரை] இவ்வூர் மகளிர் நனவிலே நம்மைவிட்டுப் போனார் என்று நம் காதலரைக் கொடுமை கூறுகின்றார்கள். அவர் கனவில் நீங்காது வருவதனைக் கண்டறியாரோ?

# 123. பொழுது கண்டு இரங்கல்

[மாலைப் பொழுது வந்த போது தலைமகள் இரந்து வருந்தல்]

1. மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்
வேலைநீ வாழி பொழுது. 1221

[ப-ரை] பொழுது-மாலைப் பொழுதே! நீ மாலையோ-நீ முன்னாளில் வந்த மாலைப் பொழுதோ, அல்லை-அல்ல, மணந்தார் - காதலரை மணந்த பெண்களது, உயிர் - உயிரை, உண்ணும் - உண்ணுகின்ற, வேலை - இறுதிக்காலமாக இருக்கின்றாய், வாழி - நீ வாழ்வாயாக!

[க-ரை] மாலைப் பொழுதே, நீ முந்தைய நாட்களில் வந்த மாலைப்பொழுது - அல்ல; அந்த நாளில் காதலரை மணந்த மகளிர் உயிரை உண்ணும் முடிவுக் காலமாய், இப்போது இருக்கின்றாய்.

2. புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை. 1222

[ப-ரை] மருள் - மயங்கிய, மாலை - மாலைப் பொழுதே, புன்கண்ணை - ஒளியிழந்து இருக்கின்றாய்-வாழி - வாழ்க! நின் - உனது, துணை - துணையும், எம் - எம்முடைய, கேள்போல் - துணைவரைப் போல, வன்கண்ணதோ - அன்பின்றிக் கொடுமையான தன்மையுடையதோ?

[க-ரை] மயங்கிய மாலைப் பொழுதே! நீயும் எம்மைப்போல ஒளியிழந்த கண்களையுடையதாக இருக்கின்றாய்; உன் துணையும் எம்முடைய துணையே போல் வன்கண்மையுடையதோ? இரக்கமற்றதோ?

3. பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும். 1223

[ப-ரை] பனி அரும்பி - நாயகருடன் இருந்த நாளில் நடுக்கம் கொண்டு, பைதல்கொள் - முன்பு பசந்து வந்த, மாலை - மாலைப் பொழுதானது, துனி அரும்பி - உயிர் வாழவும் முடியாதபடி என்னைச் செய்து, துன்பம் வளர - துன்பமானது ஒரு காலைக் கொருகால் மிகுதியாகுமாறு, வரும் - வருகின்றது.

[க-ரை] காதலர் கூடிய நாளெல்லாம் என்முன் நடுக்கமுற்று பசந்து வந்த மாலைப் பொழுது இந்நாள் எனக்கு உயிர்வாழ்வதில் வெறுப்புண்டாக்கித் துன்பம் ஒரு காலைக் கொரு கால் மிகுதியாகுமாறு வருகின்றது.

4. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். 1224

[ப-ரை] மாலை - முன்பு இன்பம் தந்து வந்த மாலைப் பொழுது, காதலர் - எமது காதலர், இல்வழி - என்னுடன் இல்லாதபோது, கொலை - கொலை செய்கின்ற, களத்து - களரியில், ஏதிலர் - கொலைஞர்கள், போலவரும் - வருவது போல வருகின்றது.

[க-ரை] காதலர் இருந்தபொழுதெல்லாம் எனது உயிர்தழைக்கும்படியாக வந்த மாலைப் பொழுது அவர் இல்லாத இப்போது கொலை செய்கின்ற களத்திற்கு வருகின்ற கொலைஞர்களைப் போல வருகின்றது.

5. காலைக்குச் செய்த நன்றுஎன்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. 1225

[ப-ரை] யான் - நான், காலைக்கு - காலைப் பொழுதிற்கு, செய்த நன்று என் - செய்த நன்மை என்ன? மாலைக்கு - மாலைப் பொழுதிற்கு, செய்த - யான் செய்த, பகைஎவன் - தீமை என்ன? [கொல் - அசை நிலை]

[க-ரை] காலையும் மாலையும் எம் காதலர் கூடியிருந்தபோது வந்தன போலல்லாமல் வேறுபட்டு வருகின்றன. யான், காலைக்குச் செய்த நன்மை என்ன? மாலைக்குச் செய்த தீமை என்ன?

6. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன். 1226

[ப-ரை] மாலை - மாலைப் பொழுது, [இப்போது] நோய் - துன்பம், செய்தல் - செய்வதனை, மணந்தார் - என்னை மணந்த காதலர், அகலாத - பிரிந்து போவதற்கு, காலை - (காலத்தில்) முன்னே, அறிந்தது இலேன் - அறியவில்லை.

[க-ரை] முன்பெல்லாம் எனக்கு நட்பாக இருந்து இன்பம் செய்த மாலைப் பொழுது பகையாய்த் துன்பம் செய்தலைக் காதலர் பிரிதற்கு முன்னே அறிந்தேனில்லை.

7. காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய். 1227

[ப-ரை] இந்நோய் - காமநோய் என்னும் இம்மலர், காலை நேரத்தில், அரும்பி - அரும்பாக இருந்து, பகலெல்லாம் - பகற்பொழுதெல்லாம், போதாகி - பெரிய அரும்பாக முதிர்ந்து, மாலை-மாலைப் பொழுதில், மலரும்- மலர்ந்து விடுகின்றது.

[க-ரை] இக்காமமாகிய பூ காலைப் பொழுதின் அரும்பி, பகற்பொழுதெல்லாம் பேர் அரும்பாய் முதிர்ந்து மாலைப் பொழுதினிலே மலரும்.

8. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை. 1228

[ப-ரை] ஆயன் - ஆயனது (இடையன்) குழல் - முன்பு இன்பத்தினையுண்டாக்கிய குழல், அழல் போலும்

அப்போது தீயினைப் போலச் சுடுவதாகியும், மாலைக்கு - மாலைப் பொழுதிற்கு, தூது ஆகி - தூதும் ஆகி, கொல்லும் - அம்மாலைப் பொழுது என்னைக் கொலை செய்யும்போது, படை - அதற்குப் படைக் கருவியும் ஆயிற்று (போலும் - உரையசை)

[க.உரை] முன்பெல்லாம் இனியதாய் வந்த ஆயன்குழல் இப்போது அழல்போலச் சுடுவதாயும், மாலைக்குத் தூதுமாகி, அம்மாலை வந்து என்னைக் கொல்லுறும்போது அதற்குத் துணையாகக் கொலை செய்யும் கருவியுமாயிற்று.

௯. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. 1229

[ப.உரை] மதிமருண்டு - கண்டோரும் மதி மயக்கம் அடையும் வகையில், மாலை - மாலைப் பொழுது, படர் - துன்பத்தினை, தரும் போழ்து - தந்து வரும்போது, பதி - இந்நகரமெல்லாம், மருண்டு - மயக்கமுற்று, பைதல் - துன்பத்தினை, உழக்கும் - மேற்கொண்டு வருந்தும்.

[க.உரை] முன்பெல்லாம் யான் மட்டும் மதி மயங்கி இருந்தேன். இப்போது கண்டவர்களும் மதிமருளும் வகையில் மாலைக் காலம் வரும்போது, இவ்வூரெல்லாம் மயங்கி நோயினை அநுபவிக்கும்.

10. பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயுமென் மாயா உயிர். 1230

[ப.உரை] மாயா - பிரிவினால் இதுவரை போகா திருந்த, என் - என்னுடைய, உயிர் - உயிரானது, பொருள் - பொருள் ஈட்டும், மாலையாளரை - தன்மை கொண்ட தலைவரை, உள்ளி - எண்ணி, மருள் - மயங்குகின்ற, மாலை - இந்த மாலையிலே, மாயும் - இறந்து விடுகின்றது.

[க.உரை] காதலர் பிரிவைப் பொறுத்து இறந்து போகாதிருந்த எனது உயிர், இன்று பொருளீட்டு

வதனையே தமக்கு இயல்பாக உடையகனைவரை நினைத்து மயங்குகின்ற இம்மாலைப் பொழுதில் மாய்கின்றது.

## 124. உறுப்பு நலன் அழிதல்

[பிரிவுந் துன்பத்தினால் தலைவியின் உறுப்புக்கள் அழகிழத்தல்]

1. சிறுமை நமக்கொழியச் சேண் சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண். 1231

[ப-ரை] சிறுமை - பிரிவுத்துன்பத்தினை, நமக்கு - நம்மிடம், ஒழிய - இருக்கச் செய்துவிட்டு, சேண் - நெடுந் தூரம், சென்றார் - சென்றிருக்கும் காதலரை, உள்ளி - உள்ளத்தில் எண்ணி அழுவதால், கண் - கண்கள், நறுமலர் நாணின - முன்பு தனக்கு நாணிய அழகிய மலர்களுக்கு இப்போது நாணி விட்டன.

[க-ரை] பிரிவினால் பொறுத்திருக்க முடியாத துன்பத்தினை நமக்கு உண்டாக்கி நெடுந்தூரம் சென்ற காதலரை நினைத்து, அழுவதால் கண்கள் ஒளியிழந்து முன்பு தமக்கு நாணமுற்ற மலர்களுக்கு இன்று தாம் நாணி விட்டன.

2. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண். 1232

[ப-ரை] பசந்து - பசப்பு நிறமடைந்து, பனி - நீரினை, வாரும் - பொழிகின்ற, கண் - கண்கள், நயந்தவர் - நம்மால் காதலிக்கப்பட்டவர், நல்காமை - அன்பு செய்யாதிருப்பதை, சொல்லுவ - பிறர்க்கு எடுத்துச் சொல்லுவன, போலும் - போன்று இருக்கின்றன.

[க-ரை] பசப்பு நிறமடைந்து நீர் பொழிகின்ற கண்கள் நம்மால் அன்பு செய்யப் பட்டவரது அன்பில்லாத தன்மையினைப் பிறர்க்குச் சொல்லுவனபோல் இருக்கின்றன.

3. தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள். 1233

[ப-ரை] மணந்த - மணந்து கலந்த, நாள் - நாட்களில், வீங்கிய - இன்பத்தால் பூரிப்படைந்த, தோள் - தோள்கள், தணந்தமை - தலைவன் பிரிந்தமையை, சால - மிகவும் விளங்க, அறிவிப்ப - பிறர்க்குத் தெரிவிப்பது, போலும் - போன்று மெலிந்தன.

[க-ரை] காதலர் மணந்தபோது இன்ப மிகுதியால் பூரித்த தோள்கள் இன்று அவர் பிரிந்தமையினை விளங்க உணர்த்துவது போன்று மெலிந்துவிட்டன.

4. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். 1234

[ப-ரை] துணை - தமது துணைவர், நீங்கி - நீங்கியதால், தொல் - பழைய, கவின் - இயற்கை அழகினை, வாடிய - இழந்து வாடிய, தோள் - தோள்கள், பணை - தமது பெருமையினையும், - நீங்கி - இழந்து விட்டு, பைந்தொடி சோரும் - பசுமையான வளையல்கள் கழல நிற்கின்றன.

[க-ரை] துணைவர் நீங்கியதால் அவரால் பெற்ற செயற்கையேயன்றி இயற்கையழகும் இழந்த தோள்கள், இன்று அதற்கு மேலே தம் பெருமை இழந்து வளையல்கள் கழல நிற்கின்றன.

5. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். 1235

[ப-ரை] தொடியோடு வளையல்களும் கழல, தொல் - பழைய, கவின் - இயற்கையழகினையும், (இழந்து) வாடிய

வாடியுள்ள, தோள் - தோள்கள், கொடியார் - பிரிந்திருக்கும் கொடுமையான தலைவரின், கொடுமை - கொடுந்தன்மையினை, உரைக்கும் சொல்லுகின்றன.

[க-ரை] வளையல்களும் கழன்று, பழைய இயற்கை யழகும் இழந்த இத்தோள்கள், கொடிய தலைவரது கொடுமையினைத் தாமே எடுத்துக் கூறுகின்றன.

6. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து. 1236

[ப-ரை] தொடியொடு - வளையல்கள் கழலும் நிலையில், தோள் - தோள்கள், நெகிழ - மெலிய, அவரை - காதலரை, கொடியர் - கொடுமையானவர், என - என்று, கூறல் - பிறர் கூறுவதை, நொந்து - பொறுக்க முடியாமல், நோவல் - வருந்தித் துன்புறுகின்றேன்.

[க-ரை] வளையல்கள் கழலுமாறு தோள்கள் மெலிந்ததால் அவரைப் பிறர் கொடியர் எனக் கூறுதலைப் பொறுக்க முடியாமல் யான் என்னுள்ளே நொந்து நிற்கின்றேன்.

7. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன்
வாடுதோள் பூசல் உரைத்து. 1237

[ப-ரை] நெஞ்சே - நெஞ்சமே கொடியார்க்கு - கொடிய தலைவர்க்கு, என் - என்னுடைய, வாடு - வாடிய, தோள் - தோள்கள் உண்டாக்குகின்ற, பூசல் - ஆரவாரத்தினை, உரைத்து - எடுத்துக்கூறி, பாடு - ஒரு மேம்பாட்டினை, பெறுதியோ - அடைய மாட்டாயோ?

[க-ரை] நெஞ்சே! இவர் கொடியவர் என்று சொல்லப் படுகின்ற காதலரிடம் சென்று, என் மெலிந்த தோள்கள் செய்யும் ஆரவாரத்தினைக் கூறி ஒரு மேம்பாடு அடைய மாட்டாயோ? அப்படிச் செய்தால் சிறந்ததாகும்.

8. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். 1238

[ப-ரை] முயங்கிய - இறுகத் தழுவிய, கைகளை - கைகளை, ஊக்க - தளர்த்தினேனாக, பைந்தொடி-பசுமையான வளையல்களை யணிந்த, பேதை - இப்பெண்ணின், நுதல்-நெற்றியானது, பசந்தது-பசப்பு நிறம் அடைந்து விட்டது. [அப்படி இருக்க இப்பிரிவினை எவ்வாறு தாங்குவேன்]

[க-ரை] தன்னை இறுகத் தழுவிய கைகளை இவளுக்கு நோகும் என்று கருதி ஒரு போது தளர்த்தினேன். அதனையும் கூடப் பொறுக்கமுடியாமல் பசிய வளையல்களையணிந்த இப்பேதையினுடைய நுதல் பசலை நிறம் அடைந்தது.

9. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். 1239

[ப-ரை] முயக்கு - தழுவிக் கொண்டிருந்ததற்கு. இடை -இடையே (நடுவில்), தண் - குளிர்ந்த சிறிய, வளி - காற்று, போழ - நுழைய, பேதை - இப்பேதைப் பெண்ணினுடைய, பெரு - பெரிய, மழை - குளிர்ந்த, கண் - கண்கள், பசப்புற்ற - பசலை நிறத்தினை அடைந்து விட்டன,

[க-ரை] இறுகத் தழுவிய கைகளைத் தளர்த்தியதால் இருவருக்குமிடையே சிறு காற்று நுழைந்தது. அந்தச் சிறிய இடைவெளியினையும் பொறுக்க முடியாமல் இப் பேதையினுடைய குளிர்ச்சி பொருந்திய கண்கள் பசப்பு நிறம் அடைந்தன.

10. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. 1240

[ப-ரை] ஒள் -ஒளிபொருந்திய (அருகிலுள்ள) நுதல்-நுதல் (நெற்றி), செய்தது கண்டு - விளைவித்த பசப்பினைக் கண்டு, கண்ணின் - கண்களினுடைய, பசப்போ -

பசப்பு நிறம், பருவரல் - துன்பத்தினை, எய்தின்று - அடைந்து விட்டது. (ஏ - அசைநிலை)

[க-ரை] தனக்கு அருகில் இருக்கும் ஒளிபொருந்திய நெற்றியடைந்த பசப்பு நிறத்தினைக் கண்டு, கண்களின் பசப்புநிறம் துன்பத்தினை அடைந்து விட்டது.

## 125. நெஞ்சொடு கிளத்தல்

[தலைவி இன்னது செய்வதென்று அறியாமல் நெஞ்சொடு பேசுதல்]

1. நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே
   எனைத்தொன்றும்
   எவ்வநோய் தீர்க்கும் மருந்து. 1241

[ப-ரை] நெஞ்சே - நெஞ்சமே, எவ்வ - ஒன்றாலும் தீராத, நோய் - இந்நோயினை, தீர்க்கும் - தீர்க்கக்கூடிய, மருந்து - மருந்து, ஒன்று - ஒன்றினை, எனைத்தொன்றும் - எத்தன்மையானதொன்றாலினும், நினைத்து - நினைத்துப் பார்த்து, சொல்லாயோ - எனக்குச் சொல்ல மாட்டாயோ?

[க-ரை] நெஞ்சமே! தீராத இக்காம நோயினைத் தீர்க்கும் மருந்தாவதொன்றினை யான் அறியுமாறு யாதாலுமொன்றனை நினைத்துச் சொல்லுவாயாக.

2. காதல் அவர்இல ராகநீ நோவது
   பேதைமை வாழிஎன் நெஞ்சு. 1242

[ப-ரை] என் - என்னுடைய, நெஞ்சு - நெஞ்சமே, வாழி - நீ வாழ்வாயாக, அவர் - நமது தலைவர், காதல் நம்மீது காதல், இலராக இருக்க, நீ - நீ மட்டும், நோவது - அவரை நினைத்து - வருந்துவது, பேதைமை - அறியாத் தன்மையேயாகும்.

[க-ரை] என்னுடைய நெஞ்சமே! நம்முடைய கணவர் நம்மிடத்தில் காதல் கொள்ளாமல் இருக்கின்றார். நீ அவர் வரவு நோக்கி வருந்துகின்றாய்; இது உன்னுடைய பேதைமையேயாகும்.

3. இருந்துஉள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துஉள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல். 1243

[ப-ரை] பைதல் - மிகவும் துன்பமான, நோய் - இந் நோயினை, செய்தார்கண் - செய்த காதலரிடத்தில், பரிந்து - நம்மீது இரக்கப்பட்டு, உள்ளல் இல் - நம்மிடம் வர வேண்டும் என்று நினைத்தல் இல்லையே, நெஞ்சமே - நெஞ்சமே, இருந்து - இங்கேயே இருந்து கொண்டு, உள்ளி - காதலரை நினைத்து, பரிதல் என் - வருந்துவது ஏன்?

[க-ரை] இத்துன்ப நோயினைச் செய்தவரிடத்தில் நம்மிடம் இரக்கங்காட்டி வருகின்ற எண்ணம் இல்லையே; நெஞ்சமே! நீ அவர் இருக்கும் இடத்திற்குப் போகாமல் இங்கேயே இருந்து கொண்டு அவர் வரவு நோக்கி வருந்துவது ஏன்?

4. கண்ணும் கொளச்சேறி நெஞ்சேஇவை என்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று. 1244

[ப-ரை] இவை - இந்தக் கண்கள், அவர் - தலைவரை, காணல் உற்று - காணுதல் வேண்டி, என்னைத் தின்னும் - என்னைத் தின்பன போன்று துன்பம் செய்கின்றன (ஆதலால்); நெஞ்சே - நெஞ்சமே, கண்ணும் - கண்களையும், கொள - அவரிடம் கொண்டு, சேறி - செல்லுவாயாக.

[க-ரை] தலைவரைக் காண வேண்டுமென்று கண்கள் என்னைத் தின்பன போன்று வருத்தி நிற்கின்றன. நெஞ்சே நீ அவரிடம் செல்லும்போது இக்கண்களையும் உடன் கொண்டு செல்வாயாக.

5. செற்றார் எனக்கைவிடல் உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர். 1245

[ப-ரை] நெஞ்சே-நெஞ்சமே, யாம் உற்றால் - யாம் அவரிடம் அன்பு கொண்டிருக்க, உறாஅதவர் - நம்மிடம் காதல் கொள்ளாதவரை, செற்றார் - வெறுத்து விட்டார், என - என்று நினைத்து, கைவிடல் உண்டோ - கை விட்டிருக்கும் வலிமை நமக்கு இருக்கின்றதோ?

[க-ரை] நெஞ்சமே; நாம் அன்பு கொண்டு அவரைக் காதலித்திருக்க, நம்பால் காதல் கொள்ளாதிருக்கும் அவரை வெறுத்தார் என்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலிமை நமக்கு உண்டோ?

6. கலந்துஉணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துஉணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு. 1246

[ப-ரை] என் - என்னுடைய, நெஞ்சு - மனமே கலந்து - புணர்ச்சியால், உணர்த்தும் - நமது பிணக்கினை. நீக்க வல்ல, காதலர் - காதலரை, கண்டால் - கண்டு, விட்டால், புலந்து - பொய்யாகவேனும் கோபித்து, உணராய் - பிறகு புலப்பதை நீக்கி விடுதல் செய்யாத நீ, பொய் - பொய்யான, காய்வு - கோபத்தில், காய்தி - கோபித்துக் கொண்டிருக்கிறாய்.

[க-ரை] என் நெஞ்சமே! நாம் பிணங்கிக் கொண்டு புலந்திருந்தால் கலவியினாலே நீக்க வல்ல காதலரைக் கண்டால் பொய்யாகவேனும் புலந்து பின் நீங்காத நீ இப்போது பொய்யாகக் கோபித்துக்கொண்டிருக்கின்றாய்.

7. காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு. 1247

[ப-ரை] நல் - நல்ல, நெஞ்சே - நெஞ்சமே! ஒன்று காமம் - ஒன்று காம இன்பத்தினை, விடு - விட்டு விடு,

(முடியவில்லையென்றால்) நாண்விடு - நாணத்தினை யாவது விட்டு விடு, இவ்விரண்டு - இந்த இரண்டினையும், யானோ பொறேன் - ஒன்றாகத் தாங்கும் வலிமை எனக்கு இல்லையாகும். (ஓ - அசைநிலை)

[க-ரை] நல்ல நெஞ்சமே! நாணத்தினை விட முடிய வில்லையென்றால் ஒன்று காமத்தினை விடு; அல்லது நாணத்தினை விட்டு விடு; இல்லையாயின் இரண்டினையும் தாங்கும் வலிமை எனக்கு இல்லை.

8. பிரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு. 1248

[ப-ரை] என் - என்னுடைய, நெஞ்சு - மனமே, அவர் - நமது தலைவர், பரிந்து - வருந்தி நம்மிடம் வந்து, நல்கார் - அன்பு செய்ய மாட்டார், என்று - என்று எண்ணி, நமது (நிலைமையினைக் கூறுவதற்காக) பிரிந்தவர் - பிரிந்து போகின்றவர், பின் - பின்னே, ஏங்கிச் செல்வாய் - ஏக்கத்துடன் செல்லுகின்றாய், பேதை - பேதையாகிய நீ யாதும் அறியாய்.

[க-ரை] எனது நெஞ்சமே! தலைவர் பொறுத்திருக்க முடியாத நமது தன்மையினை அறியாததால் மனம் நொந்து வந்து அன்பு செய்யாமல் இருக்கின்றார்; அப்படி நினைத்து ஏங்கிப் பிரிந்திருக்கும் அவர் பின்னே ஏங்கிச் செல்ல நினைக்கின்ற நீ எதையும் தெரிந்து கொள்ள மாட்டாய்.

9. உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு. 1249

[ப-ரை] என் - என்னுடைய, நெஞ்சு - நெஞ்சே, காதலவர் - காதல் தலைவர், உள்ளத்தார் ஆக - மனத்தி லேயே தங்கி இருப்பவராக, நீ உள்ளி - நீ இப்போது வெளி யில் தேட நினைத்து, யாருழைச் சேறி - யாரிடத்தில் போகின்றாய்?

[க-ரை] என் நெஞ்சமே! காதலர் உள்ளத்திலே இருக்கின்றார். இப்போது, வெளியில் போய்த் தேடி யாரிடம் செல்கின்றாய்?

10. துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின். 1250

[ப-ரை] துன்னா - நம்மைக் கூடாதபடி, துறந்தாரை - பிரிந்து (துறந்து) போனவரை, நெஞ்சத்து - மனத்திலேயே, உடையேமா - நினைத்துக் கொண்டிருப்பதால், இன்னும் - முன்பு இழந்த புறத்து அழகே அன்றி மேலும், கவின் இழத்தும் - மனத்து அழகினையும் இழப்போம்.

[க-ரை] நம்மைக் கூடாவண்ணம் விட்டுப் போன தலைவரை, நாம் நம் மனத்திலேயே வைத்திருப்பதால் முன்பு இழந்த புறத்து அழகேயன்றி மனத்து அழகினையும் இழப்போம்.

## 126. நிறை அழிதல்

[மனத்தில் மறைத்து வைத்திருப்பதை வேட்கை மிகுதியால் வெளிப்பட வைத்தல்]

1. காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாள் வீழ்த்த கதவு. 1251

[ப-ரை[ நாணு - நாணம் என்கின்ற, தாள் - தாழ்ப்பாளினை, வீழ்த்த - கோத்த, நிறை - நிறைகுணம், என்னும் - எனப்படும், கதவு - கதவினை, காமக்கணிச்சி - காம வேட்கையாகிய குந்தாலி, உடைக்கும் - முறித்து விடுகின்றது.

[க-ரை] நாண் என்னும் தாழ்ப்பாளினைக் கோத்த நிறையென்றும் கதவினைக் காம வேட்கையாகிய கணிச்சி முறிக்கின்றது. அதனை நிறுத்தித் தடுக்க முடியவில்லை.

2. காமம் எனஒன்றோ கண்ணின்றுஎன் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். 1252

[ப-ரை] யாமத்தும் - நள்ளிரவிலும், என் - எனது, நெஞ்சத்தை - நெஞ்சத்தினை, தொழில் ஆளும் - செயல் படுத்தி ஆட்சி புரிகின்றது. (ஆகையினால்) காமம் - காமம், என - என்று சொல்லப்படுகின்ற, ஒன்று - ஒன்றானது, கண் - கண்ணோட்டம் என்கின்ற இரக்கம், இன்று - இல்லாததாக இருக்கின்றது. ஓ! - அந்தோ!

[க-ரை] எல்லோரும் தூங்குகின்ற பாதி இரவிலும் எனது நெஞ்சத்தினைத் தொழிற்படுத்தி ஆட்சி செய் கின்றது; ஆதலால் காமம் என்று சொல்லப்படுகின்ற ஒன்று இரக்கமில்லாததாக இருக்கின்றது.

3. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்புஇன்றித்
தும்மல் போல் தோன்றி விடும். 1253

[ப-ரை] காமத்தை - காமத்தினை, யான் மறைப்பேன் - நான் மறைத்துக் கொள்ளக் கருதுவேன், குறிப்பின்றி - எனது கருத்தின்படி வாராமல், தும்மல் - தும்மலினை, போல் - போன்று, தோன்றிவிடும் - வெளிப்பட்டுத் தோன்றி விடுகின்றது. ஓ - அந்தோ! (மன் - ஒழியிசை)

[க-ரை] இக்காமத்தை நான் என்னுள்ளே மறைக்கக் கருதுகின்றேன்; ஆனால் இஃது என் கருத்திற்குள் அடங் காமல் தும்மல் போல் வெளிப்பட்டு விடுகின்றது.

4. நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறைஇறந்து மன்று படும். 1254

[ப-ரை] யான் நிறையுடையேன் - நான் நிறைகுணம் உடையேன், என்பேன் - என்று கருதி இருந்தேன், என் - என்னுடைய, காமம் - காமமானது, மறை - மறைத்து வைத்ததை, இறந்து - கடந்து வந்து, மன்று - பலரும் அறிய மன்றத்தில், படும் - வெளிப்பட்டு விடுகின்றது! ஓ - அந்தோ! (மன் - அசைநிலை)

[க-ரை] யான் முன்பெல்லாம் என்னை நிறையுடை யேன் என்று நினைத்திருந்தேன். இன்று என் காமம் மறைத்து வைத்திருந்ததையும் கடந்து மன்றத்தில் பலரும் அறிய வெளிப்படுகின்றது.

5. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன்று அன்று. 1255

[ப-ரை] செற்றார் - தம்மைவிட்டு நீங்கிப் போனவர், பின் - பின்னே, செல்லா - தொடர்ந்து செல்லாத, பெருந் தகைமை - பெருந்தன்மையான நிறைகுணமானது, காம நோய் - காமநோயினை, உற்றார் - அடைந்தவர்கள், அறிவது- அறிந்து கொள்ளக்கூடிய, ஒன்று - ஒன்று, அன்று - இல்லை.

[க-ரை] தம்மைவிட்டுச் சென்றவர் பின்னே செல்லாமல் தாமும் அகன்று நிற்கும் பெருந்தகைமை காம நோயினை உணர்ந்தவர்கள் அறிவது ஒன்று அன்று.

6. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றுஎன்னை உற்ற துயர். 1256

[ப-ரை] செற்றவர் - நம்மை விட்டு நீங்கிச் சென்ற காதலர், பின் - பின்னே, சேறல் - செல்லுவதை, வேண்டி - விரும்புவதால், என்னை - என்னை, உற்ற - வந்து சேர்ந்த, துயர் - இக்காமத் துன்பமானது, எற்று - எத்தன்மையான தாகும், அளித்து - மிக்க நல்லதேயாகும். [அரோ - அசை நிலை]

[க-ரை] என்னைவிட்டுப் பிரிந்தவர் பின்னே யான் செல்லுவதை விரும்புவதால், எனக்கு உற்ற துயர் எத் தன்மையானது? மிகவும் நல்லதேயாகும்.

7. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின். 1257

[ப-ரை] பேணியார் - நம்மால் விரும்பப்பட்ட காதலர், காமத்தால் - காமவேட்கையால், பெட்ப

செயின் - நாம் விரும்பியவற்றைச் செய்யும் போது, நாண் - நாணம், என - என்கின்ற, ஒன்றோ - ஒன்றினையும், அறியலாம் - அறியமுடியாதபடி இருந்தோம்.

[க-ரை] நம்மால் விரும்பப்பட்ட தலைவர் திரும்ப வந்து காமத்தில் நாம் விரும்பியவற்றைச் செய்யுங்கால் நாணம் என்ற ஒன்றினையும் முடியாதவராக இருந்தோம்.

8. பல்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. 1258

[ப-ரை] பல்மாய; பல - பொய்களையும் பேசவல்ல, கள்வன் - கள்வனுடைய, பணிமொழி - தாழ்ந்த சொற்கள், அன்றோ - அல்லவா, நம் - நம்முடைய, பெண்மை - நிறையாகிய குணத்தினை, உடைக்கும் - உடைக்கின்ற, படை - படைக்கருவி ஆகும்.

[க-ரை] பல பொய்களையும் சொல்ல வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களல்லவா நம்முடைய நிறை குணமாகிய கோட்டையினை அழிக்கின்ற படையாகும்.

9. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு. 1259

[ப-ரை] புலப்பல் - பிணங்கிக் கொள்ள வேண்டும், என - என்று எண்ணி, சென்றேன் - காதலர் முன் நிற்காமல் பிறிதோர் இடத்திற்குச் சென்றேன், நெஞ்சம் - எனது மனமானது, கலத்தல் - அவருடன் கலந்து கொள்ள, உறுவது கண்டு - மேற்கொண்டுள்ளதைக் கண்டு, புல்லினேன் - தழுவிக் கொண்டேன்.

[க-ரை] அவர் வந்தபோது பிணங்கவேண்டும் என்று எண்ணி முன்னே நிற்காமல் பிறிதோர் இடத்திற்குச் சென்றேன். எனது நெஞ்சம் நிறைகுணத்தில் நிற்காமல் அவரோடு கலத்தல் தொடங்குவதை அறிந்து புல்லினேன்.

10. நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். 1260

[ப-ரை] நிணம் - கொழுப்பினை, தீயில் - தீயினில், இட்டன்ன - இட்டால் அது எப்படி உருகுமோ அது போன்ற, நெஞ்சினார்க்கு - நெஞ்சினையுடைய பெண்களுக்கு, ஊடி - புலத்தல் செய்து, புணர்ந்து - அதன் பிறகு புணர்ந்து, நிற்பேம் - அந்நிலையிலேயே உறுதியாக இருப்போம், எனல் உண்டோ - என்று எண்ணுதல் உண்டாகுமோ?

[கு-ரை] தீயிலிடப்பட்ட கொழுப்பானது எவ்வாறு உருகுமோ அதுபோன்ற நெஞ்சினை உடைய மகளிர்க்கு அவர் புணர, யாம் கூடிப் பின்பு, புணராது அந்நிலைமையிலேயே நிற்கக் கடவேம் என்று கருதுதல் உண்டாகுமோ? உண்டாகாது.

## 127. அவர்வயின் விதும்பல்

[பிரிந்திருக்கும் இருவரும் வேட்கை மிகுதியால் ஒருவரையொருவர் காண விழைதல்]

1. வாள் அற்றுப்புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல். 1261

[ப-ரை] அவர் - தலைவர், சென்ற - பிரிந்து போன, நாள் - நாட்களை, ஒற்றி - சுவரில் இழைத்துத் தொட்டு எண்ணியெண்ணி, விரல் - எனது விரல்கள், தேய்ந்த - தேய்ந்து - போயின, கண்ணும் - கண்களும், [அவர் வருகையினைப் பார்த்து] வாள் - ஒளி, அற்று - இழந்து, புற்கென்ற - புல்லிய தன்மை கொண்டன.

[கு-ரை] அவர் நம்மைப் பிரிந்து சென்ற நாட்களைச் சுவரில் இழைத்து வைத்து அவைகளைத்

தொட்டு எண்ணுவதால் என் விரல்கள் தேய்ந்தன. அவர் வருகின்ற வழிபார்த்து எனது கண்களும் ஒளியிழந்து போயின.

2. இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து. 1262

[ப-ரை] இலங்கு - ஒளிவீசுகின்ற, இழாய் - அணிகலன்களையுடையவளே! இன்று - இந்த நாட்களில், மறப்பின் - தலைவரை மறந்து விட்டால், மேல் - மென்மேலும், காரிகை நீத்து - அழகானது என்னை விட்டு நீங்கி, என் - என்னுடைய, தோள் - தோள்கள், கலம் - வளையல்கள், கழியும் - கழலும் நிலைமையை அடையும்.

[கு-ரை] விளங்குகின்ற அணிகலன்களையுடையவளே! இன்று காதலரை யான் மறப்பேனாயின் மேலும் அழகு என்னைவிட்டு நீங்க என் தோள் வளையல்கள் கழலும்.

3. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரன்நசைஇ இன்னும் உளேன். 1263

[ப-ரை] உரனசைஇ - செல்லுதலைக் கருதி, உள்ளம்- தமது ஊக்க மிகுதியே, துணையாகக் கொண்டு, சென்றார்- சென்ற தலைவர், வரன் நசைஇ - அவர் திரும்பி வருவதையே விரும்பி, இன்னும் உளேன் - இந்நாள் வரையிலும் உயிர் வாழ்கின்றேன்.

[கு-ரை] இன்பம் நுகர்தலை விரும்பாமல் வேறு ஒன்றனை விரும்பித் தமது மனவெழுச்சியாகிய ஊக்கமே துணையாகச் சென்றவர் அவற்றை இகழ்ந்து இங்கு வருதலை விரும்புவதால் யாம் இன்னும் உயிரோடு இருக்கிறோம்.

4. கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்
கோடுகொடு ஏறும் என்நெஞ்சு. 1264

[ப-ரை] பிரிந்தார் - பிரிந்து போன தலைவர், கூடிய காமம் - கலந்தின்புறும் காமத்துடனே, வரவு - நம்மிடம்

வர்] இருப்பதை, உள்ளி - நினைத்துக் கொண்டிருப்பதால், என் - என்னுடைய, நெஞ்சு - நெஞ்சமானது, கோடு கொடு - மேன்மேல் பனைத்து, ஏறும் - எழுகின்றது.

[க-ரை] நம்மைப் பிரிந்து போனவர் காமத்துடனே நம்மிடம் வருதல் நினைத்து எனது நெஞ்சம் வீங்கி மேன் மேலும் பனைத்து எழுகின்றது.

5. காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு. 1265

[ப-ரை] கண் - எனது கண்கள், ஆர - ஆவல் திரும்பும் வகையில், கொண்கனை - எனது தலைவனை, காண்க - நான் கண்டு மகிழ்வேனாக, கண்டபின் - அப்படிக் கண்ட பின்பு, என் - என்னுடைய, மென் - மெல்லிய, தோள் - தோள்களின், பசப்பு நீங்கும் - பசலை நிறம் நீங்கி விடும். [மன் - ஒழியிசை]

[க-ரை] கண்களின் ஆவல் தீரும் வகையில் எனது கொண்கனைக் காண்பேனாக. அங்ஙனம் கண்டபின் என் மெல்லிய தோளிலே உள்ள பசப்பு தானாகவே நீங்கும்.

6. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட. 1266

[ப-ரை] கொண்கன் - நாயகன், ஒருநாள் - ஒருநாள், வருக - வந்து சேருவானாக [வந்தாலும்] பைதல் - துன்பம் செய்கின்ற, நோய் - இக்காம நோய், எல்லாம் - எல்லாம், கெட - கெடும்படி [நீங்குமாறு] பருகுவன் - இன்பத்தினைப் பருகுவேன். [மன் - ஒழியிசை]

[க-ரை] இத்தனை நாட்களாக வாராத தலைவன் ஒருநாள் என்னிடம் வருவானாக; வந்தால் துன்பம் செய்கின்ற இந்த நோயெல்லாம் கெட அந்த அமிழ்தத்தினைப் பருகுவேன்.

7. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். 1267

[ப-ரை] கண் - கண்களை, அன்ன - போன்ற, கேளிர்வரின் - தலைவன் வருவாரானால், புலப்பேன் கொல் - அவரிடம் பிணங்கிக் கொள்ளுவேனோ? புல்லு வேன் கொல் - தழுவிக் கொள்ளுவேனோ? [அல்லது] கலப்பேன் கொல் - இவ்விரண்டினையும் செய்வேனோ.

[க-ரை] கண்போல் சிறந்த தலைவர் வருவாராயின் அவர் நீண்ட நாட்களாக வாராமையினைக் கருதிப் புலந்து கொள்ளுவேனோ? அல்லது பொறுக்க முடியாமையினை எண்ணி கலக்கக் கடவேனோ? அவ்விரண்டினையும் செய்யக் கடவேனோ? யாது நான் செய்யக் கடவேன்?

8. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 1268

[ப-ரை] வேந்தன் - வேந்தன், வினை கலந்து - மேற்கொண்ட வினை மேற்கொண்டு, வென்று ஈக - வெற்றியுறுவானாக, மனை - மனைவியிடம் சென்று, கலந்து கூடி, மாலை - மாலைப் பொழுதிற்கு, விருந்து அயர்கம் - விருந்துண்டு இருப்போமாக.

[க-ரை] வேந்தன் போர் புரிந்து வெல்வானாக; யாமும் மனைவியைச் சென்று கூடி, மாலைப் பொழுதில் விருந்துண்டு மகிழ்வோம்.

9. ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்
வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு. 1269

[ப-ரை] சேண் - தூரதேசத்திற்கு, சென்றார் சென்ற காதலர், வருநாள் - திரும்பி வரக் குறித்த நாளினை, வைத்து - மனதில் நினைத்துப் பார்த்து, ஏங்கு பவர்க்கு - வருந்துகின்ற தலைவியர்க்கு, ஒருநாள் - ஒரு நாளானது, எழுநாள் - பல நாட்கள், போல - போன்று, செல்லும் - நெடிதாகக் கழியும்.

[க-ரை] தூர தேயத்திற்குச் சென்றிருக்கும் காதலரை எண்ணி வருந்தியிருக்கும் மகளிர்க்கு ஒரு நாள் பல நாட்களாக நெடிதாகக் கழியும்.

10. பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்
என்னாம்
உள்ளம் உடைந்து உக்கக் கால். 1270

[ப-ரை] உள்ளம் - [காதலியானவள் பிரிவினைத் தாங்காமல் மனம்] உடைந்து - துன்பத்தால் உடைந்து, உக்கக்கால் - இறந்த பிறகு, பெறின் எல்லாம் - நம்மைப் பெற்றால்தான் என்ன, பெற்றக்கால் என்னாம் - அன்றிப் பெற்றதனால்தான் என்ன? உறின் என்னாம் - மெய்யுறக் கலந்தால்தான் என்ன? இவையொன்றாலும் பயனில்லை.

[க-ரை] காதலி நம் பிரிவினைப் பொறுக்க முடியாமல் இறந்த பிறகு நம்மைப் பெற்றால் என்ன? அதுவன்றி மேலும் மெய்யுறக் கலந்தால்தான் என்ன? இவையொன்றினாலும் பயனில்லை.

## 128. குறிப்பு அறிவுறுத்தல்

[தலைவன், தலைவி, தோழி இவர்கள் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தல்]

1. கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன்று உண்டு. 1271

[ப-ரை] கரப்பினும் - நீ மறைத்து வைத்தாயானாலும், ஒல்லா - அதற்கு உடன்படாதே, கையிகந்து - மறைத்தலைக் கடந்து, நின்-உன்னுடைய, உண்கண் - மையிட்டப்பெற்ற கண்கள், உரைக்கல் - எமக்குச் சொல்ல,

உறுவது - விரும்புவது, ஒன்றுஉண்டு - ஒரு செய்தி இருக்கின்றது.

[கு-ரை] நீ சொல்லாமல் மறைத்தாயானாலும் அதனைக் கடந்து உன்னுடைய மையுண்ட கண்கள் எமக்குச் சொல்லும் செய்தியொன்று இருக்கின்றது. இனி அதனை நீயே தெளிவாகச் சொல்லுவாயாக.

2. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. 1272

[ப-ரை] கண் - எனது கண்கள், நிறைந்த - நிறையப் பெற்ற, காரிகை - அழகினையும், காம்பு ஏர் - மூங்கிலை ஒத்த, தோள் - தோள்களையும் உடைய, பேதைக்கு - இப் பெண்ணிற்கு, பெண் நிறைந்த - பெண்களுக்கு இயல்பாக இருக்கும், நீர்மை - மடமைக் குணம், பெரிது - மிகுதியாகவே உள்ளது.

[கு-ரை] என்னுடைய கண்கள் நிறைந்த அழகினையும் மூங்கிலையொத்த தோளினையும் உடைய பேதைக்கு பெண்களுக்கு இயல்பாக இருக்கும் மடமைக்குணம் அளவு கடந்து இருக்கின்றது.

3. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு. 1273

[ப-ரை] மணியில் - கோக்கப்பட்ட பளிங்கு மணிகளுக்குள்ளே, திகழ்தரு - விளங்கிக் காணப்படுகின்ற, நூல் போல் - நூலினைப் போல, மடந்தை - இப்பெண்ணினது, அணியில் திகழ்வது - அழகினுக்குள்ளிருந்து புறத்தே புலனாகின்ற, ஒன்று உண்டு - ஒரு குறிப்பு இருக்கின்றது.

[கு-ரை] கோக்கப்பட்ட பளிங்கு மணிக்குள் கிடந்து வெளியில் புலப்படுகின்ற நூல் போல் இப்பெண்ணின் அழகினுக்குள்ளிருந்து வெளியில் புலப்படுவதொரு குறிப்பு இருக்கின்றது.

4. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு. 1274

[ப-ரை] முகை - மலராத அரும்பினது, மொக்குள் - முகிழ்ப்பினுள், உள்ளது - புறத்தில் தெரியாமல் இருக்கின்ற, நாற்றம் போல் - நறுமணத்தினைப்போல, பேதை - இப்பெண், நகை - நகைக்கக் கருதும், மொக்குள் - முகிழ்ப்பினுள், உள்ளது - வெளியில் தோன்றாமல் இருக்கின்ற, ஒன்று உண்டு - ஒரு குறிப்பு இருக்கின்றது.

[க-ரை] மலராத மொட்டுக்குள்ளிருந்து வெளியே புலப்படாத மணத்தினைப்போல இப்பெண் என்னுடன் நகைக்கக் கருதும் முகிழ்ப்பினுள் ஒரு குறிப்பு உண்டு.

5. செறிதொடி செய்துஇறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்தொன்று உடைத்து. 1275

[ப-ரை] செறிதொடி - நெருங்கிய வளையல்களையுடைய இப்பெண், செய்து - மனதில் ஒன்றனை உட்கொண்டு, இறந்த - மறைத்து வைத்த, கள்ளம் - குறிப்பு, உறு - என்னுடைய மிகுதியான, துயர் - துயரத்தினை, தீர்க்கும் - நீக்குகின்ற, மருந்து - மருந்தாவது, ஒன்று - ஒன்றினை, உடைத்து - உடையதாகின்றது.

[க-ரை] நெருங்கிய வளையல்களையுடைய இப்பெண்ணின் மனதிற்கொண்டு எனக்கு மறைத்து வைத்திருக்கின்ற குறிப்பு, எனது மிகுதியான துன்பத்தினைத் தீர்க்கின்ற மருந்தொன்றினையுடையது.

6. பெரிதுஆற்றிப் பெட்பக் கலத்தல் அரிதுஆற்றி
அன்பின்மை சூழ்வது உடைத்து. 1276

[ப-ரை] பெரிது - [பிரிவுத் துன்பத்தினை]] மிகவும், ஆற்றி - பொறுத்திருந்து, பெட்ப - நாம் மகிழுமாறு, கலத்தல் - கலக்கின்ற புணர்ச்சி, அரிதுஆற்றி - மேலும் அத்துன்பத்தினைப் பொறுத்திருந்து, அன்பு - தலைவரது அன்பு,

இன்மை-இல்லாத தலைமையினை, சூழ்வது - நினைக்கும் தன்மையினை, உடைத்து - உடையது.

[க-ரை] நம் பிரிவினால் உண்டான துன்பத்தினைப் பொறுத்திருந்து பிறகு மகிழும் வண்ணம் கணவர் திரும்பி வந்து கலக்கின்ற கலவி மேலும் அத்துன்பத்தினைப் பொறுத்திருந்து அவரது அன்பில்லாத் தன்மையினை நினைக்கும் தன்மையுடையது.

7. தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. 1277

[ப-ரை] தண்ணம் - குளிர்ந்த, துறைவன்-நீர்த்துறையினையுடைய தலைவன், தணந்தமை - [உடம்பால் கூடியிருந்து] உள்ளத்தில் பிரிந்ததை, நம்மினும் - நம்மைவிட, முன்னம் - முன்னதாகவே, வளை - நம் வளையல்கள், உணர்ந்த - உணர்ந்துகொண்டன.

[க-ரை] குளிர்ந்த நீர்த்துறையினையுடைய தலைவன் மெய்யாற் கூடியிருந்து மனத்தினால் நம்மைப்] பிரிந்தமையினை நம்மைக் காட்டிலும் நம்முடைய வளையல்கள் முன்பாகவே அறிந்து கொண்டன.

8. நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. 1278

[ப-ரை] எம்-எம்முடைய, காதலர்-காதலர், நெருநற்று-நேற்றுதான், சென்றார் - பிரிந்து சென்றார், யாமும் - நாமும், மேனி - உடம்பு, பசந்து - பசப்பு நிறம் அடைந்து, எழுநாளேம் - பல நாட்கள் உடையேம் ஆனோம்.

[க-ரை] எம் காதலர் நேற்றுதான் பிரிந்து போனார். அப்பிரிவினால் யாமும் மேனி பசந்து பல நாட்கள் உடையேம் ஆனோம்.

9. தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதுஆண்டு அவன்செய் தது. 1279

[ப-ரை] தொடி - தோள் வளையல்களை, நோக்கி-நோக்கி, மென் - மெல்லிய, தோளும் - தோள்களையும், நோக்கி-நோக்கி, அடி-பாதங்களையும், நோக்கி - நோக்கி, ஆண்டு - அந்த இடத்தில், அவள் - அப்பெண், செய்தது-செய்தது, அஃது - [உடன் போக்கு] குறிப்பாக இருந்தது.

[க-ரை] தன் தோள் வளையல்களை நோக்கி மெல்லிய தோள்களையும் நோக்கி தனது அடிகளையும் நோக்கி அவ்வாறு அப்போது அவள் செய்தாள். அவள் செய்தது அவ்வளவேயாகும்.

10. பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப
கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு. 1280

[ப-ரை] காமநோய் - தமது காம நோயினை, கண்ணினால் - கண்களினால், சொல்லி-கூறி, இரவு - உடன் போவதற்கு இரந்து நிற்கும் தன்மை, பெண்ணினால் - இயல்பாகிய பெண்மைத் தன்மையுடன், பெண்மை-மேலும் ஒரு பெண் தன்மையினை,உடைத்து - உடையது, என்ப-என்று அறிந்தோர் சொல்லுவர்.

[க-ரை] தமது காம நோயினைக் கண்ணினாற் சொல்லிக் காதலுடன் இரந்து நிற்கும் தன்மை, இயல்பாகவே பெண் தன்மையுடைய இப்பெண்ணுக்கு மேலும் ஒரு பெண்மையுடையது என்பர்.

# 129. புணர்ச்சி விதும்பல்

[இருவரும் புணர்ச்சிக் கண்ணே விரைதல்]

1. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு. 1281

[ப-ரை] உள்ள - நினைத்த மாத்திரத்தில், களித்தலும் - களிப்பெய்தலும், காண - கண்டபொழுதே, மகிழ்தலும் - மகிழ்ச்சியடைதலும், கள்ளுக்கு இல் - கள் உண்பவர்களுக்கு இல்லை, காமத்திற்கு உண்டு - காம இன்பம் உடையவர்களுக்கு உண்டு.

[க-ரை] நினைத்த பொழுதே களிப்படைதலும் கண்டவுடனே மகிழ்ச்சியுறுதலும் கள்ளுண்பார்க்கு இல்லை; காமம் உடையார்க்கு உண்டு.

2. தினைத்துணையும் ஊடாமை வேண்டும்
பனைத்துணையும்
காமம் நிறைய வரின். 1282

[ப-ரை] காமம் - மகளிர்க்குக் காமமானது, பனைத் துணையும் - பனையளவிலும், நிறைய - மிகுதியாக, வரின் - வந்துவிட்டால், தினை - தினையின், துணை - அளவும், ஊடாமை - பிணங்கிக் கொள்ளாமை, வேண்டும் - வேண்டப்படுவதாகும்.

[க-ரை] மகளிர்க்குக் காமம் பனையளவினை விட மிகுதியாக உண்டாகி விடுமானால் அவரால் தம் காதலரோடு தினையளவும் ஊடுதல் செய்யாமை வேண்டப் படுவதாகும்.

3. பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். 1283

[ப-ரை] பேணாது - நம்மை விரும்பாமல் விலக்கி, பெட்பவே - தாம் விரும்பியவற்றையே, செய்யினும் -

தலைவர் செய்வாரானாலும், கொண்கனை - தலைவனை, கண் - எனது கண்கள், காணாது அமையல - காணாமல் இருக்கமாட்டா.

[கு-ரை] நம்மை விரும்பாது அவமதித்துத் தாம் விரும்பியவற்றையே செய்தாலும் தலைவனை எனது கண்கள் பார்க்காமல் இருக்க மாட்டா.

4. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு. 1284

[ப-ரை] தோழி - தோழியே! ஊடற்கண் - காதலரிடம் பிணங்கிக் கொள்ள, சென்றேன் - போனேன். என் - எனது, நெஞ்சு - நெஞ்சம் (காதலரைக் கண்டதும், அது - அந்த ஊடலினை, மறந்து - மறந்துவிட்டு, கூடற்கண் - அவருடன் கூடுவதற்கு, சென்றது - சென்றுவிட்டது. (மன் - ஒழியிசை)

[கு-ரை] தோழி! காதலரிடம் பிணங்கிக் கொள்வதற்காகச் சென்றேன். காதலரைக் கண்டதும் எனது நெஞ்சம் ஊடலினை மறந்துவிட்டு அவருடன் கூடுவதற்குச் சென்றுவிட்டது.

5. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. 1285

[ப-ரை] எழுதுங்கால் - கண்களுக்கு மை எழுதுகிற போது, கோல்-அஞ்சனக்கோலின் தன்மையினை, காணாக் கண்ணேபோல் - காணமுடியாத கண்களைப் போல, கொண்கன் - கணவருடைய, பழி - குற்றங்களை, கண்ட விடத்து - அவரைப் பார்த்தபோது, காணேன் - காண முடியாதவனாகின்றேன்.

[கு-ரை] கண்களுக்கு மையெழுதும்போது அஞ்சனக் கோலின் இயல்பினைக் காணமுடியாத கண்ணே போல,

கணவனை நேரில் கண்டபோது அவரது தவறுகளைக் காணமாட்டேன்.

6. காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. 1286

[ப-ரை] காணுங்கால் - தலைவரை நேரில் பார்க்கும் போது, தவறாய - அவருடைய தவறுகளை, காணேன் - காண முடியாதவளாகின்றேன், காணாக்கால் — அவரைப் பார்க்காத நேரத்தில், தவறு (அவர் மீது) தவறு, அல்லவை - அல்லாதவைகளை, காணேன் - காண முடியாதவளாகின்றேன்.

[க-ரை] காதலரைக் காணுகின்றபோது அவரது தவறுகளைக் காணமுடியாதவளாகின்றேன். அவரைக் காணாதபோது தவறுகள் அல்லாமல் பிறவற்றைக் காண்கின்றிலேன்.

7. உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்துஎன் புலந்து. 1287

[ப-ரை] உய்த்தல் - இழுத்துக் கொண்டு போவதை, அறிந்து - அறிந்திருந்தும், புனல் - நீரில், பாய்பவரேபோல் - பாய்பவர்களைப் போல, பொய்த்தல் - பிணக்குப் பயனளிக்காது என்பது, அறிந்து - தெரிந்திருந்தும், 'புலந்து என் - புலந்து (ஊடல் செய்து) பெறுவது என்ன?

[க-ரை] தம்மை இழுத்துக் கொண்டு போவதை அறிந்தும் தண்ணீரில் பாய்பவர் போலப் பிணங்குவதில் பயனில்லை என்பதை அறிந்திருந்தும் கணவரோடு பிணங்கிப் பெறுவது என்ன?

8. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்அற்றே கள்வநின் மார்பு. 1288

[ப-ரை] கள்வ - வஞ்சகா! நின் — உன்னுடைய மார்பு - மார்பு, களித்தார்க்கு - உண்டு களிப்புற்றவர்,

களுக்கு, இனித்தக்க - இழிவினை உண்டாக்கக் கூடிய, இன்னா - துன்பத்தினை, செயினும் - செய்தாலும், [அவராலே மேன் மேலும் விரும்பப்படுகின்ற] கள் - கள்ளினை, அற்றே - போன்றதாகும்.

[க-ரை] வஞ்சகா! தன்னை உண்டு களித்தார்க்கு அவமானப்படத்தக்க துன்பத்தினைச் செய்தாலும், அவரால் மேன் மேலும் விரும்பப்படுகின்ற கள்ளினைப் போல எங்கட்கு நினது மார்பு உள்ளது.

9. மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார். 1289

[ப-ரை] காமம் - காம இன்பமானது, மலரினும் மெல்லிது - மலரையும் விட மென்மைத் தன்மையான தாகும். அதன் - அதனுடைய, செவ்வி - நுகரும் இயல்பினை, தலைப்படுவார் - அறிந்து பெறுவோர், சிலர் - உலகத்தில் சிலரேயாவார்.

[க-ரை] காம இன்பம் மலரை விட மென்மையதாக இருக்கும். அவ்வாறு அந்த மென்மைத் தன்மையின் பக்குவத்தினை அறிந்து அதனைப் பெறுபவர் உலகத்தில் சிலரேயாவர்.

10. கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப்பு உற்று. 1290

[ப-ரை] கண்ணில் - கண்ணினால் மட்டும், துனித்தே - பிணங்கியவளாகி, புல்லுதல் - புணர்ந்து தழுவுதலிலே, என்னினும் - என்னைவிட, தான் - தான், [அவள்] விதுப்புற்று - விரைந்து விரும்பி, கலங்கினாள் - ஊடலையும் மறந்து அப்போதே கலந்து விட்டாள்.

[க-ரை] காதலி முன்னொரு முறை கண்ணினால் மட்டும் விடுதல் செய்து தழுவுதலல் என்னை விட விருப்பங் கொண்டு அந்த ஊடலினையும் மறந்து அப்போதே கூடி விட்டாள்.

# 130. நெஞ்சொடு புலத்தல்

[புணர்ச்சி விரும்புகின்ற நெஞ்சுடனே இருவரும் புலத்தல் என்பதாகும்]

1. அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது. 1291

[ப-உரை] நெஞ்சே - நெஞ்சமே! அவர் - அவருடைய [கணவருடைய], நெஞ்சு - நெஞ்சம், அவர்க்கு - அவருக்காக, ஆதல் - இருப்பதை, கண்டும் - கண்டும், நீ - நீ, எமக்கு - எமக்காக, ஆகாதது - இருக்காமல், [அவரை நினைப்பது] எவன் - என்ன காரணம்?

[க-உரை] நெஞ்சமே! அவருடைய நெஞ்சு நம்மை நினைக்காமல் அவருக்காகவே இருப்பதைக் கண்டு நீ எமக்காக இருக்காமல் அவரை நினைத்தற்குக் காரணம் யாது?

2. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅர் எனச் சேறிஎன் நெஞ்சு. 1292

[ப-உரை] என் - என்னுடைய, நெஞ்சு - நெஞ்சமே! உறாஅதவர் - நம்மிடம் அன்பில்லாதவரென்று, கண்ட கண்ணும் - அறிந்திருந்தும், செறாஅர் - சினந்து கொள்ள மாட்டார், என - என்று தெரிந்து, அவரை - அவரிடம், சேறி - செல்லுகின்றாய், [உனது அறியாமைதான் என்னே!]

[க-உரை] என் நெஞ்சமே! நம்மிடம் அன்புடையவர் ஆகாதவரை உள்ளவாறு அறிந்திருந்தும் நாம் சென்றால் அவர் கோபிக்க மாட்டார் என்று கருதி அவரிடம் செல்லு கின்றாய்! என்னே அறியாமை?

3. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல். 1293

[ப-ரை] நெஞ்சே - நெஞ்சமே! நீ - நீ, பெட்டாங்கு - விரும்பியவாறே, அவர் பின் - அவர் பின்னே, செலல் - போவது ஏனெனில், கெட்டார்க்கு - கெட்டுப் போனவர்களுக்கு, நட்டார் - நட்புற்றவர்கள், இல் - உலகில் இல்லை, என்பதோ - என்ற நினைப்போ?

[க-ரை] நெஞ்சமே! நீ விரும்பியவாறே அவரிடம் செல்லுவதற்குக் காரணம் கெட்டவர்களுக்கு நட்புற்றவர்கள் உலகத்தில் இல்லை என்கின்ற நினைப்போ?

4. இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. 1294

[ப-ரை] நெஞ்சே - நெஞ்சமே, துனி - காதலருடன் பிணங்குதல், செய்து - செய்து, மற்று - பிறகு, துவ்வாய் - இன்பம் நுகரக் கருதாய், இனி - இனிமேல், அன்ன - அப்படிப்பட்ட, நின்னொடு - உன்னுடனே, சூழ்வார் யார் - சிந்தனைக்கு எண்ணுபவர் யார்? [காண் - உரையசை]

[க-ரை] நெஞ்சமே! நீ அவரைக் கண்ட போது இன்பம் நுகரக் கருதவல்லது. அவரைக் கண்டதும் புலவியை உண்டாக்கிப் பின் நுகரக் கருதாய்; அப்படிப் பட்ட உன்னுடன் இனி எண்ணுவார் யார்? யான் அது செய்யேன்?

5. பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு. 1295

[ப-ரை] பெறாஅமை - காதலரைப் பெறாதிருப்பதை நினைத்து, அஞ்சும் - அஞ்சி இருக்கும், பெறின் - காதலரைப் பெற்ற போதும், பிரிவு - அவர் பிரிவாரோ என்று நினைத்து, அஞ்சும் - அஞ்சி நிற்கும், என் - எனது, நெஞ்சு - நெஞ்சமானது, அறாது - எப்போதும் நீங்காத, இடும்பைத்து - துன்பத்தினை உடையதாக இருக்கின்றது.

[க-ரை] காதலரைப் பெறாதபோது அவ்வாறு பெறாதிருப்பதற்கு அஞ்சுகின்றது. அவரைப் பெற்றால் பிரிவாரோ என்பதை நினைத்து அஞ்சுகின்றது. ஆதலால் எனது நெஞ்சம் எப்போதும் நீங்காத துன்பத்தினை உடையதாக இருக்கின்றது.

6. தனியே யிருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு. 1296

[ப-ரை] என் - எனது, நெஞ்சு - நெஞ்சமானது, இருந்தது - இங்கே இருந்து கொண்டிருக்கின்றது, தனியே - காதலரைப் பிரிந்து தனியாக, இருந்து - இருந்து கொண்டிருக்கும் நான், நினைத்தக்கால் - அவர் கொடுமைகளைத் தன்னுடன் நினைக்கும் போது, என்னை - என்னை, தினிய - தின்னுவது போன்ற துன்பத்தினைச் செய்கின்றது!

[க-ரை] எனது மனமானது இங்கே இருந்து கொண்டு காதலரைப் பிரிந்து அவரது கொடுமைகளைத் தன்னுடன் சேர்ந்து நினைக்கும்போது என்னைத் தின்பது போன்ற துன்பத்தைச் செய்வதாகிறது.

7. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு. 1297

[ப-ரை] அவர் - அவர் [காதலரை] மறக்கல்லா - மறக்க மாட்டாத, மாணா - மாட்சிமையில்லாத, என் - என்னுடைய, மட - மடமையான, நெஞ்சிற்பட்டு - நெஞ்சுடன் கூடி, நாணும் மறந்தேன் - நாணத்தினையும் மறந்து விட்டேன்.

[க-ரை] தன்னை மறந்த காதலரைத் தான் மறக்க முடியாத எனது மாட்சிமையில்லாத மட நெஞ்சுடனே கூடி, என் உயிரினும் சிறந்த நாணத்தினையும் மறந்து விட்டேன்.

8. எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 1298

[ப-ரை] உயிர் - உயிரின் மீது காதல் கொண்ட, நெஞ்சு - எனது நெஞ்சமானது, எள்ளின் - காதலரை

நாமும் ஏளனமாக இகழ்ந்தோமானால், இளிவாம் - பிறகு நமக்கே இழிவானதாகும், என்று - என்பதாக, எண்ணி அவர்திறம் - அவருடைய பெருமையினையே, உள்ளும் - மனதில் நினைத்துக் கொண்டிருக்கின்றது.

[க-ரை] உயிர் மீது காதலையுடைய எனது நெஞ்சு நம்மை ஏளனம் செய்து சென்றார் என்று நான், ஏளனம் செய்வோமாயின், பின் நமக்கே இழிவாகும் என்று எண்ணி அவர் திறத்தினையே நினைத்துக் கொண்டிருக்கின்றது.

9. துன்பத்திற்கு யாரே துணையாவார் தாம்உடைய
நெஞ்சம் துணைஅல் வழி. 1299

[ப-ரை] துன்பத்திற்கு - துன்பம் வந்த போது, தாம் உடைய - தமக்கு உரிமையான, நெஞ்சம் - நெஞ்சமானது, துணை - துணையாக, அல்வழி - இல்லாதிருந்தால், துணையாவார் - துணையாக இருப்பவர், யாரோ - வேறு யார் உள்ளார்?

[க-ரை] ஒருவருக்குத் துன்பம் வந்தபோது அதனை நீக்குவதற்கு உரிமையாக நமது நெஞ்சமே துணையாகாத போது வேறு துணையாவார் ஒருவரும் இல்லை.

10. தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாம்உடைய
நெஞ்சம் தமர்அல் வழி. 1300

[ப-ரை] தாம் உடைய - தமக்கு உரிமையாகக் கொண்டுள்ள, நெஞ்சம் - நெஞ்சமானது, தமர் - தம்மவர், அல்லர் - அல்லாதவராக இருக்கும்போது, ஏதிலார் தமர் அல்லர் - சம்பந்தம் இல்லாதவர்களைப் பற்றித் தஞ்சம் சொல்ல வேண்டுமோ?

[க-ரை] நமது நெஞ்சம் தம்மவராகாதிருந்தால், அயலார் தம்மவராகாதிருத்தலைச் சொல்ல வேண்டுமோ?

# 131. புலவி

[ஒருவரோடு ஒருவர் பிணங்கிக் கொள்ளுதல்]

1. புல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது. 1301

[ப-ரை] அவர் - காதலர், உறும் - அடைகின்ற, அல்லல் - துன்பமான, நோய் - நோயினை, சிறிது - சிறிது நேரம், காண்கம் - நாம் பார்ப்போமாக, [ஆதலால்] புல்லாது - நீ விரைந்து சென்று தழுவாமல், இராஅ - இப்படியே இருக்கும் செயலில் இருந்து கொண்டு, புலத்தை - புலப்பாயாக.

[க-ரை] புலந்து கொண்டிருந்தால் காதலர் அடையும் வேதனையைச் சிறிது காண முடியும். ஆதலால் நீ விரைந்து சென்று அவரைத் தழுவாமல் புலந்து (பிணங்கிக்) கொண்டிருப்பாயாக.

2. உப்பு அமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 1302

[ப-ரை] புலவி - புலவி என்னும் சிறு பிணக்கு, உப்பு- அளவுடன் போடப்படும் உப்பினைப் போல, அமைந்தற்று— கலவி இன்பத்திற்கு முன்பு இருக்க வேண்டியதாகும், நீளவிடல் - இனி அப்புலவியினை அதிகமாக்கிவிடல், அது - அந்த உப்பின் அளவு, மிக்கற்று - அளவில் சிறிது மிகுந்து விட்டது போன்றதாகும் [ஆல் - அசை நிலை]

[க-ரை] கலவியின்பத்திற்கு புலவியானது உண்ணும் பண்டங்களுக்குச் சுவை தரும் உப்பின் அளவு போன்றதாகும். இனி அதனை அளவின்றிச் சிறிது மிக விடுதல் உப்பு அளவின் மிகுந்துவிட்டது போன்றதாகும்.

3. அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 1303

[ப-ரை] தம்மை-காதலரைப் பெறாமல், புலந்தாரை - பிணங்கிக் கொண்டிருக்கும் மகளிரை, புல்லாவிடல் -

புலவி நீக்கிப் புணராது விடுதல், அலந்தாரை - முன்னரே துன்பமடைந்து, நொந்தவரை, [மேலும்] அல்லல் - அதிகத் துன்பமான, நோய் - நோயினை, செய்தற்று - செய்தது போன்றதாகும் [ஆல் - அசைநிலை]

[க-ரை] தம்மைப் பெறாமல் புலந்து கொண்டிருக்கும் மகளிரை அப்புலவி நீக்கிக் கலவாதிருத்தல் முன்னமேயே துன்புற்று அலந்தாரை மேலும் துன்பத்திற்கு உள்ளாக்கினது போன்றதாகும்.

4. ஊடியவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று. 1304

[ப-ரை] ஊடியவரை-பிணங்கிக் கொண்ட மகளிரை, உணராமை -பிணக்குத் தீர்த்து புணராமல் விடுதல், வாடிய வள்ளி - முன்பே நீர் இல்லாமல் வாடியிருக்கும் கொடியினை, முதல் - அடியில், அரிந்தற்று - அறுத்தது போன்றதாகும்.

[க-ரை] தம்முடன் ஊடிய மகளிரை ஊடல் நீக்கிக் கூடாதிருத்தல் முன்னமேயே நீரின்றி வாடிய கொடியை அடியிலே அறுத்தது போன்றதாகும்.

5. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூவன்ன கண்ணார் அகத்து. 1305

[ப-ரை] நலத்தகை - நற்குணங்களினாலே பொருத்தமான, நல்லவர்க்கு - நல்ல தலைவர்க்கு, ஏஎர் - அழகு என்பது, [யாதென்றால்] பூவன்ன - பூப்போன்ற, கண்ணார் - கண்களையுடைய மகளிரின், அகத்து - நெஞ்சில் நிகழுகின்ற, புலத்தகை - பிணக்கின் மிகுதியல்லவா?

[க-ரை] நற்குணங்களால் தகுதியுடையவரான தலைவர்க்கு அழகாவது என்னவென்றால், பூப்போன்ற கண்ணினையுடைய மகளிரின் நெஞ்சில் நிகழும் புலவி மிகுதியேயாகும்.

6. துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. 1306

[ப-ரை] துனியும் - முதிர்ந்த பிணக்கும், புலவியும் - சிறிதான பிணக்கும், இல்லாயின் - இல்லாவிட்டால், காமம் - காம இன்பமானது, கனியும் - முதிர்ந்து போன கனியும், கருக்காயும் - இளமையான காயும், அற்று - போன்றதாகும்.

[க-ரை] முதிர்ந்த பிணக்காகிய துனியும் இளைய பிணக்காகிய புலவியும் இல்லையானால், காமம் அதிகமாகப் பழுத்துவிட்ட கனியும் இளங்காயும் போன்றதாகும்.

7. ஊடலின் உண்டுஆங்குஓர் துன்பம் புணர்வது
நீடுவது அன்றுகொல் என்று. 1307

[ப-ரை] புணர்வது - புணர்ச்சியானது, நீடுவது [கொல்] - கால அளவு நீட்டிக்குமோ, அன்று கொல் - அல்லாமல் நீட்டியாமல் போமோ, என்று - என்ற நினைவு உண்டாவதால், ஊடலின் - ஊடல் செய்வதிலும், ஓர் - ஒரு, துன்பம் - துன்பம், உண்டு - நிகழ்கிறது.

[க-ரை] புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று எண்ணுவதால் இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலிலும் உண்டாவதொரு துன்பம் இருக்கின்றது.

8. நோதல் எவன்மற்று நொந்தார்என்று அஃதுஅறியும்
காதலர் இல்லா வழி.

[ப-ரை] நொந்து
என்று - என்று கண்டு, அஃது - அந்த நோயினை, அறியும் - அறிந்துணரும், காதல் - காதல் தலைவரை, இல்லாவழி - நாம்பெற்றிராதபோது, நோதல் - நொந்து கொள்ளுவதால், மற்றுஎவன் - என்ன பயன் உண்டாகும்?

[க-ரை] நம் பொருட்டு வேதனையுற்றார் என்று அந்த வேதனையினை அறியும் அன்பில்லாத காதலரைப் பெறாதபோது, ஒருவர் நொந்து கொள்ளுவதால் பயன் என்ன?

9. நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. 1309

[ப-ரை] நீரும் - நீரும், நிழலது - நிழலில் இருக்கும் போது, இனிது - இனிமையானதாக இருக்கும், [அது போன்று] புலவியும் - புலவியென்னும் பிணக்கும், வீழுநர் கண்ணே - அன்பு நிறைந்து விரும்பும் காதலரிடத்தே, இனிது - இனிமையானதாகும்.

[க-ரை] உயிருக்கு இன்றியமையாத நீரும் நிழலினிடத்தே இனிதாகும். வெயிலில் இனிதாகாது. அது போலப் புணர்ச்சிக்கு இன்றியமையாத புலவியும் அன்புடையவரிடத்தில்தான் இனிதாகும்.

10. ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா. 1310

[ப-ரை] ஊடல் - பிணங்குதல் செய்து, உணங்க- நான் வருந்தி மெலிந்து இருக்கவும், விடுவாரோடு - அதனை நீக்காமல் விட்டிருக்கும் காதலருடன், என் - என்னுடைய, நெஞ்சம் - நெஞ்சம், கூடுவேம் - கூடுவோம், என்பது - என்று நினைப்பதற்குக் காரணம், அவா - தான் கொண்டுள்ள ஆசையேயாகும்.

[க-ரை] தான் ஊடலினால் மெலிந்து நிற்கவும் விட்டிருக்க வல்லவரான காதலருடன் கூடக்கடவேம் என்று எனது நெஞ்சம் முயலுதற்குக் காரணம் தனது ஆசையே யாகும்.

## 132. புலவி நுணுக்கம்

### [பஞ்சணையில் வீற்றிருந்து பேசும் நுணுக்கம்]

1. பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. 1311

[ப-ரை] பரத்த - பரத்தையரிடம் செல்லுபவனே, பெண்-பெண்மை, இயலார்-தன்மையுடைய, எல்லோரும்- எல்லோரும், கண்ணின் - தமது கண்களினால், பொது -

பொதுவாக உண்பர் - உன்னைச் சுவைப்பார்கள் [ஆகையினால்] நின் - உன்னுடைய, மார்பு - மார்பினை, நண்ணேன் - நான் விரும்பிப் பொருந்தமாட்டேன்.

[க-ரை] பரத்தமையுடையவனே! பெண் தன்மை யுடையார் அனைவரும் உன்னைக் கண்ணால் பொதுவாக உண்பர். ஆதலால் உன்னுடையமார்பினைப் பொருந்தேன்.

2. ஊடி இருந்தோமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ்க என்பாக்கு அறிந்து. 1312

[ப-ரை] ஊடி - காதலரோடு புலந்து, இருந்தோமா - பேசாதிருந்தோம், [அப்போது அவர்] யாம் தம்மை - யாம் காதலரை, நீடுவாழ்க - பல்லாண்டு வாழ்க, என்பாக்கு அறிந்து - என்று சொல்லுவோம் என்பதாக கருதி, தும்மினார் - தும்மினார்.

[க-ரை] யாம் காதலரோடு ஊடுதல் செய்து உரை யாடிக்கொண்டிருந்தபோது அது நீக்கித் தம்மை நீடு வாழ்க வென்று கூறுவோம் எனக் கருதி காதலர் தும்மினார்.

3. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. 1313

[ப-ரை] கோட்டு - வளைவான, பூ - பூமாலையினை - சூடினும் - சூடியிருந்தேனானாலும், ஒருத்தியை - வேறு காதலிக்கு, காட்டிய - காட்டுவதற்கு விரும்பியே, சூடினீர் - சூடிக்கொண்டீர், என்று - என்று சொல்லி, காயும் - தலைவி கோபித்துக் கொள்ளுவாள்.

[க-ரை] வளைவாகிய பூமாலையைச் சூடிக் கொண் டிருந்தேனாயினும் உம்மால் காதலிக்கப்பட்டாள் ஒருத்திக்குக் காட்டவேண்டியே சூடினீர் என்று தலைவி கோபித்துக் கொள்ளுவாள்.

4. யாரினும் காதலம் என்றோனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. 1314

[ப-ரை] யாரினும் - காதலர்களாக இருப்பவர்கள் எல்லோருடைய காதலையும் விட, காதலம் - யாம் சிறந்த

காதலுடையவர்களாவோம், என்றேனா - என்று யான் கூறினேன், யாரினும் யாரினும் - உம்மால் காதலிக்கப்படும் மகளிர் பலருள்ளும் [உன்னிடம் மிக்க காதலுடையேன்] என்று - என்று கூறியதாகக் கருதி, ஊடினாள் - ஊடிக் கொண்டாள்.

[க-ரை] வளைவாகிய பூமாலையைச் சூடிக் கொண்டிருந்தேனாயினும் உம்மால் காதலிக்கப்பட்டாள் ஒருத்திக்குக் காட்டவேண்டியே சூடினீர் என்று தலைவி கோபித்துக் கொள்ளுவாள்.

5. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
   கண்நிறை நீர்கொண் டனள். 1315

[ப-ரை] இம்மை - இம்மையாகிய, பிறப்பில் - இப் பிறப்பில், பிரியலம் - நாம் பிரியோம், என்றேனா - என்று சொன்னேன், [அப்படியானால் மறுபிறப்பில் பிரிந்து விடுவீர்களோ என்று கருதி] கண் - கண்களில், நிறை - நிறைந்த, நீர் - நீரினை, கொண்டாள் - கொண்ட வளானாள்.

[க-ரை] காதல் மிகுதியால் இப்பிறப்பில் பிரியேன் என்று கூறினேன். அதனால் மறுபிறப்பில் பிரிவேன் என்று குறித்ததாகக் கருதி, தன்னுடைய கண்களில் நிறைந்த நீரினைக் கொண்டாள்.

6. உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றுஎன்னைப்
   புல்லாள் புலத்தக் கனள். 1316

[ப-ரை] உள்ளினேன் - உன்னையே நினைத்தேன், என்றேன் - என்று கூறினேன், மற்று என் மறந்தீர் - [மறந்தால் தானே நினைக்க முடியும்] ஏன் மறந்திருந்தீர், என்று - என்று கூறி, என்னைப் புல்லாள் - என்னைத் தழுவாதவளாகி, புலத்தக்கனள் - பிணங்கிக் கொண்டாள்.

[க-ரை] பிரிந்திருந்தபோது உன்னையே இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருந்தேன் என்னும் கருத்தால்

'உள்ளினேன்' என்று கூறினேன். அதற்கு, 'மறந்திருந்து தானே நினைத்தீர்' என்று கூறித் தழுவுவதற்கு இருந்தவள் பிணங்கிக் கொண்டாள்.

7. வழுத்தினாள் தும்மினே னாக அழித்துஅழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று. 1317

[ப-ரை] தும்மினேனாக - எனக்குத் தும்மல் வந்த போது, வழுத்தினாள் - எப்போதும் போல வாழ்த்தினாள், அழித்து - [உடனே வாழ்த்தியதை] நீக்கி, யார் - எந்தக் காதலி, உள்ளி - நினைத்ததால், தும்மினீர் - தும்மினீர், என்று - என்று கூறி, அழுதாள் - பிணங்கிக் கொண்டு அழுதாள்.

[கு-ரை] கூடி இருந்தவள் நான் தும்மினபோது இயல்பாக வாழ்த்தினாள். வாழ்த்தியவுடனே 'உம்மை நினைத்து வருந்துகின்ற பெண்களுள் யாவர் நினைத்தலால் தும்மினீர்' என்று புலந்து அழுதாள்.

8. தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. 1318

[ப-ரை] தும்மு - எனக்குத் தும்மல் வந்தபோது, செறுப்ப - யான் அடக்க, நுமர் - உம்மைச் சேர்ந்த பிற பெண்கள், உள்ளல் - உங்களை நினைப்பதை, எம்மை - எமக்குத் தெரியாதிருக்க வேண்டுமென்று, மறைத்திரோ என்று - மறைத்து விட்டீரோ என்று கூறி, அழுதாள் - புலந்து அழுதாள்.

[கு-ரை] எனக்குத் தும்மல் வந்தபோது அதனை யான் அடக்கினேன். அவள், 'உன்னுடைய காதலியர் உம்மை நினைப்பதை யான் அறியாதபடி மறைக்கின்றீரோ' என்று சொல்லிப் புலர்ந்து அழுதாள்.

9. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. 1319

[ப-ரை] தன்னை - புலந்து கொண்டிருக்கும் காதலியை, உணர்த்தினும் - பணிந்து நான் புலத்தலைத்-

தீர்க்கும்போதும், பிறர்க்கு - மற்ற பெண்களுக்கும், நீர் - நீவிர், இந்நீரர் - இவ்வாறு பணியும் தன்மை, ஆகுதிர் - உடையவர் ஆவீரோ, என்று - என்று சொல்லி, காயும் - சினங்கொள்ளுவாள்.

[க-ரை] இவ்வாறு ஊடுதல் செய்கின்றாளே என்று யான் பணிந்து என்னை உணர்த்தினேன். அப்போதும், பிற பெண்கள் ஊடுதல் செய்யும்போதும் இப்படித்தான் பணிதல் தன்மையுடையவரோ என்று சொல்லிக் கோபித்துக் கொண்டாள்.

10. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யார்உள்ளி நோக்கினர் என்று. 1320

[ப-ரை] நினைத்து - அவளையே பார்த்துக் கொண்டு இருந்து, நோக்கினும் - பேசாமல் இருந்து அவளையே பார்த்திருந்தாலும், அனைத்து - என்னுடைய அவயவங்களெல்லாம், நீர் - நீவிர், யார் - வேறு எந்தப் பெண்ணின் அவயவங்களுடன், உள்ளி - ஒப்பிட்டு நினைத்து, நோக்கினீர் - பார்த்தீர், என்று - என்று சொல்லி, காயும் - அப்போதும் கோபித்துக் கொள்ளுவாள்.

[க-ரை] என் சொற்களுக்கும் செயல்களுக்கும் அவள் கோபிப்பதால் நான் பேசாமல், அவளுடைய உறுப்புக்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய உறுப்புக்களை, வேறு பெண்களின் உறுப்புக்களுடன் ஒப்பிட்டு நோக்கினீர் என்று கூறிக் கொண்டாள்.

## 133. ஊடல் உவகை

### (ஊடலினை இருவரும் உவந்து பேசுதல்)

1. இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு. 1321

[ப-உரை] அவர்க்கு - காதலரிடத்தில், தவறு - குற்றங்கள், இல்லை - இல்லை, ஆயினும் - ஆனாலும், அவர் - காதலர், அளிக்குமாறு நமக்குப் பேரன்பினை அளிக்கும் நன்மை, ஊடுதல் - அவருடன் ஊடலினை உண்டாக்கிக் கொள்ள, வல்லது - வல்லமையுடைய தாகின்றது.

[கு-உரை] காதலரிடத்தில் தவறு ஒன்றும் இல்லை யென்றாலும் அவர் நம்மீது பேரன்பினை அளிக்கும் தன்மை அவருடன் பிணக்கினை உண்டாக்கிக் கொள்ள வல்லமை யுடையதாகின்றது.

2. ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். 1322

[ப-உரை] ஊடலின் - ஊடுதல் என்னும் பிணக்குச் செய் வதில், தோன்றும் - தோன்றுவதான, சிறு - சிறிய, துனி - துன்பத்தினால், நல்லளி - தலைவர் காட்டுகின்ற பேரன்பு, வாடினும் - வாட்டமடையுமேயானாலும், பாடுபெறும் - பெருமையினைப் பெறுவதாகும்.

[கு-உரை] ஊடல் காரணமாகத் தம்மிடம் தோன்று கின்ற சிறிய பிணக்கினால் காதலர் செய்யும் நல்லன்பு வாடுமாயினும் அது பெருமையினையே பெறுவதாகும்.

3. புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந்து அன்னார் அகத்து. 1313

[ப-உரை] நிலத்தொடு - நிலத்து மண்ணுடன், நீர் - தண்ணீரானது, இயைந்து - கலந்து விட்டது, அன்னார் - போன்ற, அகத்து - ஒற்றுமையுடைய, உள்ளங்கொண்ட

காதலரிடத்தில், புலத்தலின் - புலப்பதைப்போல [இன்பம் தருகின்ற] புத்தேள் நாடு - புத்தேளிர் நாடு, உண்டோ - இருக்கின்றதோ?

[க-ரை] நிலத்துடன் நீர் கலந்ததைப் போன்ற ஒற்றுமையுடைய காதலரிடத்தில் புலந்து கொள்ளுவதைப் போல நமக்கு இன்பம் தருவதொரு புத்தேள் நாடு உண்டோ?

4. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை. 1324

[ப-ரை] என் - எனது, உள்ளம் - உள்ளத்தினை, உடைக்கும் - கெடுக்கின்ற, படை - படைக்கலம், புல்லி - காதலரைத் தழுவிக் கொண்டு, விடாஅ - விடாதிருப்பதற்குக் காரணமான, புலவியுள் - புலவியினிடத்தே, தோன்றும் - உண்டாவதாகும்.

[க-ரை] என் உள்ளத்தினைக் கெடுக்கும் படைக்கலம் காதலரைத் தழுவிக்கொண்டு பின்னர் விடாமைக்குக் காரணமான அப்புலவியின்கண் உண்டாவதாகும்.

5. தவறுஇலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து. 1325

[ப-ரை] தவறு - காதலர் தவறு [குற்றம்], இலர் ஆயினும் - இல்லாதவரானாலும், [இருப்பது போல் பிணங்கி] தாம் - தம்மால், வீழ்வார் - விரும்பப்படும் பெண்களது, மென் - மெல்லிய, தோள் - தோள்களை, அகறலின் - சேரப் பெறாதபோது, ஆங்கு - [அது] அவர்க்கு அருலதாக உடையது.

[க-ரை] ஆடவரிடத்தில் தவறு இல்லையென்றாலும் இருப்பதுபோல ஊடுதல் செய்கின்ற (தாம் விரும்பிய), மகளிரது மெல்லிய தோள்களைக் கூடப் பெறாதபோது காதலர்க்கு அப்படிப்பட்டதோர் இன்பம் தரும் தன்மையுடையதாம்.

6. உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. 1326

[ப-ரை] உணலினும் - உண்ணும் பொழுதைவிட, உண்டது - முன்னர் உண்ட உணவு, அறல் இனிது-செரித்தல் இன்பம் தருவதாகும், [அதுபோல] காமம் - காம இன்பத்திற்கு, புணர்தலின் - புணர்ச்சியில் உள்ளதைவிட, ஊடல் இனிது - ஊடல் நிகழ்தல் இன்பம் தருவதாகும்.

[க-ரை] உண்ணுகின்றபோது உண்டாகின்ற இன்பத்தினைவிட உண்டது சீரணிக்கின்றதால் உண்டாகும் இன்பம் சிறந்ததாகும். அதுபோலக் காமத்திற்குப் புணர்தலைவிட ஊடலின்பம் சிறந்ததாகும்.

7. ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும். 1327

[ப-ரை] ஊடலில் - ஊடல் நிகழ்ச்சியில், தோற்றவர்-தோல்வியடைந்தவர், வென்றார் - கூடலில் வென்றவராவார், அது - அந்த வெற்றி [அப்போது அறியப் படாததாக இருந்தாலும்] கூடலில் - புணர்ச்சியா, நிகழ்ச்சியில், காணப்படும் - அவரால் அறியப்படும்.

[க-ரை] காமம் நுகர்வதற்குரிய இருவருள் ஊடலின் கண்ணே தோற்றவர் வென்றவராவர். அது அப்போது அறியப்படாததே யாயினும், பின்னர் புணர்ச்சியின் போது அவரால் அறியப்படும்.

8. ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. 1328

[ப-ரை] நுதல் - இப்பெண்ணின் நெற்றி, வெயர்ப்ப-வெயர்க்கும் நிலையில், கூடலில் - கூடிக் கலத்தலில், தோன்றிய-உண்டான, உப்பு - இன்பத்தினை, ஊடி-மீண்டும் [இவள்] ஊடுதல் செய்து, பெறுகுவம் கொல்லோ - யாம் பெறுகின்ற வாய்ப்பு கிடைக்குமோ?

[க-ரை] இப்பெண்ணின் நுதல் வெயர்க்கும் வகையில் புணர்ச்சியின்கண்ணே உளதாகிய இனிமையை இன்னும் ஒருமுறை இவள் கூடி யாம் பெறுவோமோ?

9. ஊடுக மன்னோ ஒளிஇழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா. 1329

[ப-ரை] ஒளி - ஒளிதருகின்ற, இழை - அணிகலன்களையுடைய இவள், ஊடுகமன்-எம்முடன் ஊடுதல் செய்து கொண்டிருப்பாளாக, [அப்பிணக்கினை நீக்குவதற்காக] யாம் இரப்ப - யாம் வேண்டிக் கொண்டிருக்கும் வரையில், இரா - இந்த இரவுப் பொழுது. நீடுகமன் - நீண்டு கொண்டிருப்பதாகுக [ஓங்காரங்கள் - அசைநிலை]

[க-ரை] ஒளி பொருந்திய அணிகலன்களைக் கொண்ட அப்பெண் எம்முடன் ஊடுதல் செய்வாளாக; அவ்வாறு இவள் ஊடிக் கொள்ளவும் யான் வேண்டி நிற்பதற்கும் காலம் பெறும் வகையில் இரவு நீட்டித்தல் வேண்டும்.

10. ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்
கூடி முயங்கப் பெறின். 1330

[ப-ரை] காமத்திற்கு - காமமாகிய இன்ப நுகர்ச்சிக்கு, இன்பம் -இன்பமாக இருப்பது, ஊடுதல் - ஊடலாகும் கூடி- [ஊடலினை அளவுடன் நீக்கி] இருவரும் சேர்ந்து, முயங்கப் பெறின் - தழுவிக் கொள்ளுதல் கூடுமானால், அதற்கு - அந்த ஊடலுக்கு, இன்பம் - அதுவே இன்பம் தருவதாகும்.

[க-ரை] காம நுகர்ச்சிக்குத் தமக்குள் ஊடல் செய்வது இன்பமாகும்; ஊடலுக்கு இன்பமாவது காதலர் சேர்ந்து தழுவிக் கொள்ளுதலாகும்.

முற்றும்

# பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அஃகாமை | 90 | அரங்கின்றி | 181 |
| அஃகி அகன்ற | 89 | அரம் பொருத | 377 |
| அகடாரார் | 397 | அரம் போலும் | 422 |
| அகப்பட்டி | 454 | அரிதரோ | 488 |
| அகர முதல | 17 | அரிதாற்றி | 490 |
| அகலாது அணு | 298 | அரிய என்று | 235 |
| அகழ்வாரைத் | 79 | அரியகற்று | 222 |
| அகனமர்ந்து ஈதலின் | 55 | அரியவற்று | 198 |
| அகனமர்ந்து செய்யாள் | 51 | அருங்கேடன் | 103 |
| அங்கணத்துள் | 310 | அருஞ்செல்வி | 247 |
| அசைஇயற்கு | 464 | அருட்செல்வம் | 116 |
| அச்சமுடையார்க்கு | 234 | அருமறை | 361 |
| அச்சமே கீழ் | 454 | அருமை உடைத் | 265 |
| அஞ்சாமை ஈகை | 173 | அரும்பயன் | 98 |
| அஞ்சாமை அல்லால் | 219 | அருவினை | 214 |
| அஞ்சும் அறியான் | 369 | அருளல்லது | 121 |
| அஞ்சுவ தஞ்சாமை | 191 | அருளில்லார்க்கு | 118 |
| அஞ்சுவ தோரும் | 166 | அருளொன்றும் | 325 |
| அடக்கம் அமரருள் | 66 | அருளொடும் | 324 |
| அடல் வேண்டும் | 157 | அருள் கருதி | 134 |
| அடற்றகையும் | 329 | அருள் சேர்ந்த | 117 |
| அடுக்கிய கோடி | 405 | அருள்வெஃகி | 89 |
| அடுக்கிவரினும் | 270 | அலந்தாரை | 549 |
| அடுத்தது காட்டும் | 304 | அலரெழ | 482 |
| அணங்குகொல் | 457 | அலர்நாண | 485 |
| அணி அன்றோ | 430 | அல்லல் அருளாள் | 117 |
| அந்தணர் என்போர் | 29 | அல்லவை தேய | 56 |
| அந்தணர் நூற்கும் | 238 | அல்லற்பட்டு | 243 |
| அமரகத்து ஆற்றறுக் | 348 | அவர் தந்தார் | 499 |
| அமரகத்துவன் | 435 | அவர் நெஞ்சு | 545 |
| அமிழ்தினும் | 43 | அவா இல்லார்க் | 166 |
| அமைந்தாங் | 210 | அவா என்ப | 164 |

| | பக்கம் |
|---|---|
| அவாவினை | 166 |
| அவிசொரிந் | 123 |
| அவையறிந்து | 306 |
| அவையறியார் | 307 |
| அவ்வித்து அழுக் | 86 |
| அவ்விய நெஞ் | 86 |
| அழக்கொண்ட | 284 |
| அழச்சொல்லி | 340 |
| அழல்போலும் | 518 |
| அழிவது உம் | 205 |
| அழிவந்த | 345 |
| அழிவினவை | 337 |
| அழிவின்றி அறை | 328 |
| அழுக்கற்று | 87 |
| அழுக்காறு அவா | 31 |
| அழுக்காறு உடையார் | 85 |
| அழுக்காறு என | 86 |
| அழுக்காறுடையான் | 72 |
| அழுக்காற்றின் | 84 |
| அளவல்ல | 135 |
| அளவளாவில்லா | 230 |
| அளவறிந்தார் | 135 |
| அளவறிந்து | 212 |
| அளவின்கண் | 134 |
| அளித்தஞ்சல் | 488 |
| அறங்கூறான் | 91 |
| அறஞ்சாரா | 443 |
| அறஞ்சொல்லும் | 93 |
| அறத்தாறு இது | 31 |
| அறத்தாற்றின் | 36 |
| அறத்தான் | 32 |
| அறத்திற்கே | 48 |
| அறத்தினூஉங்கு | 30 |
| அறம்பொருள் | 221 |
| அறவாழி | 20 |
| அறவினையாதெனில் | 148 |
| அறவினையும் | 386 |
| அறனழீஇ | 92 |
| அறனறிந்து ஆன் | 274 |
| அறனறிந்து மூத்த | 197 |
| அறனறிந்து வெஃகா | 90 |
| அறனியலான் | 77 |
| அறனிழுக்கா | 174 |
| அறனெனப் | 37 |
| அறன் ஆக்கம் | 84 |
| அறன் ஈனும் | 324 |
| அறன்கடை | 75 |
| அறன்நோக்கி | 95 |
| அறன்வரையான் | 78 |
| அறிகிலார் | 481 |
| அறிகொன்று | 276 |
| அறிதோறு அறியாமை | 469 |
| அறிந்தாற்றிச் | 227 |
| அறிவற்றங் | 189 |
| அறிவிலார் | 360 |
| அறிவிலான் | 360 |
| அறிவினான் | 146 |
| அறிவினுள் எல்லாம் | 100 |
| அறிவின்மை | 359 |
| அறிவுடையார் ஆவ | 191 |
| அறிவுடையார் எல்லாம் | 192 |
| அறிஉரு ஆராய்ந்த | 295 |
| அறுவாய் | 472 |
| அறைபறை | 455 |
| அற்கா இயல்பிற்றுச் | 153 |
| அற்றது அறிந்து | 400 |
| அற்றம் மறைக்கும் | 415 |
| அற்றம் மறைத்தலோ | 361 |
| அற்றவர் என்பார் | 165 |
| அற்றாரைத் | 223 |
| அற்றார் அழிபசி | 110 |
| அற்றார்க் கொன்று | 426 |
| அற்றால் அளவறிந்து | 400 |
| அற்றேமென்று | 270 |

| | பக்கம் |
|---|---|
| அனிச்சப்பூக் | 471 |
| அனிச்சமும் | 473 |
| அன்பகத்தில்லா | 49 |
| அன்பறிவு ஆராய்ந்த | 295 |
| அன்பறிவு தேற்றம் | 226 |
| அன்பிலன் | 367 |
| அன்பிலார் | 47 |
| அன்பிற்கும் | 467 |
| அன்பின் வழியது | 50 |
| அன்பின் விழையார் | 387 |
| அன்பு ஈனும் | 48 |
| அன்புடை—இல் | 420 |
| அன்புடை—வேந் | 293 |
| அன்புநாண் | 417 |
| அன்பும் அறனும் | 36 |
| அன்புற்று அமர்ந்த | 48 |
| அன்பொரீஇத் | 427 |
| அன்பொடு இயைந்த | 47 |
| அன்றறிவாம் | 31 |
| ஆகாறு அளவிட்டி | 212 |
| ஆகூழால் | 168 |
| ஆக்கமும் | 278 |
| ஆக்கம் அதர்வினாய்ச் | 258 |
| ஆக்கம் இழந்தேம் | 258 |
| ஆக்கம் கருதி | 206 |
| ஆங்கமை | 318 |
| ஆபயன் குன்றும் | 244 |
| ஆயும் அறிவினர் | 390 |
| ஆய்ந்தாய்ந்து | 339 |
| ஆரா இயற்கை | 167 |
| ஆவிற்கு நீரென்று | 451 |
| ஆள்வினையும் | 433 |
| ஆற்றாரும் | 218 |
| ஆற்றின் அளவறிந்து ஈக | 211 |
| ஆற்றின் அளவறிந்துகற்க | 212 |
| ஆற்றின் ஒழுக்கி | 37 |
| ஆற்றின் நிலைதளர்ந் | 308 |
| ஆற்றின் வருந்தா | 208 |
| ஆற்றுபவர்க்கும் | 319 |
| ஆற்றுவார்—இக | 379 |
| ஆற்றுவார்—பசி | 109 |
| ஆற்றுவார்—பணி | 418 |
| இகலானாம் | 366 |
| இகலிற்கு எதிர் | 365 |
| இகலின் மிக | 365 |
| இகலெதிர் | 364 |
| இகலென்ப | 363 |
| இகலென்னும் | 364 |
| இகல் காணான் | 366 |
| இகழ்ச்சியின் | 236 |
| இகழ்ந்தெள்ளாது | 447 |
| இடமெல்லாம் | 450 |
| இடனில் பருவத்தும் | 106 |
| இடிக்கும் துணை | 199 |
| இடிபுரிந்த எள்ளுஞ் | 203 |
| இடிப்பாரை | 200 |
| இடுக்கட்படினும் | 282 |
| இடுக்கண்கால் | 436 |
| இடுக்கண் வருங்கால் | 269 |
| இடும்பைக்கு இடும்பை | 269 |
| இடும்பைக்கே | 436 |
| இடைதெரிந்து | 307 |
| இணரூழ்த்தும் | 281 |
| இணரெரிதோய் | 143 |
| இதனை இதனால் | 228 |
| இமைப்பின் கரப்பாக் | 477 |
| இமையாரின் | 385 |
| இம்மைப்பிறப்பின் | 554 |
| இயல்பாகும் | 157 |
| இயல்பினான் | 36 |
| இயல்புளிக் | 239 |
| இயற்றலும் | 175 |
| இரக்க இரத்தக்கார்க் | 445 |
| இரத்தலின் | 111 |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| இரத்தலும் | 446 | இளிவரின் | 411 |
| இரந்தும் | 449 | இளைதாக | 374 |
| இரப்பன் இரப்பாரை | 451 | இளையர் இன | 301 |
| இரப்பாரை | 447 | இறந்தமைந்த | 382 |
| இரப்பான்வெ | 448 | இறந்தவெகுளியின் | 233 |
| இரவார் இரப் | 438 | இறந்தார் | 143 |
| இரவுள்ள | 452 | இறப்பேபுரிந்த | 414 |
| இரவென்னும் | 451 | இறல்ஈனும் | 91 |
| இருநோக்கு | 461 | இறுதிபயப்பினும் | 297 |
| இருந்துள்ளி | 525 | இறைகடியன் | 246 |
| இருந்தோம்பி | 50 | இறைகாக்கும் | 239 |
| இருபுனலும் | 317 | இற்பிற—கண் அல்லது | 404 |
| இருமனப்பெண்டிரும் | 391 | இற்பிற—கண்ணேயும் | 442 |
| இருமை வகைதெரிந்து | 26 | இனத்தாற்றி | 248 |
| இருவேறு உலகத்து | 169 | இனம்போன்று] | 351 |
| இருள்சேர் | 19 | இனி அன்ன | 546 |
| இருள்நீங்கி | 160 | இனிய உளவாக | 58 |
| இலக்கம் | 271 | இனைத்துணைத் | 53 |
| இலங்கிழாய் | 533 | இனையர் | 338 |
| இலமென்று அசைஇ | 440 | இன்கண் உடைத்தவர் | 487 |
| இலமென்றுவெஃகுதல் | 88 | இன்சொலால் ஈத் | 175 |
| இலர்பலராகிய | 127 | இன்சொலால் ஈரம் | 54 |
| இலனென்னும் | 109 | இன்சொல் இனி | 57 |
| இலன் என்று | 101 | இன்பத்துள்-பய | 364 |
| இல்லதென் | 39 | இன்பத்துள்—விழை | 271 |
| இல்லாரை | 323 | இன்பம் இடையறா | 167 |
| இல்லாளை | 384 | இன்பம் ஒருவற்கு | 445 |
| இல்லாள்கண் | 384 | இன்பம் கடல் | 493 |
| இல்லைதவறவர்க்கு | 557 | இன்பம் விழை—இ | 271 |
| இல்வாழ்வான் | 34 | இன்பம் விழை—வினை | 266 |
| இவறலும் | 193 | இன்மை என | 441 |
| இழத்தொறூஉம் | 398 | இன்மை ஒருவற்கு | 419 |
| இழிவறிந்து உண்பான் | 401 | இன்மை இடும்பை | 449 |
| இழுக்கல் | 186 | இன்மையின் இன்னாது | 441 |
| இழுக்காமை | 235 | இன்மையின்-இன்னாது | 244 |
| இழைத்தது | 334 | இன்மையுள் இன்மை | 80 |
| இளித்தக்க | 548 | இன்றியமையாச் | 408 |

| | பக்கம் |
|---|---|
| இன்றும் வருவது | 443 |
| இன்னா எனைத்தான் | 146 |
| இன்னாசெய்தாரை | 145 |
| இன்னாசெ—ர் | 418 |
| இன்னாது—இரக்கப் | 109 |
| இன்னாது இனன் | 490 |
| இன்னாமை இன்பம் | 272 |
| ஈட்டம் இவறி | 425 |
| ஈதல் இசைபட | 112 |
| ஈத்துவக்கும் | 111 |
| ஈர்ங்கை விதிரார் | 455 |
| ஈவார்கண் | 448 |
| ஈன்ற பொழுதிற் | 45 |
| ஈன்றாள்பசி | 283 |
| ஈன்றாள் முகத்தேயும் | 392 |
| உடம்பாடு இலா | 378 |
| உடம்பொடு | 474 |
| உடுக்கை | 338 |
| உடுப்பதூஉம் | 456 |
| உடை செல்வம் | 398 |
| உடைத்தம் | 210 |
| உடைமையுள் | 53 |
| உடையரெனப்படுவது | 257 |
| உடையார்முன் | 179 |
| உட்கப்படா அர் | 391 |
| உட்பகை | 376 |
| உணர்வதுடையார்முன் | 309 |
| உணலினும் | 559 |
| உண்டார்கண் | 461 |
| உண்ணற்க | 391 |
| உண்ணாது | 83 |
| உண்ணாமை உள்ளது | 121 |
| உண்ணாமை வேண்டும் | 122 |
| உதவி வரைத்தன்று | 60 |
| உப்பமைந் | 549 |
| உயர்வகலம் | 319 |
| உயிர் உடம்பின் | 151 |
| உயிர்ப்ப உளரல்லர் | 347 |
| உய்த்தல் | 543 |
| உரமொருவற்கு | 261 |
| உரனென்னும் | 26 |
| உரன்நசைஇ | 533 |
| உருவுகண்டு | 287 |
| உருளாயம் | 396 |
| உரைப்பார் | 112 |
| உலகத்தார் | 363 |
| உலகத்தோடு | 74 |
| உலகம் தழீஇய | 190 |
| உலைவிடத்து | 327 |
| உவக்காணெம் | 501 |
| உவந்துறைவர் | 477 |
| உவப்பத் தலைக்கூடி | 178 |
| உழந்துழந்து | 497 |
| உழவினார் | 439 |
| உழுதுண்டு | 438 |
| உழுவார் | 437 |
| உழைப்பிரிந்து | 233 |
| உளபோல் | 250 |
| உளரெனினும் | 314 |
| உளரென்னும் | 183 |
| உளவரை தூக்காத | 213 |
| உள்ளக்களித்தலும் | 541 |
| உள்ளத்தார் | 527 |
| உள்ளத்தால் உள் | 133 |
| உள்ளத்தால் பொய்யா | 137 |
| உள்ளம் இலா | 260 |
| உள்ளம் உடைமை | 258 |
| உள்ளம் போன்று | 494 |
| உள்ளற்க | 342 |
| உள்ளியது எய்தல் | 237 |
| உள்ளியதெல்லாம் | 143 |
| உள்ளினும் | 507 |
| உள்ளினேன் | 554 |
| உள்ளுவதெல்லாம் | 259 |

| | பக்கம் |
|---|---|
| உள்ளுவன் — உரை | 500 |
| உள்ளுவன் — மறப்பின் | 475 |
| உள்ளொற்றி | 393 |
| உறங்குவது | 155 |
| உறன்முறையான் | 376 |
| உறாஅதவர்க்கண்ட | 545 |
| உறாஅதவர்போல் | 463 |
| உறாஅதோ | 483 |
| உறாஅர்க்கு | 507 |
| உறின் உயிர் | 333 |
| உறின்நட்டு | 347 |
| உறுதோறு உயிர் | 467 |
| உறுபசியும் | 316 |
| உறுபொருளும் | 325 |
| உறுப்பமைந்து | 327 |
| உறுப்பொத்தல் | 421 |
| உறுவதுசீர் | 348 |
| உறைசிறியார் | 293 |
| உற்ற நோய் நீக்கி | 197 |
| உற்ற நோய் நோன்றல் | 124 |
| உற்றவன் | 402 |
| உற்றான் அளவும் | 402 |
| ஊக்கமுடையான் | 2[illegible]5 |
| ஊடலில் தோற்றவர் | 559 |
| ஊடலில் தோன்றும் | 557 |
| ஊடலில் உண்டாங் | 551 |
| ஊடல் உணங்க | 552 |
| ஊடல் உணர்தல் | 468 |
| ஊடற்கண் | 542 |
| ஊடிப் பெறுகுவம் | 559 |
| ஊடியவரை | 550 |
| ஊடியிருந்தோமாக் | 553 |
| ஊடுக மன்னோ | 560 |
| ஊடுதல் | 560 |
| ஊணுடை | 429 |
| ஊதியம் என்பது | 341 |
| ஊரவர் கௌவை | 484 |
| ஊருணிநீர் நிறைந் | 105 |
| ஊழிப் பெயரினும் | 419 |
| ஊழிற்பெருவலி | 171 |
| ஊழையும் | 268 |
| ஊனொறாஅல் | 285 |
| ஊனைக்குறித்த | 429 |
| எச்சமென்று | 425 |
| எட்பகவன்ன | 378 |
| எண்சேர்ந்த | 386 |
| எண்ணித் துணிக | 207 |
| எண்ணிய எண்ணியா | 287 |
| எண்ணியார் | 218 |
| எண்ணென்ப | 177 |
| எண்பதத்தால் | 420 |
| எண்பதத்தான் | 240 |
| எண்பொருள | 190 |
| எதிரதாக் காக்கும் | 192 |
| எந்நன்றி | 62 |
| எப்பொருளும் ஓரார் | 300 |
| எப்பொருள் எத் | 161 |
| எப்பொருள் யார் | 189 |
| எய்தற்கரியது | 216 |
| எரியால் சுடப் | 381 |
| எல்லாப் பொருளும் | 321 |
| எல்லார்க்கும் எல்லாம் | 253 |
| எல்லார்க்கும் நன்றாம் | 68 |
| எல்லா விளக்கும் | 139 |
| எல்லைக் கண் | 345 |
| எவ்வ துறைவது | 191 |
| எழுதுங்கால் | 542 |
| எழுபிறப்பும் | 43 |
| எழுமை எழுபிறப்பும் | 61 |
| எளிதென | 76 |
| எள்ளாத எண்ணிச் | 208 |
| எள்ளாமை | 132 |
| எள்ளின் இனிதாம் | 547 |
| எற்றிற்குரியர் | 456 |

| | பக்கம் |
|---|---|
| எற்றென்று | 282 |
| எனைத்தானும் எஞ் | 146 |
| எனைத்தானும் நல்ல | 187 |
| எனைத்திட்பம் | 289 |
| எனைத்துணையர் | 76 |
| எனைத்து நினைப்பி | 510 |
| எனைத்தும் | 358 |
| எனைத்தொன்று | 850 |
| எனைப்பகை | 102 |
| எனைமாட்சி | 322 |
| எனைவகையான் | 226 |
| என்பிதலனை | 49 |
| என்றும் ஒருவுதல் | 281 |
| என்னைமுன் | 331 |
| ஏதம்பெருஞ் | 426 |
| ஏதிலார் ஆரத் | 357 |
| ஏதிலார் குற்றம் | 95 |
| ஏதிலார் போலப் | 465 |
| ஏந்திய கொள்கையார் | 382 |
| ஏமுற்றவரினும் | 372 |
| ஏரினும் நன்றால் | 440 |
| ஏரின் உழாஅர் | 22 |
| ஏவவும் செய்கலான் | 362 |
| ஐந்தவித்தான் | 27 |
| ஐயத்தின் நீங்கித் | 161 |
| ஐயப்படாஅது | 303 |
| ஐயுணர்வு | 161 |
| ஒட்டார்பின் | 410 |
| ஒண்ணுதற் | 460 |
| ஒண்பொருள் | 326 |
| ஒத்ததறிவான் | 105 |
| ஒப்புரவினால்வரும் | 107 |
| ஒருதலையான் | 505 |
| ஒருநாள் எழுநாள்போல் | 535 |
| ஒருபொழுதும் | 154 |
| ஒருமைக்கண் | 180 |
| ஒருமைச் செய | 357 |

| | பக்கம் |
|---|---|
| ஒருமை மகளிரே | 413 |
| ஒருமையுள் | 68 |
| ஒலித்தக்கால் | 328 |
| ஒல்லும் கருமம் | 350 |
| ஒல்லும் வகையான் | 30 |
| ஒல்லும் வாயெல்லாம் | 290 |
| ஒல்வதறிவது | 209 |
| ஒழுக்கத்தின் எய்துவர் | 73 |
| ஒழுக்கத்தின் ஒல்கார் | 73 |
| ஒழுக்கத்துக் | 25 |
| ஒழுக்கமுடையவர்க்கு | 74 |
| ஒழுக்கமும் | 404 |
| ஒழுக்கம் உடைமை | 71 |
| ஒழுக்கம் விழுப்பம் | 71 |
| ஒழுக்காறாக் | 83 |
| ஒளியார்முன் | 308 |
| ஒளிஒருவற்கு | 412 |
| ஒறுத்தாரை | 81 |
| ஒறுத்தார்க்கு | 81 |
| ஒறுத்தாற்றும் | 252 |
| ஒற்றினான் ஒற்றிப் | 254 |
| ஒற்றும் உரைசான்ற | 253 |
| ஒற்றொற்றித் | 256 |
| ஒற்றொற்றுணை | 256 |
| ஒன்றா உலகத்து | 113 |
| ஒன்றாக நல்லது | 149 |
| ஒன்றாமை | 377 |
| ஒற்றாலும் | 69 |
| ஒன்றெய்தி | 395 |
| ஒன்னார்த் | 125 |
| ஓஒ இனிதே | 497 |
| ஓதல் வேண்டும் | 282 |
| ஓதி உணர்ந்தும் | 356 |
| ஓம்பின் அமைந்தார் | 488 |
| ஓர்த்துள்ளம் | 162 |
| ஓர்ந்துகண் | 237 |
| கடலன்ன | 480 |

| | பக்கம் |
|---|---|
| கடலோடா | 219 |
| கடனறிந்து | 296 |
| கடனென்ப | 416 |
| கடாஅ உரு | 255 |
| கடாஅக்களிற் | 459 |
| கடிதோச்சி | 245 |
| கடிந்தகடிந் | 284 |
| கடுஞ்சொல்லன் | 247 |
| கடுமொழியும் | 247 |
| கடைக்கொட்கச் | 286 |
| கணைகொடிது | 131 |
| கண்களவு | 62 |
| கண்டது மன்னும் | 484 |
| கண்டார் | 458 |
| கண்டுகேட்டு | 465 |
| கண்ணிற்கு அணிகலம் | 251 |
| கண்ணின் துனி | 544 |
| கண்ணின் பசப்போ | 523 |
| கண்ணுடையர் | 178 |
| கண்ணும் கொளச் | 525 |
| கண்ணுள்ளார் | 476 |
| கண்ணுள்ளின் | 475 |
| கண்ணொடுகண் | 465 |
| கண்ணோட்டத் | 250 |
| கண்ணோட்டம் இல் | 251 |
| கண்ணோட்டம் என் | 249 |
| கண்தாம் கலுழ்வ | 495 |
| கண்நிறைந்த | 537 |
| கண் நின்று கண் | 93 |
| கதங்காத்து | 70 |
| கதுமெனத்தாம் | 496 |
| கயலுண்கண் | 512 |
| கரத்தலும் | 491 |
| கரப்பவர்க்கு | 452 |
| கரப்பிடும்பை | 446 |
| கரப்பிலா நெஞ்சின் | 445 |
| கரப்பிலார்வை | 446 |

| | பக்கம் |
|---|---|
| கரப்பினுங் | 536 |
| கரவாது உவந் | 449 |
| கருமஞ் சிதையாமல் | 252 |
| கருமணியிற் | 474 |
| கருமத்தால் | 428 |
| கருமம் செய | 433 |
| கருவியும் காலமும் | 273 |
| கலங்காது கண்ட | 288 |
| கலந்துணர்ந்தும் | 576 |
| கல்லா ஒருவன் | 182 |
| கல்லாதமேற் | 361 |
| கல்லாதவரின் | 314 |
| கல்லாதவரும் | 182 |
| கல்லாதான் ஒட்பம் | 182 |
| கல்லாதான் சொற்கா | 181 |
| கல்லார்ப்பிணிக் | 249 |
| கல்லான் வெகுளும் | 379 |
| கவறும் கழகமும் | 397 |
| கவ்வையால் | 483 |
| கழாஅக்கால் | 359 |
| களவினால் ஆகிய | 133 |
| களவின்கண் | 133 |
| களவென்னும் | 134 |
| களித்தறியேன் | 394 |
| களித்தானைக் | 394 |
| களித்தொறும் | 484 |
| கள்வார்க்குத் | 136 |
| கள்ளுண்ணாப் | 394 |
| கறுத்து இன்னா | 144 |
| கற்க கசடறக் | 177 |
| கற்றதனாலாய | 18 |
| கற்றறிந்தார் | 309 |
| கற்றாருள் கற்றார் | 311 |
| கற்றார்முன் | 312 |
| கற்றிலனாயினும் | 186 |
| கற்றீண்டு | 162 |
| கற்றுக்கண் | 293 |

| | பக்கம் |
|---|---|
| கனவினான் | 513 |
| கனவினும் | 350 |
| காக்க பொருளா | 67 |
| காக்கை கரவா | 232 |
| காட்சிக் கெளியன் | 175 |
| காணாச் சினத்தான் | 369 |
| காணாதான் | 362 |
| காணிற்குவளை | 471 |
| காணுங்கால் | 543 |
| காண்கமன் | 534 |
| காதல் காதல் | 196 |
| காதலர் இல்வழி | 517 |
| காதலர் தூதொடு | 512 |
| காதல் அவரிலராக | 521 |
| காதன்மை | 223 |
| காமக்கடல் | 492 |
| காமக் கடும்-உய் | 479 |
| காமக் கடும்-நீர் | 493 |
| காமக் கணிச்சி | 528 |
| காமமும் நாணும் | 492 |
| காமமென | 529 |
| காமம் உழந்து | 478 |
| காமம்விடு | 526 |
| காமம் வெகுளி | 163 |
| காலத்தினாற் | 59 |
| காலம் கருதி | 215 |
| காலாழ் களரில் | 221 |
| காலை அரும்பிப் | 518 |
| காலைக்குச் | 517 |
| கானமுயலெய்த | 331 |
| குடம்பை | 154 |
| குடிசெய்வல் | 433 |
| குடிசெய்வார்க்கு | 435 |
| குடிதழீஇக் | 238 |
| குடிபுறங்காத் | 240 |
| குடிப்பிறந்தார் | 406 |
| குடிப்பிறந்து-குற் | 222 |

| | பக்கம் |
|---|---|
| குடிப்பிறந்து-தன் | 340 |
| குடிமடிந்து | 262 |
| குடியாண்மை | 264 |
| குடியென்னும் | 261 |
| குணநலம் | 416 |
| குணமென்னும் | 28 |
| குணம் நாடிக் | 222 |
| குணனிலனாய்க் | 370 |
| குணனும் குடிமை | 340 |
| குலஞ்சுடும் | 432 |
| குழல்இனிது | 44 |
| குறிக்கொண்டு | 463 |
| குறித்தது | 303 |
| குறிப்பறிந்து | 300 |
| குறிப்பிற்-ராவாயின் | 304 |
| குறிப்பிற்-ர்வாரை | 303 |
| குற்றமே காக்க | 194 |
| குற்றம் இலனாய்க் | 434 |
| குன்றன்னார் | 381 |
| குன்றின் அனையாரும் | 409 |
| குன்றேறி | 325 |
| கூடியகாமம் | 533 |
| கூத்தாட்டு | 152 |
| கூழும் குடியும் | 242 |
| கூறாமை நோக்கிக் | 302 |
| கூற்றத்தைக் | 381 |
| கூற்றமோ | 459 |
| கூற்றம்குதித் | 127 |
| கூற்றுடன்று | 328 |
| கெடல்வேண்டின் | 379 |
| கெடாஅ வழி | 346 |
| கெடுங்காலைக் | 342 |
| கெடுப்பதூஉங் | 23 |
| கெடுவல்யான் | 64 |
| கெடுவாக | 65 |
| கெட்டார்க்கு | 546 |
| கேடறியாக் | 317 |

| | பக்கம் |
|---|---|
| கேடில் விழுச் | 180 |
| கேடும் பெருக் | 64 |
| கேட்டார்ப் | 278 |
| கேட்டினும் | 341 |
| கேட்பினுங் | 187 |
| கேளிழுக்கம் | 346 |
| கைம்மாறுவேண்டா | 104 |
| கையறியாமை | 393 |
| கைவேல்களிற்றொடு | 332 |
| கொக் கொக்க | 217 |
| கொடியார்-பின் | 494 |
| கொடியார்-உரை | 521 |
| கொடுத்தலும் | 231 |
| கொடுத்தும் | 309 |
| கொடுப்பது அழுக் | 85 |
| கொடுப்பதூஉம் | 426 |
| கொடும்புருவம் | 459 |
| கொடையளி | 177 |
| கொலைமேற்கொண் | 241 |
| கொலையிற் | 240 |
| கொலைவினைய | 151 |
| கொல்லாநலத் | 417 |
| கொல்லாமை | 150 |
| கொல்லான் | 123 |
| கொளப்பட்டேம் | 301 |
| கொளற்கரிதாய்க் | 320 |
| கொன்றன்ன | 61 |
| கோட்டுப்பூச் | 553 |
| கோளில் | 20 |
| சமன்செய்து | 65 |
| சலத்தால் | 284 |
| சலம்பற்றிச் | 406 |
| சாதலின் இன்னாத | 111 |
| சாயலும் | 500 |
| சார்புணர்ந்து | 163 |
| சால்பிற்குக் | 418 |
| சான்றவர் | 419 |

| | பக்கம் |
|---|---|
| சிதைவிடத்து | 259 |
| சிறப்பறிய | 257 |
| சிறப்பு ஈனும் செல்வமும் | 29 |
| சிறப்புஈனும் செல்வம்பெ | 144 |
| சிறப்பொடு | 24 |
| சிறியார் உணர் | 414 |
| சிறுகாப்பிற் | 320 |
| சிறுபடையான் | 220 |
| சிறுமை நமக் | 520 |
| சிறுமை பல | 396 |
| சிறுமையும் | 330 |
| சிறுமையுள் | 57 |
| சிறைகாக்குங் | 41 |
| சிறைநலனும் | 220 |
| சிற்றினம் | 201 |
| சிற்றின்பம் | 88 |
| சினத்தைப் | 142 |
| சினமென்னும் | 142 |
| சீரிடங்காணின் | 351 |
| சீரினும் சீரல்ல | 408 |
| சீருடைச் செல்வர் | 428 |
| சீர்மை சிறப் | 97 |
| சுடச்சுடரும் | 126 |
| சுவையொளி | 27 |
| சுழலும் இசைவேண்டி | 333 |
| சுழன்றும் ஏர்ப் | 437 |
| சுற்றத்தால் | 230 |
| சூழாமல் | 434 |
| சூழ்ச்சி முடிவு | 289 |
| சூழ்வார்க்கண் | 198 |
| செப்பம் உடை | 63 |
| செப்பின் | 377 |
| செயற்கரிய செய் | 27 |
| செயற்கரிய யாவுள | 335 |
| செயற்கை அறிந் | 275 |

| | பக்கம் |
|---|---|
| செயற்பால செய்யா | 195 |
| செயற்பால தோரும் | 33 |
| செயிரின் தலைப் | 133 |
| செய்க பொருளைச் | 326 |
| செய்தக்க | 207 |
| செய்தேமஞ் | 349 |
| செய்யாமல் செற் | 145 |
| செய்யாமற் செய்த | 58 |
| செய்வானை | 227 |
| செய்வினை | 291 |
| செருக்குஞ் | 193 |
| செருவந்த | 248 |
| செல்லா இடத்துச் | 140 |
| செல்லாமை | 487 |
| செல்லான் | 440 |
| செல்லிடத்துக் | 140 |
| செல்வத்துள் | 185 |
| செல்விருந்து | 52 |
| செவிகைப்பச் | 176 |
| செவிக்குண | 185 |
| செவிச்சொல்லும் | 299 |
| செவியிற் சுவை | 188 |
| செவியுணவிற் | 186 |
| செறா அச்சிறு | 464 |
| செறிதொடி | 538 |
| செறிவறிந்து | 67 |
| செறுநரைக் | 216 |
| செறுவார்க்குச் | 370 |
| செற்றவர் பின் | 530 |
| செற்றாரெனக்கை | 526 |
| செற்றார் பின் | 530 |
| சென்ற இடத் | 189 |
| சொலல்வல்லன் | 279 |
| சொல்லப்பயன் | 455 |
| சொல்லுக சொல்லிற் | 99 |
| சொல்லுக சொல் | 279 |
| சொல்லுதல் | 286 |

| | பக்கம் |
|---|---|
| சொல்வணக்கம் | 353 |
| சொற்கோட்டம் | 65 |
| ஞாலங்கருதி | 214 |
| தகுதிஎன | 62 |
| தக்காங்கு | 245 |
| தக்காரினத் | 199 |
| தக்கார் தகவிலர் | 63 |
| தஞ்சம் தமரல்லர் | 548 |
| தணந்தமை | 521 |
| தண்ணந் துறைவன் | 539 |
| தந்தை மகற்கு | 45 |
| தந்நலம் | 389 |
| தந்நெஞ்சத்து | 509 |
| தமராகித்தற் | 232 |
| தம்பொருள் | 43 |
| தம்மில் இருந்து | 468 |
| தம்மிற் பெரியார் | 198 |
| தம்மின் தம் | 45 |
| தலைப்பட்டார் | 159 |
| தலையின் இழிந்த | 409 |
| தவஞ் செய்வார் | 126 |
| தவமறைந்து | 129 |
| தவமும் தவமுடை | 124 |
| தவறிலர் ஆயினும் | 558 |
| தள்ளா விளையுளும் | 315 |
| தற்காத்துத் | 40 |
| தனக்குவமை | 19 |
| தனியே இருந்து | 547 |
| தன்குற்றம் நீக்கிப் | 195 |
| தன்துணை இன்றால் | 372 |
| தன்னுயிர்க்கு இன் | 147 |
| தன்னுயிர் தான் | 126 |
| தன்னுயிர் நீப்பினும் | 150 |
| தன்னூன் பெருக்கி | 120 |
| தன்னெஞ் சறிவது | 137 |
| தன்னை உணர்த் | 555 |
| தன்னைத்தான் காக் | 141 |

| | பக்கம் |
|---|---|
| தன்னைத்தான் காதல | 103 |
| தாமின்புறுவது | 180 |
| தாம்வீழ்வார் தம்வீழ | 503 |
| தாம்வீழ்வார் மென் | 466 |
| தாம்வேண்டின் | 486 |
| தார்தாங்கிச் | 329 |
| தாளாண்மை இல் | 266 |
| தாளாண்மைஎன்னும் | 266 |
| தாளாற்றித் தந்த | 104 |
| தானம் தவம் | 24 |
| திறனல்ல | 81 |
| திறனறிந்து | 278 |
| தினற்பொருட்டால் | 122 |
| தினைத்துணை நன்றி | 59 |
| தினைத்துணையாங் | 193 |
| தினைத்துணையும் | 541 |
| தீப்பாலதான் | 102 |
| தீயவை செய்தார் | 102 |
| தீயவை தீய | 100 |
| தீயளவன்றித் | 401 |
| தீயினாற் சுட்ட | 70 |
| தீவினையார் | 100 |
| துஞ்சினார் செத் | 393 |
| துஞ்சுங்கால் | 514 |
| துணைநலம் | 281 |
| துப்பார்க்குத் | 22 |
| துப்பின் எவனாவர் | 493 |
| துப்புரவு இல்லார் | 444 |
| தும்முச்செறுப்ப | 555 |
| துளியின்மை | 243 |
| துறந்தாரின் | 82 |
| துறந்தார்க்குத் | 125 |
| துறந்தார்க்கும் | 35 |
| துறந்தார்படி | 255 |
| துறந்தார் பெருமை | 25 |
| துறப்பார்மன் | 171 |
| துறைவன் | 469 |

| | பக்கம் |
|---|---|
| துனியும் புலவியும் | 551 |
| துன்பத்திற்கு | 548 |
| துன்பம் உறவரினும் | 288 |
| துன்புறூஉந் | 54 |
| துன்னாத் துறந் | 528 |
| துன்னியார் | 94 |
| தூங்காமை | 174 |
| தூங்குக தூங்கிச் | 290 |
| தூய்மை துணைமை | 296 |
| தூஉய்மைஎன் | 165 |
| தெண்ணீர் அடு | 450 |
| தெய்வத்தான் | 268 |
| தெய்வந்தொழா | 40 |
| தெரிதலும் | 274 |
| தெரிந்த இனத் | 205 |
| தெரிந்துணரா | 495 |
| தெருளாதான் | 119 |
| தெளிவிலதனைத் | 206 |
| தென்புலத்தார் | 35 |
| தேரான் தெளிவும் | 225 |
| தேரான் பிறனைத் | 224 |
| தேவர் அனையர் | 453 |
| தேறற்க | 224 |
| தேறினும் தேறா | 373 |
| தொகச் சொல்லித் | 295 |
| தொடங்கற்க | 217 |
| தொடலைக் குறுந் | 479 |
| தொடிநோக்கி | 540 |
| தொடிப்புழுதி | 439 |
| தொடியொடு | 522 |
| தொடிற்சுடின் | 490 |
| தொட்டனைத் தூறும் | 179 |
| தொல்வரவும் | 442 |
| தொழுதகையுள்ளும் | 354 |
| தோன்றின் | 114 |
| நகல்வல்லர் | 423 |
| நகுதற்பொருட் | 336 |

| | பக்கம் |
|---|---|
| நகைஈகை | 405 |
| நகையும் | 141 |
| நகையுள்ளும் | 422 |
| நகைவகையராகிய | 349 |
| நசை இயார் | 506 |
| நச்சப்படாதவன் | 427 |
| நடுவின்றி | 87 |
| நட்டார் குறை | 385 |
| நட்டார்க்கு | 292 |
| நட்டார்போல் | 353 |
| நட்பிற்குவீற் | 338 |
| நட்பிற் குறுப்புக் | 343 |
| நண்பாற்றாராகி | 423 |
| நத்தம்போல் | 113 |
| நயந்தவர்க்கு | 499 |
| நயந்தவர் நல்காமை | 520 |
| நயனில சொல்லினுஞ் | 98 |
| நயனிலன் | 97 |
| நயனுடையான் | 107 |
| நயனொடு நன்றி | 421 |
| நயன்ஈன்றி | 57 |
| நயன் சாரா | 97 |
| நலக்குரியார் | 78 |
| நலத்தகை | 550 |
| நலத்தின்கண் | 407 |
| நலம்வேண்டின் | 407 |
| நல்குரவு என்னும் | 442 |
| நல்லவை | 169 |
| நல்லாண்மை | 435 |
| நல்லார்கண் | 184 |
| நல்லாறு எனப் | 149 |
| நல்லாறு எனினும் | 108 |
| நல்லாற்றால் | 116 |
| நல்லினத்தினூங்குந் | 204 |
| நவில் தொறும் | 336 |
| நற்பொருள் | 443 |
| நனவினால் கண்டதூஉம் | 513 |
| நனவினால் நம் | 515 |
| நனவினால் நல்காக் | 514 |
| நனவினால் நல்காத | 512 |
| நனவினால் நல்காரை | 515 |
| நனவென | 514 |
| நன்மையும் | 225 |
| நன்றறிவாரிற் | 453 |
| நன்றாகும் ஆக்கம் | 151 |
| நன்றாங்கால் | 171 |
| நன்றாற்றலுள்ளுந் | 208 |
| நன்றிக்குவித் | 37 |
| நன்றி மறப்பது | 61 |
| நன்றென்ற | 308 |
| நன்றேதரினும் | 63 |
| நன்னீரை வாழி | 469 |
| நாச்செற்று | 153 |
| நாடாது நட்டலிற் | 339 |
| நாடென்ப | 318 |
| நாடொறும் நாடி | 242 |
| நாடோறும் நாடுக | 229 |
| நாணாமை | 356 |
| நாணால் உயிரைத் | 431 |
| நாணும் மறந் | 547 |
| நாணென ஒன்றோ | 530 |
| நாண் அகத்தில்லார் | 432 |
| நாணொடு நல் | 479 |
| நாண் என்னும் | 392 |
| நாண்வேலி | 430 |
| நாநலம் என்னும் | 277 |
| நாம் காதல் | 505 |
| நாணென ஒன்று | 153 |
| நிணந்தீயில் | 532 |
| நிலத்தியல் பால் | 201 |
| நிலத்தில் | 407 |
| நிலவரை நீள் | 113 |
| நிலை அஞ்சி | 149 |
| நிலை மக்கள் | 330 |

| | பக்கம் |
|---|---|
| நிலையின் திரியாது | 68 |
| நில்லாதவற்றை | 152 |
| நிழல் நீரும் | 375 |
| நிறை நீர | 335 |
| நிறை நெஞ்சம் | 389 |
| நிறை மொழி | 28 |
| நிறையரியர் | 481 |
| நிறையுடைமை | 80 |
| நிறையுடையேன் | 529 |
| நினைத்திருந்து | 556 |
| நினைத்தொன்று | 574 |
| நினைப்பவர் | 508 |
| நீங்கான் வெகுளி | 368 |
| நீங்கின் தெறூஉம் | 461 |
| நீரும் நிழலது | 552 |
| நீர் இன்று அமை | 24 |
| நுணங்கிய | 188 |
| நுண்ணிய நூல் | 169 |
| நுண்ணியம் | 306 |
| நுண்மாண் | 183 |
| நுனிக் கொம்பர் | 211 |
| நூலாருள் நூல் | 294 |
| நெஞ்சத்தார் | 476 |
| நெஞ்சில் துறவார் | 130 |
| நெடுங்கடலும் | 23 |
| நெடுநீர் மறவி | 263 |
| நெடும் புனலுள் | 219 |
| நெய்யால் | 485 |
| நெருநல் உள | 154 |
| நெருநற்றுச் | 539 |
| நெருப்பினுள் | 444 |
| நோக்கினாள் நோக்கி | 462 |
| நோக்கினாள் நோக்கெதி | 457 |
| நோதல் எவன் | 551 |
| நோய் எல்லாம் | 147 |
| நோய் நாடி | 402 |
| நோவற்க | 373 |
| நோனா உடம்பும் | 478 |
| பகச் சொல்லிக் | 94 |
| பகல் கருதிப் | 363 |
| பகல் வெல்லும் | 213 |
| பகுத்துண்டு | 148 |
| பகை என்னும் | 371 |
| பகை நட்பாக் | 372 |
| பகை நட்பாம் | 354 |
| பகை பாவம் | 77 |
| பகைமையும் | 305 |
| பகையகத்துச் | 312 |
| பகையகத்துப் | 313 |
| பசக்கமன் | 502 |
| பசந்தாள் | 502 |
| பசப்பெனப் | 503 |
| படலாற்றா | 496 |
| படியுடையார் | 263 |
| படுபயன் | 88 |
| படைகுடி | 173 |
| படைகொண்டார் | 121 |
| பணியுமாம் | 415 |
| பணிவுடையன் | 56 |
| பணை நீங்குப் | 521 |
| பண் என்னாம் | 250 |
| பண்டறியேன் | 458 |
| பண்பிலான் | 424 |
| பண்புடையார்ப் | 422 |
| பதிமருண்டு | 519 |
| பயனிலபல்லார் | 96 |
| பயனில் சொல் | 98 |
| பயன் தூக்கார் | 59 |
| பயன் தூக்கிப் | 387 |
| பயன் மரம் | 106 |
| பரிந்தவர் நல்கா | 527 |
| பரிந்தோம்பிக் | 71 |
| பரிந்தோம்பிப் | 53 |
| பரியது கூர்ங் | 260 |

| | பக்கம் |
|---|---|
| பரியினும் | 170 |
| பருகுவார் | 247 |
| பருவத்தோடு | 214 |
| பருவரலும் | 506 |
| பலகுடை நீழலும் | 438 |
| பலசொல்லக் | 280 |
| பல நல்ல கற்றக் | 3 2 |
| பல்குழுவும் | 316 |
| பல்லவை கற்றும் | 313 |
| பல்லார்பகை | 200 |
| பல்லார் முனியப் | 96 |
| பழகிய செல்வ | 397 |
| பழகிய நட்பெவன் | 344 |
| பழி மலைந்து | 283 |
| பழியஞ்சிப் | 35 |
| பழுதெண்ணும் | 276 |
| பழமை எனப் | 343 |
| பழையம் எனக் | 302 |
| பற்றற்ற கண்ணும் | 229 |
| பற்றற்ற கண்ணே | 159 |
| பற்றேற்றம் | 129 |
| பற்றிவிடாஅ | 158 |
| பற்றுகபற் | 159 |
| பற்றுள்ளம் | 195 |
| பனி அரும்பிப் | 517 |
| பன் மாயக்கள்வன் | 531 |
| பாடு பெறுதியோ | 522 |
| பாத்தூண் | 110 |
| பாலொடு | 473 |
| பிணிக்கு மருந்து | 466 |
| பிணியின்மை | 317 |
| பிணையேர் | 460 |
| பிரித்தலும் | 274 |
| பிரிவுரைக்கும் | 489 |
| பிழைத் துணர்ந்தும் | 187 |
| பிறப்பென்னும் | 162 |
| பிறப்பொக்கும் | 412 |

| | பக்கம் |
|---|---|
| பிறர்க்கு இன்னா | 147 |
| பிறர் நாணத் | 431 |
| பிறர் பழியும் | 430 |
| பிறவிப் | 21 |
| பிறன்பழி | 93 |
| பிறன் பொருளான் | 75 |
| பிறன்மனை | 73 |
| பீலிபெய் | 211 |
| புகழ் இன்றால் | 410 |
| புகழ்ந்தவை | 236 |
| புகழ்பட வாழா | 114 |
| புகழ்புரிந்த | 41 |
| புக்கில் | 155 |
| புணர்ச்சி பழகுதல் | 336 |
| புத்தேளுலகத் | 104 |
| புரந்தார்கண் | 334 |
| புலத்தலின் | 557 |
| புலப்பலெனச் | 531 |
| புலப்பேன்கொல் | 535 |
| புல்லவையுள் | 310 |
| புல்லாதிரா அப் | 549 |
| புல்லிக் கிடந்தேன் | 501 |
| புல்லிவிடா அப் | 558 |
| புறங்குன்றி | 130 |
| புறங் கூறிப் | 92 |
| புறத்துறுப்பு | 49 |
| புறந் தூய்மை | 139 |
| புன்கண்ணை | 516 |
| பெண்ணியலார் | 552 |
| பெண்ணின் | 39 |
| பெண்ணினால் | 540 |
| பெண்ணேவல் | 385 |
| பெயக்கண்டு | 253 |
| பெயலாற்றா | 496 |
| பெரிதா[illegible] | [illegible] |
| பெரிதி[illegible] | |
| பெரியா[illegible] | |

| | பக்கம் |
|---|---|
| பெருக்கத்து | 409 |
| பெருங்கொடையான் | 231 |
| பெருமை உடை | 414 |
| பெருமைக்கும் | 223 |
| பெருமை பெரு | 415 |
| பெரும் பொருளால் | 313 |
| பெறா அமை | 546 |
| பெறின் என்னாம் | 516 |
| பெறுமவற்றுள் | 42 |
| பெற்றான் பெறின் | 41 |
| பேணாது பெட்டார் | 498 |
| பேணாது பெட்டலே | 541 |
| பேணாது பெண் | 381 |
| பேதை பெருங் | 349 |
| பேதைப் படுக்கும் | 168 |
| பேதைமையு | 355 |
| பேதைமை என்ப | 359 |
| பேதைமை ஒன்றோ | 345 |
| பேராண்மை | 331 |
| பொச்சாப்பார்க்கு | 234 |
| பொச்சாப்புக் | 234 |
| பொது நலத்தார் | 389 |
| பொது நோக்கான் | 232 |
| பொய்படும் | 357 |
| பொய்மையும் | 136 |
| பொய்யாமை அன்ன | 138 |
| பொய்யாமை பொ | 138 |
| பொருள் தீர்ந்த | 99 |
| பொருட் பெண்டிர் | 388 |
| பொருட் பொருளார் | 388 |
| பொருளல்லவரைப் | 323 |
| பொருளல்லவற்றைப் | 160 |
| பொருளற்றார் | 118 |
| பொருளாட்சி | 120 |
| பொருளானாம் | 425 |
| பொருளென்னும் | 324 |
| பொருள் கருவி | 291 |

| | பக்கம் |
|---|---|
| பொருள் கொடுத்து | 398 |
| பொருள் நீங்கிப் | 118 |
| பொருள் மாலை | 519 |
| பொள்ளென | 215 |
| பொறியின்மை | 268 |
| பொறிவாயில் | 19 |
| பொறுத்தல் | 79 |
| பொறை பொருங்கு | 315 |
| போற்றின் | 299 |
| மகன் தந்தைக்கு | 4 |
| மக்களே போல்வர் | 453 |
| மக்கள் மெய் | 44 |
| மங்கலம் என்ப | 42 |
| மடலூர்தல் | 480 |
| மடிமடிக் | 262 |
| மடிமை குடிமைக் | 264 |
| மடியிலா | 264 |
| மடியுளாள் | 267 |
| மடியைமடியா | 262 |
| மடுத்தவா | 270 |
| மணிநீரும் | 319 |
| மணியில் திகழ்தரு | 537 |
| மன்னொடியைந்த | 251 |
| மதிநுட்பம் | 275 |
| மதியும் மடந்தை | 471 |
| மயிர் நீப்பின் | 411 |
| மருந்தாகித் | 106 |
| மருந்தென | 399 |
| மருந்தோமற்று | 410 |
| மருவுக மாசற்றார் | 342 |
| மலரன்ன—அரு | 482 |
| மலரன்ன—முக | 472 |
| மலரினும் | 544 |
| மலர் காணின் | 470 |
| மலர்மிசை | 18 |
| மழித்தலும் நீட் | 131 |
| மறத்தல்வெகு | 141 |

| | பக்கம் |
|---|---|
| மறந்தும்பிறன் | 101 |
| மறப்பினும் | 72 |
| மறப்பின் | 510 |
| மறமானம் | 329 |
| மறவற்க | 60 |
| மறைந்தவை | 255 |
| மறைபெறல் | 498 |
| மறைப்பேன் மன்—கா | 519 |
| மறைப்பேன் மன்—யா | 491 |
| மற்றியான் | 509 |
| மற்றும் தொடர்ப் | 157 |
| மனத்தது மாசாக | 131 |
| மனத்தானாம் | 202 |
| மனத்தின்அமையா | 352 |
| மனத்துக்கண் | 30 |
| மனத்துளது | 202 |
| மனத்தொடு | 138 |
| மனநலத்தின் | 204 |
| மனநலம் நன்கு | 204 |
| மனநலம் மன் | 203 |
| மனந்தூயார்க்கு | 203 |
| மனந்தூய்மை | 203 |
| மனம்மாணா | 376 |
| மனைத்தக்க | 38 |
| மனைமாட்சி | 39 |
| மனையாளை | 384 |
| மனைவிழைவார் | 383 |
| மன்னர்க்கு | 243 |
| மன்னர்விழைப | 298 |
| மன்னுயிர் எல்லாம் | 494 |
| மன்னுயிர் ஓம்பி | 117 |
| மாதர்முகம்போல் | 472 |
| மாலைநோய் | 518 |
| மாலையோ | 516 |
| மாறுபாடுஇல் | 400 |
| மிகச்செய்து | 354 |
| மிகல்மேவல் | 365 |

| | பக்கம் |
|---|---|
| மிகினும்குறை | 399 |
| மிகுதியான் | 82 |
| முகத்தான் அமர்ந்து | 55 |
| முகத்தின் இனிய | 352 |
| முகத்தின் முதுக்கு | 305 |
| முகநகநட்பது | 337 |
| முகம்நோக்கி | 305 |
| முகை மொக்குள் | 538 |
| முடிவும் இடை | 291 |
| முதலிலார்க்கு | 200 |
| முயக்கிடைத் | 523 |
| முயங்கிய | 523 |
| முயற்சி திருவினை | 267 |
| முரண்சேர்ந்த | 218 |
| முறிமேனி | 470 |
| முறைகோடி | 244 |
| முறைசெய்து | 176 |
| முறைப்படச் | 277 |
| முற்றாற்றி | 321 |
| முற்றியும் | 321 |
| முனைமுகத்து | 322 |
| முன்னுறக் | 235 |
| மேலிருந்தும் | 413 |
| மேற்பிறந்தா | 184 |
| மையல்ஒருவன் | 358 |
| மோப்பக் குழையும் | 54 |
| யாகாவாராயினும் | 69 |
| யாங்கண்ணின் | 481 |
| யாண்டுச் சென்று | 380 |
| யாதனின் யாதனின் | 156 |
| யாதானும்நாடா | 179 |
| யாமுங் உளேங்கொல் | 509 |
| யாமெய்யாக் | 139 |
| யாரினும்காதலம் | 553 |
| யான்எனது | 158 |
| யான்நோக்குங் | 462 |
| வகுத்தான் | 170 |

| | பக்கம் |
|---|---|
| வகைமாண்ட | 381 |
| வகையறச் | 206 |
| வகையறிந்துதற் | 373 |
| வகையறிந்துவல்லவை | 311 |
| வசைஒழிய | 115 |
| வசையென்ப | 114 |
| வஞ்சமனத்தான் | 128 |
| வருகமன்கொண்கன் | 534 |
| வருமுன்னர்க் | 194 |
| வருவிருந்து | 51 |
| வரைவிலா | 390 |
| வலியார்க்கு | 367 |
| வலியார்முன் | 119 |
| வலியில் நிலைமையான் | 128 |
| வழங்குவ | 405 |
| வழிநோக்கான் | 365 |
| வழுத்தினாள் | 558 |
| வறியார்க்கொன்று | 108 |
| வன்கண்குடி | 273 |
| வாணிகஞ்செய் | 66 |
| வாய்மை | 136 |
| வாராக்கால் | 498 |
| வாரிபெருக்கி | 226 |
| வாழ்தல் உயிர்க் | 474 |
| வாழ்வார்க்கு | 504 |
| வாளாற்றுப் | 532 |
| வாளொடென் | 313 |
| வாள்போல் | 375 |
| வான்நின்று | 21 |
| வசையிலாவெண்பயன் | 115 |
| வானுயர்தோற்றம் | 128 |
| வானோக்கி | 238 |
| விசும்பின் | 23 |
| விடாஅது | 511 |
| விடுமாற்றம் | 297 |
| விண்இன்று | 22 |
| வித்தும்இடல் | 52 |

| | பக்கம் |
|---|---|
| வியவற்க | 196 |
| விருந்துபுறத் | 51 |
| விருப்பறாச் | 230 |
| விரைந்து | 280 |
| விலங்கொடு | 184 |
| வில்லேருழவர் | 371 |
| விழித்தகண் | 332 |
| விழுப்புண் | 333 |
| விழுப்பேற்றின் | 84 |
| விழைதகையான் | 344 |
| விழையார் | 347 |
| விளக்கற்றம் | 501 |
| விளிந்தாரின் | 76 |
| விளியுமென் | 511 |
| வினைகலந்து | 335 |
| வினைக்கண்வினை | 265 |
| வினைக்கண்வினை | 228 |
| வினைக்குரிமை | 228 |
| வினைசெய்வார் | 254 |
| வினைத்திட்பம் | 289 |
| வினைப்பகை | 290 |
| வினையால் | 292 |
| வினைவலியும் | 209 |
| வீழப்படுவார் | 504 |
| வீழுநர் வீழப் | 504 |
| வீழும் இருவர்க்கு | 468 |
| வீழ்நாள்படா | 32 |
| வீழ்வாரின் | 506 |
| வீறெய்தி | 287 |
| வெண்மை | 360 |
| வெருவந்த | 246 |
| வெள்ளத்தனைய இடும் | 269 |
| வெள்ளத்தனைய மலர் | 259 |
| வேட்ட | 467 |
| வேட்பத்தாஞ் | 279 |
| வேட்பன | 301 |
| வேண்டற்க வெஃகி | 90 |

| | பக்கம் |
|---|---|
| வேண்டற்க வென்றி | 395 |
| வேண்டாமை | 164 |
| வேண்டிய வேண்டி | 125 |
| வேண்டின் உண்டாகத் | 156 |
| வேண்டுங்கால் | 164 |
| வேண்டுதல் | 18 |
| வேலன்று | 239 |
| வேலொடு | 241 |
| வைத்தான்வாய் | 424 |
| வையத்துள் | 38 |


★



MK Color Process. Madras-14
Phone : 848311
Design by P. N. Anandan